# அரக்கு மாளிகை

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை–600 004.
தொலைபேசி : 24943074

359/06
26

## நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அரக்கு மாளிகை |
| நூலாசிரியர் | : | லக்ஷ்மி |
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| வெளியிடுவோர் | : | **பூங்கொடி பதிப்பகம்**<br>14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,<br>மயிலாப்பூர், சென்னை–4.<br>தொலைபேசி : 24943074 |
| நூல் உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு : மார்ச் 1979<br>இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 1982<br>மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 1985<br>நான்காம் பதிப்பு : ஜூலை 1989<br>ஐந்தாம் பதிப்பு : மே 1993<br>ஆறாம் பதிப்பு : டிசம்பர் 1995<br>ஏழாம் பதிப்பு : மே 2000<br>எட்டாம் பதிப்பு : ஏப்ரல் 2005 |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத் தாள் |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 552 |
| எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| கணினி | : | வள்ளி லேசர் கிராஃபிக்ஸ் சென்னை – 18 |
| அச்சிட்டோர் | : | எம். கே. எண்டர்பிரைசஸ் சென்னை 5. |

விலை : ரூ.170.00


611969
894.8113
LAK

# பதிப்புரை

இப்போது வெளியாகின்ற நாவல்கள் பெரும்பாலும் இளம் நெஞ்சங்களைக் கவர்ந்திழுக்கின்ற அல்லது இளம் நெஞ்சங்களிலே ஏதாவது விபரீதக் கற்பனைகளை உண்டாக்கி வீணாக்குகின்ற விதத்திலே அமைவதைக் காண்கிறோம். அப்படி எழுதுகிறவர்கள் வாசகர்கள் விரும்புவது போல் தானே எழுத முடியும் என்று சொல்வதும் பத்திரிகைகளிலே வெளிவருவதையும் பார்க்கிறோம்.

எல்லா வாசகர்களும் அப்படித்தான் விரும்புகிறார்கள் என்பதை நாம் ஏற்பதற்கில்லை.

ஏனென்றால் பிரசித்தி பெற்ற நாவலாசிரியை திருமதி ''லக்ஷ்மி'' அவர்களின் எழுத்தோவியங்கள் இப்போதெல்லாம் பெரும்பான்மை மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகின்றன. அவர்களுடைய எழுத்துகள் அப்படிப்பட்ட இனக் கவர்ச்சி மையில் தோய்த்தெழுதப்படுகின்றனவா என்றால் அதுதான் இல்லை!

நல்ல கதாபாத்திரங்கள், அவை சம்பந்தப்பட்ட வாழ்க்கைச் சம்பவங்கள், அன்றாடம் நாம் நம் குடும்பங்களில் நடத்தும் உரையாடல்கள், சந்திக்கும் உணர்ச்சி மயமான கட்டங்கள் எல்லாம்தான் திருமதி "லக்ஷ்மி" அவர்களின் நாவல் படிக்கிறவர் யாரானாலும் அவர்போல் இதில் ஒரு கதாபாத்திரம் அமைந்திருப்பதை நிச்சயம் அவரால் உணர முடியும்!

திருமதி "லக்ஷ்மி" அவர்களின் இந்த 'அரக்கு மாளிகை'யைப் புத்தகமாக வெளிக்கொணர்வதில் பூங்கொடி பதிப்பகம் பெருமை கொள்கிறது.

— பூங்கொடி பதிப்பகத்தார்

# அரக்கு மாளிகை

## 1

வருண பகவானுக்கு அன்று யாரும் தந்தியடித்தோ, தபால் போட்டோ வருந்தியழைக்கவில்லை. இரண்டு நாட்களாக விடாது பொழிந்து தள்ளிக் கொண்டிருந்த மழை, அன்றாவது ஓயாதா என்று மஞ்சுளா உண்மையில் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டுதான் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்தாள். ஆபீஸ் வேளையில் பஸ் பிடித்து, பன்னிரண்டு மைலுக்கு அப்பாலிருக்கும் பள்ளிக்கூடத்திற்குக் காலை சரியான நேரத்திற்குப் போய்ச் சேரவேண்டும் என்றால், அதன் கஷ்டம் அவளுக்குத்தானே தெரியும்? ஆனால் அண்டசராசரங்களின் இயக்கத்தில் தனக்கும் ஒரு பங்கு உண்டு என்று நிரூபிப்பவன் போல் வருண பகவான் விடிந்ததும் விடியாததுமாகத் தன் கருமேகக் கூட்டங்களை வானவீதியில் எழுப்பி விட்டிருந்தான். அவைகள் சிறு தூறல்களாக மெல்லச் சிதறத் தொடங்கின.

கூடத்தில் கிடந்த நாடா கட்டிலில் அரைத் தூக்கமாகப்

படுத்திருந்த தாத்தா ரகுபதி எழுந்து உட்கார்ந்து கொண்டார்... ''மஞ்சு! மஞ்சு! முற்றத்திலே துணியெல்லாம் நனைகிறதம்மா!'' என்று உரத்த குரலில் எச்சரிக்கை செய்தார். மேலே பேசமுடியாது 'கொல்' 'கொல்' என்று பலமானதொரு இருமல் அவரது தொண்டையைப் பிடித்துக் கொண்டது. எழுபத்தெட்டு வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அவர், இரண்டு நாள் அடித்த ஜுரத்தில் கிழித்துப் போட்ட நார்போல் அசையச் சக்தியின்றிப் பலஹீனமான நிலையில் இருந்தார்.

ஒரு வழியாக இருமி முடித்துவிட்டு, ''அம்மா! மஞ்சு!'' என்று மறுமுறை கிழவர் சிரமத்துடன் கூவினார் மனம் கேட்காமல். அவசரமாகக் குளித்துவிட்டு, ஈரவிறகுடன் திண்டாடி, அடுப்பைப் பற்ற வைத்துக் காலை ஆகாரத்திற்குச் சித்தம் செய்து கொண்டிருந்தாள் பேத்தி அது சமயம்.

''நீங்க பேசாம இருங்க. நான் வந்து எடுக்கிறேன். இருமலோடு நீங்க மழையில் வேறு நனைய வேண்டாம்!'' என்று எரிச்சலுடன் பதில் கொடுத்தாள் அவள். ''சமயத்திற்கு அடுப்புக் கூடவா தொல்லை கொடுக்க வேண்டும்?'' என்று புகைந்து கொண்டிருந்த அடுப்பு மீது ஆத்திரம் பொங்கிக் கொண்டு வரவே, எழுந்து சமையல் மேடை ஓரத்திலிருந்த மண்ணெண்ணெய்ச் சீசாவை எடுத்தாள். கோபத்துடன் விறகு மீது பாதி புட்டி எண்ணெயைக் கவிழ்த்தாள். நெருப்புக் குச்சியை எடுத்துக் கிழித்து அதன் மீது போட்டாள். குபீரென்று தீ பற்றிக் கொண்டு எரியத் தொடங்கியது. பால் பாத்திரத்தை அடுப்பின் மீது வைத்துவிட்டு மெல்ல வெளியே வந்தாள். அதுவரை அவளுக்காக மழை ஒன்றும் காத்துக் கொண்டு இருக்கவில்லை. படபடவென்று ஓட்டின் மீது சப்தத்துடன் பெரும் தூறல்களாகச் சிதறிக் கொண்டிருந்த மழை ஒரு சில விநாடிகளில் பெருத்த கோஷத்துடன் பொழியத் தொடங்கிவிட்டது.

உத்தியோகத்திற்கு உடுத்திக் கொள்ளவென்று அவளுக்கு இருந்தவை மூன்று ஆடைகள்தான். ஒன்று சலவைக்காக வண்ணானிடம் சென்றிருந்தது. மற்றொன்று முதல் நாள் பெய்த மழையில் நனைந்து கொண்டு வீடு திரும்பியதில் தெப்பலாகி



விடவே, சமையலறைக் கொடியில் காய்ந்து கொண்டிருந்தது. மூன்றாவதாக இருந்த ஒரு ஆடையும் மூச்சு விடாது பெய்த மழையில் இரண்டு நாட்களாகியும் காயாது பாதி ஈரமான நிலையில் இருக்கவே, சற்றுக் காற்றுப்பட்டாவது உலரட்டும் என்று, விடிந்ததும் முதல் வேலையாக அதை முற்றத்துத் திறந்த வெளியில் கட்டியிருந்த கொடியில் போட்டிருந்தாள். அந்த ஒரு ஆடைக்கு ஆபத்து ஏற்பட்டு விடவே, மஞ்சுளாவுக்குத் துக்கமும் கோபமும் ஒருங்கே நெஞ்சை அடைத்துக் கொண்டன.

முற்றத்திற்குள் ஓடி, கொடியில் கிடந்த சரப்புடவையை எடுத்துக் கோபத்துடன் நீரைப் பிழிந்து கூடத்து மூலையில் விட்டெறிந்தாள். ''அடாடா! நன்றாக நனைஞ்சு போய்விட்டதே'' என்று தாத்தா பச்சாதாபப்பட்டதைக் கேட்டுக் கொண்டு நிற்க அவளுக்குப் பிடிக்கவில்லை. துக்கத்தினால் பெருகி வந்த கண்ணீர் கன்னங்களின் மீது வழியுமுன் சரேலென்று கூடத்து அறைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

உக்கிராண அறையாகவும், படுக்குமிடமாகவும் தாத்தாவிடம் மாதக் கடைசியில் மிஞ்சும் ஒன்று அல்லது இரண்டு ரூபாய்களைப் பத்திரமாக வைக்கும் பொக்கிஷ அறையாகவும் சகலத்திற்கும் உபயோகப்பட்ட அந்த அறைக்குள், பளிச்சென்று சூரியன் வீசிக்கொண்டிருக்கும் நல்ல நாளிலேயே அதிக வெளிச்சம் இருக்காது. வாடகைக்கு ஆசைப்பட்டுக் கொண்டு பெரியதாக இருந்த வீட்டை முடக்கி, ஒடுக்கிப் பல ரூபத்தில் தடுத்துத் தனித்தனிச் சிறு பகுதிகளாகக் கட்டிப் போட்டிருந்த வீட்டுக்கார மகராஜன், பெயரளவில் ஜன்னல் என்ற ஒரு சிறு ஓட்டையைச் சுவரில் ஏற்படுத்தி, அதில் இரண்டு கம்பிகளைச் சொருகி விட்டிருந்தான். எனவே, வானத்துக் கருமேகக் கூட்டமே அந்த அறைக்குள் அந்தச் சிறு ஓட்டை வழியே உடலைச் சுருட்டிக் கொண்டுவந்து குதித்துவிட்டது போல் ஒரே அந்தகாரமாக இருந்தது.

தடவிக் கொண்டு சென்று முதலில் மின்சார விளக்கைப் போட்டாள். கழித்துவிட மனம் இன்றித் தாத்தா சேகரித்து

வைத்திருந்த ஒடிந்த கள்ளிப் பெட்டியின் முகப்பிலே டக்கென்று நன்றாக முழங்கால் இடித்துக் கொண்டு விட்டது. ''அம்மாடி!'' என்று வலி தாங்க முடியாது கிரீச்சிட்டு விட்டாள் அவள்.

''என்னம்மா?'' என்று பதறினார் ரகுபதி. கட்டிலிலிருந்து எழுந்து நின்றார். காற்றடித்தால் கூடக் கீழே விழுந்துவிடுபவர் போல் அவரது நலிந்த உடல் ஆடியது. ''ஒன்றுமில்லை தாத்தா. கள்ளிப் பெட்டி காலை இடிச்சு விட்டது'' என்று ஆத்திரத்தை அடக்கும் நிமித்தம் பற்களைக் கடித்துக் கொண்டு பதிலளித்த பேத்தி, கன்னங்களின் மீது வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''பார்த்து நடக்கக் கூடாதா அம்மா?'' என்று பெருமூச்செறிந்த கிழவர், தள்ளாடிக் கொண்டு அலமாரியருகே சென்றார். மேல் தட்டின் மீது வைத்திருந்த சிறு மருந்துக் குப்பியை எடுத்துக் கொண்டு கூடத்து அறைப்பக்கம் வந்தார். ''என டிரங்குப் பெட்டி அடியிலே ஒரு தகர டப்பா இருக்கு பார். அதில் கொஞ்சம் பஞ்சு வைத்திருக்கிறேன். இந்தா மருந்து. காயம் பட்டிருந்தால் உடனே கொஞ்சம் அதன் மேலே தடவி வை...'' என்று அனுதாபத்துடன் சொன்னார்.

சுபாவத்தில் மஞ்சுளா மிக்க பொறுமையான பெண்தான். ஆனால் ஏனோ அன்றைய தினம் அந்தக் குணம் திடீரென்று அவளிடம் வரண்டு விட்டிருந்தது. ''சரத்தில் ஜுரத்தோடு நடமாடி விட்டுப் பிறகு நீங்க வேறு எனக்குத் தொல்லை கொடுக்கணுமா?'' என்று உரத்த குரலில் தாத்தாவைப் பார்த்து ஒரு அதட்டல் போட்டுவிட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கிழவர் பதில் பேசவில்லை. வாலிப உள்ளத்தின் பல்வேறு போராட்டங்களை அவர் நன்றாக அறிந்தவர்தான். வார்த்தைகளால் ஆறுதல் சொல்ல இயலுமே ஒழிய செயலால் ஏதும் செய்ய அவருக்குச் சக்தியிருக்கவில்லை. மருந்து சீசாவை வாயிற்படி மேல் வைத்துவிட்டு மெல்ல நடந்து கட்டில் மீது வந்து உட்கார்ந்து கொண்டார். மனப்பதற்றத்தினாலும் கொஞ்சம் எழுந்து நடந்த சிரமத்தினாலும் அவரது இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. சுவாசம் நின்று விடும் போல் மூச்சுத் திணறியது.



முதல் நாள் சாயங்காலத்திலிருந்து மஞ்சுளா ஒரு மாதிரியாகத்தான் இருந்தாள். யௌவனத்தின் பூரிப்பில் பொங்கி, வருங்காலத்தை வர்ணப் படமாகச் சித்தரித்துக் கற்பனையில் கண்டு மகிழும் உள்ளத்திற்கு ஏமாற்றம் என்பது ஒரு பெரிய இடிக்கு ஒப்பாகும் என்பதை அவர் அறிவார். ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்? அதே ஏமாற்றம் அவர் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச உற்சாகத்தையும் உறிஞ்சி விட்டு, அவரை நடைப்பிணம் போல் செய்து விட்டிருந்தது. தலையணையடியில் பத்திரமாக வைத்திருந்த கடிதத்தை எடுத்து மெல்லத் திறந்தார். நேற்று சாயங்காலம் படித்தது ஒரு சமயம் தவறாக இருக்கக் கூடாதா என்று அவரது நைந்த உள்ளம் எண்ணியது. மழையிருட்டில் தளர்ந்து போன தமது கண்களால் ஊன்றிப் பார்த்து மெல்லப் படித்தார், மீண்டும் அந்தக் கடிதத்தை. ''ஜாதகத்தை மறுபடியும் கவனித்ததில் பொருத்தம் அவ்வளவாகச் சரியில்லை என்று தெரிந்தது. சிரமத்திற்கு மன்னிக்கவும்'' என்று இரண்டே வரியில் ரத்னச் சுருக்கமாக எழுதி விட்டிருந்த அந்த ஸ்ரீமான், சொல்லாமலே பல விஷயங்களை அக்கடிதத்தில் சொல்லியிருந்தார்.

'ஐயா ரகுபதி, உமக்கும் எங்களுக்கும் உள்ள அந்தஸ்து வேற்றுமையைக் கொஞ்சமும் யோசிக்காது பெண் பார்க்க உங்கள் வீட்டிற்கு எங்களை அழைத்து விட்டீரே, உமக்கு எத்தனை துணிச்சல் ஐயா! அழகாக எழுதியிருந்த உமது கடிதத்தைப் பார்த்துவிட்டு ஏமாந்தல்லவா நானும் எனது மனைவியும் மகனும் பெண் பார்க்கப் புறப்பட்டு வந்தோம்? வீட்டு வாயிலை மிதிக்கும் முன்பே உங்கள் பொருளாதார நிலையின் லட்சணம் என் மனைவிக்குப் புரிந்துவிட்டது.'

'மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் கட்டழகனான என் மகன், என்னத்தைக் கண்டு உங்கள் பேத்தியை மனைவியாக வரிக்க முடியும்? பி.ஏ.பரீட்சையில் இரண்டு முறை தோற்றுவிட்டு, பெண்கள் பள்ளிக்கூடமொன்றில் குமாஸ்தா வேலை செய்கிறாளே, அதற்காகவா? இருபத்திரண்டு வயது

குதிர் போல் வளர்ந்து நிற்கும் அழகிற்கா! பேத்தி கல்யாணத்திற்குப் பிறகு கட்டையைக் கீழே போடக் காத்திருக்கும் தாத்தாவின் மகத்தான ஆஸ்திக்காகவா? தாய், தந்தை, அக்கா, தம்பி என்று யாருமற்ற அநாதைப் பெண்ணை எந்தவிதமான பக்க பலத்தை நம்பிக் கல்யாணம் செய்துகொள்ள முடியும்?'

'ரூபாய் ஐயாயிரத்திற்குப் பதில் ஐயாயிரம் காசு கூட உமக்கு வரதட்சணையாகக் கொடுக்கச் சக்தி கிடையாது. அதற்குப் பின் கல்யாணச் செலவிற்குத்தான் எங்கே போவீர்? ஏன் இந்த வீண் சபலம் உமக்கு? காலதாமதம் செய்யாது உமது பேத்தியை இரண்டாவது தாரம் அல்லது மூன்றாவது தாரமாக மனைவியை இழந்த எவனுக்காவது கட்டிவையும். என் பேத்தி பார்க்க அழகான பெண் என்று அந்த ஒரு குணத்திற்காக இறுமாந்து போகாதீர்கள். அழகு சாப்பாடு போடுமா ஐயா? நமது சமூகத்தில் பெண்களுக்கு வெறும் அழகு மட்டும் இருந்து விட்டால் போதுமா? உம்.... போதவே போதாது. கூடவே அந்தஸ்தும்... வாரி இறைக்கப் பணமும் இருக்க வேண்டும். வயதாகியும் உமக்கு இந்த விவேகம் இல்லாமல் எங்கே போச்சு?' என்று அக்கடிதத்தில் எழுதாது விட்டிருந்த விஷயங்கள் அனைத்தையும் ரகுபதி தாமே கற்பனை செய்து பார்த்துவிட்டுப் பெருமூச்செறிந்தார்.

நன்றாகச் சம்பாதித்துக் கொண்டிருந்த அவர் மகன் டைபாய்டு ஜுரத்தில் மரணமடைந்து விட்டான். மருமகளும் அதே ஜுரத்தில் கணவனைப் பின்பற்றி விடவே, இரண்டு வயதுக் குழந்தை மஞ்சுளாவை வளர்க்கும் பொறுப்பு ரகுபதி தம்பதிகள் மீது விழுந்தது. குழந்தையின் களை பொருந்திய பால் வழியும் முகத்தில் தனது புத்திரசோகத்தை மறக்க முயற்சித்த பாட்டி காமாட்சி, மஞ்சுளாவின் பதினைந்தாவது வயதில் மாரடைப்பில் காலமாகி விட்டாள். ஆகவே, பேத்தியின் கல்வி, கல்யாணம் என்ற பிரச்சனைகள் அனைத்திற்கும் வயோதிக காலத்தில் ரகுபதிதான் தலை கொடுக்கும்படி நேர்ந்தது.

அவர் போலீஸ் இலாகாவில் குமாஸ்தா உத்தியோகம்



செய்து வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டபோது கையில் மொத்தமாகக் கிடைத்த தொகை ஆயிரத்து இருநூறு ரூபாய்தான். அதை நம்பி வாழமுடியாது என்று தீர்மானித்து நகரத்திலிருந்த பலசரக்குக் கடையொன்றில் கணக்கு எழுதி அதில் கிடைத்த சொற்ப வருவாயில் குடும்பத்தை நடத்திக் கொண்டு சிரமப்பட்டுப் பேத்தியைப் படிக்க வைத்தார். உபகாரச் சம்பளம் வாங்கி மிகச் சாமர்த்தியமாகத்தான் மஞ்சுளா படித்து வந்தாள். ஆனால் என்னவோ அதிர்ஷ்டம் அவள் பங்கில் இருக்கவில்லை. பி.ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறுவாள் என்று தாத்தா இறுமாந்திருக்கையில், பேத்தி இருமுறை பரீட்சையில் தோற்றுவிட்டு, மறுபடியும் மூன்றாம் முறை முயற்சிக்க மறுத்துவிட்டு, அருகிலிருந்த 'டைப்ரைட்டிங்' பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்து விட்டாள். சுருக்கெழுத்திலும் டைப் அடிப்பதிலும் தேர்ச்சி பெற்றும் கூடச் சீக்கிரமாக அவள் எதிர்பார்த்தபடி வேலை ஒன்றும் கிடைத்துவிடவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு நகரத்தின் மறுகோடியிலிருந்த பெண்கள் பள்ளிக்கூடமொன்றில் தற்காலிகக் குமாஸ்தா உத்தியோகத்தில் அமர்ந்திருந்தாள்.

கல்வியின் மூலம் வாழ்க்கையின் வழியை வகுக்க முடியாவிட்டால் கல்யாணத்தின் மூலமாவது சாதித்து விடலாம் என்று நம்பிய கிழவர், அதற்குப்பின் தீவிரமாக வரன் வேட்டையில் இறங்கினார். ஒரு வருஷ காலத்தில் பேத்திக்குத் தக்க வரன் தேடி அவரது கிழிந்த செருப்புகளும் தேய்ந்து உருமாறிப் போயின. அத்துடன் உள்ளத்து உற்சாகமும் ஒடுங்கிப் போனதுதான் மிச்சம்.

மஞ்சுளாவைப் பொறுத்த வரையில் கல்யாண மார்க்கெட்டே மூடப்பட்டு விட்டது போல் நிலைமை படு சூன்யமாகக் காணப்பட்டது. பணமும் பக்க பலமும் இல்லாததனால், அவளைக் காண வந்த வரன் வீட்டவர்கள் எல்லோரும் சாக்குப் போக்குகள் கூறி மறைந்து கொண்டே வந்தனரே ஒழிய, 'போகட்டும் ஐயா ரகுபதி! உங்கள் பேத்தி பார்க்க லட்சணமாக இருக்கிறாள். படித்திருக்கிறாள், அடக்கமான பெண், நல்ல சங்கீத ஞானம் இருக்கிறது. இந்தப்

பெண்ணை நாங்கள் ஏற்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு யாரும் முன்வரவில்லை.

இந்த நிலையில் வயதும் மனத் தளர்ச்சியும் காரணமாகக் கிழவர் அடிக்கடி ஜுரமாகப் படுத்துவிடவே, பல சரக்குக் கடைக்காரர் அவரது வேலைக்குச் சீட்டுக் கொடுத்து விட்டார். பாங்கியில் போட்டு வைத்திருந்த பணம் நாளடைவில் கரையத் தொடங்கியது. இன்னும் சில தினங்களில் அதுவும் போய்விட்டால் அதற்குப் பின் கல்யாணச் செலவிற்கு என்ன செய்வோம் என்ற கிலி அவரை வாட்ட ஆரம்பித்தது.

முடிவில் துணிச்சலாக, முன்பு ஒருமுறை கல்யாணத் தரகன் மூலம் கேள்விப்பட்ட ஒரு வரன் விட்டவர்களைத் தபால் மூலம் விசாரிக்கத் தலைப்பட்டார். வரனின் தந்தை எழுதிய கடிதங்களில் பெருந்தன்மை பொங்கி வழிந்து கொண்டிருந்தது. பெண்ணை நேரில் பார்க்க அவர்கள் வரப் போவதை அறிந்ததும் கிழவர் மகிழ்ச்சியில் பூரித்து விட்டார். கடைசியாக மஞ்சுளாவிற்கு அதிர்ஷ்டம் அழகான வாலிபனாக நல்ல மத்தியதரக் குடும்பத்திலிருந்து வந்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டு விட்டார்.

பெண் பார்க்கப் பிள்ளை விட்டவர்கள் வந்தார்கள். வரனின் தந்தையைப் பார்த்த அளவிலேயே ரகுபதிக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. மஞ்சுளா செய்திருந்த ரவா சொஜ்ஜியையும் வாழைக்காய் பஜ்ஜியையும் பையனின் தாயார் ரசித்துச் சாப்பிட்டதைக் கிழவர் ஜாடையாகக் கவனித்தார். பெண்ணின் சமையல் அம்மாவுக்கு பிடித்துவிட்டது. முதல் முட்டுக்கட்டை தகர்ந்து விட்டது என அவர் தனக்குள் மனக்கோட்டை கட்டினார். தாத்தாவின் வேண்டுகோள்படி மஞ்சுளா பராசக்தி மீது அழகாக ஆனந்த பைரவி ராகத்தில் உருக்கமாக ஒரு பாட்டுப் பாடினாள்.

பிள்ளையின் தந்தை தலையை ஆட்டிக் கொண்டு கைத்தாளம் போட்டபடி பாட்டை ரசித்ததைக் கண்ட கிழவர், 'சரி! பெண் பிடித்து விட்டது. இனிமேல் கவலை இல்லை' என



எண்ணிவிட்டார். ''ஊருக்குப் போய்க் கடிதம் போடுகிறோம்'' என்று வரன் விட்டார்கள் கொஞ்ச நேரத்தில் வெளியேறினார்கள். வாரங்கள் பலவாகியும் பதிலே காணவில்லை. காலை, மாலை எனத் தபால்களை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த ரகுபதி, அன்று மாலை தமது பெயருக்கு வந்த கடிதத்தை மிகவும் பரபரப்புடன் பிரித்தார். சுருக்கமான அந்த பதில் அவருக்கு மெத்த மன அதிர்ச்சியைக் கொடுத்து விட்டிருந்தது. மஞ்சுளாவிடம் எதையும் ஒளித்து வைக்கும் சுபாவம் கிடையாததனால் காரியாலயத்திலிருந்து பேத்தி திரும்பி வந்தவுடன் முதலில் அந்தக் கடிதத்தை அவளிடம் கொடுத்துப் படிக்கும்படி சொன்னார். மஞ்சுளா அதைப் பார்த்துவிட்டு மௌனமாக இருந்த போதிலும் அவளது முகக் குறியிலிருந்து தன்னைப் போலவே அவளும் மிக்க மன ஏமாற்றமடைந்தாள் எனக் கிழவர் புரிந்து கொண்டார். ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்?

நடந்து போன பலவற்றை எண்ணிக் கிழவர் கவலையே உருவாக அமர்ந்திருந்தார். கல்யாண மாதங்கள் முடிவடையும் முன் மஞ்சுளாவுக்குத் தக்க வரன் ஒன்றும் கிடைக்காது போல் தோன்றவே, பேத்தியின் திருமணம் என்னும் கடமை அவர் நெஞ்சைப் பாறாங்கல்லைப் போல் கனமாக அழுக்கியது. ''பராசக்தி! வயது காலத்தில் என்னைச் சோதிக்கிறாயே அம்மா'' என்று துக்கத்துடன் கிழவர் வாய் விட்டுக் கிணறினார்.

அருகிலிருந்த மாவு மில்லிலிருந்து சங்கொலி கேட்கத் தொடங்கியது. கிழவர் சிந்தனை உலகத்திலிருந்து விழித்துக் கொண்டார். ''எட்டரை மணி பஸ்ஸிற்கு நாழியாச்சேயம்மா'' என்று உரத்த குரலில் பேத்திக்கு எச்சரிக்கை கொடுத்தார். அது சமயம் கூடத்து அறை மூலையில் முடங்கிக் கிடந்த தனது பழைய தகரப் பெட்டியைத் திறந்து உத்தியோகத்திற்கு உடுத்திச் செல்ல ஒரு புடவைக்காக அவசரமாக மஞ்சுளா தேடிக் கொண்டிருந்தாள். பெட்டிக்குள் பத்திரமாக அடுக்கி வைத்திருந்த தனது பழைய ஆடைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் புரட்டிப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆத்திரமும் துக்கமும் பீரிட்டுக் கொண்டு வந்தன. சாயம் போனவைகளும்,

உடுத்தவே லாயக்கற்ற கந்தல்களுந்தான் பெட்டிக்குள் குவிந்து கிடந்தன.

''நீங்க சித்தே சும்மா இருங்கோ, தொண தொணவென்று ஒன்றும் சொல்லவேண்டாம். எனக்கு பஸ்ஸுக்கு எப்போ போக வேண்டுமென்று தெரியும்'' என்று அடக்க முடியாத சினத்தினால் இரைந்து ஒரு அதட்டல் போட்டு விட்டு, பெட்டியில் கிடந்த ஒரு பழைய புடவையைக் கோபத்துடன் இழுத்து உதறினாள் மஞ்சுளா. அவசரமாக அதைத் தன்மேல் சுற்றிக் கொண்டு கூந்தலை வேகமாகப் பின்னி முடித்துக் கொண்டாள். கண்ணாடியைப் பார்க்க நேரமின்றி, உத்தேசத்தில் நெற்றியில் குங்குமத்தைப் பொட்டாக வைத்துக் கொண்டு ஒரே பாய்ச்சலில் சமையலறைக்குள் ஓடினாள்.

எட்டரை மணி பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் அவளுக்குக் காலைச் சாப்பாடு உட்கொள்ளக் கூட நேரம் இருக்கவில்லை. பொங்கும் தறுவாயிலிருந்த பாலைக் கீழே இறக்கி, தாத்தாவிற்குக் கொஞ்சம் காப்பி தயார் செய்தாள். பிளாஸ்க்கில் அதை ஊற்றி மூடி பத்திரமாக வைத்துவிட்டுப் பகல் வேளைக்கு என்று முன்கூட்டியே தயாராகத் தனக்கு எடுத்து வைத்திருந்த தயிர்சாதப் பொட்டலத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள். மெல்லக் கூடத்திற்கு வந்தாள். சுவரில் மாட்டியிருந்த தனது குடையைக் கையில் எடுத்துக் கொண்டு, ''தாத்தா! உங்களுக்கு பிளாஸ்க்கில் காப்பி வைத்திருக்கிறேன். டிபன்செட்டில் சாப்பாடு இருக்கிறது. நான் போய்விட்டு வருகிறேன். நாழியாச்சு!'' என்று கூறிவிட்டு, காலில் செருப்புகளை அணிந்து கொண்டாள்.

''போகிறதுக்கு முன்னாடி இங்கே கொஞ்சம் வாம்மா'' என்று தாத்தா மிகவும் குழைவான குரலில் அழைத்தார்.

மஞ்சுளாவினால் அந்தக் கட்டளையை மீற முடியவில்லை. ''என்ன வேணும் தாத்தா?'' என்று கேட்டபடி அருகில் வந்து நின்றாள். ''இப்படி உட்கார் அம்மா!'' என்று ரகுபதி சாவகாசமாக உத்திரவிட்டதைக் கேட்க, பேத்திக்குக் கோபம் கோபமாகத்தான் வந்தது.



''சட்டுனு சொல்லுங்க தாத்தா'' என்று குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் எதிரொலிக்கும் குரலில் கடுத்துக் கொண்டு அருகில் வந்து உட்கார்ந்தாள்.

தாத்தா ரகுபதி தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டார். ''மனிதனுக்குக் கோபம் என்கிற உணர்ச்சியும் ஓரளவிற்கு வேண்டியதுதான்; ஆனால் அர்த்தமற்ற சினத்தினால் சிந்தனைக்கு ஆபத்துதானே ஒழிய லாபம் ஏதும் இல்லை. உனக்கு எல்லாம் தெரிந்ததுதானே அம்மா. என்னால் முடிந்தவரை முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறேன். அந்த மனிதர் இப்படி ஒரு கடிதம் போடுவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்றார் மிகவும் தடுமாற்றமான குரலில்.

''அந்த வரனைப்பற்றி யொன்றும் நான் கவலைப்படவில்லை தாத்தா!'' என்று பதட்டமாகப் பதில் அளிக்க வேண்டுமென்று மஞ்சுளாவிற்குத் தோன்றிய போதிலும் பதில் பேச முடியவில்லை. கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

''மஞ்சு!'' என்று கிழவர் மிகவும் அன்பாக அழைத்தார். ஆனால் பேத்தி குனிந்தபடி தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பாட்டியை உனக்கு நன்றாகத் தெரியுமல்லவா? ஆனால் அவளை நான் அறிந்து கொண்டிருந்தபடி நீ அறிந்திருக்க நியாயமில்லை. பூமிதேவி மனித உருவில் வந்துவிட்டாள் என்று சொல்லும்படி அத்தனை பொறுமைசாலி. அது மட்டுமா? மலையே புரண்டு மேலே மோத வேகமாக வந்துவிட்ட போதிலும் கலங்காத ஒரு நெஞ்சம் உடையவள். நேர்மையான நடத்தை, இத்தனை குணமிருந்தனவே, அவள் வாழ்க்கையில் செல்வத்தில் திளைத்தாளா? பணத்தில் புரண்டாளா? பட்டாடைகளில் மின்னினாளா? - என்றெல்லாம் கேட்காதே! வறுமையுடன் போராடினாள். புத்திர சோகத்தில் மூழ்கி எழுந்தாள். கஷ்டங்களைச் சகிக்க முடியாது கோழையாக இருந்த எனக்குப் பெருந்துணையாக இருந்து நெஞ்சில் வலிமை

ஊட்டினாள். அவள் எப்படிப்பட்ட அருமையான பெண்மணி என்பதை நான் ஒரு நாளும் மறந்ததேயில்லை. மறக்கப் போவதுமில்லை. ஒரு மனிதனது வாழ்விலே இப்படிப்பட்ட ஒரு பெருமிதமான எண்ணத்தை உண்டாக்கிவிடும் பெண், ஒரு நாளும் சாவதில்லை. அவள் என்றும் வாழ்கிறவள் தெரியுமா?'' என்றார் கிழவர் உணர்ச்சியினால் நடுங்கும் குரலில்.

பஸ்ஸைப் பிடிக்கத் துடித்துக் கொண்டிருந்த பேத்தியின் காதுகளில் அந்த வார்த்தைகள் கிணற்றுக்குள்ளிருந்து ஒலிப்பன போலக் கேட்டன. கிழவர் அதற்குமேல் பேசாது, ''போய்விட்டு வாம்மா. நாழியாய் விட்டது'' என்று முடித்துவிட்டு, நெற்றி மீது தவழ்ந்த அவளது சுருண்ட கூந்தலை அன்போடு ஒதுக்கி விட்டார்.

கதவைச் சாத்திக் கொண்டு வாயிலுக்கு வந்த மஞ்சுளா குடையைப் பிரித்தாள். சமயம் பார்த்து அதனுடைய கம்பிகளில் இரண்டு பிய்ந்துக் கொண்டு விடவே குடை நன்கு விரிய மறுத்து விட்டது. 'எல்லாம் சோதனை போல் நடக்கிறது!' எனத் தனக்குள் முணுமுணுத்து விட்டு, சினம் தாளாது பற்களைக் கடித்துக் கொண்டாள். வேறுவழியின்றி, பொழிந்து கொண்டிருந்த மழையில் பாய்ந்து நனைந்தபடியே பஸ் நிலையத்திற்கு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

சொல்லி வைத்தாற்போல் அந்த எட்டரை மணி பஸ் அவள் ஒருசில அடி தூரத்தில் ஓடிவரும் பொழுதே புறப்பட்டுச் சென்றுவிட்டது.

## 2

அடுத்த பஸ் வரும் வழியிலே விழியை வைத்துக் கொண்டு, நனைந்துபோன தனது புடவையைப் பிழிந்து சரிப்படுத்திக் கொண்டு நின்றாள் மஞ்சுளா. ''வைதேகி பெண்கள் பாடசாலை''யின் தலைவி ஸ்ரீமதி கிருபாவதியின்



முகம் அவளது கற்பனையில் மிகவும் பயங்கரமாகத் தோன்றி மறைந்த வண்ணமிருந்தது. 'இன்னும் கொஞ்ச நேரத்தில் பள்ளிக் கூடத்தின் வாயிலில் தொங்கும் பெரிய மணி பெருத்த கோஷத்துடன் ரீங்காரம் செய்யத் தொடங்கிவிடும். ஈசல் போல் நாலாபுறத்திலிருந்தும் புத்தகப் பைகளைத் தூக்கிக் கொண்டு எண்ணூறு சிறுமிகள் பள்ளியின் பொது ஹாலில் வந்து குவிந்துவிடுவார்கள். தன் கீழ் வேலை செய்யும் முப்பது உபாத்தியாயினிகள் புடைசூழ, தர்பாரில் அல்லிராணி மிடுக்காக நுழைவது போல் ஸ்ரீமதி கிருபாவதி ஹாலுக்குள் பிரவேசிப்பாள். கையில் பிடித்திருக்கும் தனது அழகுப் பையைச் செல்லமாகத் தடவிக் கொண்டு, கழுகு போன்ற தன் கண்களை ஹாலுக்குள் ஒரு முறை வளையவிட்டால் குறித்த நேரத்தில் யார் அங்கு வரவில்லை என்பதை அறிந்து கொண்டு விடுவாள். பெயர்தான் கிருபாவதியே தவிர, கருணைக்கும் அந்தம்மாளுக்கும் காததூரம்! 'இன்றைக்கு நல்ல சகஸ்ரநாமம்தான் கிடைக்கப் போகிறது' என்று பலவாறு எண்ணமிட்டபடி மஞ்சுளா நின்று கொண்டிருந்தாள்.

அதற்குள் நிலையம் நிரம்பி வழிந்து விடும்போல் ஜனங்கள் வந்து குவிந்துவிட்டார்கள். தனது நீண்ட குதிகால் பாதரட்சையினால் நறுக்கென்று மிதித்துவிட்டு 'ஸாரி' என்று தேனினும் இனிய குரலில் அலட்சியமாகக் கூவிய கலாசாலை மாணவி ஒருத்தி, மஞ்சுளாவை மேலும் கீழும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, தனக்குள் லேசாகப் புன்முறுவல் செய்து கொண்டாள். அந்த இகழ்ச்சியான நகைப்பின் அர்த்தம் யாதாக இருக்குமென்று மஞ்சுளாவினால் ஊகிக்க முடியவில்லை. பஸ் வரும் திசைப் பக்கம் திரும்பியபோது அதே சமயம் தன்னை அந்த நிலையத்திலிருந்த வேறு சிலரும் வெறிக்கப் பார்ப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

காரணமற்றதொரு திகைப்பில் நெஞ்சு படபடவென்று துடிக்க ஆரம்பித்தது. கையில் பிடித்திருந்த மணிபர்ஸைக் கீழே தவறவிட்டு விட்டாள். குனிந்து அதை எடுக்க முயற்சித்த போதுதான், அவளுக்கு பலர் தன்னை வேடிக்கையாக விறைத்துப் பார்ப்பதன் காரணம் புலப்பட்டது. அவசரத்தில்

கவனிக்காது அவள் உடுத்தியிருந்த புடவையின் முன் மடிப்பில் ஒரு விகாரமான கிழிசல் அவளது வறுமையைப் பறைசாற்றிக் கொண்டு உள் ஆடையைக் காட்டியபடி தொங்கிக் கொண்டிருந்தது.

வெட்கமும் அவமானமும் தாள முடியாது மஞ்சுளா, பஸ் வரும் திக்கின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள். நீர்மல்கி நின்ற அவளது கண்கள், வீதியில் சென்று கொண்டிருந்த பெரிய வாகனங்களை வெறுப்புடன் கவனிக்கத் தொடங்கின. பின் ஆசனங்களில் சொகுசாகச் சாய்ந்து கொண்டு, டிரைவர் சாரத்தியம் செய்ய, கப்பல் போன்ற பெரிய கார்களில் போய்க் கொண்டிருந்தார்கள் பலர். ஆனால் அத்தனை பெயர்களில் ஒருத்தருக்குக் கூட ஏழைப் பெண்ணான அவள் மீது இரக்கம் ஏற்படவில்லை. ''மஞ்சுளா வாம்மா, வண்டியில் ஏறிக்கொள். பள்ளிக் கூடத்திற்கு நேரமாய்விட்டது. கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்'' என்று சொல்ல முன் வருவார் யாருமில்லை!

''சீ ஒரு பொழுதும் ஏழையாகப் பிறக்கக் கூடாது. அப்படிப் பிறந்து விட்டபோதிலும், சமாளிக்க முடியாத இடங்களில் சென்று உத்தியோகத்தில் அமரக் கூடாது. உஹ¨ம்...'' என்று தனக்குள்ளே எண்ணிக் குமுறிய அவளது நெஞ்சைத் துக்கம் பலமாக அமுக்கியது. யாரும் பார்ப்பதன் முன் பெருகிக் கன்னங்களில் வழியத் தயாராகத் துளிர்த்துக் கொண்டிருந்த கண்ணீரைக் கரத்தால் தட்டிச் சிதறவிட்டுவிட்டு வேகமாக வந்து நின்ற பஸ்ஸில் பாய்ந்து ஓடி ஏறிக் கொண்டாள். புடவையின் முன் மடிப்பில் தொங்கிய கிழிசலை மடித்து, தெரியாவண்ணம் ஒரு குண்டூசியால் குத்தி மறைத்துக் கொண்ட பின்புதான் அவளுக்கு மூச்சு வந்தது.

''வைதேகி பெண்கள் பாடசாலை''யின் வாயிலை அடைந்த பொழுது, அதுவரை பெய்த மழையும் திடீரென்று ஓய்வு பெற்றுக்கொண்டு விட்டதுபோல் நின்றுவிட்டது. வானத்தின் கடுமையை விலக்கிக் கொண்ட மேகமண்டலத்தின் வழியே சூரியன் மெல்லத் தலையை நீட்டிக் கொண்டிருந்தான்.



இயற்கையில் ஏற்பட்ட இந்த மாறுதல் ஒன்றும் மஞ்சுளாவிற்கு உற்சாகம் ஊட்டவில்லை. கிருபாவதியம்மாளிடம் தனக்குக் கிடைக்கப் போகும் வரவேற்பை எண்ணியபடி, கிலி பிடித்தவளாகத் தடுமாறியபடி உள்ளே சென்றாள்.

''பஸ் தவறிவிட்டதா; அதனால்தான் முக்கால் மணி தாமதமாக வந்திருக்கிறீர்கள்'' என்று துக்கம் விசாரித்துக் கொண்டு கையெழுத்துப்போடும் புத்தகத்தை நீட்டினார் ஆபீஸ் குமாஸ்தா அர்த்தநாரி. கனவில் காரியம் செய்கிறவள் போல் தன் பெயரை அதில் கிறுக்கிவிட்டு, தான் வேலை செய்யும் நிலையத்திற்குள் வேகமாகச் சென்று மறைந்து கொண்டாள். கொஞ்ச நேரத்தில் அவள் எதிர்பார்த்தபடியே பள்ளிக்கூடச் சேவகன் அங்கே வந்து, ''உங்களைப் பெரிய அம்மா தன் அறைக்கு வரச் சொன்னாங்க'' என்று கூறிவிட்டுப் பற்களைக் காட்டிக் கொண்டு நின்றான். அந்த உத்தரவின் அர்த்தம் முழுவதையும் உணர்ந்த மஞ்சுளாவின் நெஞ்சு பயத்திலே படபடத்தது. ''இதோ வந்துவிட்டேன்'' என்று குமுறிவிட்டு, மெல்லத் தலைவியின் அறையை நோக்கிச் சென்றாள்.

பாயக் காத்திருக்கும் சிங்கம் போல கோபாவேசத்துடன் ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த கிருபாவதி, அவளைக் கண்டதும் அருகில் வேகமாக நடந்து வந்தாள். ''மஞ்சுளா இத்துடன் நான்கு முறைகளாயிற்று. ஒவ்வொரு முறையும் ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் தாமதம் அல்ல. ஒரு மணி நேரத்திற்கு மேல் தாமதமாக வந்தால் யாரால் பொறுக்க முடியும்? நினைத்தபோது நிம்மதியாக வேலைக்கு வருவதற்கு இது பொழுது போக்கும் 'வம்பு மடம்' என்று நினைக்க வேண்டாம்; பள்ளிக்கூடமென்பது ஞாபகமிருக்கட்டும். கடைசியாகச் சொல்லிவிட்டேன். இன்னொரு தடவை இதே தப்பு செய்தாயானால் நான் மிகவும் கடுமையாகத் தண்டிக்க நேரும்'' என்று சீறி விழுந்தாள்.

''மன்னிக்க வேண்டும். இன்று எனக்கு பஸ் தவறிவிட்டது. அதனால்தான்'' என்று கெஞ்சாத குறையாகத் துக்கத்துடன் தடுமாறிய மஞ்சுளா வார்த்தையை முடிக்கு முன் தலைவி கோபமாகக் குறுக்கிட்டாள்.

''பஸ் தவறிவிட்டது. பாட்டிக்கு உடம்பு சரியில்லை. வீட்டில் சமைக்க நேரமாயிற்று'' என்று எனக்கு சாக்குபோக்கெல்லாம் காதில் போட வேண்டியதில்லை. உனது குடும்ப விஷயங்களும் தொல்லைகளும் பற்றி நான் கேட்கத் தயாராக இல்லை. எனக்கு வேண்டியதெல்லாம் இங்கு வேலை செய்யும் எல்லோரும் சரியான நேரத்திற்கு வந்து தங்கள் காரியத்தை ஒழுங்காகச் செய்து முடிக்க வேண்டும். அதற்காகத்தான் சம்பளம் கொடுக்கிறோம்'' என்றாள் கடுமையாக.

மஞ்சுளாவிற்குப் பதில் என்ன சொல்வதென்றே புரியவில்லை. மௌனமாகத் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

மேஜைமீது கிடந்த தனது கைக்குட்டையை எடுத்து தன் முகத்தை நன்றாகத் துடைத்துக்கொண்ட கிருபாவதி அம்மாள், மஞ்சுளாவை ஏற இறங்க ஒரு முறை நன்றாக உற்றுப் பார்த்தாள்.

''பஸ்தான் தவறிவிட்டது. இதைக்கூடவா கவனிக்க வீட்டில் உனக்கு பொழுது இருக்கவில்லை? இப்படிப் புறப்பட்டு வந்திருக்கிறாயே?'' என்று அதட்டிக் கொண்டு, மஞ்சுளாவின் கிழிந்த புடவையைச் சுட்டிக் காட்டினாள் தலைவி. அவமானத்தினால் உடல் குறுகி, தலை நிமிரச் சக்தியின்றி, மரம்போல் நின்றுவிட்டாள் மஞ்சுளா.

''ஏழைப் பெண் என்று உன்னை நான் பழிக்கவில்லை. கிழிந்த புடவையைத் தைக்கக்கூட நேரமில்லாது அத்தனை சோம்பேறித்தனமா என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உத்தியோகத்திற்கு இப்படித்தானா உடுத்திக் கொண்டு வருவது? அதுவும் இன்று நமது பள்ளிக்கூடத்தைப் பார்வையிட மேயர் அம்மாள் வரப் போகிறார்கள். அது சமயம் நீ இப்படி அலங்கோலமான ஆடையிலே தோற்றமளித்தால் நமது பள்ளிக்கு மெத்த கௌரவமாகத்தான் இருக்கும்? சரி! சரி! போ!'' என்று வெறுப்பாகக் கர்ஜித்துவிட்டு அவளைப் பார்க்கவும் பிடிக்காததுபோல் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள் தலைவி.



ஒரே ஓட்டமாக நூல் நிலையத்திற்கு ஓடி வந்த மஞ்சுளா, நேரே தன் ஆசனத்தில் போய் விழுந்தாள். தலைவி கேட்ட கேள்விகள் ஒவ்வொன்றும் ஈட்டியாக நெஞ்சத்திலே தாக்கி வேதனை செய்யவே, மேஜைமீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு, தன் துக்கம் எல்லாம் தீர ஒரு மூச்சுக் கண்ணீர் விட்டு விம்மி அழுதாள்.

வெளியே காலடிச் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தபோது, தான் மட்டும் அங்கே தனியாக இருக்கவில்லை, என்பதை அறிந்து கொண்டாள். புத்தக அலமாரி அருகே கிடந்த நாற்காலி ஒன்றில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த உபாத்யாயினி சங்கரி, கைக்குட்டையினால் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களும் முகமும் சிவந்து கோவைப் பழமாகக் காட்சியளித்தன. இருவரும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக் கொண்டதும் குழந்தைகள் போல் குபீரென்று சிரித்து விட்டார்கள். பள்ளிக் கூடத் தலைவியின் கடும் சொற்களைக் கேட்டு அவமானப்பட்டது அன்று காலையில் தான் ஒருத்தி மட்டும் அல்ல. தனக்கு இதில் இன்னொரு கூட்டாளியும் இருந்திருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டதும் மஞ்சுளாவுக்கு எத்தனையோ ஆறுதலாக இருந்தது. அதைப் போலவே சங்கரிக்கும் அவளைக் கண்டு மனச்சாந்தி சிறிது ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு அவள் வலியத் தானாகப் பேசத் துவங்கினாள்.

''ஆனாலும் நமது தலைவி நாக்கில் நரம்பில்லாமல் கண்டபடி பேசிவிடுகிறாள் இல்லையா? கொஞ்சநேரம் இன்று தாமதமாக வந்துவிட்டேன். உடனே எனக்கு வகுப்பிற்கே வாரண்டு அனுப்பி விட்டாள் மகராஸி. குடி முழுகி விட்டதுபோல் என்னைக் கண்டு எரிந்து விழுந்தாள். ஆயிரம் காலமிருந்து பள்ளிக் கூடத்தைத் தானே சுமந்து கொண்டிருக்க போகிறவள்போல வீண் கனவு! என்ன மனுஷி? கருணை என்பதே கடுகளவும் இல்லாத ஒரு ஜென்மம். எத்தனையோ பள்ளிக்கூடத்தில் நானும் வேலை செய்திருக்கிறேன். ஆனாலும்

இது போன்ற ஒரு ராக்ஷஸியை நான் தலைவியாகக் கண்டதேயில்லை'' என்று படபடவெனப் பேசினாள் சங்கரி.

''இந்த உத்தியோகந்தான் எனக்கு முதல் அனுபவம். ஆனாலும் பிசகு நம் மேலும் இருக்கிறது. ஒழுங்காக நேரத்திற்கு நாம் அனைவரும் உத்தியோகத்திற்கு வராவிட்டால் தலைவி எப்படி இந்த ஸ்தாபனத்தைச் செம்மையாக நிர்வகிக்க முடியும்? அதனால்தான் நம்மிடம் கண்டிப்பாக இருக்கிறார்கள்'' என்று மெல்லிய குரலில் பதிலளித்தாள் மஞ்சுளா.

வெளியே புடவை சலசலக்கும் சப்தம் கேட்டதும் மிரட்சியாகச் சுற்றுமுற்றும் கவனித்துக் கொண்டாள். 'நூல் நிலையத்தில் உட்கார்ந்து கொண்டு சளசளவென்று பேசுவது சரியா?' என்று எங்கே கிருபாவதி வந்து கர்ஜிப்பாளோ என்று பயம் அவளுக்கு!

''போ! மஞ்சுளா! நீ சுத்த பயந்தாங்கொள்ளி. தலைவி காதில் நாம் பேசுவது பட்டுவிட்டால் வேலை எங்கே போய்விடுமோ என்ற கிலியில் நீ சிப்பங்கட்டிப் பேசுகிறாய். உனது உண்மை அபிப்பிராயத்தை வெளியிட அஞ்சுகிறாய். ஆனால் எனக்கு ஒன்றும் பயமில்லை. ஏதோ ஒருநாள் தப்பித் தவறி யாராவது கொஞ்சம் தாமதமாக வந்துவிட்டால் ஒரே அட்டகாசம் செய்து விடுகிறாளே. சே! எனக்கு ஒன்றும் இவள் போக்கு பிடிக்கவில்லை'' என்று வெறுப்புடன் பேசினாள் சங்கரி.

''தனது கடமையைச் சரிவரச் செய்கிற மனிதரைச் சாதாரணமாக எல்லோருக்கும் பிடிக்காது. கடமை என்பது வேப்பங்காய் போல் கசக்கிற விஷயம். அதனால்'' என்று மஞ்சுளா விவரிக்கும் முன், பொறுமையற்ற சங்கரி குறுக்கிட்டுப் பேசலுற்றாள்.

''கடமை உணர்ச்சியுடையவர்களுக்குக் கடல் போன்ற கருணை உணர்ச்சியும் உண்டு என்பதை மறக்காதே! கடமை தவறிக் கருணை காட்டும் சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் எத்தனையோ முறை ஏற்படக்கூடும். தன் புத்தியை உபயோகப்படுத்தி, சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நடக்கிற



ஆசாமிதான் அன்பு இருதயமுடைய மனிதப் பிறவி என்று சொல்வேன் நான். மண்டபத்தைச் சுமக்கும் கடமை கல்தூண்களைச் சேர்ந்தது என்று வைத்துக் கொள். சுமக்கும் பொறுப்பைச் சோர்வு இல்லாமல் இராப் பகலாய் செய்து கொண்டிருக்கின்றனவே என்று அவைகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொடுப்பாயோ? கல் தூண்களிடம் போய் முட்டிக் கொண்டால் என்ன ஆகும்? நமது மண்டைதான் உடையும்! அதைப் போல்தான், கடமை என்று போர்வையிட்டுக் கொண்டு பதவிக் கர்வம் பிடித்த இந்தப் பிசாசுகளிடம் போய் நாம் என்ன கெஞ்சி அழுதாலும் கல்தூணிடம் கிடைக்கும் வெகுமதிதான்'' என்று மிக வெறுப்பாகப் பிரசங்கம் செய்தாள்.

''என்னவோ உன்னைப் போல் தர்க்கம் செய்ய எனக்குத் திறமையில்லை. சற்றுமுன் என்னைத் தலைவி கோபித்துக் கொண்ட பொழுது எனக்கும் உன்னைப் போல் கருணையற்ற பெண்மணி அப்படி இப்படி என்று துக்கத்திலும் கோபத்திலும் பலவிதமான கற்பனைகள் தோன்றின. ஆனால் இப்போது யோசிக்கும்போது, தப்பும் நம் பக்கத்தில் இருக்கிறதாகத் தோன்றுகிறது. வேலைக்கு இத்தனை மணிக்கு வரவேண்டும் என்கிற விஷயம் தெரிந்ததுதானே? பஸ் தவறிவிடாதிருக்க இன்னும் சற்று முன்னதாகவே எழுந்து, வீட்டு வேலைகளைச் சட்டெனச் செய்துவிட்டுப் புறப்பட்டிருக்க வேண்டும். இல்லையா?'' என்றாள் மஞ்சுளா.

''போகட்டும் போ! ராத்திரி வீட்டிற்கே போகாது இங்கேயே பள்ளிக்கூடத்தின் வாயிலில் படுக்கையைப் போட்டுக் கொண்டு விழுந்து கிடக்க வேண்டும் என்று சொல்லாமல் போனாயே, சமத்துப் பெண்! பள்ளிக் கூடம் முடிந்து, தினம் அதற்குப்பின் நடக்கும் சொற்பொழிவு, மாதாந்திரக் கூட்டம் என்று பல பொது விஷயங்களும் முடிந்து, நாம் பஸ் பிடித்த வீடு போவதற்கு ஒரு நாள் போல் மணி இரவு எட்டாகி விடுகிறது. அதற்கு மேல் போய் நாம் உணவு தயாரிக்கும் படலத்தில் ஈடுபட வேண்டும். சாப்பிட்டதும் தூங்க முடியுமா? வகுப்புப் பெண்களின் பாட நோட்டுப் புத்தகங்கள்

நூற்றுக்கணக்கில் திருத்தம் செய்வதற்காக மேஜைமீது மூட்டையாக உட்கார்ந்து பயமுறுத்திக் கொண்டிருக்கும். நம் வேலை முடிந்து தலைசாய்க்கப் பன்னிரண்டு மணியாகிவிடும்.

''முடிந்ததும் வீட்டு வேலையையும் செய்துவிட்டு, பஸ்ஸைப் பிடிக்க ஓடவேண்டும். நாள் ஒன்றுக்கு இருபத்து நான்கு மணிதானே இருக்கிறது. 'வைதேகி பெண்கள் பாடசாலை'க்காக நாற்பத்தெட்டு மணியாக இருந்தால் மிக நன்றாக இருக்கும். தலைவி மட்டும் தினமும் சரியான நேரத்திற்கு வேலைக்கு வந்து விடுகிறாளே என்று குறும்புக் கேள்வி கேட்காதே? பிள்ளை குட்டி தொந்தரவு அற்ற தனிக்கட்டை. ஆசைக்குப் படித்துவிட்டு அந்தஸ்திற்கு உத்தியோகம் செய்யும் பணக்கார வீட்டுப் பட்டதாரி. புத்தகக் கட்டைத் தூக்கி வர ஒரு வேலையாள், பாதரட்சையைத் துடைத்துக் கொடுக்க ஒரு வேலைக்காரப் பெண் என்று ஏனைய வேலையைச் செய்ய ஆட்கள் பலர் நிறைந்த பங்களா வாசம் அவர்களுக்கு. நம்மைப் போலப் பொதுஜனப் போக்குவரத்து வாகனங்களுக்குக் காத்திருக்க வேண்டியதில்லை. 'பையா?' என்று குரல் கொடுத்தவுடன் ஜம்மென்று கார் வந்து வாயிலில் நிற்கும். இவளுக்கு ஏழை எளியவர்களது கஷ்டம் என்ன தெரியும்? ஆனாலும் நான் இனி இவளை லட்சியம் பண்ணப் போகிறதில்லை.

''இந்த மாதம் முடிந்தவுடன் ஒரு கால் காகிதம் நீட்டி விட்டு...'' தனது சொற்பொழிவினால் ஏற்பட்ட அலுப்பை நிவர்த்தி செய்து கொள்கிறவள்போல் பெருமூச்சு விட்டாள் சங்கரி.

தற்காலிமாக என்று அளிக்கப்பட்டிருக்கும் தனது குமாஸ்தா உத்தியோகத்தை உடும்பு போல் பிடித்துக் கொண்டு, சகல கஷ்டங்களையும் சகிக்கத் தயாராக இருந்த மஞ்சுளாவிற்கு இதைக் கேட்க ஆச்சர்யமாகத்தான் இருந்தது. தனது அழகிய பெரிய விழிகளை வியப்புடன் விரித்து, ''வேறு நல்ல வேலை கிடைத்துவிட்டதா?'' என்று விசாரித்தாள்.



எதிரே தெரிந்த புத்தக அலமாரிக் கண்ணாடியில் தலையைக் கோதிச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்திருந்தாள் சங்கரி. ''ஆமாம்! இதைவிடப் பன்மடங்கு உயர்ந்த உத்தியோகம் எனக்கு கிடைத்துவிட்டது. எனக்கு இனி பெரும் நிம்மதி. அடுத்த மாதம் பதினைந்தாம் தேதி எனக்குக் கல்யாணம். திருமணம் என்பதும் ஒரு பெரிய உத்தியோகந்தானே! திருமணப் பத்திரிகை கொடுப்பேன். கட்டாயம் நீ வரவேண்டும்'' என்று கூறிவிட்டு, கலகலவென்று நகைத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

அவள் சென்ற திக்கையே மஞ்சுளா வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள். முதல் நாள் மாலை தாத்தாவுக்கு வந்திருந்த அந்தக் கடிதம் மட்டும் வேறுவிதமாக இருந்திருந்தால் அவளும் இந்த மாதிரி பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்க முடியும் அல்லவா? ஆனால் அதுதான் பெருத்த ஏமாற்றமாக மாறிவிட்டதே!

அவள் அப்படியொன்றும் பெண் பார்க்க வந்த வாலிபன் மீது கரைகாணாக் காதல் கொண்டு விடவில்லை. தாத்தா தன் பொருட்டுப்படும் மனக் கஷ்டத்தையும், சிரமத்தையும் பார்த்து இரங்கி, வரன் என்று வந்த எந்த வாலிபனையும் ஏற்க அவள் தயாராக இருந்தாள். 'இது வேண்டாம், இந்தப் பிள்ளையை எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்லி, வயது காலத்தில் தாத்தாவுக்கு வீண் சிரமம் கொடுக்க அவள் விரும்பவில்லை.

படிப்பில் தான் தேர்ச்சி பெற்று பாட்டனுக்கு மகிழ்ச்சி கொடுக்கத் தவறினோம். அவர் கொண்டு வரும் எந்த வரனையும் பதில் பேசாது மணந்து கொண்டு, அவருக்கு நிம்மதியை உண்டாக்குவோம் என்ற ஒரு கடமை உணர்ச்சி அவளுக்கு எப்பொழுதும் உண்டு. ஒவ்வொரு முறையும், பெண்ணைப் பார்த்துவிட்டுப் பிள்ளை வீட்டவர்கள் போனதும் தாத்தா, பேத்தியை அழைத்து, ''உனக்குப் பிள்ளையைப் பிடித்திருக்கிறதா அம்மா?'' என்று ஒரு தடவை கேட்டு வைப்பார். அவள் ஒவ்வொரு முறையும் ''உங்களுக்குப் பிடித்தால் எனக்கும் சரிதான்'' என்று சொல்வது வழக்கம்.

அன்றும் அதேபோல் அந்த வாலிபனைப் பற்றித் தாத்தா விசாரித்தபோது பதில் கொடுத்திருந்தாள். அந்த வரன் வீட்டவர்கள் சர்க்கரையாகப் பேசியதைக் கேட்டு உலக அனுபவம் ஏதுமில்லாத மஞ்சுளா மயங்கிவிட்டிருந்தாள். "நல்ல மனிதர்கள் போல் தோன்றுகிறது. மாமியாராக வரப்போகிற அம்மா முகத்தில் லக்ஷ்மி களை தாண்டவமாடுகிறது. பேச்சில் நயம் பொங்குகிறது. ஏழைப் பெண் என்று அருவருக்க மாட்டார்கள். அன்போடு சீராட்டுவார்கள்" என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

அந்தஸ்த்தையும் பணத்தையும் எடை போட்டுப் பார்க்கும் சமூகத்திலே அழகும் பெண்மையும் அவமானப்படத்தானே அவதரித்திருக்கின்றன என்பதை அவள் மறந்தே போய்விட்டாள். அந்தஸ்த்தற்ற ஏழைப் பெண் மஞ்சுளாவை மணந்துகொள்ள அந்த வாலிபனுக்கு என்ன பைத்தியமா? 'வரதட்சிணை வேண்டாம். பெண் கிடைத்தால் போதும்' என்று பெண்மையைக் கௌரவித்து அவளைத் தன் மருமகளாக ஏற்க அந்த மனிதருக்குச் சீர்திருத்த மோகம் ஒன்றும் ஏற்பட்டிருக்கவில்லை.

தாத்தா பாவம். வீண் சபலத்தில் தவித்துப் போய்விட்டார் என்று பலவாறு சிந்தித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒரு பக்கம் ஏழைப் பெண்களைத் திரும்பிப் பார்க்க விரும்பாத வாலிபர்களும் அவர்களது பெற்றோர்களும் நிறைந்த பயங்கரமான ஒரு சமூகம்; மற்றொரு பக்கம் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்த பாவத்திற்காக ஏற்படும் உத்தியோகத் திண்டாட்டம்; இன்னொரு பக்கம் பேய் போல் பிடுங்கித் தின்னும் வறுமை. இவைகளைப் பற்றி நினைக்க நினைக்க அவளது மூளை சுக்கல் சுக்கலாகச் சிதறி விடும்போல் பாரமாகிவிட்டது.



# 3

தன் அவலநிலை குறித்து மஞ்சுளா மனம் புழுங்கிக் கொண்டிருந்த சமயம் புத்தகங்கள் எடுத்துப் போக மாணவிகள் பலர் உள்ளே வந்தார்கள். மஞ்சுளா இடத்தை விட்டுச் சட்டென்று எழுந்திருந்தாள். அவர்களுக்கு புத்தகங்கள் எடுத்துக் கொடுப்பதிலும், கணக்கு எழுதுவதிலும் அவள் கவனம் சென்றுவிடவே, அவளது சொந்தக் கவலைகள் தற்காலிகமாக ஓய்வு எடுத்துக் கொண்டன. அதற்குப் பின்னர் அவளுக்கு வேலைகள் பல தலைக்குமேல் குவிந்து கிடந்தன. அதனால் பகல்பொழுது எல்லோரும் அமர்ந்து உணவு உட்கொள்ளும் சாப்பாட்டு அறைக்குப் போகக்கூட நேரம் இருக்கவில்லை.

நூல் நிலையத்தின் அலமாரி ஒன்றின் பின்னால் சென்று மறைவாக நின்றுகொண்டு, தான் கொண்டு வந்திருந்த சாதப் பொட்டலத்தை அவிழ்த்தாள். பசியாகப் பகல் உணவை உட்கொண்டு விட்டு, தோட்டத்துத் தண்ணீர்க் குழாயில் சென்று கையைக் கழுவிக் கொண்டாள். தாகம் அடங்கும் மட்டும் கைகளால் பிடித்து, வேண்டிய குளிர்ந்த நீரைக் குடித்தாள். பிறகு நூல் நிலையத்துக்குள் வேலை செய்யப் புகுந்தாள். எண் தவறாக அடுக்கி வைத்திருந்த புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைக்கவும், அடுத்த வருஷத்திற்காக வரவழைத்திருந்த புதிய புத்தகங்களைக் கட்டுக்களிலிருந்து அவிழ்த்துக் கணக்குப் பார்ப்பதிலும் அன்றையப் பொழுது கழிந்துவிட்டது.

பள்ளிக்கூடம் முடிவடைந்ததும் எல்லோருடனும் வெளியே வந்த மஞ்சுளாவிடம் காலையில் இருந்த பரபரப்பும் ஆத்திரமும் காணப்படவில்லை. 'ஏன் தாமதமாக வந்தாய்?' என்று தலைவி போல் தாத்தா அவளை அதட்டப் போவதில்லை.

"நாழியானால் போகட்டும். ஒருநாள் இப்படி முன்னே பின்னேதான் இருக்கும். நீ இத்தனை நாழிக்குமேல் போய்

சமைக்க வேண்டாம். அடுத்த தெரு ஹோட்டலுக்குப் போய் நான் ஏதாவது வாங்கிக் கொண்டு வரேன். சாப்பிட்டுவிட்டு நீ சீக்கிரம் படுத்துக்கொள். ரொம்பக் களைச்சுப் போயிருக்கே'' என்பார் மிகவும் அன்போடு. நேரம் எத்தனையானாலும் அவள் வரவிற்காக, சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி தாத்தா பொறுமையாகக் காத்திருப்பார் என்ற ஒரு நினைவு அவள் உள்ளத்திற்கு மெத்த ஆறுதலை அளித்தது.

சில நாட்களாக உலகத்தையே எட்டிப் பார்க்காது மழைக்குப் பின் ஒளிந்து கொண்டிருந்து விட்டதனாலோ என்னவோ அன்று மாலைச் சூரியன் இரட்டிப்பு மடங்கு அழகுடன், செம்மை ஒளி வீசிக் கொண்டு அஸ்தமனகிரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

பஸ் நிலையத்திலே நிம்மதியாக நின்றபடி, பளிச்சென்று சிவந்து காணப்பட்ட அந்திவானத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற மஞ்சுளாவின் உள்ளத்திலும் நம்பிக்கை மெல்லத் தலையை நீட்டியது. 'என் வாழ்வில் கலந்து நிற்கும் துன்ப இருள் விலகி, ஒரு நாள் இந்த வானத்தைப் போல் நல்ல காலம் என் வாழ்க்கையில் பிரகாசிக்காது போய்விடுமா? ஏன் அதற்குள் நான் பொறுமையை இழக்க வேண்டும்?'' என்று சிந்தித்தாள்.

உடனடியாகத் தொடர்ந்து அவளுக்குத் தாத்தா ரகுபதியின் நினைவு ஏற்படவே நெஞ்சம் பாகாய்க் கரைந்துவிட்டது. 'அன்பு காட்டிப் புத்தி சொன்ன தாத்தா மீது வீணாக எரிந்து விழுந்தேனே; எத்தனை பிசகான காரியம்? சே! சே! என்ன மடத்தனம்! பாவம் அவர் என்ன செய்வார். தம்மால் முடிந்தவரை எனக்குத் தமது கடமைகளைச் செய்துவிட்டார். ஆனால் பதிலுக்கு அவருக்கு என்ன செய்திருக்கிறேன்? ஒன்றுமில்லை! அதற்குப் பதிலாக முகத்தைக் கடுத்துக் கொண்டு வயது காலத்தில் அவர் மனத்தை நோகவல்லவா செய்துவிட்டேன். அவருக்கு உடம்பு வேறு சரியில்லை' என்று தனக்குள் எண்ணித் தான் செய்த தவற்றுக்காக வருந்தினாள்.



தாத்தா ரகுபதியை நினைக்க நினைக்க அவள் மனம் குழைந்து போயிற்று. கண்களை நீர் மறைத்துக் கொண்டது. தான் செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்ய எண்ணியவள் போல் அவள் எதிரேயிருந்த பழக்கடைக்கு விரைந்தாள். தாத்தாவிற்கு ஆஸ்திரேலியா திராட்சைப் பழம் என்றால் மிகவும் பிடிக்கும் என்று அவள் அறிவாள். அடிக்கடி வாங்கிச் சாப்பிடத்தான் அவர்களது பொருளாதாரம் அனுமதிக்காதிருந்தது. அடுத்த நாளைக்கும், அதற்கு அடுத்த தினத்திற்கும் வேண்டிய பஸ் கட்டணப் பணத்தைத் தனியே ஒதுக்கி வைத்துக் கொண்டு, மீதியிருந்த சில்லறைக்கு அரைச் சேர் திராட்சையும், ஒரு சீப்பு மலை வாழைப் பழமும் வாங்கிக் கொண்டாள்.

மஞ்சுளா திரும்பும் போது காலைபோல் அவசரப்படா விட்டாலும் அன்று அவள் வீடு வந்து சேருவதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. பஸ்ஸை விட்டிறங்கியதும் வேகமாகத் தங்கள் வீட்டை நோக்கி நடந்தாள். பிடிவாதத்துடன் அழுதுவிட்டுப் பின்னர் தாயின் மார்பிலே தலையைப் புதைத்துக் கொண்டு தூங்கிவிடும் குழந்தை உள்ளத்திலே நிலவி நிற்கும் அந்த இனிமையான சாந்தி அவள் மனத்திலே நிறைந்து விட்டிருந்தது.

வாயிலை அடைந்ததும் உற்சாகமான குரலில் 'தாத்தா!' என்று கூப்பிட்டுக் கொண்டு கதவைத் தட்டினாள். தாளிடாது இருந்த கதவு தானே சற்று நகரவே, தள்ளித் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். உள்ளே விளக்குக்கூட ஏற்றப்படாது ஒரே அந்தகாரமாக இருப்பதைக் கண்டு திகைப்படைந்து போனாள். கூடத்து மின்சார விளக்கைப் பொருத்திவிட்டு ''என்ன, தாத்தா கதவைச் சாத்த மறந்து தூங்குகிறீங்களே'' என்று செல்லமாகக் கோபித்தபடி சாய்வு நாற்காலியருகில் வந்தாள். சாய்ந்த நிலையில் படுத்திருந்த தாத்தாவின் முகத்தை விளக்கு வெளிச்சத்திலே குனிந்து உற்றுப் பார்த்த மஞ்சுளா ''தாத்தா!'' என்று அலறிக் கொண்டு கையிலிருந்த பழ பொட்டலத்தைக் கீழே போட்டு விட்டாள்.

ஆமாம்! ரகுபதி அவர்கள், பேத்தி என்ன அழுதாலும், தட்டி எழுப்பினாலும், எழுந்திருக்காத மீளா நித்திரை வசப்பட்டிருந்தார்.

மஞ்சுளா அழகானதொரு கனவு கண்டு கொண்டிருந்தாள். தாத்தாவும் அவளும் பெரியதொரு காரில் எங்கேயோ போய்க் கொண்டிருந்தார்கள். வழி நெடுகிலும் இரு பக்கமும் பசுமையான வயல்கள் பார்க்கக் கண்களுக்குப் பெரும் விருந்தாக இருந்தன. ''பொறுமையாக இரு என்று சொன்னேனே, அதன் பலனைப் பார்த்தாயா'' என்று தாத்தா அவளிடம் கேட்டார். மஞ்சுளா அதற்குப் பதில் சொல்ல எத்தனிக்கும்போது சில்லென்று ஜலத்துளிகள் தன்மீது விழுவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

''மஞ்சுளா! நாழியாச்சு எழுந்திரு அம்மா!'' என்று அன்போடு அழைக்கும் தாத்தாவின் நலிந்த குரலுக்குப் பதில் ''படுக்கையைச் சுருட்டம்மா! விடிஞ்சு எத்தனை நாழியாச்சு! தண்ணி ஊத்தி ஹாலைக் கழுவணும். உம்! உம்!'' என்று அதட்டியபடி ஒரு கையில் துடைப்பமும் இன்னொரு கையில் ஒரு பெரிய இரும்புக் குடத்தில் தண்ணீருமாகக் கேதாரியின் வீட்டு வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள். எழுந்திருக்காவிடில் குடத்துத் தண்ணீரைத் தலைமீது கொட்டி விடுபவள்போல் அவள் துடிப்பாகக் காணப்பட்டாள்.

வாரிச் சுருட்டிக்கொண்டு மஞ்சுளா எழுந்திருந்தாள். தனது ஜமக்காளத்தையும், தலையணையையும் விரைவாகக் கையில் எடுத்துக் கொண்டு அந்த இடத்தைவிட்டு அப்பால் நகர்ந்து ஓட வேண்டியிருந்தது. ஏனெனில் பொறுமையற்ற அந்த வேலைக்காரி ஹாலின் மறுகோடியில் தண்ணீரை ஊற்றித் துடைப்பத்தால் மிகப் பரபரப்பாகப் பெருக்க ஆரம்பித்து விட்டாள்.

''சீக்கிரமா குளிச்சிட்டுத் தயாராக இரு. உன் சித்தப் பெரியப்பா என்னவோ பேசவேண்டுமாம்'' என்று கடுமையான குரலில் உத்தரவிட்ட வண்ணம் மாடிப்படிகள் மீது



தன் காலில் அணிந்திருக்கும் மெட்டிகள் கலீர் கலீர் என்று ஓசைசெய்ய ஒய்யாரமாக இறங்கி வந்து கொண்டிருந்தாள் வீட்டின் எஜமானியான பார்வதி அம்மாள்.

''போ! போ! சொன்னது காதில் படலையா? வயசுப் பொண்ணு இப்படித் தூங்கி வழிஞ்சா வீடு நல்லாத் தானிருக்கும்'' என்று காதில் படும்படி முணுமுணுத்த வேலைக்காரி நாலுபுறமும் வழிந்து பரவிக் கொண்டு சென்ற நீரைத் துடைப்பத்தால் சளார், சளார் என்ற சப்தத்துடன் வேகமாகத் தள்ளி ஒதுக்கிக் கொண்டிருந்தாள். ஹாலில் கிடந்த நாற்காலி, மேஜைகளுடன் அந்தப் பெண்ணையும் சேர்த்துப் பெருக்கி வெளியில் வீசி விடுவாள் போலிருந்தது அவள் செய்த அட்டகாசமான காரியம்.

மஞ்சுளா பதில் பேசாது அங்கிருந்து பின்கட்டிற்குச் சென்றாள். படுக்கையைப் பத்திரமாக அங்கிருந்த பெஞ்சின் மீது வைத்துவிட்டுக் குளிக்கும் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். அன்பே கடுகளவும் இல்லாத அந்த வீட்டில் வசிக்க நேர்ந்ததனால் இப்பொழுதுதான் அவளுக்குத் தாத்தாவின் அருமை பூராவும் நன்கு விளங்கியது. எத்தனையோ விதமான கஷ்டங்கள் அவர்களது வாழ்க்கையில் இது வரை ஏற்பட்டதுண்டு. ஆனால் அன்புக்கும் அனுதாபமான இனிய மொழிக்கும் பஞ்சம் ஏற்பட்டதேயில்லை. இப்பொழுது அவைகளுக்குமல்லவா வறுமை வந்துவிட்டது! குழாயைத் திருப்பி விட்டாள் மஞ்சுளா. ஜிலுஜிலுவென்று அண்டாவில் விழுந்த குளிர்ந்த தண்ணீரைப் போல் அவள் கண்களிலிருந்தும் துயரக்கண்ணீர் தாரையாக வழிந்தோடியது.

''ஐயோ! தாத்தா! என்னை ஏன் இந்த உலகத்தில் அனாதையாக விட்டுப் போனீர்கள்?'' என்று தனக்குள் மெல்லத் தினறினாள். துக்கம் தாள முடியவில்லை. நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கவே, நன்றாகக் கதறி அழுது விட்டாள்.

''அல்பாயுசில் போய்விட்டாரா? நன்றாக அழுதாய்போ! வயது ஆச்சு. கிழப்பிராணன் தானே ஒடுங்கிவிட்டது. நினைத்தபோது நேரம் பொழுது இல்லாமல் இங்கே துக்கக்

கண்ணீர் வடிக்க வேண்டாம். என் வீடு உருப்படாமல் போய்விடும்'' என்று முதல் நாளே பெரியம்மாள்த்தை உத்தரவு போட்டிருந்தாள். அதனால் மஞ்சுளாவிற்குத் தன் துயரத்தைக் கண்ணீர் வழியாக ஆற்றிக் கொள்ளக்கூட அந்த வீட்டில் சுதந்திரம் இருக்கவில்லை. அதனால் ஸ்நான அறைக்குள் குளிக்கும் பாவனையில் தன் வருத்தம் தீருமட்டும் நன்றாக அழுது ஓய்ந்தாள். ஸ்ரீமான் கேதாரிக்கு விடிந்ததும் விடியாததுமாக அவரிடம் பேச வேண்டிய முக்கியக் காரியம் என்னவாக இருக்கும்? அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

ஒரே வீட்டின் வெவ்வேறு பகுதியிலே வருஷக் கணக்காக வசித்த போதிலும் இடையே தடுத்து எழுப்பியிருந்த கற்சுவருக்கப்பால் சிந்தனையை ஓட்ட நேரமேயிருக்காது தத்தம் வயிற்றுப் பிழைப்பைக் கவனித்து விட்டு வேலைக்குப் பின் அயர்ச்சியோடு தங்களது வாசஸ்தலத்திற்குள் அடைந்து கொண்டு விடும் அன்றாடம் காய்ச்சிகள் நிரம்பிய நகரத்தின் ஒரு பகுதி அவள் வசித்துவந்த இடம். எனவே தாத்தா மரணமடைந்து விட்டார் என்பதை உணர்ந்து கொண்டு நெஞ்சு பிளக்க அவள் கதறியதைக் கேட்டு அண்டை அயலார் யாரும் உடனே ஓடிவந்து விடவில்லை. அழும் சப்தத்தைக் கேட்டு ஜன்னல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த இரண்டொருவர்கூட ''நமக்கென்ன இந்த வம்பெல்லாம். காலை ஏழு மணிக்கு வேலைக்கு ஓடவேணும்'' என்று நினைத்துக் கொண்டு ஜன்னலை மூடி விட்டு உள்ளே மறைந்து கொண்டார்கள்.

வெகுநேரம் தாத்தாவின் மீது முகத்தை வைத்துக் கொண்டு அழுது கண்ணீர் வடித்துச் சோர்ந்து போனாள் மஞ்சுளா. மேலே என்ன செய்வதென்று அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பிரிவு, துக்கத்தின் முதல் அதிர்ச்சி கொஞ்சம் அடங்கியதும் அவள் சிரித்தாள். அவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் என்று யாரும் நகரத்தில் இருக்கவில்லை. நண்பர்கள் என்று உரிமை பாராட்டி உதவிக்கு அழைக்க யாரும் கிடையாது. என்ன செய்வது என்று குழப்பத்துடன் ஆலோசித்த போது கேதாரியின் ஞாபகம் வந்தது.



ஸ்ரீமான் கேதாரி ரகுபதியின் ஒன்றுவிட்ட சகோதரனது புத்திரன். மிகவும் தூர பந்துதான். நகரத்தில் ஒரு பெரிய மரக்கடையில் மானேஜர் என்ற பதவியிலே வாழ்ந்து கொண்டிருந்தார். தமது ஒரே பெண்ணை, தக்க இடத்தில் உரிய வயதில் சீரும் சிறப்புமாகக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டதனால் கேதாரி தம்பதிகளுக்குக் குடும்பக் கவலை ஏதும் இருக்கவில்லை. வசிக்க சொந்த பங்களாவும், மற்ற எல்லா சௌகரியங்களும் இருந்தன. ஆனால் ரகுபதி பணக்கார உறவினர்களிடம் தொடர்பு வைக்க அஞ்சி, கொஞ்சம் தூரத்தில் இருந்தே காலத்தை ஓட்டி விட்டிருந்தார். சௌக்கியமா என்று தெருவில் சந்திக்கும்போது விசாரிப்பதுடன் கேதாரியின் தொடர்பை நிறுத்திக் கொண்டிருந்தார்.

அந்த ஒரு உறவினரது உதவியைத் தான் இது சமயம் மஞ்சுளா நாடவேண்டியிருந்தது. முடிவில் எதிரேயிருந்த மருந்துக் கடைக்கு ஓடி, டெலிபோன் மூலம் ஸ்ரீமான் கேதாரிக்கு, தாத்தாவின் மரணத்தைத் தெரிவித்து விட்டு வந்தாள் மஞ்சுளா. ஒரு மணி நேரம் சென்றதும் ஸ்ரீமான் கேதாரியும் பார்வதி அம்மாளும் தங்களது காரில் வந்து இறங்கினார்கள். இரவுக்கு இரவே மேற்கொண்டு காரியங்களை நடத்திவிட்டு, தம்முடன் மஞ்சுளாவை அழைத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டார்கள்.

மஞ்சுளா நீடித்து அந்த இடத்தில் தனியாக இனி வசிக்க இயலாததற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, அவள் தன்னந் தனியான ஒரு இளம் பெண். இரண்டாவதாக, ஆறுமாத வாடகை பாக்கியாக இருந்ததனால் வீட்டுக்காரர் அவளை எந்த நிமிஷமும் வெளியே பிடித்துத் தள்ளக் காத்திருந்தார். மூன்றாவதாக, தாத்தாவின் மறைவுக்குப் பின் பலவற்றை ஞாபகப்படுத்தும் அந்த வீட்டில் தங்கியிருக்க அவளுக்கு மனம் இல்லை.

பார்வதியுடன் புறப்படுமுன் தன் பெரிய தோல் பெட்டிக்குள் வேண்டிய சாமான்களை எடுத்துச் சேகரித்து வைக்கும் நிமித்தம் கூடத்து அறைக்குள்ளிருந்த தாத்தாவின் பெட்டியைத் திறந்து ஆராய்ந்தாள். அப்பொழுது அவளுக்கு ஒரு

சிறு ஆச்சரியம் காத்திருந்தது.

தனக்கு ஒரு சமயம் திடீர் என்று அன்று மரணம் ஏற்படலாம் என்று ரகுபதி எதிர்பார்த்தார் போலும்! அன்று பகல் தள்ளாடிக் கொண்டு வெளியே சென்று தமது பெயரில் பாங்கியிலிருந்த மீதிப்பணம் இருநூறையும் எடுத்து வந்து பெட்டியில் வைத்திருந்தார். தாத்தாவுக்குப் பின், தான் அவரது வாரிசு என்று உரிமை பாராட்டிக் கொண்டு அந்தப் பணத்திற்காக அலைய வேண்டிய தொல்லைகள் ஏதும் அவளுக்கு இருக்கவில்லை. தன் கைச் செலவிற்கு எடுத்துக் கொண்டு மீதித் தொகையை ஸ்ரீமான் கேதாரியவர்களிடம் அவள் கொடுத்து விட்டிருந்தாள்.

தாத்தாவின் கரும கிருத்யங்களை நடத்தி முடித்து விட்டதால் பண விஷயமாக ஏதோ பேசுவதற்குத்தான் அவர் அழைத்தார் போலும் என்று அவளுக்கு இடையே ஒரு சிறு சந்தேகம் வேறு தோன்றியது. எண்ணங்களைப் பலவாறு ஓடவிட்டுக் கொண்டே ஸ்நான அறைக்குள் சற்று அதிகமாகவே நேரத்தைக் கழித்தாள்.

## 4

குளித்துவிட்டு, வேறு ஆடை உடுத்திக் கொண்டு, சமையலறைக்குள் வந்து நின்றாள் மஞ்சுளா. சில நாட்களில் ஏற்பட்டிருந்த அனுபவத்தில் அந்த வீட்டில் உள்ள அனைவரும் அவளிடம் என்னென்ன காரியங்களை எதிர்பார்த்தனர் என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாள். அடுப்பு மேடை மீது ஒரு பக்கத்தில் அலட்சியமாகத் திறந்து வைத்திருந்த வெண்கல டம்ளரை, தானாகவே சென்று எடுத்து அதில் பெயரளவில் காப்பி என்று நிறைத்து வைத்திருந்த கரும் திரவத்தை விழுங்கினாள். பகல் ஒரு மணி வரை வேறு எதுவும் சாப்பிடக் கிடைக்காததனால், அந்தப் பானத்தை விட்டாலும் வேறு கதியிருக்காது என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள்.



அது சமயம் வீட்டின் சமையற்கார அம்மாள் உள்ளே வந்தாள். அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த எண்ணெயில் போடுவதற்குப் பதில் கடுகை அவள் முகத்திலே போட்டால் அத்தனையும் வெடித்துப் போயிருக்கும். அவ்வளவு ஆத்திரம் அந்த அம்மாள் முகத்தில் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

''அந்தக் காய்கறிகளை எல்லாம் கொஞ்சம் நறுக்கி வையம்மா. இந்த வீட்டில் நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது. ஸ்நானம் ஆய்விட்டால் அந்த மனிதர் ஆபீசுக்கு நேரமாகி விட்டது என்று துடிப்பார். எஜமானி அம்மாள் என்னை ஓட ஓட விரட்டுவாள்'' என்று உறுமினாள் அவள்.

தனக்குச் சமையற்காரி போட்ட கடும் உத்தரவைச் சிரமேற்கொண்டு துரிதமாக முடிக்கும் நிமித்தம் காய்கறி கூடைகள் அருகே போவதற்குள் வீட்டு வேலைக்காரப் பையன் வாயிற்படியின் வெளியில் வந்து நின்றான். உடலை வெளியே வைத்துக்கொண்டு தலையை மட்டும் ஒட்டகம் போல் உள்ளே நன்றாக நீட்டிக் கொண்டு அவன், ''இந்தாம்மா! புதுசா வீட்டுக்கு வந்திருக்கிறயேன்னு நான் சும்மா இருக்கிறேன். உன் கால் செருப்புக்களை வாசல் வராந்தாவிலே விட்டு வந்துடறியே! எனக்கு உன் செருப்புகளைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திலே வைக்கிற வேலை ஒண்ணுதான் பாக்கியா இருந்திச்சா? இந்தாம்மா! உன் வேலையை நீ செய்ய வேணும். எனக்கு இந்தப் பாதுகாபட்டாபிஷேகம் தேவையில்லை!'' என்று கோபமும் பரிகாசமும் கலந்த குரலில் எச்சரித்தான்.

''சரி அப்பா! அதைக் கவனிக்கிறேன்; கோபிக்காதே'' என்று பதில் அளித்த மஞ்சுளாவுக்கு நெஞ்சு பதைத்தது. வீட்டு வேலையாட்கள் எல்லோரும் கூட அதட்டி மிரட்டிப் பேசும் அளவிற்கு அவள் நிலைமை அவ்வளவு கேவலமாகி விட்டதா என்ன? அவமானத்தினால் அவள் உடல் குன்றிப் போனாள்.

ஆனால் பேதைப் பெண். அவளுக்குப் பணக்காரர்கள் வீட்டு வேலைக்காரர்களைப் பற்றி என்ன தெரியும்? வீட்டுக்கு வேண்டிய விருந்தாளி என்று உணர்ந்ததும் சலாம் போட்டு, பல்லைக் காட்டிப் பாய்ந்து ஓடிப் பணி புரிவார்கள்.

எஜமானனுக்கு வேண்டாத ஏழை விருந்தாளி என்பதை உணர்ந்து கொண்டதும் முகத்தால் இடித்து, வார்த்தையால் அலட்சியப்படுத்திச் சீக்கிரம் ஆசாமியை விரட்ட முயற்சிப்பார்கள் என்ற விஷயம் அவளுக்கு இப்போதுதான் தெரிந்தது. தெரியாமலா சொல்லி வைத்தான் ஒரு மேதாவி, 'பணக்காரர் வீட்டு வேலைக்காரர் எஜமானது உள்ளத்து உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் உஷ்ணமானி' என்று!

காலை ஆகாரம் முடிந்ததும் வெளியே செல்ல உடுத்திக் கொண்டு தயாராக வந்து ஆபீஸ் அறையில் அமர்ந்து கொண்டார் ஸ்ரீமான் கேதாரி. வெற்றிலைத் தட்டை அருகில் கொண்டு வந்து வைத்துவிட்டு, தன் பர்த்தாவுக்குக் காலையிலிருந்து செய்த இந்தச் சிறு பணி விடையினால் தான் மெத்த அலுத்துவிட்டவள் போல் பெருமூச்சுடன் தன் பிரும்மாண்டமான சரீரத்தைத் தூக்க மாட்டாது தூக்கிக் கொண்டு அருகில் வந்து நின்றாள் அவரது சகதர்மிணி பார்வதி. ஸ்ரீமான் கேதாரி சுபாவத்தில் விளக்கெண்ணெய் போல் வழவழ என்று பயந்து நடுங்கிப் பிடி கொடுக்காது பேசும் ஆசாமி.' அவருக்கு வாழ்க்கைத் துணைவியான பார்வதி தான் பெருந்தூண்போல் தெம்பாக இருந்தாள்.

தமது உத்தரவுப்படியே எதிரே வந்து தலைகுனிந்து கொண்டு நின்ற மஞ்சுளாவை அவர் கடைக் கண்ணால் உற்றுப் பார்த்தார். அவளது வாடிய முகத்தைக் கண்டதும் அவருக்குக் கண்டிப்பாகப் பேச நா எழவில்லை. தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''வந்து.... மஞ்சுளா...'' என்று பூர்வபீடிகை போட்டுவிட்டு, மேலே பேச முடியாது விழித்தார்.

கணவனது தடுமாற்றத்தைக் கண்ணுற்ற பார்வதி பாய்ந்து குறுக்கிட்டாள். ''உங்கள் வீட்டு வாடகை பாக்கியைத் தீர்த்தது போக மிஞ்சியிருந்த பணம் தாத்தாவின் காரியங்களுக்குப் போதவில்லை. அதனால் என்ன என்று பெரியப்பாவே கொஞ்சம் கையை விட்டுப் போட்டுச் செலவு செய்து காரியத்தை முடித்துவிட்டார். வீட்டை உடனடியாகக் காலி பண்ண வேண்டி வந்ததனால் மேஜை நாற்காலி முதலிய



சாமான்களை விலைக்குப் போட்டுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு மளிகைக் கடைக் கடன், பால்காரன் இவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சொச்சம் எல்லாவற்றையும் சரிக்கட்டி விட்டார். உன் புத்தகங்களும், துணிகளும், சமையல் பாத்திரங்களுந்தான் பாக்கியாக இருந்தன. அவைகளை எடுத்து வந்து நமது தோட்டத்தில் இருக்கும் சின்ன வீட்டின் அறைக்குள் போட்டு வைத்திருக்கிறார். ஏதோ அம்மா எங்களால் முடிந்த வரை ஒருமாதிரி எல்லாவற்றையும் ஒழுங்குசெய்து கொடுத்து விட்டோம். இனிமேல் என்ன செய்யப் போவதாக உத்தேசிக்கிறாய் என்று பெரியப்பா கேட்கிறார்!'' எனப் படபடவென்று கூறி முடித்தாள்.

'நான் ஒன்றும் கேட்கவில்லையம்மா! உன் பெரியம்மா தான் அப்படிக் கேட்கிறாள்' என்று சொல்ல விரும்புகிறவர் போல் ஸ்ரீமான் கேதாரி பரிதாபமாக விழித்தார். மஞ்சுளாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை.

பெரியம்மாவின் கேள்வியின் முழு அர்த்தமும் அவளுக்குச் சட்டென்று விளங்கி விடவே, திகிலில் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. கையில் காசு இல்லை. நிற்க நிழல் இல்லை. உற்றார் உறவினர் யாருமில்லை என்ற பயங்கர நிலைமையில், யௌவனம் என்ற பெரும் ஆபத்தைத் துணையாகக் கொண்டு அவள் எங்கே போவாள்?

''எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது பெரியப்பா'' என்றாள் தழுதழுத்த குரலில். 'உங்களுடைய இந்தப் பெரிய வீட்டில் கொஞ்ச காலம் தங்கி வாழ இடமில்லையா? என்னைப் போவென்று சொல்லாதீர்கள். பிச்சைக்காரப் பெண்ணைப் போல் நடுத்தெருவில் அலைய எனக்குப் பயமாக இருக்கிறது பெரியப்பா! பெரியம்மா! என்மேல் கருணைக் காட்டுங்கள்! உங்கள் வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்து கொண்டு நான் ஒரு வேலைக்காரியாகவாவது ஒண்டிக் கொண்டு இருக்கிறேன்' எனக்கெஞ்சிக் கண்ணீர் விட்டு வேண்ட விரும்பியது அவளது உள்ளம். ஆனால் பெரியம்மா முகத்தில்

அலைமோதிய கடும் பாவனையைக் கண்டதும் அச்சத்தில் அவளுக்கு நா எழவில்லை.

''எங்களைப் போன்று பள்ளிக்கூடம், படிப்பு இல்லாமல் வீட்டு வாயிற்படியே தாண்டாது வளர்ந்த பெண்ணா நீ பயப்படுவதற்கு? படித்தவள். உத்தியோகம் செய்கிறாய். உன்னைக் காப்பாற்றிக் கொள்ள உனக்குத் தெரியாதா என்ன? உத்தியோகம் செய்யும் பள்ளிக்கூடத்திற்கு ஹாஸ்டல் இருக்கிறதல்லவா? அதிலே தங்கிவிட ஏற்பாடு செய்துகொள். அது சௌகரியப்படாவிட்டால் உன்னோடு வேலை பார்க்கும் உபாத்தியாயினிகள் சிலர் தனிக்கட்டைகளாக இருக்கக் கூடும். அவர்கள் யாருடனாவது நீயும் சேர்ந்து வசிக்க ஏற்பாடு செய்து கொள்ளலாமே?'' என்றாள் பார்வதி மிகுந்த மிடுக்கான குரலில்.

கேதாரி மெல்லத் திரும்பிப் பார்த்தார். மஞ்சுளாவின் கலங்கிய கண்கள் அவர் மனத்தை வேதனை செய்தன. ஏதோ சொல்ல அவர் வாயைத் திறக்குமுன் அவரது மனைவி குறுக்கிட்டு, ''பெரியப்பாவும் நானும் உன்னைப் பற்றி இரவு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். நீ இங்கே தங்கியிருப்பதனால் எங்களுக்கு ஒன்றும் குறைந்து விடாது. ஆனால் பல அசௌகரியங்களை உத்தேசித்து நீ ஹாஸ்டலில் சென்று வசிப்பது நல்லதென்று பெரியப்பா தீர்மானம் செய்தார்'' என்றாள்.

பார்வதியம்மாளின் தீர்ப்பிற்குப் பிறகு பேச ஏதும் இல்லாததனால் கேதாரி, ''ஆமாம்! ஆமாம்!'' என்று முனகி விட்டு எழுந்தார். நெஞ்சு விரிந்து விடும்படிச் செய்த வேதனையையும் துக்கத்தையும் சிரமத்துடன் மஞ்சுளா அடக்கிக் கொண்டாள். வறட்சியாக மெல்ல புன்முறுவலித்தாள். ''சரி பெரியம்மா. நீங்கள் சொல்வது போல் இன்றே செய்து முடிக்கிறேன். ஒரு சமயம் நான் ஹாஸ்டலுக்குப் புறப்பட்டுச் செல்ல இரண்டு மூன்று தினங்கள் செல்லக்கூடும். அதனால் உங்களுக்கு ஏதும் கஷ்டம் ஏற்படாதல்லவா?'' என்று மெல்ல வினவினாள்.



''நன்றாக இருக்கிறது! ஒரு வாரம் வேண்டுமானாலும் ஆகட்டுமே. அசடே! உடனே புறப்படு என்றா சொல்கிறோம்?'' என்று கூறிவிட்டு லேசாகச் சிரித்தாள் பார்வதி. மஞ்சுளா பற்றிய தொல்லை இனி நமக்கு இல்லை என்ற நினைவு அவள் மனத்திற்குப் பெரிய ஆறுதலையளித்தது. அதனால் அவளது கோபம் மறைந்து ஒரு சிரிப்புக் கூட மெல்லத் தலை காட்டிவிட்டது.

மஞ்சுளா அறையினின்றும் வெளியே வந்தாள். உள்ளே திரும்பி பின் கட்டின் பக்கம் காலை வைத்தாள். பெரியப்பாவும் பெரியம்மாவும் தன்னைப்பற்றி உரத்த குரலில் பேசிக் கொள்வது காதில் படவே மேலே செல்லாமல் சட்டென்று நின்றுவிட்டாள்.

''ஆமாம்! பெரியப்பா சொன்னார் அப்படின்னு எல்லாப் பழியையும் என் தலையில் போட்டுவிட்டாயே? அந்தப் பெண் என்னை என்ன நினைப்பாள்?'' என்று கேட்டார் கேதாரி, சற்றுக் கோபத்துடன்.

''ஐயா நல்லவர். அம்மா பொல்லாதவள் என்று எனக்கு மட்டும் கெட்ட பெயர் வேண்டுமா? மேலும் 'எல்லாம் அம்மா வைத்ததுதான் சட்டம். இந்த வீட்டுலே ஐயாவுக்கு ஏதும் அதிகாரம் கிடையாது' என்று நம்மைப் பற்றி அந்தப் பெண் வேறு தப்பாக எண்ணிக் கொள்ள வேண்டுமா? அதனால் தான் நீங்க சொன்னால் அந்தப் பெண்ணிற்கு நன்றாக மனசில் உரைக்கும், உங்கள் கௌரவமும் நிலைக்குமென்று சொன்னேன்'' என்று உரத்த குரலில் பார்வதி பதிலுக்கு அதட்டினாள்.

''அந்தப் பெண் அழுதுவிடுவாள் போலிருந்ததைக் கண்டதும் எனக்கு மனம் என்னவோ போல் ஆகிவிட்டது'' என்று சூள் கொட்டினார் கேதாரி. மேஜை மீதிருந்த தமது தலைப்பாகையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார்.

''எனக்குக் கூட உங்களை அது சமயம் பார்த்தபோது பயமாகத்தான் இருந்தது. 'பெரியப்பா என்னைக் காப்பாற்றுங்கள்' என்று எங்கே அந்தப் பெண் அழுது கொண்டு

உங்கள் காலடியில் விழுந்து விடுவாளோ, 'உடனே தந்தோம்' என்று நீங்கள் அபயஹஸ்தம் அளித்து விடுவீர்களோ என்று நடுங்கிப் போய்விட்டேன். நல்ல வேலையாக அவளே வாய்திறந்து, 'நான் ஹாஸ்டலுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டாள். நான் பிழைத்தேன்!'' என்றாள் பார்வதி ஒரு பெருமூச்சுடன்.

''ஆனாலும் உனக்கு ரொம்பக் கல்மனம். அந்தப் பெண்ணை நம் குழந்தை ஜெயம் என்று எண்ணிக்கொண்டு இங்கேயே தங்க வைத்திருக்கலாம்'' என்றார் கேதாரி.

''நம் ஜெயந்திக்கு இவள் ஈடாகி விடுவாளா? நமக்கேன் வீண் வம்பு? வயதுப் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டால் அதைவிடப் பெரிய தலைவேதனை வேறு ஏதும் வேண்டாம் தெரியுமா? இந்த வருஷாந்தர விடுமுறையின் போது என் அண்ணா பிள்ளைகள் இரண்டு பேரும் இங்கே சில நாள் இருக்க வரப்போகிறார்கள். அண்ணாவுக்குப் பல நல்ல இடங்களிலிருந்து வரன்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இது சமயம் இந்தப் பெண் இங்கேயிருந்தால் நன்றாக இருக்காது. அவர்கள் வாலிப வயதுள்ள பிள்ளைகள். போதாதற்கு மஞ்சுளா பார்க்க லட்சணமாக இருக்கிறாள். எங்கேயாவது காதல் கீதல் என்று அவர்களில் ஒருவன் ஆரம்பித்து விட்டால்... பிறகு மன்னியிடம் பதில் சொல்ல என்னால் முடியாது'' என்றாள் அதிகாரமாக அந்தத் தர்மபத்தினி.

''இந்த விதமான தொல்லைகள் இல்லாமல் ரகுபதியே ஏதாவது ஒரு வழி செய்து விட்டுப் போயிருக்கக் கூடாதா?'' எனத் தமக்குள் பேசகிறவர் போல் முணுமுணுத்தார் கேதாரி.

''அந்த கிழவன் லேசுப்பட்டவன் அல்ல. கையில் காசில்லாவிட்டாலும் வறட்டு ஜம்பத்திற்குக் குறைச்சல் இல்லை. காலாகாலத்தில் பேத்திக்கு ஒரு கல்யாணம் செய்து வைக்காமல்... படிக்க வைத்தானாம் படிக்க. இப்ப என்ன ஆச்சு? நடுத்தெருவில் நின்றாள் பேத்தி. அத்துடன் போச்சா? அந்தப் பெண் தாறுமாறாக ஏதாவது நடந்து கொண்டால்



உறவுக்காரர்கள் என்ற ஹோதாவில் நமக்கு வீண் பழிச்சொல் வந்து சேரும். இந்த மாதிரியான ஏழை உறவினர்களால் எப்போதுமே வீண் தொந்தரவுதானே ஒழிய லாபமில்லை'' என்று பார்வதி அடுக்கிக்கொண்டே போனாள்.

மேலே பேசாது கணவர் தமது காரியாலயத்திற்குக் கிளம்புவதைக் கண்டதும் அவள் ''சரி! சரி! எனக்கும் நேரமாயிற்று. எத்தனையோ வேலை அப்படியே கிடக்கிறது'' என்று கூறிவிட்டு உள்ளே திரும்பினாள்.

கலீர் கலீர் என்று ஒலித்த மெட்டிகளின் ஓசையைக் கேட்டதும், அதுவரை அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்த மஞ்சுளா திடுக்கிட்டுத் தன் உணர்வு பெற்று வேகமாக அங்கிருந்து அப்பால் சென்றாள். ஒட்டுக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவள் அதுவரை நின்று கொண்டிருக்கவில்லை. தன் பேரைக் கேட்டதும் ஒரு புறம் திகைப்புற்று நின்று விட்டவளே! கணவன் மனைவி இருவருக்கும் இடையே நடந்த அந்தச் சம்பாஷணை முழுவதும் காதில் படவே, மனவேதனை தாளமுடியாது அப்படியே செயலற்று நின்று விட்டாள். அவ்வளவேதான்!

அன்று பகல் போஜனத்திற்குப் பிறகு மஞ்சுளா வெளியே புறப்பட்டாள். ''வைதேகி பெண்கள் பள்ளிக் கூடத்தின் வாயிற்படியை நெருங்கியதுமே பயத்தில் அவளது உடல் நடுக்கத் தொடங்கியது. ஹாஸ்டலில் தங்கியிருக்க அனுமதியைப் பெற, தலைமை உபாத்தியாயினியின் அறையின் முன்னே வந்து நின்றதும், அவளிடமிருந்த கொஞ்ச நஞ்ச தைரியமும் பஞ்சாகப் பறந்து விட்டது! ''உள்ளே வரச் சொல்லு'' என்று அதிகாரமாக எழுந்த கிருபாவதியின் குரலைக் கேட்டதும் நடை தள்ளாட, நாவு உலர்ந்து போக, நெஞ்சடைக்க, பயமே உருவாக மஞ்சுளா உள்ளே போய் நின்றாள்.

அவள் பேசுவதற்கு முன் தலைவி பேசலுற்றாள்; ''உன்னுடைய லீவுக் கடிதம் கிடைத்தது. நீ இங்கே தற்காலிகமாக வேலை பார்க்கிறாய் என்பதை மறந்துவிட்டாய்;

பத்து நாட்கள் தொடர்ந்தாற்போல் லீவு வேண்டுமென்று ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு, நிம்மதியாக வீட்டில் உட்கார்ந்துகொண்டு விட்டாய். இதன் அர்த்தம் என்ன?'' என்று கர்ஜித்தாள்.

அனல் பொறி பறந்த அவளது விழிகளைக் காண அஞ்சிய மஞ்சுளா தலையைக் குனிந்து கொண்டு, ''என் தாத்தா திடீரென்று மரணமடைந்து விட்டார்'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''உன் தாத்தா ஒரு நாள்தானே செத்துப் போயிருக்க முடியும்? பத்து நாட்களுமா தினம் தினம் செத்துக் கொண்டிருந்தார்? உன்னிடம் சுற்றி வளைத்துப் பேச எனக்குப் பொழுது இல்லை. உன்னைப் போன்ற சோம்பேறிப் பெண்களுக்கு உத்தியோகத்தில் எங்கே கருத்து இருக்கும்? உன்னை நாங்கள் வேலையிலிருந்து விலக்கிவிட்டு உனக்கு அடுத்தபடியாக விண்ணப்பம் செய்து கொண்டிருந்த ரேவதியைக் குமாஸ்தாவாக நியமித்து விட்டோம். தயவு செய்து உனக்குச் சேர வேண்டிய சம்பளப் பாக்கியைத் தலைமைக் குமாஸ்தாவிடமிருந்து வாங்கிக் கொண்டு போய் சேர்'' என்று சராமாரியாக வார்த்தை அம்புகளை வீசிவிட்டு, மேஜை மீதிருந்த மணியை அகங்காரமாக அடித்தாள் தலைவி.

அண்ட சராசரங்கள் எல்லாம் இடிந்து தன் தலைமீது விழுந்து விட்டதுபோல் திக்பிரமையடைந்த மஞ்சுளாவுக்கு உணர்வுவர ஒரு சில விநாடிகள் சென்றன. ''இன்னும் ஏன் நிற்கிறாய்?'' என்று தலைவி மீண்டும் கர்ஜித்தவுடன் அவமானம் தாளமாட்டாமல் மெல்ல வெளியே வந்தாள்.

''ஏனம்மா இப்படி ஒரு தவறு செய்தாய்? இந்த காலத்தில் ஒரு நல்ல ஸ்தாபனத்தில் வேலை கிடைப்பது மிக சிரமமான காரியமாச்சே! தாத்தா செத்துவிட்டால் என்னம்மா மறுநாளாவது புறப்பட்டு வேலைக்கு வந்திருக்கப்படாதா? துக்கம் ஒரு புறம் இருந்தாலும் வயிற்று பிழைப்பு என்று ஒன்று இருக்கிறதே, அதைப் பார்க்க வேண்டாமா? போகிறது போகட்டும். கொஞ்ச நாட்கள் சென்றதும் மறுபடி இங்கே



வாம்மா. அதற்குள் தலைவியவர்களின் கோபம் தணிந்திருக்கும். அவர்களிடம் எப்படியாவதுபேசி, ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்கி வைத்துக் கொள். பிறகு வேற எங்காவது வேலை தேட வேண்டுமானால் கையில் அது இருந்தால் நலமாக இருக்கும்'' என்று அனுதாபத்துடன் பேசிய தலைமைக் குமாஸ்தா அவளுக்குச் சேர வேண்டிய சம்பளப் பணமான பதிமூன்று ரூபாய்களை எண்ணிமேஜைமேல் வைத்தார்.

அதைப் பெற்றுக் கொண்டு மஞ்சுளா வெளியே வந்தாள். உத்தியோகம் போய்விட்ட விஷயம் பெரியம்மாவுக்குத் தெரிந்தால்... என்று எண்ணும் போதே அவள் தலை சுற்றியது. தாத்தா போய்விட்டார்! வீடும் போய்விட்டது! இனி அவள் என்ன செய்வாள்? அந்தச் சொற்பத் தொகையை வைத்துக் கொண்டு எவ்வளவு நாட்கள் தான் காலத்தை ஓட்ட முடியும்; பி.ஏ. பாஸ் செய்ய வகையில்லை. கல்யாணம் செய்து கொள்ளவும் வழியில்லை. இப்போது உத்தியோகத்திற்கும் லாயக்கில்லை என்ற பட்டம் கிட்டிவிட்டது. இனி வாழ்வதற்கு மட்டும் என்ன யோக்கியதை இருக்கிறது? இந்த ஜன்மம் வீணா பூமி தேவிக்கும் பாரமல்லவா? சீ சீ!... என்று ஓடியது அவளது சிந்தனை. பயித்தியக்காரிபோல், வேகமாக, கால்வந்த போக்கில் நடந்தாள். அவள் மனக்கண் முன் ரயில் தண்டவாளமும் கொந்தளிக்கும் கடலும் மாறி மாறி பயங்கரமாகத் தோன்றி மறைந்த வண்ணமிருந்தன.

சிவந்த அந்திவானத்தில் இருட்டு கருந்திரை விடத் தொடங்கியதும் கடற்கரையோரமாகவிருந்த மின்சார விளக்குகள் பளிச்சிட்டு எரியத் தொடங்கின. கரையிலிருந்து வெகு தொலைவில் இருந்த கடலின் நீர்ப் பரப்பை நோக்கி நடந்தாள் மஞ்சுளா.

வெறுப்பிலே திகுதிகுவென்று அவளது மனமும் உடலும் எரிந்து கொண்டிருந்தன. குளிர்ந்த கடல் நீரில் போய் தொப்பென்று விழுந்தால் தான் அந்த எரிச்சல் அடங்கும் என்ற பிரமை ஏற்படவே, கடலை நோக்கி வேகமாக நடந்தாள்.

இருண்ட வானமும் கருநீலக் கடலும் கலந்து நிற்கும் அடிவானத்தை வெறித்துப் பார்த்துவிட்டு, ஒரு முறை தன்னைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள். அஸ்தமிக்க ஆரம்பித்ததும் நீரின் அருகாமையிலே இருக்க அச்சம் கொண்டு, மின்சார விளக்கின் வெளிச்சம் வீசும் சாலை ஓரத்தை நாடி ஜனங்கள் முன்பே போய்விட்டதனால், மனித நடமாட்டமின்றிக் கடல் மட்டும் தனிமையிலே கர்ஜனை செய்து கொண்டிருந்தது. இஷ்ட தெய்வத்தை மனதில் நினைத்துக் கொண்டு மஞ்சுளா தண்ணீரில் கால் வைத்தாள். அது சமயம் பிரமாண்டமானதொரு அலை, சீறிக் கொண்டு எழுந்திருக்கும் சர்பத்தின் படம் போல் பொங்கி வந்து கரைமேல் மோதவே அவளது ஆடை முழுவதும் நனைந்துவிட்டது. சில்லென்று வீசிய காற்று உடலில் பட்டதும் மேனி வெடவெட என நடுங்கத் தொடங்கியது.

# 5

தொடர்கதை போல் துன்பம் அடுத்தடுத்துத் தொடர்ந்து வந்தால், மனிதனின் மனம் சலிப்படைந்து போவது இயற்கையே! உற்சாகம் மங்கி ஏக்கத்தில் தவிக்கும் அவ்வுள்ளம் சாவில் இன்பத்தைக் காண நினைப்பது மிக மிக சகஜமான சம்பவம். யோசித்துப் பார்த்தால் அநேகரின் வாழ்க்கையில் 'இதைவிடத் தற்கொலை கூடச் செய்து கொண்டு விடலாமே' என மனக்கசப்படைந்து, உயிருக்கு முடிவு கட்டும் சந்தர்ப்பங்கள் பல நேர்கின்றன. ஒருமுறையேனும் வாழ்விலே கசப்படைந்து சாவை எதிர்பார்த்த சந்தர்ப்பம் தம் ஆயுளில் நிகழவில்லை என்று ஒருவர் கூடப் பெருமை பேசிக்கொள்ள முடியாது. அப்படி நேரிடும்போது சாவிலே அமைதியை நாட ஒரு கணத்திற்குக் குறைவான நேரத்தில் தான் உள்ளம் திட்டம் போட்டு விடுகிறது.

கண் இமைக்கும் பொழுதிற்குள் ஏற்பட்ட அந்த உறுதி அதற்கு முன்னர் மனத்திடை ஏற்பட்டிருக்காது. பின்னரோ



தளர்ந்து தள்ளாடி ஓடி மறைந்துவிடும். உலகத்தின் தொல்லைகளை விட்டுச் சாவை நாடி ஓடி மறைகின்ற அந்த சில துர்ப்பாக்கியசாலிகள் அனைவரும் அந்தக் கணப்பொழுது ஏற்பட்ட உறுதிக்குத்தான் பலியானவர்கள். அந்தப் பயங்கரமான கணப்பொழுதின் போது புத்திசொல்லி தடுக்க யாரேனும் இருந்துவிட்டால்... தற்கொலை என்ற தலையங்கத்தை நாம் பத்திரிகையில் பார்க்கவே மாட்டோம்! 'விஷத்தைக் குடித்து மாண்டான்' என்ற விஷயமே நம் காதுகளில் படாது.

''யாரம்மா அது'' எனப் பின்னாலிருந்து வந்த அதட்டல் குரல் மரண தேவதையை விட பயங்கரமாக இருக்கவே, திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தாள் மஞ்சுளா. சாவை நாடிச் சென்ற அவளது மன உறுதி சுக்கல் துகளாகச் சிதறி ஓடிவிட்டது. வெடவெடவென்று நடுங்கிக் கொண்டு நின்றாள். கரையோரமிருந்து படகின் பின் புறத்திலிருந்து எழுந்து நின்ற அந்த மனிதனை இருளில் நன்றாகப் பார்த்து அறிய முடியவில்லை.

''என்னம்மா இங்கே! தனியா இந்த வேளையிலே என்ன பண்ணிக்கிட்டிருக்கிறே?'' என்று தணிவான குரலில் அவன் கேட்டதும் மஞ்சுளா மீண்டும் திடுக்கிட்டுப் போனாள். கவிந்து நின்ற அந்தகாரத்தில் யார் இவன் என்று இனம் விளங்காவிடினும் அந்தக் குரல் சட்டென்று தாத்தா ரகுபதியின் குரலைப் போல் ஒலிக்கவே, மெய்விதிர்த்து நெஞ்சு படபடக்க மிகவும் அரண்டு போய் விட்டாள். ''ஒன்றுமில்லை, சும்மா தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

''இருட்டிலே என்னம்மா வேடிக்கை? காலம் கெட்டிருக்கிறது உனக்குத் தெரியாதா? போம்மா கரைக்கு'' என்று உரிமையோடு உத்தரவிட்டான் அந்த மனிதன்.

தர்க்கிக்க வாயின்றி மஞ்சுளா கரையை நோக்கித் திரும்பி நடந்தாள். பின்னால் அந்த மனிதனும் நடந்து வந்து

கொண்டிருந்தான். ''வலையிலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துகிட்டு நான் இங்கிருந்தது நல்லதாப்போச்சு. இல்லாட்டா என்ன ஆகியிருக்கும்?'' என்று அன்பாகக் கேட்டான் அவன். உண்மையிலேயே ரகுபதி தான் உயிர்பெற்று எழுந்து வந்து அவள் செய்யவிருந்த நகாத செயலைத் தடுக்க இவ்வாறு தோற்றமளிக்கிறாரோ என்று மீண்டும் அக்குரலைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனாள் மஞ்சுளா. பதில் சொல்ல ஏதும் தோன்றாது வேகமாக நடந்தாள். கரையைச் சமீபித்ததும் மின்சார விளக்கொளியில் தன் பின்னால் வந்து கொண்டிருந்த அந்த மனிதனை, அச்சமும் அவமானமும் கலந்த ஒரு விசித்திரமான உணர்ச்சியால் உந்தப்பட்டு மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

பரந்து கிடக்கும் கடலை நம்பிக் கொண்டு அதன் கரையோரத்திலே குடிசை போட்டுக் கொண்டு வாழும் பல செம்படவர்களில் அவன் ஒருத்தன். ஏறக்குறைய அவனுடைய பெரியப்பா கேதாரியின் வயது இருக்கும் என்பதை, பாதி நரைத்துத் தொங்கிய மீசை அறிவுறுத்தியது.

தலையிலே ஒரு அழுக்கு முண்டாக கட்டிக் கொண்டிருந்தான். இடுப்பிலே அணிந்திருந்த நைந்து போன கைலித்துணி அவனது முழங்கால்களுக்கு மேலேயே நின்று விட்டிருந்தது. கடலில் உள்ள துர்தேவதைகளிடமிருந்து மீட்க அவனது பாட்டி அணிவித்த தாயத்து ஒரு கறுப்புக் கயிற்றில் இன்னமும் அவனுக்குப் பெரிய பாதுகாப்பாகக் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. சில்லென்று வீசிய குளிரையும், உலகத்துக் கஷ்டங்கள் அனைத்தையும் அலட்சியமாக எதிர்த்து ஏற்றதனால் உரம் பெற்றதுபோல் செழித்துக் காணப்பட்டன அவனது திரண்ட தோள்களும், திறந்திருந்த மார்பும்.

மஞ்சுளா அவனை ஏற இறங்கக் கவனித்த அதே சமயம் அவனும் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''பார்த்தா படிச்ச பெண் மாதிரித் தோணுது. ஏனம்மா இந்தப் புத்தி? சின்ன வயசிலே சாவு மேலே ஆசை கொள்ள



அத்தனை கஷ்டம் என்னம்மா வந்திடுச்சு?'' என்று கனிவாகக் கேட்டுக் கொண்டே அருகில் வந்தான் அவன். வறுமைக் கோலமும் முரட்டுத் தோற்றமும் கொண்டிருந்த அவனிடம் கடலை விடப்பரந்த உள்ளம் குடிக்கொண்டிருந்ததைக் கண்ட மஞ்சுளா மனம் நெகிழ்ந்து போனாள். 'பெரியப்பா, பெரியம்மா இருவரின் உள்ளத்திலே இல்லாத கருணை முன்பின் தெரியாத இந்த ஏழை மனிதனிடம் ஏன் இருக்க வேண்டும்? பெற்றவனைப் போல் ஏன் இத்தனை பாசமாகப் பேசவேண்டும்? இதுதான் கடவுளின் சிருஷ்டியின் அதிசயம் போலும்!'' என மேலே எண்ணிய அவளது கண்கள் கலங்கின. தாங்க முடியாத பல தொல்லைகள் சாவை நாடச் சொல்லியது'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''இந்த உலகத்தை விட்டு அங்கே போனா, அங்கே மட்டும் சுகம் ஏற்படும்னு எவன் சொன்னான்? இன்னும் என்ன கஷ்டமெல்லாம் அங்கிருக்குதோ, யார் கண்டா? உடம்பிலே சக்தியும் உசிரும் இருந்தா உழைச்சுச் சாப்பிட முடியாதா அம்மா? உங்களைப் போல நான் படிச்சவன் இல்லை. ஆனால் வாழ்க்கையைக் கண்டு நான் ஒருநாளும் பயந்ததில்லையம்மா'' என்று பதில் அளித்த அந்த மனிதன் தன் முண்டாசை அவிழ்த்துத் துணியை நன்றாக உதறி விட்டு மறுபடி இறுக்கிக் கட்டுவதில் முனைந்தான்.

''ஐயா! படித்திருந்தும் எனக்கு உங்களைப் போல் பகுத்தறிவு இருக்கவில்லை. சமயத்தில் நீர் வந்தீர். இல்லாவிட்டால் இத்தனை நேரம் என் உடல் நீரில் மிதந்து கொண்டிருக்கும். இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்'' என்று நன்றியுடன் நினைறிய மஞ்சுளா தன் இடுப்பில் சொருகியிருந்த கைக்குட்டையை எடுத்தாள். அதன் நுனியில் முடித்து வைத்திருந்த தனது சம்பளப்பணத்தை அவிழ்த்து, அதில் ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

நெருப்பை மிதித்தவன் போல் அந்த மனிதன் நகர்ந்து நின்றான்.

''அம்மா, வேண்டாம் அம்மா! நீங்களே வச்சுக்கோங்க.

இந்த மாதிரிக் காரியங்களுக்கெல்லாம் கூலிவாங்கற அளவுக்கு நான் கேவலமாகவில்லையம்மா?'' என்றான் திகைப்பு நிறைந்த குரலில்.

மஞ்சுளாவின் கலங்கிய கண்களினின்று நன்றிப்பெருக்கு கண்ணீராக உதிர்ந்து அவளது அழகிய கன்னங்கள் மீது சிதறி விழுந்தன. ''மன்னிக்கவும். குழப்பமான மனநிலையில் உங்களைத் தவறாக மதிப்பிட்டு விட்டேன்'' என்று திக்கினாள் துக்கத்துடன்.

அதைக் கேட்டதும் செம்படவக் கிழவன் மனம் மிகவும் கரைந்து விட்டது.

''வருத்தப்படாதேயம்மா! துன்பம் என்பதற்கு ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் முடிவு உண்டு. உலகத்திலே துளியாவது கஷ்டம் என்கிறதை அனுபவிக்காத மனிதப் பிறவியே இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. நம்மைவிடக் கஷ்டப்படுகிறவங்க கோடானுகோடி இந்த பூலோகத்திலே இருக்கிறாங்க. எத்தனை துன்பம் வந்தாலும் எதிர்த்து வாழணுமே ஒழிய, பயந்துகிட்டுச் சாக நினைப்பது தப்பும்மா, தப்பு! சரி, அது போகட்டும். உங்க வீடு எங்கேன்னு சொல்லுங்க நான் உங்க கூடத்துணைக்கு வந்து விட்டுட்டு வரேன். சிறு வயதுப் பொண்ணு தனியா ராத்திரி வேளையில் போகிறது நல்லதில்லையம்மா?'' என்று கூறினான்.

மஞ்சுளாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. பொங்கியெழுந்த விசுவாச உணர்ச்சியில் நாத்தடுமாறியது. ''உங்களுக்கு ஏன் ஐயா வீண் சிரமம்? கொஞ்ச தூரத்தில் தெரியும் பஸ் நிலையத்திற்கு நானே போய்விடுகிறேன். நீர் செய்த உபகாரத்திற்கு மெத்த நன்றி'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''பாதிக் கிணத்தைத் தாண்டினாப்போல, உங்களைப் பாதி வழியிலே இருட்டிலே விட்டு விட்டுப் போகிறது நல்லா இல்லையம்மா! பஸ் ஸ்டாப் வரையாவது நானும் வருகிறேன்'' என்று பிடிவாதமாகக் கூறினான் அவன். அவள் மறுக்க முடியாது மேலே நடந்தாள். பஸ் வரும் வரை காத்திருந்து



அவளை அதில் ஏற்றிவிட்டு, வெகு நாள் தெரிந்த நண்பன் போல் பிரியா விடைபெற்றுக் கொண்டு சென்றான் அந்தக் கிழவன்.

மஞ்சுளா அன்று கேதாரியின் வீடு திரும்பும்பொழுது அஸ்தமித்து வெகு நேரமாகி விட்டிருந்தது. சூரியன் மலை வாயிலுக்குள் விழுமுன்னே இரவுச் சாப்பாடு பார்வதியின் வயிற்றுக்குள் விழுந்துவிட வேண்டும். உடனடியாக அவள் படுக்கையில் போய்ச் சாய்ந்துவிட வேண்டும். அப்படிப் பட்ட பழக்கம் உடையவள்.

முருங்கைக்காய்ச் சாம்பாரின் மணம் காந்தம்போல் இழுத்ததில் வழக்கத்திற்கு மாறாக அன்று அதிகம் சாப்பிட்டு விட்டிருந்தாள். எனவே, உண்ட மயக்கம் அவள் கண்களைச் சுழற்றியது. ஆனால் மனம் தூங்க இடக்குச் செய்தது. என்னதான் வேலைக்காரர்கள் வீட்டுக் கதவுகளைச் சாத்திப் பூட்டினாலும் அந்தந்தக் கதவுகளைத் தன் கைகளினால் சாத்தி, பூட்டுக்களைப் பலமாகப் பலமுறை ஆட்டி இழுத்துப் பார்க்காவிட்டால் அந்தம்மாளுக்கு மனம் சமாதானமடையாது. அதுவும் முக்கியமாக வாயிற் கதவை அவள் தன் கைகளாலேயே சாத்திப் பூட்ட விரும்புகிறவள்.

மஞ்சுளாவின் வருகைக்காக அன்று வீணாகக் கீழே காத்திருக்க நேர்ந்ததினால் அவளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ''இந்த மாதிரிச் சனியன்களை வீட்டில் சேர்ப்பதே பிசகு'' என்று தனக்குள் முணுமுணுத்த வண்ணம் ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு குட்டி போட்ட பூனை போல் ஹாலுக்குள் முன்னும் பின்னுமாக உலவிக் கொண்டிருந்தாள்.

மஞ்சுளா உள்ளே நுழைந்ததும் குமுறிக் கொண்டிருந்த கோபம் வெடித்தெழவே, புலிபோல் பாய்ந்து விட்டாள் பார்வதி. ''என்னடியம்மா இவ்வளவு நாழி? நன்றாக இருக்கிறது! ஒரு இளம் பெண் காலா காலத்திலே வீட்டுக்குத் திரும்பி வரவேண்டாமா?''

''உன் தாத்தாவைப் போல் பெரியப்பாவையும் எண்ணிக் கொண்டாயா? நீ எப்படி ஊர் சுற்றிக்கொண்டிருந்தாலும் அந்தக் கிழவர் கவலைப் பட்டிருக்க மாட்டார். பெரியப்பா சங்கதியே வேறு. உன்னை இன்னமும் காணவில்லையே என்று அவர் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்'' என்று பிரங்கிக் குரலில் இரைந்தாள். அவள் கூறியது முற்றிலும் பொய் என நிரூபிப்பது போல், மாடியறையிலிருந்து பெரியப்பாவின் குறட்டைச் சப்தம் வீட்டைப் பிளந்துவிடும் அளவுக்குப் பலமாகக் கீழே ஹால்வரை கேட்டுக் கொண்டிருந்தது.

எதிர்பாராத இந்த வரவேற்பு மஞ்சுளாவின் உள்ளத்திற்கு மெத்த அதிர்ச்சியினைக் கொடுத்தது. எனினும் அவள் சாமர்த்தியமாகத் தன் மன உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, மிகத் தாழ்மையாக, ''மன்னித்துக் கொள்ளுங்கள் பெரியம்மா! எப்படியாவது வசிப்பதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்ப வேண்டும் என்று தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தேன். பல இடங்களுக்கு அலைய வேண்டியிருந்தது. அதனால் நேரமாகிவிட்டது. இனி இம்மாதிரி அசந்தர்ப்பங்கள் ஏற்படாது'' என்றாள். சட்டென்று ஒரு பொய்யைக் கற்பனை செய்ய வேண்டியிருந்தது பற்றி அவளுக்குக் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருந்தது.

''ஹாஸ்டலில் தானே போய் தங்க ஏற்பாடு செய்தாய்? அதற்கு இத்தனை நாழியாவானேன்?'' என்று சற்று சந்தேகத்துடன் வினவினாள் பெரியம்மா. வயது வந்த படித்த பெண்கள், அதுவும் கல்யாணமாகாத தனிக்கட்டைகள் என்றாலே பார்வதிக்கு அவர்களைப் பற்றி ஒரு இளுசான அபிப்ராயம் தானாகவே ஏற்பட்டு விடுவது வழக்கம். மஞ்சுளா மட்டும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் தேவையாதலால் மஞ்சுளா சட்டென்று மேலே இன்னொரு பொய்யை உற்பத்தி செய்ய வேண்டி வந்துவிட்டது. ''இல்லை பெரியம்மா ஹாஸ்டலில் தங்க இடம் இருக்கவில்லை. மாணவிகளுக்கே இடம் போதாமல் ஒரு அறைக்கு நான்கு பெண்கள் என்று கூட்டமாக வசிக்கிறார்களாம். அதனால் எனக்குத் தெரிந்த இரண்டு



ஆசிரியைகளின் வீடுகளைத் தேடிச் செல்ல நேர்ந்தது. அங்கெல்லாம் கூடச் சரிப்பட்டு வரவில்லை. கடைசியாக ஒரு பாட்டியம்மாள் வீட்டில் கொஞ்ச நாட்கள் தங்கி வசிப்பதாக ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன். அடுத்தமாதம் முதல் தேதியன்று சாமான்களுடன் வரும்படி அவர்கள் சொன்னார்கள்!'' என்றாள். திடீரென்று தனது கற்பனை இப்படிப் பெருக்கெடுத்து ஓடும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. தான் சிருஷ்டித்த பொய்களை நினைத்து அவளுக்கு மிக்க ஆச்சரியமாகி விட்டது!

பார்வதி தன் மனத்துள் தேதிகளைக் கணக்கிட்டாள். அடுத்தமாதம் பிறக்க இன்னும் ஆறு நாட்கள்தான் இருந்தன. அதை அறிந்ததும் அவளுக்குக் கொஞ்சம் மனநிம்மதி ஏற்பட்டது. மேலே பல குறுக்குக் கேள்விகளைக் கேட்க ஆவல் இருந்த போதிலும், தூக்கம் தலையைச் சுற்றவே அவைகளை நிறுத்திக் கொண்டாள்.

611969

''நீ சாப்பிட வர நாழியாகுமோ என்னவோ என்று மிச்சம் மீதிகளை எடுத்து வேலைக்காரர்களுக்குப் போட்டு விட்டாள் சமையற்காரம்மா. கொஞ்சம் பழையசாதம் கற்சட்டியிலே இருக்கிறது. வலை பீரோவில் மோர் வைச்சிருக்கேன். சாப்பிட்டு விட்டுப் பாத்திரங்களைத் தேய்த்து சுத்தப்படுத்தி விட்டு, கதவை மூடிக்கொண்டு போய்ப் படுத்துக்கொள்'' என்று உத்தரவிட்ட பெரியம்மா வாயிற்கதவைத் தன் கரங்களால் நன்றாகச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டாள். இருமுறை கதவுகளை இழுத்துப் பார்த்துத் திருப்தி அடைந்தவளாக மாடி அறைப் பக்கம் போகத் திரும்பினாள்.

894.8113

வேண்டாத விருந்தாளியான தன்னிடம் வேலைக் காரர்களுக்குக்கூட அலட்சியம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட மஞ்சுளாவுக்குப் பசிகூடப் பறந்தோடி விட்டது. ''என் சிநேகிதி ஒருத்தி வீட்டில் வழியில் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டேன்'' என்றாள் இரகசியம்போல் மெல்லிய குரலில். இந்தச் சிறு பொய்யே கடைசிப் பொய்யாக இருக்கட்டும் என்று அவள் உள்ளம் அது சமயம் உண்மையாகவே பிரார்த்தனை செய்தது.

CPL 611969

'நன்றாக உண்டுவிட்டு ஊர் சுற்றித் திரிந்து விட்டு மெல்ல வீடு வருகிறாள் போலிருக்கிறது மகராஜி!' எனத்தனக்குள் நினைத்து வெகுண்ட பார்வதி, ''சரி! சரி! போய்ப் படுத்துக் கொள். எனக்குக் கார்த்தாலே சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும்' என்று எரிச்சலுடன் பதிலளித்துவிட்டு கால் மெட்டிகள் ஒலிக்க கம்பீரமாக மாடிப்படிகள் மீது ஏறித் தன் அறைக்குள் சென்று மறைந்து விட்டாள்.

பின் கட்டுக் குழாயடியில் கைகளையும் தன் முகத்தையும் கழுவிக் கொண்டு, இரண்டு வாய் பச்சைத் தண்ணீரைப் பிடித்துக் குடித்தாள் மஞ்சுளா. களைப்பு சற்று அடங்கியது. சுவரோரமாகப் பெஞ்சியின் மீது சுருட்டி வைத்திருந்த தனது படுக்கையைத் தூக்கிக்கொண்டு அங்கு எரிந்த விளக்கை உடனே அணைத்துவிட்டு ஹாலுக்குள் வந்தாள். ஜன்னல் ஓரமாகத் தரைமீது படுக்கையை விரித்துக் கொண்டு உட்கார்ந்தாள். அன்று நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக அவள் மனக்கண் முன் வந்து குவியவே அவளுக்கு நித்திரை வரவில்லை. தன்னைப் பெரிய பழியிலிருந்து தடுத்த அந்தச் செம்படவக் கிழவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் சிந்தித்தாள். அவ்வளவும் பொன்மொழிகளாகப் பொறித்து வைத்துப் போற்ற வேண்டியவை எனத் தோன்றியது. நடக்க முடியாத செய்கை என்று அவளது பகுத்தறிவு ஒருபுறம் பறைசாற்றிய போதிலும், தாத்தா ரகுபதியே புனர் ஜென்மமெடுத்து அந்தக் கிழவர் உருவில் வந்து தைரியம் கூறிவிட்டுச் சென்றதுபோல அவளுக்கு ஒரு விசித்திரமான உணர்ச்சி ஏற்பட்டது. ''உலகத்தில் இரக்கம் என்பதற்கு இன்னும் பஞ்சம் வந்துவிடவில்லை. அன்பு என்பது அப்படிக் கடுகளவும் இன்று அஸ்தமித்து விடவில்லை. பிரதிபலனை உத்தேசிக்காது பிறருக்கு உதவும் ஆத்மாக்கள் உலகில் இன்னமும் இருக்கத்தான் இருக்கிறார்கள். இனியும் இருப்பார்கள்'' என எண்ணங்கள் ஓடின.

தாத்தா இறந்து போவதற்கு முன்னால் அன்று காலை என்ன சொன்னார்? 'எத்தனை கஷ்டம் வந்த போதிலும் கலங்காத நெஞ்சும், பொறுமையும், நேர்மையான நடத்தையும்



இருந்தால் சுக வாழ்விற்குப் போதும்' என்றார். 'உண்மையில் இம்மூன்று குணங்கள் மட்டும் இருந்தால் வாழ்விலே முன்னேறிச் சுகம் பெறுவது சுலபமா?' இவ்வாறு பல பல எண்ணி வெகுநேரம் தூங்காது உட்கார்ந்திருந்தாள். அருகில் சோபா ஒன்றின் மீது கேதாரி படித்து விட்டு மடித்துப் போட்டிருந்த மாலைப் பத்திரிகை அவள் கண்ணில் பட்டது. அதை எடுத்து இரண்டாவது பக்கத்தைப் பிரித்து அசட்டையாகப் படிக்க ஆரம்பித்தாள். 'தேவை' என்ற தலைப்பின் கீழ் கண்ணுற்ற ஒரு சிறு விளம்பரம் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கவே, சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். கண்களையும் கருத்தையும் தீட்டிக் கொண்டு அதை மீண்டும் பலமுறை படித்துப் பார்த்தாள்.

''எங்களுடைய மிளகாய்ப்பொடித் தொழிற்சாலையில் குமாஸ்தா வேலை செய்ய எஸ்.எஸ்.எல்.ஸி. வரையாவது படித்து, ஆங்கிலம் தமிழ் இரண்டும் தெரிந்த பெண் தேவை. வசிக்க வீடு, உணவு முதலிய செளகர்யங்களுடன் மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் அளிக்கப்படும். விவரங்களுக்குக் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும். ஸ்ரீமதி யசோதாதேவி, சிவா மிளகாய் மில்ஸ், வீரசோழன் பட்டினம்.''

மஞ்சுளா பத்திரிகையை மடித்து மடிமீது வைத்துக் கொண்டாள். சுவரைப் பார்த்தபடி தீவிரமாக யோசிக்கலுற்றாள். அந்த வேலைக்கு மனுப் போட்டால் கட்டாயம் வேலை கிடைத்து விடும் என்று ஒரு உள்ளுணர்வு ஏற்படவே, அவளது கவலைகளும் துக்கமும் பஞ்சாகப் பறந்தோடி விட்டன. உள்ளூரில் அலைந்து கஷ்டப்பட்டு, எங்கேயாவது ஒரு குமாஸ்தா உத்தியோகம் தேடிக் கொண்டு, பெரியப்பா, பெரியம்மா இருவர் கண் முன்னால் சிறுமையாக வாழ்வதைக் காட்டிலும் வெளியூரில், எங்கேயாவது ஒரு கௌரவமான உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு, தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்வது எத்தனையோ மேல் எனத் தோன்றியது.

கட்டாயம் எப்பாடு பட்டாவது அந்த வேலைக்கு முயற்சி செய்யவேண்டும். தன் திறமைகள் அனைத்தையும் விடாது

விண்ணப்பத்தில் எழுதி அந்த யசோதா அம்மாளின் மனதைக் கவர வேண்டும். எப்படி விண்ணப்பத்தை ஆரம்பிப்பது என்றெல்லாம் பற்பல யோசித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். ''மணி பதினொன்றாகப் போகிறது. இன்னும் விளக்கைப் போட்டுக் கொண்டு என்ன செய்கிறாய்? அப்படித் தலை போகிற விஷயம் என்னடியம்மா இருக்கு? நன்றாயிருக்கிறது நீ செய்கிற அட்டகாசம்'' என்று மாடியிலிருந்து புறப்பட்டது பார்வதியின் கர்ஜனை.

திடுக்கிட்ட மஞ்சுளா விசுக்கென்று எழுந்து நின்றாள். ''மன்னியுங்கள் பெரியம்மா! நேரம் போனது தெரியவில்லை'' என்று குழறிவிட்டு, வேகமாக விளக்கை அணைத்தாள். பிறகு படுக்கையிருந்த இடத்தை அடைந்து தலையைக் கீழே சாய்ந்தாள்.

''அப்பப்பா! போதும் எனக்கு. இன்னும் நாலைந்து நாளில் தொலைந்து விடுவாள் என்றதனால் மனத்திற்குக் கொஞ்சம் நிம்மதி. இல்லாவிட்டால் என் பாடு, உன் பாடாகிவிடும்! இந்த மாதிரி விவேகம் இல்லாத அசம்பாவிதங்களை வைத்துக் கொண்டு யாரால் சமாளிக்க முடியும்? படித்தவளாம்! கொஞ்சமும் கருத்து இல்லாத பெண்!'' என்று பார்வதியம்மாள் விடுத்த சொல் அம்புகள் மஞ்சுளாவின் காதுகளில் நன்றாக விழுந்தன. அவைகளைக் கேட்கப் பொறுக்காதவளாகத் தன்னைப் போர்வையால் நன்றாக மூடிக்கொண்டாள். ஆனால் உறக்கம் என்னவோ வர மறுத்தது. அன்று ஏற்பட்ட நூதன அனுபவத்தினால் அதிர்ச்சியுற்றிருந்த மூளை இளைப்பாற மறுத்து, சிந்தனை அலைகள் எழுப்பிய வண்ணமிருந்தது.

''வசிக்க வீடும், உணவும், எழுபத்தைந்து ரூபாய்ச் சம்பளமும் என்றால் ராஜாங்கமான உத்தியோகமாயிற்றே, ஏகப்போட்டியிருக்குமே! ஆனால் அந்த உத்தியோகம் மட்டும் கிடைத்துவிட்டால்...'' என்று சிந்தித்த வண்ணம் ஜன்னல் வழியே தெரிந்த வானத்தைச் சற்றுத் தலையைத் தூக்கி வெறித்துப் பார்த்தாள்.



பெரிய கருமேகக் கூட்டமொன்றின் பின்னிருந்து அப்பொழுதுதான் வெளியே புறப்பட்ட வளர்பிறைச் சந்திரன் வெற்றிப்படகுபோல மிக்க பிரகாசமாகக் காய்ந்து கொண்டிருந்தான். கலைந்து சிதறிய அதே வேகத்தில் ஒன்று கூடி வெவ்வேறு தோற்றத்தை ஏற்றுக்கொண்ட வானத்து மேகக் கூட்டங்களை விட, மிக வேகமாக மஞ்சுளாவின் உள்ளம் அந்த வேலையைப் பற்றி இன்பமான கற்பனைக் கோட்டைகளை மனக் கண்முன் எழுப்பிக் கொண்டிருந்தது.

ஹாலில் மணி இரண்டடித்ததைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது. உடனே படுக்கைமீது நன்றாகச் சாய்ந்து கொண்டாள். யாரோ ஒரு மேனாட்டு மேதை என்ன சொன்னான்?

''உலகத்து மண்மீது உண்மையாக ஒரு வீட்டைக் கட்டுமுன் ஆயிரக்கணக்கான கற்பனைக் கோட்டைகளைத் தாராளமாக ஆகாயத்திலே எழுப்பி விடு, தம்பி! அப்பொழுதுதான் உன் கற்பனையில் ஆயிரத்தில் ஒன்றாவது உண்மையிலே உருவாகும்.''

இதை நினைத்துக் கொண்டாள் அவள். முதன் முதலாகப் பல நாட்களுக்குப் பின் துன்ப வேதனை, கண்ணீர் இவைகளை மறந்து தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

## 6

வீரசோழன் பட்டணம் போகும் ரயில் வண்டியின் மூன்றாவது வகுப்புப் பெண்கள் பெட்டியில் அன்று கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு பெரிய க்ஷேத்திரத்தில் அடுத்த நாள் ஏதோ ஒரு முக்கிய உற்சவமாம். அதைக் காணப் புறப்பட்ட ஸ்திரீ யாத்ரிகர்கள் ஒருவர் மேல் ஒருவர் நெருக்கியடித்துக் கொண்டு ஏறிப் பெட்டியை

நிறைந்துவிட்டிருந்தனர். வண்டி புறப்படச் சில நிமிஷங்களே இருந்தன. தன்னுடைய தோல் பெட்டியைத் தானே சுமந்து கொண்டு மஞ்சுளா, கூட்டத்திற்குள் புகுந்தாள். இணைறியடித்துக் கொண்டு எப்படியோ வண்டிக்குள் ஏறிவிட்டாள். அதிர்ஷ்டவசமாக ஜன்னல் ஓரத்தில் கொஞ்சம் இடம் காலியாகத் தென்பட்டது. சட்டென்று ஓடி அதில் உட்கார்ந்து கொண்டு பெட்டியைக் கால் அடியில் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

கூட்டத்தில் புகுந்து வந்து இடம் பிடித்துக் கொண்ட சிரமம் தீர, நீண்டதொரு பெருமூச்சு விட்ட வண்ணம் ஜன்னல் வழியே ரயில் வண்டி நிலையத்தை எட்டிப் பார்த்தாள். எங்கு பார்த்தாலும் ஒரே தலைமயமாகத் தென்பட்டது. அந்த ஜன சமுத்திரத்தில் புகுந்து வேகமாகப் பெட்டியருகே ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தாள் வயதானதொரு அம்மாள். ''விச்சு, போய்விட்டு வரேன். ஜாக்கிரதை, நன்னாப்படிச்சு, நல்ல பையன்னு பேர் வாங்கு'' என்று, அவள் கூடவே கூட்டத்திற்குள் ஓடிவந்த சிறுவனுக்குக் குட்டி உபதேசம் செய்தாள். புடவைத் தலைப்பின் நுனியிலிருந்த முடிச்சை அவசரமாக அவிழ்த்து ஒரு சிறு நாணயத்தை எடுத்து அச்சிறுவன் கையில் வைத்து அழுத்திவிட்டு, அவன் தலையில் சுமந்து கொண்டிருந்த தகர டப்பாவை வாங்கிக் கொண்டாள் அந்த அம்மாள். அது சமயம் முன்னிருந்த ஜனங்களைத் தள்ளிக்கொண்டு இரைக்க இரைக்க ஓடி வந்தார் வயதான மனிதர் ஒருவர்.

''கங்கம்மா, மூட்டையைப் பிடி. சட்டுனு வண்டியிலே ஏறு. மணியடிக்கப் போறான். நாழியாச்சு!'' என்று அவர் உரத்துக் கூக்குரலிட்டார். அவர் நீட்டிய பெரிய மூட்டையையும் வாங்கிக் கொண்டு, அந்தம்மாள் வண்டிக்குள் ஒரே பாய்ச்சலாகத் தாவினாள். இரண்டாவது மணியடிக்கவே வண்டி ஓவென்று இரைச்சலிட்டு விட்டு மெல்ல நகரத் தொடங்கியது. அதுசமயம் பெட்டிக்குள் ஏறியிருந்த ஜனத்திரளுக்குள் பரபரப்பு ஏற்படவே, அந்தம்மாள் வண்டியினுள் ஏறவும் முடியாமல் வெளியே குதிக்கவும் முடியாமல் திண்டாடிப் போய்விட்டாள்.



அதைக் கண்ணுற்ற மஞ்சுளா பச்சாதாபமுற்று, ''இந்தாங்க, இப்படிக் கொடுங்க மூட்டையை!'' எனக்கையை நீட்டி எழுந்து வந்து அவளிடமிருந்து சாமான்களை வாங்கிக் கொண்டாள். அந்தம்மாள் தட்டுத் தடுமாறி ஜனத்திரளில் நீந்தி எப்படியோ தனது தகர டப்பா சகிதம் வண்டி வேகமாக நகரத் தொடங்கும் தறுவாயில், ஜன்னல் அருகே வந்து சேர்ந்துவிட்டாள். தான் அமர்ந்திருந்த இடத்தை அந்தம்மாளுக்குக் கொடுத்துவிட்டு, ஜன்னல் அருகே தன் பெட்டியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன் மீது உட்கார்ந்து கொண்டாள் மஞ்சுளா.

உள்ளிருந்த பெண்கள் ஏக காலத்தில் பேசிய சப்தமும் அலறிக் கொண்டு வேகமாகப் புறப்பட்ட வண்டி செய்த ஓசையும் சேர்ந்து ஒரே கூச்சல் மயமாக இருந்தது. ஜன்னலினின்று கூடத் திரும்ப முடியாது பெண்கள் அவள்மீது வந்து விழுந்து நெருக்கிக் கொண்டு இருந்தார்கள். சாதாரண நாட்களாக இருந்தால் மஞ்சுளா பொறுக்க முடியாமல் தவித்துப் போயிருப்பாள். ஆனால் அன்று அவள் உள்ளம் குதூகலத்தில் கூத்தாடிக் கொண்டிருந்தது. வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் உற்சாகமும் அந்தப் பிரயாணத்தில் அடங்கியிருந்ததனால், திருவிழாக் கூட்டத்திலே கலந்து கொம்மாளமடிக்கும் குழந்தையைப் போல அந்த நானாவித ஓசையை ரசித்துக் கொண்டு ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்த வண்ணமிருந்தாள்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. அவளது மனமும் கடந்த சம்பவங்களை எண்ணி பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தது. பெரியம்மாவிடம் சொன்னபடி முதல் தேதியன்றே அந்த வீட்டை விட்டுக் கிளம்பிவிடத் தீர்மானித்து, அந்த வேலைக்கு விண்ணப்பம் அனுப்பி நான்கு தினங்கள் கழிந்து விட்டன. ஒரு பதிலையும் காணோம். இதற்கிடையில் பள்ளிக்கூடத் தோழி ஒருத்தியை எதேச்சையாகக் கடைத்தெருவில் சந்தித்தாள். அவள் ஏதோ ஒரு இன்ஷுரன்ஸ் கம்பெனியில் குமாஸ்தா வேலை காலியிருப்பதாகச் சொல்லி வைத்தாள். அதைக் கெட்டியாக நம்பிக்கொண்டு மறுநாள் பொழுது விடிந்ததும்

விடியாததுமாக அங்கே விரைந்தாள். ஆனால் பாவம் அங்கேயும் அவளுக்கு ஏமாற்றந்தான் எதிர் நோக்கிக் கொண்டிருந்தது. அவளை முந்திக் கொண்டு சென்ற வேறு ஒரு பெண்ணுக்கு அந்த வேலையைக் கொடுத்து விட்டிருந்தார்கள். கொடுமையாகத் தகித்துக் கொண்டிருந்த வெய்யிலில் நகரத்திலிருந்த தனக்குத் தெரிந்த பல தொழிற்சாலைகளிலும் காரியாலயங்களிலும் அன்று மாலை முழுவதும் அவள் ஏறி இறங்கியதுதான் மிச்சமாக இருந்தது. எங்கும் ஒரே பல்லவிதான். 'வேலை காலி இல்லை' என்பதைக் கேட்டுக் கேட்டு அவளுக்குத் தலை சுற்றியது. கையிலிருந்த பதின்மூன்று ரூபாய்களும் சில தினங்களில் தண்ணீராகக் கரைந்து குறைந்து விட்டிருந்தன. 'இனி என்ன செய்வது? வேலைக்கு மனுச் செய்துகொள்ளத் தபால் தலைகள் வாங்கக்கூடப் பணம் இருக்காது போலிருக்கிறதே? பெரியம்மாளுக்கு என்ன பதில் சொல்வது? முதல் தேதி வந்து விட்டதே, வீட்டைவிட்டுக் கிளம்பு என்றால் எங்கே போவது?' என்று தனக்குள் எண்ணித் திகிலடைந்து போனாள்.

காலையிலிருந்து வேலை தேடிய மும்முரத்தில் ஒன்றும் சாப்பிடாததால் பசி காதை அடைத்தது. கவலைகள் கால்களைப் பின்னின. பஸ் நிலையத்திலிருந்து மெல்லக் கேதாரியின் வீட்டை நோக்கி நடந்தாள். கேட்டைத் திறந்து கொண்டு ஒரு சில அடிகள் கூட உள்ளே தோட்டத்திற்குள் வந்திருக்க மாட்டாள். விர் என்று வேகமாகப் பின்னால் வந்த சைக்கிளில் இருந்து மின்னல் வேகத்தில் குதித்த காக்கிச் சட்டைக்காரன், 'மஞ்சுளா அம்மா! தந்தி' என்று கூவினான். மின்சாரத்தினால் தாக்குண்டவள் போல் மஞ்சுளா அரண்டுபோய் நின்று விட்டாள்.

''தந்தியா! எனக்கா?'' என்று பயத்தில் குமுறிக்கொண்டு அவள் அவன் அருகே வந்தாள்.

''நீங்கதான் மஞ்சுளாவா? பிடியுங்க இதை! இங்கே ஒரு கையெழுத்துப் போடுங்க'' என்று உத்தரவிட்ட தந்திச் சேவகன், அவளிடம் ஒரு காகித உறையை நீட்டினான். தந்தி என்னவாக இருக்கும் என்று ஊகிக்க இயலாததனால் அவளது கரங்கள்



அதைக் கையில் எடுத்ததுமே நடுங்கின. பயத்துடன் உறையைக் கிழித்து உள்ளிருந்த கடிதத்தை எடுத்தாள்.

''உடனே புறப்பட்டு வந்து வேலையை ஒப்புக் கொள்ளவும். வழிச் செலவிற்குப் பணம், மணியார்டரில் அனுப்பியிருக்கிறேன், யசோதா'' என்றிருந்ததைக் கண்டதும் அவளுக்குச் சந்தோஷம் தாளமுடியவில்லை.

அந்தத் தந்தியைக் கையில் பிடித்துக் கொண்டு அந்த பங்களா முழுவதும் சினிமாக் கதாநாயகிகள் போல் உற்சாகத்துடன் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டு, குதித்துக் கூத்தாடி வரவேண்டும் போல் கூட அவளுக்கு ஒரு விசித்திரமான ஆர்வம் ஏற்பட்டது. சமையலறையிலேயே ஈடுபட்டிருந்த போதிலும் கண்களையும் காதுகளையும் வாசல்புறத்திலே விட்டு வைத்திருக்கும் அந்த வீட்டுச் சமையற்கார அம்மாளுக்கு, மஞ்சுளாவின் பிரகாசமான முகத்தையும் ஆனந்தம் ஜ்வலித்த கண்களையும் கண்டதும் பலபல சந்தேகங்கள் சமுத்திர அலைகள் போல் அடுக்கடுக்காக ஏற்பட்டன.

சர்க்கரை போடாமல் தான் கொடுத்த காப்பியை அந்தப் பெண் வாங்கி ஒரே விழுங்காகச் சாப்பிட்டதைக் கண்டதும், அவள் சந்தேகம் வலுத்தது. ஏறஇறங்க மஞ்சுளாவை ஒருமுறை உறுத்துப் பார்த்துவிட்டு, அவள் தன் முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள். அருகிலிருந்த ஒரு கோவில் மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த ராமாயண உபன்யாசத்தைக் கேட்கப் போயிருந்தாள் அன்று பார்வதி அம்மாள். எஜமானி திரும்பி வந்ததும் வராததுமாகத் தந்தி சமாசாரத்தைச் சொல்லாவிட்டால் சமையற்காரம்மாவின் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. விஷயத்தைக் கேள்விப்பட்டதும், ஆடம்பரமாக வெளியே செல்லத் தான் உடுத்திச் சென்ற புதுப் பட்டுப் புடவையைக் களைந்து வேறு உடுத்திக்கொண்டு வரும் வரை கூட ஸ்ரீமதி கேதாரிக்குப் பொறுமை இருக்கவில்லை. முன் ஹாலில் மாலைப் பத்திரிக்கையைப் புரட்டிக்கொண்டு, கற்பனை உலகிலே சஞ்சரித்தவளாக உட்கார்ந்திருந்த மஞ்சுளாவிடம் வேகமாக ஓடி வந்தாள்.

''தந்தி வந்ததாமே? யாருக்கு என்னவாம்?'' என்று படபடவெனக் கேட்டாள்.

மஞ்சுளா மரியாதையாக எழுந்து நின்றாள். ''தந்தி எனக்குத்தான் வந்தது பெரியம்மா. ஒரு வேலை விஷயமாக வந்திருக்கிறது. நாளைக்கே நான் இங்கிருந்து புறப்பட்டு வீரசோழன் பட்டணம் போகவேண்டும்'' என்றாள்.

''இதென்ன கூத்து! நீ வீட்டை விட்டு ஹாஸ்டலுக்குப் போவதாகவல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்? ஊரை விட்டே போக ஏற்பாடு செய்திருக்கிறாயே! என்னிடத்தில் இதெல்லாம் பற்றி முன்னாடியே ஏன் சொல்லக்கூடாது?'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள் பார்வதி.

''இந்த வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை பெரியம்மா! அதனால்...'' என்று அவள் முடிக்குமுன் பார்வதி கோபத்துடன் குறுக்கிட்டாள். ''இவர்கள் இருவரும் தனக்கு யாரைப் போல்? இவர்களிடம் நாம் ஏன் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் உனக்கு? யாரோ ஒரு பாட்டியம்மா வீட்டுக்குப் போகப் போகிறேன் அப்படி இப்படி என்று பொய் சொல்லி எங்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லையே? குஷாலாக உண்மையைச் சொல்லியிருக்கலாமே? போகாதே என்று நான் குறுக்கே விழுந்து தடுத்துவிடுவேன் என்ற பயமா? நன்றாகத்தான் இருக்கிறது இதெல்லாம்'' என்று இரைந்து கத்தினாள்.

மஞ்சுளாவின் பாடு பெருத்த சங்கடமாகி விட்டது. புறப்படுமுன் வீண மனஸ்தாபம் எதற்கு என எண்ணி, ''இந்த வேலை எதிர்பாராதவிதமாகக் கிடைத்திருக்கிறது. நல்ல சம்பளம். அதனால் விட மனமில்லை. ஏற்றுக்கொள்ள உத்தேசித்து முந்திய ஏற்பாடுகளைக் கைவிட்டு விட்டேன். அவ்வளவுதான்'' என்று குழறினாள். அவள் கூறியதைத் தான் நம்பத் தயாரில்லை என்ற பாவனையில் மேலும் இழுமாய்ப் பார்த்துவிட்டு ''சரி உன் இஷ்டம்'' என அழுத்தமாகப் பதிலளித்த பார்வதி, வேகமாக மாடியறைக்குச் சென்று விட்டாள்.



ஸ்ரீமதி கேதாரி தானும் உதவி செய்ய மாட்டாள். பிறர் தன் முயற்சியால் முன்னேறி வருவதைக் காணவும் சகிக்கமாட்டாள்! அப்படிப்பட்ட ஒரு அபூர்வப் பிறவி அவள். மறுநாள் காலை விடிந்ததும் கொஞ்ச நேரத்தில் தந்தி மணியார்டர் சேவகன் மஞ்சுளாவின் பெயரை அழைத்துக் கொண்டு வீட்டு வாயிலில் வந்து நிற்பதைக் காண அவளுக்குப் பிடிக்கவில்லை. எழுபத்தைந்து ரூபாய் என்று அவன் பணத்தை எண்ணி அந்தப் பெண்ணின் கையில் கொடுத்ததை ஓரக் கண்களால் பார்த்துவிட்டு ஆபீஸ் அறைக்குள் நுழைந்தாள். அவளால் பேசாது இருக்க முடியவில்லை. வேண்டுமென்றே மஞ்சுளாவின் காதுகளில் படவேண்டுமென்று உரத்த குரலில் பேசினாள். ''என்னவோ அந்தப் பெண் நம் வீட்டைவிட்டுப் போனால் பசியால் செத்துவிடுமோ என்று உருகினீர்களே, அவள் லேசுப்பட்ட ஆசாமியல்ல; பெரியவர்கள் என்கிற மரியாதை இல்லாமல், நம்மைக் கலந்து ஆலோசிக்காமல் ஊரைவிட்டே போக ஏற்பாடு செய்திருக்கிறாள்.

''நேற்றுப் புறப்பட்டு வரச்சொல்லித் தந்தி வந்தது. இன்றைக்குப் பணம் வந்திருக்கிறது. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா என்ன? உங்க வகையறா மனிதர்களுக்கு ஒன்றும் சொல்லித் தரவேண்டாம். இப்படி ஏதோ வேலை என்று புறப்பட்டுப் போய், நாளைக்கு அவள் தானே ஒரு புருஷனைத் தேடிக் கல்யாணம் செய்து கொண்டு வந்தாலும் நான் ஆச்சர்யப்பட மாட்டேன். பெரிய திரிசமக்காரி. இந்த அசத்துக்களையெல்லாம் வீட்டிலே சேர்ப்பது கூடப்பெரிய பிசகு. வெகு நாட்கள் இங்கே தங்காமல் தானே புறப்பட்டுத் தொலைஞ்சு போகிறாள். நல்லதாப்போச்சு'' என்று படபடவெனப் பொரிந்து கொட்டினாள்.

மஞ்சுளாவின் மென்மையான உள்ளம் அந்தக் கடும் சொற்களைக் கேட்டு மிகவும் புண்பட்டுப் போயிற்று. ஆனால் அவள் தன் தாத்தா கூறிச் சென்ற அந்தக் கடைசிப் பொன்மொழியை நினைத்துப் பார்த்தாள். 'எத்தனை கஷ்டம்

வந்தபோதிலும் பொறுமையை இழக்கக்கூடாது' என்ற தீர்மானம் ஏற்படவே வாளாஇருந்துவிட்டாள். பெரியம்மா அலட்சியமாக இருந்த போதிலும் மஞ்சுளா அன்று பகல் போஜனத்திற்குப் பிறகு கடைத்தெருவுக்குச் சென்று வரப் பார்வதியிடம் உத்தரவு கேட்டுக் கொண்டுதான் புறப்பட்டாள். ரயில் கட்டணத்திற்கும் மேல் செலவிற்கும் என்று கொஞ்சம் பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மீதியில் தனக்குத் தேவையான சில ஆடைகளையும் சில்லறைச் சாமான்களையும் வாங்கிக் கொண்டு உற்சாகமாக வீடு திரும்பினாள்.

அன்று வரை நீண்ட தூரம் அவள் தனியே புகைவண்டியில் எங்குமே போய் வந்ததில்லை. ஆகவே, அந்த நூதன அனுபவம் வேறு உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. தனது சாமான்களை எல்லாம் துரிதமாகச் சேகரித்து, பெரிய தோல் பெட்டியில் அடுக்கிக் கொண்டாள். வேண்டா வெறுப்பாகச் சமையற்காரம்மா வட்டித்த உணவை அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வண்டிக்குக் கிளம்பினாள்.

சொந்தக்கார், அதை ஓட்ட ஆள் முதலிய வசதிகள் இருந்தும் ஏழைப் பெண்தானே என்று அலட்சியத்தினாலோ என்னவோ, கேதாரியோ அவரது மனைவியோ ஸ்டேஷன் வரை வந்து வழியனுப்பத் தயாராக இருக்கவில்லை. மஞ்சுளா அத்தகைய ஒரு பரிவை அவர்களிடம் எதிர்பார்க்கவும் இல்லை. தானே வெளியே புகைவண்டி நிலையத்திற்குச் செல்ல ஒரு ஜட்கா வண்டியைக் கூலி பேசி அழைத்து வந்தாள். பெட்டியைத் தானே சுமந்துகொண்டு போய் வைத்துவிட்டு, பெரியப்பா, பெரியம்மா இருவரிடமும் விடைபெற்றுக் கொள்ள உள்ளே வந்தாள்.

இரவு போஜனத்தைத் திருப்தியாக உண்டுவிட்டு, பின் கட்டு ஊஞ்சலில் ஸ்ரீமான் கேதாரி விச்ராந்தியாக உட்கார்ந்திருந்தார். வெற்றிலையைக் குதப்பியபடி ஊஞ்சல் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் பார்வதி.



"போய்விட்டு வருகிறேன். நீங்கள் செய்த உபகாரத்தை ஒருநாளும் மறக்கமாட்டேன்" என்று மிகவும் பணிவாக அவர்கள் இருவரையும் விழுந்து நமஸ்கரித்து விடை பெற்றுக் கொண்டாள் மஞ்சுளா.

பார்வதி அந்தப் பெண்ணைத் துச்சமாக ஒருமுறை வெறித்துப் பார்த்துவிட்டுச் சமையற்கட்டின் பக்கம் திரும்பினாள். "இந்தாங்கோ" என்று சமையற்கார அம்மாளைக் கைதட்டி அழைத்தாள். முன்கூட்டியே செய்திருந்த ஏற்பாட்டின் படி அந்த அம்மாள் ஒரு வெள்ளித் தட்டில் இரண்டு வெற்றிலைகளையும் இரண்டு பாக்குகளையும் எடுத்துத் தாராளமாக வைத்தாள். உக்கிராண அறைக்குள் சென்று, பழக்கூடையில் வதங்கிக் கிடந்த ஒரு சாத்துக்குடிப் பழத்தைத் தட்டின்மீது வைத்தாள். இத்தனை பொருள்கள் கொண்ட தட்டின் கனத்தைத் தாளமாட்டாதவள்போல் அதைத் தூக்கிக்கொண்டு மெல்ல நடந்து வந்தாள். தட்டை அவள் கரத்திலிருந்து வாங்கி மஞ்சுளா முன் நீட்டினாள் பார்வதி.

"நாங்கள் செய்வது ஒன்றும் பெரிய விஷயமல்ல. நீ எங்கே போனாலும் எங்கள் கௌரவத்தைக் கெடுக்காமல் நல்ல பெண் என்று பெயரெடுத்தால் அதுவே நீ எங்களுக்குச் செய்யக்கூடிய பெரிய உபகாரம்" என்று சற்றுக் கடுமையான குரலில் ஒரு புத்திமதியையும் கூடச் சேர்த்துப் பரிசாக அளித்தாள்.

"ஆகட்டும், பெரியம்மா" என்று பதில் அளித்தாள் மஞ்சுளா. பெரியப்பா, சமையற்காரம்மா இருவர் முன்னிலையில் பார்வதி மரியாதையின்றி இவ்வாறு பேசியது அவள் மனத்தைக் குத்தியது என்றாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாது மிக்க வணக்கமாக வெற்றிலை பாக்கை எடுத்துக் கொண்டாள். கேதாரியின் பங்களாவை விட்டு ஜட்கா புறப்பட்டதும் பார்வதி நிம்மதியாக சுவாசம் விட்டாள். அதற்கு எதிரொலியாக மஞ்சுளா நீண்டதொரு பெருமூச்செறிந்தாள். எத்தனை பெரியதொரு அமைதி அவள் உள்ளத்தில் நிலவியிருந்தது என்பதை அவள்தான் அறிவாள்.

புறப்படுமுன் நடந்த விஷயங்கள் அனைத்தையும்

நினைத்துப் பார்த்து விட்டு லேசாகத் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டாள் மஞ்சுளா.

வண்டி கடகடாவென்ற சப்தத்துடன் அசைந்து சென்றது ஒரு சுவையான தாலாட்டைப் போல் இனிமையாக இருக்கவே நின்று கொண்டும் நெருக்கியடித்து உட்கார்ந்திருந்த நிலையிலும் பலர் அப்படியே தூங்க ஆரம்பித்தனர்.

சில ஊர்கள் தாண்டியதும் வண்டி சிறு நகரத்து நிலையத்தை நெருங்க ஆரம்பித்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த யாத்ரிகர்கள் பரபரப்படையத் தொடங்கினர். பக்கத்திலிருந்தவர் மேலே விழுந்து நசுக்கிக் கொண்டு தங்கள் சாமான்களைச் சேகரிப்பதில் அனைவரும் ஏக காலத்தில் முனைந்தனர். இதுவரை மௌனமாகக் கண்களை மூடிக்கொண்டிருந்த கங்கம்மாள், மஞ்சுளா பக்கம் திரும்பி ''இந்த ஊரில் இந்த கும்பல் இறங்கி விடும். நீ தாராளமாக இங்கே வந்து உட்காரலாம்'' என்றாள் அனுதாபத்துடன்.

''பரவாயில்லை. கொஞ்ச நேரந்தானே இப்படி உட்கார நேர்ந்தது?'' என்று மஞ்சுளா பதிலளித்து விட்டு அந்தம்மாளை விளக்கொளியில் உற்றுப் பார்த்தாள். குப்பென்று நரைத்த கூந்தல் புரண்ட அந்தக் களை பொருந்திய முகத்தை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருந்தது. பார்த்த அளவிலே ஏனோ அந்த மூதாட்டியின் மீது அவளுக்கு மிக்க பரிவு ஏற்பட்டது. 'அந்த அம்மாள் யாராக இருக்கக் கூடும்?' என்று யோசிக்கலானாள்.

## 7

வண்டி நின்றதும் யாத்திரை கோஷ்டியார் அவளைத் தள்ளிக் கொண்டு அவசரமாக இறங்கிச் சென்றார்கள். அந்த நிலையத்திலிருந்து யாருமே அவர்கள் பெட்டிக்குள் வந்து ஏறவில்லை. மீண்டும் வண்டி புறப்படத் தொடங்கியதும் மஞ்சுளா, காலியாக இருந்த எதிர்ப்புற ஆசனத்தில் வந்து உட்கார்ந்தாள்.



''வண்டி முழுவதுமே காலியாகி விட்டது போலிருக்கிறது, இல்லையா?'' என்று கேட்ட அந்த அம்மாள் மெல்லச் சிரித்தாள். ஒரே பிடியில் அடங்கி விடுவாள் போன்ற மெல்லிய தோற்றம் கொண்டிருந்த அந்த அம்மாளை மீண்டும் ஒருமுறை நன்றாகக் கவனித்தாள் மஞ்சுளா. சிரிப்பின் நிழல் படிந்த அந்தச் சிறிய முகத்தில் பளிச்சென்று தரித்திருந்த குங்குமப் பொட்டு ஒன்றே பெரிய ஆபரணம் போல் அழகாக விளங்கியதை வியப்புடன் பார்த்துக் கொண்டேயிருந்தாள் அவள்.

வண்டி ஒரு பாலத்தின் மீது பலமான சப்தத்துடன் செல்லத் தொடங்கியதும் கங்கம்மாள் எழுந்து நன்றாக உட்கார்ந்து கொண்டாள். தோளின்மீது அவிழ்ந்து புரண்ட தனது கூந்தலை அள்ளிக் கட்டிக் கொண்டு ''எதுவரை போகிறாய் அம்மா!'' என விசாரித்தாள். ''வீர சோழன் பட்டணம்'' என்றாள் மஞ்சுளா சுருக்கமாக. ''அப்படியா?'' என்று ஆச்சரியத்துடன் கூவிய கங்கம்மாள் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ''நான் கூட அங்கேதான் போகிறேன். ரொம்ப நல்லதாப்போச்சு. நாம் ஒருவருக்கொருவர் துணை. ஆமாம். அது சரி! நீ வீர சோழன் பட்டணத்தில் எங்கே வசிக்கிறாய்?'' என்று பரபரப்புடன் வினவினாள்.

''இதுதான் முதல் தடவை நான் அந்த ஊருக்குப் போவது!'' என்று மஞ்சுளா பதிலளித்தாள்.

''அப்படிச்சொல். வீர சோழன் பட்டணம் என்றதும் எங்கள் ஊர்ப் பெண்ணாக இருந்தால் முன்பின் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே, பார்த்தால் யாரோ புதிதாக இருக்கிறதே என்று எண்ணி, ஒரு நிமிஷம் திடுக்கிட்டுப் போய்விட்டேன். ஆமாம் அங்கே நீ யார் வீட்டுக்குப் போகிறாய்?'' என்று கங்கம்மாள் மூச்சுவிடாது அடுத்த கேள்வியைப் போட்டாள்.

மஞ்சுளா சற்றுத் தயங்கினாள். ''உங்களுக்கு அந்த ஊரில் உள்ள முக்கியமான மனிதர்களையெல்லாம் தெரியும் போலிருக்கிறது'' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு புன்முறுவல் செய்தாள். ''வீரசோழன் பட்டணம் என்றதும்

சென்னைப் பட்டணம்போல் மிகவும் பெரிய நகரம் என்று நினைத்துக் கொண்டு விட்டாயா? பெயர்தான் பெரிதே ஒழிய, ஊர் என்னவோ மிகவும் சிறியது. கௌரிபுரம், லக்ஷ்மிபுரம் என்று ஊரில் இரண்டு முக்கிய பகுதிகள் உண்டு. அநேகமாக ஒரு பகுதியிலே வசிப்பவர்களுக்கு மற்றொரு பகுதியில் வசிப்பவர்களைத் தெரிந்திருக்கும்'' என்று விஸ்தரித்து விட்டு, ''ஆமாம். அங்கே நீ யார் வீட்டிற்குப் போகிறாய்?'' என்று மீண்டும் ஆவலுடன் கேட்டாள் கங்கம்மாள்.

''கௌரிபுரத்தில் வசிக்கும் யசோதா என்பவர் வீட்டிற்குப் போகிறேன். அவர்களை உங்களுக்குத் தெரியுமா?'' என்று வியப்புடன் பதிலுக்குக் கேட்டாள், மஞ்சுளா.

''தெரியும்! ஆமாம், நீ அந்தம்மாளுக்கு என்ன உறவு?'' என்று முன்னெச்சரிக்கையாகக் கேட்டுக் கொண்டாள் கங்கம்மாள். ''உறவு ஒன்றுமில்லை. யசோதா தேவியின் 'மிளகாய்ப் பொடி கம்பெனி'யில் வேலை செய்ய என்னைத் தந்தி மூலம் வரவழைத்திருக்கிறார்கள்'' என்று மஞ்சுளா மிகவும் கௌரவமாகக் கூறிக்கொண்டாள். ''மிளகாய்ப் பொடி கம்பெனியா? இதென்ன கூத்து!'' என்று வியப்புடன் கேட்ட கங்கம்மாள், நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டதுபோல் உரத்துச் சிரிக்க ஆரம்பித்தாள். மஞ்சுளாவுக்கு அந்த நகைப்பு பகீர் என்று இருந்தது. ''ஏன், யசோதா தேவி, மிளகாய்ப் பொடிக் கம்பெனியின் சொந்தக்காரி இல்லையா?'' எனப் பதட்டமாகக் கேட்டாள். அவளது நெஞ்சு பயத்தினால் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது.

''கோவிச்சுக்காதே அம்மா, யசோதா செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் நினைத்துக் கொண்டால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. அவள் அப்பன் கொஞ்சம் சொத்து வைத்துவிட்டுப் போய்விட்டான். பி.ஏ.வரை படித்த பெண்தான். இருந்தாலும் சுயபுத்தியில்லாதவள். வயது முப்பது ஆகியும் கல்யாணம் ஆகாதிருந்தாள். அப்பா காலமான கொஞ்ச நாளில், திடீரென்று ஒருநாள் கைலாசம் என்கிற ஒருவனைத் தானே பார்த்து நிச்சயம் செய்து கல்யாணம் செய்துகொண்டு விட்டாள்.



''போன வருஷம் மாவு மில் வைக்கப் போகிறதாக அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தாள். அதற்கு ஆறு மாதத்திற்குப் பிறகு எண்ணெய் வியாபாரம் செய்யப்போவதாகப் பெரிய விளம்பரம் செய்தாள். இப்போது என்னவோ 'மிளகாய்ப் பொடி கம்பெனி' திறக்கப் போவதாக எல்லோர் கண்ணிலும் மிளகாய்ப் பொடி போடுகிறாள் போலிருக்கிறது. அசட்டுப் பெண் பணத்தைக் கண்டபடி வாரி இறைக்கிறாள். எல்லாம் தண்டச்சோறு அந்த கைலாசத்தின் வேலை. ஏதாவது ஒரு சொந்த பிசினஸ் வைத்து, தான் முதலாளியாக வேஷம் போட அவனுக்கு ஆசை. அதனால் தன் பெண்டாட்டியை 'இதைச் செய், அதை ஆரம்பி' என்று இஷ்டப்படி ஆட்டி வைக்கிறான் உருப்படாதவன்.

''இதற்கு முன் எங்கேயோ இன்ஷுரன்ஸ் கம்பெனியில் ஏஜண்டாக இருந்தானாம். இப்போ சும்மா காரை ஓட்டிக் கொண்டு வீட்டோடு கிடக்கிறான்'' என்று ஒரு பிரசங்கம் செய்து ஓய்ந்தாள் கங்கம்மாள்.

''அப்படியென்றால், நான் மோசம் போய்விட்டேன்! ஐயோ இனி நான் என்ன செய்வேன்!'' என்று குழறிய மஞ்சுளாவின் கண்களில் நீர் துளிர்த்தது. ஏமாற்றம் நெஞ்சைப் பிளக்க, துக்கம் தாங்கமாட்டாது தலையைக் கவிழ்த்துக் கொண்டு விம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

திடுக்கிட்டுப் போன அந்த மூதாட்டி பரபரப்பாக எழுந்து அருகில் வந்து அவளை அணைத்துக் கொண்டாள். ''என்னம்மா? உன்னை யார் மோசம் செய்து விட்டார்கள்? விவரமாகச் சொல், என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன். வருத்தப்படாதேயம்மா'' என்று ஆறுதல் கூறினாள். இதுகாறும் குதூகலத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த மஞ்சுளாவின் மனத்தில் இடி விழுந்தது போன்ற பயங்கர உணர்ச்சி நிறைந்துவிட்டது. ''மாமி! நான் மகாபாவி! நிழல்போல் துன்பம் என்னை விடாமல் தொடர்ந்து வருகிறதே; என்ன செய்வேன் நான்?'' என்று விம்மலும் கண்ணீருமாகத் திணறினாள்.

''அம்மா என்னை உன் தாயார்போல் பாவித்துக் கொள். விவரமாகச் சொல். என்ன ஆயிற்று? ஏன் இப்படி வருத்தப்படுகிறாய்?'' என்று மிகவும் அனுதாபத்துடன் கேட்ட கங்கம்மாள், அவளது முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

எதிர்ப்புறத்து ஆசனத்து மூலையில் உட்கார்ந்த நிலையில் தூங்கி வழிந்துகொண்டிருந்த ஒரு பெண்மணி விழித்துக் கொண்டு, தன்னையே வெறித்துப் பார்ப்பதை உணர்ந்த மஞ்சுளா வெட்கத்துடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மிகவும் தாழ்ந்த குரலில், ''மாமி! என்னவோ உங்களைப் பார்த்தால் எனக்கு வேண்டியவர் போல் தோன்றுகிறது. என் வாழ்க்கை நடக்க முடியாத ஒரு கதைபோல இருக்கிறது. எனக்கு என்ன சொல்கிறதென்றே தெரியவில்லையே?'' என்று திக்கினாள்.

நெற்றி மீது புரண்டு விழுந்த அவளது கூந்தலை அன்புடன் கோதிச் சரிப்படுத்திவிட்ட கங்கம்மாள், மெல்லச் சிரித்தாள். ''எல்லோருடைய வாழ்க்கையும் யோசித்துப் பார்த்தால் ஒரு கதைபோலத்தான் பலவிதமான ரஸங்கள் நிறைந்திருக்கும். விவரமாகச் சொல். யசோதாவின் மிளகாய்ப் பொடிக் கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலை காலியிருக்கிறதென்று யார் உனக்குச் சொன்னார்கள்? யாருடைய ஆலோசனையைக் கேட்டு நீ புறப்பட்டு வந்தாய்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''யாரும் யோசனை சொல்லவில்லை. பத்திரிகையில் யசோதா செய்திருந்த விளம்பரத்தைக் கண்டு மனுப்போட்டேன். புறப்பட்டு வந்து சேரும்படி தந்தியும், மணியார்டரில் ஒரு மாதச் சம்பளப் பணமும் முன்னதாக அனுப்பி அழைத்தார்கள். அதனால் வந்தேன்'' என்று விக்கினாள்.

துக்கம் நிறைந்த மனத்தால் கங்கம்மாள் சிறிது நேரம் பேசவில்லை. ''ஒருசமயம் நான் நினைப்பது தப்பாக இருக்கலாம். வீணாக ஒருத்தி பணம் அனுப்பி உன்னை வரவழைப்பாளா? நான் நான்கு மாதங்களாக ஊரில் இல்லை. என் ஒன்றுவிட்ட தம்பியின் மனைவிக்கு ஆபரேஷன் ஆகி



ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் இருந்தாள். குழந்தைகளைக் கவனிக்கவும், வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் தக்க மனிதர் இல்லாமல் தம்பி தவித்துப் போனான். உதவிசெய்ய நான் புறப்பட்டுச் சென்னைக்கு வந்தேன். தம்பி மனைவி நல்லபடியாக வீடுவந்து சேர்ந்ததும் உடனே என்னை ஊருக்கு அனுப்ப மறுத்து, இரண்டு மாசம் கூட இருந்து போக நிர்ப்பந்தம் செய்தார்கள். அதனால் தங்கிவிட்டேன்.

''நான் ஊரில் இல்லாத சமயம் ஒரு சமயம் யசோதா மிளகாய்ப் பொடிக் கம்பெனி ஆரம்பித்திருக்கிறாளோ என்னவோ? நான் நினைத்தது பிசகாகவும் இருக்கலாம். எதற்கும் நீ அவசரப்படாதே. போய்ப்பார். அவள் உன்னை வீணே வரவழைத்திருப்பதாகப் புலப்பட்டால் அடுத்த ரயிலில் ஊருக்குத் திரும்பிவிடு. அவள் பணந்தானே நஷ்டமாகிப் போகிறது?'' என்றாள்.

''அதுதான் இல்லை மாமி. வேலை இல்லை என்று நான் ஊருக்குத் திரும்ப முடியாதே!'' என்று துக்கத்துடன் இரைந்தாள் மஞ்சுளா.

''ஏன் அம்மா, உன் தந்தை அப்படிக் கோபிப்பாரா என்ன? விசித்திரமாக இருக்கிறதே நீ சொல்வது'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் கங்கம்மாள்.

''வீடு என்று எனக்கு ஒரு இடம் இருந்தால்தானே போக முடியும்? நிற்க நிழல் இல்லை. தாயில்லை, தகப்பன் இல்லை. உற்றார் உறவினர் ஒருவரும் இல்லை. நான் திக்கற்ற பரதேசிப் பெண் மாமி'' என்று கூறிவிட்டு, மேலே பேசமுடியாது தன் கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள். முத்துக்களைப் போன்ற கண்ணீர்த் துளிகள் விரல்களின் இடுக்கு வழியே உருண்டு அவள் நெஞ்சின் மீது விழுந்தன. கங்கம்மாள் மிகவும் மனம் குழைந்து போனாள்.

''வருத்தப்படாதேயம்மா, இன்னும் எனக்கு உன்னைப் பற்றிய விவரம் சரியாகப் புரியவில்லை. இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொல்லமாட்டாயா? ஆனால் நான் உன் சொந்த

விஷயங்களில் தலையிடுவதாக எண்ணினால் சொல்ல வேண்டாம்'' என்றாள் கனிவாக.

மஞ்சுளா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். 'உன் குறைகளைச் சொல் கேட்கிறேன், என்று இதுவரை அவளிடம் யாரும் காது கொடுத்துக் கேட்க முன்வந்ததில்லை. கருணை நிறைந்த அந்தம்மாளின் முகமும், அன்பான வார்த்தைகளும் ஆதரவாக அணைத்துக் கொண்டு பேசிய தோரணையும் எல்லாம் அவள் மனத்திற்குக் கொஞ்சம் ஆறுதலை உண்டாக்கின. கங்கம்மாளிடம் எல்லாம் கூறவேண்டும் என்று தோன்றவே, தன்னுடைய பெற்றோர் இறந்ததிலிருந்து ஆரம்பித்து, கடைசியாக வேலை தேடி வேறு ஊருக்குப் புறப்பட்டு வந்தது வரையில், விடாது ஒன்றையும் ஒளிக்காது கூறி முடித்தாள்.'

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சுவாரஸ்யத்தில் வண்டி சில நிலையங்களில் ஆங்காங்கே நின்றதையும், இடையே பலர் ஏறியதையும் இறங்கிச் சென்றதையும் கங்கம்மாள் கவனிக்கவேயில்லை.

''இப்போ புரிந்ததா மாமி! என் நிலைமை எவ்வளவு கேவலமானது என்று உங்களுக்கு விளங்குகிறதா?'' என்று கேட்ட மஞ்சுளாவின் குரல் தழதழத்தது.

கங்கம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். யௌவனத்தின் பூரிப்பில் மகிழ்ச்சி பொங்கி ஆனந்தமாக இருக்கவேண்டிய அந்த இளம் பெண்ணிற்கு ஏற்பட்ட பல கஷ்டங்களையும் கேட்டு அவள் மனம் மிகவும் நெகிழ்ந்து விட்டது.

''நல்லதை நினைத்துக் கொண்டு நீ அங்கே வேலைக்குப் போ. சரிப்படாது போய்விட்டாலோ அல்லது உனக்கு வேலை பிடிக்காவிட்டாலோ வேறு வேலை ஏதாவது தேடிக் கொள்ளலாம். அதுவரை சில நாட்கள் எங்கள் வீட்டில் வந்து நீ தாராளமாகத் தங்கலாம். எனக்கு ஒரே பிள்ளைதான் பகவான் கொடுத்தார். அவன் தற்சமயம் பம்பாயில் வேலை செய்து கொண்டிருக்கிறான். என்னையும் என் கணவரையும் தவிர



வீட்டில் வேறு யாரும் கிடையாது. நாங்கள் மிகவும் சாதாரண மனிதர்கள். ஆனால் ஒருசில நாட்கள் எங்களோடு நீ வசித்தால், ஏழையாகி விட மாட்டோம். நாங்கள் சாப்பிடும் கஞ்சியையோ கூழையோ உன்னோடு சந்தோஷமாகப் பகிர்ந்துகொள்வோம்'' என்று ஆறுதலாகக் கூறிவிட்டுப் புன்முறுவல் செய்தாள்.

நகைகள் ஏதும் அதிகம் இல்லாவிடினும் அந்த முகத்தில் தவழ்ந்த புன்னகையே ஒரு பெரிய பொன் நகையாக அம்மூதாட்டியின் முக வசீகரத்தைப் பன்மடங்காகச் செய்வதைக் கண்டு மஞ்சுளா ஆச்சரியமுற்றாள்.

''மிக்க நன்றி. இப்படிச் சொல்வதற்குக்கூட எனக்கு இதுவரை யாரும் சிநேகிதர் இருந்ததில்லை'' என்று இணைறினாள் மஞ்சுளா. பிறகு இருவரும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது விடியும் தறுவாயில் வண்டி ஒரு சிறிய நிலையத்தை அடைந்தது. இருவரும் கீழே இறங்கிச்சென்று அருகிலிருந்த குழாயில் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டார்கள். கங்கம்மாளை முதலில் போய் வண்டியில் ஏறிக்கொள்ளச் சொல்லிவிட்டு, இரண்டு டம்ளர் காப்பியை வாங்கி, கையில் கொண்டு போன கூஜாவில் நிறைத்துக் கொண்டு ஓடிவந்து வண்டியில் ஏறிக் கொண்டாள் மஞ்சுளா.

''இவ்வளவு தூரம் பேசினோம். ஆச்சு, இன்னும் இரண்டு ஊர்கள் தாண்டினால் வீரசோழன் பட்டணம் வந்து விடுவோம். நீ இன்னும் என் வீட்டு விலாசத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லையே?'' என்று கேட்ட கங்கம்மாள் கூஜாவைத் திறந்து சூடான காப்பியை டம்ளரில் விட்டு அந்தப் பெண்ணிடம் நீட்டினாள்.

''ஆமாம் மாமி, நான் ஒரு அசட்டுப் பெண். பல கவலைகளில் எனக்கு ஞாபக சக்தி கூடக்குறையத் தொடங்கி விட்டது. தங்கள் விலாசம் என்ன என்று சொல்லுங்கள். நான் பத்திரமாக எழுதி வைத்துக் கொள்கிறேன்.'' என்றாள் மஞ்சுளா.

''எழுத வேண்டிய அவசியம் இல்லை. ஞாபகத்தில்

வைத்துக் கொள்வது மிகவும் சுலபம். கங்கம்மாள், லக்ஷ்மி புரம் என்றால் யாருமே சொல்லி விடுவார்கள். வீட்டு நம்பர் நாற்பது'' என்று கூறிவிட்டு, கங்கம்மாள் இன்னொரு டம்ளரில் காப்பியை நிறைத்து மெல்லப் பருகத் தொடங்கினாள்.

வீரசோழன் பட்டணம் நெருங்குவதற்குக் கொஞ்ச நேரமே இருந்ததனால் அங்கே இறங்கப் போகிற பிரயாணிகள் அனைவரும் தங்கள் சாமான்களைத் தேடித் தயாராக எடுத்து வைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். கங்கம்மாள் தனது தகர டப்பாவையும் மூட்டையையும் ஒன்றாக இறுகக் கட்டி வைத்துவிட்டு, தனது கூந்தலை அவிழ்த்துத் தட்டி முடிந்துகொண்டாள்.

முதன் முதலாக உத்தியோகம் செய்வதற்காக ஊருக்கு வந்திறங்கும்போது புரண்ட கூந்தலும், அலங்கிய ஆடையுமாகக் காட்சியளிக்க மஞ்சுளா விரும்பவில்லை. பெட்டியிலிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியையும் சீப்பையும் எடுத்து, தன் கூந்தலை அழகாக வாரிப் பின்னி முடிந்தாள். நெற்றி மீது பளிச்சென்று குங்குமப் பொட்டு ஒன்றை வைத்துக் கொண்டாள். முதல்நாள் புதிதாக வாங்கிய நூல் சேலைகளில் ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டு, தனது பெட்டியை மூடிப் பூட்டி, ஜன்னல் அருகே வந்து தயாராக உட்கார்ந்து கொண்டாள்.

''வீரசோழன் பட்டணம், என்று பெயர் பொறித்த பலகையைக் கண்ணுற்றதும் அவளது நெஞ்சு விவரிக்க இயலாத ஒருவித பயத்தில் 'பக்பக்' என்று அடித்துக் கொண்டது.

''வண்டி அதிக நேரம் நிற்காது. சீக்கிரம் இறங்கி விடு!'' என்று கங்கம்மாள் உத்தரவிட்டதைக் கேட்டதும், கனவு உலகத்திலிருந்து குதிப்பவள் போல் தனது பெட்டியைச் சுமந்த வண்ணம் வண்டியினின்று இறங்கினாள் மஞ்சுளா. ''யாருமற்ற அனாதைப் பெண்ணான தனக்கு இந்த வீர சோழன் பட்டணமாவது நல்ல வரவேற்பு கொடுத்து அடைக்கலம் அளிக்காதா?'' என்று அவள் பேதை நெஞ்சம் கடவுளைப் பிரார்த்தித்தது.



# 8

வழக்கம் போல் வண்டி அரைமணி தாமதமாகத்தான் அன்று வந்து சேர்ந்திருந்தது. காலை வேளையில் கிளப்பிற்குச் சென்று ஒரு செட் டென்னிஸ் விளையாடா விட்டால் கைலாசத்திற்கு உடம்பு உடம்பாகவே இருக்காது. ஆகவே கைகளை உயரத் தூக்கி முதுகை நெளித்துச் சோம்பல் முறித்துவிட்டு, பெரியதொரு கொட்டாவி விட்டான். நிலையத்திலே வந்து நின்ற வண்டியிலிருந்து இறங்கிய பெண்களை ஓரக்கண்ணால் பார்த்த வண்ணம் வெறுப்பாக நின்று கொண்டிருந்தான்.

வேலைக்கு வரப்போகும் பெண் குமாஸ்தாவைக் காத்திருந்து அழைத்து வரும் பொறுப்பை அவனது சகதர்மிணி காலையில் எழுந்ததும் அவன் கையில் ஒப்படைத்து விட்டிருந்தாள். தான் ஆரம்பிக்கவிருந்த மிளகாய்ப் பொடி வியாபாரத்திற்குப் பணம் வேண்டியிருக்கும் என்று யசோதா தேவி வீட்டுச் செலவைப் பலவித வகையில் சிக்கனப்படுத்த ஆரம்பித்தாள். அதன் பயனாக அவர்கள் வீட்டு பழைய மாடல் ஓட்டைக் காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் முனுசாமி முதல் தேதியோடு வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டான். புத்தம் புதிய பிளூக்காக இருந்தாலாவது கார் சாரத்தியம் செய்யக் கைலாசத்திற்குக் கொஞ்சம் ஆசை இருந்திருக்கும். பேரீச்சம் பழக்காரனிடம் போடுவதற்குப்பதில் ஷெட்டில் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்த கார் என்ற அந்தத் தகர டப்பாவைக் கண்டாலே தங்களுடைய சொத்து என்று உரிமை பாராட்டக்கூட அவனுக்கு அவமானமாக இருந்தது.

அதை ஓட்டிக் கொண்டு வீரசோழன் பட்டணத்தின் நாகரிகத்தின் சிகரமான கடைத் தெருவின் வழியே போவதென்றால் அவனுக்கு எப்படியிருந்திருக்கும்? கைலாசம் பற்களை நறநறவென்று கடித்தான். பொங்கிக் கொண்டு எழுந்த

ஆத்திரத்தை உதறிவிட விரும்புகின்றவன் போல் தோள்மீது புரண்ட அங்கவஸ்திரத்தை எடுத்து உதறி விட்டு மீண்டும் போட்டுக் கொண்டான். அவன் கோபம் அப்போதும் அடங்கவில்லை. "பணத்தை லேசில் வெளியில் எடுத்தால்தானே மகராஜி? சதா பூட்டிப் பத்திரப்படுத்தி வைக்கிறாள். யாருக்கோ தெரியவில்லை. ஒரு பொருளை வாங்கும்படி அம்மாளை தாஜா செய்வதற்குள் இங்கே ஜயா பிராணன் பாதி போய்விடுகிறது. பெண்கள் கையில் பணம் இருந்துவிட்டால் அவர்களை நம்பி வாழும் ஆண்கள் பாடு பெரும் அவஸ்தைதான் என்று தெரியாமலா சொல்கிறார்கள்? நாய்க்குட்டி போல் பின்னால் ஓடிவர ஏவுகிறாளே! சே! சே! இதென்ன பிழைப்பு", என்று தனக்குள்ளே மெல்ல முணுமுணுத்துக் கொண்டு, நிலையத்தின் மீது முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தான்.

கருமி சிகாமணியான தன் மனைவியை நம்பிவேலைக்கு வரும் அந்தப் பெண் குமாஸ்தாவை நினைத்து ஒரு பக்கம் அவனுக்குக் கொஞ்சம் பரிதாபமாக இருந்தது. மற்றொரு பக்கம் ஆச்சரியமாகவும் இருந்தது. மஞ்சுளா என்ற அழகான பெயரைக் கேட்டதும், அவன் ஏமாறத் தயாராக இருக்கவில்லை. பெயரைக் கேட்டு ஏமாந்துதானே ஸ்ரீமதி யசோதா தேவியின் கணவனாகும் நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்! ஆனால், அதைப்பற்றித் தற்சமயம் அவன் வருத்தப்பட்டும் பயனில்லை. எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு முழுக்குப் போட்டுவிட்டு அவன் வயிற்றுப் பிழைப்புக்கே தொழில் தேடிக்கொண்டு எப்போது கிளம்பினானோ, அன்றிலிருந்து அவனுக்கு ஒரு இடத்திலும் ஸ்திரமாக உத்தியோகம் வாய்க்கவில்லை. ஆனால் பாவம்? அவன் எந்தத் தொழில் வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தான்.

காப்பி ஹோட்டல்களில் மேஜைகளைச் சுத்தம் செய்யும் பணியிலிருந்து சினிமாக்கொட்டகையில் டிக்கெட் விற்பனை செய்யும் வேலைவரை சகலவற்றையும் அவன் செய்து பார்த்து விட்டிருந்தான். எதிலும் அவனுக்கு பூரண திருப்தி ஏற்படவில்லை. மனமும் லயிக்கவில்லை. கைலாசத்தின்



அகராதியில் திருமணம் என்பதும் ஒரு தனித்தொழிலாக இருந்தது. ஆனால் அதில் கூட அவனுக்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை. "இரண்டே பெண், வேறு ஆண் சந்ததி கிடையாது. தந்தைக்குப் பிறகு சொத்து ஆளுக்குப் பாதியாகப் பிரிக்கப்படும். சுமார் இரண்டு லக்ஷத்திற்குக் குறையாது அவள் பங்குக்குக் கட்டாயம் கிடைக்கும்" என்ற தீவிரமான நம்பிக்கையில், கால் நொண்டியாக இருந்தாலும் பரவாயில்லை என்று ஜவுளிக்கடை முதலாளி ஒருத்தரின் மூத்த மகளை வரதட்சணை கூடவாய் திறந்து கேட்காது மாலையிட்டான்.

கைலாசத்தின் ஆசையில் மண்ணைத் தூவிவிட்டு அந்தப் பெண் திருமணமான அடுத்த மாதமே நெருப்பு விபத்தில் மரணமடைந்து விட்டாள். இரண்டாவது பெண்ணைத் தனக்கே மணமுடித்துக் கொடுக்கமாட்டார்களா என்ற ஆசையில் வெட்கத்தை விட்டுத் தனது மாஜி மாமனாரைத் தானே போய்க் கேட்டுவிட்டான் அவன். அவ்வளவுதான், தன் பெண் மரணமடைந்ததற்குக் காரணம் மாப்பிள்ளையின் ஜாதக தோஷந்தான் எனப் பூரணமாக நம்பிவிட்ட அந்த மனிதர், கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கவே வந்துவிட்டார்!

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று அங்கிருந்து வெளியேறிய கைலாசம், தன் மனைவியின் நகைகளைப் பற்றியோ, சீர்வகைகளைப் பற்றியோ வாதாடி ஒன்றும் வாங்கிக் கொள்ள முடியவில்லை. 'வெள்வனமும் அழகும் கல்யாண மார்க்கெட்டில், ஆண்களுக்குக் கிராக்கியும் இருக்கும்வரை என்ன பயம்?" என்ற எண்ணத்தில் சில மாதங்களில் முதல் விவாகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மறந்துவிட்டான் அவன். தரகன் மூலம் கேள்விப்பட்ட ஒரு இடம் மிகவும் பிடித்தமாக இருக்கவே ஏற்கெனவே மணமாகி மனைவியை இழந்தவன் என்ற விஷயத்தை வெளியே சொல்லிக் கொள்ளாமல், 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டு' என்ற நீதி மொழியை அப்படியே கைப்பிடித்து நாலு லக்ஷம் ரூபாய்கள் சொத்திற்கு ஏக வாரிசான ஒரு விதவைத் தாயின் ஒரே மகளின் கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தான். கிழவி எப்போது கட்டையைக் கீழே போடுவாள் என்று அவன் ஆவலுடன் நாட்களை

எண்ணிக் கொண்டிருந்த சமயம் இரண்டு நாள் ஜுரத்திலே படுத்த அவனது இரண்டாவது மனைவி, எழுந்திருக்கவேயில்லை! "என் பெண்ணே போய் விட்டாள். உனக்கும் எனக்கும் இனி என்ன சம்பந்தம்? நட வெளியில்" என்று அந்த மாமியார்க் கிழவி அவனை வீட்டை விட்டு வெளியே விரட்டி விட்டாள். எந்த நிமிஷமும் சாவு வந்து பற்றிக் கொள்ளும் நிலையில் பழுத்து வாடிக்கிடந்த போதிலும் அந்தப் பாட்டிக்கு வாய் வாய்க்கால் போலிருந்ததனால் கைலாசத்தின் ஜம்பம் ஒன்றும் அவளிடம் பலிக்கவில்லை. வேறு வழியின்றித் தனது இரண்டாவது வேட்டகத்திலிருந்து அவன் புறப்பட்டான்.

இங்குமங்கும் கொஞ்ச நாட்கள் மறுபடி பற்பல வேலைகளில் ஈடுபட்டுப் பார்த்தான் கைலாசம். ஒன்றும் சரியாக நிலைக்கவில்லை. இடையில் அவனது பொருளாதார நிலை பயங்கரமாகிக் கொண்டு வந்தது. என்ன செய்வோம் என்று அவன் கலங்கிக் கொண்டிருந்த சமயம் ஒருநாள் காலைப் பத்திரிகையில் 'மணமகன் தேவை' என்ற கவர்ச்சிகரமான தொரு விளம்பரத்தைக் கண்டான். அதற்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான். உடனே பதிலும் வந்தது. யசோதா தேவி என்ற பெயரைப் படித்ததும், கைலாசத்தின் தலை கிறுகிறுத்தது. தாழம்பூப் போன்ற மேனியும், சுருண்ட கூந்தலும், யௌவனத்தின் அழகெல்லாம் திரண்டு வந்த பூங்கொடியென அவன் மனக்கண் முன் வந்து அந்த வனிதை மிகவும் மயக்கினாள்.

கல்யாணத்திற்குத் தேதி வைக்கச் சென்னையிலிருந்து புறப்பட்டான். வீரசோழன் பட்டணம் வந்து சேர்ந்த பிறகு தான் அவனுக்கு எத்தனைப் பெரிய ஏமாற்றம் காத்திருக்கிறது என்பது புரிந்தது. நெஞ்சு படபடக்க தேகம் வியர்க்க விறுவிறுக்க, ஆவல் தாள முடியாது, 'தேவிபவனம்' என்ற அந்த மாளிகைக்குள் நுழைந்தான். காய்ந்த குச்சி போன்ற மெலிந்த உடலும் பனங்காய் போன்ற சற்றே பெரிய தலையும் உடைய ஒரு பெண்மணி நாற்காலியிலிருந்து எழுந்து வந்தாள். "காப்பி சாப்பிடுகிறீர்களா? வண்டி தாமதமாகி விட்டது போலிருக்கிறது?" என்று அவள் கேட்டபொழுது,



கைலாசத்திற்குக் காதுகளைப் பொத்திக் கொள்ள வேண்டும் போல் மிகவும் கஷ்டமாக இருந்தது. சிமெண்ட் தரைமீது கொஞ்சம் மண்ணைத் தூவிவிட்டு கனமானதொரு தகரப் பெட்டியை அதன் மேல் இழுத்தால் ஏற்படுமே கிரீச்சென்று ஒருவகைச் சப்தம், அதைப் போன்று அபூர்வக் குரல் படைத்திருந்த அந்தப் பெண், மேலே தொடர்ந்து பேசிய போது அவன் உடல் சிலிர்த்துப் போய்விட்டான்.

"தாங்கள் தானே ஸ்ரீமான் கைலாசம்?" என்று கேட்ட அந்தப் பெண்மணி மெல்லச் சிரித்தாள். மேல் உதட்டைத் தாண்டிக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்த இரண்டு நீண்ட பற்களும் அவளது ஒட்டிய தாடைகளில் தப்பித் தவறி ஒட்டிக் கொண்டிருந்த யௌவனத்தின் கொஞ்ச நஞ்ச அழகையும் அடித்து விரட்டிவிட்டன. "இவளா யசோதா தேவி! அட கண்றாவியே!" என்று அதிர்ச்சி அடைந்து போன கைலாசத்தின் தலை இப்பொழுது கவலையில் சுழன்றது.

"பலி பீடத்தில் தலையைக் கொடுத்த பின்பு வாளுக்குப் பயப்பட முடியுமா?" என்ற நிலையில், முடிவில் துணிவாக மணப்பந்தலில் வந்து உட்கார்ந்தான். தைரியத்தை எல்லாம் வரவழைத்துக் கொண்டு, மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு யசோதா தேவிக்குத் திருமாங்கல்யமும் சூட்டிவிட்டான். "வாட்டசாட்டமான மாப்பிள்ளை, எத்தனை அழகாக இருக்கிறான் பார்த்தியா? யசோதா அதிர்ஷ்டக்காரி" என்று திருமணத்திற்கு வந்திருந்த பெண்களில் பலர் உரத்த குரலில் கூறி ஆச்சரியப்பட்டது அவன் காதுகளில் நன்றாக விழுந்தது. அவனுக்கு அந்தப் பேச்சு வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல் கொடுமையாகத் தான் இருந்தது.

**வெ**ளித் தோற்றத்தில் மிகவும் இளவயதுடையவன் போல் தோன்றினாலும் உண்மையில் கைலாசத்திற்கு வயது நாற்பதாகி விட்டிருந்தது. யௌவனத்தின் மிடுக்குக் குறையத் தொடங்கி விட்டதனால் இனி அவனுக்கு முன் போல் புதிய வேலையைத் தேடிக்கொண்டு அலைந்து திரிய மனம் இல்லை. உடலில் வலுவும் இல்லை. வேளைக்கு நல்ல சாப்பாடு, வெளியே

டம்பமாகச் சென்று வரக் கார் வசதி, உடுத்த நல்ல ஆடைகள், வசிக்க வீடு என்று பல சௌகரியங்களும் ஒருங்கே கிடைத்ததனால், அழகற்ற யசோதாவை உதறிவிட்டு ஓடிவிட மனம் இல்லை. கொஞ்ச நாட்களில் ஆரம்பத்தில் இவனுக்கு ஏற்பட்டிருந்த அருவருப்புக் குறையத் தொடங்கியது. 'கல்யாணம் ஆகி விட்டது. இனி மனைவி அழகு எப்படியாவது இருந்து தொலையட்டும்' என்ற மனப்பான்மையில் நாளடைவில் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு விட்டான்.

யசோதாவின் கையிலிருந்த பெட்டிச் சாவியைத் தன் வசப்படுத்திக் கொள்ள ஒருசில மாதங்களாக அவன் எத்தனையோ முயற்சி செய்து விட்டிருந்தான். அவள் காலால் ஏவியதைத் தலையால் செய்து முடித்துப் பார்த்தான். தேனே, மானே, கண்ணே என்று புகழ்ந்து பார்த்தான் - ஊஹூம்! ஒன்றுக்கும் மசியாத கெட்டியான பேர்வழியாக இருந்தாள் அவள். பெட்டிச் சாவியை எடுத்துப் பெட்டியைத் திறந்து அவள் இரண்டு ரூபாய்களை வெளியே எடுப்பதற்குள் கைலாசத்தின் பிராணன் பாதி வெளியே வந்துவிடும் வழக்கமாகி இருந்தது. ஆனாலும் முட்டாள் உலகம் உண்மையை அறியாது, யசோதா கணவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு காசைக் கரியாக்குவதாக எண்ணியது. கைலாசம் ஏமாற்றம் தாள முடியாது பெருமூச்செறிந்தான்.

இவ்வித எண்ணங்களை உள்ளடக்கிய வண்ணம்தான் தாபத்துடன் வேக நடையில் ரயில் நிலையத்தில் உலாவ வந்து கொண்டிருந்தான். அவனது சிந்தனை சிறகை விரித்துப் பறந்து திரிந்து கொண்டிருந்தது.

''உள்ளூரில் விலை போகும் மாடு வெளியூர்ப் பக்கம் ஏன் போகப் போகிறது? சென்னைப் பட்டணத்திலேயே ஒரு வேலை கிடைக்கவில்லை என்றால் ஆசாமி பெரிய அவலட்சண பிம்பமாக இருக்கவேண்டும் அல்லது வேலை தெரியாத மக்குப்பிளாஸ்திரியாக இருந்தாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்'' என்று தனக்குள் எண்ணியபடி, கண்களைத் துழாவிக்கொண்டு நின்றான்.



''யாரிடமும் நீ ஜாக்கிரதையாக இரு. நான் சொன்னதை மறக்காதே'' என்று உபதேசித்துவிட்டு அவசரமாக விடைபெற்றுக் கொண்ட கங்கம்மாள், நிலையத்தில் ஒரு தூண் அருகே பெரும் தூண் போல் நின்று கொண்டிருந்த வாட்டசாட்டமான ஆளைச் சுட்டிக்காட்டினாள். ''அதோபார், அவன்தான் கைலாசம். ஒருசமயம் உன்னை அழைத்துப் போக யசோதா அனுப்பியிருப்பாள். போய் விசாரி'' என்று கூறிவிட்டு மஞ்சுளாவின் முதுகில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டினாள். 'வரட்டுமா' என்று மீண்டும் ஒருமுறை கண்களால் ஜாடை காட்டி விடை பெற்றுக் கொண்டு, தனது சாமான்கள் சகிதம் நிலையத்தைவிட்டு வேகமாக வெளியேறி விட்டாள்.

பெரிய தோல்பெட்டி ஒன்றைச் சிரமத்துடன் தானே சுமந்து கொண்டு, துவண்டு வரும் பூங்கொடியென நடந்து வந்த ஒரு அழகிய இளம் நங்கை, தன் அருகே வந்து நின்றதைக் கண்ட கைலாசம் திடுக்கிட்டுப் போனான்.

''நீங்கள் தானே கைலாசம்?'' என்று மெல்லக் கேட்ட அந்தக் குரல் தேனாகப் பாய்ந்து காதுகளை இனிக்கச் செய்தது. மேனியைச் சிலிர்க்கச் செய்தது.

''நீங்கள் தான் மிஸ் மஞ்சுளா தேவியா?'' என்று கேட்கச் சில விநாடிகள் சென்றன. வார்த்தைகள் தடுமாறின.

''தேவியும் இல்லை, கீவியும் இல்லை. வெறும் மஞ்சுளா தான்'' என்றாள் மஞ்சுளா கன்னம் குழிய.

அது சமயம் ரோஜா இதழ்கள்போல் மென்மையாகக் காணப்பட்ட அவளது அதரங்கள் லேசாகப் பிரிந்தன. வரிசைப் பற்கள் முத்துக்களைப் போல் பிரகாசிப்பதைக் கண்ட அவன் பிரமித்தே போய்விட்டான். ''கடவுளுக்கு ஏன் தான் இத்தனை வஞ்சமோ தெரியவில்லை? யசோதாவுக்கு அளிக்கவேண்டிய அத்தனை அழகையும் அள்ளி இந்த ஏழைப்பெண் மீது வருஷித்து விட்டிருக்கிறாரே! கட்டாயம் ஏழைப் பெண்ணாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த அற்ப உத்தியோகத்தைத் தேடிக் கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு வருவாளா?....'' என்று கொடியாகப் படர்ந்தது

அவனது சிந்தனை.

''ஸ்ரீமதி யசோதா தேவி கூட வந்திருக்கிறார்களா?'' என்று ஏதாவது பேச வேண்டுமென்று அரை மனதாகக் கேட்டு வைத்தாள் மஞ்சுளா. விழுங்கி விடுகிறவன்போல் தன்னை அந்த மனிதன் உறுத்துப் பார்ப்பதைக் கண்ணுற்ற அவளுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

''யசோதாவுக்குத் தலைவலி. அதனால் நானே வந்தேன். சாமான்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு விட்டால் நல்லது; வண்டி நகர ஆரம்பித்து விட்டதே!'' என்றான் கைலாசம் தடுமாற்றத்துடன். ''நான் கொண்டு வந்தது இந்த ஒரு பெட்டிதான். வேறு சாமான்கள் கிடையாது'' என்று மஞ்சுளா பதில் அளித்ததும், கைலாசம் மீண்டும் ஒருமுறை அந்த பெண்ணை ஏற இறங்க உறுத்துப் பார்த்தான்.

''அழகு என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! வேலை செய்யாமல் சும்மா இருந்தால் கூட வீட்டிற்கு ஒரு தனிக் களையேற்பட்டு விடுமே!'' என்று அவனது எண்ணம் அலை பாய்ந்தது.

மஞ்சுளா பதில் பேசாது நிலையத்தை விட்டு வெளியே நடக்கலானாள்.

''அடாடா அந்தப் பெட்டியை இப்படிக் கொடுங்கள்'' என்று கையை நீட்டினான் கைலாசம்.

''பரவாயில்லை. நானே தூக்கிக்கொண்டு வருகிறேன்.'' என்று மஞ்சுளா மறுத்தும் பயன் இல்லை. அவள் மேலே தடுக்குமுன் கையை வலிய நீட்டிப் பெட்டியை அவளிடமிருந்து எடுத்துக் கொண்டான். ''இதோ இப்படி வாருங்கள். இதுதான் வெளியே செல்லும் வழி'' என்று கூறிக்கொண்டு முன்னால் நடந்தான். நிலையத்தில் அவனை அறிந்த இரண்டு உள்ளூர்வாசிகள் அவனையும் அவன் பின்னால் வந்த அழகுப் பிம்பத்தையும் சற்று வியப்போடு மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கவனித்த கைலாசத்திற்குச் சற்றுப் பெருமையாகத்தான் இருந்தது.



யசோதாவுடன் வெளியே புறப்படும் பொழுது தன் அழகிற்கு ஈடற்ற மனைவி என்ற மனக்குறையில் சிலசமயம் அவன் உடல் அவனையுமறியாது கூசிக்கூனிவிடுவது உண்டு. ஆனால் இன்று அவன் தலைநிமிர்ந்து அகங்காரமாக நடந்து சென்றான். அழகானதொரு பெண் தன் பின்னால் நடந்து வருவதே ஒரு தனி மதிப்பாக இருந்தது. அத்துடன் அவன் மனதிற்கும் மிக்க ரம்யமாக இருந்தது.

மஞ்சுளாவின் கையிலிருந்த பிரயாணச் சீட்டை வாங்கி நிலைய அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, ராஜநடை போட்ட வண்ணம் வெளியே வந்தான். காரின்முன் ஆசனத்தின் கதவைத் திறந்துவிட்டு, ''ஏறிக்கொள்ளுங்கள்'' என உபசரித்தான்.

''பரவாயில்லை. நான் பின்னால் உட்கார்ந்து கொள்கிறேன்'' என்று சட்டென்று பதிலளித்த மஞ்சுளா, காரின் பின் கதவைத் தானே திறந்து உள்ளே ஏறி உட்கார்ந்து கொண்டாள். ''ஒரு நிமிஷம், வந்துவிட்டேன்'' என்று உளறிவிட்டு, காரின் பின் பக்கத்தைத் திறந்து பெட்டியை வைத்துப் பூட்டினான். பிறகு வேகமாக வந்து டிரைவர் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்து, வண்டியை ஓட்டத் துவங்கினான்.

## 9

கர், புர் என்று பலவிதமான சப்தத்தை எழுப்பிவிட்ட வண்ணம் ஒரு வண்டிப் புகையைப் பின்புறம் கக்கிக் கொண்டு, அந்த வாகனம் புறப்பட்டது. கௌரிபுரத்திற்கும் புகைவண்டி நிலையத்திற்கும் அதிக தூரம் இருக்கவில்லை. பத்து நிமிஷத்தில் மோட்டார் மூலம் சென்றடைந்து விடும் தூரந்தான். ஆனால் அவ்வளவு சீக்கிரம் வீட்டிற்குப் போக மனமின்றி கைலாசம் ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் பட்டிக்காட்டு ஆசாமியிடம் பட்டணத்து ரிக்ஷாக்காரர்களில் சிலர் கையாளும் முறையைக் கொஞ்சம் கையாண்டான். அந்தச் சிறு நகரத்து

முக்கிய தெருக்களில் குறுக்கும் நெடுக்குமாக அனாவசியமாகப் புகுந்து, நகரை ஒரு முறை வலம் வந்து அரைமணி நேரத்தை ஆனந்தமாக இப்படிப் போக்கிவிட்டு, மெல்ல நானாவித சப்த ஜாலங்களுடன் அந்த ஓட்டைக் காரைத் தாங்கள் வசித்த வீட்டின் முன் கொண்டு வந்து நிறுத்தினான். ''தேவி பவனம்'' என்ற பெயர் பொறித்திருந்த பித்தளைத் தகட்டைக் கண்ணுற்றதும் மஞ்சுளா சுற்றுமுற்றும் விழிகளைச் சுழற்றிப் பார்த்தாள். பெயர் என்னவோ பிரமாதமாகத் தான் இருந்தது. ஆனால் உண்மையில் அதற்குப் 'பாழடைந்த பங்களா' அல்லது 'இடிந்த மாளிகை' என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் போல் அத்தனைக் கேவலமான நிலையில் காணப்பட்டது.

பாதி இடிந்து, காரையெல்லாம் உதிர்ந்து, செங்கற்களை விகாரமாக வெளிப்படுத்திக் கொண்டு நின்ற மதில் சுவரின் வாயிற்புறத்தை மூடிக்கொண்டு நின்ற, ஹைதர் காலத்து கம்பிக் கதவுகளைக் கைலாசம் மெல்லத் தள்ளித் திறந்தான். துருப்பிடித்த அந்தக் கதவுகள், கிரீச்சென்று ஓலமிட்டு அலறின. மஞ்சுளா ஏமாற்றத்துடன் உள்ளே நோக்கினாள். கைலாசம் ஒரே பாய்ச்சலாக வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு வேகமாக அதை நடைபாதையின் மீது செலுத்தினான். தார் மெழுகிப் பல வருஷங்கள் சென்று விட்டதனால் பாதை குண்டுங்குழியுமாக இருந்தது. ஏற்கெனவே வழவழப்பான தார் ரோட்டில் குதித்துக் கூத்தாடி அட்டகாசம் செய்த அந்த மோட்டார், நடைபாதை மீது வேகமாக நடனம் செய்துகொண்டு தாவி தாவி ஓடியது.

பாதையின் மீது இருமருங்கிலும் ஒரு காலத்தில் அழகாக வெட்டி விடப்பட்டிருந்த புல்தரை கவனிப்பாரற்றுக் காடுகளாக வளர்ந்து நிற்பதையும், அதனிடையே ஆங்காங்கே காய்ந்துபோன மல்லிகைச் செடிகளும் ரோஜாக் குச்சிகளும் பரிதாபகரமாக எட்டிப் பார்ப்பதையும் கண்ணுற்றாள். திடீரென்று ஒரு பெரும் குலுக்கலுடன் கார் நின்றது. பின் ஆசனத்திலிருந்த மஞ்சுளா, அந்த வேகத்தில் முன் ஆசனத்தின் மீது வந்து பலமாக மோதிக்கொண்டு விட்டாள். நல்ல வேளையாக சமாளித்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''வீட்டுக்கு வந்துவிட்டோம். இறங்கலாமே!'' என்று



உற்சாகத்துடன் காரின் கதவைத் திறந்து விட்டான் கைலாசம். காடும் மேடுமாக இருந்த தோட்டத்துடன் போட்டியிடுவது போலிருந்தது வீட்டின் முன் பக்கத்தின் அழகு. பாளம் பாளமாகக் காரை உதிர்ந்து அலங்கோலமாகத் தென்பட்ட சுற்றுச்சுவர்களையும், மாலைகளாகத் தொங்கிய ஒட்டடையையும் அவள் கவனிப்பதை உணர்ந்த கைலாசம், அதற்காக மன்னிப்புக் கோரும் பாவனையில், ''நானும் யசோதாவும் இந்த பழைய வீட்டை விற்று விட்டு, புதிய பங்களா ஒன்று வாங்கிவிட முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் இதை பழுதுபார்க்கக் கூட இஷ்டமின்றி விட்டு வைத்திருக்கிறோம்'' என்று விஸ்தரித்துவிட்டு, காரின் பின்புறத்திலிருந்த, மஞ்சுளாவின் தோல் பெட்டியை எடுத்தான்.

அது சமயம் மூடியிருந்த வாயிற்கதவு மெல்லத் திறக்கப் பட்டது. கனமானதொரு பெட்டியை முகம் சிவக்க, மூச்சுத்திணற, சுமந்துகொண்டு, முன்னால் வந்த தன் கணவனையும், வாசற்படிகள் மீது மெல்ல ஏறிப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த வனிதையையும் யசோதா உற்றுப் பார்த்தாள். பொறாமையுடன் கணவன் பக்கம் வேகமாகத் திரும்பினாள். ''அந்த பெண்ணின் பெட்டியை தூக்கி வரக் கைலாசம் கூலி ஆளா, என்ன? அதுவும் தன்னிடம் வேலை செய்யப்போகும் அந்த வேலைக்காரப் பெண்ணின் பெட்டியையா போய் தூக்குவது? கொஞ்சமாவது இந்த மனிதருக்கு மரியாதை தெரிகிறதா?'' எனத் தனக்குள் வெகுண்ட யசோதாவினால் கோபத்தை அடக்க முடியவில்லை.

''அதைக் கீழே வையுங்கள் அப்படி! பழக்கமில்லாத காரியங்களைச் செய்வது, பிறகு கைவலிக்கிறது, கால் வலிக்கிறது என்று என் பிராணனை எடுக்கிறது. நன்றாகத்தான் இருக்கிறது உங்கள் காரியம்!'' என்று அதட்டினாள்.

''இல்லை யசோதா! வந்து... வந்து'' என்று குழறினான் கைலாசம். அவனது கரங்கள் தானே பெட்டியைத் தரைமீது வைத்து விட்டன. யசோதா என்ற பெயரைக் கேட்டதும் தனது வருங்கால எஜமானியை ஆவலுடன், நிமிர்ந்து பார்த்தாள்

மஞ்சுளா. அலங்கிய ஆடையும், கலைந்த கூந்தலும், பத்து நாட்களாக ஜுரமாகப் படுக்கையில் கிடந்தவள் போன்ற மெலிந்த தோற்றமும் கொண்டு எதிரே நின்ற அம்மாளையும், வாட்ட சாட்டமான ஆணழகன் கைலாசத்தையும் தம்பதிகளாக வைத்து தன் கற்பனைக் கண்களால் கூடச்சேர்த்துப் பார்க்க முடியவில்லை. 'சே! அப்படி நினைக்கக் கூடாது. அழகில்லாவிடில் சிலரிடம் குணம் இருக்கும். குணம் மனத்தின் அழகாயிற்றே! சரீர அழகைவிட மேம்பட்ட தாயிற்றே! என்று தனக்குள் எண்ணி 'நமஸ்காரம்!' எனக் கைகுவித்து வணங்கினாள். மின்னல்போல் அவள் முகத்தில் அரும்பி மறைந்த புன்னகை அவளது முக சோபையைப் பன்மடங்காக எடுத்துக்காட்டியதைக் கண்ணுற்ற யசோதாவுக்கு இன்னும் கொஞ்சம் கூட பொறாமை ஏற்பட்டது. 'இத்தனை அழகான பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டால் பெரிய ஆபத்தாயிற்றே!' என்று எடுத்த எடுப்பில் ஒரு பெரும் கவலை கூடவே ஏற்பட்டு விட்டது.

''வாம்மா உள்ளே. பெட்டியை நீயே தூக்கிக்கொண்டு வந்துவிடு. தற்சமயம் வீட்டில் வேலையாட்கள் யாரும் இல்லை'' என்று அழுத்தலாக உத்தரவிட்ட யசோதா, யஜமானி என்கிற ஹோதாவில் மிடுக்கு நடையில் வேகமாக உள்ளே திரும்பிச் சென்றாள்.

''அதனால் என்ன! நானே தூக்கிக்கொண்டு வருகிறேன்'' என்று பணிவாகப் பதிலளித்தாள் மஞ்சுளா. வாயில் வராந்தா மீது கைலாசம் வைத்துவிட்டுப் போன தனது பெட்டியைத் தானே தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

காற்றோட்டமில்லாத இருண்ட சிறு ரேழியைத் தாண்டி காட்டு மிருகத்தின் கூண்டுபோல் மேலே மட்டும் சிறு ஜன்னல்கள் கொண்ட எடுத்துக்கட்டிய பெரிய கூடத்திற்குள் பிரவேசித்தாள். வெளிப்பாகத்தை விட வீட்டின் உள் பாகம் மிகவும் கேவலமாக இருந்தது. உச்சியிலிருந்து தொங்கிய ஒட்டடை மாலைகளும், தரைமீது படிந்திருந்த தூசியும், அந்த வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்திப் பல நாட்கள் ஆகிவிட்டன என உணர்த்தியது. மிகவும் நைந்து தொங்கிய கட்டில்



ஒன்றின்மீது யசோதா உட்கார்ந்திருந்தாள். ''இப்படி வாம்மா'' என்று சற்று அதிகாரமாகக் கையைத் தட்டி அழைத்தாள்.

பெட்டியைக் கீழே வைத்தாள் மஞ்சுளா. வேலைக்கு அலைந்து பாடுபட்டு நொந்து போயிருந்ததனால், கைக்குக் கிடைத்த அந்த உத்தியோகத்தை எக்காரணம் கொண்டும் உதறிவிட மனம் இல்லை. 'யஜமானியின் ரூபம் எப்படியிருந்தால் என்ன? வீடு எவ்வளவு அலங்கோலமாக இருந்தால் என்ன? நமக்கு வேண்டியது வேலைதானே? என்று எண்ணிக்கொண்டு மிகவும் பணிவாக அருகில் சென்று நின்றாள்.

அவளை உட்காரச் சொல்லி யசோதா உபசரிக்கவில்லை. யஜமானி என்ற அகங்காரத்துடன் தலையை நிமிர்த்திக் கொண்டு, ''அம்மா மஞ்சுளா! நான் கண்டிப்பான பேர்வழி. வழவழ கொழ கொழ என்று இழுத்துப் பிடிக்கும் வழக்கம் என்னிடமில்லை. அதனால் பின்னால் மனஸ்தாபம் ஏதும் இல்லாமலிருக்க, முதலிலேயே உன் வேலைகளைப் பற்றி உனக்கு எடுத்துச் சொல்லி விடுகிறேன். நாங்கள் விளம்பரப்படுத்தின மிளகாய்ப்பொடி கம்பெனியை இன்னும் ஆரம்பிக்கவில்லை'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

அதைக் கேட்டதும் மஞ்சுளா நிர்ஜீவனாகி விட்டாள். ''அப்படியானால் இப்போது வேலை இல்லை என்கிறீர்கள்? அதுதானே சொல்ல வந்தீர்கள்?'' என்று பதட்டமாகப் பெரும் திகிலுடன் கேட்டாள்.

அந்தப் பெண்ணிற்கு எந்தவிதமான ஒரு உத்தியோகமும் மொத்த அவசியமானது என்பதைக் குறிப்பாகப் புரிந்து கொண்ட யசோதா ''யார் அப்படிச் சொன்னது? எங்கள் கம்பெனியை ஆரம்பிக்கக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். அதுவரை நீ இங்கே எனக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்து கொண்டு எனது அந்தரங்கக் காரியதரிசினியாக இரு. இந்த ஆறு மாதங்களில் உன் குணம், உன் வேலைத் திறமை, உன் நடத்தை இவைகள் எனக்குத் தெரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதுபோல உனக்கும் என்னைப்பற்றி அறிய இடம் அதிகம் உண்டாகும்.

பரஸ்பரம் பிடித்திருந்தால் நீ நிரந்தரக் குமாஸ்தாவாக எங்கள் ஸ்தாபனத்தில் சேர்ந்துவிடலாம். இந்த ஆறு மாதமும் நீ விளம்பரத்தில் கண்டதுபோல், மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளமும் தங்க இடமும் உணவும் அளிக்கத் தீர்மானித்திருக்கிறேன்'' என்றாள் கம்பீரமாக.

இதைக் கேட்டதும் சஞ்சலத்தில் தவித்த மஞ்சுளா அமைதியடைந்தாள். கௌரவமாக ஏதாவது ஒரு வேலை கிடைத்தால் சரி. அதுவே போதும் என்ற திருப்தியினால் ''மெத்த வந்தனம்'' என்று நன்றியுடன் கை குவித்தாள்.

இடுப்பிலிருந்த ஒரு பெரிய சாவிக் கொத்தை உருவினாள் யசோதா. அதிலிருந்து துருப்பிடித்துப் போன, ஒரு, பெரிய சாவியைக் கழற்றி, மஞ்சுளாவிடம் நீட்டினாள். ''பின்கட்டின் முன்னால் இருக்கும் அறையை நீ வசிக்குமிடமாக உபயோகித்துக் கொள்ளலாம். கொஞ்ச நாட்களாகப் பூட்டிக் கிடந்ததனால் ஒரு சமயம் உடனே அதை நீ சுத்தப்படுத்த வேண்டியிருக்கும். அதற்கு முன்னால் தினசரி நீ எனக்குச் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சொல்லி விடுகிறேன். கேட்டுக்கொள். எனக்குக் கொஞ்சம் இருதய பலவீனம் உண்டு. டாக்டர் மிகவும் ஓய்வாக இருக்கச் சொல்லியிருக்கிறார். அதனால் தினசரி சமையலை நீ கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டும்....'' என்று அவள் பேசி முடிக்கு முன் திடுக்கிட்டுப் போன மஞ்சுளா, தலையை நிமிர்த்தி யஜமானியைப் பார்த்தாள். அந்தப் பெண்ணின் அதிர்ச்சியைப் புரிந்து கொண்டவள் போல் யசோதா உடனடியாகத் தாழ்ந்த குரலில், ''சமையல் வேலை என்றதும் பெரிய சமாராதனைக்கு சமைக்க வேண்டுமே என்று கவலைப்பட்டு விடாதே! நாங்கள் ரெண்டே பேர் தான். எங்கள் வீட்டு வேலை அப்படி ரொம்பக் கடினமானதும் அல்ல. வீட்டைப் பெருக்கி சுத்தமாக்கி விட்டுச் சாதம் வடிக்க, ரஸம் வைத்துவிட்டால் கூடப்போதும். காலை பத்து மணிக்கு சாப்பிட்டு விடும் பழக்கமுடையவர்கள் நாங்கள். பகல் ஒரு மணிக்கு ஏதோ ஒரு எளிய சிற்றுண்டி தயார் செய்து, காப்பி போட்டுக் கொடுத்து விட்டால் எங்களுக்கு ஏதேஷ்டம்! ராத்திரி சாப்பாடு எட்டு மணிக்குள் தயாராகி



விட்டால் நாங்கள் சாப்பிட்டு விட்டு உடனே படுக்கைக்குப் போய்விடுவோம். இரவு அதிகநேரம் கண்விழித்தால் எனக்கு உடம்பிற்கு ஆவதில்லை. இதைத் தவிர இடையே ஒழிந்தபொழுது என் கடிதங்களை நீ 'டைப்' செய்து விடு. அவ்வளவுதான்!'' என்றாள்.

மஞ்சுளா பதில் ஒன்றும் சொல்லவில்லை. சாவியை வாங்கிக் கொண்டு பின்கட்டிற்குச் சென்றாள். பல மாதங்களாகப் பூட்டிக் கிடந்த அறையாதலால் அதைத் திறந்தவுடன் சில வௌவால்கள் படபடவென்று இறக்கையை அடித்துக் கொண்டு பறந்தோடி வந்து அவள் மேல் பாய்ந்தன. அவைகள் வசித்ததனால் ஏற்பட்ட துர்கந்தம் வயிற்றைக் குமட்டவே, காற்றும் சூரிய வெளிச்சமும் சற்று உள்ளே வரட்டும் என்று ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டாள். மேலே ஒட்டடை, கீழே முழங்கால் வரை தூசி, ஒடிந்த ஜன்னல்கள், துருப்பிடித்த கதவுத் தாழ்ப்பாள் என்று அலங்கோல நிலையில் காணப்பட்ட அறையை வெறுப்போடு சுற்றிப் பார்த்தாள்.

மூலையில் ஒரு பழைய கட்டிலும் அதன் மீது ஒரு கிழிந்த மெத்தையும் கிடந்தது. அறையின் நடுவில் கிடந்த ஒரு பழைய நாற்காலி மீது மெல்ல நிதானமாக உட்கார்ந்தாள். கால்கள் சற்று ஏற்றத்தாழ்வாக இருந்ததனால் கொஞ்சம் இப்படியும் அப்படியும் ஆடியதைத் தவிர, நாற்காலி அவள் எதிர்பார்த்தது போல் உடைந்து நொறுங்கி விழுந்து விட வில்லை. நெற்றி மீது ஆறாக வழிந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். எத்தனை சிரமப்பட்டும் தாங்கமுடியாது பெரும் துக்கம் அவள் நெஞ்சைப் பலமாக அமுக்கியது. பேனா பிடிக்கும் உத்தியோகத்திற்கு பதில் கரண்டி பிடிக்கும் வேலை வாய்த்ததை எண்ணிய மாத்திரத்தில் அவமானத்தினால் அவளது உடல் அணு அணுவாகத் துடித்தது. ''மனமே! பொறுமையாக இரு. எத்தனை கஷ்டம் வந்தபோதிலும் பொறுமை வேண்டும். மறவாதே!'' என்று துக்கத்துடன் அவள் வாய் முணுமுணுத்ததே தவிர கண்களிலிருந்து கட்டுப்படுத்த இயலாத கண்ணீர் வெள்ளம் கன்னங்கள் மீது வழிந்து ஓடியது.

பி.ஏ. வரை படித்திருந்தாள். அழகாயிருந்தாள்.

அடக்கமாகவும் இருந்தாள். இவ்வளவு குணமிருந்தும் சமையற்காரி உத்தியோகந்தான் கிடைக்க வேண்டுமா? ஒரு நல்ல வேலை கிடைக்கக் கூடாதா? எங்கு போனாலும் துன்பம் நிழல்போல் அவளை ஏன் பின்பற்ற வேண்டும்? இதை நினைத்ததும் மஞ்சுளா விம்மி விம்மி அழுதாள்.

## 10

மார்கழி மாத ஊதல் காற்று ஜன்னல் வழியாகச் ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. போர்வையை இழுத்து மூடிக்கொண்டு இன்னும் சற்றுத் தூங்க வேண்டுமென்று ஆசைதான் மஞ்சுளாவுக்கு. ஆனால் கட்டடக் கோளாறினால் தரையில், சதா கசிந்து கொண்டிருந்த ஈரம் ஜமக்காளத்தையும் தாண்டி வந்து அவளது முதுகைப் பிளக்கத் தொடங்கவே, உறங்க முடியாது எழுந்து உட்கார்ந்தாள். அவள் அங்கு வேலை ஆரம்பித்து ஒரு மாத காலம் ஓடி விட்டிருந்தது. எஜமானியம்மாள் தாராளமாகப் படுக்கை மெத்தை, போர்வைகள் என்று சகல விதமான சௌகரியங்கள் செய்து கொடுத்திருந்தாள். ஆனால் முதல் நாள் இரவு அனுபவத்திற்குப் பிறகு அந்த கட்டிலை விட ஜலம் கசியும் தரையே மேல் என்ற முடிவுக்கு வந்திருந்தாள் அவள்.

வீட்டு வேலைகள் செய்த அலுப்பும் மனச்சோர்வும் சேர்ந்து கொண்டதனால் முதல் நாள் இரவு, அஸ்தமிக்கு முன்பே மஞ்சுளாவுக்குத் தாங்க முடியாத தூக்கம் வந்து விட்டது. யசோதாவும், கைலாசமும் சாப்பிட்டு முடித்ததும் அவசர அவசரமாக சமையலறையை சுத்தப்படுத்தி விட்டு சாப்பிடக் கூட மனமில்லால் தன் அறைக்கு விரைந்தாள். அவசரமாகக் கம்பிக் கட்டிலின் மீது கிடந்த மெத்தையைத் தட்டிப் போட்டு விட்டு ஜமக்காளத்தை அதன் மீது விரித்துப் படுத்துக் கொண்டாள். அவ்வளவுதான். கொத்தாகக் கொளுத்திப்



போட்ட சீன வெடிக்கட்டைப் போல படபடவென்ற சப்தத்துடன் கட்டிலின் இரும்புக் கம்பிப் பிணைப்புகள் ஒடியத் தொடங்கின.

மஞ்சுளா பயந்து கொண்டு எழுந்திருக்க முயற்சித்த போது ஒவ்வொரு கம்பியும் ஒவ்வொரு சட்டியாக மாறி அவளது மென்மையான உடலைப் பதம் பார்க்க ஆரம்பித்தன. வேதனை தாள முடியாது மிக்க சிரமத்துடன் தொய்ந்து போன கட்டிலினின்று வெளியே குதித்தாள்.

''கட்டில் வேண்டாம். மெத்தை வேண்டாம். இந்தத் தரையே போதும்'' என்று எண்ணிக் கொண்டு தரைமீது தனது ஜமக்காளத்தை விரித்துக் கொண்டாள். அதற்குப் பிறகு மறந்துகூட மஞ்சுளா அந்தக் கட்டிலின் மீது போய் உட்கார்ந்ததில்லை. ஆனால் அந்த வீட்டில் தரையில் கூட நிம்மதியாக நீண்ட நேரம் அவளால் தூங்க முடியவில்லை. இரவின் முற்பகுதியில் உடல் அலுப்பினால் நிதானம் தெரியாது அயர்ந்து உறங்கி விட்டபோதிலும், இரவின் பிற்பகுதி முழுவதும் அவள் உறக்கமின்றிச் சங்கடப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது. ஊற்றுப்போல் தரையில் அடியிலிருந்து கசிந்த ஈரம் தேளாகக் கொட்டுமாதலால், அடிக்கடி எழுந்து எழுந்து உட்கார்ந்து பொழுதைக் கழிக்க அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். ''என்னால் இந்த அறையில் தூங்க முடியவில்லை. வேறு ஒரு அறை கொடுங்கள்'' என்று எஜமானியிடம் குறை கூறிச் சலுகை பெறலாம் என்றாலோ, மஞ்சுளாவுக்கு மிகவும் பயமாக இருந்தது. ''தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்து பார்க்கிறாயோ? ஏதோ தர்மத்திற்கு இனாமாக வசிக்க இடம் கொடுத்தால் ஆயிரம் குற்றம் குறை சொல்கிறாயே?'' என்று அதட்டி விட்டால்.... என்ற எண்ணத்தில் மௌனமாகத் தன் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டிருந்தாள்.

போர்வையைத் தலையிலிருந்து உடல் முழுவதும் நன்றாக மூடிக்கொண்டு படுக்கை மீது எழுந்து உட்கார்ந்தாள். ஜன்னல் வழியாகத் தெரிந்த முற்றத்தில் இருள் மண்டிக் கிடந்தது. விடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறதென்பதை

அவளால் ஊசிக்க முடியவில்லை. முதல்நாள் முழுவதும் காலில் சக்கரம் கட்டிக் கொண்டது போல் ஓர் இடத்திலும் நிற்காமல் ஓடி வேலை செய்து அவள் ஓய்ந்து போயிருந்தாள். அந்த அலுப்பு இன்னும் உடலை விட்டபாடில்லை.

அன்றாடம் சாம்பாரில் அவள் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்த மிளகாய்ப் பொடியைத் தவிர, யசோதா ஆரம்பிக்கப் போவதாகச் சொன்ன மிளகாய்ப்பொடிக் கம்பெனியைப் பற்றி எந்தவிதமான பேச்சும் அந்த வீட்டில் எழவேயில்லை. கங்கம்மாள் கூறியபடி, அந்த விசித்திர தம்பதிகள் ஆரம்பிக்கவிருந்த எண்ணற்ற தொழில்களில் இதுவும் ஒன்றா? காலம் முழுவதும் அந்த வீட்டில் சமையற்காரியாகவே அவள் வாழ்க்கையை நடத்த வேண்டி வந்து விடுமோ? எங்கு சென்றாலும் நிம்மதியில்லாத பிழைப்புத்தானா அவளுக்குக் கிட்ட வேண்டும்? இவ்வாறு பலபல எண்ணியவாறு மஞ்சுளா சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

யசோதா ஆரம்பத்தில் என்னவோ அந்த வீட்டில் சமையல் உத்தியோகத்தை மிகவும் எளிதான காரியம்போல் சித்திரித்து விட்டிருந்தாள். ஆனால் அனுபவத்தில் ஒரு கல்யாணத்திற்குக் கூட எளிதாகச் சமைத்து விடலாம். அந்த இரண்டு ஆசாமிகளுக்கும் திருப்தியாக உண்ண பாகம் செய்து போடுவது மிகவும் கடினம் என்பதை மஞ்சுளா புரிந்து கொண்டு விட்டிருந்தாள். காலையில் சூரியன் உதயமாகுமுன் அவள் எழுந்திருக்க வேண்டும். வீடு முழுவதும் பெருக்கிச் சுத்தப்படுத்தி விட்டு ஸ்நானம் செய்து வேறு ஆடை உடுத்திக் கொண்டு சமையலறைக்குள் நுழைய வேண்டும்.

ஸ்ரீமான் கைலாசத்திற்கு உத்தியோகம் ஏதும் இல்லை என்றாலும் வீண் ஆடம்பரங்களுக்கு ஒன்றும் குறைவில்லாமலிருந்தது. தனது படுக்கையிலே படுத்தபடி பல்துலக்காது 'பெட்காப்பி' சாப்பிடும் நாகரிகப் பழக்கமுடையவன். கல்யாணமானதும் யசோதாவிடம் அந்த நாகரிகம் வந்து தொத்திக் கொண்டுவிட்டது. எனவே இந்த



விநோத தம்பதிகளுக்கு சூடான காப்பியும் பிஸ்கோத்துகளும் ஒரு அழகான மரத்தட்டிலே வைத்து வெள்ளைத் துண்டினால் மூடி எடுத்துச் சென்று படுக்கை அறையின் வாயிலில் வைத்து விட்டுக் கதவைத் தட்டி ஞாபகப்படுத்தி விட்டுச்செல்ல வேண்டிய பொறுப்பு அவளுக்கு ஏற்பட்டிருந்தது. மேலும் யஜமானியின் கணவன் ஒரு பெரிய சாப்பாட்டு ராமனாகவும் இருந்தான்.

காலைவேளையில் 'டென்னிஸ் விளையாடிவிட்டு வீட்டிற்கு வரும்பொழுது, பத்து நாட்கள் பசியாக வாடிக்கிடந்த மிருகேந்திரன் போல் சமையலறையின் முன்னிருந்த பெரிய கூடத்தில் ஆத்திரமாக வட்டமிடும் வழக்கம் கொண்டிருந்தான். தோட்டத்திலே கணவன் தலையைக் கண்டதும் ''இலையைப்போடு சீக்கிரம்!''என்று யசோதா ஆயிரம் முறை எச்சரித்து விடுவாள். சாப்பாட்டிலே ரஸிக சிகாமணியான கைலாசத்திற்கு வெறும் ரஸமும், சாதமும் தொண்டையில் இறங்க மறுத்தன. கறி, கூட்டு, பச்சடி, வத்தல், வடகம் என்று பக்க பதார்த்தங்கள் பலமாக இருக்கவேண்டும். இல்லாவிடில் அன்று முழுவதும் முணுமுணுத்துத் தள்ளி விடுவான்.

காலை போஜனம் முடிந்ததும் காரை எடுத்துக்கொண்டு கடைத் தெருவரை சென்று ஒருமுறை சுற்றி விட்டு, மணி ஒன்று ஆகுமுன் ஓடோடி வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவான் அவன். யானைத் தீ வியாதியில் அவஸ்தைப் படுகிறவன் போல் மஞ்சுளா பகல் டிபன் வகைகளை மேஜைமீது கொண்டு வந்து வைக்குமுன் சமையலறைக்குள் பல தடவைகள் எட்டிப் பார்த்து எரிச்சலை உண்டாக்குவான். டிபன் கடை முடிந்ததும் இரவு சமையலைப் பற்றி யோசிக்க வேண்டும். பகல் சாப்பிட்டதில் மீதமிருந்ததை வேலைக்காரி சாப்பிடவேண்டுமே ஒழிய யஜமானர்களுக்கு எல்லாம் மறுபடி புதிதாகச் சமைக்க வேண்டும்.

சமையல் உத்தியோகத்திற்கு இடையே ஒழிந்த நேரத்தில் யசோதாவின் புடவைகளைத் துவைத்து இஸ்திரி போட்டு அவள் வெளியே செல்வதற்கு எல்லாவற்றையும் தயாராக எடுத்து வைக்க வேண்டும். கடைக்குப் போய் வரவேண்டும்.

சாமான்களை வாங்கி, தூக்கிக் கொண்டு ஓடிவரவேண்டும். கூப்பிட்ட குரலுக்கு வந்து உதவி செய்ய வேண்டும். கடைசியாக இரவு படுக்கைக்குப் போகுமுன் யசோதாவும் கைலாசமும் கொடுக்கும் கடிதங்களை 'டைப்' செய்துவிட்டு தூங்க வேண்டும்!

யஜமானி கொடுப்பதாக வாக்களித்த எழுபத்தைந்து ரூபாய் ஒவ்வொன்றிற்கும் சக்கையாகப் பிழிந்து அந்தப் பெண்ணிடம் வேலை வாங்கினாள். ஆனால் பாவம் மஞ்சுளாவுக்கு இந்த நிலையில் தான் எவ்வளவு நாள் நீடித்து வேலை செய்ய முடியும் என்று கலக்கமாக இருந்தது. தான் கற்பனையில் தீட்டி மகிழ்ந்த உத்தியோகத்தையும் இப்போது உண்மையில் கிடைத்த வேலையையும் எண்ணி எண்ணி ஏங்கிப் போனாள். தன் மனக் குறைகளையும், கஷ்டங்களையும் யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாது துன்பப்பட்டாள். அப்படி சொன்னாலும் கேட்பவர்கள் நகைப்பார்கள் என்ற அச்சம்கூட அவளுக்கு இருந்தது. பி.ஏ. வரை படித்த பெண், வேலை தேடி அலுத்து வெளியூர் வந்து ஒரு வீட்டில் சமையல்காரியாக உத்தியோகம் செய்கிறாள் என்றால் ஒரு சிலர் நம்பக்கூட மாட்டார்கள். ஆனால் கதைகளை விட விசித்திரமானதாயிற்றே உண்மை!

புத்தியை உபயோகிக்கும் வேலைதான் கிடைக்க வில்லை. போகட்டும். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உடல் உழைத்து மானத்தோடு வாழ்வாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று ஓரளவுக்குத் திருப்தியடைந்திருந்தாள் மஞ்சுளா. ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அங்கே அவளால் சகிக்க முடியவில்லை. தங்கள் வீட்டில் வேலை செய்யும் அந்தப் பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாதவன் போல் தன் மனைவி எதிரில் அலட்சியமாக நடந்துகொண்ட கைலாசம், வீட்டில் யசோதா இல்லாத போது மஞ்சுளாவை வெறித்துப் பார்த்தான். அனாவசியமாக குறுக்கும் நெடுக்குமாக அவள் வேலை செய்யுமிடத்தில் நடமாடினான். வலுவில் தானே வந்து சம்பந்தமில்லாதது ஏதேதோ தொண தொணவென்று பேசினான். விஷமச் சிரிப்பு சிரித்தான். அசட்டுப்



புன்னகைகளை அள்ளி வீசினான். எஜமானி இல்லாத சமயம் சமையல் அறை அருகே பாதரட்சை ஓசை கேட்டால் கூடப் போதும் பயத்தில் மஞ்சுளாவின் மென்மை உடல் பதறிப்போகும். ''ஏன் இங்கே சும்மா வருகிறீர்கள்? என்னை அப்படி முறைத்துப் பார்க்கத் தேவையில்லை' போய் உம்வேலையைக் கவனியுங்கள்'' என்று ஒரு அதட்டல் போட வேண்டுமென்று ஆத்திரத்தில் அவள் உள்ளம் குமுறும். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை கைலாசம் தன்னை ஊடுருவி உற்றுப் பார்ப்பதை உணர்ந்தபோதெல்லாம் அவள் உடல் அவமானத்தால் துடித்தது.

ஆனால் யஜமான் அல்லவா? அதனால் அதட்டிப் பேச வாய் இருக்கவில்லை. யசோதாவிடம் சொல்லலாம் என்றாலோ அதற்கும் வழி இல்லை. கணவன் மேல் அவள் கொண்டிருந்த கட்டுக்கடங்காத காதலில் காதடைத்துப் போயிருந்தாள். வேலைக்காரப் பெண்ணின் பேச்சு எங்கே கேட்கப் போகிறது? எஜமானி நம்பாது கடுங்கோபம் கொண்டால் மறுபடி வேலையைத் தேடிக் கொண்டு தெருத்தெருவாகப் பட்டினியாக அல்லவா திரியவேண்டி வந்துவிடும்? இந்த மாதிரியான தர்ம சங்கடமான நிலையில் அவள் எவ்வளவு காலம் அந்த உத்தியோகத்தில் இருக்க முடியும்?

மஞ்சுளா யோசித்தாள். எப்படி நினைத்துப் பார்த்தாலும் கைலாசம் பிரச்னைக்கு ஒரு வழி தோன்றவில்லை. மூளை குழம்பிவிடும் போல் கொதித்தது. உள்ளம் சஞ்சலத்தில் தவித்தது. 'தூங்குவதற்கு இனி அவகாசம் இருக்காது. வீணாக உட்கார்ந்திருப்பானேன்? எழுந்து வேலை செய்தாலும் பிரயோசனம் உண்டு' என்று எண்ணிக் கொண்டு எழுந்திருந்தாள். உடல் அசதியை உதறிவிட விரும்புகிறவள் போல் கையை உதறி நெட்டி முறித்துக் கொண்டு மின்சார விளக்கைப் போடச் சுவர் அருகே சென்றாள். அதுசமயம் விடியற்காலை வேளையின் நிசப்தத்தை ஊடுருவிக் கொண்டு பேச்சுக் குரல் கணீரென்று கேட்டது. நிதானித்து கவனித்ததில் கைலாசமும் யசோதாவும் உரத்த குரலில் சண்டைப் போட்டுக்

கொள்கிறார்கள் என விளங்கியது.

விளக்கை ஏற்றப் பயந்துகொண்டு சுவரின்மேல் சாய்ந்தபடி நின்றுவிட்டாள் மஞ்சுளா. சிறு பிராயத்திலிருந்து தாத்தா ரகுபதி ஒருவருடன் மட்டும் தனிமையாக வளர்ந்தவள் அவள். தம்பதிகளின் பூசல் என்பதை அவள் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. தாம்பத்திய வாழ்வு என்பது என்றும் குளிர்ந்த நிலவொளி வீசும் இன்பப் பூங்கா என்றுதான் அந்தப் பேதைப்பெண் இதுவரை கற்பனையில் எண்ணிக் கொண்டிருந்தாள். 'சண்ட மாருதம் வீசி இடி இடித்து பெருமழையும் அங்கே பொழியக்கூடும். புயல் வீசும். இன்பக் கனவுகள் சிதறிப் போகும். பூகம்பங்கள் எழும். ஆசையோடு கட்டிய ஆனந்தக் கோட்டைகள் உடைந்துவிடும்' என்றெல்லாம் அவள் ஒருநாளும் எண்ணிப் பார்த்ததில்லை.

எவ்விதக் காரணமுமின்றி அவள் உடல் பயத்தால் கிடு கிடுவென்று நடுங்கியது.

''முகம்தான் அவலட்சணம் என்றால், குரல்கூடக் கோட்டான்போல் பயங்கரமாக இருக்கிறது'' என்று கத்தினான் கைலாசம்.

மஞ்சுளாவினால் காதுகளை நம்ப முடியவில்லை. ஆனால் அதற்குமேல் யசோதா கொடுத்த பதில் அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

''வாயைமூடும்! உம் யோக்கியதையை இந்த ஊரே தெரிந்து கொண்டிருக்கிறது. ஆள் அழகன் துப்பட்டிக்காரன் என்று இருக்கிறீர்கள். சோற்றுக்கு விதியற்றுத் தானே என்னைக் கல்யாணம் செய்து கொண்டீர்கள்; காலணா சம்பாதிக்க வழியில்லை. வாயைப் பார் வாயை! நீங்களும் ஒரு ஆண் பிள்ளை! வெட்கம்?'' என்று சீறினாள் மனைவி.

''அப்படியா? உன் ஓட்டை வீட்டையும் ஒடிந்த காரையும் நீயே கட்டிக்கொண்டு அழு. நான் இதோ புறப்பட்டுப் போகிறேன்'' என்று கர்ஜித்தான் கைலாசம். நாற்காலி நகருகிற ஓசையும் - யாரோ வேகமாக நடக்கும் சப்தமும் தொடர்ந்து கேட்டது.



''ஓட்டை, வீடாவது எனக்கு ஒன்று சொந்தமான பொருளாக இருக்கிறது. அதற்குக்கூட விதியில்லாது நீங்கள் ஓட்டாண்டியாக இருக்கிறீர்கள். கண்டபடி பேசினால் நல்ல மண்டகப்படிதான் கிடைக்கும். போங்கள். இப்பவே புறப்பட்டுப் போங்களேன்!'' என்றாள் ஆத்திரத்துடன் யசோதா.

''அடி அம்மா பரதேவதை! உன் உண்மைச் சொரூபம் இப்பொழுதுதான் தெரிகிறது. படிதாண்டாப் பத்தினி போல் இத்தனை நாளும் பெரிய வேஷம் போட்டியே சண்டாளி!'' என்று துச்சமாகப் பேசினான் பதிலுக்குக் கைலாசம். கதவு படார் என்று திறக்கப்படும் ஓசை தொடர்ந்து ஏற்படவே மஞ்சுளா திகிலடைந்து போய் சுவருடன் ஒட்டிக் கொண்டாள்.

''மனைவி மீது உயிர்போல் நீங்களும் இத்தனைநாள் வேஷம் போட்டீர்கள். என் பணத்திற்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற விஷயம் ஊரே அறியும். எனக்கும் தெரியும். உங்கள் சாயம் வெளுத்துப்போச்சு. அதனால் உங்கள் மிரட்டல் உருட்டல் ஒன்றும் பலிக்காது. ம்! போங்கள். நிற்கவேண்டாம்'' என்று அலறினாள் மனைவி.

கைலாசத்திடமிருந்து அதற்கு ஏதும்பதில் காணவில்லை! சில வினாடிகள் ஒரு பயங்கர நிசப்தம் நீடித்தது. சண்டை ஓய்ந்து விட்டதுபோல் இருக்கிறது என எண்ணிய மஞ்சுளா சற்று நிம்மதியாக சுவாசிக்கத் தொடங்கினாள். ஆனால் அடுத்தகணம் 'தடால்!' என்று ஒரு பெரும் சப்தம் வீடே அதிர்ந்து விடும் போன்று கேட்டது. கண்ணாடி சுக்கல் துகளாக உடைந்து விழுகின்ற ஓசையும், யசோதாவின் அலறலும் கேட்கவே, பயத்துடன் ஜன்னல் அருகே ஓடி, வெளியே எட்டிப் பார்த்தாள். தாழ்வாரத்திலிருந்த மின்சார விளக்கை ஏற்றிவிட்டு கைலாசம் முற்றத்திற்கு வந்தான். அவனது வெண்மையான சட்டையின் கை ஓரத்தில் ரத்தக் கறை காணப்பட்டது.

'அட பாவி! யசோதாவைக் கொன்று விட்டானா என்ன?' எனக் கலவரமடைந்த மஞ்சுளா, விருக்கென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள். அந்தப் பயங்கரமான வீட்டை விட்டு காற்றாக வெளியே பறந்தோடி விட வேண்டுமென்ற

துடிப்பும், கிலியும் அவள் உடலை நடு நடுங்கச் செய்தன.

கம்பளிப் போர்வையை எடுத்துமேலே போர்த்துக் கொண்டு மறுபடியும் தரைமீது அவள் படுத்துக் கொண்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வர இம்மிகூட அவளுக்குத் துணிவு இல்லை. எவ்வளவு நேரம் அப்படியே படுத்துக் கிடந்தாளோ, அது அவளுக்குத் தெரியாது. "மஞ்சுளா! மஞ்சுளா! எழுந்திரு. இன்னுமா தூக்கம்?" என்று யசோதா கூவியபடி கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே, திகைப்புடன் எழுந்து உட்கார்ந்தாள். "மஞ்சுளா உன்னைத்தானே! எத்தனை தடவை கூப்பிடுவது!" என்று மீண்டும் யசோதாவின் குரல் ஒலிக்கவே துணிவுடன் எழுந்து வந்து கதவைத் திறந்தாள். விடிந்து வெகுநேரம் சென்று விட்டதை அறிவுறுத்திய வண்ணம் காலைச் சூரியனின் பொன் கதிர்கள் பளிச்சென்று முற்றத்தின் மீது வீசிக் கொண்டிருந்தன. வெளியே போகத் தயாராக யசோதா தலையை வாரி முடித்துக்கொண்டு சுத்தமாக உடுத்திக் கொண்டிருந்தாள். "நன்றாய்த் தூங்கினாய் போ! உம்! சீக்கிரம் போய் காப்பி தயார் செய்து கொண்டு வா. அவர் தலைவலியால் துடித்துக் கொண்டிருக்கிறார்" என்று அதிகாரமாகக் கூவி விட்டு, அப்பால் சென்றாள் அவள்.

## 11

மஞ்சுளா வழக்கம் போல் காப்பியை வெள்ளிக் கோப்பைகளில் நிரப்பி தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு சென்றாள். யசோதாவின் அறையில் அவள் அது சமயம் கண்ட காட்சி மிகவும் விநோதமாகத்தான் இருந்தது. ஸ்ரீமான் கைலாசம் தன் தலையின் மீது கைக்குட்டையை இறுக்கிக் கட்டிக்கொண்டு வெட்டிச் சாய்ந்த மரம்போல் படுக்கை மீது சாய்ந்து கிடந்தான். அருகில் உட்கார்ந்திருந்த அவனது தர்மபத்தினி உரத்த குரலில் அன்று காலையில் வந்த பத்திரிகையை அவனுக்காகக் கருத்துடன் வாசித்துக் கொண்டிருந்தாள்.



முதல் நாள் இரவு மஞ்சுளா மேஜைமீது வைத்துவிட்டு போயிருந்த கண்ணாடிக் கூஜா அறையின் மூலையில் தரை மீது சுக்கல் நூறாக உடைந்து சிதறிக் கிடப்பதைக் கண்டாள். அவளது சந்தேகத்தை ஊகித்துக் கொண்டு விட்ட யஜமானி, "கூஜாவை நான் போட்டு உடைத்து விட்டேன். கண்ணாடித் துண்டுகளை ஜாக்கிரதையாகப் பொறுக்கி அப்புறம் கொண்டு போய்ப் போடு" என்று உத்தரவு போட்டுவிட்டு, மறுபடியும் பத்திரிகையை இரைந்து வாசிக்கலுற்றாள்.

மஞ்சுளாவுக்கு ஆச்சர்யம் தாள முடியவில்லை. யஜமானி எத்தனை பெரிய பொய்யைச் சொல்கிறாள் என்பதையும் விரைவில் உணர்ந்து கொண்டுவிட்டாள். தூர இருந்து கொண்டு தம்பதிகள் பூசலைக் காதால் மட்டும் கேட்டுக் கொண்டிருந்த பொழுது, கைலாசம் அடித்து விட்டதால் தான் யசோதா அப்படி அலறி ஓலமிட்டாள் என எண்ணிப் பதை பதைத்துப் போய் விட்டிருந்தாள் மஞ்சுளா. ஆனால் உண்மை வேறுவிதமாகவல்லவா இருந்தது? ஆத்திரத்தில் 'கண்ணாடிக் கூஜாவைத் தூக்கிக் கணவன் தலையைக் குறி பார்த்தல்லவா வீசியிருக்கிறாள் அந்தப் பெண்ணரசி!

கைலாசத்தின் சட்டை மீது காணப்பட்ட ரத்தம் அவன் நெற்றியில் ஏற்பட்ட காயத்திலிருந்து வந்திருக்கிறது. 'பாவம், தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று, தலைவலி என்று ஒரு கதையைக் கட்டிவிட்டு காயத்தை மறைக்கவே படுத்துக் கிடக்கிறான் போலிருக்கிறது' என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள். அவளுக்கு ஒருபுறம் சிரிப்பும் திகைப்புமாக இருந்ததில் ஆச்சரிய மில்லை.

அன்று மாலைவரை தம்பதிகள் இருவரும் வீட்டை விட்டு வெளியே போகவே இல்லை. கைலாசம் படுக்கையன்றயிலிருந்து வெகுநேரம் வெளியே வரவேயில்லை. சாப்பிடும் சமயம் மட்டும் பல நாள் நோயாளியாக படுக்கையிலேயே கிடந்து நலிந்து மெலிந்து போய்விட்டவன் போல் தள்ளாடிக் கொண்டு வந்து இலை முன்

அமர்ந்தான். ஆனால் அவனுக்கு மனைவி என்றுமில்லாத விசேஷ அக்கறையுடன் உபசாரங்கள் பல செய்தாள். 'இன்னும் கொஞ்சம் நெய் வார்க்கட்டுமா?' என்று கொஞ்சிக் கொண்டு அவள் தாராளமாக உருக்கிய பசு நெய்யைச் சாதத்தின் மீதுபொழிந்தாள். "ஓவல்டின் சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் தூங்குங்கள். இப்போது தலைவலி எப்படியிருக்கு? டாக்டரை வேண்டுமானால் கூப்பிடட்டுமா?" என்றெல்லாம் பணிவோடு விசாரித்தாள்.

கைலாசமும் காலையில் தான் பேசியதற்கு முற்றிலும் மாறாக நடந்துகொண்டான். சாப்பிட்டு முடிந்ததும், கையைக் கழுவிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றான். அங்கே தவறிப் போய் புஷ்பித்திருந்த ரோஜா மலர் ஒன்றைத் தன் கைகளாலே பறித்து வந்து, மனைவியின் கூந்தலில் பரிவோடு சூட்டினான். மனைவி ஏதோ ஹாஸ்யமாகப் பேசிவிட்டது போல சம்பாஷணை நடுவே அடிக்கடி பகபகவென்று அட்டகாசமாக நகைத்தான். அன்று சாயங்காலம் கணவனும் மனைவியும் அலங்காரமாக உடுத்திக்கொண்டு தங்களது பழைய காரிலே சினிமா பார்க்க வேறு புறப்பட்டு விட்டார்கள்!

மஞ்சுளா வியப்பில் மூழ்கிப் போனாள். வாயில் வந்தபடி வார்த்தைகளைப் பேசிவிட்டு எவ்விதக் கூச்சமுமின்றி ஒன்றுமே நடக்காததுபோல் இருவரும் பரிவுடன் பேசிக் கொள்வதைக் காண அவளுக்கு மெத்த வியப்பாக இருந்தது. விடியற்காலம் அவள் கேட்ட அந்தக் கர்ணகடூரமான வார்த்தைகளுக்குப் பிறகு, கைலாசம் இனிமேல் அந்த வீட்டில் வசிக்கவே மாட்டான் என்றுதான் அவள் எண்ணினாள். யசோதா கணவன் முகத்தில் இனி எப்படி விழிப்பாள். அவ்வளவு துச்சமாகப் பேசி விட்டாளே என்று கவலையடைந்தாள். தாம்பத்ய வாழ்க்கையின் அந்த விசித்திரக் கோணம் அந்தப் பெண்ணுக்குப் புரியாத புதிராகத்தான் இருந்தது.

வெளியே போகுமுன் இரவு சமையலைப்பற்றி மஞ்சுளாவிடம் விஸ்தரித்து விட்டு, கம்பீரமாகக் கைப் பையை ஆட்டிக்கொண்டே யசோதா முன்னால் நடந்தாள்.



"அடுத்தமாதம் இந்தக் காரை எப்படியாவது விற்றுத் தொலைத்துவிட்டு, உங்களுக்குப் பிடித்தமான 'ப்யூக்' கை வாங்கி விட்டால் போச்சு. உங்களுக்கு ஏன் அந்தக் குறை?" என்று கொஞ்சினாள் அவள். மிகவும் பணிவோடு முன்னால் ஓடி, காரின் கதவைத் திறந்துவிட்டு, அவள் உட்காரும் வரை நின்றுகொண்டு உபசரித்தான் கணவன் கைலாசம். "நம் கம்பெனியை ஆரம்பித்தால் ஏகப்பட்ட பணச்செலவு ஆகும். அதன் நடுவே இந்தச் செலவு ஏன்? பழைய கார், ஆகி வந்தது. அதைப் போய் விற்பானேன்? எனக்கென்னவோ இதன்மேல் ஒரு தனி அபிமானம் ஏற்பட்டிருக்கிறது" என்று பச்சையாகப் புளுகிக்கொண்டு டிரைவர் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்தான். அந்த விசித்திரத் தம்பதிகள் ஜோடிப் புறாக்கள் போல் ஒட்டைக் காரிலே உல்லாசமாக வெளியே புறாக்கள் போல் வெளியே பறந்தோடியதை வெகு நேரம் வேடிக்கை பார்த்துக்கொண்டு மஞ்சுளா வேலைகளை மறந்து நின்று கொண்டிருந்தாள்.

அடிக்கடி இந்தத் தம்பதிகள் இப்படி ஒரு பெரிய யுத்தத்தில் ஈடுபடுவதுண்டு. சமாதானமும் விரைவில் ஏற்பட்டுவிடும். அதன் முடிவில் கைலாசம், தான் விரும்பிக்கொண்டிருந்த சில காரியங்களை விரைவாகச் சாதித்துக் கொண்டு விடுவான். ஆனால் சில சமயங்களில் சமாதானம் செய்து கொள்ளும்போது பச்சாதாபம் மேலிட்டு, மனம் உருகி, யசோதா கணவன் இஷ்டப்படியெல்லாம் பணத்தை வாரி இறைக்க மனம் துணிவாள். இரண்டு தினங்கள் சென்றவுடன் அவள் இரத்தத்தில் ஊறிக் கிடக்கும் கருமித்தனம் தலைதூக்கி விடும். உடனே திறந்த மணிபர்ஸின் வாயை இழுத்து மூடிப்பெட்டியில் வைத்து விடுவாள். அதற்குப் பிறகு கைலாசம் எவ்வளவுதான் கராடியாகக் கத்தினாலும் அம்மா இடுப்பில் ஏறிக் கொண்டிருக்கும் இரும்புப் பெட்டிச் சாவி கீழே இறங்கவே இறங்காது. இந்த உள் விவகாரங்கள் எல்லாம் மஞ்சுளாவுக்கு எங்கே தெரியப் போகிறது? மறுநாட் காலை வாயிலில் கப்பல்போல் புதிய கார் வந்து காத்துக் கிடக்கப் போகிறது என்று வியந்து கொண்டு தனது காரியங்களைக் கவனிக்க உள்ளே திரும்பினாள் பேதை!

சமையலறைக்குள் சென்று யோசித்த பொழுதுதான் பூரி

பொரிக்க நெய் இல்லை என்ற விஷயம் நினைவுக்கு வந்தது. எண்ணெயில் பூரி பொரித்துவிட்டாலோ கைலாசம் முகத்தைச் சுளுக்குவான், எஜமானி எரிந்து விழுவாள் என்பதை அவள் முந்திய அனுபவங்களால் அறிவாள். ''கடைத்தெருவுக்கு ஓடி நல்ல வெண்ணெயாகப் பார்த்து வாங்கி வந்து உருக்கி நெய்யாக்கி வைத்துக் கொண்டுதான் மேலே சமைக்க ஆரம்பிக்க வேண்டும்'' என்று அவசரத்துடன் வீட்டுக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள். வீரசோழன் பட்டணத்தில் வசிக்கத் தொடங்கிய சில நாட்களில் மஞ்சுளாவிற்கு நகரத்தின் மூலை முடுக்குகள் அனைத்தும் நன்கு தெரிந்து விட்டிருந்தது.

தேவி பவனத்திற்கும் கடைத்தெருவுக்கும் அரை மைல் தூரம் இருந்தது. விரைவில் திரும்பி விடலாம் என்ற எண்ணத்துடன், தெருக்களின் குறுக்கே புகுந்து சந்துகள் வழியே வேகமாக நடந்தாள். யஜமானியின் விசித்திர நடத்தை பற்றி எண்ணி வியந்த வண்ணம் ஒரு சிறு சந்திலிருந்த ஒரு சிறு தெருவிற்குள் வேகமாக நுழைந்தாள். அவ்வளவுதான். கிரிச்சென்றதொரு பயங்கரமான சப்தம் கேட்டது! அண்ட சராசரங்கள்தான் இடிந்து விழுந்து விட்டனவோ என்ற பிரமிப்புடன் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள். பளிச்சென்று வீசிய விளக்கொளியில் கண்கள் கூசின. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பள பளவென்று மின்னிய புத்தம் புதியதொரு பெரிய காரின் கதவைத் திறந்துகொண்டு வெளியே குதித்தான் ஒரு இளைஞன். வயது இருபத்தைந்திருக்கும். அவன் உடையையும் அவனது வசீகரமான முகத்தில் ததும்பி நின்ற கம்பீரத்தையும் பார்த்தால், யாரோ பெரிய மனிதர் வீட்டுச் செல்வ மகன் போல் தோன்றினான். வண்டியின் முன்னால் சக்கரத்தின் அருகே நடுங்கிக் கொண்டு நின்ற அந்தப் பெண்ணை அவன் ஒருமுறை உற்றுப் பார்த்தான். ஏதும் பேசவில்லை ''பார்த்து நடக்கக் கூடாதா? கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு என் காரில் வந்து விழவேண்டுமா?'' என ஏளனமாகக் கேட்பது போல் இருந்தது அவனது பார்வை.

தவறு - தன்னுடையது என்று உணர்ந்தவுடன் மஞ்சுளா



CPL 611963

வெட்கத்துடன் 'மன்னிக்கவும்' எனத் தடுமாறிவிட்டு, அப்பால் நகர்ந்து கொண்டாள். நல்ல வேளையாக அந்தத் தெருவில் ஜன நடமாட்டம் அதிகம் இருக்கவில்லை. இல்லாவிடில் ஒரு சிறு விபத்தென்றாலும் பெரிய கூட்டம் ஒன்று கூடி விடாதா? மறுகோடியில் சென்று கொண்டிருந்த இரண்டு மனிதர்கள் மெதுவாகத் திரும்பி ''என்ன ஏது?'' என்று பார்க்குமுன் மின்னல் போல் அந்த வாலிபன் வண்டியில் மீண்டும் ஏறி அமர்ந்து கொண்டான். படார் என்று கதவைச் சாத்திக்கொண்டான். காற்றிலும் வேகமாகக் கார் பறந்தோடி மறைந்துவிட்டது. மஞ்சுளாவுக்குத் தன் உணர்வு வரச் சில நிமிஷங்கள் சென்றன. ஏனோ அவள் இருதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது!

அஸ்தமிக்கும் நேரம் சமீபித்து விட்டதால் கடை முகப்பை அலங்கரித்த மின்சாரக் குழல் விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. அவைகளினின்றும் வீசிய வெளிச்சம் நிலவு ஒளிபோல் கடைத்தெரு முழுவதிலும் படிந்தது. கந்தர்வ உலகில் சஞ்சரிக்கிறவள் போல் இனம் விளங்காத ஒரு புதிய உற்சாகத்துடன் தான் தினசரி சாமான்கள் வாங்கும் கடைக்கு விரைந்தாள். வெண்ணெய்ப் பொட்டலத்தைக் கடைக் காரரிடமிருந்து வாங்கிக் கொண்டு, சில்லறைக்காகத் தனது சிறு கைப் பையைத் திறந்து துழாவிக் கொண்டிருந்தாள். விர் என்று வந்த ஒரு கார், கடையின் முன்னால் வந்து சட்டென்று நிற்பதை உணர்ந்து, திரும்பிப் பார்த்தாள் மஞ்சுளா. திகைத்துப் போனாள்.

சற்றுமுன் சந்தித்த அதே வாலிபன் காரினின்று இறங்குவதைக் கண்டதும் அவள் இருதயம் படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டது. மறுபடியும் அந்தப் பெண்ணை அங்கே சந்தித்தது அந்த வாலிபனுக்கு பெரும் வியப்பாகத் தானிருக்க வேண்டும். அதிசயமாக ஒருகணம் அவனும் அவளை ஊன்றிப் பார்த்தான். உதட்டின் மீது தவழ்ந்த பரிகாசப் புன்னகையைச் சட்டென்று மறைத்துக் கொண்டு, அவன் கடைக்காரன் பக்கம் திரும்பினான். சில்லறையைக் கொடுத்துவிட்டு மஞ்சுளா வேகமாக நடந்தாள். இரண்டு கூரிய

விழிகள் தன்னைத் தொடர்ந்து ஊடுருவிக்கொண்டு உற்று நோக்குவதுபோல் வெகுநேரம் ஒரு விசித்திரமான உணர்ச்சியினால் உடல் பூரித்துப் போனாள். முகம் சிவந்து போயிற்று. கால்கள் நடக்கத் தடுமாறின.

அன்று இரவு வீட்டு வேலைகள் அனைத்தும் அவளுக்குச் சிறிதும் பாரமாகவே இருக்கவில்லை. விவரிக்க முடியாத ஒரு இன்பம் நெஞ்சைக் கவ்விக் கொண்டிருந்ததில் உடலில் அலாதியானதொரு புது திடம் ஏற்பட்டிருந்தது. படுக்கைக்குச் செல்ல வெகு நேரம் சென்று விட்டதைக் கூட அவள் அன்று பொருட்படுத்தவில்லை. தரைமீது ஜமக்காளத்தை விரித்துக்கொண்டு உட்கார்ந்தாள். கிருஷ்ணபட்சத்து இரவு. நீலக்கரிய வானக் கடலில் வைரமணிகள் என நட்சத்திரங்கள் மின்னிக் கிடந்தன.

என்றுமே அனுபவித்திராத புதிய இன்பத்தில்பொங்கிக் கொண்டு அவளது உள்ளம் ஒரு வானம்பாடியாக மாறி, குதூகலத்துடன் பறந்தோடி, கண் சிமிட்டிக் கொண்டிருந்த விண் மீன்களுடன் கண்ணாமூச்சி விளையாடத் தொடங்கியது.

முன்பின் தெரியாத வாலிபன் ஒருவனைச் சந்தித்து விட்டதால் ஏன் இந்த உற்சாகம்? ஏன் இந்த இனிமையான உணர்ச்சியில் உள்ளம் கொந்தளித்துக் கூத்தாட வேண்டும். அர்த்தமற்றதொரு சம்பவம். எனினும் முதன் முதலாகத் தனது வாழ்க்கையில் மஞ்சுளா உவகை எனும் பெரும் கடலில் மூழ்கி மூழ்கிக் கரை காணாது மிதந்து கொண்டிருந்தாள்.

## 12

யசோதா பணத்தைப் போலவே இனிய வார்த்தைகளையும் சிக்கனமாகச் செலவழிக்கும் ஆசாமி. புதிய வேலைக்காரப் பெண் வந்த பின்பு வீடு அடைந்திருந்த மாறுதல்களை அவள் கவனிக்காமலில்லை. வழக்கமாகக் கதவு



மூலைகளில் குவிந்து கிடக்கும் குப்பையும், மேஜையடியில் கிடக்கும் காகிதத் துண்டுகளும் மாயமாய் மறைந்து விட்டிருந்தன. ஒட்டடை அடித்து, ஜன்னல் திரையில் படிந்திருந்த தூசியைத் தட்டி வேலைக்காரப் பெண் வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருந்தாள். சமையல் பாத்திரங்கள் பளபளவென்று அலமாரித் தட்டுகளில் அடுக்கப் பட்டிருந்த அழகிற்கே அத்தனை சம்பளமும் தரும் போல்தான் இருந்தது.

எருக்கு மண்டிக் கிடந்த பின் பக்கத்துத் தோட்டத்தைச் செப்பனிட்டு, வீட்டுக்குத் தேவையான கீரையும் கத்தரியும் பயிரிட்டிருந்தாள். முன் பக்கத் தோட்டத்துப் புதர்களும் ஒழிந்து, அவைகளுக்குப் பதில் ரோஜாவும் மல்லிகைச் செடிகளும் துளிர்த்துக் கொண்டிருந்தன. நாவுக்கு ருசியாகச் சமைத்துப் போட்டாள். கூப்பிட்ட குரலுக்கு முகம் கடுக்காது ஓடி வந்து ஏவிய வேலைகளைத் துரிதமாகச் செய்து முடித்தாள். மொத்தத்தில் மஞ்சுளா மிகவும் நல்ல வேலைக்காரிதான். கொடுப்பதாகச் சொன்னதை விட மூன்று மடங்கு சம்பளம் கொடுத்தாலும் தகும். ஆனாலும் இந்த உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள யசோதா தேவிக்கு விருப்பம் இருக்கவில்லை. 'மஞ்சுளா! நீ நன்றாக வேலை செய்கிறாய். எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டால் எங்கே அந்தப் பெண்ணிற்கு மிகவும் கர்வம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஒருபுறம். மேலும் வேலைக்காரர்களுடன் சமமாகப் பேசிப் பழகுவது தன் கௌரவத்திற்குச் சிறிதும் பொருத்தமாகாது என்ற நம்பிக்கை உடையவள். ஆதலால் அவள் வாயைத் திறக்கவில்லை. அத்துடன் சம்பளம் கொடுப்பதற்காகக் கூட மணிபர்சையும் திறக்கவில்லை.

பி.ஏ.படித்துவிட்டுச் சமையல்காரியாக வேலையை முழுமனதுடன் ஒப்புக்கொண்டு உழைக்க முன்வந்திருந்ததால் அந்தப் பெண்ணுக்கு வேறு கதி ஏதும் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகப் புலப்படவில்லையா?

'சாப்பாடும் தங்க இடமும் கிடைத்தாலும் போதும் பேசாமல் இருந்துவிடுவாள் என்பது நன்றாக விளங்குகிறது.

சம்பளம் வேறு என்னத்திற்கு கொடுக்க வேண்டும்? அவளும் வாயைத் திறந்து கேட்கவில்லை. நாம் ஏன் கவலைப்பட வேண்டும்' என்று மஞ்சுளாவின் சம்பளத்தைப் பற்றி நிம்மதியாக மறந்து விட்டிருந்தாள் எஜமானியம்மாள்.

மாதங்கள் மூன்று ஆகியும் உழைத்த கூலியைக் கண்ணாலே கூடக்காண முடியாதிருந்தது மஞ்சுளாவிற்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. இன்று கிடைக்கும் நாளை கொடுப்பார்கள் என்று ஆவலுடன் நாட்களைக் கழித்துக் கொண்டு வந்தாள். ஆனால் பணம் என்ற பேச்சையே அந்த வீட்டில் காணவில்லை. "இனியும் சும்மா இருக்க முடியாது. எப்படியும் இன்று கேட்டு விடவேண்டும்" என அன்று காலை விடிந்ததும் முடிவாக ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தாள் மஞ்சுளா.

காலை ஆகாரம் முடிந்ததும் யசோதா அவசரமாக எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தாள். "அழகுப் பை எங்கே? என்னுடைய கைக்குட்டையை எடுத்துவா" என்று அவள் போட்ட பல உத்தரவுகளுக்குத் தலை பணிந்து, மாடிக்கும் கீழுக்கும் ஓடி நடந்ததில் தான் கேட்க இருந்ததை மஞ்சுளா மறந்து விட்டாள்.

பகல் போஜனத்திற்குப் பிறகு கேட்கலாம் என்றாலோ அப்பொழுதும் சந்தர்ப்பம் இருக்கவில்லை. மாலை டிபனுக்குப் பிறகு எஜமானி அலங்காரமாக உடுத்திக் கொண்டு வெளியே புறப்படக் கிளம்பிக் கொண்டிருந்தாள். 'அப்பொழுது கேட்கலாமா, வந்த பிறகு கேட்டால் சரியாய் இருக்குமா?' என்று நிலைமையை எடைபோட்டு ஆராய்ந்து கொண்டிருப்பதற்குள் யசோதா அம்மாளது மோட்டார் வாகனம் கட புடவென்ற சப்தங்களை எழுப்பிக் கொண்டு நடைபாதையில் விர்ரெனப் பாய்ந்து குதித்தோட ஆரம்பித்து விட்டது.

"அடாடா! எஜமானி மிகவும் உற்சாகமாக இருந்தாளே! இந்தச் சமயத்தை நழுவ விட்டு விட்டோமே! என்ன கோழைத்தனம்? செய்த வேலைக்குக்கூலி கேட்க ஏன் அச்சம்?"



என்று தன்னையே கடிந்துகொண்டு வீட்டிற்குள் திரும்பினாள். கொஞ்ச நேரம் உட்கார்ந்து தனது மதியீனத்தைப் பற்றி வருத்தப்படவோ துக்கப்படவோ அவளுக்குப் பொழுது இருக்கவில்லை. வீட்டு வேலைகள் தலைக்கு மேல் கிடந்தன! எஜமானியம்மாள் காலையில் எடுத்துப் போட்டிருந்த துணிகள் இன்னும் தோய்த்து உலர்த்தப்படாது கிணற்றடியில் பெரும் மூட்டையாகக் கிடந்தது. அதை உடனுக்குடன் கவனிக்காவிடில் யசோதாவின் மன அதிருப்திக்கு ஆளாக வேண்டிவரும் என அஞ்சி, மஞ்சுளா அவசரமாக அடுப்பை மூட்டி, இரவுச் சமையலுக்கு உலையை வைத்துவிட்டுத் தோட்டத்துக் கிணற்றடிக்கு ஓடினாள்.

தண்ணீரை வாளியில் இறைத்துச் சிமெண்டுத் தொட்டியில் நிரப்பி சோப்புத்தூளைப் போட்டு ஆடைகளை ஊற வைத்தாள். வேட்டை நாய்போல் ஓடி ஆடி எஜமானிக்கு நாள் முழுவதும் தொண்டு செய்ததில் அவள் மிகவும் களைத்து விட்டிருந்தாள். சம்பளம் கிடைக்கவில்லை என்ற கவலை ஒருபுறம் வாட்டிக் கொண்டிருக்கவே, உடலும் மனமும் சோர்ந்து, துணி தோய்க்கும் கல்மீது சற்று உட்கார்ந்தாள். மாலை நேரத்தின் மஞ்சள் வெய்யிலும் சில்லென்று வீசிய இளம் தென்றலும் உடலுக்கு மிகவும் இதமாக இருக்கவே, அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

தேவி பவனத்துப் பின் பக்கத்துத் தோட்டச் சுவர்கள் ஆங்காங்கே இடிந்து விழுந்து கிடந்ததனால் அதற்கப்பாலிருந்த சிறிய தெருவில் நடமாடும் மனிதர்களையும் வாகனங்களையும் வேடிக்கை பார்க்க வசதியாக இருந்தது. 'பூம்! பூம்!' என்று முழங்கிக் கொண்டு புத்தம் புதியதொரு பெரிய மோட்டார்கார் புழுதியைப் பரப்பிய வண்ணம் தெருவிற்குள் சற்று மெதுவாகச் சென்றதைக் கண்டாள். பாதி முகம் மட்டுமே புலப்பட்ட போதிலும், சட்டென்று அடையாளம் கண்டுகொண்டு விட்டாள். அவள் கண்கள் வியப்பில் விரிந்து போயின. இனம் விளங்காத ஒரு ஆனந்தம் உள்ளத்தைக் குலுக்கவே மெள்ள எழுந்து நின்று தலையை நீட்டி தெருவின் மறுகோடியில் சென்று வண்டி மறையும்வரை ஆவலுடன் பார்த்துக் கொண்டே நின்றாள்.

அன்று சாயங்காலம் நடந்த அந்தச் சிறு சம்பவம் மின்னல்போல் மனக்கண்முன் எழவே, இன்பமா கோபமா என்று அந்த உணர்ச்சிக்கு வரம்பு கட்ட முடியாதபடி, ஒரு நூதனமான கிளர்ச்சியில் மெய்மறந்து திகைப்பில் மூழ்கி விட்டாள். சில நிமிஷங்களில் வண்டி அந்தத் தெருவிற்கு அருகேயிருந்த பெரிய ரஸ்தாவில் திரும்பி மறைந்து விட்டது. அது அவளுக்குச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. அந்தச் சிறிய தெரு நீண்டதொரு பெரிய-முடிவில்லாத-தொலைதூரம் சென்ற ஒரு பாதையாக இருக்கக் கூடாதா? கண்களாலாவது அந்த வாலிபனை, முடிவற்ற அந்த நீண்ட பாதையில் பார்த்துக்கொண்டே இருந்தால்... எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! இப்படியாக ஓடியது அவள் உள்ளத்தில் ஒரு சிறு சிந்தனை.

இதன் இடையே அந்த வாலிபனது களை பொருந்திய முகமும், உதட்டில் தவழ்ந்த ஏளன நகையும், கண்ணில் மிருந்த பரிகாசப் பார்வையும் அவளது கவனத்திலே சுழன்றோடி வந்தன.

''என்ன, அல்நாஷர் போலப் பெரிய மனோ ராஜ்யத்தில் இறங்கி விட்டாயே?'' என்று பின்னாலிருந்து இடியோசை போல் ஒரு பெரும் குரல் அதட்டவே, நடுநடுங்கிப் போய்த் திரும்பிப் பார்த்தாள் மஞ்சுளா.

''இப்படித்தான் நீ வேலை செய்கிறாய் போலிருக்கிறது? பாதி வேலையைப் போட்டுவிட்டுத் தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறாயே! நல்ல பெண் நீ'' என்று அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே கிணற்று மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தான் கைலாசம்.

''ஊர்க்கவலை வந்து விட்டது போலிருக்கிறது. இருக்காதா? ஆமாம் உனக்கு நெருங்கிய உறவினர்கள் யாரும் கிடையாது என்று நான் கேள்விப்பட்டேன். வாஸ்தவமா?'' என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே வெகு அருகில் வந்து நின்றான்.



இன்பமாகக் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சமயம் யாரோ பளீர் என்று கன்னத்தில் அறைந்து தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டதைப் போன்ற ஒரு பயங்கரமான உணர்ச்சி மஞ்சுளாவுக்கு அது சமயம் ஏற்பட்டு விடவே, சில நிமிஷங்கள் அவளால் எதுவும் பேச முடியவில்லை. தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக நின்றாள்.

மாலைச் சூரியனின் பொன் கதிர்கள் பட்டுப் பொற்சிலைபோல் தோன்றிய அந்த அழகு பிம்பத்தைத் தன் விஷக் கண்களால் ஆர்வமாக மேலும் கீழும் பார்த்துக் கொண்டே நின்றான் கைலாசம். ''பாவம்! அலுப்பாகத்தான் இருக்கும். காலையிலிருந்து மூச்சு விடாது நீயும் வேலை செய்து கொண்டு இருக்கிறாய். யசோதா, ஆனாலும் இப்படி இரக்கமற்றவளாக இருக்கக் கூடாது. உனக்கு அவ்வப்போது கொஞ்சம் ஓய்வு கொடுக்கத்தான் வேண்டும். மனித உடல் என்ன இயந்திரமா என்ன?'' என்று அனுதாபப்பட்டான் அவன்.

மஞ்சுளா பதில் பேசவில்லை. ஏதோ பெரிய வம்புக்கு அஸ்திவாரம் போடுகிறான் என உள்ளுணர்வு உணர்த்தவே, கலக்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு சற்று நகர்ந்து நின்றாள்.

கைலாசம் துணிவோடு இன்னும் சற்று நகர்ந்து வந்தான். ''நீ ரொம்ப சாதுவான பெண். வாயைத் திறக்காது பல கஷ்டங்களையும் இந்த வீட்டில் அனுபவிக்கிறாய். 'குமாஸ்தா வேலைக்குப் பெண் தேவை' என்று சொல்லி விட்டுப் பேனா பிடிக்கவேண்டிய உன் கையில் யசோதா துடப்பத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டாளே! எத்தனை சாமர்த்தியம், யோசித்தாயா அதைப் பற்றி? போகட்டும், எந்த வேலை செய்தாலும் தவறில்லை என்று நீ கௌரவமாக எண்ணிப் பணிவோடு வேலை செய்கிறாய். ஆனால் உனக்குச் சம்பளம் கிடைத்ததா? அதைப் பற்றியாவது யோசித்துப் பார்த்தாயா?'' என்று தாழ்ந்த குரலில் கேட்டு மோகனமாக அவளை உறுத்துப் பார்த்தான்.

நீ என்று ஏக வசனத்திலே அவன் தன்னை அழைத்ததும்

அவனது சரஸமான பார்வைகளும் மஞ்சுளாவுக்கு அருவருப்பையும் அச்சத்தையும் உண்டாக்கின. 'ஏன் இங்கே வந்து தனியாக நான் இருக்கும்போது தாறுமாறாகப் பேசுகிறீர்கள். போம் அப்பால்' என அதட்டலாமோ என்றால், எஜமானியின் கணவன் ஆயிற்றே என்ற மரியாதை அவளது தொண்டையைப் பிடித்துக் கொண்டது. வாட்ட சாட்டமாக பீமசேனன் போல் எதிரே நிற்கும் அந்த மனிதன் தோற்றம் அவள் உள்ளத்தில் ஒரு கிலியை உண்டாக்கிவிடவே, அவள் குழம்பிப் போய்விட்டாள். அவளது மௌனம் கைலாசத்தின் உல்லாச உணர்ச்சிக்குத் தூபம் போட்டது போல் இருந்தது.

''மஞ்சுளா! உனக்குச் சிரமம் இல்லாதிருந்தால் உன்கையால் ஒரு கப் நல்ல காப்பி போட்டுக் கொடுப்பாயா? எனக்கு நாடகம் என்றாலே அவ்வளவாகப் பிடிக்காது. யசோதா வற்புறுத்துகிறாளே என்று தான் போய் உட்கார்ந்தேன். நடித்தவர் அனைவரும் சுத்த கத்துக்குட்டிகள். ஒரே தலைவலி வந்து விட்டது. நாடகம் முடிந்ததும் யசோதாவைப் போய் அழைத்துக் கொண்டு வரலாம். அதுவரை ஓய்வாக வீட்டில் இருக்கலாம் என்று நாடக ஆரம்பத்திலேயே வந்து விட்டேன்'' என்று அவளைப் பார்த்து அர்த்தம் நிறைந்த புன்னகையொன்றை அள்ளி வீசினான்.

மஞ்சுளாவின் மூளை குழப்பத்திலே சுழன்றது. பயத்திலே தடுமாறினாள் அவள். ''இதோ கொண்டு வருகிறேன்'' என்று குழறிவிட்டு, வலையினின்று விடுபட்ட மானைப் போல துள்ளி வேகமாக ஓடி, சமையலறைக்குள் மறைந்து கொண்டாள்.

அடுப்பிலே அவள் வைத்துவிட்டுப் போன தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. கைலாசத்தின் பேச்சையும், போக்கையும் நினைத்து அவளது நெஞ்சம் கோபத்தில் அதைப்போல் கொதித்தது. ஏதோ ஒரு பெரிய ஆபத்து வரப்போகிறது என்று முன்னெச்சரிக்கையாக ஒரு கசப்பான உணர்ச்சி உள்ளத்தை வேதனை செய்தது. குமிழிவிட்டுக் கொதித்துக் கொண்டிருந்த தண்ணீரைக் கரண்டியால் முகந்து காப்பித் தூள் மீது ஊற்றிவிட்டு, ஜன்னல் வழியே பார்த்தாள்.



அடிவானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மாலைச் சூரியனால் சிவந்த வானம் ஒளி குறைந்து நீலமாக மாறிக் கொண்டு வருவதைக் கண்ணுற்றாள்.

நாடகம் முடிய இரவு ஒன்பது மணியாவது ஆகும். அதுவரை அத்தனை பெரிய வீட்டில் தனியாக அவனும் அவளும் மட்டும் இருந்தால் மிகவும் அசம்பாவிதமாக இருக்குமே! வளைய வந்து நட்புரிமை பாராட்டி, அர்த்தமற்று அவன் பேசிக் கொண்டிருப்பதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று சிந்தித்தபடி நின்றாள். வாசற்படிக்கு அப்பாலிருந்த தாழ்வாரத்தில் செருப்பின் ஓசை கேட்டது.

அதற்கு எதிரொலி செய்வது போல் அவள் நெஞ்சு படார் படார் என வேகமாக அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

''காப்பியின் வாசனை தோட்டத்திலே வந்து என்னைத் தூண்டி அழைக்கிறது. உம்!'' என்று கூறிவிட்டு உள்ளே வந்தான் கைலாசம். ''நீ கூடப் பணத்தை மிச்சம் பிடிக்கிறாயா? ஏன் இருட்டில் தடுமாற வேண்டும்?'' எனப் பரிகாசமாகக் கேட்டுவிட்டு மின்சார விளக்கைப் பொருத்தினான். பிரகாசமான விளக்கொளியில் அவளது மான் விழிகளில் கவிந்து நின்ற மிரட்சி அவனுக்கு நகைப்பை உண்டாக்கியது.

மஞ்சுளா ஒன்றும் பதில் சொல்லாது அவசரமாகக் காப்பியை வடிகட்டிக் கொண்டிருந்தாள். வெண்கல உருளியில் பாலை ஊற்றி அடுப்பின் மீது வைத்துவிட்டுத் திரும்பியபோது அவள் திடுக்கிட்டு விட்டாள். சப்தமிடாது மெல்ல நடந்து கைலாசம் வெகு அருகில் வந்து நின்று கொண்டிருந்தான்.

''உச்! அப்பா!'' என்று கூவிவிட்டு, பெரிய கைக்குட்டையை சட்டைப் பையினின்று இழுத்தான். முகத்தைத் துடைத்துக் கொண்டான். தொண்டையை ஒருமுறை கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டான். ''வீட்டிற்கு வந்ததுமே பாதித் தலைவலி போய்விட்டது. உன் கையால் தயாரித்த காப்பியைப் பருகினால் மற்றப் பாதி வலியும் போய்விடும். நீயே சொல்லு மஞ்சு!'' என்று கொஞ்சலாகப் பேசியபடி இன்னும் கொஞ்சம் அருகில் நகர்ந்தான்.

மஞ்சுளாவுக்குத் துக்கமும் ஆத்திரமும் ஒருங்கே குமுறிக் கொண்டு வந்தன. ஆபத்து சமயத்தில் புழுவுக்குக் கூட ஏற்பட்டு விடும் அந்த அலாதி தைரியம் திடீரென்று அவளுக்கும் ஏற்பட்டு விட்டது. சற்று எட்டிப் பின்னால் போய் நின்று கொண்டு, கோபம் கக்கும் கண்களால் அவனை விழித்துப் பார்த்தாள். ''மிஸ்டர் கைலாசம்! நிறுத்துங்கள் இந்த அபத்தமான பேச்சை. எஜமானியின் புருஷனாயிற்றே என்று மரியாதைக்கு வாயை மூடிக்கொண்டிருந்தால், என்னை ஏமாந்தவள் என்று எண்ணி ஏதேதோ பேசுகிறீர்களே? என் கோபம் மிஞ்சுமுன் தயவு செய்து வெளியே போய்விடுங்கள்'' என்று சீறி விழுந்தாள்.

கைலாசம், பதிலுக்கு வீடே இடிந்து விழுந்து விடும்போல் பெருத்த குரலில் நகைத்தான். ''ரொம்பப் பயமுறுத்துகிறாயே? நான் போகமாட்டேன் என்றால் கடித்து விழுங்கி விடுவாயா? நீ கோபம் கொண்டால் கூட அதுவும் ஒரு அழகாய்த்தான் இருக்கிறது. ஆத்திரம் அடைவது போலவும், கோபம் கொள்வது போலவும், பயப்படுவது போலவும் பெண்கள் நடிக்கும் நாடகம் எனக்கு ரொம்பப் பழக்கமான விஷயம் ஆயிற்றே'' என்று கூறிவிட்டுச் சிரித்தபடி அருகில் வந்தான்.

மஞ்சுளா ஒரே எட்டில் பின்னால் நகர்ந்து கொண்டாள். அவள் இருதயம் வெடித்துவிடும் போல் வேகமாகத் துடித்தது. பயத்தினால் மேனி பதறியது. பெரும் தூண்போல் எதிரே வந்து நின்ற அவனால் தனக்கு என்ன நேருமோ என எண்ணிய மாத்திரத்தில் கால்கள் தள்ளாடின.

அவளது கலவரத்தை உணர்ந்து கொண்ட கைலாசம் உற்சாகத்துடன் இன்னும் சற்று அருகில் நகர்ந்து வந்தான். ''மஞ்சு! ஏன் அம்மா பயப்படுகிறாய்? நான் என்ன பேயா பிசாசா! உன் ஆசைக்காக ஏங்கித் துடித்துக் கொண்டிருக்கும் உன் அடிமை. உன் அன்பை வேண்டி நிற்கும் பக்தன். உனது அழகிய விழிகளைச் சற்றே இந்தப் பக்கம் திருப்ப மாட்டாயா? முதல் நாள் உன்னை ஸ்டேஷனில் பார்த்தபோதே என் மனம் என்னை விட்டு உன்னிடம் ஓடிவிட்டது. என் உள்ளத்து உணர்ச்சியை உள்ளபடி உன்னிடம் கூறி உன் அன்பை அனுபவிக்க ஒரு



சந்தர்ப்பம் வராதா எனத் தவித்துக் கொண்டிருந்தேன். மஞ்சுக் கண்ணே! இப்படிக் கொஞ்சம் என்னைத் திரும்பிப் பாரம்மா'' என்று உளறிக்கொண்டு நெருங்கினான்.

மஞ்சுளா துள்ளிக் கொண்டு அப்பால் போய் நின்றாள். ''சீ'' வாயை மூடும். அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசினால் என்ன நேரும் தெரியுமா?'' என்று உறுமிக்கொண்டு சுற்று முற்றும் கலவரத்துடன் பார்த்தாள்.

கைலாசத்திற்குக் காதல் போதை தலைக்கேறி விட்டிருந்ததால் அவளது எச்சரிக்கையைச் சட்டை செய்ய வில்லை. ''நீ ஏன் இப்படிப் பயப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும். யசோதாவை நினைத்து நீ பயம் அடைகிறாய். விட்டுத்தள்ளு, அந்தக் கழுதையை! உன் கால் தூசிக்கு அவள் ஒப்பாக மாட்டாள். நீ மட்டும் உம் என்று என் அன்புக்கு உத்தரவு கொடுத்துவிட்டால் போதும். அடுத்த நிமிஷம் யசோதாவை உதறிவிட்டு உன்னையே என் மனைவியாக ஏற்றுக்கொண்டு விடுவேன். விதம் விதமான ஆடைகள், வேண்டிய நகைகள், சௌகரியமான வாழ்க்கை இவை அனைத்தும் உனக்குக் கிடைக்கும். அத்துடன் அழகான புருஷன் கைலாசம் உன் காலடியிலேயே கிடப்பான். கண்மணி மஞ்சு! மறுக்காதே அம்மா என் அன்பே! இங்கே பார்!'' என்று கெஞ்சிக் கொண்டு கையை நீட்டினான்.

''எட்டி நில்! கிட்ட வராதே!'' என்று கிரீச்சிட்டு பயத்தில் அலறிய மஞ்சுளா, என்ன செய்கிறோம் என்ற நினைவிழந்து, அடுப்பில் பொங்கும் தருவாயிலிருந்த பால் பாத்திரத்தை எடுத்து அவன் மீது வீசி விட்டாள். பாத்திரம் அவளது விரல்களைச் சுட்டு விடவே, ''அம்மாடி!'' என்று முனகிக் கொண்டு விரல்களை வாயில் வைத்துக் கொண்டாள்.

''டணார்'' என்று பெருத்த சப்தத்துடன் அப்பால் போய் விழுந்த பாத்திரம் சென்ற வேகத்தில், கைலாசத்தின் நெற்றியின் ஓரத்துச் சதையைத் தன்னுடன் பிய்த்துக் கொண்டு போய்விட்டது. சூடான பால் துளிகளும் ஆறாக நெற்றியிலிருந்து பெருக்கெடுத்து ஓடிய ரத்தமும் தன் கைகள்

மேல் விழுந்ததும் கைலாசம் ''அடி பாவி சண்டாளி என்னைக் கொன்று விட்டாயே!'' எனக் கத்திக் கொண்டு கீழே உருண்டு விழுந்துவிட்டான்.

''பேஷ்! பேஷ்!'' என்று அதட்டிய குரலைக் கேட்டதும் மஞ்சுளா திகைத்துப் போய்த் திரும்பிப் பார்த்தாள். நெற்றிக் காயத்தைக் கையால் அமுக்கிக் கொண்டு கைலாசமும் தலையைத் தூக்கினான். ''பூஜை வேளையில் கரடி போல் நான் வந்து விட்டது ஆச்சரியமாகத்தான் இருக்கும். இப்படி நடக்குமென்று எனக்குப் பல நாட்களாகவே சந்தேகந்தான்'' என்று கர்ஜித்த யசோதா, மஞ்சுளாவைக் கொன்று விடுபவள்போல் கொதிக்கும் கோபத்துடன் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள்.

தன்னைக் கண்டு திகைப்புடன் அரண்டுபோய் ஸ்தம்பித்து விட்ட மஞ்சுளாவைக் கண்டதும் அவள் கோபம் கரை புரண்டு புறப்பட்டுவிட்டது. ''திருடி! நல்லவள்போல் வேஷம்போட்டு என் வாழ்விற்கே உலை வைக்கவா பார்த்தாய்? சம்பளம், வேண்டாம் என்று வேலை செய்தபோதே எனக்கு இதில் ஏதோ ஒரு சூது இருக்கிறது என்று என் புத்திக்குப் பட்டது. நான் நினைத்தது சரிதான்.

''என் சோற்றையே தின்று விட்டு எனக்கே துரோகம் செய்ய உனக்கு எத்தனை துணிச்சலடி? நன்றிகெட்டவளே! என் வீட்டிலேயே என் புருஷனுடன் காதல் நாடகமா போடுகிறாய்? பிசாசே!'' என்று ஆத்திரத்தில் கத்தினாள். ஏற்கெனவே பார்ப்பதற்கு சற்று அவலக்ஷணமாக இருந்த யசோதா கோபத்தின் கொதிப்பிலே துடித்துக் கொண்டிருந்த சமயம் மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டாள்.

தன்மேல் அவள் சுமத்திய அபாண்டமான பழியைக் கேட்டு மஞ்சுளா திடுக்கிட்டுப் போய்விட்டாள். கோபம், ஆத்திரம், அவமானம் என்ற பல உணர்ச்சிகளால் மோதப்பட்டுச் சிதறி விட்டிருந்த தனது சிந்தனையைச் சமாளித்துக் கொண்டு, ''அம்மா நீங்கள் நடந்த விஷயத்தை முழுவதும் கேட்டுவிட்டுப் பிறகு பேசுங்கள். உங்கள் கணவர்



செய்த காரியத்தை மானமுள்ள எந்தப் பெண்ணும் சகித்துக் கொள்ள மாட்டாள். நான் தனிமையிலே இருப்பதை அறிந்து இங்கு வந்து, வாயால் வந்தபடியெல்லாம் பேசினார் அம்மா! நான் ஏழைப் பெண்தான் அம்மா. ஆனால் மானத்தை உயிருக்கு மேலாக மதிக்கிறவள் அம்மா...'' என்று திணறிவிட்டுத் துக்கம் தாங்காது விம்மினாள்.

கைக்குட்டையை எடுத்து நெற்றிமீது வைத்து அமுக்கிக் கொண்டு விருக்கென எழுந்தான் கைலாசம். ''பொய்! யசோதா! இவள் பேசுவது அத்தனையும் பொய்! பெண்மையை மறந்து மானம் அழிந்து வலிய வந்து அன்பு பேசினாள் இவள். அதற்கு நான் மயங்கவில்லை. இவளது சிவப்புத் தோலுக்கு நான் ஏமாறவில்லை என்று ஆத்திரப்பட்டு ஆங்காரத்துடன் பாத்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டாள். நீ வராதிருந்தால் அம்மியைக் கூடத் தூக்கி என் தலையில் வீசியிருப்பாள். என்னைக் கொன்றிருப்பாள். நீ வந்ததும் சட்டென்று சித்திராங்கிபோல் கதையைத் திருப்பி விடுகிறாள். சாகசக்காரக் கள்ளி! சதிகாரி. இவளை நான் இதற்கு சும்மாவிடப் போவதில்லை'' என்று படபடவென்று கத்திக்கொண்டு பற்களைக் கடித்து, போலியான கோபத்துடன் குதித்துக் கூத்தாடினான் கைலாசம்.

ஆத்திரத்தில் அலைமோதிக் கொண்டிருந்த யசோதா கணவன் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. யாரோ சிநேகிதனுடன் வெளியில் சற்றுப் பேசிக் கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டுக் கால்நடையாக இங்கே வீட்டிற்கு ஏன் அவன் ஓடிவந்தான்? ஏதோ காரணமாகத்தானே வந்திருக்கவேண்டும்? கையும் களவுமாகக் கண்டு பிடித்ததும் ஏதோ கதையளக்கிறான் என்று எண்ணி வெகுண்ட அவள், ''உங்களுக்குத்தான் எத்தனை சாமர்த்தியம்? இல்லாவிட்டால் கட்டின பெண்டாட்டிக்கு அவள் வீட்டிலேயே துரோகம் செய்ய உங்களுக்கு இத்தனை துணிச்சல் ஏற்பட்டிருக்குமா? உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. என் சோறு செய்த வேலை அது'' என்று சீறிவிட்டு, அவளைப் பார்க்கச் சகிக்காதவளாக முகத்தைத் திருப்பிக் கொண்டு முன் ஹாலுக்கு விரைந்தாள்.

''யசோதா! ஐயோ! நான் சொல்வதை முழுவதும் நீ கொஞ்சம் கேளேன்'' என்று கெஞ்சிக்கொண்டு பின்னால் ஓடினான் கைலாசம். ''இரண்டு பேரும் முன்கூட்டியே நான் எதிர்பாராத விதமாக வந்துவிட்டால் என்ன சொல்வது என்று ஒரு கதையைக் கட்டித் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு ஒன்றும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. கண்ணால் பார்த்தது போதும்'' என்று சுக்குரலிட்டு விட்டு வேகமாகச் சென்று ஹாலில் கிடந்த சோபாவின் மீது உட்கார்ந்து கொண்டாள். கொல்லன் உலையினின்று வருவது போல் பெருமூச்சுக்கள் அடுக்கடுக்காக அவளது உள்ளத்திலிருந்து எழுந்தன.

பின்னால் ஓடிவந்த கைலாசம் தன் கைமீது சூடாக ஏதோ படுவதை உணர்ந்து உற்றுப் பார்த்தான். தான் அழுத்திக் கொண்டிருந்த கைக்குட்டை முழுவதையும் நனைத்துவிட்டு மேலே ரத்தம் பெருகி வருவதை அறிந்ததும் சுபாவத்தில் கோழையான அவனுக்குத் தலையைச் சுற்றியது. ''யசோதா! ஐயோ இங்கே வாயேன். என்னைப் பிடி! கொஞ்சம் தண்ணிவேணும்'' என்று குழறிக்கொண்டு தடால் என்ற பெரும் சப்தத்துடன் வோற்ற மரமெனத் தரையில் மயக்கமாக விழுந்துவிட்டான்.

ஜன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த யசோதா திகைப்புடன் எழுந்து அருகில் ஓடி வந்தாள். கட்டைபோல் கிடந்த தன் காதல் கணவனது நெற்றிமீது பட்டிருந்த காயத்தைக் கண்டதும் அவள் மிரண்டு விட்டாள். அவளது கோபம் பஞ்சாகப் பறந்தோடிவிட்டது. தன் ஆசைக் கணவனுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என எண்ணிக் கலவரமடைந்து அவனை வாரித் தூக்கி மடியில் சாய்த்துக் கொண்டாள். ''இந்தாங்கோ டாக்டரைக் கூப்பிடட்டுமா? என்னைப் பாருங்க! உங்களுக்கு உடம்பை என்ன செய்கிறது!'' என்று புலம்பினாள். தன் புடவைத் தலைப்பைக் காயத்தின்மீது வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டு, ஒரு கரத்தால் அவன் முதுகைத் தடவி ஆசுவாசப்படுத்தினாள்.

சில வினாடிகளில் மயக்கம் தெளிந்து விட்டபோதிலும்,



கைலாசம், மனைவியின் கோபம் ஆறட்டுமென்று, வெகுநேரம் அப்படியே அசைவின்றிக் கிடந்தான். பிறகு மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். ''இப்போது எப்படியிருக்கு'' என்று ஆதரவுடன் கேட்ட யசோதாவின் கண்களில் துளிர்த்து நின்ற கண்ணீரைக் கண்டதும் அவனுக்கு மறுபடி அவளிடம் பேச உண்மையில் துணிவு ஏற்பட்டது. ''கொஞ்சம் ஜலம் கொடு, மயக்கமாக இருக்கிறது '' என்று முணுமுணுத்தான். மெல்ல அவன் தலையைத் தூக்கிக் கீழே படுக்கும்படி செய்துவிட்டு யசோதா முற்றத்துக் குழாயடிக்கு ஓடினாள்.

தாழ்வாரத்திலிருந்த ஒரு சிறு செம்பில் தண்ணீரை நிரப்பி எடுத்துக் கொண்டு கணவன் அருகில் விரைந்து வந்தாள். ஒரு கைத் தண்ணீரை அவள் வாரி முகத்தில் தெளித்ததும் உடலைச் சிலிர்த்துக் கொண்டு அவன் எழுந்து உட்கார்ந்தான். சற்று நேரம் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததனால் காயத்திலிருந்து உதிரம் பெருகுவது நின்று விட்டிருந்தது. ஒருவாய்த் தண்ணீரைக் குடித்துத் தன் களைப்பைத் தீர்த்துக் கொண்ட பிறகு மெல்லிய குரலில், 'தலையைச் சுற்றுகிறது. மறுபடி மயக்கம் வந்துவிடும் போல் இருக்கிறது. என்னைப் படுக்கையிலே கொண்டு விடு'' என்று குழறினான். அதைக் கேட்டதும் பீதியடைந்து போய்விட்டாள் யசோதா.

''டாக்டரைக் கூப்பிடட்டுமா? உண்மையைச் சொல்லுங்கள், உடம்பை இப்போது என்ன செய்கிறது?'' என்று கைகளைப் பிசைந்தாள்.

''ஒன்றும் வேண்டாம்!'' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டி விட்டு மெல்ல எழுந்தான் கைலாசம். அவன் தள்ளாடுவதைக் கண்டு ஓடிப்போய்த் தாங்கிக் கொண்டாள் மனைவி. மெல்ல அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டு, சாகப் போகிறவன் போல் ஊசலாடி விழுந்தபடி உள்ளே சென்று படுக்கையின் மீதுசாய்ந்து கொண்டான்.

யசோதா அலமாரியைத் திறந்து மேல் தட்டிலிருந்த மருந்துப் பெட்டியை எடுத்து வந்தாள். காயத்தின் மீது மருந்தைப் பூசி, பஞ்சு வைத்து வெள்ளைத் துணியால் தலை மீது

பெரிய முண்டாகபோல் அவன் ஒரு கட்டுப்போட்டு முடிக்கும்வரை கைலாசம் கண்களையே திறக்கவில்லை. ''ஏதாவது சூடாக சாப்பிடுகிறீர்களா?'' என்று கனிவுடன் அவள் கேட்டதும் அவன் கண்களைத் திறந்தான். அவளது கரத்தைப் பற்றி தன் அருகில் அமரச் செய்து விட்டு, ''யசோதா கண்ணே! எனக்கு இப்ப ஒன்றும் வேண்டாம். முதலில் நான் சொல்வதை நீ கேள். அதுவே போதும்'' என்று முணங்கினான். மிகவும் சிரமப்பட்டு விட்டவன்போல் பெருமூச்செறிந்தான்.

## 13

நண்பனுடன் பேச எழுந்து சென்ற கணவன் வெகுநேரமாகியும் உள்ளே திரும்பி வராததைக் கண்டு சந்தேகம் கொண்டு, நாடகத்தில் இருப்புக் கொள்ளாமல் யசோதா வெளியே வந்துவிட்டாள். கொட்டகை வாசலிலும் அவனைக் காணவில்லை. பலவிதமான சந்தேகங்கள் எழும்பவே காரைத் தானே ஓட்டிக் கொண்டு காற்று வேகத்தில் வீட்டையடைந்தாள். வாயிற்கதவு சாத்தப்பட்டிருந்ததனால் தோட்டத்து வழியாகப் பின்பக்கம் வந்தாள். சமையலறையின் திறந்த கதவு வழியே பார்த்தபோது, கைலாசமும் மஞ்சுளாவும் வெகு அருகில் நின்று கொண்டு வார்த்தையாடுவது தெரிந்தது. நெருப்பிட்ட பெட்ரோல் போல் பொறாமை குபீரென்று பற்றியெழவே வேகமாக ஓடி வந்தாள். குற்றவாளிகளை கையும் களவுமாக பிடித்து விட்டோம் என்ற பிரமிப்பில் அவள், மஞ்சுளா கொதிக்கும் பாலைத் தன் கணவன் தலையில் கொட்டி அபிஷேகம் செய்த காட்சியைக் காணவில்லை. ''பேஷ்!'' எனக் கோஷமிட்டுக் கொண்டு அவள் வாயிற்படியருகில் நின்ற மஞ்சுளாவையும், தரையில் சுருண்டு கிடந்த தன் கணவனையும்தான் கண்டாள். உண்மையில் அவளுக்கு நடந்த விஷயம் என்ன என்று தெரியாததனால் கணவன் கூறுவதைக் கேட்கக் கொஞ்சம் ஆவலாகத்தான் இருந்தது.



''இதோ பாருங்கள்! நான் நிதானமாகக் கேட்கிறேன். உண்மையில் நடந்தது என்ன, சொல்லிவிடுங்கள்'' என்றாள் பதட்டமாக.

இதுதான் சமயமென்று அவன் ஒரு பெரிய கதையைத் திரித்தான். ''வந்த நாள் அன்றிலிருந்து அந்தப் பாவிப்பெண்ணுக்கு என் மேல் ஒரு கண். அதை நான் புரிந்து கொள்ளாது மோசம் போய்விட்டேன் யசோதா. என்னைப் பார்த்து அடிக்கடி ஒரு மாதிரி சிரிப்பாள். அசட்டுப் பெண் என்று அசட்டையாக இருந்துவிட்டேன். ஆனால் ஆசாமி லேசுப்பட்டவள் அல்ல என்பது இன்றுதான் புரிந்தது. தன் எண்ணம் ஈடேறிவிட்டால் சாப்பாட்டில் உனக்கும் எனக்கும் விஷம் போட்டுக் கூடக் கொன்றுவிட்டிருப்பாள். அத்தனை பொல்லாதவள் அந்த ராக்ஷஸி!'' என்று கூறிவிட்டுப் பற்களைக் கடித்தான்.

''முழுவதும் விவரமாகச் சொல்லுங்கள்'' என்று பதறினாள் மனைவி. இனி யசோதா தன் பேச்சை நம்பிவிடுவாள் என்ற எண்ணம் பூரணமாக ஏற்பட்டுவிடவே, தைரியமாகவே கதை அளக்கத் தொடங்கினான் கைலாசம்.

''சிநேகிதனுடன் பேசிக் கொண்டிருந்தேன். தலைவலி மண்டையைப் பிளந்தது. சற்று நேரம் காற்றோட்டமாக வெளியே நடந்தால் நிற்காதா என்று நடந்தேன். வலி தாளமுடியவில்லை. வீட்டிற்கு வெகு அருகில் வந்து விட்டதனால் ஒரு தலைவலி மாத்திரையை எடுத்துக் கொஞ்சம் வெந்நீருடன் போட்டுக் கொண்டால் வலிதீரும் என்று எண்ணி உள்ளே வந்தேன். இந்தக் கள்ளி காப்பி போட்டுக் கொண்டிருந்தாள். 'வெந்நீர் என்ன? வேறு எது வேண்டுமானாலும் கிடைக்கும்' என்று எக்கச்சக்கமாக பேசிக் கொண்டு அருகில் வந்தாள். அதற்குமேல் சொல்வதற்குக்கூட ஆபாசமாக இருக்கிறது யசோதா! இந்தப் பேய், மானங்கெட்டவள், வெட்கமற்று என்மேல் வந்து விழுந்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக் கெஞ்சினாள்'' என்றான்.

யசோதா பற்களைக் கடித்தாள். கோபம் தாளமாட்டாது

''அப்புறம்?'' என்று உறுமினாள்.

''அப்புறம், அவளுக்குப் பலவிதமாகப் புத்தி சொன்னேன். கேட்கவில்லை. 'சீ! என்னை விடு' என்று உதறிவிட்டு வெளிவர நகர்ந்தேன். ''அந்த அவலக்ஷணம் பிடித்த பேய் மேலா உனக்கு இத்தனை அன்பு. என் ஆசையைக் காலடியில் போட்டு மிதிக்கிறாயே?'' என்று கூவிக்கொண்டு என்மேல் பால் பாத்திரத்தை விசி விட்டாள். நீ வராதிருந்தால் வெண்கலப் பானையைத் தலையில் போட்டு என்னைக் கொன்று விட்டிருப்பாள். காமப் பேய்க்குக் கண் ஏது. புத்தி ஏது?'' என்றான்.

''அப்படியா சங்கதி! இந்தக் கொலைகாரியைச் சும்மா விட்டு வைப்பது பிசகு. இப்பவே போலீஸிற்கு போன் செய்து அவளை அவர்கள் வசம் ஒப்படைக்கிறேன்'' என்று கத்திக் கொண்டு எழுந்திருந்தாள் மனைவி.

கைலாசம் விரைவாக அவளது கரத்தைப் பற்றித் தன் அருகே இழுத்து உட்கார வைத்துக் கொண்டான். ''யோசித்துக் காரியத்தைச் செய்யவேண்டும். போலீசைக் கூப்பிட்டு அந்த அடங்காப்பிடாரியை ஒரு நிமிஷத்திலே உள்ளே தள்ளிவிடலாம். ஆனால் பின்னால் ஏற்படப்போகும் விஷயத்தை நாம் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''என்ன ஏற்படும்?'' என்று சீறினாள் மனைவி.

''நம் மானம் கப்பலில் ஏறிவிடும். நம்மைப் பற்றிப் பொறாமைப் படும் ஊரார் சிலர் கண்டபடி கதை திரித்து விடுவார்கள். அதனால் ஏற்படும் அபக்கியாதி நான் ஆரம்பிக்க விருக்கும் வியாபாரத்திற்கு இடைஞ்சலாக இருந்தாலும் இருக்கும். பிறகு உன் இஷ்டம்'' என்றான் கைலாசம்.

''அப்படியென்றால் நாம் அவளை என்னதான் செய்வது?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் மனைவி.

''என்ன செய்வதா? பட்டணத்துக்குக் கல்தாகொடுத்து வெளியே பிடித்து உடனே தள்ளிவிட வேண்டும். அந்தத் தரித்திரம் பிடித்தவள் இனி அரை நொடி கூட இந்தவீட்டில்



இருப்பதை நான் சகிக்கமாட்டேன்'' என்று கூறிவிட்டு, சினம் தாளாதது போல் அபிநயித்தான் அவன்.

யசோதா மீண்டும் பற்களைக் கடித்தாள். ''இந்த நிமிஷமே, இப்பவே வெளியில் அவளைத் துரத்துகிறேன். அதிகம் பேசினால் பல்லைத் தட்டிக் கையில் தந்து விடுவேன்'' என்று கர்ஜித்துவிட்டு எழுந்திருந்தாள்.

''அந்த வேலையை நான் செய்கிறேன். உனக்குத் தெரியாது அவளது சுவரூபம். ஒரு சமயம் ஆங்காரத்தில் உன்னையும் அடித்தாலும் அடித்துவிடுவாள்'' என்று கூறிக்கொண்டு கூடவே எழுந்து, மனைவியின் கரத்தைப் பற்றிக் கொண்டு நடந்தான்.

கோபம், பயம், அவமானம் என்ற பல உணர்ச்சிகளுக்கும் ஒருங்கே இலக்காகி விட்ட மஞ்சுளா சுவரின்மீது சாய்ந்து கொண்டு குமுறிக் குமுறி அழுது விட்டாள். கைலாசம் கேவலமாகத் தன்னிடம் நடந்து கொண்டது போதாதென்று தன் மீது சுமத்திய பழியை எண்ணி எண்ணி அவள் உள்ளம் பதைத்தது.

சமையலறைக்கு முன் காலடி சப்தம் கேட்டதும் துளுக்குற்றுக் கன்னத்தில் படிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கையில் சுமந்துகொண்டு வந்த அவளது தோல் பெட்டியைத் தரைமீது அவள் முன் வீசி எறிந்து விட்டு அவளை வெறித்துப் பார்த்தான் கைலாசம்.

''உன் யோக்கியதை முழுவதும் அம்பலமாகி விட்டது. பெட்டியை எடுத்துக் கொண்டு நட. உம் ஆகட்டும். சீக்கிரம்!'' என்று உத்தரவிட்டான்.

மஞ்சுளாவின் உடல் அவமானத்தால் அனலாகத் தகித்தது. துக்கம் தொண்டையை இறுக்கியது. கண்களை நீர் மறைத்துக் கொண்டது. ''அம்மா! நீங்கள் இவர் பேச்சை நம்புகிறீர்களா?'' என்று தடுமாற்றத்துடன் கேட்டாள்.

''சீ! அதிகம் பேசாதே! உன் சாயம் வெளுத்துப் போச்சு!'' என்று உறுமினான் கைலாசம்.

மஞ்சுளா தன் கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு கோபத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "நீங்கள் கொஞ்சம் நாவை அடக்கிக்கொண்டு பேசுங்கள். இத்தனை நடந்த பிறகு இனி இங்கே இருக்க எனக்குப் பைத்தியமா என்ன? என் சம்பளத்தைக் கொடுத்தால் நான் போய் விடுகிறேன்" என்றாள்.

"சம்பளம் வேறேயா? பேஷ்! என் புருஷன் மண்டையைப் பிளந்ததற்கு ஒரு மெடல் வேறு கொடுக்க வேண்டும் என்று கேட்காமல் போனாயே! நீ செய்த வேலைக்கும் நான் போட்ட சாப்பாட்டிற்கும் சரியாகி விட்டது. அதிகம் பேசாதே. வாயை மூடிக்கொண்டு உடனே வெளியே நட. இல்லாவிட்டால் என் புருஷனைக் கொலைச் செய்யப் பார்த்தாய் என்று குற்றம் சாட்டிப் போலீசாரிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று சீறி விழுந்தாள் யசோதா.

"ஆமாம். மரியாதையாக வெளியே போனால் பிழைத்தாய். இல்லாவிட்டால் அவமானப்படுவாய்" என்று அதட்டினான் கைலாசம்.

"நீயே போகிறாயா? நாங்கள் உன்னைப் போக வைக்கவா?" என்று எரிச்சலுடன் யசோதா மீண்டும் கத்தினாள்.

"உங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம். நானே போய் விடுகிறேன்" என்று முணுமுணுத்து விட்டு, துக்கத்துடன் மஞ்சுளா பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தாள். இரவு மணி ஒன்பதாகி விட்டதை அறிவிக்க அருகிலிருந்த மாதா கோவில் மணி வெளியே ஒலித்துக் கொண்டிருந்தது.

## 14

ஒரு மனிதன் தான் தொழில்மீது கொண்டுள்ள மோகத்தினாலும், பணம் சம்பாதிப்பதில் ஏற்படும் ஆர்வத்தினாலும், இருபத்துநான்கு மணி நேரமும் ஓடியாடி



வேலை செய்யத் தயாராக இருந்தாலும், இயற்கை அவனுடன் எப்பொழுதும் ஒத்துழைத்து விடுவதில்லை. ஓரளவுக்கு ஓய்வு இருந்தால்தான் உயிர் உடலில் தங்கியிருக்க முடியும் என்ற ரகசியத்தை அறிந்த இயற்கை அன்னை உற்சாகத்திலே துடிக்கும் தன் மைந்தன் மீது நித்திரை என்னும் போர்வையைப் போட்டு மூடிவிடுகிறாள். இல்லாவிடில் இரு பக்கமும் கொளுத்திவிட்ட மெழுகுவர்த்தியின் கதியையல்லவா அந்த மனிதன் அடைந்து விடுவான்.

வழக்கத்திற்கு மாறாக அரைமணி நேரம் தாமதமாகத் தான் அன்று டாக்டர் தயானந்த் தமது சிகிச்சை சாலைக்குக் கிளம்பினார். இளவயதின் துடிப்பும், தொழில் மீது கொண்ட உற்சாகமும் உந்தியும் கூட அவரால் அயர்வைச் சமாளிக்க முடியவில்லை. முதல் நாள் இரவு வெகு நேரம் ஒரு நோயாளியுடன் பாடுபட்டுவிட்டு வந்து படுத்ததனால், அவருக்குப் போதிய தூக்கம் இருக்கவில்லை. கண்கள் பகபகவென்று எரிந்து கொண்டிருந்தன. உடலில் இருந்த ஒவ்வொரு எலும்புக் கணுவும் நொந்தது.

தயானந்த் வடநாட்டிலே பிறந்தவர். மேல் நாட்டிலே வைத்தியக் கலையைக் கற்றவர். எனினும் தென்னாட்டிலே தான் லக்ஷ்மிதேவியின் அருள் பூராவும் கிடைத்தது அவருக்கு. சென்னைக்கு வந்து, நெல்லூருக்குச் செல்லும் பாதையில் அமைதி நிறைந்த ஒரு பிரதேசத்திலே தமது மனோவைத்திய சிகிச்சை சாலையை ஆரம்பித்தார். சில வருஷங்களில் அணைக்க முடியாத தீ போல் அவர் புகழ் நாலா பக்கமும் பரவி விடவே, பாங்கியில் அவர் கணக்கில் பணம் குவியத் தொடங்கியது. தயானந்திடம் சென்றால் எந்த விதமான மனோவியாதியும் பஞ்சாகப் பறந்தோடி விடும் என்ற நம்பிக்கை நோயாளிகளிடம் வேரூன்றி விட்டது. அதன் பயனாக இரண்டு அறைகள் கொண்ட சிறிய ஓட்டுக் கட்டிடமாக இருந்த அவரது வைத்தியசாலை இருநூறு அறைகள் கொண்ட பெரியதொரு சிகிச்சை விடுதியாக மாறிவிட்டது.

வாழ்க்கையில் ஏற்பட்ட மனப் போராட்டங்களினால்

அமைதி இழந்தவர்களே பெரும்பாலோர் நோயாளிகள் என்றெண்ணிய வைத்தியர் தமது விடுதிக்கு, ''சாந்தி பவனம்'' என்ற பெயர் சூட்டியிருந்தார். மேலும் இந்தப் பெயர் கேட்பவர்கள் மனத்தில் சாப்பாடு ஹோட்டல் என்ற நினைவைத்தான் உண்டாக்குமே ஒழிய, மனோ வியாதியஸ்தர்கள் தங்கும் சிகிச்சை விடுதி என்ற எண்ணத்தை மறைத்து விட்டதனால் நோயாளிகளின் சுற்றத்தார்கள் மனக் கிலேசமடையாது வந்து போக சௌகர்யமாக இருக்கும் என்பதை மனோதத்துவ நிபுணரான அந்த வைத்தியர் நன்கு அறிந்திருந்தார்.

சாந்தி பவனத்தின் வாயிலுக்கு காரைத் திருப்பினார் டாக்டர் தயானந்த். தமது பிரத்தியேக அறைக்கு முன்பு வராந்தாவிலே கூடியிருந்த நோயாளிகளின் கூட்டத்தை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு ஆயாசமாகப் பெருமூச்செறிந்தார். நூற்றுக் கணக்காக 'க்யூ' வரிசையில் காத்திருந்த நோயாளிகளைக் கவனித்துச் சிகிச்சை செய்வது கூட அவருக்குப் பாரமாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு நோயாளியுடனும் கூட வந்திருக்கும் அரை டஜன் உறவினர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பை எண்ணித்தான் அவர் அலுத்துக் கொண்டார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் என்று நானாவித மொழிகளிலும் கேட்கப்படும் கேள்விகளுக்கு அந்தந்த மொழிகளிலே பதில் கூறவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கூட அவர் சிரமமாகப் பாராட்டவில்லை.

தென்னாட்டு மொழிகள் பலவற்றையும் அனாயாசமாகப் பேச அவர் கற்றுக் கொண்டிருந்தார். முக்கியமாகப் பெண் உறவினர்கள் கேட்கும் முடிவில்லாத கேள்விகளுக்குப் பதில் அளித்து அவர் வாய் ஓய்ந்து விட்டிருந்தது. இனி இரும்பினால் ஆன வாய் ஒன்று வேண்டும் என்பது போல் அவரது தாவாய்க்கட்டை வலித்தது. முத்துத் தெறித்தாற்போல் இரண்டு வார்த்தைகளில் பதிலை முடித்துக் கொள்ளலாமோ என்றால் அது முடியாத காரியம். மன நோய்களைப் பற்றியும், சிகிச்சை முறைகளைப் பற்றியும் நோயாளிகளிடம் ஏதும் பேச முடியாது.



அவரவர் உறவினர்களிடம்தான் பேசவேண்டும் என்பதை அவர் அறிவார். பேசுவதுதான் அவர் தொழில். என்ன செய்வது?

காரை நிறுத்திவிட்டு வெளியே இறங்கினார் தயானந்த். நோயாளிகளின் உறவினர்கள் போடும் கும்பிடுகளையும் நமஸ்தேக்களையும் பாராதவர்போல் சட்டென்று ஓடித் தமது பிரத்யேக அறைக்குள் மறைந்து கொண்டார். கோட்டைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, சிகிச்சை விடுதிக்கு உபயோகிக்கும் வெள்ளை நிற நீண்ட மேல் அங்கியை எடுத்து அணிந்து கொண்டார். மின்சார விசிறியைத் திருப்பி விட்டு, மேஜை முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

டக்டக் என்று பாதரட்சை ஒலிக்க, தலையை மிடுக்காக நிமிர்த்தி, உல்லாச நடைபோட்ட வண்ணம் உள்ளே நுழைந்தாள் நர்ஸ் ஒருத்தி. அவள் கூடவே 'டெட்டால்' மருந்து மணமும் குப்பென்று வீசிக்கொண்டு வந்தது. வெள்ளைக் கொசுவலை வட்டத்தினால் வாயை மூடி ஒரு பழ ஸர்பத்தை மரத்தட்டில் வைத்து சுமந்து கொண்டு வந்தாள். அதை மேஜை மீது வைத்துவிட்டு, ''நமஸ்தே டாக்டர்; உங்களை உடனே பார்க்க வேண்டுமென்று ஒரு பெண் வெகு நேரமாகத் துடித்துக் கொண்டிருக்கிறாள்'' என்று கூறினாள். பெயர் அச்சிட்ட அனுமதிச் சீட்டொன்றை மேஜை வைத்துவிட்டு நர்ஸ் அப்பால் போகத் திரும்பினாள். டாக்டர் தயானந்த் அதை எடுத்துப் பார்த்தார். 'நாராயணன், இரும்புப் பெட்டி வியாபாரி, ஜலங்கொண்டான்' என்றிருந்த சீட்டில், நாராயணன் என்ற பெயருக்கு முன்னால் 'ஸ்ரீமதி' என்று பேனாவினால் முத்துப்போல் யாரோ எழுதியிருப்பதைக் கண்டார். அவர் முகத்தில் லேசாக ஒரு புன்னகை அரும்பியது. ''நர்ஸ்! வரச் சொல் அவர்களை'' என்று உத்தரவிட்டு விட்டு, கண்ணாடிக் கூஜாவிலிருந்த ஸர்பத்தை டம்ளரில் ஊற்றி, சுவைத்துப் பருகத் தொடங்கினார்.

ஸ்ரீமதி நாராயணன் என்பவரை அவர் முன்பின் பார்த்ததில்லை. தன் வசம் விடப்பட்டிருந்த நோயாளி ஜகதீசனின் சிறிய தாய் என்பதை மட்டும் அவர் அறிந்திருந்தார்.

எனவே, அவருக்கு அந்த அம்மாளின் வரவு சற்று ஆச்சரியத்தை உண்டாக்கியது. வராந்தா மீது மெல்ல ஒலித்த செருப்புச் சப்தத்தைக் கேட்டதும், தன்னையும் மீறிய ஆவலினால் வைத்தியர் டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, கைக்குட்டையினால் அவசரமாக வாயைத் துடைத்துக் கொண்டு, வாயிற்புறம் திரும்பிப் பார்த்தார். வந்து கொண்டிருக்கும் செல்வச் சீமாட்டிக்குப் பராக்குக் கூறுவது போன்று மல்லிகைப் பூவின் இனிய மணம் அறைக்குள்ளே வேகமாக வந்து வீசியது.

அறையின் வாசல் முன்னாலிருந்த கண்ணாடி அறைக் கதவுகளைத் திறக்க நீட்டிய கரங்களை வைத்தியர் வியப்புடன் உற்றுப் பார்த்தார். சிவந்த நகப்பூச்சிலே மின்னிய வெண்டைப் பிஞ்சுகளை நிகர்த்த மெல்லிய விரல்கள் கொண்ட அந்த மென்மையான கரங்களைக் கண்டதும் ஸ்ரீமதி நாராயணன் தாழம்பூ மேனி படைத்த யௌவனம் நிறைந்த பேரழகி என்று ஒரு நொடியில் ஊகித்துக் கொண்டு விட்டார். பாதத்தின் அழகை மட்டும் கண்டுவிட்டு ஊகத்தினால் முகத்தை வரையக் கூடிய பிரசித்தி பெற்ற சைத்திரிகர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர் அவர். எனவே, ஸ்ரீமதி நாராயணன் உள்ளே நுழையுமுன் அவர் மனக்கண் தீட்டிய கற்பனை சுந்தரி வேகமாக வந்து எதிரேயிருந்த ஆசனத்தில் அமர்ந்து விட்டாள்!

புடவைத் தலைப்பு அசைய, மல்லிகைப் பூவின் மணத்தை இன்னும் வெகு அருகே அள்ளிக் கொண்டு ஒயிலாக எதிரே வந்து நின்ற பெண்மணியை வியப்புடன் உற்றுப் பார்த்தார் அவர். அவரது கற்பனை அதிகம் பிசகு செய்யவே இல்லை. ஸ்ரீமதி நாராயணன் பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும் எழில் மிகுந்த இளம் நங்கையாகத்தான் இருந்தாள். ''தயவு செய்து உட்காருங்கள்!'' என்று உபசரித்துவிட்டு வைத்தியர், கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொள்கிறவர் போல் பாவித்துக் கொண்டு, வந்த பெண்மணியை ஏற இறங்க நன்றாகக் கவனித்துக் கொண்டார்.

பச்சை நிற வங்காளப் பட்டுப்புடவையும், அதற்கேற்ப மஞ்சள் நிறச் சோளியும் தரித்திருந்தாள். ஆனால், பணக்காரன் மனைவி என்று விளம்பரப்படுத்தக் கூடிய விலை உயர்ந்த ஆபரணங்கள் ஏதும் அவள் தரித்திருக்கவில்லை. மழமழவென்று காணப்பட்ட அவளது மென்மையான கழுத்தைச் சுற்றி, மெல்லிய தங்கச் சங்கிலி ஒன்று அணி செய்தது. அதன் நடுவில் தொங்கிய பச்சைக் கல் பதக்கம் அவளது நெஞ்சுக் குழியுடன் கொஞ்சிக் கொண்டிருந்தது.



இடது கை மணிக்கட்டில் சிறு தங்கக் கடிகாரமும் வலது கரத்தில் இரண்டு பொன் வளையல்களும் மட்டுமே தான் அணிந்திருந்தாள். அலைகள் எனச் செழுமையாக புரண்ட தனது கரிய கூந்தலை அவள் அள்ளி, வட்ட வடிவத்தில் தலையின் பின்புறத்தில் உயர்த்திக் கட்டிக் கொண்டிருந்தாள். அதைச் சுற்றிக் கொண்டிருந்த மல்லிகை மலர் மாலையிலிருந்து புறப்பட்ட மணம் சிகிச்சைச் சாலையிலிருந்து வந்த 'லோஷன்' வாசனையை விரட்டியடித்துக் கொண்டிருந்தது.

நெற்றியில் சிறிய குங்குமப்பொட்டும், கண் இமைகளில் லேசாகப் படிந்திருந்த மையும், உதடுகள் மீது மங்கினாற்போல் அவள் பூசியிருந்த உதட்டுச்சாயமும் அவளது இயற்கை அழகை மிகைப்படுத்திக் கொண்டிருந்ததை வைத்தியர் கவனிக்கத் தவறவில்லை. பார்வைக்கு எளிமையாக உடுத்தியிருப்பவள் போல் தோன்றிய போதிலும், நாற்காலியில் வந்து அவள் அமர்ந்த விதம், நிமிர்ந்த பார்வை இவைகளில் ஆடம்பரமும் அகங்காரமும் மிதமிஞ்சித் தேங்கிக் கிடப்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

''தங்களை நான் இதுவரை பார்த்ததில்லை. இன்று சந்திக்க நேர்ந்தது பற்றி மிகவும் சந்தோஷம். என்னால் ஆக வேண்டியது ஏதாவது இருந்தால்...?'' என்று முடிக்காது நிறுத்தினார் வைத்தியர் மரியாதை நிறைந்த குரலில்.

''ஜகதீசனை என்னுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டும். அவ்வளவுதான்'' என்றாள் அவள் மிடுக்காக.

''அவருக்கு நான் ஆரம்பித்த சிகிச்சை இன்னும் முடியவில்லை. அதற்குள் அனுப்பி வைப்பது சரியல்லவே!'' என்று வைத்தியர் கூறி முடிக்குமுன், பரபரப்புடன் தனது

கைப்பையைத் திறந்தாள் ஸ்ரீமதி நாராயணன். ''என் கணவர் தங்களிடம் இதைக் கொடுக்கச் சொன்னார்'' என்று கூறிவிட்டு, ஒரு காகித உறையை அவரிடம் நீட்டினாள். உள்ளிருந்த கடிதத்தை எடுத்துப்பார்த்தார் டாக்டர்.

''ரத்த அழுத்தத்தினால் கொஞ்ச காலமாக என் உடல் மிகவும் பலஹீனமாக இருக்கிறது. வியாபார சம்பந்தமான விஷயங்களை அறிந்து கொள்ளவும் எனக்கு உதவியாகவும் ஜகதீசன் அருகில் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கடந்த முறை நான் அங்கே வந்த பொழுது அவன் என்னிடம் நன்றாகத்தான் பேசினான். தோற்றத்திலும், அவன் நடந்து கொண்ட முறையிலும் எதுவும் தவறாகக் காணப்படவில்லை. அதனால் அவனது நோய் குணமாகி விட்டதென நினைக்கிறேன். வயது காலத்தில் என் மகனுடன் கூடச்சேர்ந்து மீதி நாட்களைக் கழிக்க நான் விரும்புவது இயல்பு எனத் தாங்கள் கருதுவீர்கள் என நினைக்கிறேன். 'இன்புளுயன்ஸா' காய்ச்சலால் என்னால் நேரிடையாக வந்து அழைத்துப்போக முடியவில்லை. அதனால் தாங்கள் என் மகனை என் மனைவியுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்கள் சிகிச்சை விடுதிக்குச் சேர வேண்டிய தொகைக்குப் 'பில்' வந்ததும் கட்டி விடுகிறேன். சிரமத்திற்கு மன்னிக்கவும். என் குழந்தையைக் கருத்துடன் கவனித்து வைத்தியம் செய்து குணப்படுத்தியதற்கு நான் என்றென்றும் தங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

நமஸ்காரம்,
நாராயணன்

கடிதத்தை மடித்து மேஜை மீது வைத்துவிட்டு டாக்டர் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டார். யோசனையுடன் விரல்களால் மேஜை மீது தட்டிக்கொண்டு, ''உம்...'' என்று பெருமூச்சு விட்டார்.



''தங்கள் சிகிச்சை விடுதி சொந்த வைத்திய விடுதிதானே? அதனால் உறவினர் வேண்டியபோது நோயாளியை வெளியே அனுப்பிவிட வேண்டியதுதானே! ஏன் யோசிக்கிறீர்கள்?'' என்றாள் அதட்டலான குரலில் அந்தப் பெண்மணி.

டாக்டர் லேசாகச் சிரித்தார். ''அம்மா என் வைத்திய விடுதி சிறைச்சாலையல்ல. உறவினர்கள் விரும்பினால் உடனே நோயாளியை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடலாம். ஆனால், அவர்கள் செய்வது சரியா தவறா என்று ஆலோசனை சொல்லும் பூரண உரிமை என்னுடையதாக இருக்கிறது. தங்களது கணவரின் கருத்து சரியல்ல. பிள்ளை மேல் கொண்ட பாசத்தினால் பூரண குணமடைந்து விட்டதாக நினைக்கிறார். ஆனால், ஜகதீசன் இன்னும் கொஞ்ச காலம் இங்கே தங்கியிருந்து சிகிச்சை பெறுவது அவசியம் என்று நான் நினைக்கிறேன்'' என்றார்.

மீண்டும் அவசரமாகத் தன் கைப் பையைத் திறந்து துழாவினாள் ஸ்ரீமதி நாராயணன். ஒரு கத்தைக் கடிதங்களை வேகமாக வெளியே இழுத்து மேஜைமீது போட்டாள். ''இவைகளைப் படித்துப் பாருங்கள். சித்த சுவாதீனமற்ற மனிதன் எழுதிய கடிதங்கள் போலவா இருக்கின்றன? பல மாதங்களாக ஜகதீசன் தங்கள் வைத்திய விடுதியில் சிறையிலிருப்பவன் போல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான். சிறு வயதிலிருந்தே தனிமையை அனுபவித்தவன். பணம் இருந்தும் அனாதையாக உறவினர்களிடமும் ஹாஸ்டலிலும் அங்கும் இங்கும் வளர்க்கப்பட்டவன். டாக்டர்! போதும் அவனுக்கு இந்தத் தண்டனை! தனிமையே அவனைப் பைத்தியமாக்குகிறது. அவனுக்கு வேறு எந்த மனநோயும் கிடையாது. என்னைத் தவிர அவனது மனப்போராட்டங்களை உள்ளது உள்ளபடி அறிந்தவர்கள் யாரும் இல்லை. வீண் கதை கட்டி, பித்தன் என்று பெயர் சூட்டி பல இடங்களில் வைத்தியம் செய்து, கடைசியில் தங்கள் வசம் கொண்டு ஒப்படைத்திருக்கிறார்கள். இதெல்லாம் என் கணவரது மூத்தமகன் கிரிதரன் செய்கின்ற சூழ்ச்சி'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

''உங்கள் குடும்பத்தில் நடக்கும் சூழ்ச்சிகளில் நானும் கூட ஈடுபட்டிருப்பதாகத் தாங்கள் நினைக்கிறீர்கள் போலும்'' என்று கேட்டுவிட்டு வைத்தியர் கடகடவென்று சிரித்தார்.

''நான் அப்படிச் சொல்லவில்லை, மன்னியுங்கள்'' என்றாள் பதட்டமாக அவள்.

''நீங்கள் ஜகதீசனை அழைத்துப் போவது பற்றி எனக்குக் கொஞ்சமும் ஆட்சேபணையில்லை. ஆனால், அவனது வைத்தியர் என்ற ஹோதாவில் ஒரு சிறு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். வெளிப் பார்வைக்கு அவன் சாதாரண மனிதனாகக் காணப்படுவான். ஆனால், ஊன்றி, விஞ்ஞானக் கண்களோடு கவனித்தால், அவனிடம் ஒருவித மனப்போராட்டம் குடிகொண்டிருப்பது விளங்கும். காதல், ஏமாற்றம், துக்கம் போன்ற பலமான உணர்ச்சிகளில் சிக்குண்டால் அந்த விசித்திரமான மனப்போராட்டம் மிருகத்தன்மையை அடைந்துவிடக் கூடும். அதனால் அவனுக்கும் பிறருக்கும் ஆபத்து ஏற்படலாம். இன்னும் கொஞ்ச காலம் இங்கே இருந்தால் ஒரு சமயம் அந்த மனப்போராட்டம் அவனது உள்ளத்திலிருந்து ஒரேயடியாக மறைந்தாலும் மறைந்து விடலாம். அதை அகற்ற நான் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றார் தயானந்த்.

## 15

ஸ்ரீமதி நாராயணன் அலுப்புடன் தலையை ஆட்டினாள். ''சிகிச்சை, மருந்து என்று கடந்த சில வருஷங்களாக அவனை ஊர் ஊராக அனுப்பி அலுத்து விட்டது. படித்தவன். புத்திசாலியான வாலிபன், அழகு, அந்தஸ்து, பணம் ஒன்றுக்கும் குறைவு இல்லை. மற்றவர்கள் போல் காலா காலத்தில் ஒரு பெண்ணை மணந்து கொண்டு இயற்கையாக வாழ்ந்தால் எல்லாம் சரியாகி விடும் என்பது என் கருத்து'' என்றாள்.



டாக்டர் தயானந்த், ''உங்கள் இஷ்டம்!'' என்ற பாவனையில் தமது தோள்களைக் குலுக்கினார். ஸ்ரீமதி நாராயணன் மேலே தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள்.

''தாங்கள் என் நிலையையும் சற்று யோசிக்க வேண்டும். மாற்றாந்தாய் என்றால், உடனே மூத்தவள் குழந்தைகளைக் கழுத்தை முறித்துக் கொல்லப் புறப்பட்ட பிசாசு என்று உலகம் நினைக்கிறது. என்னைப் பொறுத்தவரை அவன் எனது சொந்தப் பிள்ளைக்கு ஒப்பானவன். வயதில் அவன் என் சகோதரனைப் போல் காணப்பட்டாலும் நான் அவனை என் பெற்ற மகனாகப் பாவிக்கிறேன். உங்களுக்கு எங்கள் குடும்ப வரலாறு தெரியாததனால்...'' என்று வேகமாகப் பேசியவள் சட்டென்று நிறுத்தினாள்.

அஞ்சனம் தோய்ந்த அவளது கண்களில் அருவி நீர் எனக் கண்ணீர் வழிந்தது. இடையில் செருகியிருந்த கைக்குட்டையை எடுத்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஜகதீசனை இங்கு கொண்டு வந்து சேர்த்தபொழுது ஸ்ரீமான் நாராயணன் எல்லாம் விவரமாகச் சொல்லியிருக்கிறார்'' என்று பதில் அளித்த டாக்டர் தயானந்தர் எழுந்திருந்தார். மேஜை மீதிருந்த மணியை வேகமாக தட்டினார். டக்டக் என்று பாதரட்சை ஒலிக்க ஓடோடியும் வந்தாள் ஒரு நர்ஸ். ''இருபத்தேழாம் நம்பர் நோயாளியை அழைத்துச் செல்ல இவர்கள் வந்திருக்கிறார்கள். உடனே டிஸ்சார்ஜ் செய்ய ஏற்பாடு செய்'' என்று உத்தரவிட்டு ஸ்ரீமதி நாராயணனுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டார். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விட்டாள் அவள். ''தாங்கள் செய்த உபகாரத்திற்கு மெத்த நன்றி'' என்று பணிவாகக் கூறிவிட்டு விடுக்கென வேகமாக அறையை விட்டு வெளியே சென்றாள்.

அதற்குப் பின் வைத்தியர் தமது வார்டுகளைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். தம்மிடம் விடைபெற்றுக் கொண்டு, குதூகலமாக வெளியேறிய அந்த வாலிபன், தோட்டத்தைச் சார்ந்த மதில்சுவர் அருகே நின்று கொண்டிருந்த காருக்குள்

ஏறிக்கொள்ளும் வரை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டே நின்றார். ஜகதீசனை வெளியே அனுப்பியது அவருக்கு அவ்வளவு திருப்தியாக இருக்கவில்லை. பற்பலவிதமாக உள்ளத்தில் எழுந்த சிந்தனையையும் தமது பொறுப்பையும் கழுவி விடுகிறவர் போல், வார்டு நடுவிலிருந்த மேஜைக்கு விரைந்தார். அதன் மேல் வைத்திருந்த பீங்கான் கிண்ணத்தில் இருந்த மருந்து நீரில் தமது கரங்களைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டு நோயாளிகளை கவனிக்கப் புறப்பட்டார் அந்த வைத்தியர்.

இரண்டு வார காலம் சென்றது. அன்று மாலை டாக்டர் தயானந்த் தமது சிகிச்சை விடுதியின் பிரத்தியேக அறையில் வந்து அமர்ந்து, ஒரு சில நிமிஷங்கள் கூடச் சென்றிருக்காது. நர்ஸ் வேகமாக உள்ளே வந்தாள். ''தங்களை அவசரமாகக் காண ஒரு வாலிபர் வந்து வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்'' என்றாள். ''வரச்சொல்'' என்று கூறிவிட்டு, காலைப் பத்திரிகையைப் படிப்பதற்காக சாவகாசமாகப் பிரித்தார் அவர். உள்ளே வந்த வாலிபனைக் கண்டதும் ஒரு கணம் அவர் திடுக்கிட்டுப் போய்விட்டார். ஒருவாறு தம்மைச் சமாளித்துக் கொண்டு எழுந்து, புன்முறுவலுடன் வந்த வாலிபனது கரங்களை உற்சாகமாகப் பிடித்துக் குலுக்கினார். ''என்ன மிஸ்டர் கிரிதர்! உங்களைப் பார்த்து வெகு நாட்களாயிற்றே. அதனாலோ என்னவோ உங்களைக் கண்டதும் ஜகதீசன் என்று எண்ணி ஒரு நிமிஷம் திகைப்படைந்து போய்விட்டேன்!'' என்றார் வைத்தியர்.

''அப்படித் தவறு செய்வதற்கு நாங்கள் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரட்டையர்கள் அல்லவே! வெவ்வேறு தாயாருக்குப் பிறந்த சகோதரர்கள் நாங்கள் என்றால் யாரும் நம்புவதேயில்லை'' என்று கூறிவிட்டு மெல்லச் சிரித்தபடி நாற்காலி ஒன்றில் அமர்ந்தான் அந்த வாலிபன்.

''ஒரே உயரம், ஏறக்குறைய ஒரேவிதமான முகஜாடை. உற்றுக் கவனிக்காவிட்டால் யாரும் ஏமாந்து விடுவார்கள். ஆமாம் உங்கள் இருவரில் நீங்கள் தானே மூத்தவர்? வயது



வித்தியாசம்கூட அதிகமில்லை போலிருக்கிறதே!'' என்று கேட்ட வைத்தியர் தமது ஆசனத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டார்.

மும்முரமாக ஆரம்பித்த கோடை காலத்தின் இறுதி என்றபோதிலும் அன்று பிற்பகல் வேளையிலும் புழுக்கம் அதிகமாகத்தான் இருந்தது. நெற்றி மீதும் கழுத்திலும் வழிந்தோடிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு கிரிதரன் புன்முறுவல் செய்தான்.

''எங்கள் குடும்ப வரலாற்றை விவரமாக எடுத்துச் சொன்ன என் தகப்பனார் ஒன்று சொல்ல மறந்துவிட்டார். மன்னிக்கவும். என் தந்தைக்கு ஒரே சமயத்தில் இரண்டு மனைவியர் இருந்தார்கள். நான் பிறந்த சில மாதங்களில் என் சிறிய அன்னை ஜகதீசனைப் பெற்றெடுத்தார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக சில நாட்களிலேயே பிரசவ ஜன்னியினால் இறந்து விட்டார்கள். இதனால் ஜகதீசனையும் தன் குழந்தையாக எண்ணி என் தாயார்தான் அன்போடு எடுத்து வளர்த்து ஆளாக்கினார்கள். நிறைந்தமனம் கொண்ட அந்த உத்தமியை அன்னையாக வெகுநாட்கள் அடைந்திருக்க எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை. என் சகோதரி சந்திரா பிறந்த பின்னர் நோயாகப் படுத்தவர்கள் எழுந்திருக்கவில்லை. எனவே நாங்கள் தாயற்றவர்களாகி விட்டோம்'' என்றான். பிரகாசமாக இருந்த அவன் முகம் இதைக் கூறி முடித்ததும் வாட்டமடைந்ததைக் கண்ணுற்ற டாக்டர் ஒரு கணம் மௌனமாக இருந்தார்.

''அப்படியா? இப்பொழுது புரிகிறது. தற்சமயம் உயிரோடு இருக்கும் ஸ்ரீமதி நாராயணன் தங்கள் தந்தையின் மூன்றாவது மனைவி அல்லவா?'' என்றார் கொஞ்சநேரம் பொறுத்து.

வைத்தியரிடமும் வக்கீலிடமும் ரகசியங்களை மூடிப்பதில் பயன் இல்லை என உணர்ந்திருந்த கிரிதரன், ''என் தந்தை சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன்புதான் மூன்றாவது முறையாகத் திருமணம் செய்து கொண்டார்'' என்றான் மனக்கிலேசத்துடன்.

''உங்கள் சிறிய தாயாரைக் கண்டதும் நானும் அவ்வாறேதான் எண்ணினேன்'' என்று மெல்லக் கூறினார் வைத்தியர் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே.

''என்ன சொன்னீர்கள்? என் சிறிய தாயாரைப் பார்த்தீர்களா?''

''இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். அடுத்தபடியாகச் சொல்லப்போகும் விஷயம் உங்களுக்கு மன அதிர்ச்சியை உண்டு பண்ணும் என்பது திண்ணம். மிஸ்டர் கிரிதர்! உங்கள் சிறிய தாயார்... ஜகதீசனை தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள்'' என்றார் வைத்தியர்!

மின்சாரத்தினால் தாக்குண்டவன் போல் துள்ளி எழுந்தான் கிரிதரன். ரத்தமாக அவன் முகம் சிவந்து விட்டது. அவன் நெஞ்சு பதறியது. ''எங்கள் குடும்ப வரலாறு முழுவதும் தெரிந்திருந்தும் தாங்கள் எப்படி விட்டிற்கு அனுப்பச் சம்மதித்தீர்கள்?'' என்று பதட்டமாகவும் கோபமாகவும் கேட்டான்.

டாக்டர் மௌனமாக மேஜை அறையில் இருந்த கடிதத்தை எடுத்து நீட்டினார். கடிதத்தைப் படித்துவிட்டு கிரிதரன் கோபத்துடன் சிறிது நேரம் வாளா நின்றான். ''தந்தை தமது மனத்தை விரைவாக மாற்றிக் கொள்வார் என்று நினைக்கவில்லை இது என் சகோதரிக்குத் தெரிந்தால் மிகவும் பீதி அடைவாள். நான் என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை'' அவன் குரலில் துக்கமும் கலவரமும் கலந்து தொனித்தன.

''என்மேல் பிசகில்லை. உமது தந்தையின் வேண்டுகோளை என்னால் மறுக்க முடியவில்லை. அனுப்பி விட்டேன்'' என்றார் வைத்தியர் அனுதாபத்துடன்.

''மன்னிக்க வேண்டும் டாக்டர்'' என்றான் கிரிதரன் பவ்யமாக. தன் உள்ளத்தில் குமுறிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, வைத்தியரின் கரங்களை அன்போடு பற்றிக் குலுக்கிவிட்டு, ''தாங்கள் இதுவரை செய்த உதவிக்கு



மெத்த நன்றி'' என்று தடுமாறினான்.

டாக்டர் தயானந்த் அன்போடு அவனை அணைத்துக் கொண்டார். ''மிஸ்டர் கிரிதர்! என் கடமைகளைக் கூடியவரை செய்தேன். முழுவதும் செய்து முடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று ஒரு வருத்தம் கொஞ்சம் உண்டு. எனினும், எப்பொழுதாவது என் உதவி தேவையானால் தயக்கமில்லாமல் தாங்கள் என்னை நாடலாம். போகுமுன் ஒரு விஷயத்தை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஜகதீசன் வெளிப் பார்வைக்குக் குணமாகிவிட்டவன் போல் தோன்றுவான். ஏமாந்து விடாதீர்கள்! அவனது நோய் நீறு பூத்த நெருப்பாக உள்ளது என்பதை மறக்க வேண்டாம்!'' என்றார்.

கிரிதரன் பதிலுக்கு தலையை அசைத்துவிட்டு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தான். தனக்காகத் தோட்டத்தின் மரத்தடியில் காத்திருந்த காரின் கதவை அவசரமாகத் திறந்தான். ''கொஞ்சம் நகரும்! நான் வண்டியை ஓட்டுகிறேன்'' என்று அதட்டிவிட்டு உள்ளே ஏறிக் கொண்டான். டிரைவர் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த சித்தாமணி சட்டென்று ஒதுங்கிக் கொண்டார். முப்பது வருஷ காலமாக நாராயணன் அவர்களின் குடும்பத்திலேயே பணியாற்றிவரும் அவருக்கு, குடும்பத்திலிருந்த ஒவ்வொருவரையும் அணுஅணுவாகத் தெரியும். கிரிதரன் குரலில் தொனித்த கடுமையைக் கண்ட சித்தாமணிக்கு ஏதோ விபரீதம் நடந்து விட்டிருக்கிறது என அறிந்துகொள்ள அதிக நேரம் செல்லவில்லை.

நேற்று வரை தன் கையில் தூக்கித் தோளோடும் மார்போடும் அணைத்து மகிழ்ந்து வளர்த்த பிள்ளை கிரிதரன் என்ற போதிலும் அந்தக் கிழவர், குடும்பத்தில் தமக்கிருந்த ஸ்தானத்தை மறக்கவில்லை. என்ன இருந்தாலும் அவர் அந்த வீட்டு வேலைக்காரர். கிரிதரனோ தந்தைக்குப் பின் பொறுப்பை வகிக்கப் போகும் எஜமான். எனவே, அவர் மரியாதையுடன் காரின் சாவியைத் தமது சட்டைப் பையிலிருந்து எடுத்து அவனிடம் நீட்டினார். அஸ்தமிக்கு முன்

வீர சோழன் பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற துடிப்பும், தணியாது உள்ளே புகைந்து கொண்டிருந்த கோபமும் ஒன்றுசேரவே கிரிதரன் ஆக்ஸிலேட்டர் மீது ஆவேசமாக காலை வைத்து மிதித்தான். அந்த வேளையில் குளிர்ந்து வீசிய காற்றைப் பிளந்து கொண்டு மனோ வேகத்தில் கார் ஓடியது. அறுபது எழுபது எண்பது என்று வேகத்தைக் காட்டும் முள் முன்னேறிக் கொண்டு போவதைக் கண்ணுற்றார் சிந்தாமணி. வெகுநேரம் அவரால் வாயை மூடிக்கொண்டிருக்க முடியவில்லை.

''கொஞ்சம் வேகத்தைக் குறைத்தால் நல்லது'' என்றார் மெல்லிய குரலில் பொதுவாக.

''கிரிதரன் அதைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தான். தங்கள் குடும்பத்தின் இன்ப துன்பம் சகலவற்றிலும் பங்கு கொண்டு நன்றியோடு உழைத்து வந்த அவரை அவன் ஒரு நாளும் வேலைக்காரர் என்ற ஸ்தானத்தில் எண்ணி அலட்சியப்படுத்தியதில்லை. எனவே, அவன், ''சிந்தா, இறக்கை கட்டிக் கொண்டு பறந்தோடிப் போகவேண்டும் என்று ஆத்திரமாக இருக்கிறது. ஜகதீசனை டாக்டர் வெளியில் அனுப்பி விட்டார்!'' என்றான் ஆத்திரத்துடன்.

''ஆனால், இந்த வேகத்தில் நாம் போனால் நேரே ஆஸ்பத்திரிக்குத்தான் போக முடியும்!'' என்று சிரித்தார் சிந்தாமணி.

கிரிதரன் இதைக் கேட்டதும் பக்கென்று சிரித்து விட்டான். அவனது கோபம் கொஞ்சம் அடங்கியது. தொடர்ந்து காரின் வேகமும் தணிந்தது.

அவர்கள் வீரசோழன் பட்டணத்தைச் சமீபிக்குமுன் அஸ்தமித்து வெகுநேரம் ஆகிவிட்டது. போதாதற்குச் சிறிது தூறல்களாக ஆரம்பித்த மழை பின்பு பெரும் கோஷத்துடன் பொழியத் தொடங்கி விட்டதனால் காரை மிகவும் நிதானமாக ஓட்ட வேண்டி வந்துவிட்டது. எவ்வளவுக்கெவ்வளவு அவன் அவசரப்பட்டானோ அவ்வளவுக்கவ்வளவு ஊர் வந்து சேரத் தாமதமாகி விட்டது.



ராஜபாட்டையிலிருந்து வண்டியை மெல்லத் திருப்பினான். இன்னும் கொஞ்ச நேரத்தில் வீடு வந்து சேர்ந்து விடுவோம் என்ற எண்ணம் மன அமைதியை உண்டாக்கவே உற்சாகத்துடன் காரை ஒரு சிறு சந்திற்குள் திருப்பி வேகமாக ஓட்டினான். ஒரு சில அடிகள் கூட வண்டி சந்திற்குள் சென்றிருக்காது. சடக்கென்று பிரேக்கை அழுத்திக் காரை ஒரு பெரும் குலுக்கலுடன் அவன் நிறுத்த வேண்டி வந்து விட்டது. ஆசனத்திலிருந்து முன்னால் போய் விழுந்து கண்ணாடி மீது முட்டிக்கொள்ளாது தப்பிய சிந்தாமணி தமது வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டு, ''என்ன கிரி! இது என்ன இது?'' என்று பதறினார்.

பளிச்சென்று விளக்கு வீசிய வெளிச்சத்தில், பொழிந்து கொண்டிருந்த மழையில் காரின் முன் சக்கரங்களுக்கு அருகாமையில் தரையில் சுருண்டு கிடந்த ஒரு பெண்ணின் உருவத்தைக் கண்டதும், இருவரும் ஏக காலத்தில் ''அடாடா'' என்று கலவரத்துடன் கூவியவாறு காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்தார்கள்.

# 16

'படால்' என்ற பெரும் சப்தத்துடன் கதவு சாத்தப்பட்டது. மஞ்சுளா பெட்டியைச் சுமந்து படிகளில் இறங்கினாள். கைவிரல்களைச் சுட்ட புண்ணிலிருந்து புறப்பட்ட எரிச்சல் தாள முடியவில்லை. அதைவிட அவமானத்தில் குமுறிய உள்ளத்தின் எரிச்சலை அவளால் பொறுக்கவே முடியவில்லை. நெஞ்சு படபடக்க, துக்கம் கன்னங்களை நனைக்க அவள் மெல்ல நடந்தாள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உடலை வருந்தி உழைத்த கூலிக்கு ஏற்பட்ட மோசத்தை எண்ண எண்ண அவள் மனம் கொதித்தது. 'யாரிடம் இதைச் சொல்வது? எவரிடம் முறையிட்டு நியாயம் பெற முடியும்? அவள் கள்ளங் கபடமற்றவள். அவள் மீது வீணாகக் குற்றம்

சமத்தப்பட்டிருக்கிறது என்பதை ஒரு சிலர் கூட நம்பமாட்டார்களா? அனாதை, ஏழை என்ற காரணத்திற்காக உண்மை கூடவா ஓடி ஒளிந்து கொண்டுவிடும்?' என்று பலவாறு அவள் சிந்தனை அலைபாய்ந்து கொண்டிருந்தது.

அவள் எதிர்பார்த்தபடியே சில்லென்று காற்றை எழுப்பிவிட்டு மழை பெரும் தூறல்களாக விழ ஆரம்பித்து விட்டது.

யசோதாவின் வீட்டுத் தோட்டத்தில் என்றுமே விளக்குகள் கிடையாது. மழையுடன் இருட்டும் கூடச் சேர்ந்து கொள்ளவே தோட்டம் ஒரே இருளில் மூழ்கிக் கிடந்தது. அவசரமாகப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டுத் திறந்தாள் மஞ்சுளா. இந்த அபூர்வமான வேலைக்குப் புறப்படுமுன் வேண்டிய பொருள் என்று வாங்கியிருந்த புதுக்குடை அப்படியே பத்திரமாகப் புடவை மடிப்பில் கிடந்தது. இருட்டில் துழாவி அதை எடுத்துப் பிரித்தாள். ஒரு கையில் குடையும், ஒரு கையில் பெட்டியுமாக, வானத்திடை மழை நடுவே கொடி விட்டு ஓடிய மின்னலின் துணைகொண்டு தட்டுத் தடுமாறி மெல்ல வெளியே வந்தாள்.

தெருவின் இரு மருங்கிலும் நின்று கொண்டிருந்த மின்சார விளக்குக் கம்பங்களிலிருந்து வீசிய விளக்கொளியில் தெரு அவ்வளவு இருட்டாகத் தென்படவில்லை. சாதாரண காலங்களில் அஸ்தமிக்குமுன்பே வீரசோழன் பட்டணவாசிகள் அதிகம் வெளியில் வரமாட்டார்கள். அதுவும் மழை என்றதும் ஊரே ஒரேயடியாக உறங்கி விட்டதுபோல் தெரு சந்தடியற்றிருந்தது.

அவமானமும் ஆத்திரமும் உந்த வேகமாக வெளியே வந்து விட்டாள் அவள். ஆனால், கொலை செய்தால் கூடக் கேள்வி முறை இடையாது போல் சூன்யமாகக் காணப்பட்ட தெருவில் நடந்து போக அவளுக்குக் கொஞ்சம் அச்சமாகவே இருந்தது. பெட்டியைக் கீழே வைத்துவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். நிதானமான வேகத்தில் விழ்ந்து கொண்டிருந்த மழைத்துளிகளின் கோஷம் தவிர எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. அழகு என்ற ஆபத்துடன் பகல்



வேளையிலேயே ஒரு இளம் பெண் தனிவழி நடப்பது என்றால் யோசிக்க வேண்டிய காரியம். அதுவும் இரவில் என்றால்? மஞ்சுளா மேலே நடக்க முடியாது பயத்துடன் தயங்கினாள்.

இரவு மட்டும் யசோதாவின் வீட்டு வாயில் வராந்தா மீது படுத்துக் கிடந்துவிட்டு, பொழுது விடிந்ததும் வெளியே செல்லலாம் என்றாலோ அதுவும் முடியாத காரியம். திடீரென்று சந்தேகத்துடன் கதவைத் திறந்து கொண்டு பாதி ராத்திரியில் யசோதா வெளியே வந்து பார்த்தால், கட்டாயம் ஒன்று கழுத்தைப்பிடித்து பலவந்தமாக வெளியே கொண்டு தள்ளினாலும் தள்ளுவாள், அல்லது பயமுறுத்ியது போல் போலீசாரைக் கூப்பிட்டு அவர்கள் வசம் ஒப்படைத்து விட்டாலும் விடுவாள். ஏழைப்பெண் பேச்சைப் போலீசார் எங்கே காதில் உடனே போட்டுக் கொள்ளப் போகிறார்கள்? சொல் வன்மை இல்லாதார் பேச்சு பொய் போல் காணப்படுவது இயல்புதானே? ஒரு நாள் இரவு முழுவதும் போலீஸ் லாக்கப்பில் கிடந்தாள் மஞ்சுளா என்ற அவச்சொல் ஒன்று பாக்கியாக இருந்ததா என்ன?

நின்று கொண்டே யோசித்தாள். 'சீச்சீ! என்ன பயம். அவமானத்தை விட உயிரா பெரிது?' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தாள். 'வெளியே நட' என்று யசோதா உத்தரவிட்ட உடனேயே மஞ்சுளாவுக்கு கங்கம்மாளின் நினைவுதான் ஏற்பட்டது. லக்ஷ்மிபுரத்திற்கும் அவள் நின்று கொண்டிருந்த தெருவிற்கும் இடையே சுமார் ஒன்றரை மைல் தூரம் இருந்தது. குறுக்கே புகுந்து சந்துகள் வழியே சென்றால் விரைவில் போய் சேர்ந்து விடலாம். ஆனால், இரவு வேளைகளில் கடைத்தெரு வழியே நடந்து செல்வதுதான் நலம் என்று எண்ணிக்கொண்டு விரைவாக நடந்தாள்.

ஒரே மூச்சாக, சற்றுக்கூட நிற்காது அந்தத் தெருவைத் தாண்டி நகரத்தின் நடு நாயகமாக விளங்கும் கடைத்தெருவிற்குள் புகுந்தாள். எல்லாக் கடைகளும் அந்த வேளையில் மூடப்பட்டு விட்டிருந்ததனால் கடைத்தெருவில் கூட அதிக வெளிச்சம் இல்லை. தெருவின் முகப்பில்

அமைந்திருந்த வெற்றிலைப் பாக்குக் கடை மட்டும் சாத்தப்படவில்லை. அதன் முன்னால் இரண்டு வாலிபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் பம்மென்று சமுத்திர அலைபோல் சிகையை மேலே வாரிவிட்டுக் கொண்டிருந்த கிராப்புத் தலை வாலிபன், தான் ஊதிக்கொண்டிருந்த சிகரெட்டைக் கீழே வீசிப்போட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தான். 'விஷ்!...' என்ற அவனது வாய் உல்லாசமாகச் சீட்டியடித்தது. 'என்னடா!' ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு, தனது ஷர்ட்டுக் காலரை மேலே இழுத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான் மற்றவன்.

ஒரு கையில் குடையும், மற்றொரு கையில் கனமான பெட்டியும் கொண்டு தள்ளாடியபடி அழகு தேவதை அன்ன நடை போட்டு வருவது போல் மஞ்சுளா நடந்து வந்த காட்சி வேறு வேலையற்ற அந்த இரு வாலிபர்கள் உள்ளத்திலும் உற்சாகத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். ஒருவரை யொருவர் பார்த்து விஷமமாக கண்களைச் சிமிட்டிக் கொண்டனர். சற்று முன்புதான் அவர்கள் இருவரும் கனல் பொறி தெறிக்கும் வசனம் மிகுந்த ஒரு தமிழ்ப் படத்தைப் பார்த்துவிட்டு வெளி வந்திருந்தார்கள். அவர்கள் காதுகளில் அதே வசனம் இன்னும் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. எனவே, அந்தத் தோரணையில் ''இரவிலே தனிவழி நடந்து செல்லும் இன்பப் பொக்கிஷமே! பெட்டியை நான் தூக்கி வரட்டுமா? கலங்காதே கயல்விழியே!'' என்றான் கேலியாகச் சீட்டியடித்த அந்த ஆண் சிங்கம்.

''நண்பா! அந்த கவலை உனக்கேன்? இந்த அழகு ஓவியத்தின் அவதியைக் குறைக்க அடியேனை முதலில் அனுப்பு!'' என்றான் கிண்டலாக இரண்டாவது பேர்வழி. வெற்றிலைக் கடைக்காரன் வெளியே எட்டிப் பார்த்தான். ''ஸ்! சும்மா இருங்கள். ஏன் அய்யா வீண் வம்பு உங்களுக்கு?'' என்று அவர்களை அதட்டினான்.

மஞ்சுளாவின் இருதயம் படபடவென்று பயத்தினால் அடித்துக் கொண்டது. துஷ்டத்தனமாகப் பேசும் அந்த வாலிபர்கள் பின் தொடர்ந்தால் என்ன ஆவது? கலக்கத்துடன்



மிக வேகமாக நடந்தாள். பெட்டி கனம் கையை இறுத்தியது. கட்ட புண் பற்றி எரிந்தது. மழை ஜலத்தைச் செருப்பு வாரி இறைத்ததனால் நனைந்து விட்டிருந்த புடவை கால் மீது சிக்கிக் கொண்டு வேக நடையைத் தடுக்கியது.

கடைத் தெருவை ஒரு வழியாகக் கடந்து விட்டாள். பின்னால் திரும்பிப் பார்த்தபொழுது அந்த வாலிபர்கள் அவள் எண்ணியதுபோல் பின் தொடர்ந்து வந்து வம்பு செய்யவில்லை, எனவே சற்று நிம்மதியாக மூச்சுவிட்டாள். கடைத் தெருவின் முடிவிலிருந்த பெரிய சந்தில் புகுந்து வேகமாகச் சென்றால் லக்ஷ்மிபுரத்துக்குச் செல்லும் ராஜபாட்டையை சீக்கிரம் அடைந்துவிட முடியும் என்ற ஆசை குறுக்கிடவே, சுற்றி வளைத்துச் செல்லப் போட்டிருந்த திட்டத்தைக் கைவிட்டுச் சந்திற்குள் நுழைந்தாள். பெட்டியின் கனம் பொறுக்க முடியாது போகவே, சற்று அதைக் கீழே வைத்துவிட்டு, கையை உதறிச் சரிப்படுத்திக் கொண்டாள்.

ஈரமாகிவிட்ட புடவையின் நுனியைத் தூக்கி நன்றாகத் தண்ணீர் போகப் பிழிந்துவிட்டு, பெட்டியை மறுபடி கையில் தூக்கிக் கொண்டு திரும்பிய மஞ்சுளா அப்படியே திடுக்கிட்டு நடு நடுங்கிப் போய்விட்டாள். தெருக்கோடியிலிருந்த விளக்கிலிருந்து வீசிய மங்கிய ஒளியினால் சந்தின் சுவரின் மீது ஒரு பெரிய நிழல் விழுவதைக் கண்டதும் பயத்தினால் அவள் மேனி பதறத் தொடங்கி விட்டது.

''ஏ குட்டி! என்னா செய்றே இங்கே?'' என்று அதட்டிய குரலைக் கேட்டதும் கிலியில் அவள் உயிரே போய்விடும் போல் இருந்தது. கட்டு மீசையும், இடையிலே கைலி வேஷ்டியும், காடுபோலப் படர்ந்த கிராப்பு சிகையுமாக, சந்தின் எதிர்ப்பக்கத்திலிருந்த கடையின் திண்ணையிலிருந்து குதித்தான் ஒரு போக்கிரி. கட்டுமஸ்தான அந்த ஆளைக் கண்டதும் அவள் கால்கள் பின்னின.

''பயப்படாதே! உன் மச்சாண்டி நான்!'' என்று கோரமாக நகை செய்த வண்ணம் அவள் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்தான். தாமதித்தால் ஆபத்துதான் என உணர்ந்த

மஞ்சுளா, குடையை டபக்கென்று மூடிக் கையில் எடுத்துக் கொண்டாள். ஆவேசம் பிடித்தவள்போல் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேகமாக மழையில் ஓடினாள். "நில்லடி கண்ணே! நில்லு!" என்று கூவிக்கொண்டு பின் தொடர்ந்தான் அந்த முரடன்.

வேட்டை நாயைக் கண்டு கடுகி ஓடும் மான்குட்டி போல் ஓடினாள் மஞ்சுளா. எந்த நிமிஷமும் அவள் இருதயம் அச்சத்திலே வெடித்துவிடும் போல் தீவிரமாக அடித்துக் கொண்டது. பின்னால் வந்த ஆசாமி வெகு அருகில் வந்து விட்டதுபோல் ஒரு பிரமிப்பு ஏற்படவே, தலைதெறிக்கும் வேகத்தில் சந்தின் குறுக்கே பாய்ந்தாள். அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். தரையில் கிடந்த ஒரு வாழைப்பழத் தோலின் மீது காலை வைத்து விட்டாள். மழையும் சேர்ந்து கொள்ளவே அது வேகமாக அவளைச் சறுக்கித் தள்ளிவிட்டது. பெட்டியையும் குடையையும் போட்டுக்கொண்டு தடால் என்று கீழே விழுந்து விட்டாள். 'ம்ம்... கரக்' என்று கோரமானதொரு சப்தம் காதைப் பிளந்ததும், பளிச்சென்று வீசிய விளக்கொளியும் எல்லாம் ஒரு கனவுபோல் தான் அவளுக்குத் தோன்றின.

"ரொம்ப அடிபட்டு விட்டதா?" என்று அனுதாபத்துடன் தன்னை யாரோ தூக்கி உட்கார வைப்பதை உணர்ந்து, கண்களைத் திறந்து பார்த்தாள். பளிச்சென்று சந்தின் மறுகோடிவரை வீசிய விளக்கொளியில், நனைந்து கொண்டு நின்ற அந்தக் கிழவர் தடுத்தாட் கொள்ள வந்த தெய்வம் போல் தோன்றினார். சுற்றுமுற்றும் பார்த்தாள். துரத்தி வந்த அந்த துஷ்டனைக் காணவில்லை. "காயம் ஏதும் ஏற்படவில்லை. நல்லவேளை. நீங்கள் காரை நிறுத்தினீர்கள். இல்லாவிட்டால்...." என்று துக்கத்துடன் இறைந்தபடி மெல்ல எழுந்து நின்றாள். தனக்குவர இருந்த பெரிய ஆபத்தின்போது திடீரென்று தோன்றி உதவி செய்ய முன் வந்த அந்தக் கிழவர் பாதங்களில் பலமுறை விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்போல் நன்றிப் பெருக்கில் அவள் உள்ளம் விம்மியது.



"இல்லாவிட்டால் எங்கள் தலையில், கல்லைப் போட்டிருப்பீர்கள். தெருவில் கொஞ்சம் பார்த்து நடக்கக் கூடாதா?" என்று யாரோ அதட்டுவதைக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். மஞ்சுளாவின் இருதயம் மறுபடியும் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது. ஆனால் பயத்தினால் அல்ல!

மழையில் அதிகம் நனைந்துவிட்டிருந்த போதிலும், வட்ட வடிவமான அந்த அழகான முகமும், கலக்கம் நிறைந்த கருவிழிகளும் கிரிதரனின் ஞாபகத்தில் நன்றாகப் பதிந்திருந்தன. அவன் மேலே ஏதோ சொல்ல வாயைத் திறக்குமுன் சிந்தாமணி குறுக்கிட்டார். "போதும் கிரி! நீங்கள் அதிகம் அதட்டாதீர்கள். பாவம். எங்கேயோ அவசரமாகப் போக வேண்டும் போலிருக்கிறது" என்று பரிந்து பேசிவிட்டு மஞ்சுளாவின் அருகில் வந்து, "அம்மா! வண்டியில் ஏறிக்கொள். நீ போக வேண்டிய இடத்தைச் சொன்னால் கொண்டு சேர்த்து விடுவோம்" என்றார்.

தரைமீது மூலைக்கொன்றாக விழுந்துகிடந்த பெட்டியையும் குடையையும் அவர் பொறுக்கி எடுத்துக் கொண்டு வருவதைக் கண்ட கிரிதரன், அதிருப்தியுடன் முகத்தைச் சுளித்தான். வீட்டிற்குச் சீக்கிரம் செல்லவேண்டும் என்ற துடிப்பு அவனுக்கு. எனினும், கொட்டும் மழையிலே நடுவழியில் இரவில் உதவியற்ற ஒரு பெண்ணை அப்படியே விட்டுவிட்டுப் போவது மனிதத் தன்மைக்கு ஒவ்வாத செய்கையாகத் தோன்றியது. பொறுமையைத் திரட்டிக் கொண்டு காரின் பின் ஆசனத்துக் கதவைத் திறந்து விட்டான். முன்பின் தெரியாதவர்கள் வண்டியில் ஏறி உட்காருவது சரியா என்று ஒரு கணம் யோசித்தபடி மழையில் நனைந்து கொண்டு நின்றாள் மஞ்சுளா. "ஏறிக்கொள் அம்மா! நாங்கள் உன் நம்பிக்கைக்கு உகந்த மனிதர்கள்தான். பயப்படாதே!" என்று உபசரித்த சிந்தாமணி, பெட்டி குடை இரண்டையும் வண்டிக்குள் போட்டார். மஞ்சுளா அதைக் கேட்டு சற்றுத் தைரியத்துடன் உள்ளே ஏறி அமர்ந்தாள்.

கதவைச் சாத்திவிட்டு சிந்தாமணி டிரைவர் ஆசனத்தில்

உட்கார்ந்து கொண்டார். "கிரி! சீக்கிரம். மழையில் நனையாதீர்கள். சற்று ஓய்வாக இருங்கள். நான் வண்டியை ஓட்டுகிறேன்." என்று கூறிவிட்டு அர்த்த பாவத்துடன் மெல்லச் சிரித்தார்.

"ஆமாம்! இவர்கள் எங்கே போக வேண்டுமாம்? விசாரிக்க வில்லையே" என்று முனகிய கிரிதரன் கிழவர் பக்கத்தில் வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான். இந்தக் கேள்வி தனக்குத்தான் போடப்பட்டது எனப் புரிந்து கொண்ட மஞ்சுளா, "லக்ஷ்மி புரத்தில் உள்ள ஸ்ரீமதி கங்கம்மா அவர்கள் வீட்டிற்குப் போக வேண்டும்" என்றாள் மெல்லிய குரலில்.

"ஸ்ரீமதி கங்கம்மாள் வீட்டிற்கா?" என்று வியப்புடன் கேட்டார் சிந்தாமணி.

"நாங்களும் அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறோம். அப்படியானால் ஏன் எதிர்ப்பக்கமாகப் பட்டணம் போகும் ரஸ்தாவுக்குப் போய்க் கொண்டிருந்தீர்கள். வழி தவறி விட்டதா?" என்று விசாரித்த சிந்தாமணி, வண்டியைக் கிளப்பினார்.

"இருட்டில் எனக்கு நிதானம் புரியவில்லை. நீங்களும் அங்கே தான் போகிறீர்கள் என்பதைக் கேட்க ஆச்சர்யமாக இருக்கிறது" என்று கூறிவிட்டு மஞ்சுளா ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தாள். 'ஒரு சமயம் கிரி என்ற வாலிபன் கங்கம்மாளின் புத்திரனோ?' என்று அவள் சிந்தனை ஓடியது.

கார் வேகமாக ஓட ஆரம்பித்ததும் மழைத் துளிகளைத் தாங்கிய சில்லென்ற வாடைக்காற்று உள்ளே வீசியது. ஆடை முழுவதும் நனைந்து விட்டிருந்ததால் மஞ்சுளாவுக்கு குளிர் தாங்க முடியவில்லை. இதைப் புரிந்து கொண்டவன்போல் கிரிதரன் பின்னால் திரும்பி, "கண்ணாடிகளைச் சாத்தி விடுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வீடு போய்ச் சேர்ந்துவிடுவோம்" என்றான்.

இருட்டில் அவன் முகம் தெரியவில்லை. எனினும் கனிவு நிறைந்த அவனது குரல் அவள் மேனியைப் பரவசப் படுத்தியது. சற்றுமுன் அவள் கொண்டிருந்த திகைப்பும் பயமும் இருந்த



இடம் தெரியாது மறைந்துவிட்டன. அதற்குப் பதில் சொல்லமுடியாத ஒரு இன்பம் உள்ளத்தை ஆட்கொண்டு விடவே தன்னை மறந்து கற்பனை உலகிற்குள் புகுந்துவிட்டாள்.

## 17

கொஞ்ச நேரத்தில் வண்டி தோட்டத்திற்குள் புகுந்து ஒரு சிறு வீட்டின் முன் வந்து நின்றது. மூவரும் வண்டியை விட்டு இறங்கினார்கள். மழை முன்போல் மும்முரமாக இல்லாவிட்டாலும் இன்னும் தூறிக்கொண்டுதான் இருந்தது. எல்லோருக்கும் முன்னால் விரைந்த சிந்தாமணி வாயிற் கதவைத் தட்டினார். "யாரது?" என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்த பெரியவர் தமது கையில் பிடித்திருந்த ஹரிக்கேன் விளக்கை உயரத் தூக்கி, வந்தவர்களைக் கூர்ந்து பார்த்தார். அவரது தோளுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்த கங்கம்மாளைக் கண்டதும் மஞ்சுளாவுக்குப் போன உயிர் மீண்டு வந்ததுபோல் மிக்க ஆனந்தமாகி விட்டது. 'மாமி!' என்று கூவிக்கொண்டு ஓடிச்சென்று அம்மூதாட்டியை அணைத்துக் கொண்டு, நடந்ததையெல்லாம் சொல்லி அழுதுவிட வேண்டும்போல் ஆத்திரமும் துக்கமும் பீரிட்டுக் கொண்டு புறப்பட்டன. தன் உணர்ச்சிகளைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு கிரிதரன் பின்னால் மெல்ல நடந்து வந்தாள்.

"அடடா! நம்ம கிரி வந்திருக்கிறான்!" என்று ஆர்ப்பரித்த கிழவர் தமது கையிலிருந்த விளக்கை ஹாலின் நடுவே தொங்கிக் கொண்டிருந்த கம்பியில் மாட்டினார். "உள்ளே வாப்பா என்ன இது, ரொம்ப நனைஞ்சு போயிருக்கிறாயே?" என்று அனுதாபத்துடன் வரவேற்றார். "சீக்கிரமா உள்ளே வந்து தலையைத் துவட்டிக்கோ. ஜலதோஷம் பிடிச்சுக்கப் போகிறது. நீங்க ரெண்டு பேரும் இத்தனை சீக்கிரம் வந்துவிடுவீர்கள் என்று

நாங்கள் நினைக்கவேயில்லை'' என்று ஆச்சரியத்துடன் கூறிய கங்கம்மாள் நாற்காலியின் கைமீது கிடந்த துண்டை எடுத்து நீட்டினாள்.

மிதியடியில் காலை நன்றாகத் துடைத்துக் கொண்டு மேல் துண்டினால் தமது வழுக்கைத் தலையையும் முகத்தையும் துடைத்துச் சரிப்படுத்திக் கொண்டே சிந்தாமணி, மெல்ல உள்ளே வந்தார். ''அத்தையம்மா! நாங்கள் காரிலே வந்தோம்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

''ஏண்டாப்பா கிரி! அத்தனை வேகமா ஏன் வண்டியை ஓட்டணும்? வரவர காலம் கெட்டுக் கிடக்கிறது. சரி கால்களை சுத்தம் செய்து கொள்ளுங்கள். இலையைப் போடறேன். பசியாக இருப்பீர்கள்'' என்றாள்.

''அப்படி கார் வேகமாக வந்ததனால்தான் கூட ஒரு விருந்தாளியையும் கூட்டிக்கொண்டு வரமுடிந்தது!'' என்றார் சிந்தாமணி பரிகாசமாக. ''ஒரு விருந்தாளி என்ன? பத்துப் பேரைக் கூட்டிக் கொண்டு வந்தாலும் சாப்பாடு தயாராக இருக்கு. உங்க அத்தையம்மா விருந்தோம்பலில் சளைத்தவள் இல்லையே! ஏன், அழையா விருந்து வந்திருக்கிறது என்றால் பயந்து விடுவோம் என மிரட்டுகிறாயா?'' என்று கேலியாகக் கேட்ட பெரியவர், ஹாலின் நடுவே தொங்கிய ஊஞ்சல் பலகைமீது உட்கார்ந்து கொண்டார்.

''சரிதான் போங்க. என்னை பரிகாசம் பண்ணாவிட்டால் உங்களுக்கு பொழுதே போகாது!'' என்று வேடிக்கையாக பதிலளித்த கங்கம்மாள், ஆவல் தாங்கமுடியாது வாயிற்பக்கம் சென்று எட்டிப் பார்த்தாள். ஈரப்புடவையும், நனைந்த கூந்தலுமாகத் தயங்கிக் கொண்டு வெளியே நின்ற மஞ்சுளாவைக் கண்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

''நீயா அம்மா! இது என்ன இது?'' என்று ஆச்சரியத்துடன் கூவிவிட்டாள். கங்கம்மாளைக் கண்டதும் மஞ்சுளாவின் துக்கம் கரை புரண்டு கிளம்பியது.

''மாமி! மாமி! அவர்கள் என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அத்துடன் வீட்டை விட்டும் வெளியே



விரட்டி விட்டார்கள்'' என்று தினறினாள். கட்டுப்படுத்த முடியாத கண்ணீர் பெருகி கன்னங்களில் ஓடியது. விம்மல்களை அடக்கமுடியாது கைகளை முகத்தின்மீது வைத்து மறைத்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள். இந்தக் காட்சியைக் கண்டதும் சிந்தாமணி ஜாடையாக முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பிக் கொண்டார்.

''அசடு, பேசாமல் இரு. அவர்கள் இருக்கிறார்கள். பிறகு விவரமாகப் பேசிக் கொள்ளலாம்'' என்று தாழ்ந்த குரலில் எச்சரித்த கங்கம்மாள், அன்போடு அந்த பெண்ணை அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்து சமாதானப் படுத்தி, கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு வந்தாள்.

''யசோதாகிட்ட வேலைக்கு வந்திருக்கிறாள் மஞ்சுளா என்று ஒரு பெண் என்று சொன்னேன் அல்லவா? அவள் தான் இவள்'' என்று தன் கணவருக்கு மஞ்சுளாவை அறிமுகம் செய்துவிட்டு, பின் பக்கமிருந்த சமையற்கட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

''இது இப்படி நடக்கும் என்று எனக்கு முன்பே தெரியும். உன்னை எதற்காக இப்படி ராத்திரி வேளையில் கொட்டும் மழையில் விரட்டியடித்தாள் அவள் என்பதையும் என்னால் ஊகிக்க முடியும். கவலைப்படாதே. நாங்கள் இருக்கிறோம். பின்னால் விவரமாகப் பேசலாம். முதலில் நீ தலையைத் துவட்டிக் கொண்டு வேறு புடவை கட்டிக்கொள்'' என்று உபசரித்தாள் அம்மூதாட்டி.

கூடத்துத் தரைமீது இலைகளைப் போட்டிருந்தாள் கங்கம்மாள். அந்த வீடு மிகவும் சிறியதுதான். பழைய காலத்துக் கட்டடம். மின்சார விளக்கு வசதி கூடக்கிடையாது. எனினும் கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த சிறு மண்ணெண்ணெய் விளக்கு அந்த அம்மாளின் பெரிய மனதைப்போல் பளிச்சென்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. கிரிதரனும், சிந்தாமணியும் இலைக்கு முன் போட்டிருந்த மனைகள் மீது

வந்து அமர்வதைக் கண்டதும் மஞ்சுளா மெள்ள சமையலறைக் கதவிற்குப் பின் போய் நின்று கொண்டு விட்டாள். ''பரவாயில்லை! வாம்மா வந்து இப்படி உட்காரு. கிரிதரன் எனது ஒன்றுவிட்ட சகோதரனின் பிள்ளை. வேற்று மனிதன் அல்ல'' என்று வற்புறுத்தி அந்த மூதாட்டி அழைத்ததை அவளால் தள்ள முடியவில்லை.

சுவரோரமாகத் தனது இலையை இழுத்துப் போட்டுக் கொண்டு சங்கோஜத்துடன் தலையைக் குனிந்தபடி வந்து உட்கார்ந்து கொண்டாள் மஞ்சுளா.

'சோ'வென்று கோஷித்த மழை நின்றுவிட்டபோதிலும், சில்லென்று வீசிய ஊதல் காற்றை தடுக்கும் நிமித்தம் கங்கம்மாள், தாழ்வாரத்தில் மடித்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருந்த மூங்கில் தட்டியை அவிழ்த்துவிட்டாள். குளிருக்கு அடக்கமாகப் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு இலைமீது கண்ணாக இருந்தாள் மஞ்சுளா.

கங்கம்மாள் அப்படிப் பிரமாதமான பெரிய விருந்தொன்றும் தயாரித்து விடவில்லை. வத்தல் குழம்பும், சுட்ட அப்பளமும், சாதமும்தான் கொண்டுவந்து இலைகளில் சுடசுடப் பரிமாறினாள். ''சாப்பிடம்மா, இன்னும் கொஞ்சம் குழம்பு வார்த்துக் கொள்'' என்று அன்பு நிறைந்து வந்த இனிய மொழிகள் அந்த எளிய உணவை மிகவும் பரிமளிக்கச் செய்துவிட்டது. தன் வாழ்க்கையில் நினைவு தெரிந்ததுவரை மஞ்சுளா அப்படி ரசித்து உண்டதேயில்லை. வேலைத் தொந்தரவுகள், படிப்புக் கவலை என்று ஓயாதிருந்த தொல்லைகள் நடுவே சாப்பிடுவது என்பது அவளுக்கு ஒரு கடமையாக இருந்தது. முதன் முதலாக அவள் உணவைத் திருப்தியாகச் சுவைத்துச் சாப்பிட்டாள்.

கங்கம்மாள் வற்புறுத்தித் தாராளமாக வார்த்த மோரைச் சாதத்துடன் கலந்து மாங்காய் ஊறுகாயுடன் குழைத்து நன்றாகச் சாப்பிட்டு முடித்துவிட்டுத் தலை நிமிர்ந்தாள். மஞ்சுளாவின் முகம் குப்பென்று சிவந்து விட்டது. எதிர்ப்புறமாக உட்கார்ந்திருந்த கிரிதரன் அவளையே பார்த்துக்



கொண்டிருந்தான். அவன் கை விரல்கள் உணவைக் கிண்டிக் கொண்டிருந்தனவே ஒழிய, இலையில் பாதிக்குமேல் சாப்பாடு அப்படியே இருந்தது.

கங்கம்மாள் தடுத்து உபசரித்தும் கேளாது சட்டென்று இலையைச் சுருட்டிக் கொண்டு புழக்கடைக்கு ஓடிய மஞ்சுளா, கையைக் கழுவித் துடைத்துக் கொண்டு வேகமாகச் சமையலறைக்குள் சென்று மறைந்து கொண்டாள். அதற்கு பின்னர் வெளியே தலையைக் காட்டக்கூட அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

'கிரிதரன் அப்படியே வெறித்துப் பார்த்தானே? என்ன எண்ணிக்கொண்டு அவளை அப்படிப் பார்த்தான்? ஒரே மூச்சாகச் சாப்பிடுகிறாளே என எண்ணி வேடிக்கை பார்த்தானோ?'' நினைக்க நினைக்க மஞ்சுளாவுக்கு மிக்க அவமானமாக இருந்தது!

கொஞ்ச நேரம் பொறுத்து கங்கம்மா உள்ளே வந்தாள். அவளிடத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகையை நீட்டி, ''இதைப் படித்துக் கொண்டிரு. அவர்கள் இருவரும் ஊருக்குப் போகத் துடிக்கிறார்கள். அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்றாள் கங்கம்மாள்.

எந்த ஊருக்கு? ஏன்? என்றெல்லாம் கேள்விகள் கேட்க வேண்டுமென்று ஆசை மஞ்சுளாவின் உள்ளத்தில் பொங்கியெழுந்த போதிலும், தனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட்டால் அந்த அம்மாள் என்ன நினைப்பார்கள் என்ற அச்சத்தில் மௌனமாகப் பத்திரிகையை வாங்கிக் கொண்டாள்.

விளக்கு அருகே சென்று உட்கார்ந்தாள். பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாளே ஒழிய, அவள் மனம் எங்கெங்கேயோ சுற்றியலைந்து கொண்டிருந்தது. வெளியே கார் புறப்பட்டுச் செல்லும் சப்தம் கேட்டது. காரணமில்லாது அவள் உள்ளமும் உடலும் படபடக்கவே, பத்திரிக்கையை மூடிவிட்டு எழுந்திருந்தாள். அது சமயம் உள்ளே வந்த கங்கம்மாள், 'ராத்திரி தூங்கிவிட்டுப் போகலாம். சொன்னால்

கேட்டால் தானே, பிடிவாதக்காரப் பையன்' என்று தனக்குள்ளே உரத்த குரலில் அலுத்துக் கொண்டாள்.

''சரிம்மா! விளக்கை எடுத்துக்கொள். அவர் கீழே ஹாலில் படுத்துக் கொள்வார். நாம் மாடியறைக்குப் போவோம்'' என்று உத்தரவிட்டாள்.

மாடியறை மிகவும் சிறியதாகத்தான் இருந்தது. ஒரு மூலையில் ஒரு புத்தக பீரோவும், இன்னொரு மூலையில் இரண்டு மரப்பெஞ்சிகளும் அறையின் முக்கால் பாகத்தை அடைத்துக் கொண்டு விடவே, படுக்க இடம் கொஞ்சமே தான் இருந்தது. இரண்டு பாய்களை எடுத்து அருகருகே விரித்துப் போட்டாள் கங்கம்மாள். ''ஜன்னல் ஓரமாக நல்ல காற்று வீசும். நீ அங்கு படுத்துக் கொள். நான் இப்படிக் கதவுப் பக்கத்தில் படுத்துக் கொள்கிறேன்'' என்று உபசரித்துவிட்டு, காலை நீட்டிக் கொண்டு பாயின் மேல் வந்து அமர்ந்தாள். பிரகாசம் பொருந்திய அவளது முகம் மிகவும் சாம்பிவிட்டிருந்தது. யாரிடமாவது பேசாவிட்டாலும் தாள முடியாது போல் கவலைகள் பாரமாக அவளது மூளையை அழுத்தின. முன்பின் அதிகப் பழக்கமில்லா விட்டாலும் மஞ்சுளாவை முதல் நாள் ரயில் வண்டியில் சந்தித்தபோதே அவளுக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது. அதனால் கங்கம்மாள் தன் மன வேதனையைத் தணித்துக் கொள்ளும் நிமித்தம் தானே பேசலானாள்.

''மனிதனிடம் பணம் இருந்துவிட்டால் மட்டும் போதாது! பணம், பதவி, பட்டம் இவைகளால் சந்தோஷம் என்பதை விலைக்கு வாங்கமுடியாது. நாராயணன் குடும்பத்தைப் பொறுத்தவரை இது முற்றிலும் பொருத்தமான உண்மை'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள்.

புதிர் போடுவது போன்று அந்த அம்மாள் பேசியது ஒன்றும் விளங்கவில்லை மஞ்சுளாவுக்கு. கங்கம்மாள் கனவிலே பேசுகிறவள்போல் மேலே தொடர்ந்து சொன்னாள்.

''இந்தக் கிரிதரன் என் ஒன்றுவிட்ட சகோதரன் நாராயணனின் மூத்த பிள்ளை. தகப்பனுக்குப் பின் அத்தனை பெரிய வியாபாரத்திற்கும் சொத்திற்கும் வாரிசாக



வேண்டியவன். ஏதேஷ்டமான பணம். அரண்மனை போன்ற வீடு, ஆட்கள் எல்லாம் இருந்தும் அந்தப் பிள்ளைக்குத் துளிக்கூட மன நிம்மதியோ சந்தோஷமோ கிடையாது. ஏன்? பார்க்கப் போனால் அந்த வீட்டில் யாருக்குமே மனச்சாந்தி கிடையாது. வாழ்க்கைக்கு எது முக்கியம் வேண்டுமோ அது இல்லாமல் பணம் இருந்தென்ன, பதவி இருந்தென்ன?

''கிரிதரனிடம் நான் எத்தனையோ தடவை சொல்லி விட்டேன். காலா காலத்தில் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு விடு. உன் கஷ்டத்திற்கும் சுகத்திற்கும் ஈடு கொடுக்க ஒரு துணை ஏற்பட்டால் மனசுக்கு மிகவும் தெம்பாக இருக்கும் என்று புத்தியும் சொன்னேன். பிடிவாதக்காரன், கேட்கவில்லை!'' என்று கூறிவிட்டு மீண்டும் பெருமூச்செறிந்தாள்.

மஞ்சுளாவின் கண்கள் வியப்பில் மலர்ந்தன. கிரிதரன் விவாகம் ஆகாத இளைஞன். மேலே அவனைப் பற்றிப் பலவும் தெரிந்து கொள்ள அவள் உள்ளம் துடியாகத் துடித்தது.

''என் மதனி உயிரோடு இருந்திருந்தால் இத்தனை நாள் தன் பிள்ளைக்கு ஒரு வழி செய்திருப்பாள். நாராயணனுக்கு வந்து வாய்த்திருக்கிற இளையாளுக்குப் பணந்தான் பிரதானம். அவள் அடிக்கிற வேப்பிலையில் மயங்கி, மனிதன் தன் பிள்ளைக்குப் பெரிய இடமாக வரட்டும் என்று காத்துக் கிடக்கிறான். அப்பாவுக்குப் பெரிய மனிதன் சம்பந்தம் வேண்டும் என்ற நினைப்பு. பிள்ளைக்கோ, கல்யாணமே வேண்டாம் என்ற வெறுப்பு! இதன் இடையே வருஷங்கள் பாட்டில் தானே ஓடிக் கொண்டிருக்கின்றன. வயதும் ஏறிக்கொண்டு போகிறது. கிரிதரன் மனம் எனக்கு நன்றாகத் தெரியும். ஏழைப் பெண்ணாக இருந்தாலும், அதிகம் படிக்காதிருந்தாலும், அழகில்லாவிட்டாலும் குடித்தனப் பாங்கான பெண்ணாக இருந்தால் போதும். அவனுக்கு வாழ்க்கையில் திருப்தியும் ஆனந்தமும் ஏற்படும். ஆனால் அவன் சித்தி போடுகிற திட்டப்படி பணக்கார வீட்டு நாகரிகக் குஞ்சு ஏதாவது வந்து மனைவியாக வாய்த்துவிட்டால்.... அப்புறம் கடவுள்தான் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்!

''அடாடா! நான் என்னவோ பிதற்றிக்கொண்டு இருக்கிறேன். உனக்கு இருக்கும் கவலைகள் போதாது என்று எங்கள் குடும்பத்துக்கு கவலைகளையும் உன் தலையில் போடுகிறேன்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, கங்கம்மாள் விளக்கை அணைத்தாள்.

''தூங்கம்மா! நேரமாய் விட்டது. நாளைக்கு மற்றவைகளைப் பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்லி விட்டுப் படுத்துக் கொண்டாள்.

ஜன்னல் வழியாக மெல்லிய பூங்காற்று வீசிக் கொண்டிருந்தது. மழை நன்றாக விட்டு வானத்துக் கருமை நீங்கி விட்டதனால் விண்மீன்கள் பளிச்சென்று ஒளி வீசிக்கொண்டிருந்தன. கங்கம்மாள் தன் மனச்சுமையை இறக்கி விட்டதனால் நிம்மதியாகக் குறட்டை விட்டுக் கொண்டு சில விநாடிகளில் நித்ராதேவி வசமாகி விட்டாள். மஞ்சுளாவுக்கு மட்டும் நித்திரை வரவில்லை. எத்தனையோ பெரிய மனிதர்கள் தம் வீட்டு மருமகனாக வரிக்கக் காத்துக் கொண்டிருக்கும் செல்வச் சீமான் மகன் கிரிதரனை எண்ணி அவளது உள்ளம் சிந்தனை உலகில் வளைய வந்து கொண்டிருந்தது. 'இதென்ன பைத்தியக்காரத்தனம்!' என்று தன்னைத் தானே கடிந்துகொண்டு கண்களை வலிய மூடிக்கொண்டாள். ஆனால் தூக்கம் வந்தால் தானே! காதல் என்பது ஒருவகைப் பைத்தியம் என்பதை அந்தப் பேதைப் பெண் உணர்ந்து கொள்ளவில்லை போலும்!

## 18

பிரதிபலன் எதையும் கருதாது பிறருக்கு உதவி செய்வதில் பேரின்பம் காணும் பிரகிருதிகள் உலகில் இருப்பதனால்தான் 'பரோபகாரி' என்ற வார்த்தை அகராதியில் இடம் பெற்றுள்ளது என்றால் மிகையில்லை.

ஸ்ரீமதி கங்கம்மாள் அந்த அபூர்வமான பிரகிருதிகளில்



ஒருத்தி. தாம்பத்ய வாழ்க்கையைத் தொடங்கிய புதிதில் ஸ்ரீமான் சுந்தரேசனுக்கு மனைவியின் விசித்திரமான மனப்போக்குப் புரியவில்லை. பிடிக்கவுமில்லை. ஊரார் வீட்டுத் தொல்லைகளைத் தலையில் சுமந்து கொண்டு பிறருடைய அந்தரங்கங்களில் தலையிட்டுக் குழப்பம் செய்கிறாள் என அநேக முறைகள் மனத்தாங்கல் கொண்டிருக்கிறார். அதற்காக மனைவியைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். தடுத்துமிருக்கிறார். ஆனால் பெயரைப் போன்று கங்கம்மாளின் உள்ளத்திலே பிறர் பொருட்டுப் பொங்கி எழுந்த கருணைப் பிரவாகத்தை அவரால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. பிறருக்கு உதவவேண்டும் என்று துடித்த அவளது ஆசையையும் அணைக்க முடியவில்லை. நாளடைவில் இது விஷயமாகத் தம்மால் ஏதும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொண்ட சுந்தரேசன், ''எப்படியோ தொலைகிறாள் பைத்தியக்காரி!'' என்ற ஒரு அலட்சிய மனப்பான்மையை மேற்கொண்டார்!

ஆனால் அனுபவம் என்பது பெரிய பள்ளிக்கூடம். அதில் கற்கும் பாடங்கள் சில என்றுமே அழியாமல் உள்ளத்திலே வேரூன்றி விடும் என்பது அவர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகிவிட்டது. நாற்பத்தைந்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் அவர் அடைந்திருந்த பல அனுபவங்கள் அவரது உள்ளத்துப் பண்பை வெகுவாக உயர்த்தி விட்டிருந்தன.

பிறரது துன்பங்களைத் தமதாக ஏற்று உதவி புரிவதில் ஏற்படும் இன்பத்திற்கு ஈடு உலகில் ஏதும் இல்லை என்றவரை அவரது மனம் வெகுவாக மாறிவிட்டிருந்தது. ஆகவே கங்கம்மாள் கோஷ்டியில் கணவரும் சேர்ந்து கொண்டு விட்டார். கணவனும் மனைவியும் ஒரே எண்ணத்துடன் பரோபகாரச் செயலில் ஈடுபட்டு விட்டதனால், ஊரார் பெரும்பாலானோர்களின் பிரச்னைகள் அவர்களுக்குச் சொந்தமாகி விட்டிருந்தன. ''கோடி வீட்டுக் கோபாலன் பெண் பிரசவத்துக்கு வந்திருக்கிறாள். பாவம் கோபாலன் மனைவிக்கு உதவிக்கு யாரும் இல்லை'' என்று கேள்விப் பட்டதும் உடனே கங்கம்மாள் அங்கே விரைந்து விடுவாள்.

கோபாலனுக்கு, பேரனோ, பேத்தியோ பிறந்து

குழந்தையுடன் அவர் பெண் ஊருக்குத் திரும்பும் வரை அவர்கள் வீட்டுத் தொல்லைகள் அனைத்தையும் தங்களுடையதாகப் பாவித்துக் கொள்வார்கள், இந்த விசித்திரத் தம்பதிகள். எதிர்வீட்டு ஏகாம்பரத்தின் மனைவி சினிமாவுக்குப் புறப்பட வேண்டுமென்றால் சிறிதும் கவலை கிடையாது. குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள யாருமில்லையே என அவள் தவிக்கவேண்டாம். ''மாமி சரோஜாவும் ரவியும் உங்களிடம்தான் இருப்போம் எனப்பிடிவாதம் செய்கிறார்கள். கொஞ்சம் விட்டு விட்டுப் போகிறேன். பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சிறிது முகஸ்துதி செய்துவிட்டு, தன் குழந்தைகளை அங்கு விட்டு விரைந்துவிடுவாள். ஒரு இடத்தில் நிற்காது உட்காராமல் விஷமம் செய்யும் பொல்லாத குழந்தைகள் அவர்கள் இருவரும் என்றபோதிலும், கங்கம்மாள் அலுத்துக் கொள்ளமாட்டாள்.

தான் பெற்ற குழந்தைகளைப் போல் மிகவும் கருத்துடன் அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருப்பாள். குழந்தையின் தாயார் வரும்வரை அவர்களைப் பட்டினியில் துடிக்க விட்டுவிடமாட்டாள். மறுநாள் மோருக்காக வாங்கி வைத்திருக்கும் பாலைக் காய்ச்சி, சாதத்துடன் கலந்து குழந்தைகள் இருவரையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு அவர்கள் பசிதீர அன்புடன் அள்ளி அள்ளிப் பாலும் சோறும் ஊட்டி மகிழ்வாள். மனைவிக்கும் ஒரு படி மேலாக அந்த விஷமச் சிறுவர்களைச் சுந்தரேசன் கொண்டாடுவார். தமது பேனாவை எடுத்து ரவி பதம் பார்த்து விட்டாலும் சரி, அவர் கோபிக்க மாட்டார். ''குழந்தைகளுக்கு என்ன தெரியும்? அவர்கள் கை எட்டும் இடத்தில் வைத்தது என் பிசகு'' என்று தம்மைத்தான் கடிந்து கொள்வார். அந்த வாலுக் குழந்தைகளை வாரி மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, கற்பனைக் கதைகள் பல சொல்லி அவர்களுக்கு மகிழ்வூட்டுவார்.

பக்கத்து வீட்டு பஞ்சநாதத்திற்கு ஆஸ்பத்திரிக்குப் போய்வர வேண்டுமா? மூலைவீட்டு மீனாட்சிக்கு பாங்கிக்குப் போய்வர வேண்டுமா? மாடிவீட்டுச் சுப்புலக்ஷ்மிக்கு அவசரமாகக் கொஞ்சம் காப்பிப்பொடி தேவையா?



எதுவானாலும் சரி. ஒரு வார்த்தை சுந்தரேசன் காதில் போட்டுவிட்டால் போதும், சுந்தரேசன் கடைக்கும் ஆஸ்பத்திரிக்குமாக பறந்து கொண்டிருப்பார். எனவே இந்த அபூர்வத் தம்பதிகள் அந்த வட்டாரத்திலே மிகவும் பிரசித்தமாக இருந்ததில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

ஆனால் எந்த ஒரு காரியத்திலும் குறையும் குற்றமும் கண்டு பிடிக்கும் மனிதர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். வீரசோழன் பட்டணவாசிகள் சிலர் சுந்தரேசன் தம்பதிகளை வேலையற்ற வம்புக்கார கிழங்கள் என்று கருதி வெறுத்ததும் உண்டு. ''இருப்பது ஒரே பிள்ளை. அவனும் தற்சமயம் பம்பாயில் உத்தியோகத்தில் இருக்கிறான். கல்யாணமாகாத பிரம்மச்சாரி. அவன் மாதா மாதம் இவர்கள் செலவுக்குப் பணம் அனுப்பிவிடுகிறான். குழந்தை குட்டிகள் பேரன் பேத்திகள் என்ற தொல்லைகள் ஏதும் கிடையாததனால் இந்த இரு கிழங்களும் ஊர் வம்புக்குப் பேயாகப் பறக்கிறார்கள்'' என வசை பாடியவர்களும் உண்டு. ஆனால் கங்கம்மாளோ சுந்தரேசனோ பிறர் என்ன சொல்கிறார்கள்? ஊரார் தம்மைப் பற்றி என்ன அபிப்பிராயப் படுகிறார்கள் என்றெல்லாம் கவலைப்பட்டதில்லை. காதுகளில் வாங்கிக் கொண்டதுமில்லை. சூரியன் உதிக்கும் நேரத்திலிருந்து அஸ்தமிக்கும்வரை ஒன்று போனால் மற்றொன்று என்ற நிலையில் கவனிப்பதற்கு அவர்களுக்கு ஏதாவது காரியங்கள் இருந்து கொண்டே இருந்தன. அதிலே அவர்கள் பொழுது விரைந்து கொண்டிருந்தது.

அன்று தினம் காலையில் சுந்தரேசன் வீடு கல்யாண வீடு போல் மிகவும் அமளிப்பட்டுக் கொண்டிருந்தது. விடிவதற்கு முன்பே எழுந்து கிணற்றடியில் இரண்டு வாளித்தண்ணீரை இறைத்துத் தலையில் கொட்டிக் கொண்டு, வேகமாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு சமையலறைக்குள் புகுந்த கங்கம்மாளுக்கு, ஈரப்புடவையை மாற்றிக் கொள்ளக்கூட அவகாசம் இருக்கவில்லை.

தன் வீட்டிற்கு வந்து தனது பொறுப்பில் இரண்டு வாரங்கள் தங்கிவிட்டிருந்த மஞ்சுளாவின் அடக்கமான சுபாவமும்,

அமரிக்கையான குணமும் அவளைப் பெரிதும் கவர்ந்து விட்டிருந்தன. உற்றார் உறவினர் யாருமற்ற அநாதை அந்தப் பெண் என்ற பரிவு வேறு அவள் மனத்தைப் பாகாய்க் கரைத்து விட்டிருந்தது. அதனால் அன்று திடீம் மஞ்சுளா வேறு ஒரு வேலையை ஒப்புக் கொண்டு தங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டுபோய் விடுவாள் என்ற எண்ணத்தை அந்த அம்மாளால் ஏற்கவே முடியவில்லை. பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த செல்வ மகளைப் புக்ககம் அனுப்பும்போது தாயின் மனத்திலே ஏற்படும் சஞ்சலமும் பிரிவுத் துன்பமும் கங்கம்மாளை வந்து பிடித்துக் கொண்டன. சாம்பாரில் உப்புப் போட்ட நினைவுகூட இன்றி, தட்டுத் தடுமாறியபடி அறைக்குள் குழப்பத்துடன் வட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

கடைத் தெருவிலிருந்து விரைந்தோடி வந்த சுந்தரேசன் ஒரு பெரும் மூட்டையுடன் உள்ளே நுழைந்தார். ''முருங்கைக்காய் இன்று எங்கேயும் கிடைக்கவில்லை. உன் சமையல் திட்டத்தைக் குறைக்கக் கூடாது என்று அலைந்து திரிந்து கடைசியில் ஒரே கடையில் ஒரே ஒரு கத்தையைக் கண்டுபிடித்து வாங்கிக்கொண்டு வந்தேன். விலையைக் கேட்காதே, அதிக விலை என்று எண்ணினாயானால் பிறகு சாம்பார் ருசிக்காது போய்விடும்'' என்று பரிகாசமாகக் கூறிய வண்ணம் கிழவர் மூட்டையைக் கீழே இறக்கி வைத்தார் பெருமூச்சுடன்.

''ஒன்றும் சாப்பிடாமல் நீங்கள் வெளியே போய்விட்டீர்கள். முதலில் கொஞ்சம் சூடாகக் காப்பி சாப்பிட்டு விட்டுப் பிறகு மற்றதைக் கவனிக்கலாம்'' என உரிமையோடு அதட்டிய மூதாட்டி, ஒரு வெண்கல டம்ளரில் பசும்பால் காப்பியைச் சூடாக நிறைத்துக் கொண்டு வந்து அவர் அருகில் மிகப்பரிவுடன் வைத்தாள். மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சுந்தரேசன், சுவரில் சாத்தியிருந்த பலகை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். ''அட அசடே, கண் இமை ஓரமெல்லாம் சிவந்து விட்டிருக்கிறதே! அழுது விட்டாயா என்ன? உம்! இன்னும் உன் சொந்தப் பெண்ணாக இருந்தால் என்ன செய்வாயோ தெரியவில்லை'' என்று கேலியாகக் கேட்டுவிட்டு காபி



டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டார். ஆனால் அவர் பேச்சிலும், நகைப்பிலும் தெம்பு இருக்கவில்லை. உண்மையில் அவருக்குக் கூட மஞ்சுளாவைப் பிரியப் போகிறோமே என்ற நினைவு உள்ளத்தை வேதனை செய்து கொண்டுதான் இருந்தது.

''கொஞ்ச நாட்கள் நம்முடன் தங்கிவிட்டதனால் உனக்கு அந்தப் பெண்மேல் இத்தனை ஆசையும் பாசமும் வந்து விட்டது. இன்னும் பல மாதங்கள் நம்முடனேயே வசித்து விட்டிருந்தால், ஏதேது நீ உத்தியோகத்திற்குக் கூட அவளை அனுப்ப மறந்து விடுவாய் போலிருக்கிறது'' என்று சிரித்தார். ஒரே மூச்சில் காப்பியை அருந்திவிட்டு காய்கறிக் கூடையை அருகில் இழுத்து வைத்துக் கொண்டார். மூட்டையைப் பிரித்து, தாம் வாங்கி வந்த காய்களை வகை வேறாகப் பிரித்து, அதற்குள் பத்திரப்படுத்தத் தொடங்கினார். ''பச்சைப் பட்டாணி என்றால் உனக்குப் பிடிக்குமே என்று அரைப் பவுண்ட் வாங்கி வந்திருக்கிறேன். பாயாசத்துக்குப் பாலும் மறக்காமல் கொண்டு வந்துவிட்டேன். இன்னும் ஏதாவது வேண்டுமா? இப்பவே சொல்லிவிடு. அப்புறம் நினைத்துக்கொண்டு என்னை ஓடஓட விரட்டாதே!'' என்று கூறிவிட்டுக் கண்களைச் சிமிட்டியபடி நகைத்தார்.

''சரித்தான் போங்கள்!'' என்று அன்போடு கடிந்து கொண்ட கங்கம்மாள், சங்கோசத்துடன் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அப்பொழுதுதான் ஈரப் புடவையைத் தான் மாற்றவில்லை என்ற நினைவு ஏற்பட்டது. ''அடடா! இன்னிக்கு எனக்குக் கட்டாயம் தலைவலி வரப் போகிறது. இத்தனை நேரமா ஈரத்தோட நான் அலைந்திருக்கிறேன்'' எனக் கூவியபடி ரேழி அறைக்கு விரைந்தோடினாள்.

''நீ வேறு ஜலதோஷம், ஜுரம் என்று சாயங்காலம் படுத்துக் கொண்டு விடாதே! சங்கரன் வீட்டுக் கல்யாணத்திற்கு முறுக்குப் பிழிய உன்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று எச்சரித்தார் கணவர்.

கொடியிலிருந்து உலர்ந்த புடவை ஒன்றை இழுத்து ஒரு தொடியில் சுற்றிக் கொண்டு, மறுபடி சமையலறைக்குள் புகுந்தாள் கங்கம்மாள். கிழவர் வாழை இலைகளை ஒழுங்காக நறுக்கிக் கழுவித் துடைத்து அடுக்கி வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவர் முகம் பிரகாசம் குன்றிச் சாம்பியிருந்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை. அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த உலைநீரில் அரிசியைக் களைந்து போட்டுவிட்டு அவள் லேசாகச் சிரித்தாள்.

''எனக்கும் கொஞ்சம் சொல்லிவிட்டுச் சிரியேன். ஏன் இந்தச் சுயநலம்?'' என்று கேட்டுவிட்டு, கிழவர் மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு குறும்புத்தனமாக அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

''என்னை மட்டும் சொல்லிவிட்டீர்களே. உங்கள் சமாசாரம் என்ன? சுவாமி படத்திற்கு இரண்டு பூ பறித்துக் கொண்டு வாருங்கள் என்று உங்களைப் பத்துத் தடவை கேட்டால் தான் காரியம் நடக்கும். அப்படிப்பட்ட நீங்கள் அந்த பெண் 'இது முல்லைப் பந்தலா மாமா?' என்று கேட்டதுதான் தாமதம், பத்து வயது பாலகன் போல பாய்ந்து ஓடி ஒரு முக்காலியைப் போட்டுக் கொண்டு ஏறி, கூடைப் பூவை பறித்துக் கொண்டுவந்து அவள் முன்கொட்டிவிட்டீர்களே! உங்களுக்குக் கூட அந்தப் பெண்ணைப் பிரியப் போகிற துக்கம் நெஞ்சை அடைக்கிறது. வெளியே காட்டிக் கொள்ளாமல் எத்தனையோ சாமர்த்தியமாகத்தான் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் சொல்லாவிட்டாலும் 'உங்கள் முகம்தான் சொல்கிறதே!'' என, இதுதான் சமயம் என்று பதிலுக்குப் பரிகாசம் செய்துவிட்டுத் தன் காரியங்களை கவனிக்கலானாள்.

கிழவர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். ''நம்ப நடராஜனுக்கு ஒரு தங்கை இருந்தால் நம் வாழ்க்கைகூட வேறு விதமாக மாறிவிட்டிருக்கும் இல்லையா?'' என்று ஏக்கம் நிறைந்த மெல்லிய குரலில் கேட்டுவிட்டு அருகில் வந்து நின்றாள் மனைவி.



''இப்போது மட்டும் என்ன குறைந்துவிட்டது? ஊரார் பெண்கள் எல்லோரும் உன்னையும் என்னையும் பெற்றோர்களாகப் பாவித்து உறவு கொண்டாடுகிறார்களே. 'மாமி! மாமி!'' என்று இளம்பெண்கள் அனைவரும் உன்னை அன்புடன் சுற்றிக் கொள்ளும்போது உனக்குப் பெருமையாக இருக்கவில்லையா? பெற்றால்தான் குழந்தைகளா? என்று கேட்டார் அவர்.

ஆமாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள் கங்கம்மாள் விரக்தியாக.

இலைகளை அழகு பார்த்து ஒழுங்காக அடுக்கிக் கட்டி வைத்துவிட்டு எழுந்திருந்தார் அவர். மனைவியிடம் கேட்க வேண்டும் என்று காலையிலிருந்தே துடித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை இப்பொழுது அவரால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

''ஆமாம் கங்கா! அந்தப் பெண்ணிற்கு எல்லாம் விவரமாகச் சொல்லிவிட்டாயா?'' என்று வினவினார், கவலை தோய்ந்த குரலில்.

''கூடியவரை சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி விட்டேன். தேவையில்லாதவைகளைச் சொல்லவில்லை'' என்றாள் மனைவி.

''ஜகதீசன் விஷயம் சொல்லிவிட்டாயா?'' என்று கேட்டார் கிழவர் தாழ்ந்த குரலில்.

கங்கம்மாள் சட்டென்று பதில் சொல்லத் தயங்கினாள். ''நான் விவரமாகச் சொல்லியிருப்பேன். ஆனால் கிரிதரனுக்குப் பிடிக்காதே என்று சொல்லவில்லை. உங்களுக்குத்தான் எல்லாம் தெரியுமே. என் அண்ணா குடும்பத்திற்கும், டாக்டர் தயானந்துக்கும் மட்டுமே தான் ஜகதீசனது உடல் நிலை பற்றிய ரகசியம் தெரியும். மற்ற யாருக்கும் வீட்டில் உள்ள வேலைக்காரர்களுக்குக் கூடத் தெரியாது. அதைப் பற்றி அண்ணாவும் கிரிதரனும் மூடு மந்திரமாக ஒளித்து வைத்து இருக்கிறார்கள். புதிதாக அந்த வீட்டிற்கு வேலைக்குப் போகப் போகிற இந்தப் பெண்ணிடம் அதை நான் எப்படி எடுத்துச்

சொல்ல முடியும்? இது மிகவும் எக்கச்சக்கமான விஷயமாதலால் சொல்லாமலிருப்பதே மேல் என்று விட்டுவிட்டேன். மேலும் இவள் செய்யப்போகிற வேலைக்கும் ஜகதீசனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கப் போவதில்லை?'' என்றாள் இழுத்தாப் போல்.

கூரை முகட்டைப் பார்த்துக் கொண்டு கிழவர் யோசித்தார். மனைவி கூறியதில் கொஞ்சம் உண்மை இருப்பதாக அவருக்குப் புலப்பட்டது. 'கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தைகளும் எத்தனை தூரத்திற்கு வரப்போகிறது?' என்று ஓடியது அவரது சிந்தனை.

''சரி, கொஞ்சம் தபாலாபீஸ் வரை போய் விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கையை உதறிக் கொண்டு எழுந்தார்.

'பன்னிரண்டு மணிக்குள் அவர்கள் வந்துவிடுவார்கள். சாப்பாட்டிற்குப் பிறகு கிரிதரனுக்கு ஏதோ காரியங்கள் இருக்கின்றனவாம். கடைத்தெருவுக்குப் போய்விட்டு சாயங்காலம் ஆறு மணிக்குமேல் வந்து மஞ்சுளாவை அழைத்துப் போவானாம். அதனால் நீங்கள் சாப்பாட்டுக்கு அவர்கள் வருவதற்கு முன் வந்துவிடுங்கள். தபால் ஆபீஸில் தங்கவேலுவைப் பார்த்துவிட்டு அப்படியே பேச உட்கார்ந்து விடாதீர்கள், தெரிந்ததா?'' என்று எச்சரித்தாள். கங்கம்மாளுக்கு அதற்குமேல் நிற்கவோ பேசவோ நேரம் இல்லை.

''வடைக்கு இன்னும் அரைக்க வேண்டும். கூட்டிற்குத் தாளித்துக் கொட்டவில்லை'' என்று பல சில்லறை வேலைகள் அவளுக்குக் காத்துக் கொண்டிருந்தன.

மாடியறையில் மஞ்சுளா தன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கிப் பிரயாணத்திற்குச் சித்தம் செய்து கொண்டிருந்தாள். காலையில் வெகு சீக்கிரமே அன்று அவள் எழுந்து விட்டிருந்தாள். ''போகும் இடத்தில் சௌகரியங்கள் எப்படியிருக்குமோ, நீ இந்த ஈடு இங்கேயே நன்றாக எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து விட்டுக் கிளம்பு. வேலைக்கு



அமர்ந்து விட்டால் குளிக்கவும், சாப்பிடவும் எங்கே பொழுது இருக்கப் போகிறது?'' என்று அன்போடு பரிந்து கூறிய கங்கம்மாள், வெந்நீர் அடுப்பை மூட்டி தண்ணீரைக் காயவைத்து எண்ணெய் ஸ்நானம் செய்யும்படி அவளை வெகுவாக உபசரித்தாள். ஸ்நானத்திற்குப் பிறகு தலையைத் துவட்டிக் கொண்டு கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு, கங்கம்மாளுக்கு உதவி செய்ய சமையலறைக்குள் வந்தாள் அவள். ஆனால் அந்த அம்மாள் அவளை ஏதும் செய்ய விடவில்லை. ''நீ போய் முதலில் உன் காரியங்களைக் கவனி. ஈரத்தலையைக் காய வைத்துக்கொள். வேலைக்குப் போன இடத்தில், ஜுரம் தலைவலி என்று படுக்க முடியாது. நாளையிலிருந்து உனக்கு அந்த வீட்டில் ஏகப்பட்ட காரியங்கள் இருக்கும். அதனால் இன்று ஒரு நாளாவது இங்கே சற்று ஓய்வாக இருந்துவிட்டுப் போ. ஏன் உன் உடம்பை இப்பொழுது அலட்டிக் கொள்ள வேணும்?'' என்று அன்போடு அதட்டி விரட்டிவிட்டாள். எனவே மஞ்சுளா அன்று காலை முழுவதும் மாடியறையிலேயே தங்கியிருக்க வேண்டி வந்துவிட்டது.

பெட்டியைப் பூட்டி, சாவியை இடையில் செருகிக் கொண்டு ஈரக் கூந்தலை அவிழ்த்து விட்டுக் கொண்டு மாடியின் திறந்த வெளியில் வந்து வெய்யிலில் நின்றாள். கூந்தலை ஆற்றியபடி எதிரே தெரிந்த நீண்ட சாலையில் கண்களை ஓடவிட்ட வண்ணம் சிந்தனை உலகிலே புகுந்து விட்டாள். முதல் நாள் இரவு வெகு நேரம் வரை அவள் தூங்கவேயில்லை. படுக்கப் போகுமுன் நீண்ட நேரம் கங்கம்மாள் அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

மறு நாளைக்கு அவள் ஒரு புதிய உத்தியோகத்தில் அமர்வதற்குப் புறப்பட வேண்டும். 'வேலைக்குப் போகும் இடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும். யாரிடம் எப்படிப் பேசவேண்டும்' என்றெல்லாம் அந்த மூதாட்டி விவரமாக எடுத்துச் சொல்லிவிட்டுத்தான் தூங்கப் போனாள். ஆனால் மஞ்சுளாவுக்குத் தனது புதிய உத்தியோகத்தை எண்ணி எண்ணி அதற்குப் பிறகு தூக்கமே வரவில்லை. தேவி பவனத்தை விட்டு

வெளியேறி கங்கம்மாளிடம் வந்து அடைக்கலமான சில தினங்களில் தனக்கு ஒரு வேலை மீண்டும் கிடைத்து விடும் என்று அவள் நினைக்கவே இல்லை. அதுவும்.... அவள் மனத்தை ஒரே பார்வையால் கவர்ந்துவிட்டு ஓடிமறைந்து விட்டிருந்த அந்த வாலிபனது வீட்டிலேயே உத்தியோகம் என்றால்...! நம்பக் கூடிய விஷயமா என்ன? சே! சே.

'இது ஒரு இன்பமான கதைபோல் இருக்கிறது' என்று எண்ணிக் கண்களை அடிக்கடி விழித்து தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டு படுக்கையில் புரண்ட வண்ணம் இருந்தாள்.

எண்ணெய் ஸ்நானம் அவள் களைப்பை இன்னும் தூண்டி விடவே, வெய்யிலில் வெகுநேரம் அவளால் நிற்க முடியவில்லை. அயர்வு தாங்காது அறைக்குள் வந்து சாய்வு நாற்காலி மீது சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டாள். தூக்கம் என்றோ, விழித்துக் கொண்டிருக்கும் நிலை என்றோ அதைச் சொல்ல முடியாது. நனவு கனவு இரண்டும் கலந்த ஒரு மயக்கத்திலேயே அவள் தன் நினைவு இன்றி கற்பனை உலகிலே வட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

## 19

கங்கம்மாள் வீட்டில் அவளைக் கொண்டு வந்து விட்டபின் உடனே அன்று இரவே புறப்பட்டுச் சென்று விட்ட கிரிதரனை அதற்குப் பிறகு அவள் பல தினங்கள் பார்க்கவேயில்லை. சுமார் ஐந்து தினங்களுக்கு முன்பு ஒருநாள் காலை அவள் தோட்டத்துக் கிணற்றடியில் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள்.

''சரி, பிறகு மற்றவை பேசிக் கொள்வோம்'' என்று யாரோ பேசுவது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவத் தோட்டத்திற்கு வந்திருந்தான் கிரிதரன். அவளைக் கண்டு அவனும்



திடுக்கிட்டதுபோல் ஒருகணம் செயலற்று நின்றுவிட்டான். மஞ்சுளா தலையைக் குனிந்து கொண்டாள். அவளது நெஞ்சும் மார்பும் படபடத்தன. மேனி முழுவதும் ஒருவித பரவசத்தில் பதறியது!

''வரும்போதெல்லாம் நீ காலில் சக்கரம் கட்டிக் கொண்டு வருகிறாய், கொஞ்சம் தங்கி இளைப்பாறி விட்டுப் போகக் கூடாதா?'' என்று புழக்கடைத் தாழ்வாரத்திலிருந்து ஒலித்த கங்கம்மாளின் குரலைக் கேட்டதும் கிரிதரன் அந்த அம்மாளிடம் ஏதோ சம்பாஷித்துக் கொண்டிருக்கிறான் என ஊகித்துக் கொண்டாள். ஆனால் அவள் தலையை நிமிர்ந்து அவர்கள் இருந்த திக்கைக் கூடப் பார்க்கத் துணியவில்லை! பாத்திரங்களைக் கழுவிச் சமையலறையில் சேர்த்துவிட்டுக் கையைத் துடைத்துக் கொண்டு மெல்ல ஹால் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

அதற்குள் கிரிதரன் கார் புறப்பட்டுச் சென்று விட்டிருந்தது. ஏனோ அன்றையதினம் இந்த ஏமாற்றத்தை அவளால் தாள முடியவில்லை. எத்தனை முயற்சித்தும், தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டும் அவளால் விவரிக்க இயலாத அந்த துன்ப வேதனையை மனத்திலிருந்து அகற்ற முடியவில்லை! ''இந்த வாலிபன் யார்? இந்தப் பேதை உள்ளம் ஏன் இப்படிச் சொந்தம் கொண்டாடுகிறது'' என்ற பிரச்னையை அவள் புரிந்து கொள்ள முடியவில்லை.

''கிரிதரன் ஏதோ காரியமாக டவுனுக்கு வந்திருந்தான். சரியாகக் கூடச் சாப்பிடவில்லை. ஒரே அவசரம் அந்தப் பிள்ளைக்கு'' என்று தனக்குள்ளே மெல்ல முனகினாள் கங்கம்மாள். அதற்கு மேல் அவளும் பேசவில்லை. மஞ்சுளாவும் தானாக ஏதும் அவனைப்பற்றி விசாரிக்க அஞ்சினாள்.

இந்தச் சிறு சம்பவம் நடந்த அடுத்த தினம், சுந்தரேசன் தம்பதிகள் இருவரும் நோயாளியாக இருந்த நண்பர் ஒருவரைப் பார்த்துவிட்டு வர, நகரத்துச் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார்கள். அஸ்தமிக்கும் சமயமாயிற்றே என்று

வாயிற்கதவைத் திறந்து வைத்துவிட்டு மஞ்சுளா, ஹாலில் ஹரிகேன் விளக்கை ஏற்றிக் கம்பியில் மாட்டி விட்டு, ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு காலைப் பத்திரிக்கையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். 'விர்' என்று வாயிலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் கலவரத்துடன் பத்திரிக்கையைப் போட்டுவிட்டு எழுந்து நின்றாள்.

வாயிலுக்குச் சென்று யார் என்று அவள் பார்க்குமுன் கிரிதரன் மடமடவென உள்ளே நுழைந்து விட்டான். நேருக்கு நேர் அவனைக் கண்டதும் ஏற்பட்ட சங்கோஜத்தில் சட்டென அவளுக்கு பேச முடியவில்லை. வியப்புடன் அவளை ஒருமுறை ஏற இறங்கக் கவனித்த அவனும் பேச முற்படவில்லை. ''அத்தை! அத்தை'' என்று கூவியழைத்துக்கொண்டு உரிமையுடன் உள்ளே சென்றான்.

''வீட்டில் என்னைத்தவிர யாரும் இல்லை. அவர்கள் இருவரும் வெளியே சென்றிருக்கிறார்கள்'' எனச் சொல்லத் தைரியமின்றிப் பேசாத பொம்மையாகி நின்று கொண்டிருந்தாள் அவள். சமையலறை, தோட்டம் எங்கும் பரபரப்போடு தேடிவிட்டு ஹாலுக்குள் மீண்டும் வந்தான் கிரிதரன். சுவரின் பக்கம் பார்த்தபடி நின்றுகொண்டு, ''அத்தை எங்கே? அத்திம்பேர் கூட இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆஸ்பத்திரி வரை போயிருக்கிறார்கள். வரும் நேரம் தான். உட்காருங்கள்'' என்று கூறிவிட்டு, ஒரே ஓட்டமாக கூடத்திற்குச் சென்று மறைந்து கொண்டாள் மஞ்சுளா. இந்த ஒரு சிறு சம்பாஷணையின் இன்பத்தைத் தாள முடியாதது போல் அவள் இருதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கி விட்டது. 'மேலே என்ன செய்வது? வலியச் சென்று பேசினாலும் நன்றாக இராதே! பேசாது ஒளிந்து கொண்டாலும் மரியாதை யில்லையே!' என எண்ணிக் குழம்பியபடி நெற்றிமீது துளிர்த்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு நின்றாள். ஆனால் நல்லவேளையாக அவள் கவலையைத் தீர்ப்பவர்கள் போல் சுந்தரேசன் தம்பதிகள் அதுசமயம் வீடு திரும்பி விட்டார்கள்.



''அடாடா! உனக்கு ஆயுசு நூறு. இப்போதான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டே வருகிறோம். நீயும் இங்கே வந்திருக்கிறாய்'' என்று குதூகலமாகக் கூறியபடி அவனை வரவேற்று உபசரித்தார் சுந்தரேசன். இரவு போஜனத்திற்குப் பிறகு கிரிதரன் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான். ஆனால் அன்று படுக்கப் போகுமுன் தான் முதல் முதலாகக் கங்கம்மாள் சில தினங்களாகத் தனது அண்ணன் மகனுடன் கலந்து ஆலோசித்து வந்த அந்த விஷயத்தை மெல்ல அவிழ்த்தாள்.

''குமாஸ்தா உத்தியோகம் இல்லாமல் வேறு ஏதாவது நல்ல வேலை கிடைத்தால் ஒப்புக் கொள்வாயா அம்மா?'' என்று மெல்லப் பேச்சைத் துவக்கினாள் அந்த அம்மாள்.

வேலை என்றதும் படுக்கத் தலையைச் சாய்த்த மஞ்சுளா துள்ளி எழுந்து உட்கார்ந்து விட்டாள். 'கஞ்சி வரதப்பா என்றால் எங்கே வரதப்பா?' என்று குதித்தவன் கதையாக அவள், வேலை என்ற வார்த்தை காதில் பட்டதும் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளக் காத்திருந்தாள். கங்கம்மாள் மிகவும் கருணையுடையவள். அவளது கணவரும் நல்ல மனிதர்தான். எனினும் எளிய வாழ்க்கை நடத்தும் அவர்கள் இருவருக்கும் பாரமாக அவள் அந்த வீட்டில் எவ்வளவு நாட்கள் தங்கியிருக்க முடியும்? ஏதாவது ஒரு உத்தியோகம் கிடைக்காதா என்று அவள் சில நாட்களாக உள்ளூர வருந்திக் கொண்டிருந்தாள். பத்திரிகையில் கண்ட சில விளம்பரங்களுக்கு விண்ணப்பம் எழுதியும் போட்டிருந்தாள். ஆனால் ஒன்றிலிருந்தும் அன்றுவரை பதில் காணவில்லை.

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் மாமி! நான் இருக்கும் நிலையில் எனக்கு எங்கேயாவது மரியாதையான இடத்தில் வீடு கூட்டும் வேலை கிடைத்தால் கூடப்போதுமே! மானத்தோடு இருந்து என் சரீரத்தை உழைத்துப் போட நான் தயங்க மாட்டேன். கல்லூரிப் படிப்பு, பட்டம், வீண் கௌரவம் எல்லாவற்றையும் நான் மூட்டை கட்டித் தூர வைத்து விட்டேன். யசோதா அம்மா வீட்டில் சமையல்காரியாக வேலை செய்தேனே. தொழிலில் இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்று

எடைபோட்டுப் பார்த்துக் கொண்டா அங்கே போனேன்?'' என்று படபடவென்று பேசினான்.

கங்கம்மாள் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ''அப்படியானால் சரி. பயமில்லாது பேசலாம். என் அண்ணா நாராயணன் பெண் சந்திராவுக்கு இரண்டு வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட விபத்தில் முதுகு எலும்பில் காயம் எற்பட்டு நரம்பு தளர்ந்துபோய், கால்கள் இரண்டும் நடக்க முடியாது போய் விட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் இன்னமும் குணமாகவில்லை. ஏறக்குறைய அவளுக்கு உன் வயதுதான் இருக்கும். தாயில்லாத பெண். கூடவே சதா அருகில் ஒரு நர்ஸ் இருந்து உதவி செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்...'' என்று நிறுத்தினாள்.

''நர்ஸ் வேலை ஒன்றும் தெரியாதே மாமி. நான் படித்ததெல்லாம் வெறும் பி.ஏ. பட்டத்திற்குத்தானே. அதிலும் தோல்விதானே கண்டிருக்கிறேன்'' என்று ஏக்கத்துடன் பதிலளித்தாள் மஞ்சுளா. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத வேலையாக இருக்கிறதே எனக் கலங்கிவிட்டது அவள் உள்ளம்.

''நர்ஸ் என்றதும் ஆஸ்பத்திரியில் வேலை செய்து பழக்கம் உடையவளாக இருக்கவேண்டும் என்ற கண்டிப்பு ஒன்றுமில்லை. கால்கள் நடக்கமுடியாது என்பதைத் தவிர அந்தப் பெண் உடம்பிற்கு வேறு எந்த விதமான நோயும் கிடையாது. கூடத் துணையாக இருந்து கொஞ்சம் பணிவிடை செய்யவேண்டும். கஷ்டமான வேலையில்லை. சௌகரியமான இடம். நல்ல மனிதர்கள் பயப்படாதே. உன்னை நான் கண்ட இடத்திற்கெல்லாம் அனுப்பமாட்டேன்! கொஞ்ச நாட்கள் இருந்துபார். பிடிக்கவில்லை என்றால் வேறு ஏதாவது உத்தியோகத்திற்கு முயற்சி செய். எங்கள் குடும்ப வைத்தியரிடம் சொன்னால் ஏதாவது ஒரு நர்ஸை உடனே இந்த இடத்திற்கு ஏற்பாடு செய்து கொடுப்பார். ஆனால் சந்திராவுக்குத் தற்சமயம் வேண்டியதுகூட இருந்து அன்போடு பேசி பொழுதை இன்பமாகக் கழிக்க ஒரு சிநேகிதி. பணிப்பெண் அல்ல. அதனால் நானும் இவரும் வெகுநேரம்



இதைப்பற்றிப் பேசி உன்னை அங்கே அனுப்புவது என்று தீர்மானித்து வந்தோம். உனக்கும் ஒரு நல்ல வேலை தேவை. அந்தப் பெண்ணுக்கும் அன்போடு கவனிக்க ஒரு தோழி தேவை. உன் இஷ்டத்தைப் பயப்படாமல் சொல். தாட்சண்யப் பட்டுக் கொண்டு, பிடிக்காத வேலையெல்லாம் நீ செய்ய வேண்டாம்'' என்று முடித்தாள் கங்கம்மாள்.

மஞ்சுளாவிற்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. தான் மனமார நேசிக்கும் புருஷன் வீட்டில் வேலைக்காரியாகவாவது இருந்து பணி செய்யும் பாக்கியம் கிடைக்காதோ என ஏங்கும் பெண் உள்ளத்தின் பேதைக் குணம் அவளிடமும் குடிகொண்டிருந்ததால், இந்த உத்தியோகம் கிடைக்க முடியாத ஒரு பெரும் பாக்கியம் என எண்ணிப் பூரித்துப் போனாள்.

''நீங்கள் சொல்கிறபடி நடக்கிறேன் மாமி. என்னை அங்கு போய் இரு என்று சொன்னால் நான் மறுக்க மாட்டேன்'' என்றாள் மிகவும் பணிவுடன்.

'சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கிறாய்? அதைப்பற்றி அவர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்ய எனக்கு உன் உத்தேசம் தெரியவேண்டும்' என்று கேட்டாள் கங்கம்மாள் முடிவில்.

'சம்பளமா? மனதைக் கவர்ந்த அந்த வாலிபனின் வீட்டில் பணிப்பெண்ணாக வேண்டுமானாலும் இருந்து தினசரி அவனை ஒருமுறை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தால் போதாதா? வேறு என்ன வேண்டும்?' என்று ஓடியது அவள் எண்ணம்.

''தங்க இடமும் உணவும் கிடைத்தால் போதும் மாமி. நீங்கள் செய்த உதவிக்குப் பிரதியாக நான் ஏதாவது செய்ய வேண்டாமா? அதனால் உங்கள் சகோதரன் மகளுக்கு மனமுவந்து சிசுருஷைகள் செய்ய நான் முன் வருகிறேன். அன்புப் பணிக்குக் கூலி ஏன்?'' என்று கேட்டாள் மனநெகிழ்ச்சியுடன்.

கங்கம்மாள் சிரித்தாள். ''அசட்டுப் பெண்ணே! பண விஷயத்தில் கறாரும் கண்டிப்புமாக இருக்க வேண்டும். இதில்

தயவும், தாட்சண்யமும் கூடாது. சந்திராவை நீ உன் கூடப்பிறந்த பிறப்பாக நன்றாகக் கவனித்துக் கொள்; அது ஒன்றே எனக்குப் போதும். என் அண்ணாவுக்குப் பணத்திற்குக் குறைவில்லை. தாராளமாக உனக்கு வேண்டிய சம்பளத்தைக் கேட்டு வாங்கிக் கொள். நீ ஒன்றும் இனாமாக ஊழியம் செய்ய வேண்டியதில்லை'' என்றாள் கண்டிப்பான குரலில்.

''மாமி உங்கள் இஷ்டம். இவ்வளவு தொகை வேண்டும் என்று கண்டிப்பாகக் குறிப்பிட எனக்கு மனம் இல்லை'' என்றாள் வெகுளித்தனமாக அவள்.

''பைத்தியக்காரப் பெண்ணே! பண விஷயத்தில் நீ வழ வழா, கொழ கொழா என்று இருக்கவே கூடாது. இளவயதில் உணர்ச்சி வேகத்தில் காசு, பணம் முதலியவைகள் துச்சமாகத் தோன்றும். ஆனால் கொஞ்சம் வயதான பிறகு அதற்குள்ள பலத்தையும், ஆட்சியையும் நன்றாகப் புரிந்து கொள்வோம்'' என்று கூறிவிட்டு மெல்லச் சிரித்தாள் கிழவி.

''மாமி! பணம் மிகவும் அவசியமான பொருள் என்பதைப் பூரணமாக உணர்ந்த பெண் என்னைவிட உலகில் யாருமே இருக்கமாட்டார்கள். வாழ்க்கைக்கு அது மிகவும் தேவையானதுதான். ஆனால் ஒரேயடியாக அதற்கு யாரும் அடிமையாகி விடக்கூடாது என்பது என் அபிப்பிராயம். எந்த ஒரு நிலையிலும் இந்த அடிப்படையான கொள்கையைக் கைவிடாதிருக்க முயற்சிப்பேன்'' என்றாள்.

'மகளே என்ன சமத்து!' என்று கேலியாகப் பதில் அளித்த கங்கம்மாள் விடி விளக்கைத் தணித்து விட்டுப் படுத்துக் கொண்டாள். அதற்குப் பிறகு மேலே அவர்கள் இருவரும் ஏதும் பேசவில்லை.

இடையே இரண்டு நாட்கள் சென்றன. அன்று மாலை தன் பெயருக்கு வந்த கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் படித்த கங்கம்மாள் மகிழ்ச்சியுடன் உள்ளே விரைந்து வந்தாள். கிழிந்த புடவை ஒன்றைத் தைத்து சரிப்படுத்திக் கொண்டிருந்த மஞ்சுளாவுக்கு அவள் சொல்லும் முன்னே விஷயம் விளங்கி



விட்டது. அவளது உள்ளம் உவகை வெள்ளத்திலே ஊசலாடியது.

''நாளைக்காலை ஸ்ரீதரன் இங்கே ஒரு காரியமாக வருகிறான். அப்படியே உன்னையும் அழைத்துக் கொண்டு போவதாக எழுதியிருக்கிறான்'' என்றாள் பரபரப்பாக. பிறகு என்னவோ நினைத்துக் கொண்டவள்போல், கூட டிரைவர் சிந்தாமணியும் வருவார் என்று குறிப்பாகக் கூறிவிட்டுப் ''பயப்படாதே! சின்னப்பெண் உன்னை அப்படியெல்லாம் தனியாக அனுப்பிவிட மாட்டோம்'' என்றாள்.

மஞ்சுளா பதிலுக்குப் புன்முறுவலித்தாள். அவளது கண்களிலும் முகத்திலும் நன்றி பெருக்கெடுத் தோடியது.

'பூம்! பூம்!' என்று காரின் ஊது குழல் உரக்க ஒலிக்கவே, திடுக்கிட்டு அரை விழிப்பு நீங்கித் துள்ளி எழுந்து நின்றாள் மஞ்சுளா. எங்கேயோ கனவு உலகில் இல்லாத கற்பனைகளைப் புனைந்த வண்ணம் மயங்கிக் கிடந்த அவளது மூளையில், 'அடாடா! அவர்கள் வந்து விட்டார்கள் போலிருக்கிறதே. கொஞ்ச நேரத்தில் கிளம்ப வேண்டுமே' என்று கவலை பளிச்சென்று தோன்றவே; பிடரியைப் பற்றிக்கொண்டு கண்களை அழுத்திய நித்திரையை சுலபமாக உதறிவிட்டு, பெட்டியைத் திறந்து சீப்பைக் கையில் எடுத்துக் கொண்டாள். இரண்டே நிமிடத்தில் தலையை வாரி அழகாக முடிந்து கொண்டாள். பெட்டி அடியில் சலவை செய்து சுத்தமாக வைத்திருந்த சிவப்பு கட்டாவ் வாயில் புடவையையும் மஞ்சள் நிற ரவிக்கையையும் எடுத்து விரைவாக உடுத்திக் கொண்டாள். லேசாக முகத்தில் கொஞ்சம் பவுடரைப் பூசிக்கொண்டு சிறு குங்குமப் பொட்டை நெற்றியில் வைத்துக்கொண்டு தன் அலங்காரத்தில் திருப்தியடைந்தவளாகப் பெட்டியை மூடிப் பூட்டினாள். இதற்குள் ''மஞ்சுளா! மஞ்சுளா!'' கீழே இருந்து கங்கம்மாள் கூப்பிடுவது கேட்டது.

'இதோ வந்துவிட்டேன் மாமி!'' என்று பதில் கொடுத்துவிட்டு நாலைந்து படிகளை ஒரே தாவலில்

தாண்டிக்கொண்டு இறங்கினாள். "அவர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள் அம்மா!" என்று மீண்டும் எச்சரித்தது கங்கம்மாளின் குரல். வீணாகக் காக்க வைக்கக் கூடாது என்ற ஆத்திரத்தில் கடைசி சில படிகளையும் ஒரே மூச்சில் தாண்ட இறங்கிய மஞ்சுளாவின் கால் இடறி விட்டது. அவ்வளவுதான், தடதடவென்று பெரும் சப்தத்துடன் அவள் படிகளில் உருண்டு புரண்டு கீழே விழுந்து விட்டாள்!

"என்ன சத்தம்? யார் விழுந்தது?" என்று கூக்குரலிட்டுக்கொண்டே சுந்தரேசன் புழக்கடையிலிருந்து ஓடி வந்தார்.

"காயம் ஏதும் படவில்லையே? நல்லவேளை! ரொம்ப உயரத்திலிருந்து விழவில்லை" என்று யாரோ மிகவும் மிருதுவான குரலில் வினவிய வண்ணம் தன்னைத் தூக்கி உட்கார வைப்பதை உணர்ந்து, தலையை நிமிர்த்திப் பார்த்தாள் மஞ்சுளா.

கிரிதரன் அல்லவா அவளைத் தொட்டுத் தூக்கி விட்டான்!

"காலைச் சுளுக்கிக் கொண்டு விட்டதா? புறப்படுகிற சமயம் இப்படியா நடக்கணும்?" என்று புலம்பிய கங்கம்மாள் கேட்ட கேள்வியோ, "மெதுவா பார்த்து இறங்கி வந்திருக்கலாம், தலை தப்பியது, போகட்டும் இந்த மட்டில்" என்று முனகிய சுந்தரேசனையோ அவள் கவனிக்கவேயில்லை. வெட்கத்தினாலும் கோபம் அல்லது சங்கோஜம் என்று விவரிக்க முடியாத ஒரு நூதன உணர்ச்சியினாலும் உடல் குன்றி, தலையைத் தூக்கிப் பார்க்கவும் துணிவின்றி மானைப்போல் துள்ளி எழுந்து ஒரே பாய்ச்சலில் ரேழி அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டு விட்டாள்.

இட நெருக்கடியில் பஸ் போன்ற பொதுஜன வாகனங்களில் தப்பித் தவறி புருஷர் யாரேனும் மேலே இடித்து விட்டால் உயிரே போய்விட்டது போல் மேனி பதறிவிடும் அவளுக்கு. இப்போதோ பெரும் குற்றம் புரிந்துவிட்டது போல் அவள் உடல் வெட வெட வென்று நடுங்கியது இந்த சம்பவத்தால்.



"இந்தச் சிறு விபத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, வேண்டுமென்றே கை நீட்டித் தன்னைத் தொட்டுத் தூக்கியிருக்க மாட்டார் அவர். அத்தனை கயவர் அல்ல. எனினும் இந்தச் சிறு சம்பவம் நடந்திராமல் இருந்திருந்தால் எவ்வளவோ மேலாக இருந்திருக்கும். சே! சே! ஏன் விழுந்தேன்" என்று தன்னையே நொந்து கொண்டு மனக்கிலேசத்துடன் வெகு நேரம் அறைக்குள்ளேயே நின்று கொண்டிருந்தாள்.

## 20

விரைவாகச் சூரியன் மலை வாயிலில் போய் வீழ்ந்து கொண்டிருந்தான். இருள் தேவதை தன் கரிய போர்வையை ஆகாய வீதியில் வீசுமுன் அடிவானத்தில் பூரணச் சந்திரன் பூத்து எழுந்துவிட்டான். இரவும் பகலும் கலக்கும் அந்த இன்பமான அந்திவேளையில், வானமும் பூமியும் புதியதொரு பொலிவுடன் விளங்கின. கப்பல் போன்ற புத்தம் புதியதொரு பெரிய கார், தாரினால் மெழுகப்பட்ட ராஜபாட்டை இரண்டும் சேர்ந்து கொண்டால் கேட்பானேன்? கார் ஓடுவதே தெரியாது விரைந்து சென்று கொண்டிருந்தது. போதாததற்குச் சுகத்திற்காக உள்ளே ஆசனங்களுக்கு 'டன்லப்பில்லோ' போட்டிருந்ததனால் உடம்பை அசைக்கும் போதெல்லாம் பின்னாலிருந்த யாரோ பிடித்து விட்டு உபசரிப்பது போல் மிகவும் சொகுசாக இருந்தது. செல்வம் கொடுக்கும் சுகபோகங்களில் இதுவும் ஒன்று எனக் குறிப்பாக உணர்ந்து கொண்ட மஞ்சுளா, ஆசனத்தின்மீது மெல்லச் சாய்ந்து கொண்டு, அந்த இன்பத்தையும் கொஞ்சம் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

அரைவாசி திறந்து விட்டிருந்த கண்ணாடி ஜன்னல் வழியே நிலவின் தண்மையைச் சுமந்துகொண்டு, காற்று இனிமையாக வீசிக் கொண்டிருந்தது. அவள் ஜன்மத்தில் உல்லாசமாக இப்படி ஒரு காரில் பிரயாணம் செய்வது இதுதான் முதல் தடவை. ஏழை ந்ருபதியின் பேத்தியான அவளுக்கு, பொதுஜன வாகனமான

பஸ் கூட டிமிக்கி கொடுத்துவிடும் வழக்கமாயிற்றே? அவள் இந்தவிதமான சௌகரியங்களைக் கனவில் கூட நினைக்க இயலுமா என்ன? எல்லாம் அவளுக்கு ஒரே பிரமிப்பாகத்தான் இருந்தது.

புறப்படுமுன் ரேழிப் பக்கமிருந்த பூஜை அறைக்குள் சென்று, அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கின் முன் கை குவித்து வணங்கினாள். ''தேவி! இந்த ஒரு வேலையாவது நீடித்து இருக்க அருள் புரிய வேண்டும் தாயே! உன்னையன்றி எனக்கு வேறு உற்ற துணை யார்?'' என்று மனம் உருகத் தன் இஷ்ட தெய்வமான பராசக்தியை நினைத்துத் தியானித்து விட்டு வெளியே வந்தாள்.

கங்கம்மாள் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு பழங்கள் முதலியவைகள் வைத்து எடுத்துக்கொண்டு வந்தாள். ''எங்களது ஞாபகமாக இதை வாங்கிக் கொள்'' என்று தொண்டையடைக்கக் கூறிவிட்டு, இரண்டு ரூபாய் நாணயங்களை வெற்றிலை மீது வைத்து, தட்டை அவளிடம் நீட்டினாள். ஒரு சில நாட்கள் பழகிவிட்ட போதிலும் எல்லையற்ற அன்பைத் தன்பால் காட்டிய அந்த மூதாட்டியின் உதார குணமும் பரிவும் மஞ்சுளாவின் நெஞ்சைத் தொட்டு விட்டது. அவளால் தாங்க முடியவில்லை.

''மாமி! உங்களுக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது என்றே விளங்கவில்லை'' எனத் திணறிவிட்டு, பொல பொலவெனக் கண்ணீர் உகுத்துவிட்டாள்.

''அசடே, போகும்போது அழக்கூடாதம்மா!'' என்று வெளிக்குத் தைரியம் சொன்னபோதிலும் கங்கம்மாளின் கண்களும் கலங்கி விட்டிருந்தன.

''ஆயிரம் மைலுக்கப்பால் போய்விடப் போவதில்லை. காரில் போனால் இரண்டு மணி நேரப் பிரயாணம். ரயிலில் போனால் இன்னும் கொஞ்சம் நேரம்கூட ஆகும். அவ்வளவுதான். நினைத்தபோது வந்து ஒருமுறை பார்த்துவிட்டுப் போனால் போகிறது. ஜலங்கண்டான் எங்கேயோ அமெரிக்காவில் இருப்பது போல் இரண்டு பேரும்



அலட்டிக் கொள்கிறீர்கள்'' என்று ஒரு அதட்டல் போட்டுவிட்டு, ''நேரமாச்சு அவர்களை வீணாகக் காக்க வைக்கக் கூடாது'' என்று துரிதப்படுத்திவிட்டு, வாயிற் பக்கம் நடையைக் கட்டினார் சுந்தரேசன். அவர் மனதும் ஒரு நிலையில் இல்லாது தவியாகத் தவித்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டு பிரிய மனமின்றி விடை கொடுத்தாள் கங்கம்மாள். சிந்தாமணி பெட்டியை எடுத்துச் சென்று காரின் பின் பக்கத்தில் வைத்துப் பூட்டினார். ''மாமா! மாமி போய்விட்டு வருகிறேன்'' என்று நமஸ்கரித்து, ஆசி பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறிக்கொண்டாள் மஞ்சுளா. வண்டியும் புறப்பட்டுவிட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் தைரியமாக இருக்க முயற்சித்தாள். ஆனால் முந்தியதொரு பயங்கரமான அனுபவத்தினால், ''இந்தப் புதிய வேலை எப்படி இருக்குமோ?'' என்றதொரு பீதி அவளைக் கொஞ்சநேரம் குழப்பிக் கொண்டுதான் இருந்தது.

''உலகத்தில் எல்லோருமே கெட்டவர்களா! எங்கு போனாலும் கஷ்டம்தான் ஏற்படுமென்று ஏன் முன் கூட்டியே துன்பத்தை எதிர்பார்க்க வேண்டும்! சே! என்ன கோழைத்தனம்?'' என்றெல்லாம் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு அனாவசியமாகக் கிளைவிட்டு ஓடிய கவலைகளை உதறிவிட்டு, வேறு ஏதேதோ இன்பமான நினைவுகளில் கருத்தை ஓட்ட கண்களை மூடிக்கொண்டாள். பிரயாணத்தின் ஆரம்பத்தில் ''எல்லாச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு விட்டீர்கள் அல்லவா?'' என்று விசாரித்தார் சிந்தாமணி. அதற்குப் பின் அவர் அவளிடம் பேசவே இல்லை. கிரிதரன்தான் வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான். அவனும் வாயைத் திறக்கவில்லை. எனவே பிரயாணத்தின் பெரும் பகுதி மௌனத்திலேயே கழிந்து கொண்டிருந்தது.

வழுவழு என்றிருந்த சாலையில் அசையாது விரைந்து கொண்டிருந்த வாகனம், திடீரென்று ஒருமுறை குலுங்கியதும் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

வெள்ளித் தட்டென வானிடையே ஊர்ந்து கொண்டிருந்த நிலவு பளிச்செனக் காய்ந்து கொண்டிருந்தது. தார் போட்ட ராஜபாட்டையை விட்டு வண்டி, குண்டும் குழியுமாய் நிறைந்த ஒரு குறுக்குப் பாதையில் போய்க் கொண்டிருப்பதைக் கண்டாள். அதுசமயம் பின்னால் திரும்பிப் பார்த்த சிந்தாமணி, அவள் உள்ளத்தில் எழுந்த கேள்வியை உணர்ந்து கொண்டவர்போல், ''இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊர் வந்து சேர்ந்து விடுவோம். ஜலங்கண்டான் வீரசோழன் பட்டணத்தைப் போல் அத்தனை பெரிய பட்டணம் அல்ல. அதுவும் சென்னையில் வசித்த உங்களுக்கு எங்கள் ஊர் ஒரு கிராமம் போல் இருந்தாலும் இருக்கும்'' என்றார் வேடிக்கையாக.

சாலையின் இருமருங்கிலும் அதிக மரங்கள் இருக்கவில்லை. இங்குமங்குமாகப் பாதைக்கு வரப்பு கட்டிக் கொண்டிருந்த மரங்களுக்கு அப்பால் பரந்து காணப்பட்ட நிலங்களில் சோளப் பயிர் துளிர்த்து வரப்புக்குமேல் சற்று உயர்ந்து வளர்ந்திருந்தது.

''ஜலங்கண்டான் என்று ஊருக்கு எந்தப் புண்ணியவானோ பெயர் வைத்துவிட்டான். உண்மையில் ஜலத்தைக் காண்பது இங்கெல்லாம் கொஞ்சம் கஷ்டந்தான். அதனால்தான் சுற்று வட்டாரக் கிராமங்கள் அனைத்திலும் புஞ்சை பயிரே அதிகமாக பயிரிடப்படுகின்றது. பெரும்பாலான ஏழை மக்கள் அரிசியையும், சோளம், கேழ்வரகு, கம்பு இவைகளையும் உணவாக உபயோகிக்கின்றனர்'' என்றார் கிழவர் தொடர்ந்தார்போல்.

இவ்வளவு நேரம் மௌனமாக இருந்த கிரிதரன் ''போதும் சிந்தா! நம் ஊருக்குள் காலை வைக்குமுன் குடிக்கத் தண்ணீர் இல்லை. சாப்பிட சாதம் கிடைக்காது என்று அவர்களைப் பயமுறுத்துகிறீர்களே!'' என்று பரிகாசமாகக் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

''அம்மா! இந்தக் கிழவன் பேச்சைக் கேட்டுவிட்டு பயந்துபோய் விடாதீர்கள்! உங்கள் பட்டணத்தில் உள்ள



எல்லாச் சௌகரியங்களும் எங்கள் பங்களாவில் கிடைக்கும். தண்ணீருக்கும் சாப்பாட்டுக்கும் எந்த விதமான குறைவும் கிடையாது!'' என்று விளையாட்டாகப் பதில் அளித்த சிந்தாமணி, ''ஆச்சு! இதோ ஊர் வந்து விட்டோம்!'' என்றார்.

நிலவுக் காலங்களிலாவது மின்சாரத்தை மிச்சப்படுத்த வேண்டும் என்ற நகர சபையின் திட்டத்தின் பயனாக தெருவின் இரு பக்கங்களிலும் வரிசையாக நாட்டப்பட்டிருந்த மின்சார விளக்குகள் ஏதும் ஏற்றப்படவில்லை.

மொட்டைப் பனைமரங்கள் போல் அவை காட்சியளித்தன. வண்டி இன்னும் சற்று ஊருக்குள் முன்னேறியதும், ''இதுதான் ஊரின் இருதயம் போன்ற முக்கியமான கடைத்தெரு'' என்று சிந்தாமணி அறிமுகம் செய்தார். பளிச்சென்று இங்கும் அங்கும் ஜகஜ்ஜோதியாக கடை முகப்பில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தபோதிலும், வீரசோழன் பட்டணத்துக் கடைத் தெருவைப்போல் அது மிகவும் பெரியதாக இருக்கவில்லை. ஜனநடமாட்டமும் அதிகமாகக் காணப்படவில்லை. பொன் நகைகளால் அலங்கரித்திருந்தும் ஒரு சிறு புன்னகை இல்லாததால் பொலிவிழந்த நங்கையின் முகம்போல் களையற்றுக் காணப்பட்டது கடைத்தெரு. சில நிமிஷங்களில் அதைத் தாண்டி இரண்டொரு வீதிகளில் குறுக்கும் நெடுக்குமாகப் புகுந்த கார், ஊரின் மறு எல்லையைச் சமீபிக்கத் தொடங்கியது.

''நமது பழைய வீடு இங்கே மேலத் தெரு என்ற இடத்தில் ஊருக்குள்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது நம்பங்களா ஊருக்கு வெளியே சற்று ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. கார் வசதி இல்லாதபோது சட்டென்று ஒரு சாமான் வாங்கக் கடைத்தெருவுக்கு வர வேண்டுமானால் மணிக்கு ஒருமுறை இந்தப் பக்கம் போகும் பஸ்ஸைப் பிடித்துத்தான் வரவேண்டும். இரண்டு மைல்கள் நடந்து போகத் தெம்பு இருந்தால் நடராஜா சர்வீஸில் கிளம்பலாம்'' என்று சிரித்தார் சிந்தாமணி.

கடிந்துகொள்ளும் பாவனையில் அவரை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு வண்டியை மேலே ஓட்டிக்கொண்டு

சென்ற கிரிதரன், மிகவும் பெரியதொரு இரும்பு கேட் அருகில் நிறுத்தினான். அதன் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டிருந்த பெரிய சிமெண்டு தூண்கள் உச்சியில் 'கால் பந்து'கள் போன்ற வடிவத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்குகள் வெளியிட்ட ஒளி, நிலவுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்தது. விளக்குக் கம்பத்தருகே இருந்த சிறு அறையிலிருந்து வெளியே ஓடி வந்தான் காக்கிச்சட்டை தரித்த கூர்க்கா காவலாளி ஒருவன்.

பரபரப்பாக ஒரு சலாம் போட்டுவிட்டு, பூட்டியிருந்த கம்பிக் கேட்டைத் திறந்து, கார் உள்ளே செல்ல வழிவிட்டான் அவன். வண்டியை மெல்லத் தோட்டத்திற்குள் திருப்பினான் கிரிதரன். அழகிற்காக வெட்டிவிடப்பட்ட பசும் புல் தரையும், ஆங்காங்கே அதன் நடுவே காணப்பட்ட சிறு கொடி வீடுகளும், சிலைகளும் நிலவொளியில் ஏதோ ஒரு இன்ப உலகத்திற்குள் புகுந்துவிட்டதைப் போன்ற திகைப்பை உண்டாக்கின. ''மஞ்சுளா வியப்புடன் கண்களை அகல விரித்துத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாரினால் மெழுகியிருந்த நடைபாதையில் ஓடிய வண்டி, சில நிமிஷங்களில் மிகவும் பெரியதொரு இரண்டடுக்கு மாடிக் கட்டடத்தின் முன் வந்துநின்றது.

சிந்தாமணி சிறு வாலிபன்போல் வெளியே துள்ளிக்குதித்தார். ஓடிவந்து மஞ்சுளாவுக்காக கதவைத் திறந்து விட்டு, ''இறங்குங்கள். வீடு வந்து சேர்ந்து விட்டோம்'' என்று உபசரித்தார்.

மஞ்சுளா கீழே இறங்கினாள். தன்னைச் சுற்றிலும் கண்களைச் சிறிது ஓடவிட்டு விட்டு, புடவைத் தலைப்பைச் சரிப்படுத்திக் கொண்டு உள்ளே செல்லத் திரும்பினாள். 'லொள் லொள்' என்று பயங்கரமாக ஒரு நாய் குரைக்கும் சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு அவள் நிதானிக்குமுன், மிக ஆக்ரோஷமாகப் பாய்ந்து வந்த 'அல்சேஷியன்' நாய் ஒன்று அவள் மீது தொப்பென்று வந்து விழுந்துவிட்டது. ''ஐயோ அம்மாடி!'' என்று அலறிவிட்டாள் அவள். பயத்தினால் கையும் காலும் பதற, உடல் 'வெட வெட' வென நடுங்க ஒரே



பாய்ச்சலில் மீண்டும் காருக்குள் ஏறிக் கதவை சாத்திக் கொண்டுவிட்டாள்.

சாமான்களைக் கீழே இறக்கி வைத்துக் கொண்டிருந்த சிந்தாமணி, மேல் துண்டால் வாயை மூடிக்கொண்டு சிரித்தார். கிரிதரன் அவரைச் சுட்டு விடுகிறவன் போல் முறைத்துவிட்டு, காருக்குள் தாவத் துடித்த நாயின் கழுத்துப் பட்டையை இழுத்து நிறுத்திக் கொண்டான். ''சீ கழுதை! அந்தம்மாளை ரொம்ப பயமுறுத்தி விட்டாயே!'' என்று செல்லமாக அதட்டிவிட்டு, முன்னங்கால்களைத் தூக்கி நாக்கை நீட்டிக் கொஞ்சிய நாயைத் தடவிக் கொடுத்து சமாதானம் செய்தான். இதற்குள் உள்ளேயிருந்து இரண்டு வேலையாட்கள் விரைந்து ஓடி வந்தார்கள். ''யாரது டைகரை அவிழ்த்துவிட்டது?'' என்று கோபமாகக் கேட்ட கிரிதரன், அவர்களில் ஒருத்தனிடம் நாயைத் தள்ளிவிட்டு அதை உள்ளே இழுத்துச் செல்லும்படி உத்தரவிட்டான். பிறகு காரின் ஜன்னல் அருகே வந்தான். உள்ளே மெல்லக் குனிந்து தாழ்வான குரலில், ''மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் புதிதாக வந்திருப்பதினால் டைகர் உற்சாகத்துடன் குரைத்து உங்களைக் கலவரப் படுத்தி விட்டான். பழகிவிட்டால் பச்சைக் குழந்தை போல் பின்னால் ஓடிவந்து விளையாடுவான்'' என்று ஆறுதல் சொன்னான்.

மஞ்சுளாவுக்கு அன்று பகலில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு அவனை நிமிர்ந்து பார்த்துப் பேச துணிவு இருக்கவில்லை. ''நகத்தால் பிராண்டிக் காயம் ஏதும் ஏற்படுத்தவில்லையே?'' என்று தொடர்ந்தாற்போல் கவலையுடன் அவன் விசாரித்ததும், தான் மௌனமாக இருப்பது மரியாதையல்ல என்று எண்ணி, ''கொஞ்சம் பயந்து விட்டேன் அவ்வளவுதான்'' என்று முணுமுணுத்தாள். ''பழகும் வரை கொஞ்சம் அவனைக் கட்டிப் போட்டு வைக்கச் சொல்கிறேன். கவலைப்படாதீர்கள்!'' என்று உறுதி கூறவிட்டு, காரின் கதவைத் திறந்துவிட்டான். மரியாதையாகச் சற்று ஒதுங்கிக் கொஞ்சம் தூரத்திலே அவன் நின்று கொண்டிருந்த போதிலும், பரிவு நிறைந்த அவனது குரல் மிருதுவான பட்டுத் துணிபோல் மிக்க மென்மையாக அவளது நெஞ்சை வந்து

கவ்விக் கொண்டு விடவே, விவரிக்க முடியாத ஒரு புதிய உணர்ச்சியில் மார்பு படபடக்க, முகம் சிவக்க சங்கோஜத்துடன் காரினின்று மெல்ல இறங்கி வெளியே வந்தாள்.

சிந்தாமணி, அவளுடைய பெட்டியை கீழே இறக்கி வைத்தார். ''டைகரிடம் கொஞ்சம் பழகிவிட்டால் உங்களுக்கு அவனைப் பிடித்துவிடும். ஊருக்கு வெளியே கொஞ்சம் தனியிடத்தில் கட்டப்பட்டிருக்கும் வீடு பாருங்கள்; இப்படி ஒரு நாய் துணைக்கு இல்லாவிட்டால் யாராவது புகுந்து கொள்ளையடித்தால் கூடக் கேள்வி முறை இருக்காது'' என்றார். கிரிதரன் தன்னைக் கோபத்துடன் முறைத்துப் பார்ப்பதைக் கூட அவர் சட்டை செய்யவில்லை. நாள் முழுவதும் வாய்ப்பூட்டுப் போட்டுக் கொண்டு மரியாதைக்காக மௌனம் சாதித்து சாதித்து அவருக்கு அலுத்துப் போயிருந்தது. 'மஞ்சுளாவும் நம்மைப் போல் இந்த வீட்டில் வேலை செய்யத்தானே வந்திருக்கிறாள்! அவளிடம் கொஞ்சம் பேசி விட்டால் தலையா போய்விடும்?' என்று நினைப்பில் அவர் வாயைத் திறந்தார்.

''இப்படி வாருங்கள்'' என்று வழி காட்டிவிட்டு கிரிதரன் பங்களாவிற்குள் வேகமாக நுழைந்தான். படிகள் மீது மெல்ல ஏறி அவனைப் பின் தொடர்ந்தாள் மஞ்சுளா. வாயில் வராந்தாவைத் தாண்டி, பிரகாசமாக விளக்குள் எரிந்து கொண்டிருந்த ஒரு பெரிய ஹாலுக்குள் நுழைந்ததும், ''இங்கே கொஞ்சம் இருங்கள்'' என்று கூறி ஒரு சோபாவைச் சுட்டிக் காட்டிவிட்டு உள்ளே சென்று விட்டான்.

## 21

**உ**ண்மையில் அவள் புறப்படும் முன் இத்தனை பெரியதொரு மாளிகைக்குப் போகப் போகிறோம் என நினைக்கவே இல்லை. ''பெரிய வீடு, உனக்குத் தங்க சௌகர்யத்திற்கு குறைவிருக்காது'' என்று கங்கம்மாள் கூறிய பொழுது அவள், தன் பெரியப்பா கேதாரியின் பங்களாப்



போன்றுதான் ஒரு வீட்டைக் கற்பனை செய்து கொண்டிருந்தாள். முன் பக்கத்துத் தோட்டத்தையும், வாயில் வராந்தாவையும், அந்த ஹாலையும் பார்த்ததும் அவள் ஒரேயடியாக பிரமித்து விட்டாள். 'கடல் போன்றல்லவா இருக்கிறது! இதைப் பெருக்கிச் சுத்தமாக வைக்கவே அரை டஜன் வேலைக்காரிகள் வேண்டும் போலிருக்கின்றதே' எனத் தனக்குள் எண்ணியபடி, தன்னைச் சுற்றிலும் வியப்புடன் பார்த்த வண்ணம் ஒரு சோபா மீது மெல்ல வந்து உட்கார்ந்தாள். அப்படியே அதன் மீது காலை நீட்டிக் கொண்டு படுத்துத் தூங்கிவிடலாம் போல் அத்தனை மிருதுவாக இருந்தது அந்த ஆசனம். பளபளவென்று விளக்கொளியில் மின்னிய 'மொசாயிக்'கல் பதித்திருந்த தரையையும், ஹாலின் நடுவே சதுரமாக விரித்திருந்த விலையுயர்ந்த ரத்தினக் கம்பளத்தையும் மாறி மாறி வெறித்துப் பார்த்தாள். வாயிற்படிகள் போல் மிகவும் அகன்று விளங்கிய ஜன்னல்களின் இரு ஓரத்திலும் தொங்கிய பச்சை நிற வெல்வெட் திரைச்சீலையைச் சற்று நேரம் திரும்பிப் பார்த்தபோது அவளுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

பி.ஏ. பரீட்சைக்கு அவள் படித்துக் கொண்டிருந்த சமயம், கலாசாலை மாணவிகளிடையே வெல்வெட் சோளி ஒரு திடீர் நாகரீகமாகத் தலைதூக்கி நின்றது. நெருப்பாக வெய்யில் அடித்த போதிலும், வியர்வை ஆறாக வழிந்தோடினாலும், அவைகளையெல்லாம் சகித்துக் கொண்டு நாகரீக ஓட்டத்துடன் ஒன்றியிருக்கும் நிமித்தம் பெரும்பாலான மாணவிகள் கலாசாலையில் எந்த ஒரு சிறு கொண்டாட்டத்திற்கும் வெல்வெட் ரவிக்கையை அணிந்துக் கொண்டு வந்துவிடுவார்கள். நெருப்பாக அவை மேனியை வேகவைத்தது என்ற இரகசியம் அவைகளை அணிந்து கொண்டவர்களுக்குத் தெரியுமே ஒழிய, பார்ப்பவர்களுக்குப் பச்சை, நீலம், சிவப்பு என்று கண்களைப் பறித்தது அவைகளின் நிற அழகு. எப்படியாவது தானும் இந்த கோஷ்டியில் சேர்ந்துவிட வேண்டும் என்ற ஆசை தாள முடியாது, தாத்தா ரகுபதியின் உத்தரவின் மேல் வெல்வெட் ஒரு கஜம் வாங்க ஒரு முறை அவள் கடைக்குப் போயிருந்தாள்.

''இவையெல்லாம் வெளியூர் சரக்கு, விலை அதிகம்! இது நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ரகத்தை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறிக் கடைக்காரன் வெலவெலவென்று இடைவெளி விட்டு நலுக்கியிருந்த ஒரு துணியை எடுத்து அவள் முன் விரித்தான். கம்பளிப் பூச்சிகளை ஒன்றாகச் சேர்த்து நெய்தது போல் காணப்பட்ட அந்தப் பயங்கரமான துணிக்கு வெல்வெட் என்று பெயர் கொடுத்து விலையும் பதினெட்டு என்று ஒரு வெடிகுண்டையும் தூக்கிப் போட்டான், அந்த மகராஜன். அந்தப் பணமிருந்தால் ஒரு மாதம் வீட்டுச் செலவை ஓட்டலாமே என எண்ணி, ஏமாற்றத்துடன் வீடு திரும்பி விட்டாள்.

அதை இப்போது நினைத்துக் கொண்டதும் அவளுக்கு நீண்டதொரு பெருமூச்சு எழுந்தது. ஏழைப் பெண்களை விடப் பணக்காரர்கள் வீட்டு ஜன்னல்கள் மிகவும் கொடுத்து வைத்தவை போலும் என ஓடியது அவள் சிந்தனை. வெல்வெட் திரையை மெல்ல அசைத்துக் கொண்டு உள்ளே குளிர்ந்த காற்று வீசியதும், யாரோ வீணையின் நரம்புகளைத் தட்டி இனிமையான ஓசையை எழுப்புவது போன்ற நாதம் நிறைந்த மெல்லிய சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

ஹாலின் மத்தியில் அரண்மனைகளில் காணப்படும் விசித்திரமான கண்ணாடி விளக்கு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். காற்று அசைந்த போதெல்லாம் சரம் சரமாக விளக்கின் நாலா பக்கங்களிலும் தொங்கிய கண்ணாடித் துண்டுகள் ஒன்றோடு ஒன்று மோதி இனியதொரு சப்தத்தை எழுப்பிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், அவளுக்கு இதெல்லாம் கனவா அல்லது நனவோ என்ற ஐயம் ஏற்படத் தொடங்கிவிட்டது.

கிரிதரன் உள்ளேயிருந்து அழைத்ததைக் கேட்டதும் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்தாள். வழுக்கிவிடும் போலிருந்த தரைமீது மெல்ல நடந்து பெரிய ஹாலைத் தாண்டி, அடுத்தாற் போலிருந்த சிறு ஹாலுக்குள் நுழைந்தாள். முன்னதைவிட இதுவும் அலங்காரத்தில் மிகவும் பிரமாதமாக இருப்பதை ஜாடையாகக் கவனித்த போதிலும்,



பட்டிக்காட்டான் பட்டணத்தை வெறித்துப் பார்ப்பதுபோல சுற்றிச் சுற்றி நின்று சுவரில் மாட்டியிருந்த சித்திரப் படங்களையும், மூலையில் மேஜைமீது வைத்திருந்த சிலைகளையும் ஊன்றிக் கவனிக்க அவளுக்கு வெட்கமாக இருந்தது.

பின்னால் சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணியபடி வேகமாகக் கிரிதரனைப் பின்பற்றி நடந்தாள். இரண்டாவது ஹாலைத் தாண்டி இருவரும் பின் கட்டிற்குள் பிரவேசித்தார்கள். பங்களாவின் முன்பகுதி பழைய காலத்துப் பாணியில் கூடம், தாழ்வாரம் முற்றம் என்று அமைந்திருப்பதைக் கண்டாள். தாழ்வாரத்தைத் தாண்டி முற்றத்தையொட்டியிருந்த பெரியதொரு கூடத்திற்குள் இருவரும் நுழைந்தார்கள். கூடத்தின் மத்தியில் கருங்காலியினால் ஆன வெள்ளிக் குமிழ்கள் கொண்ட அழகானதொரு ஊஞ்சல் தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு அருகே சுவரின் ஓரமாகக் கிடந்த பிரம்பு நாற்காலியைச் சுட்டிக்காட்டி, ''இங்குச் சற்று இருங்கள்'' என்று உபசரித்துவிட்டு, பின் தாழ்வாரத்தில் தெரிந்த ஒரு கதவு வழியே உள்ளே சென்று மறைந்துவிட்டான் கிரிதரன்.

நாற்காலியில் அமர்ந்தபடி மஞ்சுளா கண்களால் நாலாபுறமும் துழாவிக் கொண்டிருந்தாள். திறந்த முற்றத்தின் நடுவில் சிமெண்டு மேடைமீது துளசிச் செடி மிகவும் பசுமையாக வளர்ந்து நின்று கொண்டிருந்தது. மேடையிலிருந்த சிறு பிறையில் வெண்கல அகல் விளக்கு அணையும் தறுவாயில் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. துளசிச் செடி மீது பக்தி சிரத்தையுடன் பூஜித்துப் போட்டிருந்த மல்லிகை மலர்மாலை மொட்டவிழ்ந்து மலர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. கூடத்தின் பக்கமாகக் காற்று வீசும் பொழுதெல்லாம் மல்லிகையின் இனிமையான மணம் லேசாக நாசியைத் தாக்கிக் கொண்டிருந்தது.

முற்றத்தின் எதிரேயிருந்த தாழ்வாரத்தில் தோட்டத்திற்குச் செல்லும் கதவு அமைக்கப்பட்டிருப்பதையும், இடது புறத் தாழ்வாரத்தில் மாடிக்குச் செல்லும் கதவு அமைந்திருந்ததையும்

அவள் கவனித்தாள். கூடத்தில் ராமர் பட்டாபிஷேகம் படம் ஒன்றும், விசுவரூப தரிசனப்படம் ஒன்றும், எதிர் எதிராகச் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. ஊஞ்சலுக்கு எதிர்புறம் சுவரையொட்டினாற்போல் நான்கடி உயரத்தில் ஒரு சிறு கண்ணாடி பீரோ வைக்கப்பட்டிருந்தது. அதன் தட்டுகளில் அப்போதைக்கப்போது கண்காட்சியில் வாங்கிய வெண்கலச் சிலைகளும், சிறு வெள்ளி விக்கிரகங்களும், தந்தத்திலான பொம்மைகளும் அழகிற்காக வைக்கப்பட்டிருந்தன.

பீரோவின் உச்சியில் விளக்கொளியில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த வெண்கல புத்தர் சிலையின் அழகைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த மஞ்சுளா, பின்கட்டில் காலடியோசை கேட்டதை உணர்ந்து தலையைத் தாழ்த்திக் கொண்டு தரையைப் பார்க்கலானாள்.

''இப்படி வாருங்கள் பெரியம்மா!'' என்று கிரிதரன் யாரையோ அழைப்பதைக் கேட்டதும், ஆசனத்தை விட்டெழுந்து நின்றாள். ''இவர்கள் தான் நம் சந்திராவைக் கவனித்துக் கொள்ளப் போகிற பெண்மணி!'' என்று தன்னை யாருக்கோ அவன் அறிமுகம் செய்ததைக் கேட்டு மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். குப்பென்று நரைத்த கூந்தலும்; மெலிந்த உடலும் தளர்ந்த பார்வையுமாக வயது நிறைந்த ஒரு ஸ்திரீ எதிரே நின்று கொண்டிருந்ததைக் கண்டாள். மஞ்சுளாவை ஏற இறங்க ஒரு முறை உற்றுப் பார்த்த அந்த அம்மாள், ''சரி மாடிக்கு அழைத்துக் கொண்டு போ, சந்திரா இன்னும், சாப்பிடவில்லை. உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்'' என்று பதில் அளித்துவிட்டு, மெல்லியதாகப் புன்முறுவல் செய்தாள்.

''கொஞ்சம் மாடிப்பக்கம் இந்த வழியாக வாருங்கள்'' என்று கிரிதரன் உத்தரவிட்டுத் தாழ்வாரத்திலிருந்த படிகள் மீது விரைவாக ஏறிச் சென்றான். பின்னால் தொடர்ந்து சென்ற மஞ்சுளா, மாடிப்படிகள் மீது பாதங்கள் நோகாதிருக்க ரத்தினக் கம்பளம் விரித்து ஆணிகளால் படியுடன் சேர்த்து நன்றாகப் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். 'மிதமிஞ்சிய பணமிருந்தால், கால்களுக்குக் கூடவல்லவா சொகுசு கேட்கிறது!' என எண்ணி வியந்தவாறு மெல்லப் பின்



தொடர்ந்து சென்றாள்.

கீழ்க் கட்டிடத்தைப் போலவே மாடியிலும் இரண்டு பெரிய ஹால்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்தன. எங்கு திரும்பினாலும் செல்வத்தின் உயர்வைப் பறைபறைவிக்கும் வண்ணம் அவைகள் இரண்டும் மிகவும் அலங்காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. இரண்டாவது ஹாலைத் தாண்டி ஒரு சிறிய வராந்தாமீது நடந்து சென்ற கிரிதரன், ஒரு பெரிய அறையின் கதவு முன் சென்று கை விரல்களால் மெல்லத் தட்டினான்.

''அண்ணா! அதற்குள் வந்து விட்டீர்களா? வாருங்கள் உள்ளே'' என்று கணீரென்று அறைக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது.

கதவை மெல்லத் திறந்து கொண்டு தன்னைப் பின் தொடருமாறு மஞ்சுளாவுக்குச் சைகை செய்துவிட்டு, அவன் உள்ளே சென்றான். மிகவும் விஸ்தாரமாகக் காணப்பட்ட அந்த அறையின் ஒரு பக்கத்தில், கண்ணாடி முன் தன்னை அழகு பார்த்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தாள் ஒரு இளம் பெண். அறையின் மற்றொரு பக்கம் ஜன்னல் அருகே கிடந்த கட்டிலின் மீது படுக்கையை விரித்து ஒழுங்கு செய்து கொண்டிருந்த வேலைக்காரப் பெண் அவர்களைக் கண்டதும் சடுதியில் தன் காரியத்தை முடித்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

''அண்ணா! போன காரியம்...?'' என்று குதூகலத்துடன் கேட்டபடி, கண்ணாடியினின்று திரும்பிய அந்தப் பெண், மேலே பேச்சை முடிக்காது தன் சகோதரன் பின்னால் அறைக்குள் வந்து நின்ற இளமங்கையை வியப்புடன் வெறித்துப் பார்த்த வண்ணம் மௌனமாகி விட்டாள். மஞ்சுளாவும் அந்தப் பெண்ணை ஏற இறங்க ஒருமுறை ஊடுருவிப் பார்த்துவிட்டுத் திகைப்புடன் சிலையாக நின்றுவிட்டாள். எங்கு திரும்பினாலும் செல்வத்தின் மேன்மையை விளம்பரம் செய்து கொண்டிருந்த அத்தனை

அழகான அந்தப் பெரிய பங்களாவில் எல்லாவிதமான சௌகரியங்கள் நடுவிலும் இச்சைபடி ஓடியாடித் திரிய வசதியின்றி நாற்காலியுடன் கட்டுண்டு கிடக்கும் அந்த யுவதியின் பரிதாபகரமான நிலை அவன் மனத்தை கலங்கச் செய்துவிட்டது.

சாயலில் சகோதரனை ஒத்திருந்த சந்திரா, பார்ப்பதற்கு மாநிறமாகத்தான் இருந்தாள். எனினும் அவளது வட்ட வடிவமான முகத்தில் பூமகளின் களை பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இருவரும் மௌனமாகி விட்டதைக் கண்ட கிரிதரன் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டு, ''சந்திரா!'' என்று அழைத்தான்.

திடுக்கிட்டுத் தமையனை நிமிர்ந்து பார்த்த சகோதரி மெல்லியதாகப் புன்முறுவல் செய்துவிட்டு, நாற்காலியின் இருபக்கங்களிலுமிருந்த சக்கரங்கள் மீது தன் இரு கரங்களையும் வைத்து விரைவாகத் தள்ளிக் கொண்டு அவன் அருகே வந்தாள்.

''இவர்தான் மஞ்சுளா. உனக்கு உதவி செய்வதற்காக அத்தை இவர்களை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்'' என்று தன் சகோதரிக்கு அவளை அறிமுகப்படுத்தினான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் மஞ்சுளாவின் பக்கம் திரும்பி, ''இவள்தான் என் தங்கை சந்திரா. மற்றவைகள் பற்றி இருவரும் பேசிக் கொள்ளுங்கள். எனக்கு கொஞ்சம் காரியங்கள் கவனிக்க இருக்கின்றன'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, விரைவாக வெளியே சென்றுவிட்டான்.

மஞ்சுளா தன் புது எஜமானியைக் கைகுவித்து வணங்கிவிட்டு மௌனமாக நின்று கொண்டிருந்தாள். எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று புரியாது அவளுக்குக் குழப்பமாக இருந்தது. கடைக்கண்ணால் மீண்டும் ஒரு முறை, தனக்குப் பணிவிடை புரிய வந்துள்ள பெண்மணியைக் கண்காணித்துவிட்டு, தன் கைவிரல்களை அழகு பார்ப்பதுபோல் சற்றுநேரம் சந்திரா வாளாவிருந்தாள்.

சுபாவத்தில் அவள் மிகவும் வெகுளியான பெண்தான். சரளமாக யாரிடமும் பழகி விடுகிறவள்தான். மேலும் கடந்த



இரண்டு வருடங்களாகத் தன்னைக் கவனிக்கவந்த நர்ஸ்களிடமும் பணிப் பெண்களிடமும் பழகியிருப்பதனால், கூச்சமின்றிப் புதிய மனிதர்களிடம் பேசும் ஒரு துணிவுகூட அவளுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் அவளது மௌனத்திற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. 'அத்தையம்மாள் தானாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் அந்தப் பெண்மணி கட்டாயம் நல்ல குணமுடையவளாகத்தான் இருக்க வேண்டும். அமரிக்கையான சுபாவமும் பொறுமையும் இல்லாதவர்களாக இருந்தால் அத்தை அவளை இங்கு அனுப்பியிருக்க மாட்டார்கள். ஆனால்...! பார்ப்பதற்கு அத்தனை அழகான பெண்ணாக இருக்கிறாளே! சித்தி அவளைப் பார்த்தால் என்ன சொல்வார்களோ? தன்னைவிட அழகான பெண்கள் உலகத்தில் வாழ்வதைக் கேட்கக்கூட சகிக்க மாட்டார்களே சித்தி! என்றதொரு கவலை அவள் வாயை அடைத்துவிட்டிருந்தது.'

பிறகு ஒருவாறு இந்த அனாவசியச் சந்தேகங்களை உதறிவிட்டு சந்திரா தானே வலிய பேசத் தொடங்கினாள். ''இப்படி உட்காரலாமே!'' என்று அன்போடு தன் எதிரே இருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினாள். மஞ்சுளாவும் உட்கார்ந்து கொண்டாள்.

தன் வரவு அந்தப் பெண்ணுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ என்ற சஞ்சலம் அவள் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. வயதில் தன்னைவிடச் சிறியவளாக உள்ள சந்திரா தனக்கு இனி எஜமானி என்ற நினைவு மிக்க சங்கோஜத்தை உண்டாக்கவே, பதில் சொல்லத் தெரியாது பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் சந்திரா, முடுக்கிவிட்ட கிராமபோனைப் போல் பேசலானாள். தனக்கு அவள் செய்ய வேண்டிய பணிவிடைகள் என்னென்ன? அவளது அன்றாட அலுவல்கள் எப்படிப்பட்டவை என்று' பல விஷயங்களை ஒரே மூச்சில் எடுத்துச் சொல்லிவிட்டு, பிறகு சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

மஞ்சுளா பிறந்த ஊர், கல்விஞானம், சுற்றத்தார்கள் முதலியவற்றையும் அறிந்துகொள்ள ஆவல் காட்டினாள். இனிமையான குரலில் அன்போடு குழைவாகக் குழந்தை போல் கபடமற்று அவள் வினவிய கேள்விகளுக்கு மஞ்சுளா தயங்காது பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒருவாறு வாய் அலுக்கும் வரையில் பேசிமுடித்த பின்னர், சந்திரா மெல்ல நகைத்தபடி தன் நாற்காலியின் சக்கரங்களை உருட்டிக் கொண்டு அவள் அருகே வந்தாள். ''எனக்கு உன்னை மிகவும் பிடித்துவிட்டது. உனக்கு என்னைப் பிடிக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. வளவளவென்று நான் பேசுவதைக் கேட்டுப் பயந்துவிட்டாயோ என்னவோ? பேச்சுத் துணைக்கு யாருமில்லாமல் கொஞ்ச நாளாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன். இத்தனை நாளாக கட்டுப்படுத்தி வைத்திருந்த பேச்செல்லாம் உன்னைக் கண்டதும் மடைதிறந்த வெள்ளமாகப் புறப்பட்டு விட்டது அவ்வளவுதான்! மற்றபடி நான் 'தொண தொண'வென்று சதா பேசி உன்னை அலுக்க வைக்க மாட்டேன்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, கலகலவென்று நகைத்துக் கொண்டு தன் கையை நீட்டினாள். ''எனக்கும் உங்களை ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்று முடிவில் தைரியமாகப் பதிலளித்த மஞ்சுளா அவளது கரத்தை அன்போடு பற்றிக் கொண்டாள்.

''சாப்பாடு சித்தமாகிவிட்டது. அண்ணா உங்களை வரச் சொன்னார்'' என்று கூறிக் கொண்டு வந்து நின்றான் ஒரு வேலைக்காரப் பையன். ''சரி வருகிறோம் போ!'' என்று உத்தரவிட்ட சந்திரா, ''ரொம்பக் களைப்பாய் இருப்பாய். அதனால் இன்று நீ சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுத் தூங்க வேண்டும். அதோ தெரிகிற ஸ்நான அறைக்குள் போய்க் கைகளை அலம்பிக் கொண்டு வராந்தாவுக்கு வா'' என்று கூறிவிட்டு, தன் நாற்காலியைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

எஜமானியின் உத்தரவுப்படியே பிரயாண அலுப்புத் தீர முகத்தைக் கழுவி தலையைக் கோதி சரிப்படுத்திக் கொண்டு வெளியே வந்தாள் மஞ்சுளா. அறையின் முன்னாலிருந்த வராந்தாவின் ஒரு பக்கத்தில் பளிங்கு மேஜைமீது இலையை



விரித்து உணவு வகைகளைப் பரிமாறிக் கொண்டிருந்தான் சமையற்காரப்பையன். கிரிதரனும் சந்திராவும் அடுத்தடுத்து அமர்ந்திருந்தார்கள். அதைக் கண்டதும் மஞ்சுளா தயங்கிக் கொண்டு அங்கே செல்லப் பயந்து நின்றுவிட்டாள்.

''எனக்கு ரொம்பப் பசிக்கிறது. தயவு செய்து சீக்கிரம் வந்து உட்கார்'' என்று கொஞ்சலாக அதட்டி அழைத்த சந்திராவின் பேச்சைத் தட்ட முடியவில்லை. தலையைக் குனிந்தபடி எதிர்ப்புறமிருந்த நாற்காலியில் அவர்களுக்குச் சமமாக வந்து சாப்பிட உட்கார்ந்து கொண்டாள் மஞ்சுளா.

அந்த விருந்து விமரிசையாகத்தான் இருந்தது. போதாதற்கு வெளியே பால் போல் காய்ந்து கொண்டிருந்த நிலவு தோட்டத்தைத் தன் முத்தொளியில் முழுக வைத்துக் கொண்டிருந்த காட்சி கண்களுக்குப் பெரும் விருந்தாக இருந்தது. எனினும் மஞ்சுளாவினால் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. தலையை எதேச்சையாக நிமிர்த்திய போதெல்லாம், வைத்த விழி வாங்காது தன்னையே கிரிதரன் கவனிப்பதை அவள் கண்டுவிட்டாள்! அவ்வளவுதான் பசி காதை அடைத்தும் உணவு தொண்டையைவிட்டு இறங்க மறுத்துவிட்டது.

அன்றிரவு போஜனத்திற்குப் பிறகு அவளுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று படுக்கை மீது சாய்ந்து கொண்டாள். இரவு வெகுநேரம் சென்றும் தூக்கம் அவள் கண்களை ஆழ்த்த மறுத்துவிட்டது.

ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட அன்றைய சம்பவங்கள் அனைத்தும் மனத் திரையிலே மீண்டும் ஓடி ஓடி மறைந்த வண்ணமிருந்தன. கிரிதரன் அவளை அப்படி ஏன் பார்த்துக் கொண்டிருந்தான்? அந்தப் பார்வையின் அர்த்தம் என்ன?

மஞ்சுளா நித்திரை கொள்ளாது புரண்டு புரண்டு படுத்தாள்.

# 22

எதிர்பாராது திடீரென்று பெய்த மழையில் கப்பி மண் நிறைந்த பாதை முழுவதும் சேறாகிவிட்டிருந்தது. சுவாமிநாதன் பேச்சை யாரும் கேட்கவேயில்லை. ''கட்டாயம் ஸ்ரீரங்கப்பட்டணம் போகவேண்டும். திப்புசுல்தான் சமாதியைப் பார்க்க வேண்டும்'' என்று பிடிவாதம் செய்தார்கள் சின்னாலம்பட்டி சிங்காரவேலு முதலியாரின் அருமை மைந்தர்கள். காரின் பின் பக்கத்து ஆசனத்தின் பெரும்பகுதியை பூதம் போன்ற தனது உடலைச் சாய்த்து வியாபித்துக் கொண்டிருந்த முதலியார் மனைவி, ''பசங்க ஆசைப்படுறாங்க. அப்பாலே இங்கே யாரு அடிக்கடி வரப்போறாங்க. இந்த வாட்டி இவரு எங்களை மைசூர்ப் பக்கம் அழைத்து வந்ததே பெரிய காரியம். மறுபடி இங்கே வருகிறது அடுத்த ஜென்மத்தில்தான்'' என்று கூறினாள். பேச்சின் இடையே அவளது வாய் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தது.

''அடுத்த ஜென்மம் ஒரு புறம் இருக்கட்டும்; போன பிறவியில் இந்த அம்மாள் கட்டாயம் ஒரு ஆடாகத்தான் பிறந்திருப்பார்கள். அதனால்தான் நாள்முழுவதும் கவுளி கவுளியாக இப்படி வெற்றிலையைத் தின்று ஒழிக்கிறார்கள்! முந்திய பிறவிக் குணம் இன்னும் விட்டபாடில்லை'' என்று தனக்குள் எண்ணியபடி சுவாமிநாதன், அம்மாள் உத்தரவுப்படியே சொன்ன இடத்திற்கெல்லாம் காரைச் செலுத்திக் கொண்டு சென்றான். முதலியார் தமது கிருதா மீசைமீது கையை வைத்துத் தடவிக் கொண்டே மனைவியை விறைத்துப் பார்த்தார்.

வட்டிக்கடை வியாபாரத்தில் பணத்தை அவர் வாரிக் குவித்துவிட்டிருந்தது உண்மைதான். ஆனால் அதை மனைவியும் மக்களும் விரும்புகிற விதத்தில் ஒரே நாளில் வாரி இறைத்து ஒழித்துக் கட்டிவிட அவர் ஆசைப்படவில்லை.



பணத்தை பைசாவாகப் பொறுக்கிச் சேர்க்கிறவனுக்குத்தான் அதன் அருமை தெரியும். எருமைத் தயிரைப் போட்டு உண்டுவிட்டுக் கொழு கொழுவென்று காளைகள் போல் வளர்ந்துவிட்டிருந்த தன் இரு செல்வ மைந்தர்கள் கேட்டதையெல்லாம் உடனே செய்து முடிக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். அதன் விளைவாகப் பணம் பெட்ரோலுக்கும் ஹோட்டல்களுக்கும் தண்ணீராகச் செலவாகிக் கரைந்து கொண்டு வந்தது. எல்லாவற்றையும்விட ஆயிரக்கணக்கில் ரூபாயை அள்ளிக் கொட்டி அவர் மிக அருமையாக வாங்கியிருந்த புத்தம் புதிய கார் சேற்றிலும் சகதியிலும் சீரழிவதைக் கண்டு அவர் நெஞ்சு பதைத்தது. பெண்டாட்டி பிள்ளைகள் மழையில் நனைந்துவிட்டால்கூட அவர் கவலைப்பட்டிருக்க மாட்டார். அவரது ஆசைக்கு உகந்த கார் கொட்டும் மழையில் வீணாக அடிபடுவதைக் கண்டு தவியாகத் தவித்துப் போனார்.

'திப்பு சுல்தான் சமாதி, டெல்ஹௌஸி ஞாபகச் சின்னம், அது இது' என்று நசநசவெனத் தூறிய மழையில் பிள்ளைகளும் மனைவியும் அலைந்து திரிந்து கொண்டிருக்கையில் முதலியார் ஒரு பெரிய புளிய மரத்தடியில் காரை நிறுத்தச் சொல்லிவிட்டு அதற்குள்ளே கண்களை மூடியபடி உட்கார்ந்து விட்டார்.

'பெங்களூருக்குப் போனால் எந்த ஹோட்டலில் இறங்குவது? அங்கே எத்தனை நாட்கள் தங்குவது? என்ற பல முக்கிய விஷயங்கள் பற்றி அவரது மூளை சிந்தித்துக் கொண்டிருந்தது. மின்னல் போல் பளிச்சென்று ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வரவே, ''சுவாமிநாதா! இங்கே வா!'' என்று உரத்த குரலில் கூப்பிட்டார். சற்றுத் தொலைவில் மரத்தின் பக்கம் மறைவாக நின்று கொண்டு சிகரெட்டை ஊதி புகைத்து மகிழ்ந்து கொண்டிருந்த சுவாமிநாதன் மின்னலால் தாக்குண்டவன்போல் துள்ளிக் குதித்தான்.

சுவாமிநாதனுக்குத் தன் முழுப் பெயரையும் அவர் வாய் நிறைய வைத்து அழைத்தது கேட்கச் சகிக்கவேயில்லை. எங்கு சென்றாலும் அவனுக்குத் தொல்லை கொடுத்தது அவனைப் பெற்றுப் பெயர் சூட்டிவிட்டு மண்ணுடன் கலந்துவிட்டிருந்த

நாதுசிரோமணி தேடியெடுத்துப் பொறுக்கி வைத்திருந்த அந்தத் திருநாமம்தான். தன் முழுப்பெயரையும் உபயோகிக்க அவனுக்கு எப்பொழுதுமே பிடித்ததில்லை. இரண்டே எழுத்தில் உள்ள பெயர்களைப் பெற்றோர்கள் தேடி எடுத்துக் குழந்தைகளுக்குச் சூட்டும் நாகரீக யுகத்தில் இந்தப் பெயர் மிகவும் நீளமானதாக அவன் கருத்திற்குத் தோன்றியது அவன் வெறுப்பின் ஒரு காரணமாகும்.

புஷ்கோட்டு, பச்சைக் கண்ணாடி, பளபளக்கும் கிராப்பு சிகை என்ற தனது மிடுக்கான தோற்றத்திற்கு ஒவ்வாத பழங்காலத்துப் பெயர் இது என்பது மற்றொரு காரணமாகும். சிறு பிராயத்திலிருந்தே தன் பெயரை அவன் உள்ளூரத் துவேஷித்து வந்தான். அதன் பயனாகக் கொஞ்சம் விவரம் தெரியும் நிலைக்கு வந்தபொழுது, அதை இரண்டாகத் துண்டித்து முற்பகுதியை விட்டுவிட்டு, 'நாதன்' என்ற வாலை மட்டும் வைத்துக் கொண்டிருந்தான்.

''சுவாமிநாதனுக்கு வயது நாற்பதை எட்டிப் பிடித்து விட்டிருந்தது. எனினும் வாலிபன் என்ற நினைப்பு அவனை விட்டு அகலவேயில்லை. 'பெண்கள் அல்லவா வயதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? கூந்தலில் இங்குமங்கும் நரை இழையோடுவதைக் கண்டு கலங்க வேண்டியவர்கள் அவர்கள்தானே? ஆண்களுக்கு நாற்பது வயது ஒரு வயதா? கண்களைச் சுற்றி அமைந்த கருவளையங்கள், முகத்தில் நிழலாடும் மெல்லிய திரை, சிகையில் அங்கங்கே காணப்படும் நரை இவையெல்லாம் ஆண்களுக்கு அறிவு முதிர்ச்சியின் சின்னங்கள் அல்லவா? எனவே வயது ஓடிவிட்டதே என்று ஏன் கவலைப்பட வேண்டும்' என்ற நினைவில், அவன் கல்யாணம் என்ற பந்தத்தில் அகப்பட்டுக் கொள்ளவேயில்லை. கட்டைப் பிரம்மச்சாரியாக நிம்மதியாகத் திரிந்து கொண்டிருந்தான். அவனது பதினைந்தாவது வயதில் ஒரு முறை அவனது கைரேகையை ஒரு ரேகை சாஸ்திரி பார்த்துவிட்டு, ''அடாடா! அதிர்ஷ்டக்காரன் கையடா இது! புயல்போல உனக்கு லட்சுமி கடாட்சம் பொங்கி வீசப் போகிறது. தங்கமும் வெள்ளியும் தாராளமாக இந்தக் கரங்களில் புழங்கப் போகின்றன'' எனப்



புளுகிவிட்டுப் போயிருந்தான். அதைத் தீவிரமாக நம்பிவிட்டிருந்த சாமிநாதனுக்கு பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துப் பொருள் சேர்க்கும் எந்த வேலையும் பிடிக்கவேயில்லை.

உடலை அசைக்காது சொகுசாக வாழவேண்டும். அவன் செய்ய வேண்டிய வேலைகளை அதிர்ஷ்ட தேவதை செய்து முடித்து அளவற்ற திரவியத்தைத் காலடியில் கொண்டு குவித்துவிட வேண்டும் என்ற ஒரு வீண் கனவில் ஒரு உத்தியோகத்திலும் நிலைத்து ஈடுபடாமல், தான்தோன்றியாகத் திரிந்து கொண்டிருந்தான். எத்தனையோவிதமான தொழில்களில் ஈடுபட்டு வெறுப்படைந்து விட்டு விட்டு முடிவில் கார் ஓட்டும் டிரைவர் வேலையைத் தொடர்ந்து கொஞ்ச நாளாகச் செய்து கொண்டிருந்தான். காசைப் போட்டு வாங்குகிறவனுக்கு அந்த ஒரே ஒரு கார் மட்டுமே சொந்தம். அதை ஓட்டும் வேலையில் அமர்கிறவனுக்கு ஓட்டுகிற கார்கள் எல்லாமே சொந்தமாயிற்றே! வித விதமான வாகனங்களைப் பைசா போட்டு வாங்காமல் ஆசை தீர வாயு வேகத்தில் ஓட்டி மகிழலாம் அல்லவா? எனவே இந்த ஒரு வேலையில் கொஞ்சம் காலம் தொடர்ந்து ஈடுபட்டிருந்தான். ஆனால் ஒரே ஒரு எஜமானிடம் அல்ல! நான்கு வருஷங்களுக்குள் எட்டு இடங்கள் மாறி விட்டுத்தான் பத்து விதமான மோட்டார் வாகனங்களை ஓட்டி மகிழ்ந்தான்.

இரண்டு வண்டிகளை மரத்தில் மோதி உடைத்துமிருந்தான். ஒரு சிறு விபத்திற்குப் பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்ட சுவாமிநாதன், கொஞ்ச நாட்கள் எங்குமே வேலை கிடைக்காது அலைந்து தவித்துப் போய்விட்டான். முடிவில், நகரத்தில் வக்கீல் தொழில் புரிந்து கொண்டிருந்த ஒரு ஆசாமியிடம் மோட்டார் ஓட்ட வேலைக்கு அமர்ந்தான். நாற்பது ரூபாய்க்கு நாள் முழுவதும் மோட்டார் ஓட்டச் சம்மதித்த அவனிடம் வக்கீல், ''அதிருக்கட்டும் தம்பி! உன் பெயர் என்ன சொன்னாய்?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டார். ''எஸ்.நாதன்'' என்றான், முகத்தைச் சுளுக்கிக் கொண்டு. வேலைக்கமர்ந்த இரண்டாவது நாள் வக்கீல்

அவனைக் கூப்பிட்டார். ''உன் பெயரைச் சொல்லிக் கூப்பிட வீட்டுப் பெண்கள் சங்கடப்படுகிறார்கள். அதனால் உன்னை நாங்கள் 'சுவாமி' என்று அழைக்கத் தீர்மானித்து விட்டோம்'' என்றார்.

'எப்படியோ ஒழியுங்கள்' என்று மனதிற்குள் எண்ணி பல்லைக் கடித்தான் சுவாமிநாதன். அவனுக்கு அந்தச் சமயம் பொருளாதார நெருக்கடி மிகவும் அதிகமாக இருந்ததனால் வேலை மிகவும் அவசியமானதாக இருந்தது. ஆனால் சில நாட்களில் அந்த வீட்டு டிரைவர் உத்தியோகமும் அவனுக்குப் புளித்துவிட்டது.

வக்கீலின் பேத்திகள் இரண்டும் பொல்லாத சுட்டிக் குட்டிகள்; அவனைக் காணும் போதெல்லாம் ''ஓ ஐயா சாமி! ஓ! ஆலோசாமி! நரிக்கொம்பு வாங்கலையா?'' என்று பாடி அமர்க்களம் செய்தார்கள். அவர்கள் அப்பொழுதுதான் நடனம் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருந்தார்கள். இதைக் கேட்டுக் கண்டிக்காமல், வீட்டிலிருந்த பெரியவர்கள் கூடச் சேர்ந்து கை கொட்டிச் சிரித்ததை அவனால் சகிக்க முடியவில்லை. 'சே! இதென்ன வேலை?' எனத் தலைமுழுக்குப் போட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

சின்னாலம்பட்டி சிங்காரவேலு முதலியார் அவனைத் தன் கார் டிரைவராக அமர்த்திக் கொண்டபொழுது ஆரம்பத்திலேயே கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

''இந்தாப்பா! ஏன் உனக்கு இந்தப் புத்தி, நல்ல அழகான பெயரைத் துண்டாக்கி ஏன் நாசப்படுத்துகிறாய்? வாய் நிறைய சுவாமிநாதா என்று கடவுளின் திருநாமத்தைப் பல்முறை உச்சரித்தால் மரணபயம் கிடையாது. எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றியேற்படும். சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நான் உன்னை சுவாமிநாதா! என்றுதான் கூப்பிடப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டார்.

ஆத்திரத்துடன் பற்களைக் கடிப்பதை தவிர அவனால்



மறுத்துப்பேச முடியவில்லை. வேலை மிகவும் வேண்டியதாக இருந்ததனால் விரக்தியுடன் ஏற்றுக் கொண்டு விட்டான். ஆனால் முதலியார் அவனது முழுப் பெயரையும் வாய் நிறைய வைத்து ராகமிட்டு நீட்டி அழைத்தபொழுதெல்லாம், ஐயோ அப்பா!' என்று அலறிவிடலாம் போல் அவன் மேனியெல்லாம் சிலிர்த்துப் பதறியது. கேட்க அது அந்தனை அருவருப்பாகத்தான் இருந்தது அவனுக்கு!

''சுவாமிநாதா! எங்கேயப்பா போயிட்டே!'' என்று முதலியார் மறுபடியும் காரில் இருந்தபடியே கூவினார். பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தூர எறிந்துவிட்டுக் கோபத்துடன் கைகளை உதறிக்கொண்டு, ''இதோ வருகிறேன்'' என முணுமுணுத்தபடி டிரைவர் சுவாமிநாதன் அருகில் வந்தான்.

''பெங்களூருக்குத் திரும்பும்பொழுது நேரே மல்லேஸ்வரம் போகிற பாதையில் இருக்கிற 'பகவதி விலாஸ்' ஹோட்டலுக்குப் போய் வண்டியை நிறுத்து. முன்பு ஒரு முறை நாமிருவரும் அதே இடத்தில் தங்கியிருக்கிறோம். தெரியுமல்லவா?'' என்றார் தாழ்ந்த குரலில் ரகசியம் பேசும் தோரணையில்.

'அது ஹோட்டலா? மாட்டுக்கொட்டில்' என்று சட்டென்று எரிச்சலாக பதிலளிக்க வேண்டுமென்று அவன் வாய் துடித்த போதிலும், சுவாமிநாதன் மென்று விழுங்கி விட்டு, ''குழந்தைகளும் அம்மாவும் பெங்களூரில் உள்ள அந்தப் புது ஹோட்டலில் 'கோஹினூர் லாட்ஜி'ல் தங்க வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள்'' என்றான்.

''அவர்களுக்கென்ன, செலவழிக்கிறவன் நான். மைசூர்ப்பட்டு, பெங்களூர்ப் புடவை, அது இது என்று அம்மா பாட்டுக்கு சேலைகளை வாங்கிக் குவிக்கிறார்கள். சந்தனப் பெட்டி, ஊதுபத்தி, அத்தர் என்று பிள்ளைகள் ஒரு புறம் கண்டதை வாங்கி காசை கரியாக்குகிறார்கள். இதுவரை பணம் இரண்டாயிரம் தீர்ந்துவிட்டது! இனிமேல் செலவழிக்க எனக்கு கட்டுப்படியாகாது! கோஹினூர் போன்ற பெரிய

ஹோட்டல்களில் போய்த் தங்கினால் பிடிக்குப் பிடி நமச்சிவாயம் என்கிற கதையாக பணத்தைப் பிடுங்கித் தின்று விடுவார்கள். பகவதி விலாஸ் போதுமப்பா! படுக்க இடமும் வேளைக்கு நல்ல சாப்பாடும் கிடைக்கும். போதாதற்கு இன்னொரு முக்கிய விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். பகவதி விலாசிற்கு போனால் கைக்காசு செலவாகாது. அதன் முதலாளி சுந்தரத்திற்கும் நமக்கும் கொஞ்சம் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது. வட்டியை ஒழுங்காகத் தராவிட்டாலும், போனால் மன்னன் வயிறாரச் சாப்பாடு போட்டுக் கருத்தாக கவனித்துக் கொள்வான்'' என்று தமது வியாபார ரகசியத்தை கொஞ்சம் ஒரு கோடி எடுத்து விட்டார் முதலியார்.

சமையற் கலையில் பிரசித்தி பெற்றவர்கள் வாழும் நாகநல்லூரில் பிறந்து வளர்ந்த சுவாமிநாதனுக்கு, இதைக் கேட்டதும் இன்னும் கொஞ்சம் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''முதலியார்வாள்! அந்த ஹோட்டல் சாப்பாடு மகா மட்டம். நாலு நாட்கள் அங்கே தங்கினால் கட்டாயம் ஐந்தாவது நாள் ஆஸ்பத்திரியில் போய் விழவேண்டும். சாதத்தில் ஒரே கல். சாம்பாரில் ஒரே மிளகாய்ப்பொடி'' என்றான் வெறுப்புடன்.

''சரிதான் அப்பா! நீயும் என் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு பேசுவாய் போலிருக்கிறதே! இனாமாகக் கிடைக்கும் எந்தப் பொருளுக்கும் யாரும் எப்பொழுதும் மதிப்பு வைப்பதில்லை. குறுக்கே பேசாதே. நான் சொன்ன படியே வண்டியை நேரா அங்கே கொண்டு சேர்த்துவிடு. அம்மா உபத்திரவம் செய்தால் 'சீசன் சமயமாதலால் 'மற்ற ஹோட்டல்களில் இடநெருக்கடி' என்று சொல்லி விடு'' என்றார் அதட்டும் பாவனையில்.

'ஒரு காசுக்கு உயிரைவிடும் கருமிப் பயல்களுக்கெல்லாம் அதிர்ஷ்டம் குபீர் என்று அடித்துவிடுகிறது. கழுதை முன்னால் கஸ்தூரியைப் போட்டது போல் உலோபிகள் வசம் வந்து திருமகள் சிக்கிக் கொண்டு விடுகிறாளே, என்ன உலகம் இது!'



என விரக்தியாக எண்ணியபடி, சிகரெட் டப்பாவைத் திறந்தான் சுவாமிநாதன்.

அவர்கள் கோஷ்டி அன்று பெங்களூர் திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. ஊர் முழுவதும் சுற்றிக் கால்கள் கடுக்க அலைந்திருந்த முதலியாரின் மக்களும், மனைவியும், சோறு கண்ட இடம் சுவர்க்கம் என்று எண்ணித் தர்க்கம் ஏதும் செய்யாது பகவதி ஹோட்டலில் வந்து இறங்கியதும் உண்டுவிட்டு, உறங்கச் சென்று விட்டார்கள். கப்பி மண் பாதையைச் சேறாக்கிவிட்டு, முதலியாருக்கு ஜலதோஷத்தையும் கொடுத்துவிட்டு, மழை விடுதலை பெற்றுக் கொண்டு விட்டது. பெங்களூர் ராஜபாட்டையை அணுகியதும் சக்கரங்கள் சேற்றில் வழுக்கும் என்ற பயம் இன்றி, சுவாமிநாதன் காற்றினினும் கடுமையாக வண்டியை ஒரே மூச்சாக ஓட்டினான்.

''சுவாமிநாதா! கூண்டோடு கைலாசத்திற்கு அனுப்பி விடாதேயப்பா. கொஞ்சம் பார்த்து ஓட்டு'' என்று முதலியார் பின்னாலிருந்து கூக்குரலிட்டதைக்கூட அவன் லட்சியம் செய்யவில்லை. ஹோட்டல் வாயில் புறமிருந்த சிறுமோட்டார் ஷெட்டில் கொண்டு வண்டியை விட்டதும் பூட்டி, சாவியை முதலியார் வசம் ஒப்படைத்துவிட்டு விரைவாகச் சமையற்கட்டிற்கு ஓடினான். முன் ஒரு சமயம் அங்கு வந்திருந்த போது பரிமாறும் பையன் பரமசிவனை அவன் மிகவும் சிநேகிதம் செய்து கொண்டிருந்தான். அந்த நட்பு இப்பொழுது அவனுக்கு உபயோகப்பட்டது. சுவாமிநாதனைக் கண்டவுடன் ''அண்ணா!'' என்று அருமையாக அழைத்துப் பரிவுடன் வந்து தழுவிக் கொண்ட பரமசிவன் அவனைப் பின்கட்டுத் தாழ்வாரத்தில் உட்கார வைத்து, முதலியார் சாப்பிடுமுன் சுடச்சுடச் சாதமும், சாம்பாரும், புத்துருக்கு நெய்யும் ஸ்பெஷலாக முதலாளிக்கு வைத்திருந்தவைகளைக் கொண்டு பரிமாறிக் கவனித்துக் கொண்டான். விரைவாக உணவை முடித்துக் கொண்டு சுவாமிநாதன் ஹோட்டல் சிப்பந்திகள் படுக்கும் பின்கட்டுக் கூடத்தில் சென்று படுக்கையை விரித்துக்

கொண்டுவிட்டான். உலகில் அவன் மிக மிக விரும்பிய விஷயங்கள மூன்று. நல்ல சாப்பாடு, ஷோக்கான ஆடைகள், சுகமான தூக்கம்! எனவே, முதலியார் வந்து தொண தொணக்கு முன் அவன் நித்திராதேவி வசப்பட்டு நிம்மதியாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

விடிந்ததும் விடியாததுமாக மறுநாள் காலையில் முதலியார், ''சுவாமிநாதா! சுவாமிநாதா!'' என்று எட்டுக் கட்டைக் சுருதியில் லப்த ஸ்வரங்களை எழுப்பிய குரலில் அழைத்த வண்ணம் தோட்டத்திற்கு வந்தார். பல் துலக்கக் கையில் பிரஷ்ஷும், பேஸ்ட்டுமாகக் குழாயருகில் நின்று கொண்டிருந்தான் சுவாமிநாதன். எஜமான் என்ன சொல்லப் போகிறார் என்பதை முன்கூட்டியே ஊகித்துக் கொண்டுவிட்ட அவனுக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது. காது கேட்காததுபோல் பிரஷ்ஷை பற்கள்மீது அழுத்தமாகத் தேய்த்துக் கொண்டு தோட்டத்துச் சுவரைப் பார்த்த வண்ணம் அசட்டையாக இருந்தான்.

''உன்னைத்தான் அப்பா, சுவாமிநாதா!'' என்று இரைந்து கூப்பாடு போட்டார் முதலியார். ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றி விட்டது போல் படீட்டமாக முகத்தைச் சிணுக்கிக் கொண்டு, ''இதோ இருக்கிறேன்'' என்று குழறினான் வாய் நிறைய பேஸ்ட் நுரையுடன்.

''இதோ சாவி, எடுத்துக் கொள். காரை நன்றாகத் துடைத்துச் சுத்தம் செய்து ஷெட்டில் வைத்துப் பூட்டி, மறுபடி சாவியை மாடியில் என் அறையில் கொண்டு வைத்துவிடு. அம்மாவும் இந்தப் பசங்களும ஊரைச் சுற்றிப் பார்க்க பஸ்ஸில் போகிறார்களாம். எனக்கு நேற்றுப் பெய்த மழை ஒத்துக் கொள்ளவில்லை. நெஞ்சு பாறாங்கல்லாகக் கட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் நான் அறையிலேயே ஓய்வாக இருக்கப் போகிறேன்'' என்று கர் முர் என்ற குரலில் பேசிவிட்டு, தமது கூற்றை நிரூபிப்பவர் போல் பலமுறை இருமினார் முதலியார்.

'சரி' என்று சுவாமிநாதன் தலையை அசைத்தான்.



அன்றைய தினம் சாரத்திய உத்தியோகத்திலிருந்து தனக்கு கொஞ்ச நேரம் விடுதலை என்ற விஷயம் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''நீ கூட வேலையை முடித்ததும் கொஞ்சம் காலாற இப்படி ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வாப்பா'' என்று உத்தரவிட்ட முதலியார் மேலே போகத் திரும்பினார்.

இதுதான் சமயம் என்று சுவாமிநாதன் அவசரமாக வாயைக் குழாயில் கழுவிக் கொண்டு, ''எனக்குக் கூட கடைத்தெரு வரை போகவேண்டும்...'' என்று இழுத்தான்.

''தாராளமாய்ப் போய்வா. முதலிலேயே நானே சொல்லி விட்டேனே! மறுபடி ஏன் நீ உத்தரவு கேட்க வேணும்!'' என்று கூறிவிட்டு முதலியார் துரித நடைபோட்டார். பணத்திற்கு ஆசாமி அடி போடுகிறான் என்று உணர்ந்துவிட்ட அவர் சடுதியில் அறைக்குள் சென்று மறைந்து கொள்ளப் பார்த்தார். விடாக்கண்டனான சுவாமிநாதன் வேகமாக அவரைப் பின்பற்றி ஓடிவந்தான். 'ஒரு பத்து ரூபாய் அவசரமாகத் தேவை. மாதம் பிறக்க இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கின்றன? என் சம்பளத்தில்தானே கேட்கிறேன்?'' என்று விரைப்பாகக் கேட்டான். கொடுக்காவிட்டால் 'பிடி உன் வேலையை, நீயே வைத்துக் கொள்' என்று மிரட்டும் பாவனையுடன் அவன் முகம் கோபத்திலே சிவந்து காணப்பட்டது.

முதலியார் பயந்து விட்டார். வெளியூரில் வந்த இடத்தில் இவனிடம் வம்பு எதற்கு என்று தோன்றவே, ''ஏன் இப்படி ஒவ்வொரு மாதமும் ஆரம்பத்திலும், நடுவிலும், இடையிலும் சம்பளத்தைத் துண்டு போட்டு வாங்கிச் செலவழித்து வீணாக்குகிறாய்? மாதம் முடிந்ததும் மொத்தமாக வாங்கி ஒரு பகுதியைச் செலவிட்டு விட்டு, ஒரு பகுதியை பாங்கியில் போட்டு வைத்தால், பின் ஒரு சமயம் உனக்கு உதவியாக இருக்குமே!'' என்றார் புத்தி சொல்லும் தோரணையில்.

''நாங்கள் எல்லாம் அன்றாடங்காய்ச்சிகள் - எங்களுக்கு ஏன் இந்தப் பாங்கு தொல்லைகள்?'' என்று குறும்புத்தனமாக

பதிலளித்த சுவாமிநாதன் கையை நீட்டினான்.

முதலியார் இடுப்பைத் தடவி மணிபர்சை மெல்ல எடுத்தார். 'இவன் கெட்ட கேட்டிற்கு பல் துலக்க பேஸ்ட். மடிப்புக் கலையாத வேஷ்டி. ஊதித் தள்ள சிகரெட். ஏதேது ஐம்பது ரூபாய் சம்பளத்திலே இத்தனை வேஷம் போட்டால் என்னைப் போல் அந்தஸ்து உடையவனாக இருந்தால் கையில் பிடிக்க முடியாது போலிருக்கிறதே? உருப்படாத உதவாக்கரைப் பயல்!' என்று அவர் சிந்தனை ஓடியது. பொறுமையற்று நிலத்தைக் காலால் கிளறிக் கொண்டு நிற்கும் பந்தயக் குதிரைபோல் கழுத்தையும் உடலையும் வளைத்துக் கொண்டு நின்றான் சுவாமிநாதன். நிதானமாக பர்சைத் திறந்தார் முதலியார்.

## 23

முதலியார், சுவாமிநாதனை மேலும் கீழும் பார்த்து விட்டு, ஒரு கத்தை நோட்டுகளின் இடையே மிகவும் அழுக்காகத் தென்பட்ட இரண்டு ரூபாய் நோட்டுகளை உருவி எடுத்தார். 'இன்னும் ஊர் போய்ச் சேர்வதற்குள் அநேக செலவுகள் இருக்கின்றன. நீ வேறு சம்பளம் சம்பளம் என்று ஆளைத் துளைத்துக் கொல்லாதே! பிடி இதை, மேலே பேசாதே'' என்று கூறிவிட்டுப் பணத்தை நீட்டினார். அதை அலட்சியமாக வாங்கி சட்டைப் பையில் திணித்துக் கொண்டு, தன் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டான் சுவாமிநாதன்.

''காவாலிப்பயல்! காசை என்னவோ வெறும் கடுதாசி போல் துச்சமாகத் தூக்கிப் போடுகிறானே! எட்டு ஜென்மத்திற்கும் லட்சுமிதேவி இவன் இருக்கும் திக்குகூடத் திரும்பிப் பார்க்கமாட்டாள். வரவர ஆசாமி ரொம்பத் துள்ளுகிறான். இருக்கட்டும்'' என்று கறுவிக் கொண்டு கோபத்துடன் எஜமான் உள்ளே சென்று விட்டார்.



அவர் அருகில் நின்று மேல் பார்வை செய்யாததனால் சுவாமிநாதன் ஒரு வாளித் தண்ணீரை அசட்டையாகக் கார்மீது வாரித் தெளித்துவிட்டு, வேகமாகத் துணியால் துடைத்தான். 'கொடுக்கிற சம்பளத்திற்குக் காரைத் துடைக்க வேண்டும். வீட்டைப் பெருக்கவேண்டும். கடைக்கு ஓட வேண்டும். இன்னும் என்னென்னதான் எதிர் பார்ப்பானோ இந்தக் கருமி மனிதன். வேறு எங்கேயாவது வேலை தேடிக் கொள்ளவேண்டும். போதும் இவர் சகவாசம்!' எனத் தனக்குள் எண்ணி வெகுண்டவனாக, காரைப் பூட்டிச் சாவியை மாடியறையில் கொண்டு வைத்தான். அதிக நேரம் அங்கே நின்று கொண்டிருந்தால் முதலியாரின் மக்கள் ஏதாவது வேலைக்கு ஏவுவார்கள் எனப் பயந்து ஸ்நான அறைக்கு விரைந்தோடினான். அவசரமாகக் குளித்துவிட்டு உடுத்திக் கொண்டு, வெளியே கிளம்பி விட்டான்.

சுவாமிநாதனைப் பார்ப்பவர் எவரும் சட்டென்று அவனது உண்மை நிலையை உணர்ந்து கொண்டுவிட முடியாது. அவ்வளவு ஆடம்பரமான தோற்றம் அவனிடத்தில் குடிகொண்டிருந்தது. மடிப்புக் கலையாத பட்டுக் கரை வேஷ்டியும், சில்க் ஷர்ட்டும், கையில் உயர்தர சிகரெட் டப்பாவுமாக அவன் தெருவில் நடந்துசென்றால் யாரோபெரிய மனிதர் வீட்டுச் செல்லக் குமாரன் என்றுதான் பார்ப்பவர்கள் எண்ணிக் கொள்வார்கள். கையில் அவன் கட்டிக்கொண்டிருந்த ஓட்டைக் கடிகாரத்தையும் பித்தளைக் கடிகாரப் பட்டையையும் உண்மையில் தங்கம் என எண்ணி ஏமாந்து விடுவார்கள். அத்தனை ஒரு மிடுக்கான நடை அவனிடம் காணப்பட்டது.

கையில் காசில்லை என்றாலும் வீராப்பான பேச்சிற்கும் வெட்டி எறியும் துடுக்குப் பார்வைக்கும் அவனிடம் குறைவு இருக்கவில்லை. வாரிக் கொண்டிருக்கும் தன் கிராப்பு சிகையை அடிக்கொரு தடவை தடவி விட்டுக்கொண்டு ஷர்ட்டுக் காலரை மேலே கழுத்தின் மீது இழுத்துத் தூக்கி விட்டுக் கொண்டு, உல்லாச நடையில் அவன் தெருவுக்குப் பவனி வந்தால், நாற்பது வயதைத் தாண்டிவிட்ட நடுத்தர மனிதர் என்றே சொல்லத் தோன்றாது.

கலாசாலைப் படியை விட்டு இறங்கி வாழ்க்கையின் வசந்தமாகிய யௌவனத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் கடும் காளை என்றுதான் எண்ணி சஞ்சலப் படுவார்கள் கோழையுள்ளம் கொண்ட குமரிப் பெண்கள். போதாததற்குக் கொஞ்சம் சிவந்த மேனியும் வசீகரத் தோற்றமும் இயற்கையாகவே அவனிடம் இருந்தன. அதனால் மன மயக்கமடைந்து அவனை மாலையிட விழைந்த யுவதிகள் அநேகர். ஆனால் சுவாமிநாதன் சட்டென்று மெல்லியர்களின் பாசக் கயிற்றில் ஊசலாடி விடவில்லை. ஒரேயடியாக அவன் பெண்களை வெறுத்துப் புறப்பட்ட சந்நியாசியுமல்ல. 'அழகான பெண்களுக்கு உலகத்தில் திடீரென்று பஞ்சம் ஒரு பொழுதும் வந்துவிடப் போவதில்லை. அதனால் ஏன் பதறவேண்டும்? கையில் காசு இருந்தால் ரம்பை என்ன, மேனகையே மேல் உலகத்திலிருந்து ஓடி வந்து காலடியில் வீழ்ந்து விடுவாள்.

'எனவே எல்லாவற்றையும் சாதிக்கும் சக்தி மிகுந்த அந்த அபூர்வப் பொருளான பணம் என்பதை அளவற்ற நிலையில் முதலில் வாரிக்குவிக்க வேண்டும். உடலை வருத்தாது, மேனியை வாட்டாது சுலபமாக அதைச் சேகரிக்கும் முறை என்ன? திடுதிடுவென்று எளிதிலே பணம் சம்பாதிக்கும் வழி எது?' என்றெல்லாம் அவனது கவனம் ஒரே விஷயத்தில் ஈடுபட்டிருந்ததனால் மற்ற போக பாக்கியங்கள் அவனுக்குத் துச்சமாகத் தோன்றின.

காலை வேளையாதலால் பரிமாறும் பையன் பரமசிவன் வேறு வேலையாக இருந்தான். அதனால் சுவாமிநாதனுக்கு ஸ்பெஷல் சிற்றுண்டிகள் கிடைக்க வழியில்லாது போய்விட்டது. கும்பலோடு கோவிந்தா என்று ஹோட்டல் சிப்பந்திகள் சாப்பிடும் அறைக்குள் சென்று ஒரு மேஜையருகே உட்கார்ந்தான். ஒரு கையில் அலுமினியத்தட்டில் இரண்டு இட்லிகளைக் கரைந்த சட்டினி மீது மிதக்கவிட்டு எடுத்துவந்த பையன், இன்னொரு கையில் ஒரு பித்தளை டம்ளரில் காப்பி என்ற ஒரு கருநிறத் திரவப் பொருளை நிறைத்துக் கொண்டு வந்தான். இட்டிலிகள் கற்பாறைகள் போல் கடினமாக



இருந்தன. ஒரு சிறு விள்ளலை வாயில் விட்டான். அது ஒரே கசப்பு! எட்டிக் கஷாயம்போல் தொண்டையை இறுக்கியது. குபீரென்று பாய்ந்து வெளியே வந்தான். தோட்டத்துக் குழாயில் தண்ணீரைப் பிடித்து இரண்டு கையளவு குடித்துவிட்டு, வெளியே நடையைக் கட்டினான்.

முதலியார் கொடுத்த இரண்டு ரூபாய்கள் தவிர அவனிடம் ஏற்கனவே ஐந்து ரூபாய்கள் இருந்தன. முதலியாரின் துணிகளை வண்ணானிடம் போட உதறிக் கணக்கிட்டபோது, அவர் சட்டைப் பையில் அதைக்கண்டு எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். முதலியாரும் பணத்தைத் தேடவில்லை. சுவாமிநாதனும் வலிய அவரிடம் அதைச் சேர்ப்பிக்க முன் வரவில்லை. அந்தப் பணம் இப்பொழுது அவனுக்குப் பெரும் தெம்பைக் கொடுத்தது. வழியில் ஒரு கடையில் ஒரு டப்பா சிகரெட்டை வாங்கிக் கொண்டு மைசூர் செல்லும் ராஜபாட்டையில் நடந்தான். வானத்திலே நிழல்போல் கருமேகம் படர்ந்து கிடந்தது. அதை ஊடுருவிக் கொண்டு சூரியன் வெப்பமான கிரணங்களை பூமியின்மீது கொடுமையாக வீசமுடியவில்லை. எனவே, காலை மணி பதினொன்றாகிவிட்ட போதிலும் வெய்யிலின் கடுமையே தெரியவில்லை. 'இந்த சமயம் சென்னையிலிருந்தால் நெருப்பைத் தலையில் கவிழ்த்துக் கொண்டது போலிருக்குமே! கத்திரி வெய்யலின் கடுமையே தெரியவில்லை. 'என்ன இருந்தாலும் பெங்களூர் பெங்களூர்தான்' என வியந்துகொண்டு, அந்த சீதோஷ்ண நிலையை அனுபவித்து ரசித்த வண்ணம் நடந்தான். காலை ஆகாரம் ஒன்றும் சுகமாக இல்லாததால் பசி வயிற்றைக் கிள்ளியது. இனிமேல் தாங்க முடியாது என்று உணர்ந்த சுவாமிநாதன் வழியில் தெரிந்த ஒரு பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

'சுஜாதா' ஹோட்டலில் அன்று ஒரே கூட்டம். நவீன வசதிகள் பல உள்ள இடமாக இருந்ததனால் யாத்ரிகர்கள் அநேகர் அதை வெகுவாக ஆதரித்தனர். 'சிற்றுண்டிகள் சுத்தமான நெய்யில் சுவையுடன் தயாரிக்கப்படுகின்றன' என்ற ஒரு காரணத்தினால் உள்ளூர் வாசிகள் அங்கு வந்து குவிந்தனர்.

புதிதாகத் திறக்கப்பட்ட ஹோட்டலின் சாப்பாடு, கவனிப்பு எல்லாம் எப்படி இருக்கின்றன பார்க்கலாம் என்று பரீட்சிக்க வந்தவர்களின் எண்ணிக்கை ஒருபுறம். எனவே சாப்பிடும் இடத்தில் ஒரு ஆசனம் கூடக்காலியாக இருக்கவில்லை. கோரமாக வயிற்றை எரித்த பசியைப் பொறுத்துக் கொண்டு, கால் கடுக்கச் சற்று நேரம் இடத்திற்காக நின்று தவம் செய்து பார்த்தான் சுவாமிநாதன்.

எதிர்ப்புற ஜன்னல் ஓரம் கிடந்த மேஜையருகே உட்கார்ந்திருந்த ஒரு கிழவர், அரைமணிக்கு மேலாகியும் எழுந்திருப்பவராகப் புலப்படவில்லை. தள்ளாத வயதில் இரண்டு ரவுண்டுகள் இட்டிலி, ஒரு ரவுண்ட் போண்டா என்று சிற்றுண்டி வகைகளை வாங்கி அவர் தின்ற வண்ணமிருந்தார். அவர் சுலபத்தில் அசைய மாட்டார் என உணர்ந்து கொண்ட சுவாமிநாதன், வெளி வராந்தாவுக்குச் சென்று, அங்கு கிடந்த ஒரு நாற்காலியைத் தூக்கிக் கொண்டு வந்தான். சாப்பாட்டு அறையின் கோடியில் ஒரு தனி மேஜையின் எதிரே ஒரு வாலிபன் மட்டும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு நாற்காலியுடன் அங்கே விரைந்தான்.

''மன்னிக்க வேண்டும். நான் இங்கே உட்காருவது பற்றி உங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லையே'' என்று வினவி விட்டு, பதிலுக்குக் காத்திராமல் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான். பரிமாறும் பையனைக் கை தட்டி அழைத்து, சூடான மசாலா தோசை ஒரு தட்டும், வடை சாம்பார் ஒரு தட்டும், ஒரு கப் நல்ல காப்பியும் கொண்டு வரும்படி சொல்லிவிட்டு, ஆசனத்தில் சாய்ந்து கொண்டு எதிரே இருந்த ஆசாமியை உற்றுப்பார்த்தான்.

கலாசாலை மாணவன்போல் காணப்பட்ட அந்த வாலிபன் அங்கே சாப்பிட வந்தவன் போல் இருக்கவில்லை. டம்ளரில் வைத்திருந்த காப்பி ஆறிப்போவதைக் கூடக் கவனிக்காது கையிலிருந்த பத்திரிகையில் மூழ்கிக் கிடந்தான். அத்தனைக் கூட்டத்திலும் பரிமாறும் பையன் ஒரு சில நிமிஷங்களில் சுவாமிநாதன் கேட்ட வகைகளை தட்டுக்களில் சுமந்துகொண்டு ஓடோடி வந்து மேஜைமீது வைத்துவிட்டுப் போனான். முதலில்



அவைகளை ஒரு கை பார்ப்பதில் முனைந்தான். பிறகு காப்பியையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டு, சிகரெட்டை உருவிக் கையில் எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

பருந்து போல் வட்டமிட்டுச் சுழன்ற சுவாமிநாதனின் கண்கள், அறையின் வாயிற்படியருகே வந்ததும் அப்படியே நிலைத்துப் போயின. கடைந்தெடுத்தத் தந்தப் பதுமை அசைந்தாடிக் கொண்டு வருவது போல், மெல்ல நடைபோட்ட வண்ணம் தன்னை நோக்கி வந்த ஒரு அழகான இளம் பெண்ணைக் கண்டு ஆச்சரியத்தில் அவன் இதயம் 'படபட'வென்று அடித்துக் கொண்டது. நெற்றிமீது துளிர்த்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு கண்களை விரித்து அவளை உற்றுக் கவனித்தான்.

''இன்னும் காப்பி கூடச்சாப்பிடவில்லை போலிருக்கிறது. நாம் டவுனுக்கு எப்போ போகிறது? எப்போ திரும்பி வருகிறது? உம்'' என்று கொஞ்சலாக அதட்டிக் கொண்டு, மாணவன்போல் காணப்பட்ட வாலிபன் அருகே வந்து நின்றாள் அவள். அந்தக் குரல் சுவாமிநாதனை ஒரு குலுக்குக் குலுக்கியது.

சுவரைப் பார்ப்பவன் போல் ஓரக்கண்ணால் அந்த அழகியை ஏற இறங்க மீண்டும் கவனித்தான். இருபதா அல்லது முப்பதா என்று வயதைக் குறிப்பிட முடியாதபடி இளமை பொங்கி வழிந்த அந்த எழிலரசி கருகருவெனச் செழுமையாக வளர்ந்த தன் கூந்தலை, கழுத்தின்மீது புரளும்படி மடித்துக் கட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தக் கூந்தல் மடிப்பின் குறுக்கே பாலம்போல் சண்பக மலர்ச்சரம் ஒன்று அலங்கரித்துக் கொண்டிருந்தது. அந்த மலரின் நிறத்தில் அவள் மேனியும் துவண்ட மைசூர்ப் பட்டுச் சேலையும் பச்சைப் பட்டு ரவிக்கையும் அவளுக்கு மிக சோபிதமாக இருந்தன. பணத்தில் புரளும் செல்வச் சீமாட்டி என்பதை அவள் கழுத்தில் புரண்ட வைர அட்டிகை

விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தது.

பத்திரிகையை மடித்துவிட்டுச் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்திருந்தான் வாலிபன். "உம்! நேரமாயிற்று" என்று அதட்டினாள் மங்கை. வாலிபன் பதில் பேசாது புறப்பட்டான். புடவைத் தலைப்பை வீசிக்கொண்டு அசைந்தாடும் கொடிபோல் தளுக்கு நடையுடன் அவள் முன்னேறினாள். சுவாமிநாதனுக்கு அதற்குமேல் அங்கே இருப்புக்கொள்ளவில்லை. பற்பல விஷயங்களை எண்ணி அவன் உள்ளம் படபடத்தது. விவரிக்க இயலாத ஒரு ஆனந்தத்தில் உடல் நடுங்கியது. அவர்களைப் பின் தொடர்ந்து வெளியே வந்தான்.

ஹோட்டல் வாயிலில் நின்று கொண்டிருந்த மோட்டார் அருகே சென்ற அந்த இளநங்கை, காரின் கதவைத் திறந்து, டிரைவர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். வாலிபன் உள்ளே ஏறி அவள் அருகே உட்கார்ந்து கொண்டான். சுவாமிநாதன் மிக அருகே வந்து நன்றாக இன்னொரு முறை அவளைக் கவனிக்குமுன் வண்டி புறப்பட்டுத் தோட்டத்தைத் தாண்டி வெளியே சென்று மறைந்து விட்டது.

ஆனால் பல நாட்களாகக் கொண்டிருந்த ஒரு பழக்கத்தினால் அவனையுமறியாது அவன் கண்கள் வண்டி நம்பரைக் கவனிக்க, மூளை அதைப் பதிவு செய்து கொண்டது.

## 24

உள்ளத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குமிழியிட்டால் காலம் இறக்கை முளைத்து வேகமாகப் பறப்பது போல் பிரமிப்பூட்டுவது இயற்கையே! ஆனந்த நிலையத்திற்கு மஞ்சுளா வந்து மூன்று வாரங்கள் ஆகியும் மூன்றே தினங்கள் கழிந்தன போல், நாட்கள் விரைவாகச் சென்று விட்டிருந்தன. வாழ்விலே அதுவரை கண்டிராத ஆனந்தத்தையும், இனம்



விளங்காத நூதனமானதொரு புதுமை உணர்ச்சியையும் ஒருங்கே அனுபவித்துக் கொண்டிருந்தாள் அவள். யசோதா தேவியிடம் வேலை செய்த காலத்தில் இரவு படுக்கப் போகுமுன் மறுநாள் என்ற விஷயம் தோன்றாது, சூரியன் உதிக்காமல் அப்படியே இரவாகவே இருக்கக் கூடாதா என்று எத்தனையோ முறை அவள் விரும்பியிருந்தாள்! உடலை வருத்திய வேலைகளின் சுமையை எண்ணி, அப்போதெல்லாம் பகலைக் கண்டு நடுங்கியது அவளது உள்ளம். ஆனால் இங்கு நிலைமை அதற்கு எறுமாறாக இருந்தது.

சூரியன் அஸ்தமிக்காது பகல் பொழுது இன்னும் நீண்டு கொண்டு போகாதா என்றவரை எண்ணும்படி இருந்தது அவள் புதிதாக ஏற்றுக் கொண்டிருந்த உத்தியோக நிலை. சந்திரா அவளிடம் மிக்க பரிவும் அன்பும் காட்டினாள். வேலையாட்கள் அவளிடம் மிக்க மரியாதையுடன் நடந்து கொண்டனர். இதன் பயனாக மஞ்சுளாவிற்குத் தான் அந்த வீட்டில் பணத்திற்காக வேலை செய்யும் ஒரு தாதிப் பெண் என்ற நினைவு மறந்து போய்விட்டது. வெகுநாட்கள் பழகிய அன்பான சிநேகிதிபோல் மிக்க சகஜமாக சந்திராவுடன் பழகினாள்.

வேலை ஆரம்பிக்கத் தொடங்கிய முதல்நாள் காலை சந்திரா அவளை அழைத்துத் தன் படுக்கைத் தலையணை அடியிலிருந்து ஒரு சிறு காகித உறையை அவளிடம் நீட்டினாள்.

"நான் சொல்வதை நிதானமாகக் கேள்! எனக்குப் பணிப்பெண்ணாக சிசுருஷைகள் புரிந்துகொண்டு, பேச்சுத் துணையாக நீ அருகில் சதா இருக்க வேண்டுமாதலால், உனக்குச் சுத்தமான உடைகள் அவசியம். சம்பளத்தைத் தவிர, என்னை இதுவரை கவனித்த பணிப்பெண்களுக்கு நாங்கள்தான் உடைகள் வாங்கிக் கொடுப்பது வழக்கம். அதனால் அவைகளை வாங்க வேண்டிய பணத்தை இதில் வைத்திருக்கிறேன்.

"நீ இன்றே கடைக்குச் சென்று தேவையானவற்றை உடனே வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், ஒரு விஷயம். நீ மற்றப் பெண் நர்ஸ்களைப் போல் வெள்ளைப் புடவை

அணிந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. வெள்ளை உடையில் பணிப் பெண்களை சதா பார்த்துப் பார்த்து எனக்கு அலுத்துவிட்டது. அதனால் என் கண்களுக்கு ரம்மியமாக உனக்குப் பிடித்தமான வர்ணப் புடவைகளை அணிந்து கொண்டு, பார்வைக்கும் மனதிற்கும் உற்ற ஒரு தோழியாக நீ இரு. அதுபோதும். டிரைவர் சிந்தா உன்னைக் கடைக்கு அழைத்துச் செல்வார். காலையில் இதுதான் உன்னுடைய முதல் வேலை. சீக்கிரம் புறப்பட்டு சென்றுவா!'' என்றாள்.

நன்றிப் பெருக்கில் சட்டென்று பதில் சொல்லமுடியாது மஞ்சுளாவின் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது. மிகவும் சிரமப்பட்டு ''மெத்த வந்தனம்'' என்று தடுமாறினாள். அவள் வெளியே போகத் திரும்பியபோது சந்திரா கைதட்டி அவளைத் தன் அருகில் மீண்டும் அழைத்தாள். ''இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். உனக்கு மாதம் நூறு ரூபாய் சம்பளம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம். ஆட்சேபணை இல்லையே?'' என்று கேட்டாள். உண்மையில் மஞ்சுளா அவ்வளவு பெரிய தொகையை எதிர்பார்க்கவே இல்லை. எனவே அதைக் கேட்டதும் பூரித்துப் போய்விட்டாள்.

''மிக்க சந்தோஷம். ஆட்சேபணை ஏதும் இல்லை'' என்று மெல்லிய குரலில் மொழிந்துவிட்டுத் தன் அழகிய முத்துப் பற்கள் தெரிய லேசாகப் புன்முறுவலித்தாள்.

''அப்படியானால் சீக்கிரம் கடைத் தெருவுக்குப் போய் விட்டு வா. இன்னொரு சிறு விசயம். கால்களை ஒடித்து நொண்டியாக்கிய பகவான் என்னை நாற்காலியோடு கட்டிப்போட்டு வைத்துவிட்ட போதிலும், எங்கேயாவது ஊரில் நடனக் கச்சேரி என்றால் போய்ப் பார்க்காவிட்டால் எனக்குத் தூக்கம் வராது. வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கக் கூடாது என்று அண்ணாவும் அப்பாவும் அடிக்கடி என்னை வெளியே அழைத்துச் செல்வதுண்டு. அதுமாதிரி சமயங்களில் நீயும் எனக்குத் துணையாகக் கூட வெளியே வர வேண்டியிருக்குமாதலால், விசேஷ கால உபயோகத்திற்காக ஒரு சில நல்ல புடவைகளும் வாங்கிக் கொள். தெரிந்ததா?'' என்றாள்.



புரிந்த பாவனையில் தலையை ஆட்டிவிட்டுப் புறப்பட்டாள் மஞ்சுளா.

வண்டி பங்களாவை விட்டு வெளியேறும் வரை எஜமானி அளித்த அந்தக் காகித உறையைப் பிரித்துப் பார்க்க அவளுக்குத் துணிவு இருக்கவில்லை. வண்டி கடைத்தெருவுக்குள் நுழைவதை உணர்ந்ததும் ஆவலை அடக்க மாட்டாது மெல்ல உறையைப் பிரித்தாள். உள்ளிருந்த நோட்டுகளை எண்ணியபோது அவள் மிகவும் திடுக்கிட்டுப் போய்விட்டாள்! அவள் ஆயுளில் அத்தனை பணத்தையும் ஒருங்கே ஒருமுறைகூட இதுவரை கையால் தொட்டுப் பார்த்தவளல்ல. எனவே திகைப்பும், ஆனந்தமும் தாள முடியாது மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தாள் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள. காகித உறையில் முன்னூறு ரூபாய்கள் இருந்தன. மிதமிஞ்சிய சந்தோஷத்தில் அவளுக்கு அழுகைகூட வந்துவிட்டது. 'இப்பொழுது தாத்தா உயிருடன் இருந்தால்?... இந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு அவரை எவ்வளவு சௌக்கியமாக வைத்திருக்கலாம்? கடைசிக் காலத்திலாவது அவரைக் கொஞ்ச நாட்கள் சுகமாக வைத்திருந்தோம் என்ற திருப்தியாவது ஏற்பட்டிருக்குமே! இன்னும் ஒரு சில வருஷங்களாவது அவர் உயிருடன் இருந்திருக்கக் கூடாதா....?' என்று எண்ணி மனம் உருகினாள். அதே சமயம் அவள் சிந்தனையில் ஒரு சிறு சந்தேகமும் கொடிபோல் படர்ந்தோடியது.

தாத்தா உயிருடன் இருந்தால் இப்படி அவள் தெருத்தெருவாக அலைந்து, பிறர் வீட்டில் வேலைக்காரியாக அமர்வதைப் பார்த்துக் கொண்டிருப்பாரா? அல்லது அனுமதிப்பாரா? உஹூம்! 'பட்டினி கிடந்து இரண்டு பேரும் செத்துப் போனாலும் சரி; படித்த பெண் நீ, பிறர் வீட்டில் புடவை துவைத்துப் போடவாவது' என்று கூச்சல் போட்டுத் தடுத்திருப்பார். அவரைக் குற்றம் சொல்ல முடியாது. அவர் பழங்காலத்து மனிதர். பிறரை மோசம் செய்யாது மானத்தோடு வேலைக்காரியாக உழைத்து வாழ்வதில் ஏற்றத் தாழ்வு ஏதும்

இல்லை என்ற புதுமைக் கருத்து அவரது புத்திக்கு அப்பாற்பட்டது.... என்று பலவும் தனக்குள்ளே எண்ணி மனம் குழைந்து போனாள்.

கிழவர் சிந்தாமணிக்கு கடைத்தெருவில் எந்தெந்த சாமான்கள் எந்தெந்தக் கடைகளில் கிடைக்கும் என்பது மனப்பாடமாதலால், அவள் கேட்கு முன்பே காரை ஒரு பெரிய ஜவுளிக்கடை முன்பு கொண்டு நிறுத்தினார். அவ்வளவு பணத்தையும் ஒரே நாளில் செலவழிக்க மஞ்சுளாவுக்கு மனம் வரவில்லை. எனினும் எஜமானியின் உத்தரவை மீற முடியாது தனக்கு வேண்டிய ஆடைகளை வாங்கிக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும் முதலில் அவற்றைச் சந்திராவிடம் காட்டி பாராட்டுதல் பெற்றுக்கொண்டு, சந்தோஷத்துடன் தன்னுடைய அறையிலிருந்த பீரோவில் அடுக்கி வைத்தாள். விசேஷ தினங்களுக்கென்று அரக்கு, பச்சையென்ற இரு நிறங்களில் கொள்ளேகாலம் பட்டுப்புடவைகள் இரண்டும், வாடாமல்லி வர்ணத்தில் காஷ்மீரப் பட்டுச் சேலையொன்றும் வாங்கிவந்திருந்தாள். அவைகளைத் தன்மீது வைத்துக் கண்ணாடி முன் நின்று பன்முறை அழகு பார்த்து மகிழ்ந்து போனாள். அவளால் நம்பவே முடியவில்லை. சென்னை நகரத்தில் பள்ளிக் கூடத்தில் நூல் நிலையக் குமாஸ்தாவாக இருந்தபொழுது மூன்று நூல் புடவைக்கு மேல் கதியற்றுக் கிடந்த தனக்கு, திடீரென்று ஏற்பட்டிருந்த வஸ்திர லாபத்தை எண்ணி எண்ணிச் சந்தோஷம் தாங்க முடியாது தவித்துப் போனாள். அவளுக்கு ஏற்பட்ட பரவசத்தில் அன்று அவளால் சாப்பிடக்கூட முடியவில்லை. தூங்கவும் முடியவில்லை.

இதைவிடச் சந்திரா அவளிடம் நடந்து கொண்டமுறை மஞ்சுளாவை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தி விட்டிருந்தது. தேவிபவனத்தில் இருந்த சமயம் ஒவ்வொரு நிமிஷமும் யசோதாவும் கைலாசமும் அவள் ஒரு வேலைக்காரி என்ற நினைவை அறிந்தோ அறியாமலோ உணர்த்திக் கொண்டேயிருந்தார்கள். ஆனால் இங்கே சந்திராவும் மற்றவர்களும் அவளைக் குடும்பத்தில் ஒருத்தியாகப் பாவித்து



ஆதரவு காட்டினார்கள். கிரிதரன் வலியவந்து தானே பேச முயற்சிக்கவில்லை என்றாலும் ஏதாவது தங்கையைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்ற சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுது எஜமான் என்ற ஹோதாவில் தனது அதிகாரத்தைக் காட்டவில்லை.

அந்தப் பங்களாவிலோ, தோட்டத்திலோ இந்த இடத்தில்தான் அவள் போகலாம், இங்கே போகக்கூடாது என்ற கட்டுப்பாடு ஏதும் இருக்கவில்லை. சுதந்திரமாகச் சந்திராவின் அறையிலிருந்து சமையற் கட்டுவரை அவள் சுற்றி வந்து கொண்டிருந்தாள். ஒருநாள் தவறிப்போய் பெரியம்மாவின் அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டாள். அதுசமயம் அந்த அம்மாள் இரும்புப் பெட்டியைத் திறந்து தமது நகைகளை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். காலடியோசை கேட்டதும், 'படார்' என்று இரும்புப் பெட்டியை மூடிவிட்டு, கண்களில் தீப்பொறி பறக்க அந்த அம்மையார் மஞ்சுளாவை விழித்துப் பார்த்தாள். 'ஏழைப்பெண்' பணத்தையும் நகைகளையும் கண்களால் கூடப் பார்த்தறியாத அநாதை. பார்த்தால் கண்பட்டு விடுமே! என்ற பயம் அந்தம்மாளுக்கு. ''உன்னை நான் கூப்பிடவில்லையே? திடுதிடுவென்று என் உத்தரவில்லாமல் இந்த வீட்டில் எல்லா அறைகளுக்கும் நீ போகக்கூடாது. தெரியுமா? எங்கள் வீட்டில் சாமான்கள் அங்கங்கே போட்டது போட்டபடி கிடக்கும். நாளைக்கு ஏதேனும் காணாமல் போனால் வீண் சந்தேகத்திற்கு நீ ஆளாவாய் தெரிந்ததா?'' என்று அதட்டினாள்.

மஞ்சுளாவுக்கு அவமானம் தாள முடியவில்லை. 'ஏழை என்றால் பிறர் பொருளைக் கண்டவுடன் பேராசையுடன் திருடிக்கொண்டு விடும் கொள்ளைக்காரர்கள் என்றா அர்த்தம்? சொல்லாமலே 'நீ திருடி' என்று பெரியம்மா ஒரு பட்டம் கொடுத்து விட்டார்களே. இதைக் கேட்டுக் கொண்டு சாகாமல் இன்னமும் உயிரோடு இருக்கிறேனே' என்று எண்ணி, மனம் பதைபதைத்துப் போனாள். 'அந்த ஒரு சம்பவம் அவளுக்கு ஒரு மனக்கஷ்டத்தை உண்டு பண்ணியிருந்ததனால் சட்டென்று

சந்திராவின் பீரோக்களைத் திறக்கவோ, புத்தக அலமாரியில் உள்ள புத்தகங்களை எடுத்துத் திறந்து பார்க்கவோ அவளுக்கு ஆரம்பத்தில் துணிவு இருக்கவில்லை.

முதலில் சில தினங்கள் அந்தப் பங்களாவில், 'இங்கு போகலாமா, இந்த இடத்தில் நிற்கலாமோ?' என்று அஞ்சி நடுங்கினாள். ''இந்தா! என்னுடைய பீரோ சாவி. இதை நீ வைத்துக்கொள். எனக்கு வேண்டியதை உடனுக்குடன் எடுத்துக்கொடுக்க உன்னிடம் இது இருப்பது நல்லது'' என்று எஜமானி நம்பிக்கையுடன் தன் சாவிக்கொத்தை அவளிடம் கொடுத்தபோது, மஞ்சுளாவிற்கு அந்தப் பொறுப்பை ஏற்க பயமாகத்தான் இருந்தது. ''இந்த வீட்டில் நீ எங்கும் போகலாம். உன்னுடைய வீடு என்று நினைத்துக் கொண்டு சந்தோஷமாக இரு'' என்று சந்திரா உத்தரவிட்டதும்தான் அவளுக்கு அந்த மனக் கூச்சம் தெளிந்தது. ஒரு மன உறுதியும் கூட ஏற்பட்டது. தனக்கும் வாழ உரிமை உண்டு என்ற உற்சாக உணர்ச்சியுடன் சிறகு முளைத்து, வானவீதியில் ஆனந்தத்துடன் பறக்கும் வானம்பாடிபோல் அவள் அந்த வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

சந்திராவுக்கு அவள் செய்ய வேண்டியிருந்த வேலைகள் அத்தனை கடினம் அல்ல. எழுந்து நடக்க முடியாததனால், குளிக்கும்போதும், ஆடை அணியும்போதும் மஞ்சுளாவின் உதவி அந்தப் பெண்ணுக்குத் தேவையாக இருந்தது. காலை ஆகாரத்திற்குப் பிறகு சற்று நேரம் தோட்டத்திலே உலவ ஆசைப்படும் சந்திராவை, ஒரு தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு சிறு வேலை மட்டும் அன்றாடம் செய்ய வேண்டியிருந்தது. நாளின் பெரும் பகுதியை புத்தகங்கள் படிப்பதிலும், பூ வேலைகள் செய்வதிலும் பொழுதுபோக்கிக் கொண்டிருந்த சந்திரா அடிக்கடி மஞ்சுளாவை அழைத்து தொந்தரவு கொடுக்கவில்லை. ஆனால் மஞ்சுளாவுக்குக் கடமை உணர்ச்சி அதிகம் உண்டு. சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு உண்டு உறங்கி வீணாகப் பொழுதைப் போக்க அவள் விரும்பவில்லை.

எனவே எஜமானியின் அன்றாடக் 'காரியங்களைக் கவனித்த பின்னர் வீண்பொழுது போக்காது, அறையைச் சுத்தப்படுத்துவதிலும், புத்தகங்களை அடுக்கி வைப்பதிலும் சந்திராவின் சௌகரியங்களை ஊகித்து கேட்காமலே செய்து முடிப்பதிலும் உற்சாகம் காட்டினாள். இதற்கும் மிஞ்சிப் பொழுதிருந்தால், சமையற் கட்டிற்குச் சென்று சமையற்கார கிட்டாவுக்குத் தன்னால் ஆன உதவிகளைத் தயக்கமின்றி செய்து வந்தாள். நகை முகம்காட்டி அடக்கமாகவும் அன்போடும் வார்த்தையாடிய அவளது பெருந்தன்மையான குணம் அங்கிருந்த வேலையாட்கள் அனைவருக்கும் மிகவும் பிடித்து விட்டிருந்தது. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் மஞ்சுளா மறக்கவில்லை. மிதமிஞ்சிய சலுகைகள் தனக்குக் காட்டப்படுகின்றன என்பதை முகாந்திரமாக வைத்துக் கொண்டு, தன் நிலையை ஒரேயடியாக மறந்துவிடாது, பணிவுடனேயே நடந்துகொண்டாள். எனினும் அன்று காலை நடந்த ஒரு சிறு சம்பவம் அவள் மனத்திற்குப் பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. தன்னுடைய நடத்தையிலும், வேலையிலும், குற்றம் காண்பவர்களும் அங்கு இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தபோது அவள் மனம் மிக்க வேதனைப்பட்டது.

## 25

சந்திரா முதல் நாளே கூறியிருந்தாள். ''காலை வேளையில் ஸ்நானம் செய்த பின்பு நீ தோட்டத்திற்குச் சென்று உன் கையால் கொஞ்சம் புஷ்பங்கள் பறித்து மாலையாகத் தொடுத்துக் கொண்டுவந்து என் அறையில் வைத்துவிட வேண்டும். என் தாயாரின் புகைப்படத்திற்கு மாலை போட்டு வணங்கிவிட்டு, பிறகுதான் நான் காலை ஆகாரம் சாப்பிடுவது வழக்கம்'' என்று.

மலர்கள் என்றால் மஞ்சுளாவுக்கு உயிர். அவற்றைப் பறித்து விதம் விதமாகக் கட்டி மகிழ்வதை ஒரு இன்பமான பொழுதுபோக்காகக் கருதினாள். எத்தனைதான் ஏழையாக

இருந்தபோதிலும், பேத்தியின் இந்த சிறு ஆசைக்கு தாத்தா ரகுபதி ஒருநாளும் குறை வைக்கவில்லை. 'முல்லை மல்லி' என்று பூக்காரி கூவிக்கொண்டு போவது காதில் பட்டுவிட்டால்போதும், கிழவர் தமது அலுப்பைப் பாராது எழுந்தோடி சென்று அவளை அழைத்துப் பேரம் செய்து ஒரு ஆழாக்குப் பூ வாங்கி, வாழை இலையில் சுருட்டிப் பத்திரமாக வைத்து விடுவார். எவ்வளவு களைப்புடன் வந்தாலும் சரி, எவ்வளவு நேரமாகி விட்டபோதிலும் சரி, பேத்தியும் சலிக்காது அந்தப் புஷ்பங்களைத் தொடுத்துக் கூந்தலில் சூட்டிக்கொண்டு, பிறகுதான் தூங்கச் செல்வாள். பூக்கள் மீது அத்தனை மையல் அந்தத் தையலுக்கு! எனவே எஜமானி விடுத்த உத்தரவு மிகவும் மகிழ்ச்சி ஊட்டுவதாக இருந்ததனால், அதை அவள் சிரமேற்கொண்டதில் வியப்பில்லை.

ஆனந்த நிலையத்துத் தோட்டத்தில் அவளுக்குப் பிடித்தமான மலர் வகைகள் அனைத்தும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. ஸ்ரீமதி நாராயணன் தமது ஆயுளில் ஒரு பிடி கீரை விதையைக் கூட அள்ளி மண்மீது விதைத்தவள் அல்ல. ஆனால் அந்த ஆடம்பரமான பங்களாவிற்கு அழகானதொரு தோட்டம் அவசியம் என்பதை மட்டும் உணர்ந்திருந்தாள். அதனால் தோட்டத்தைக் கவனிக்கவும் மேற்பார்வை செய்து விதம்விதமான மலர்ச் செடிகளைப் பயிரிடவும் தோட்டக்கலை அறிந்த ஒரு நிபுணரை அதிகச் சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்திருந்தாள். செடி கொடிகளைத் தமது குழந்தைகள்போல் நேசித்த அந்த மனிதர், தமது கற்பனை முழுவதையும் செலவிட்டு, ஆனந்த நிலையத்தின் தோட்டத்தை ஒரு அற்புதப் பூங்காவனமாக்கி விட்டிருந்தார்.

அதன் விளைவாக ஒவ்வொரு வருஷமும் நகரத்து முனிசிபாலிடி நடத்திய தோட்டப் போட்டியில் ஆனந்த நிலையத்துப் பூங்காவிற்கே முதல் பரிசு கிடைத்தது. ஸ்ரீமதி நாராயணன் தன் நெற்றி வியர்வை ஒரு துளியைக்கூடத்தோட்டத்திலே சிந்தாத போதிலும், பரிசாகக் கிடைத்த வெள்ளிக் கோப்பையை ஆடம்பரமாக எல்லோர் முன்னிலும் கைநீட்டி வாங்கிக்கொண்டு போகத் தவறியதேயில்லை!



அன்று காலையில் வழக்கம்போல் கொஞ்சம் புஷ்பங்களைப் பறித்துப்போக மஞ்சுளா பூக்குடலையுடன் தோட்டத்திற்குள் நுழைந்தாள். வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்று பலவித வர்ணங்களில் இலை தெரியாது கொத்துக் கொத்தாக பூத்து நின்ற ரோஜா மலர்களை வியப்புடன் பார்த்து, மலைப்படி நின்று விட்டாள். எதைப் பறிப்பதென்றே விளங்கவில்லை அவளுக்கு. இளஞ்சூரிய வெளிச்சத்தில் ரத்தினக் கட்டிபோல் பிரகாசமாக இதழ் விரித்துத் தென்றலுக்கு தலையசைத்துக் கொண்டிருந்த பட்டுரோஜா மலர்க் கொத்தொன்றை மெள்ள விரல்களால் கிள்ளி எடுத்தாள். முத்துக்கள்போல் இதழ்கள்மேல் படிந்து நின்ற பனி நீர்த் துளிகளை உதறிவிட்டு, முகத்தருகே கொண்டு போனாள். கம்மென்று வீசிய மலரின் மணம் உடல் முழுவதும் பரவி விட்டதுபோல் பரவசப்படுத்தியது.

'மல்லிகை போல் மூக்கை வந்து தூக்கும் வாசனை இல்லாவிட்டாலும் ரோஜா மலருக்குத்தான் எத்தனை கம்பீரமானதொரு மணம்! நூர்ஜஹான் ராணி கெட்டிக்காரி. மல்லிகை, ரோஜா மலர்கள் ஊறிய தண்ணீரில் நீந்தி நீந்தி ஸ்நானம் செய்தாளாம்!' என்று தனக்குள்ளே எண்ணியபடி வியப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

பின்னால் யாரோ சரசரவென்று நடந்து வரும் ஓசை கேட்கவே, திடுக்கிட்டுத் தனது கற்பனைகளினின்று விழித்துக்கொண்டு திரும்பிப் பார்த்தாள். வழுக்கைத் தலைமீது துண்டைப் போர்த்துக் கொண்டு அவளிருந்த திக்கை நோக்கி டிரைவர் சிந்தாமணி வந்து கொண்டிருந்தார். அருகில் வந்ததும், ''என்னம்மா, எப்படி இருக்கிறீர்கள்!'' என்று வினவியபடி தலையிலிருந்து துண்டை எடுத்தார். பக்கத்திலிருந்த சிமெண்டு மேடைமீது துண்டை விரித்து விட்டு உட்கார்ந்தார். வேகமாக நடந்து வந்ததனால் அவருக்கு மூச்சு வாங்கியது.

''சௌக்கியமாக இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்!'' என்று க்ஷேமம் விசாரித்துவிட்டுப்

பூப்பறிப்பதில் முனைந்தாள் மஞ்சுளா.

கிழவர் யோசனையுடன் அந்தப் பெண்ணை ஏற இறங்க ஒருமுறை பார்த்துவிட்டுத் தயக்கமாகத் தரையைப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் மௌனமாக இருந்தார். அங்கு அவள் வந்த தினத்தன்று கொஞ்சம் சரளமாகப் பேசிய சிந்தாமணி, அதற்குப் பிறகு அவளிடம் அதிகம் பேச முன்வரவில்லை. தன் வேலையுண்டு, தான் உண்டு என்று கொஞ்சம் ஒதுங்கியே தான் இருந்து கொண்டிருந்தார். தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவர் சுற்றுமுற்றும் கவனிப்பதைக் கண்ட மஞ்சுளாவுக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. ஏதோ பெரிய விஷயம் சொல்ல மனிதர் பூர்வபீடிகை போடுகிறார் என்கிறவரை அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. ஆனால் என்ன சொல்வதற்குக் கிழவர் இப்படிப் பேச ஆரம்பிக்கத் தெரியாது திண்டாடுகிறார் என்பது மட்டும் அவளுக்கு விளங்கவில்லை.

சிந்தாமணி பலமாகப் பன்முறை இருமிவிட்டு "அம்மா குழந்தை! உங்களை விட வயதில் பெரியவன் நான். உலக அனுபவம் அதிகம் உடையவன். எனவே உங்களுக்கு ஒரு சிறு விஷயம் சொல்ல விரும்புகிறேன்" என்றார்.

மஞ்சுளாவிற்கு ஒன்றும் புரியவில்லை. தனது கருவிழிகளை விழிப்புடன் விரித்து அவரைக் கூர்ந்து நோக்கினாள் பதிலுக்கு.

"இந்த வீட்டில் இரண்டு எஜமானி அம்மாக்கள் இருப்பதனால் குழப்பத்தைத் தவிர்க்க வேலைக்காரர்களாகிய நாங்கள், ஸ்ரீமதி நாராயணன் அவர்களைப் பெரியம்மா என்றும், சந்திரா அம்மாளைச் சின்னம்மாள் என்றும் கூப்பிடுவது வழக்கம். சின்ன அம்மா மிகவும் தயாள குணமுடையவர். போதாதற்கு இளவயது என்பதனால் விளையாட்டுச் சுபாவம் ரொம்ப அதிகம். உங்களை அவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டிருக்கிறது... ஆனால்" என்று கிழவர் நிறுத்திவிட்டு மேலே சொல்லத் தயங்கினார்.



"ஆனால் என்ன?" என்று படபட்டமாகக் கேட்டாள் மஞ்சுளா சிறிது கோபத்துடன்.

"இந்த வீட்டில் நான் பல வருஷங்களாக வேலைசெய்து கொண்டிருக்கிறேன். ஸ்ரீமான் நாராயணனை அடி நாளிலிருந்து எனக்கு நன்றாகத் தெரியும். கிரிதரனும் சந்திரா அம்மாளும் நான் எடுத்து வளர்த்த பிள்ளைகள்தான். ஆனால் என்ன இருந்தாலும், எத்தனை நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் இருந்தபோதிலும், நான் இந்த வீட்டில் ஒரு வேலைக்காரன்தான் என்ற நிலையை மட்டும் மறந்ததில்லை" என்று கூறிவிட்டு நிறுத்தினார் சிந்தாமணி.

மஞ்சுளாவின் முகத்தில் குப்பென்று ரத்தம் ஏறிக் கொண்டது. உடல் முழுவதும் அனல் பற்றிக் கொண்டு விட்டதுபோல் அவமானத்தால் பற்றி எரிந்தது. இந்தக் கிழவர் என்ன சுற்றி வளைக்கிறார்? 'சந்திராவுடன் நான் நட்புரிமை பாராட்டிப் பழகுவது இவருக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை போலும். நேற்று வந்தவள் நெருங்கிப் பழகுகிறாளே என்ற பொறாமையா?' என ஒரு கணத்தில் பலவும் அவள் உள்ளம் அடுக்கடுக்காக எண்ணிவிட்டது. பதிலளிக்காது கோபத்துடன் உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றாள்.

"பெரிய மனிதர்களுடன் பழகும்போது பாம்புடன் பழகுவதுபோல் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இன்றைக்கு ஓஹோ என்று தலையில் தூக்கி வைத்துக் கொள்வார்கள். நாளைக்கு திடீரென்று கீழே போட்டு மிதித்துவிட்டுப் போவார்கள். ஆனால் நாம் ஒரே ரீதியாக நம் நிலைமையை மறக்காது பட்டும் படாமலும் பழகிவந்தால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது" என்று கூறி முடித்தார்.

இதைக்கேட்ட மஞ்சுளாவுக்குக் கோபத்தினால் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது. முகம் ரத்தமெனச் சிவந்து போயிற்று. அதற்குமேல் அவளால் பேசாது இருக்க முடியவில்லை. "நான் ஒரு முட்டாள் பெண் என்று எண்ணிக் கொண்டு மறைமுகமாக இப்படிப் பேசவேண்டாம்! உங்களைப் போல் பரந்த உலக அனுபவம் எனக்கு

இல்லாவிட்டாலும், பத்துக்கு ஒன்று பஞ்சம் வந்து விடவில்லை. சின்ன எஜமானியுடன் மிகவும் சிநேகிதமாகி அவர்களிடமிருந்து பரிசுகளையும் பணத்தையும் வாரிக்கட்டிக் கொள்ள வேண்டும் என்று பேராசை எனக்குக் கிடையாது. நான் வேலைக்காரியாக இந்த வீட்டிற்குள் வந்திருப்பதை ஒருநாளும் மறந்து விடமாட்டேன். நீங்கள் ஒன்றும் தனியாக எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம். என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்'' என்று படபடவெனப் பேசினாள்.

ஆத்திரத்தினாலும், அவமானத்தினாலும் அவள் வார்த்தைகள் தடைப்பட்டன. நெஞ்சு அடைத்துக் கொண்டது. கண்கள் கலங்கின. அவர் மேலே பதிலளிக்கு முன் விர் எனப் பங்களாவை நோக்கி ஓடிவிட்டாள்.

குமுறிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு அவசரமாகப் புஷ்பங்களை மாலையாகத் தொடுத்து எடுத்துக் கொண்டு சந்திராவின் அறைக்குள் சென்றாள். நாற்காலியில் அமர்ந்தபடி காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த சந்திரா, அவள் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை. மேஜை மீது படத்தின் அருகில் ஒரு தட்டில் மாலையை எடுத்து வைத்துவிட்டு, மெல்லச் சப்தமிடாது இடைக்கதவைத் திறந்துகொண்டு தன்னுடைய அறைக்குள் வந்து தாழிட்டுக் கொண்டாள். அதற்குமேல் அவளால் தாங்க முடியவில்லை. கங்கை புரண்டு கொண்டு புறப்பட்டுவிட்டதுபோல் கண்ணீர் பொங்கி மாலை மாலையாக அவளது அழகிய கன்னங்கள்மீது வழிந்தோடத் தொடங்கியது. நெஞ்சு வெடித்துவிடும் போல் பிறீக்கொண்டு புறப்பட்ட துன்பம் பெரும் விம்மல்களாக வெளிவந்தது. இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு படுக்கைமீது உட்கார்ந்து விட்டாள்.

கிழவர் சிந்தாமணிக்கு அவள் எவ்விதத் தீங்கும் செய்யவில்லையே? ஏன் அவர் இவ்வாறு அவள் மனம் புண்படப் பேசவேண்டும்? எங்கு போனாலும் யாராவது ஒருவர் உருவத்தில் துன்பம் அவளை ஏன் பின் தொடர வேண்டும்? ஏன்? ஏன்? ஏன்?



மஞ்சுளா எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தாளோ தெரியாது. 'கிர்' என்று மின்சார மணி காதைப் பிளந்து விடும்படி பலமாக ஒலித்தது. திடுக்கிட்டு எழுந்து விட்டாள். கண்ணாடி முன் ஓடி, தன் அலங்கிய கூந்தலைக் கோதி சரிப்படுத்திக் கொண்டாள். அழுதது தெரியாதிருக்க லேசாக முகப்பவுடரைக் கொஞ்சம் பூசிக் கொண்டு, புதிதாக மறுபடி சிறியதாகக் குங்குமப் பொட்டு ஒன்றை வைத்துக் கொண்டாள். பரபரப்புடன் கதவைத் திறந்துகொண்டு எஜமானியின் அறைக்குள் ஓடிவந்தாள்.

சந்திராவுக்குப் பிறர் விஷயங்களில் தலையிடும் பொல்லாத குணம் ஏதும் கிடையாது. மஞ்சுளாவின் வாடிய முகத்தையும் சிவந்த கண்களையும் கண்டபோது அவள் நெஞ்சு துணுக்குற்று விட்டது. ஆனால் 'ஏன் அழுதாய்?' என்று விசாரிக்க முன் வரவில்லை. பிறரிடம் சொல்லிக்கொள்ள முடியாத எத்தனையோ துன்பங்கள் பெண்களின் பிறப்புரிமையாக யுகயுகமாக இருந்து வருகின்றன. பெண்ஜன்மம் அவைகளை அழுதழுதுதானே ஆற்றிக் கொள்ள வேண்டும்.

வற்றாத அன்பும் கருத்தும் வாஞ்சையும் காட்ட அன்புமிக்க அன்னையும் தந்தையும் இருக்கும்போது, செல்வத்தின் சுகத்தின் நடுவே உட்கார்ந்து கண்ணீர் வடிக்க அவளுக்கே பல காரணங்கள் இருந்தன. அப்படியிருக்கையில் ஏழைப்பெண் மஞ்சுளா, யாருமற்ற அநாதை. எத்தனையோ துன்ப நினைவுகள் அவள் கண்களைக் கலங்கச் செய்யலாம். அவைகளைப் பற்றிப் பிறரிடம் எடுத்துச் சொல்லி ஆறுதல் அடைய முடியாத ரகசியங்கள் இருக்கலாம். அதைப் பற்றித் துருவிக் கேட்க நமக்கென்ன உரிமை என்று எண்ணியபடி, பத்திரிகையிலிருந்து தலையை நிமிர்த்தாது, ''ஒன்றுமில்லை, ஒரு விஷயம்.... உன்னிடம் கூறத்தான் மணியை அடித்தேன். நாளை வண்டிக்கு அப்பா, சித்தி முதலியோர் வெளியூரிலிருந்து வருகிறார்கள். அதனால் நாம் வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே எழுந்து அவர்களை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும்'' என்றாள்.

பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள் போல், ''மஞ்சு!

இங்கே வா'' என்று அன்பாக அழைத்தாள்.

மஞ்சுளா அவள் அருகில் நகர்ந்து நின்றாள். ஆனால் இன்னமும் தலையை நிமிர்த்தி எஜமானியைப் பார்க்க அவளுக்குத் துணிவிருக்கவில்லை.

பத்திரிகையை மடித்து அப்பால் வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு சந்திரா தொண்டையைக் கனைத்து விட்டு, ''மஞ்சு! உன்னிடம் நான் ஒரு சிறு உதவியை எதிர்பார்க்கிறேன். நீ கட்டாயம் மறுக்கக்கூடாது. நாளைக் காலையில் சித்தி இங்கே வந்ததும், புதிதாக வேலைக்கு வந்துள்ள உன்னைப் பற்றி விசாரிப்பார்கள். ''நீ கங்கம்மா அத்தைக்கு ஏதோ உறவு அதனால் அவர்கள் இங்கே எனக்கு உதவியாக இருக்க அனுப்பி வைத்தார்கள் என்று ஒரு பொய்யை சொல்லப் போகிறேன். சித்தி உன்னைத் தனியே இதைப் பற்றிக் கேட்டால், நீயும் ஆமாம் என்று சொல்லிவிடு. இந்த உதவி எனக்கு மிக முக்கியமானது. மறுக்க மாட்டாயே?'' என்று குழைவாகக் கேட்டுவிட்டு, அவள் கரத்தை அன்போடு பற்றிக் கொண்டாள்.

மஞ்சுளா ஒடுக்கிட்டுப் போய்விட்டாள். ''பொய்யா சொல்லச் சொல்கிறீர்கள்? அது தவறாயிற்றே. இல்லாததைக் கற்பித்துச் சொன்னால் அனாவசியமான கஷ்டங்கள் ஏற்படுமே? மேலும் எனக்கு வீணாகப் பொய் சொல்லப் பிடிக்காதே'' என்று பயத்துடன் குழறினாள்.

''மஞ்சு! கட்டாயம் இந்த உதவியை நீ எனக்குச் செய்தாகவேண்டும். மறுக்கக் கூடாது. எனக்குச் செய்யும் பணி விடைகளில் இதுவும் ஒன்று எனக்கருதி, நீ பயப்படாமல் எனக்காக ஒரு சிறு பொய்யைச் சொல்லிவிடு. உனக்கு அதனால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது. ஆனால் நீ இவ்வாறு சொல்லாவிட்டால் எனக்குத்தான் பெரிய ஆபத்து ஏற்படும்'' என்றாள்.

மஞ்சுளாவிற்கு ஒன்றும் புரியவில்லை. ஏற்கனவே பலவும் எண்ணி வருந்திக் கொண்டிருந்த அவள் மனம் மேலும் அதிகக் குழப்பத்தை அடைந்தது.

வேண்டா வெறுப்பாக 'சரி' என்று ஒப்புக்கொண்டாள்.



ஆனால் அன்று முழுவதும் அவள் மனச்சாட்சி அவளைத் துன்புறுத்திக்கொண்டே இருந்தது உண்மை. முன்பின் தெரியாத ஸ்ரீமதி நாராயணனிடம் அவள் ஏன் ஒரு பொய்யைச் சொல்லவேண்டும்? ஏன்? அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆழந்தெரியாத ஒரு ஆற்றிலே காலை வைத்துவிட்டோம் என்றதொரு பயங்கர உணர்ச்சி அவள் உள்ளத்தை உலுக்கத் தொடங்கிவிட்டது.

## 26

ஸ்ரீமான் நாராயணனின் குடும்பத்தாருக்கு 'ஆனந்த நிலையம்' சொந்தமாவதற்கு முன்பு அது பிரபல கலாரசிகரான ஜமீந்தார் ஒருவருடைய கேளிக்கிரகமாக இருந்தது. அவர் காலமானதும் பதவிக்கு வந்த அவரது தனயன் தகப்பனார் தனக்குவிட்டுப் போன எண்ணற்ற அசையாப் பொருள்களை அசைகின்ற பணமாக மாற்ற விழைந்தான். ஆகவே அவசரமாக அந்த அழகான மாளிகையை மிகவும் குறைந்த விலைக்கு விற்றுவிட்டான். பலர் கைகள் மாறி, அது முடிவில் ஸ்ரீமான் நாராயணனுடைய காலஞ்சென்ற முதல் மனைவியின் சீதனச் சொத்தாக மாறி அக்குடும்பத்திற்குச் சொந்தமாகி விட்டது. பழம் பெருமையும் நல்ல களையும் நிறைந்த அந்தக் கட்டடத்தின் அழகைக் கெடுக்க மனமின்றி, புதிதாகக் கொஞ்சம் சுண்ணாம்பு அடித்து வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டு ஸ்ரீமான் நாராயணன் ஆரம்பத்தில் அதில் குடியேறிவிட்டிருந்தார். ஆனால் அவரது மூன்றாவது மனைவியான சௌமினி அம்மாளுக்குப் பழமைகளில் அதிகப் பிடித்தம் இருக்கவில்லை.

தமது இளம் மனைவியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் நிமித்தம் ஸ்ரீமான் நாராயணன் மாளிகையின் முன்பாகத்தை இடித்து அதிகப் பொருட் செலவில் அதைத் திருத்திச் சமீபத்தில்தான் கட்டி முடித்திருந்தார். அதன் பயனாக ஆனந்த

நிலையம் முன் பக்கத்தில் நவீன பாணியில் கட்டப்பட்ட பங்களா போலவும் பின்பாகத்தில் பழங்காலத்துக் கூடம் தாழ்வாரங்கள் அமைந்த பெரிய மாளிகை போலவும் பழமையும், புதுமையும் ஒன்று கலந்து பொலிவுடன் விளங்கியது. ஆனால் ஜமீன்தார் காலத்திலிருந்து ஒவ்வொருவர் கையிலும் மாறியபோதும் தனது உருமாறாது இருந்த கண்ணாடிச் சரவிளக்கு, ரத்தினக் கம்பளங்கள், பளிங்குச் சிலைகள் முதலியவற்றைப் பழங்காலத்துக் குப்பை என்று வீசி எறிந்துவிட சௌமினி அம்மாளுக்கு மனம் வரவில்லை. செல்வத்தின் செருக்கை விளம்பரப்படுத்த இப்பொருள்கள் தேவையாக இருக்கும் என அவற்றை அப்புறப்படுத்தாது அப்படியே விட்டு வைத்திருந்தாள்.

அதே காரணத்தினால் தோட்டத்தின் பின்புறத்தில் பங்களாவிற்குச் சற்றுத் தொலைவாக மா, வேம்பு முதலிய மரங்களிடையே அமைந்திருந்த விருந்தாளி விடுதி இடித்துத் தள்ளப்படாது விடப்பட்டிருந்தது. ஆனால் அதில் ஒரு சிறுமாற்றம் ஏற்படுத்தியிருந்தாள் எஜமானியம்மாள். ஜமீன்தாருக்கு நெருங்கிய உறவினர்களும், சிநேகிதர்களும் வந்து தங்கி இளைப்பாறி, உண்டு களித்து உறவாடிவிட்டுப் போகும் நிமித்தம் சகல சௌகரியங்களுடன் நிர்மாணிக்கப் பட்டிருந்த அந்த அழகிய சிறு வீடு, வேலைக்காரர்களின் வாசஸ்தலமாக மாறிவிட்டிருந்தது. ஆயினும் விடுதி முழுவதையும் வேலைக்காரர்களுக்கு வசிக்கக் கொடுத்துவிட எஜமானி அம்மாளுக்கு மனம் வரவில்லை. தங்களுக்கு வேண்டாத, ஆனால் தூக்கி எறிய மனமற்ற பீரோ, நாற்காலி போன்றவைகளை ஒரு சில அறைகளில் அடைத்துப் பூட்டி வைத்துவிட்டு, பெரியதான இரண்டு அறைகளையும் ஒரு சிறு ஹாலையும் வேலைக்காரர்கள் உபயோகத்திற்காகக் கொடுத்து விட்டிருந்தாள்.

ஆனந்த நிலையத்தில் வேலை பார்த்து வரும் பெரும்பாலான ஆட்கள் இரவு நேரங்களில் தங்கள் இல்லத்திற்குப் போய் விடுவது வழக்கமாதலால் அந்த விருந்தாளி விடுதியை நான்கே வேலையாட்கள் தான்



உபயோகித்து வந்தனர். சமையற்காரக் கிட்டாவும், டிரைவர் சிந்தாமணியும் இடது பக்கமிருந்த பெரிய அறையைப் பகிர்ந்து கொண்டு வசித்தார்கள். வலது புறமிருந்த சற்றே சிறிதான அறையை எடுப்பு வேலை செய்து கொண்டிருந்த வச்சிர வேலுவும், கிட்டாவின் உதவியாளான அம்பிப் பயலும் உபயோகித்தனர். இரு அறைகளுக்கும் நடுவில் இருந்த சிறு ஹாலைத்தான் இந்நால்வரும் படுக்கும் இடமாகப் பொதுவாக உபயோகித்தனர்.

சாதாரணமாக பகல் முழுவதும் இந்நால்வருக்கும் பங்களாவில் மூச்சுவிட நேரமின்றிக் கவனிக்கப் பல காரியங்கள் இருந்ததனால், இரவில் அவர்கள் படுக்கப்போகுமுன்தான் ஒருவரையொருவர் சந்தித்துப் பேச அவகாசம் இருந்தது. ஹாலின் பளிங்குத் தரைமீது ஜமக்காளத்தை விரித்துக்கொண்டு, விடிய விடிய பேச உட்கார்ந்து விடுவார்கள்.

அன்றாடம் அவரவர்கள் தொழிலில் ஏற்பட்ட விசித்திர அனுபவம், ஊரில் நடக்கும் விஷயங்கள் இத்தியாதிகளைப் பேசி நேரம் போவது தெரியாமல் சிரித்து மகிழ்வார்கள். இந்நால்வரில் சிந்தாமணிதான் வயதில் பெரியவர். அந்த வீட்டில் நீண்ட காலம் வேலை செய்கிறவர் என்ற அனுபோக உரிமை வேறு கொண்டவர். எனவே, மற்ற மூவரும் அவரிடம் கொஞ்சம் மரியாதை வைத்திருந்தனர். அடுத்தபடியாக நீண்டநாள் அனுபவசாலி சமையற்காரக் கிட்டாவாதலால், அவருக்கும் மற்ற இருவர் மிக்க மதிப்புக் கொடுத்தனர். மற்றவர்களைவிட சமீப காலத்தில்தான் அங்கு வேலைக்கு வந்தவன் அம்பிப் பயல். அனந்தராமன் என்ற அழகான பெயர் திரிந்து அம்பியாக மாறி, பதினேழு வயதைத் தாண்டிய பாலகன் என்ற காரணத்தால் எல்லோருக்கும் அவன் அம்பிப் பயலாகத் திகழ்ந்து கொண்டிருந்தான். வச்சிரவேலு இருபத்தைந்தாவது வயதை எட்டிக் கொண்டிருந்த இளைஞன். பத்து வருஷங்களுக்கு மேலாக அங்கே தொடர்ந்து வேலை பார்க்கிறான்.

சிந்தாமணி, கிட்டா இருவரிடமும் அவனுக்கு மிகவும்

அன்பு உண்டு. அவர்களிருவரின் பொரிசின் பேரில் அந்த வீட்டில் அவனுக்கு நல்ல ஊதியம் உள்ளதொரு வேலை கிடைத்தது என்ற விஷயத்தை ஒருநாளும் அவன் மறக்கவில்லை. இந்த நால்வரும் ஒரே பங்களாவில் வேலை செய்கின்றவர்கள் என்ற ஒரு காரணத்தினால் ஒற்றுமையாக அவ்விடத்தில் வசித்தனர் என்பது ஒருபுறமிருக்க இவர்களை வேறு ஒரு விஷயமும் ஒன்றாகப் பிணைத்திருந்தது. சங்கீதம் என்றால் இந்த நால்வருக்கும் உயிர். ஏழைகளாகப் பிறந்து விட்டதன் பலனாக அந்தக் கலையைப் பொருட் செலவிட்டு கற்றுக் கொள்ளவோ, அனுபவிக்கவோ முடியவில்லை என்ற போதிலும், கேள்வி ஞானத்திலும், இயற்கையாகவே ரத்தத்தில் ஊறிப் பிறந்த ஆர்வத்திலும் நால்வரும் நான்கு விதத்தில் கெட்டிக்காரர்களாகவே இருந்தனர்.

சமையற்காரக் கிட்டா ஆரம்பத்தில் கொஞ்ச நாட்கள் ஒரு நாடகக் கம்பெனியில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தார். 'சங்கடமான சமையலை விட்டு சங்கீதம் பாடும்' சந்தர்ப்பங்கள் அவருக்கு அடிக்கடி அங்கே ஏற்படுவது உண்டு. சில்லறை வேடங்கள் போடுகின்ற ஆசாமிகளுக்குப் பஞ்சம் ஏற்படும்போது, நாடகக் கம்பெனியின் அதிபர் சமையலறைக்கு ஓடிவந்து கிட்டாவைக் கெஞ்சுவார். இதுதான் சமயமெனக் கிட்டாவும், உற்சாகத்துடன் கரண்டியைக் கீழே போட்டுவிட்டு, நாரதராகவும், மந்திரியாகவும் பல வேடங்களில் மேடைமேல் தோன்றிவிடுவது வழக்கம்.

இந்தச் சிறு அனுபவங்களும், அப்போதைக்கப்போது பிரபல நாடகக் கலைஞர்களின் தொண்டையிலிருந்து உதிர்ந்த பாடல்களைக் காதில் வாங்கிக் கருத்தில் பதிய வைத்திருந்ததன் பயனாகவும் அவருக்குக் கொஞ்சம் பாடத் தெரிந்திருந்தது. போதாதற்கு கரகரப்புக் கலந்த ஒரு கம்பீரமான சாரீரம் இயற்கையாகவே அமைந்திருந்ததனால், பிரபல சங்கீத வித்வான்கள் பாடுவதுபோல் அப்படியே அதே உருட்டல், பதுக்கல், குலுக்கலுடன் பாடக்கூடிய ஒரு தனித்திறமையும் அவரிடம் குடி கொண்டிருந்தது.

நாடக மேடைகளிலும், இசைத் தட்டுக்களிலும்,



புத்தகங்களிலும் பொறுக்கி எடுத்த பக்தி ரசக் கீர்த்தனங்களிலிருந்து காவடிச் சிந்து, நாட்டுப் பாடல்கள் முதலிய பலவற்றையும் கிட்டா கவனம் செய்து வைத்திருந்ததனால் அந்நால்வரில் சங்கீத வித்வானாகத் திகழ்ந்தார்.

டிரைவர் சிந்தாமணிக்குச் சுமாராகப் பிடில் வாசிக்கத் தெரியும். இருபது வருஷங்களுக்கு முன் ஒரு சங்கீதக் கலைஞரிடம் ஒரு பிடிலை வாங்கி, கொஞ்ச நாட்கள் ஒழிந்தபோது அதை வாசிக்கவும் கற்றுக் கொண்டிருந்தார். ஆகவே அவர் கிட்டாவின் வாய்ப்பாட்டிற்குப் பிரபல பக்க வாத்தியக்காரராக அமைந்ததில் வியப்பில்லை. பாட்டன் முப்பாட்டன் என வழிவழியாக மிருதங்க வித்வான்களாக விளங்கிய பரம்பரையில் பிறந்தவன் வச்சிரவேலு. நாலு வயதிலேயே மிருதங்கம் வாசிக்கும் ஒரு தனித்திறமையும் ஆவலும் அவனிடம் காணப்பட்டன. ஆனால் சரியாக ஊக்கமும் உற்சாகமும் இல்லாததனால் பரம்பரைத் தொழிலை உதறிவிட்டு, ஏவிய பணி செய்யும் எடுபிடி ஆளாக ஆனந்த நிலையத்தில் வேரூன்றி விட்டிருந்தான்.

எனினும் ரத்தத்தில் ஊறியிருந்த அந்தக் கலையை மறக்க முடியாது பரம்பரைச் சொத்தான ஒரு பழைய மிருதங்கத்தை வைத்துக்கொண்டு சமயம் வாய்த்த போதெல்லாம் சப்த ஜாலங்கள் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அம்பிப் பயலுக்கு உடையாத இளங்குரல். அவன் பாடினால் யாரோ பெண்மணி பாடுவது போன்று பிரமிப்பூட்டுவதாக இருக்கும். கிட்டாவுடைய கரகரத்த குரலுக்கு எதிராக 'டூயட்' பாட உதவியாக இருந்ததனால் அந்த கோஷ்டியில் அவனும் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருந்தான்.

ஆனந்த நிலையத்தில் சாதாரணமாக வார நாட்களில் வேலையாட்கள் படுக்கப் போவதற்கு இரவு பத்து மணியாகிவிடும். ஓடி ஓடிப் பரிமாறி, இடுப்பும் முதுகும் நோவு எடுத்திருக்கும் கிட்டாவிற்கு, எப்பொழுது கட்டையைக் கீழே சாய்ப்போம் என ஒரே அலுப்பாக இருக்கும். தமது

படுக்கையைக் கொண்டுவந்து ஹாலின் பளிங்குத் தரைமீது விரித்துவிட்டு, போர்வையை இழுத்து மூடிக்கொண்டு சாய்ந்து விடுவார். ''என்னப்பா வச்சிரவேலு, காலையிலே வாயில் ஈ புகுந்தது தெரியாது எங்கேயோ ஓடிக்கொண்டிருந்தாயே? என்ன விசேஷம்?'' என்று கேட்டு விட்டுக் கண்களை மூடிக்கொண்டு விடுவார். வச்சிரவேலு வாயைத் திறக்குமுன் கிட்டா 'கர்கர்' என்ற குறட்டை ஒலியைக் கிளப்பிவிட்டுக் கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார். ஆனால் சிந்தாமணி சட்டென்று உறங்கிவிட மாட்டார். படுக்கையைத் தட்டிப் போட்டு விட்டு வச்சிரவேலுவும் அம்பிப் பயலும் அளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்ந்தபடி வெற்றிலையைக் கவுளிக்கணக்கில் அரைத்துக் கொண்டிருப்பார். சங்கீதத்திற்கு அடுத்தபடியாக சிந்தாமணி விரும்பிய விஷயம் வெற்றிலை பாக்கு.

''வேலை செய்யும்பொழுது வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு நிற்காதீர்கள்! பார்க்கச் சகிக்கவில்லை'' என்று எஜமானியம்மாள் அந்த பங்களாவிற்குள் காலடி எடுத்து வைத்த நாளே அவருக்கு கடும் உத்தரவு போட்டுவிட்டாள்.

அதனால் படுக்கப்போகுமுன் தான் அவர் விரும்பியதை ரசிக்க முடிந்தது. நாள் முழுவதும் போடாத வெற்றிலைகளையும் சேர்த்து ஒரேயடியாகக் கவுளிக் கணக்கில் ஆசை தீர மென்று விழுங்கி விட்டுத்தான் உறங்கப்போவது என்ற வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். எனவே அவருக்குப் பேசுவதற்கு அதிக நேரம் இருப்பதில்லை. வாயை அசைத்தபடி மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு ரசித்துப் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பது வழக்கமாக இருந்தது. அநேகமாக இம்மூவரும் உறங்கப் போவதற்கு இரவு ஒரு மணிக்கு மேலாகிவிடும். பேச்சு சுவாரஸ்யத்தில் இவர்கள் ஒரு நாளும் நேரத்தைப் பற்றிக் கவலைப்பட்டவர்கள் இல்லை.

வார நாட்களை வம்புக் கச்சேரியில் ஓட்டிவிட்டிருந்த இவர்கள், சனிக்கிழமை இரவை மட்டும் பாட்டுக் கச்சேரி இரவாக வைத்துக் கொண்டிருந்தார்கள். தூக்கத்தை விரட்டியடிக்கும் நிமித்தம் சமையலறையைச் சாத்திக் கொண்டு



கிளம்புமுன் சூடாக ஒரு டம்ளர் நல்ல காப்பி தயார் செய்து சாப்பிட்டு வந்துவிடுவார் கிட்டா. பிறகு தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஜமக்காளத்தின் மேல் பெரிய பாகவதரைப்போல் மிகவும் ஆடம்பரமாக அமர்ந்துகொண்டு விடுவார். சிந்தாமணியும், வச்சிரவேலுவும் பக்க வாத்தியங்களைக் கோஷிக்க, அம்பிப்பயலும் கிட்டாவும் மாறி மாறிப் பாட, கச்சேரி நீண்டுகொண்டே போகும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு தினமாகையினால் அவசரமாக எழுந்து விட்டு ஆண் பிள்ளைகள் அலுவலகத்திற்கு ஓடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை என்ற நிம்மதியில் நான்கு பேர்களும் சூரியன் உதித்து வெகுநேரம் சென்றதும் எழுந்திருக்க மனமின்றி மெல்லப் புரண்டு நெளிந்து கொண்டிருப்பார்கள். இந்த ஒரு இன்பத்திற்கும் இளைய எஜமானி வந்த பின்பு தடையுத்தரவு போடப்பட்டு விட்டது.

''வயதில் நீர் பெரியவர். பல வருஷங்களாக வேலை செய்கிறீர்கள். மற்றவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டியவர். நீரும் சேர்ந்து கும்மாளம் போடுகிறீர்களே? காச்சு மூச்சென்று காதுபிளக்க நீங்கள் ராத்திரி முழுவதும் கத்திக் கொண்டிருந்தால் நாங்கள் எப்படித் தூங்குவது? ஞாயிற்றுக் கிழமை என்றால் எட்டு மணிக்குமேல் தான் எழுந்திருக்க வேண்டுமா?'' என்று ஒருநாள் சிந்தாமணியிடம் எஜமானியம்மாள் மிகவும் கடுமையாகப் பேசிவிட்டாள்.

அதனால் எஜமானரும் அம்மாளும் ஊரில் இல்லாத சமயங்களில் விடியவிடிய கச்சேரி செய்து மகிழ்ந்தார்கள்.

அன்று இரவு தமது வேலை முடிந்ததும் சிந்தாமணி உறங்குவதற்காக விருந்தாளி விடுதிக்குள் நுழைந்தார். அவருக்கு முன்பே அங்கு வந்திருந்த கிட்டா தயாராகப் படுக்கையை விரித்து, அதன்மீது அமர்ந்தபடி, ஆழ்ந்த யோசனையில் மூழ்கினார். தமது படுக்கையையும் அவர் அருகே போட்டுக்கொண்டு வெற்றிலைப் பெட்டியுடன் உட்கார்ந்தார் சிந்தாமணி. பெட்டியைத் திறக்கக்கூட அவருக்கு உற்சாகமிருக்க வில்லை. அவர் உடலும் மனமும் சோர்ந்து விட்டிருந்தன.

''எங்கே இந்த இரண்டு பசங்கள்?'' என்று வினவினார் ஆயாசத்துடன். அவர் குரலில் கவலை தோய்ந்துகிடந்தது. பற்பல விஷயங்களை எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த கிட்டாவை நித்திரை கூட அண்ட மறுத்துவிடவே அவர் நண்பரைக் கண்டதும் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தார்.

''நேற்று வரை நம் இஷ்டப்படி பாடி ஆடி மகிழ்ந்தது போதும் என்று அவர்கள் இருவரையும் இன்று சினிமாவிற்கு அனுப்பி வைத்தேன். இரண்டு பசங்களும் என் பேரைச் சொல்லிப் பார்த்துவிட்டு வரட்டும் என்று நானே பணம் கொடுத்து அனுப்பினேன். தொலையட்டும்! இந்த வயதில் இதையெல்லாம் அனுபவிக்காது, உம்மையும் என்னையும் போல் வயதான பிறகா அனுபவிக்கப் போகிறார்கள்?'' என்றார் கிட்டா விளையாட்டாக.

## 27

கவலைத் திரைகளுக்கிடையே இதைக் கேட்டதும் சிந்தாமணியின் முகத்தில் ஒரு சிறு இளநகை அரும்பி மறைந்தது. ''நீ நல்ல பசங்களையும் குட்டி சுவராக்கி விடுவாய் போலிருக்கிறதே? கையில் நாலு காசு சேர்த்து வைத்துக் கொள்ளவேணும் என்ற எண்ணமே உனக்கு ஒரு நாளும் இருந்ததில்லை. திடீரென்று ஒருநாள் எஜமானி சீட்டுக் கொடுத்து விட்டால் நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியவில்லை'' என்று அன்புடன் கடிந்துகொண்டார். வயதில் சிந்தாமணி மூத்தவர். எனவே கிட்டா அவரை 'அண்ணா' என்றே எப்பொழுதும் மரியாதையுடன் அழைப்பது வழக்கம். மேலும், இருபத்தைந்து வருஷங்களாக இருவரும் நெருங்கிப் பழகிவிட்டதனால் ஏற்பட்ட வாஞ்சை காரணமாக அவர்களைப் பரஸ்பரம் கூடப்பிறந்த சகோதரர்களாகவே கருதச் செய்து விட்டிருந்தது.

கிட்டா அன்புடன் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு, தமது



பற்களை அனைத்தும் தெரிய மெல்லச் சிரித்தார். ''என்னுடைய கொள்கை அண்ணாவுக்குத் தெரியும். எனக்கு அப்படியே கஷ்ட காலம் வந்துவிட்டாலும் பம்பாயில் உள்ள என் பெண் மீனாவிடம் போய் விழுந்து விடுவேன். என் மாப்பிள்ளை ரொம்பத் தங்கமானவன். இப்போதே தங்களிடம் வந்து இருக்கும்படி அவர்கள் இருவரும் என்னை எவ்வளவு வேண்டிக் கடிதங்கள் போடுகிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரிந்ததுதான். கையும் காலும் உறுதியாக இருக்கையில் பிறருக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்பதற்காக, எத்தகைய அவமானங்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரிந்ததுதானே அண்ணா'' என்றார் திடமான குரலில்.

பிறகு சிந்தாமணி தொடர்ந்தார்: ''வேறு இடங்களில் வேலை கிடைக்காது என்பதால் இல்லை, இந்தக் குழந்தைகள் சந்திரா, கிரிதரன் இவர்கள் மீது வைத்துவிட்ட பாசம் நம்மை இங்கேயே விழுந்துகிடக்கச் செய்துவிட்டது. இல்லாவிட்டால் இந்தத் தாடகையம்மாள் வீட்டில் கால் வைத்த மறுநாளே நம்மில் அநேகர் வேலையினின்று பிய்த்துக்கொண்டு வெளியேறியிருப்போம்'' என்று கூறிவிட்டு, ஆயாசத்துடன் பெருமூச்செறிந்தார்.

''நாளைக் காலை வண்டியில் எஜமானியம்மாள் வருகிறாள் என்றதுமே ஆனந்த நிலையத்தில் நிலவியிருந்த ஆனந்தமே அஸ்தமித்து விட்டது! இனி சமையலறையில் நான் உரக்கக் கூடப் பேச முடியாது. நினைத்தபோது ரேடியோவைப் போட்டுச் சற்றுப் பாட்டுக் கேட்கக்கூட முடியாது. இருமினால் தப்பு, தும்மினால் குற்றம் என்று பயந்து சாகவேண்டும். போன ஜன்மத்தில் இவள் என்ன பிறவியோ? சங்கீதம் அவளுக்கு அத்தனை வெறுப்பாக இருக்கிறது!'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டுப் பகபக வெனச் சிரித்தார் கிட்டா.

''வெறுப்பு ஒன்றும் இல்லை. தனக்குப் புரியாத ஒரு கலையில் பிறர் உற்சாகம் காட்டக்கூடாது என்ற பொறாமை. ஏன், எஜமானி அம்மாள்கூடக் கொஞ்சநாள் வந்த புதிதில் சங்கீதம் கற்றுக்கொள்ள முயற்சித்து, ஒரு வீணையை வாங்கி,

பிறகு அதை மூலையில் கட்டி வைக்க வில்லையா? அதை மறந்தா போய்விட்டாய்?'' என்று கேட்ட சிந்தாமணி, மெல்ல வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார். கிட்டா பேச்சு சுவாரஸ்யத்தில் போர்வையைத் தூர வைத்துவிட்டு நன்றாக நிமிர்ந்து இன்னும் சற்று நெருங்கி, நண்பர் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''போயும் போயும் நம் எஜமான் வயது காலத்தில் இப்படி ஒரு பிசகு செய்வாரா? அதை நினைத்து நான் அதிசயப்படாத நாளே இல்லை...'' என்று கோபத்துடன் முடிக்காது நிறுத்தினார் கிட்டா.

வெற்றிலையை நரம்பு கிழித்துச் சுருட்டி வாயில் அடக்கிக் கொண்ட சிந்தாமணிக்கு உடனே பேச முடியவில்லை. அவசரமாக அதை மென்று விழுங்கிவிட்டு, ஆத்திரத்துடன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தார்.

''அவர் தம்மை வயதானவராக எண்ணிக் கொண்டால் தானே? துள்ளித் திரிகின்ற கட்டிளங் காளை என்ற நினைப்பு அவருக்கு! அம்மாவுடன் காலை வேளையில் அவர் ஓடி ஓடி டென்னிஸ் விளையாடுவதைப் பார்த்தால், அவரை யாராவது அறுபத்தைந்து வயதைத் தாண்டியவர் என்று சொல்ல முடியுமா? சின்னப் பெண்சாதிக்குச் சரியாக இவர் போடுகிற வேஷத்தையெல்லாம் பார்க்கும்போது எனக்கு மட்டும் துக்கத்திலே நெஞ்சு பிளக்கிறது.

''அந்தம்மா அகிலாண்டம் இருந்தார்களே, புண்ணியவதி! எதிரே வந்துகூட நிற்கமாட்டார்கள். அத்தனை அடக்கம். பெற்றோருக்கு ஒரே பெண். பெரிய இடமாதலால் செல்லமாக வளர்ந்தவர். போன ஜன்மத்தில் செய்த தூர்வினைப் பயனால் இந்தத் துஷ்டருக்கு மாலையிட்டார்கள். அந்தக் காலத்தில் இந்த மனிதர் ஆடிய ஆட்டம் கொஞ்சமா நஞ்சமா? கண்ணும் கண்ணீருமாக அந்த உத்தமியை உருகிச் சாக வைத்துவிட்டார். பொறுமையும் அழகும் உள்ள பெண்டாட்டி வீட்டிலிருக்கையில் குழந்தைகள் இல்லை என்ற சாக்கை வைத்துக் கொண்டு இரண்டாவது கல்யாணம் செய்து கொண்ட



கல் நெஞ்சக்காரர் இவர். முத்துக்கள் போல் அழகாகப் பிள்ளையையும் பெண்களையும் பெற்றுக் கொடுத்துக் கூட அகிலாண்டாம்மாள் துளியும் சுகம் பெறவில்லை. எனினும் அந்த அம்மா இரண்டாவது மனைவி விட்டுப் போன குழந்தை ஜகதீசனைத் தன் பிள்ளையாகப் பாவித்து எடுத்து வளர்த்து ஆளாக்கினார்கள். தன் பிறந்த வீட்டுச் செல்வமனைத்தையும் புருஷன் காலடியில் வைத்து வணங்கினார்கள். என்ன செய்தும் உயிருடன் இருந்தவரை ஆனந்தம் என்பதைக் கடுகளவுக் கூட அவர்கள் காணவில்லை'' என்றார் துயரத்தில் தடைப்பட்ட மெலிவிய குரலில்.

இது சமயம் கிட்டாவிற்கு ஒரு சிறு சந்தேகம் வந்து விட்டது. ''ஆமாம் அண்ணா! நம்ப எஜமான் ஓரேயடியாக இளைய மனைவி மோகத்தில் மூழ்கிக் கிடக்கிறார். அந்த அம்மாளோ பெரிய ஆசாமியாக இருக்கிறார்கள். கிழவர்மீது சொக்குப் பொடியைத் தூவிவிட்டு, சகல சொத்துக்களையும் தன்மேல் எழுதி வாங்கிக்கொண்டு விட்டால் சந்திராவின் கதி என்ன ஆகும்? ஆண்பிள்ளைகள் இருவரும் எப்படியோ பிழைத்துப் போவார்கள். பாவம் அந்தப் பெண் நடமாடக்கூட முடியாது இருக்கும் நிலையில் கவனிப்பாரற்றுப் போய்விட்டால்...? இதை நினைத்து எனக்கு அடிக்கடி பெரும் கவலை ஏற்பட்டு விடுகிறது'' என்றார் விசனமாக.

கூஜாவிலிருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றி ஒரே மூச்சாகக் குடித்துவிட்டுக் கையைத் தட்டிக் கொண்டார் சிந்தாமணி. ''இந்த விஷயத்தை இதுவரை உன்னிடம்கூட நான் சொன்னதில்லை'' என்று கூறிவிட்டு மெல்ல சுற்று முற்றும் பார்த்தார். பிறகு குரலைத் தாழ்த்திக்கொண்டு, ''எஜமானருக்கு ஆதியில் தன்னுடையது என்று சொத்து ஏதும் கிடையாது. எல்லாம் அகிலாண்டம்மாளின் பிறந்தகத்துச் செல்வத்தின் தெம்பினால்தான் அவர் இந்த போக பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். ஏழைப் பையன், அடங்கியிருப்பான் என எண்ணி மருமகனாக வரித்துவிட்டார்கள் அகிலாண்டம்மாளின் பெற்றோர்கள். மாப்பிள்ளையின் உண்மையான குணம் புலனாகியதும்

விழித்துக் கொண்டுவிட்டார்கள். 'தங்களுக்குப் பிறகு தங்கள் சொத்து முழுவதும் தமது பெண்ணின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கு' என்று உயில் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார்கள். இந்த வீடு கூட ஐயாவுக்குச் சொந்தமில்லை தெரியுமா? இருக்கிறவரை அனுபவிக்கலாம். அவருக்குப் பின்னர் ஆனந்தநிலையம் சந்திரா, கிரிதரன் இருவருக்கும் சொந்தமாகிவிடும். அதனால்....'' என்று முடிக்குமுன் கிட்டாவினால் பொறுக்க முடியவில்லை.

''அப்படியானால் ஐயாவுடையது என்று ஆஸ்தி ஒன்றுமே கிடையாது என்றா சொல்கிறீர்கள்?'' என்று சந்தேகத்துடன் வினவினார்.

''முதல் மனைவி இரங்கி, கருணையுடன் கொடுத்து உதவிய கொஞ்சம் பணத்தை வைத்துக்கொண்டு இருபது வருஷங்களுக்கு முன்பு சொந்தமாக ஒரு சிறு வியாபாரம் ஆரம்பித்தார். அதிர்ஷ்டம் அவர் பங்கில் இருந்தது. தொட்டதெல்லாம் பொன்னாக மாறியது. அதனால் யுத்த காலத்தில் கொஞ்சம் காசு ஐயா கையில் ஏறிக்கொண்டு விட்டது. அதைக் கொண்டுதான் பிரமாண்டமான 'நாராயணன் கம்பெனி' என்று ஒன்றை ஸ்தாபித்து இரும்புப் பெட்டி வியாபாரத்தில் இறங்கிவிட்டார். சுக்கிர தசை நீண்டு கொண்டே போனதால் ஐயாவுக்குக் கோடையிலும், உதகையிலும் பங்களாக்கள் சொந்தமாயின.

''பாங்கிலும் கணக்கு அதிகரிக்கத் தொடங்கியது. அத்துடன் வாலிபமும் திரும்பிக் கொள்ளவே, மூன்றாவதாகத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் இந்த அம்மா ஐயாவுடைய சொந்த சம்பாத்தியத்தையும் ஒரே அடியாகத் தானே எடுத்துக்கொண்டுவிட முடியாது. ஜகதீசனுக்கு ஓரளவு இவர் சொத்தில் பங்கு கொடுத்தாக வேண்டும். பெரிய வியாபாரி, அரண்மனை போல் வீடு என்றெல்லாம் கணக்கு போட்டுக்கொண்டு கிழவரானால் போகட்டும் என்று துணிவுடன் சௌமினியம்மாள் இவரைக் கல்யாணம் செய்துக்கொண்டு விட்டார்கள். உள்ளே வந்து கணக்குப் பார்க்கும்போது விஷயம் வேறாக இருப்பது தெரிகிறது.



அதனால் அம்மாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. மூத்தவள் குழந்தைகளைக் காணச் சகிக்கவில்லை'' என்று சிந்தாமணி ஒரே மூச்சாக முடித்தார்.

''கணவனை மயக்கிப் பிடிப்பிடியாகப் பணத்தை வாங்கித் தன் மேனி மீது வைர அங்கியாக அடித்துப் போட்டுக் கொண்டிருப்பது போதாதா? ஊர் என்ன, பேர் என்ன என்று முன்பின் அறியாத ஆசாமிக்கு இதைவிட இன்னும் என்னதான் வேண்டும்?'' என்று கிட்டா கோபத்துடன் கேட்டார்.

''ஆசைக்கு அளவு உண்டா? எல்லாம் தன்னுடையதாக வேண்டும். மூத்தவள் குழந்தைகள் அனைவரும் அழிய வேண்டும் என்பது அந்த அம்மாளின் அவா. இது ஆனந்த நிலையமா? பொறாமை பொங்கி வழியும் 'அரக்கு மாளிகை' அப்பா! என்றைக்குத் தீப்பற்றி எரியப் போகிறதோ!'' என்று சிந்தாமணி துயரம் தாங்காமல் பெருமூச்செறிந்தார்.

''கிரிதரனுக்குக் கல்யாணமாகி விட்டால் ஒரு சமயம் சௌமினி அம்மாளின் கொட்டம் குறைந்து விடலாம். ஆமாம் அண்ணா! எனக்கு ஒரு விஷயம் தோன்றுகிறது.... வந்து'' என்று ஆரம்பித்த கிட்டா, சற்று சிந்தாமணி அருகில் மிக நெருங்கி வந்து உட்கார்ந்தார்.

பற்கள் அனைத்தும் தெரிய மெல்லச் சிரித்தபடி, 'அண்ணா! அந்தப் பெண் மஞ்சுளா....' என்று ஆரம்பித்தார்.

''உன்னுடைய சங்கதி எனக்குத் தெரியுமே! நீ நினைக்கிறது நடக்காத காரியம். அதனால் விஷயம் விபரீதமாவதற்குள் ஆரம்பத்திலேயே அணை போட்டுவிட்டேன். நீ செய்கிற காரியம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. நீ வேண்டுமென்றே அந்தப் பெண்ணிடம் வெந்நீரைக் கொடுத்து, கிரிதரன் இருக்கும் பக்கமாகப் பத்துத் தடவை நடக்க வைக்கிறதும் அடிக்கடி சமையலைப்பற்றிச் சந்தேகம் ஏற்படுவதுபோல் அழைத்து விசாரிப்பதும் எனக்குப் புரியாத புதிர் இல்லை. ஒன்று சொல்லி விட்டேன். உனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் நீ தலையிடாதே. வீண் பொல்லாப்பு வரும். முன் ஒரு தடவை இதுமாதிரி ஒரு காரியத்தில் நீ தலையிட்டுப் பெரிய

சண்டையை விலைக்கு வாங்கியது ஞாபகமிருக்கிறதா?'' என்ற கோபத்துடன் அதட்டினார் சிந்தாமணி.

## 28

சங்கீதம், சமையல் என்ற இரு கலைகளையும் தவிர கிட்டாவிடம் இன்னொரு அபூர்வ விஷயம் குடிகொண்டிருந்தது.

ஒரு அழகான பெண்ணையும் ஒரு நல்ல வாலிபனையும், ஒருங்கே பார்த்து விட்டால் போதும், அவ்விருவரையும் தம்பதிகளாக்கி விட்டுத்தான் அவர் மறுவேலை பார்ப்பார். பெண் வீட்டிற்கும் பிள்ளை வீட்டிற்கும் நடையாக நடந்து இடையே ஏற்படும் சண்டைச் சச்சரவுகள், விவாதங்கள் அனைத்தையும் தீர்த்து வைத்து, முடிவில் மங்களகரமாகத் திருமணத்தை நடத்தி வைத்து விட்டுத்தான் வெளிக்கிளம்புவார். இதனால் எத்தனை அலைச்சல் பணச்செலவு ஏற்பட்டாலும் சரி, கவலைப்பட மாட்டார்.

ஒரு சமயம் பங்களாவில் வேலை செய்துவந்த தோட்டக்காரன் மகன் கந்தசாமிக்கும், வீடுகூட்டும் வேலைக்காரி மாரியாயி மகள் வள்ளிக்கும் திருமணம் நடத்த அவர் மேற்கொண்ட முயற்சியில் அவருக்கு ஒரு பயங்கரமான அனுபவம் ஏற்பட்டது உண்மையே. கந்தசாமிக்கு ஏற்கெனவே ஒரு மனைவி உயிருடன் இருக்கும் விஷயம் இவருக்குத் தெரியாது. கிட்டா இருவர் சார்பிலும் தூது சென்று பேச்சு வார்த்தைகளை ஒருவழியாக முடித்து வைத்து விட்டார். கல்யாணத்திற்கு முதல்நாள் விஷயம் வெளிப்பட்டு விடவே, பெண் வீட்டவர்கள் கிட்டாவைத் தேடிக் கொண்டு அவரை அடிப்பதற்காகச் சமையற் கட்டிற்குள் படையெடுத்து விட்டார்கள்.

நல்லவேளையாக அதுசமயம் எஜமானரும் அம்மாளும்



கோடை வாசத்திற்குக் குளிர்ப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தார்கள். அதனால் அவரது வேலை அன்று பிழைத்தது. சமயத்திற்குச் சிந்தாமணி வந்து அதட்டி அவர்களை அப்புறப்படுத்தியதனால் அவர் உயிரும் மானமும் பிழைத்தன.

அதை இப்போது நினைத்துக்கொண்டு சிந்தாமணிக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''போன தடவை பட்டது உனக்குப் போதாதா அப்பா?'' என்று கோபமும் பரிகாசமும் கலந்த குரலில் அதட்டினார்.

''ஒரு தடவை ஏதோ எக்கச்சக்கமாகி விட்டது அண்ணா. இதற்குமுன் எத்தனை தடவை எனக்கு இம்மாதிரி விஷயங்களில் வெற்றி ஏற்பட்டிருக்கிறது. அதையேன் நினைக்க மாட்டேன் என்கிறீர்கள்'' என்றார் கிட்டா.

''டிரைவர் சின்னமுத்து, பூக்காரி பங்கஜம், கிளீனர் குமாரசாமி இவர்களுக்கெல்லாம் சாமர்த்தியமாகக் கல்யாணம் செய்து வைத்தாய். அதற்கு வேண்டுமென்றால் ஒரு பரிசுப் பத்திரம் எழுதிக் கொடுத்து விடுகிறேன். ஆனால் இதுவரை நீ வேலைக்காரர்கள் உலகில் வளைய வந்து கொண்டிருந்தாய். இப்பொழுது என்னவென்றால், வீட்டு எஜமானரின் விவகாரங்களிலேயே தலையிடத் தொடங்கி விட்டாய்! நெருப்போடு விளையாடினால் என்ன நடக்கும் தெரியுமா?'' எனக் கோபமாகக் கேட்டார் சிந்தாமணி.

''ரொம்ப பயமுறுத்துகிறீர்களே அண்ணா! அந்தப் பெண்ணும் நம்மைப்போல் ஒரு வேலைக்காரிதானே! அதனால் நான் ஒன்றும் பிசகு செய்யவில்லையே'' என்று பல்லை இளித்தார் கிட்டா.

''மங்களாவுக்கு கல்யாணம் செய்து வைத்துக் கண் குளிரப் பார்க்க உனக்கு ஆசையாக இருந்தால், அவளுடைய ஜாதகத்தை எடுத்துக்கொண்டு ஒரு மாதம் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்டு புறப்படு. ஊர் ஊராகத் திரிந்து ஒரு நல்ல படித்த பையனாகப் பார்த்து அவள் அந்தஸ்த்துக்குத் தக்கபடியான இடத்தில் நிச்சயம் செய். நான்கூட வேண்டுமானால் உதவி செய்கிறேன். ஆனால் நீ நினைக்கிறபடி

ஒன்றும் விஷயம் நடக்காது. வீணாக அந்த ஏழைப் பெண்ணின் வாழ்வைக் கெடுத்துவிடாதே. உன்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று படபடவென்று பேசினார் சிந்தாமணி.

''அண்ணா! அந்தப் பெண்ணின் அழகிற்கும், படிப்பிற்கும், அடக்கத்திற்கும் ஆகா!'' என்று வியப்புடன் கூறி விட்டுச் சிந்தாமணியைப் பார்த்து மேலே பேசாது மெல்லச் சிரித்தார் கிட்டா.

''நாடகங்களில் வேஷங்கள் போட்டு உன் புத்தி வெகுவாக மங்கி விட்டிருக்கிறது என நினைக்கிறேன். வள்ளியை சுப்பிரமணியர் வந்து மாலையிட்டார் என்றால், அவர் கடவுள். பழக்காரியை ஜமீன்தார் மணந்து கொண்டார் என்றால் அது நாடகக் கதை. இது வாழ்க்கை அப்பா வாழ்க்கை! மஞ்சுளாவும் நம்மைப்போல் ஒரு வேலைக்காரி. நீயும் ஒரு வேலைக்காரன். கனவு உலகத்திற்குத் தாவாதீர்கள். நிஜ உலகிலே நடவுங்கள், போதும். எனக்குக் கோபம் வந்தால் நான் என்ன செய்வேன் என்பது தெரியும் அல்லவா? நீ பச்சைக் குழந்தையல்ல. அதனால் நல்ல விவேகத்தோடு நடந்துகொள்'' என்று சினம் பொங்கிய குரலில் முடித்தார் சிந்தாமணி.

கிட்டாவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. ''அண்ணா! என் மனத்தில் இருக்கும் எண்ணம் எல்லாம் உமக்கு எப்படி தெரியும்? எக்ஸ்ரே கண்களா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டு விட்டுக் கடகடவென்று உரத்துச் சிரித்தார்.

''நீ அடிக்கடி அந்தப் பெண் மஞ்சுளாவிடம் கிரிதரனைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதை நான் கவனிக்காததுபோல் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். பெட்ரோலையும் நெருப்பையும் பக்கத்திலே வைத்து, 'பற்றிக் கொள்ளட்டும்' என்று யாரும் பிரார்த்திக்க வேண்டாம். அதுபோல, ஒரு சுதந்தரமான கல்யாணமாகாத வாலிபன் அருகே ஒரு அழகான பெண்ணை வைத்து, இருவருக்கும் அன்பு ஏற்பட வேண்டும் என்று நீ வெப்பிலை அடிக்கத் தேவையில்லை'' என்றார் கடிந்து கொள்ளும் பாவனையில் சிந்தாமணி.



''அண்ணா! நீங்கள் உண்மையில் பெரிய ஆசாமி தான்! இதெல்லாம் உங்கள் கண்களுக்கு எங்கே படப்போகிறது என்று நான் ஏமாந்தல்லவா போய்விட்டேன்'' என்று கூறிவிட்டு, படுக்கைமீது சாய்ந்து கொண்டார். போர்வையை மெல்ல இழுத்து மூடிக்கொண்டு சிந்தாமணியை ஓரக்கண்களால் பார்த்துவிட்டு ஒரு புன்முறுவலுடன் கண்களை மூடிக்கொண்டார்.

''இதைத் தெரிந்து கொள்ள யாரும் எந்தத் தனிப்பள்ளிக் கூடத்திலும் போய்ப் படிக்க வேண்டியதில்லை. மேலும், காதல் என்பது ஒளிக்க முடியாத ஒரு விஷயம். யாரிடமும் சொல்லாது ரகசியமாக ஒரு உள்ளத்திலிருந்து இன்னொரு உள்ளத்திற்குத் தாவிவிடும். அதனுடைய சேஷ்டைகள் காதலர்கள் முகத்திலே அசட்டுக் களையாக வழிந்தோடத் தொடங்கி விடுகிறதே! நம்ப கிரிதரன் அவர்களுக்கு அந்தப் பெண் மஞ்சுளா மேல் அன்பு விழுந்து விட்டது, என்பதை அவன் வந்த மறுநாளே நான் ஊகித்துக் கொண்டுவிட்டேன்.

''முந்தாநாள் அவர் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தபோது, தானே வலிய அந்தப் பெண்ணைப் பற்றிப் பேச ஆரம்பித்ததைக் கேட்டதும், நான் திடுக்கிட்டுப் போய் விட்டேன். உனக்குத் தான் தெரியுமே. சாதாரணமாகக் கிரிதரன் சரளமாகப் பேசும் ஆசாமி அல்ல. கொஞ்சம் அழுத்தல் என்று. அப்படிப்பட்டவர் தன்னுடைய கௌரவம், அந்தஸ்து, எல்லாவற்றையும் மறந்து ஒரு வேலைக்காரனிடம் ஒரு யுவதியைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கினால் அதை என்னவென்று சொல்வது? ஓகோ.... விஷயம் முற்றிவிடும் போலிருக்கிறதே என்று எண்ணிப் பயந்து நேற்று அதற்குச் சட்டென்று ஒரு முட்டுக் கட்டையும் போட்டு விட்டேன்'' என்றார் சிந்தாமணி.

''என்ன அண்ணா செய்தீர்கள்?'' என்று பரபரப்புடன் கேட்ட கிட்டா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

சிந்தாமணி, நிதானமான குரலில், ''அந்தப் பெண் மஞ்சுளாவுக்குக் கொஞ்சம் புத்திசொன்னேன். கிரிதரன் தன்மீது

அன்பு கொண்டு விட்டான் என எண்ணி அந்தப் பெண் ஏமாந்து நடக்கக் கூடாது என்று முன்னதாகவே அணைபோட்டு விட்டேன். எஜமான் நாராயணன், அம்மா சௌமினி, அந்தஸ்து, பணம், பதவி முதலிய பல முட்டுக்கட்டைகளின் இடையே இந்த அன்பு கல்யாணமாக மலர முடியாத விஷயம். ஆனால் காதல் கடும் புயல் போல் மனத்தை உலுக்கினால் எவ்வளவோ நல்லவர்கள் கூட தீய வழியிலே புகுந்துவிட நேர்ந்துவிடும்.

''கிரிதரன் செல்வச் சீமான் மகன். ஆண் பிள்ளை வாழ்வில் ஒருமுறை தவறிவிட்டால் தலை போய்விடாது. சமூகம் அதைப் பொருட்படுத்தவும் செய்யாது. ஆனால் ஏழைப் பெண் மஞ்சுளா. காதல் நிமித்தம் பாதையினின்று விலக இயலுமா? அவ்வாறு செய்தால் அவளைச் சமூகம் மன்னித்து ஏற்குமா? அதனால் தான் நான் முன் ஜாக்கிரதையாகவே, அணை போட்டுவிட்டேன். அந்தப் பெண் மிகவும் கெட்டிக்காரி, நான் காலையில் அவளிடம் பேசிய தோரணையிலிருந்து விஷயத்தை புரிந்து கொண்டிருப்பாள்'' என்றார்.

''என்ன அண்ணா சொன்னீர்கள்?'' என்று ஆவலுடன் கேட்டார் கிட்டா.

மஞ்சுளாவிடம் சிந்தாமணி கடுமையாகப் பேசிவிட்டாரோ என்றதொரு கவலை கிட்டாவுக்கு சட்டென்று ஏற்பட்டுவிட்டது.

''நீ இந்த வீட்டில் எங்களைப் போல் ஒரு வேலைக்காரி. உனது நிலையை மறக்காதே என்று கொஞ்சம் உள்ளத்தில் படும்படி அவளுக்கு எச்சரித்தேன். என்மேல் அந்தப் பெண்ணிற்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. ஆனால் அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் கடமையைச் செய்து விட்டேன். மனம் இப்போது அமைதியாக இருக்கிறது'' என்றார் சிந்தாமணி விரக்தியாக.

''போங்கள் அண்ணா! நீங்கள் அந்தப் பெண்ணிடம் கடுமையாகப் பேசி விட்டிருக்கிறீர்கள். அந்தப் பெண் ஏதோ தலைவிதிப் பயனால் இங்கே ஒரு வேலைக்காரியாக வந்து



விட்டிருக்கிறாயே ஒழிய, அவள் படிப்பிற்கும், லட்சணத்திற்கும்...'' என்று முடிக்கு முன் சிந்தாமணி குறுக்கிட்டு, ''ஒரு பெரிய செல்வச் சீமானது மருமகளாக ஒரு பெரிய வீட்டின் எஜமானியாக இருக்க வேண்டியவள் என்றுதானே சொல்கிறாய்? போதும் உன் பேத்தல், படுத்துத் தூங்கு. விடிந்ததும் உன் வேலையை நீ கவனி. வேண்டும் என்ற விரும்புகிறவர்கள் தான் அழ அழச் சொல்வார்கள்.

''மஞ்சுளாவை நான் எனது சொந்த மகளாகப் பாவிக்கிறேன். அவளுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் என்னை அது மிகவும் பாதிக்கும். இப்போது தெரிந்ததா, ஏன் எனக்கு உன்மீது கோபம் வருகிறது என்று?'' எனக்கேட்டுவிட்டு, விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டார்.

இருவருக்கும் உறக்கம் சீக்கிரத்தில் வரவில்லை. சல்லடை போட்டுச் சலித்தாலும் மஞ்சுளா போன்ற ஒரு பெண் கிரிதரனுக்குக் கிடைக்காது என்று தீர்மானித்திருந்த கிட்டாவுக்கு இந்த உலகத்தின் போக்கே பிடிக்கவில்லை. 'பணம், பதவி, அந்தஸ்து என்ற பிளவுகள் இளம் காதலர்களை ஏன் வீணாகப் பிரித்து நாசமாக்கவேண்டும்? ஏன்?'' என்று மனம் பலவும் எண்ணியதால் விடிய விடிய அவர் தூங்கவேயில்லை.

ஆனந்த நிலையத்தில் மற்ற எல்லோரையும் விட மஞ்சுளாதான் முதலில் படுக்கையை விட்டு எழுந்திருப்பது வழக்கம். அன்று வழக்கத்தைவிட இன்னும் சற்று முன்னதாகவே எழுந்து விட்டாள். சோப்பு துவாலை சகிதம் அவள் கதவை மெல்லத் திறந்து கொண்டு வெளியே வந்தபோது ஆச்சரியத்தில் முழுகிப் போனாள். அவளை முந்திக் கொண்டு அந்த வீட்டு வேலைக்காரர்கள் அனைவரும் விடிவதற்கு வெகு முன்னதாகவே எழுந்து விட்டிருந்ததும் அல்லாமல் பரபரப்பாகத் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மாடிப் படிகள்மீது சந்தடிசெய்யாது மெல்ல இறங்கி ஸ்நான அறையை நோக்கி விரைந்தாள் மஞ்சுளா. வழியில் அவள் கண்டதையெல்லாம் நம்ப முடியவேயில்லை.

சாதாரணமாக வேலைக்காரி மாரியாயியும் முத்துநாகமும் ஒன்று கூடிவிட்டால் வீட்டில் வேலை ஒன்றும் நடக்கவே நடக்காது. கையில் துடப்பத்தையும் இடுப்பில் குடத்தையும் வைத்துக் கொண்டு மாரியாயி கதை பேசத்தொடங்கி விடுவாள். தன் வேலையைச் சிறிதும் பொருட்படுத்தாது முத்துநாகம் பல்லைக் காட்டிக் கொண்டு அவள் பேச்சை ரசித்தபடி நின்று விடுவான். இடையே சமையற்காரர் கிட்டா வந்து விரட்டினாலொழிய இருவரும் நின்ற இடத்தை விட்டு அசையமாட்டார்கள். ஆனால் அன்று மாரியாயிக்குப் பேச நேரம் இருக்கவில்லை. முத்துநாகத்திற்கும் கேட்கப் பொழுது இல்லை. இருவரும் இரவு தூங்கினார்களோ இல்லையோ என வியக்கும்படி பங்களாவின் தரை முழுவதையும் பெருக்கிக் கழுவித் துடைத்துச் சுத்தமாக்கி விட்டிருந்தார்கள்.

வச்சிரவேலு, நாற்காலி, மேஜை முதலியவற்றைத் தட்டித் தும்பு தூசியின்றித் துடைத்து, அவைகள் இருக்க வேண்டிய இடத்தில் போட்டு ஒழுங்குபடுத்தியிருந்தான். அத்துடன் கூடே ஹாலின் மத்தியில் கிடந்த தந்த வேலை செய்த கருங்காலி வட்ட மேஜைமீது பிங்கான் பூந்தொட்டி ஒன்றைத் துடைத்து வைத்து, தோட்டத்தில் மலர்ந்திருந்த புஷ்பங்களை அதில் சொருகி அழகு செய்திருந்தான்.

பூஜையறையில் அன்னபூரணியம்மாள் கொளுத்தி வைத்த சந்தன ஊதுவத்திக் கற்றையின் மணம் வீடு முழுவதும் பரவிப் பரிமளித்துக் கொண்டிருந்தது. வேலைக்காரர்கள் அனைவரிடமும் ஒருவிதப் பரபரப்புக் காணப்பட்டது. அத்துடன் கண்களில் ஒரு கலக்கமும் தென்பட்டது. மஞ்சுளாவுக்கு எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. எஜமானியம்மாள் வருகிறார்கள் என்றால் ஏன் இத்தனை மிரட்சி? அவர்கள் என்ன கரடியா? புலியா? சிங்கமா? இப்படி பலவாறு எண்ணியபடி விரைவில் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு மாடியறைக்கு வந்தாள்.



சந்திராவும் அன்று சற்று முன்னதாகவே எழுந்து விட்டிருந்தாள். இரவு முழுவதும் நன்றாகத் தூங்காததனால் அவள் முகம் வாடிச் சோர்ந்து காணப்பட்டது. அவள் கொஞ்ச நேரம் அழுது கொண்டிருந்தாள் என்பதை சிவந்து காணப்பட்ட விழிகள் தெரிவித்தன. எனினும் மஞ்சுளா அவளை ஒன்றும் விசாரிக்கவில்லை. மௌனமாக அவளுக்குக் காலையில் தான் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டு, காலை ஆகாரம் அருந்தக் கீழே வந்தாள்.

பங்களாவில் இரைச்சல் மிகுந்த இடம் சமையற்கட்டுதான். அதன் தலைவரான கிட்டாவுக்கு மெதுவாகப் பேசவே தெரியாது. சமுத்திரத்தைப் போல இரைச்சலிட்டு அம்பிப் பசலை அழைப்பார். எட்டு வீடுகள் கேட்கும்படி உரக்கச் சிரிப்பார். அதனால் மற்ற வேலைக்காரர்கள் அவருக்குக் 'கோடையிடி கிட்டா' என்று ஒரு பட்டத்தை வழங்கியிருந்தார்கள். கிட்டாவின் கோடையிடிக் குரல்கூட அன்று ஓய்வு கொண்டு விட்டதுபோல் சமையற்கட்டில் ஒரே நிசப்தம் நிலவியது கரண்டிகளின் ஓசையைத் தவிர.

இதைக் காண மஞ்சுளாவுக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. கிரிதரனுக்கோ சந்திராவுக்கோ கொஞ்சமும் அஞ்சாது, அவர்கள் முன்னிலையில் கடகடவென்று அட்டகாசமாகச் சிரிக்கும் சுபாவமுடைய கிட்டாகூட எஜமானியின் வருகையை உணர்ந்து அஞ்சி ஒளிந்து கொண்டுவிட்டாரா என்ன? பின்கட்டைத் தாண்டி மெல்லச் சமையலறைக்குள் வந்தாள் மஞ்சுளா.

இரவு முழுவதும் சரியாகத் தூங்காததனால் ஏற்பட்ட உடல் அயர்ச்சியும், விரைவாகக் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற கவலையால் ஏற்பட்ட பதற்றமும் சேர்ந்து கொள்ளவே மூளை குழம்பி விட்டவர்போல் சமையலறையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார் கிட்டா. ஒரு சில மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் உட்கார்ந்து படித்தால்தான் பரீட்சைக்கு வேண்டிய பாடங்கள் மனதில் பதியும். அதுபோல் கிட்டாவுக்கும் ஒரு குறிப்பிட்ட விஷயம் அவரது சமையலறைக்குத் தூண்டுகோலாக அமைந்திருந்தது. தன்

கையினால் துவைத்துப் பழுப்பாகி விட்டிருந்த குண்டஞ்சி சிவப்புக் கரை வேட்டியை முழங்காலுக்குமேல் இழுத்து கச்சம் கட்டிக்கொண்டு அதற்கு மேல் கரிபடிந்த கைப்பிடித் துணியை இடுப்பில் சுற்றிக் கொண்டால் தான் அவருக்குச் சமையல் வேலையில் உற்சாகம் உண்டாகும்.

சலவையிலிருந்து அவர் அன்று எடுத்து உடுத்திக் கொண்டிருந்த வெள்ளைக் கதர் வேட்டி உடலை உறுத்திக் கொண்டிருந்தது. மேலே போட்டிருந்த கதர்ச்சட்டை அனலாக வெந்து தொலைத்தது. வேலையில் எண்ணம் ஓடாதவராகத் தமது எரிச்சல் அனைத்தையும் அம்பிப்பயல் மீது காட்டினார்.

அம்பிப்பயல் நெற்றியில் பட்டையாக விபூதியும், இடையில் வெள்ளைக் கதர் வேட்டியும், மேலே கதர்ச் சட்டையுமாக, சினிமா பார்க்கப் புறப்பட்டவன்போல் உல்லாசமாகக் காட்சியளித்தான்.

மஞ்சுளாவைக் கண்டதும் பற்களைக் காட்டி ''இவ்வளவு நாள் பெட்டிக்குள் கிடந்த எங்கள் 'பூஷிபாரம்' இன்று வெளியே வந்துவிட்டது. சமையல் அறையில் வேலை செய்கிறவர்கள் சுத்தமான ஆடை அணிந்திருக்க வேண்டும் என்பது எஜமானி அம்மாள் உத்தரவு'' என்றான்.

கிட்டா அவனை எரித்து விடுகிறவர்போல் விறைத்து நோக்கவே நெய் டின்னைத் தூக்கிக்கொண்டு உக்கிராண அறைக்குள் பறந்தோடி விட்டான். நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு அவர் மஞ்சுளாவின் பக்கம் திரும்பினார். கபடமற்ற பச்சிளங் குழந்தை போன்ற அவளது முகத்தைக் கண்டதும் கிட்டாவின் எரிச்சல் எல்லாம் பஞ்சாகப் பறந்தோடி விட்டது. 'மகாலட்சுமிபோல் வந்து நின்றாலே வீடு முழுவதும் களையாக விடுகிறதே? கருணை மிகுந்த குளிர்ந்த முகம்! இவள் அல்லவா இந்த வீட்டில் எஜமானியாக இருக்க வேண்டியவள்?'' என்ற எண்ணம் இழையோட, காவியேறிய பற்கள் அனைத்தும் தெரிய இன்முகம் காட்டி அவளை வரவேற்றார்.



# 29

வழக்கம்போல் வெகுநேரம் அவள் சாப்பிடும்வரை எதிரே நின்று கொண்டு வார்த்தையாடக் கிட்டாவுக்கு அன்று நேரம் இடந்தரவில்லை. எனினும் அவளிடம் பேசாது இருக்கவும் அவரால் முடியவில்லை. ''சூடாக இப்பொழுதுதான் எடுத்த இட்டலி. உங்களுக்குப் பிடித்த வெங்காய சாம்பாரும் தயாராக இருக்கிறது'' என்று உபசரித்த வண்ணம், அடுப்பு மேடை அருகே ஒரு மணைப் பலகையை இழுத்துப் போட்டார். வந்த நாளிலிருந்து தன்னிடம் அன்பு காட்டி இனிமையாக வார்த்தையாடிய அந்த முதியவரின் வேண்டுகோளை மஞ்சுளாவினால் தட்ட முடியவில்லை.

''பகல் பொழுது சாப்பிட இன்று வெகுநேரம் ஆகும். அதனால் இன்னும் ஒரு இட்டலி கூடச் சாப்பிட்டு விடுங்கள். எஜமானி அம்மாளுக்காக இப்பொழுதுதான் வெண்ணெய் உருக்கிக் காய்ச்சிய பசு நெய். முதலில் நீங்கள் கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்கள்'' என்று சிரித்துக் கொண்டே ஒரு கிண்ணம் நெய்யை இலை மீது கவிழ்த்தார்.

மஞ்சுளாவுக்கு உண்மையில் அன்று கொஞ்சமும் பசியில்லை. வற்புறுத்தி அந்தப் பெரியவர் பரிமாறியவைகளை எறிந்துவிட்டு எழுந்திருக்க மனம் இன்றி வேண்டா வெறுப்பாக இட்டலிகளை விண்டு விழுங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பார்வை எதிரே கவரோரமாகத் தட்டுகளில் தாம் நறுக்கிக் குவித்து வைத்திருந்த காய்கறி வகைகள் மீது திரும்புவதைக் கண்ட கிட்டா புன்முறுவலித்தார்.

''ஒரு பெரிய கல்யாண விருந்துக்குத் தயாரிப்பதுபோல் மலைகளாகக் காய்களை நறுக்கிக் குவித்துவிட்டேன் என்று தானே நினைக்கிறீர்கள்? அதுதான் இந்த வீட்டின் ரகசியம். இங்கே ஒருத்தருக்குப் பிடித்தது இன்னொருத்தருக்குப்

பிடிக்காது. எஜமானி அம்மாளுக்கு இரண்டு வேளையும் புதிதாகப் பருப்பு சாம்பார் செய்தாக வேண்டும். எஜமானருக்குப் பத்தியமாக வத்தல்குழம்பு, பொரிச்ச கூட்டு, மிளகு ரசம் என்று தனியாகச் சமைக்கவேண்டும். சந்திரா அம்மாளும் கிரிதரனும் இலையில் போட்டதைக் குறை சொல்லாமல் சாப்பிடுவார்கள். அவர்களைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அந்தப் பையன் ஜெகதீசன் பெரிய முசுடு. காசிக்குப் போய்விட்டு வந்தவர் போல் சில காய் வகைகளைக் கையாலேயே தொடவும் மாட்டார். இனிமேல் எனக்கு மூச்சுவிட நேரமிருக்காது. வித விதமாக மூன்று வேளையும் சமைத்து என் முதுகு பிளந்துவிடும்'' என்று பெருமூச்சுடன் நிறுத்தினார்.

வேகமாகக் காப்பியைப் பருகிவிட்டு டம்ளரைக் கீழே வைத்த மஞ்சுளா இலையை சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

''ஜெகதீசன்! அது யாரு?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''உங்களுக்குச் சந்திரா அம்மா சொல்லியிருப்பார்கள் என்று நினைத்தேன். அந்த அம்மாளுக்குத் தன் அண்ணன் ஜெகதீசன் பேரை உச்சரிக்கக்கூடப் பிடிக்காது. அவர்கள் மீது குற்றமில்லை. சாதாரணமாக மூத்த தாரத்தின் குழந்தைகளுக்கும் இளைய தாரத்தின் குழந்தைகளுக்கும் ஒற்றுமை அவ்வளவாக இருப்பதில்லை. இது சகஜமான விஷயம். எஜமானருடைய இரண்டாவது மனைவியின் பிள்ளைதான் ஜெகதீசன். வயதில் கிரிதரனைவிட ஒருசில வருஷங்கள் தான் இளையவர். அவரும் அண்ணனைப்போல் பட்டதாரிதான். ரஸாயனத்தில் என்னவோ மேலே ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாக வீட்டில் பேசிக் கொண்டார்கள்; அதனால் இரண்டரை வருஷம் நாகபுரியில் இருப்பதாகக் காதில் பட்டது. இப்பொழுதுதான் ஊருக்குத் திரும்பி வருகிறார்'' என்று முடித்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

பிறகு மிகவும் தாழ்ந்த குரலில் ''ஸ்ரீமான் நாராயணன் வேகப்பட்டவர் அல்ல. உல்லாசமான போக்குடையவர். தற்சமயம் உயிருடன் இருக்கும் எஜமானியம்மாள் அவருடைய



மூன்றாவது மனைவி! இந்தப் பலதார விவாகச்சட்டம் மட்டும் அமுலுக்கு வராதிருந்தால் மனிதர் இன்னும் இரண்டு பெண்களைக் கட்டிப் போட்டிருப்பார்! அவரைச் சொல்லிக் குற்றம் என்ன? அவர் கையில் பணம் இருக்கிறது. நமது சமுதாயத்தில் பெண்கள் மலிந்து கிடக்கின்றனர். நமது சட்டசபையில் புதிதாக விவாகம் பற்றி ஒரு சட்டம் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய அவா. நமது வயதுக்கு ஒவ்வாத இளம் பெண்களை மணக்கத் துணியும் புருஷர்களுக்கு ஆறுமாதம் கடுங்காவல் என்று ஒரு புதிய சட்டம் அமைத்தால்...'' என்று முடிக்காமல் நிறுத்திவிட்டுச் சிரித்தார்.

''நீங்கள் மந்திரியாக இருக்கும் காலத்தில் இந்த மாதிரியான புதிய சட்டங்கள் உருவாகலாம்'' என்று பதிலளித்த மஞ்சுளா தன் கவலைகள் அனைத்தையும் மறந்து, அவர் கூடச் சேர்ந்து சிரித்துவிட்டாள்.

''எதற்குச் சொல்லுகிறேன் என்றால்.... வயதுக்கு ஒவ்வாத விவாகத்தினால் எத்தனையோ பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதனால் சமுதாயம் சீர்கேடடைகின்றது!'' என்று முடித்துவிட்டு, கொஞ்ச நேரம் சிந்தனையில் ஈடுபட்டு மௌனமாக நின்றார்.

மஞ்சுளா தோட்டத்தின் பக்கம் போகத் திரும்பியதைக் கண்டதும் மேலே பேச ஆரம்பித்தார். ''ஜெகதீசனுடைய தாய் அவர் பிறந்தவுடனேயே மரணமடைந்து விட்டார்கள். அதனால் மூத்தவளே தன் குழந்தைபோல் இளையவள் மகனை எடுத்து வளர்க்க நேரிட்டது. சந்திரா பிறந்த பின்னர் அந்த அம்மாளும் கொஞ்ச காலத்தில் மரண மடைந்துவிடவே; ஜெகதீசனை அவனது பாட்டி எடுத்துச் சென்று வளர்த்தார்கள். அநாதையாக இருக்கவேண்டும் என்ற விதி அந்தப் பையனின் தலையெழுத்துப் போலும். அதனாலோ என்னவோ பையனுக்குப் பத்து வயது ஆகுமுன் பாட்டியாரும் இறந்து விட்டார்கள். அதன்பிறகு படிப்பின் நிமித்தம் பள்ளிக்கூடம், 'ஹாஸ்டல்' என்று வாலிப வயது முழுவதையும் வெளியூர்களிலேயே கழித்து விட்டார். இடையே கலாசாலை விடுமுறையின் போது அவ்வப்போது இங்கே ஒரு சில

தினங்கள் இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை வந்து தங்குவது வழக்கம். சேர்ந்து குடும்பத்துடன் ஒன்றி வசிக்காததனால் அவருக்கு இந்தக் குடும்பத்தில் அவ்வளவாகப் பற்றுதல் கிடையாது'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தார்.

''அப்படியா! இதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்று முணுமுணுத்துவிட்டு மஞ்சுளா வெளியே போகக் காலடி எடுத்து வைத்தாள். ஆனால் கிட்டா அவளை அப்பால் செல்ல விடவில்லை. மேலே பேசிக்கொண்டு போனார். ''ஒரு விசயம் உங்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது. ஜெகதீசனுக்கும் அவர் அண்ணன் கிரிதரனுக்கும் இடையே கிடக்கும் துரும்புகூட வேகாது. அத்தனை பகை. வேறு தாயார்களின் குழந்தைகள் என்ற வேற்றுமை இதற்கு ஒரு காரணமாக இருந்தபோதிலும், சுமார் இரண்டரை வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம்தான் துவேஷத்திற்கு முக்கிய காரணமாகும்.

''அப்பொழுது நீண்ட நாட்களுக்குப் பிறகு ஜெகதீசன் இங்கே விடுமுறைக்காக வந்திருந்தார். பி.ஏ.பரிட்சையில் அவர் தேறிவிட்ட மகிழ்ச்சியைக் கொண்டாட சௌமினியம்மாள் ஒரு 'பிக்னிக்' ஏற்பாடு செய்தார்கள். ஜலங்கண்டானுக்குப் பத்து மைலுக்கு அப்பால் மேற்குத் திக்கில் 'இருளன் குன்று' என்று ஒரு சிறுமலை இருக்கிறது. ரஸ்தா அமைக்கக் கல்வெட்டும் பெரிய தொழிற்சாலையொன்று அதன் அருகே இருக்கின்றது. அதைத் தவிர மலையில் ஒரு சிறு விஷ்ணுகோயில் உள்ளது. இரண்டையும் தவிர கண்ணுக்குக் குளிர்ச்சியான பிரமாதமான காட்சிகள் சிற்பங்கள் ஏதும் கிடையாது. சொல்லப் போனால் வெய்யில் காலத்தில் இருக்கும் கொஞ்ச நஞ்ச மரங்களும் காய்ந்து தீய்ந்து இரக்கமற்றவர்கள் நெஞ்சுபோல் பாறை வெடித்து விகாரமாகக் காணப்படும்.

''அந்த இடத்திற்குத் தலை வெடிக்கும் சித்திரை மாத வெய்யிலில் வனபோஜனம் செய்யப் போகவேண்டும் என்று சௌமினி அம்மாளுக்கு ஏன் யோசனை தோன்றியதோ தெரியவில்லை. வனபோஜனத்திற்கு வேண்டிய தயிர்சாதம், புளியோதரை எல்லாம் நானே அன்று கருத்தோடு செய்து கட்டிக் கொடுத்து அனுப்பியிருந்தேன். காலையில் புறப்பட்டுப்



போனவர்கள் கொஞ்ச நேரத்திற்குள் திரும்பி வந்துவிட்டார்கள். ஏன் என்று ஆவலுடன் நான் வெளியே வந்து எட்டிப்பார்த்தபோது திடுக்கிட்டே போய்விட்டேன். பேச்சு மூச்சு இல்லாது கிடந்த சந்திரா அம்மாளை, காரிலிருந்து தூக்கிக் கயிற்றுக் கட்டிலில் போட்டு மாடிக்கு எடுத்துப் போனார்கள். அன்றிலிருந்து சந்திரா அம்மாள் நடக்க முடியாமல் நொண்டியாகி விட்டார்கள். எத்தனையோ வைத்தியர்கள் பார்த்தார்கள். ஒன்றும் பயனில்லை. இடுப்பு எலும்பில் அடிப்பட்டு, கால் நரம்புகள் சோர்ந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். சந்திரா அம்மாளுக்கு அந்த வருஷம் கல்யாணம் நடக்கப் போவதாகப் பேசிக் கொண்டார்கள். இந்த விபத்திற்குப் பிறகு கல்யாணப் பேச்சே காதில் படவில்லை. பணம் எவ்வளவு இருந்து என்ன பயன்? நொண்டிப் பெண்ணை யார்தான் கல்யாணம் செய்து கொள்வார்கள்?'' என்றார் விரக்தியாக.

சந்திராவுக்குக் கால் எப்படி ஊனமாயிற்று என்பதை, வந்த நாளிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஒரு அவா மஞ்சுளாவுக்கு ஏற்பட்டிருந்தது. எனவே சட்டென்று ''ஆமாம், எப்படி விபத்து ஏற்பட்டதாம்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''அதுதான் யாருக்கும் தெரியாத ரகசியம். மலைப்படிகளில் இடறி உருண்டு விழுந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வேறுவிதமாக எப்படியோ இந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும் என்றுதான் நான் நினைக்கிறேன். அன்றிலிருந்து அண்ணன், தம்பி இரண்டு பேருக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் விஷயங்கள் எல்லாம் மாடியிலேயே நடைபெற்றதனால் எங்களுக்கு ஒன்றும் விவரம் புரியவில்லை. என்னவோ எல்லோரும் கசமுசா என்று பேசிக் கொண்டார்கள். விபத்து நடந்த இரண்டு வாரங்களுக்குப் பின் ஜெகதீசனும் சௌமினியம்மாளும் புறப்பட்டுப் பெங்களூர் சென்று விட்டார்கள்.

'கோடை கழிந்த பின்னர் மறுபடி ஊருக்கு வந்தார் ஜெகதீசன். பெங்களூரிலிருந்து வந்து நாலைந்து நாட்கள் கூட

ஆகவில்லை. அண்ணனுக்கும் தம்பிக்கும் ஒரு பெரிய அடிதடி சண்டையே வந்துவிட்டது. இந்தத் தடவை யுத்தம் மும்முரமாகி விட்டதனால் எஜமான் இடையே புகுந்து சமாதானம் செய்வித்து மேற்படிப்பிற்காக உடனே ஜெகதீசனை நாகபுரிக்கு அனுப்பி வைத்தார். இதையெல்லாம் எண்ணும்போது ஜெகதீசன் மறுபடி இங்கு வருகிறார் என்று நினைக்கையில் எனக்கு என்னவோ மனம் அவ்வளவு சந்தோஷமாக இல்லை'' என்று முடித்த கிட்டா, சுவரின் பக்கம் திரும்பினார். உடனே மின்சாரத்தினால் தாக்குண்டவர்போல் துள்ளிக் குதித்துவிட்டு ''அடாடா! மணிச்சக்கரம் கட்டிக்கொண்டு பறக்கிறது. நான் கதை பேசிக் கொண்டே நிற்கிறேனே! ஒன்பது மணி வண்டிக்கு அவர்கள் வந்துவிடுவார்களே'' என்று பதறிவிட்டு, ஒரே பாய்ச்சலாக உக்கிராண அறையை நோக்கி ஓடினார்.

நெய் டின்னைத் தூக்கிக் கொண்டு அங்கு போன அம்பிப்பயல் மாயமாகப் போய் விட்டானா என்ன? எஜமானி அம்மாளுக்காகத் தேடித்தேடி அபூர்வமாக வாங்கி வைத்திருக்கும் மாதுளம் பழங்களை ஒரு சமயம் ருசி பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ என்ற கவலை அவரை அங்கே நெட்டித் தள்ளிக் கொண்டி ஓடியது.

தோட்டத்தின் இடது கோடியில் வைத்திருந்த குப்பைத் தொட்டியில் இலையைப் போட்டுவிட்டு, குழாயடியில் கையைக் கழுவிக் கொண்டு மஞ்சுளா, சமையற்காரர் சொன்னவைகளைத் திரும்பத் திரும்ப எண்ணியபடி நின்று கொண்டிருந்தாள். 'கிரிதரனுக்குப் பிடிக்காத சகோதரன்' என்று கிட்டா சொல்லத் தெரிந்து கொண்டதனாலோ என்னவோ, ஜெகதீசன் என்பவனைப் பாராத முன்பே அவளுக்கும் பிடிக்கவில்லை! ஆனந்த நிலையத்தில் வந்து தங்கியிருந்த இந்த ஒரு சில தினங்களில் தன் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு விட்டிருந்த கிரிதரனை அவள் ஓரளவு அறிந்து கொண்டிருந்தாள். 'பணத்திமிர், படித்துவிட்ட அகந்தை, அழகன் என்ற ஆணவம் இவைகள் ஏதும் இல்லாத கருணை நிறைந்த இளகிய உள்ளம் கொண்ட உத்தமன் என்றுதான் அவளது உள்ளம் அவனைக் கற்பனை செய்து கொண்டிருந்தது.



'அண்ணன் தம்பி இருவருக்கும் ஆகாது என்றால் அதற்குக் காரணம் பொறாமை கொண்டு தன் அண்ணனை வீண் சண்டைக்கு இழுத்திருக்க வேண்டும்' என எண்ணியபடி சிந்தனை வசமாக இருந்தாள்.

''மஞ்சுளா!'' என்று தன்னை யாரோ மெல்லிய குரலில் கூப்பிடுவதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போய் விட்டாள். பின் கட்டு வாயிற்படியருகில் நின்று கொண்டிருந்த அன்னபூரணியம்மாள் அவளைக் கண்டதும் லேசாக முறுவலித்து விட்டு, ''இப்படிக் கொஞ்சம் உள்ளே வாம்மா, உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும்'' என்று உத்தரவிட்டாள்.

மஞ்சுளா மீண்டும் திடுக்கிட்டுப் போனாள். இதென்ன கூத்து! கடந்த நாள் காலை டிரைவர் சிந்தாமணி ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும் என்றார். அன்று இரவு அவளிடம் ஒரு முக்கிய விஷயம் பேச சந்திரா அழைத்தாள். இன்று காலை மறுபடி ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும் என்று கிட்டா ஒரு மணிக்கு மேல் நின்று விவரித்தார். இப்போது என்னவென்றால்... அன்னபூரணியம்மாள் ஏதோ முக்கிய விஷயம் சொல்ல அழைக்கிறாள். இப்படி எல்லோரும் முக்கிய விஷயங்களை அவளிடம் சொல்ல ஆவல் படுவதற்கு அவள் என்ன அத்தனை பெரிய ஸ்தானத்தையா வகிக்கிறாள்? உம்... என்று எண்ணியபடி மெல்ல அன்னபூரணியைத் தொடர்ந்தாள்.

## 30

அன்னபூரணியம்மாள் பூனை போன்று சப்தமிடாது விரைவாக நடந்து, பின் கட்டுத் தாழ்வாரத்திலே கிடந்த ஒரு பெரிய பெஞ்சின் மீது வந்து உட்கார்ந்து கொண்டாள். அவசரமாக ஸ்நானம் செய்துவிட்டு, ஈரம் காயுமுன் அள்ளி முடிந்து கொண்டிருந்த அவளது நரைத்த கூந்தல் காதுகள் மீது புரண்டு கொண்டிருந்தது. முகத்தில் அரும்பிய வியர்வையில்

கலைந்து போன குங்குமம் நெற்றி மீது நாலாபுறமும் பரவிக் கொண்டிருந்தது.

மூக்கின் மேல் நழுவி விழுந்த கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு, ''உட்கார் இப்படி'' என்று உத்தர விட்டாள். மஞ்சுளா உட்காரவில்லை. ''பரவாயில்லை, நிற்கிறேன், சொல்லுங்கள்'' என்று தாழ்ந்த குரலில் பதிலளித்து விட்டு, தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

முதல்நாள் கிரிதரன் அறிமுகம் செய்து வைத்த பின்பு, அன்னபூரணியம்மாளை அவள் தினசரி ஒருமுறை சமையற் கட்டிலோ, பின்புறத்துத் தோட்டத்திலோ எங்கேயாகிலும் சந்தித்துக் கொண்டுதான் இருந்தாள். பார்த்த போதெல்லாம் நலிந்த ஒரு புன்னகையைத் தவிர அந்த அம்மாள் வாயைத் திறந்து பேசியவள் அல்ல. 'ஒரு சமயம் காது செவிடாக இருக்குமோ, பேச அச்சப்படுகிறார்கள் போலிருக்கிறது' என்று மஞ்சுளா எண்ணிக் கொண்டிருந்தாள். திடீரென்று அந்த அம்மாளுக்கு அவளிடம் பேசுவதற்கு என்ன முக்கிய விஷயம் இருக்கும்? மஞ்சுளாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''உட்கார்! உன்னிடம் கொஞ்சம் சாவகாசமாகப் பேச வேண்டும்'' என்று வற்புறுத்தி மீண்டும் அந்த அம்மாள் சொன்னாள். மஞ்சுளா எதிரே கிடந்த ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். பெரியம்மாள் அன்னபூரணிக்கு அந்தக் குடும்பத்தில் எத்தனை செல்வாக்கு உண்டு? அவளுக்குண்டான அதிகாரம் என்ன? என்றெல்லாம் ஒன்றும் விவரமாக மஞ்சுளாவுக்குத் தெரியாது. ஆனால், கிரிதரன், சந்திரா இருவரும் அந்த அம்மாளிடம் மிக்க மரியாதை வைத்திருப்பதை ஜாடையாகக் கண்டு கொண்டிருந்தாள். ஒருநாள் பேச்சு வாக்கில் சந்திரா சொல்லிய ஒரு சில விஷயங்களிலிருந்து அன்னபூரணியம்மாளைப் பற்றி அவளுக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தது.

உண்மையில் அன்னபூரணியம்மாள் அந்தக் குடும்பத்தாருக்கு எந்தவிதமான பந்துவும் அல்ல. தன்னுடைய பால்ய சிநேகிதி கல்யாணமாகிப் பின் கணவனால்



புறக்கணிக்கப்பட்டு வறுமையில் வாடுகிறாள் என்பதை அறிந்து பச்சாத்தாபங்கொண்டு, தன்னுடன் வந்து வசிக்கும்படி, காலஞ் சென்ற அகிலாண்டாம்மாள் அழைத்து வைத்துக் கொண்டிருந்தாள். விதிப் பயனால் வாழ்க்கையில் தனிமையில் தவிக்க நேர்ந்த போதிலும் அன்னபூரணி மிக்க நேர்மையான பெண்மணி. தங்க இடமும், பசிக்கு உணவும் அளித்து, தன்னை ஆதரித்த தன் சிநேகிதிக்கு விசுவாசத்துடன் சம்பளம் வாங்காத ஒரு கௌரவ வேலைக்காரியாக உழைத்து வந்தாள்.

அகிலாண்டாம்மாள் காலமான பின்னரும் அங்கேயே தங்கி, அவளது இரு குழந்தைகளையும் கருத்துடன் போஷித்து வளர்த்து வந்தாள். வயது அதிகமாகி விட்டதனால் முன்போல் எல்லா வேலைகளையும் கவனிக்க முடியாவிடினும் பூஜையறை, சமையலறை முதலியவற்றை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். அப்படி ஒரு பொறுப்பான ஆள் அந்தப் பெரிய வீட்டிற்குத் தேவையாக இருந்ததனால், அவளை ஒரு பாரம் என்று கருதாமல், அங்கேயே நீடித்துத் தங்க சௌமினியம்மாள் விட்டு வைத்திருந்தாள். குழந்தைகள் சிறு வயதில் 'பெரியம்மா' என்று அழைத்துப் பழக்கப்பட்டிருந்ததனால், வயதான பின்னரும் அதே உறவுப் பெயரில் அன்னபூரணியை அழைத்து வந்தார்கள். அதன் பயனாக அந்த அம்மாள் வேலைக்காரர்கள் எல்லோருக்கும் கூடப் பெரியம்மாவாக விளங்கினார்கள்.

''உனக்கு இந்த ஊர் பிடித்திருக்கிறதா? உங்கள் வீரசோழன் பட்டணம்போல இது பெரிய பட்டணம் அல்ல' என்று ஆரம்பித்தாள் அன்னபூரணி, மஞ்சுளாவை ஏற இறங்கக் கவனித்துவிட்டு.

''என்னுடைய சொந்த ஊர் சென்னை. கொஞ்ச நாட்கள் வீரசோழன் பட்டணத்திலே ஒரு இடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று பணிச்சென்று பதிலளித்தாள் மஞ்சுளா.

''ஓ? அப்படியா! எனக்குத் தெரியாது. சந்திரா உன்னிடம் சொன்னாளோ என்னவோ தெரியவில்லை... இன்று காலை

ஒன்பது மணி வண்டிக்கு எஜமானியம்மாளும், மற்றவர்களும் வரப்போகிறார்கள்'' என்று முடித்துவிட்டு ஒருமுறை இருமினாள். 'பத்துத் தடவைக்குமேல் நான் இதுவரை கேட்டு விட்டிருக்கும் பழைய சங்கதி இது' என்று வெடுக்கெனச் சொல்ல வேண்டும்போல் நா துடித்த போதிலும், ''கேள்விப்பட்டேன்'' என்றாள் மிக்க பொறுமையுடன் மஞ்சுளா.

''எஜமானியம்மாள் வந்தால் வீட்டில் இப்போது இருப்பதைவிடப் பன்மடங்கு வேலை அதிகமாக இருக்கும். ஆனால் அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அவைகளைக் கவனிக்க மற்ற வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். சந்திராவின் சௌகரியத்தைக் கவனித்துக் கொள்ள மட்டும் நீ அமர்த்தப்பட்டிருக்கிறாய். அதனால் அவளை நீ கருத்தோடு அருகிலிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். அதில் ஏதும் தவறு ஏற்படக்கூடாது'' என்றாள்.

மஞ்சுளாவின் முகம் ஜிவ்வென்று சிவந்து போயிற்று. கோபத்தில் நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. ஒரு விநாடியைக்கூட வீண் பொழுதாகப் போக்காது, கூடியமட்டில் அவள் சந்திராவின் காரியங்கள் அனைத்தையும் கருத்துடன்தான் கவனித்துக் கொண்டு வந்தாள். அப்படியிருந்தும் அவள் செய்யும் பணிவிடை போதாது போல் இந்த அம்மாள் பொடி வைத்து ஏன் பேச வேண்டும்?

இதென்ன வேடிக்கை? முதல்நாள் காலை டிரைவர் சிந்தாமணி, 'நீ உன் நிலைமையை மறந்து விடாதே. இந்த வீட்டில் நீ வேலைக்காரி என்பது ஞாபகமிருக்கட்டும்' என்று மனம் நோக எச்சரித்தார். இப்போது என்னவென்றால் அன்னபூரணியம்மாள் 'நீ செய்யும் வேலை போதாது, இன்னும் கொஞ்சம் கவனம் வேண்டும்' என்று வற்புறுத்துகிறாள். இதன் மர்மம் புரியவில்லையே! இவர்கள் இருவரும் இந்த வீட்டில் பல வருஷங்களாக இருந்து வேலை செய்கிறவர்கள். பழம் பெருச்சாளிகள். புதிதாக வந்த இந்தப் பெண்ணிடம் சின்ன எஜமானிக்கு ஏன் இந்த அபிமானம் என்று பொறாமை கொண்டு வீட்டை விட்டு விரட்டி அடிக்க ஏதேனும் சூழ்ச்சி செய்கிறார்களோ!



இவ்வாறு பலவித எண்ணங்கள் உள்ளத்திலே எழுந்து குவிந்து விடவே, கோபத்துடன் அந்த அம்மாளை உறுத்து விழித்து விட்டு மௌனமாக இருந்தாள்.

அன்னபூரணியம்மாள் இன்னொருமுறை இருமிவிட்டு மெல்லிய குரலில், ''நீ முன்னிருந்த பெண் நர்ஸ்களைவிட சந்திராவை நன்றாகத்தான் கவனிக்கிறாய். நான் அதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. கூடியவரை அதிகநேரம் அவளை விட்டுப் பிரியாமல் நிழல்போல் கூடவே இருக்க வேண்டும், தெரிந்ததா?'' என்றாள் அதட்டும் பாவனையில்.

''நான் என்ன செய்வேன், பெரியம்மா! சந்திராவுக்குச் சில சமயம்கூட யாராவது அறைக்குள் இருந்தாலே பிடிப்பதில்லை. அதை உணர்ந்ததும் நானே மெல்ல வெளியே வந்து விடுகிறேன்'' என்றாள் ஆயாசத்துடன் மஞ்சுளா. அவளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை.

''சந்திரா இடக்கிறாள்! அசட்டுப் பெண். தன் நிலைமை தெரியாத பேதை. இதற்கு முன்பு ஒரு நர்ஸ் அவளைக் கவனிக்க இங்கே தங்கியிருந்தாள். 'நீ போய் உன் வேலையைக் கவனி' என்றதும் அந்தப் பெண், இதுதான் சமயம் என்று ஒரு கதைப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குப் போய் விடுவது வழக்கம். ஒருநாள் அந்த நர்ஸ் அப்படித் தோட்டத்திலே கதை படித்துக் கொண்டிருக்கும்போது சந்திரா மின்சார விசிறியைச் சுற்றச் செய்யும் நிமித்தம் அருகிலுடைய பித்தானை அமுக்கினாள். அதில் ஏதோ ஒரு பிசகு இருந்தது போலும். அப்படியே மின்சார அதிர்வு ஏற்பட்டுவிட்டது. நாற்காலியில் தன் நினைவு இன்றிக் குப்புற விழுந்து விட்டாள். எதேச்சையாக அங்கே போன எஜமானியம்மாளவர்கள் அதைக் கண்டு அலறிவிட்டார்கள். சந்திரா கட்டாயம் அன்று இறந்து போயிருப்பாள். எஜமானியம்மாள் தாங்க முடியாத கோபத்தில் அந்த நர்ஸை உடனே வேலையிலிருந்து விலக்கி விட்டார்கள். எஜமானியம்மாளுக்கு வேலைக்காரர்கள் மேல் கொஞ்சம் அதிருப்தி ஏற்பட்டாலும் போதும், உடனே விலக்கி

விடுவார்கள். அதனால்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

''சரி! நீங்கள் சொன்ன விஷயத்தை மறக்க மாட்டேன்'' என்று சற்று எரிச்சலுடன் பதிலளித்த மஞ்சுளா அவ்விடத்திலிருந்து போக எழுந்திருந்தாள்.

''உனது நன்மைக்குத்தான் சொன்னேன் அம்மா, சந்திராவுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது. அதனால் நீ நீடித்து இங்கே தங்கி அவளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காகவே உன்னை எச்சரித்தேன். மேலும்...'' என்று முடிக்காது அன்னபூரணியம்மாள் அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தாள்.

'மேலும் என்னவாம்?' என்று அதட்ட வேண்டும்போல் மஞ்சுளாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. எனினும் மௌனமாகப் பற்களைக் கடித்துக் கொண்டு நின்றாள். ''சந்திராவின் அருகில் இருந்து சதா அவளைக் கருத்துடன் நீ கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது கிரிதரன் அவர்களின் உத்தரவு. உன்னிடம் சொல்லச் சொன்னார்'' என்று முடித்துவிட்டு அன்னபூரணியம்மாள் எழுந்து அப்பால் சென்று விட்டாள்.

மின்னலைப் போன்ற வேகத்தில் பாய்ந்து ஓடி மாடியிலிருந்த தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் மஞ்சுளா. ஆத்திரம், அவமானம், துன்பம் என்ற பல்வேறு உணர்ச்சிகளுக்கு உட்பட்ட அவளது உடல் வெடவெடவென்று நடுங்கியது. தாளமுடியாமல் துக்கம் பீறிட்டுக் கொண்டு கண்ணீராக வழிந்து அவள் கன்னங்களை நனைத்தது.

கிரிதரனின் உத்தரவு! கிரிதரனின் உத்தரவு! என்ற வார்த்தைகள் அவள் காதுகளில் பயங்கரமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

'கிரிதரன், வீட்டு எஜமானரின் மகன். அவள் அந்த வீட்டில் ஒரு வேலைக்காரி. சே! என்ன பேதமை. இந்த உண்மை நிலையை மறந்து வெட்கமற்று அவள் உள்ளம் வலிய அவன்பால் உறவாடிக் கொண்டிருக்கிறதே! அது நடக்கக்கூடிய



காரியமா? வெற்றியடைந்து ஆனந்தமடையவா இந்த அன்பு அவள் உள்ளத்திலே பிறந்தது? இல்லை! இல்லை! மஞ்சுளாவை மீளா நரகத்தில் தள்ளி, காலம் முழுவதும் புண்ணான நெஞ்சுடன் போராடிக் கொண்டிருக்கப் புறப்பட்டது இந்த விபரீதக் காதல்...!' என்று பலவும் எண்ணி இதயம் பிளந்து விடும்போல் விம்மி விம்மி அழுதாள்.

கோடைக் காலத்தின் இறுதி என்ற போதிலும் அன்று சூரியன் மிகவும் உக்கிரமாக எரித்துக் கொண்டிருந்தான். ஆனால் சுற்றிலும் அமைந்திருந்த பசிய பூங்காவிலிருந்து வீசிய இனிய காற்று கொடைக்கானல், உதக மண்டலம் இரண்டையும் ஆனந்த நிலையத்திற்குள் கூட்டி வந்து விட்டது போல் மிக்க குளுமையாகவும் சுகமாகவும் இருந்தது. ஜன்னல் அருகே சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் வாரப் பத்திரிகையொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள் சௌமினி. கண்ணும் கருத்தும் அதில் கண்ட விஷயங்களில் லயிக்க மறுத்தன. முகத்தின் மீது ஓர் அங்குலத்திற்குச் சற்றுக் கூடுதலாகக் கனமாக அவள் பூசியிருந்த அழகுச் சாதன மெழுகு அனல்போல் சருமத்தை எரித்துக் கொண்டிருந்தது. அதைவிட அவள் உள்ளம் கோபத்தில் எரிமலையாகக் கனிந்து கொண்டிருந்தது.

நான்கு மாதங்களுக்கு மேல் வெளியூர்களில் கோடை வாசம் செய்து கொண்டு, உல்லாசமாக பல இடங்களைச் சுற்றிப் பார்த்துக் களித்துக் காலத்தை இனிதாகப் போக்கிவிட்டுத் திரும்பியிருந்தார்கள் அவர்கள். எனினும் சௌமினிக்கு மனம் திருப்தியடையவில்லை. இன்னும் ஒரு பதினைந்து தினங்களாவது அவள் பெங்களூரில் தங்கியிருக்க ஆசைப்பட்டாள். கோடையின் பெரும் பகுதியை அந்த நகரிலேயே கழித்து விட்டிருந்த போதிலும் அவர்கள் ஊருக்குப் புறப்பட இருந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர்தான் எதேச்சையாக அவளுக்கு ஒரு புது சிநேகிதி அகப்பட்டாள். செல்லறைச் சாமான்கள் வாங்குவதற்காக ஜெகதீசனுடன் அவள் அன்று பெங்களூர் கடைத் தெருவைச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். முடிவாக ஒரு வளையல் கடைக்குள்

நுழைந்தாள். அங்குதான் அந்தப் புது சிநேகிதியை அவள் சந்தித்தாள்.

''இதென்ன விலை?'' என்று கேட்ட வண்ணம் ஒரு ஜோடி பிளாஸ்டிக் முத்து வளையல்களைக் கையில் எடுத்தாள் சௌமினி.

''அதை நான் பொறுக்கி வைத்திருக்கிறேன்'' என்று பின்னாலிருந்து யாரோ பேசியதைக் கேட்டு திடுக்கிட்டு விட்டாள்.

''அசல் முத்து வளைகளைக் கூடத் தோற்கடித்து விடும் போல் எத்தனை அழகாக இருக்கின்றன பார்த்தீர்களா?'' என்று மேலே பேசிய பெண்மணியை மெல்லத் திரும்பிப் பார்த்தாள். வயது ஐம்பதிற்கு மேலிருக்கும் என்ற போதிலும், தும்பைப் பூப்போல் வெளுத்த தனது கூந்தலை அழகாக வாரிப்பின்னி வட்டமாக முடித்துக் கொண்டு அதன்மீது சுற்றிலும் சுமைபோல் சண்பக மலரை சூட்டிக் கொண்டிருந்த அந்த அம்மாள், மணப்பந்தலிலிருந்து எழுந்து வந்த கல்யாணப் பெண்ணைப் போல் விளங்கினாள். அவளுடைய மூக்கில் சுடர்விட்டு ஒளிவீசிய வைர எட்டுக் கல் பேசரியையும், கழுத்தைத் துண்டித்து விடும்போல் பிடித்தமாகக் கவ்விக் கொண்டு கிடந்த சிவப்புக்கல் அட்டிகையையும், கைகளில் அடுக்காக மாட்டிக்கிடந்த தங்க வளைகளையும் ஓரக்கண்ணால் ஆராய்ந்து பார்த்துக் கொண்டு நின்றாள் சௌமினி. 'இந்த அம்மாளை எங்கே பார்த்திருக்கிறோம்?... ம்...' என்று அவள் மூளை தேடித்துழாவ ஆரம்பித்தது.

அவள் சிந்தனைக்கு வெகுநேரம் வேலை கொடுக்காது அந்தம்மாள் தானே வலியப் பேசத் தொடங்கினாள். ''நாங்கள் இருப்பது பம்பாய். என் கணவருக்கு ஒரு மாதம் விடுமுறை கிடைத்தது. சில நாட்கள் இந்த ஊரில் தங்கலாம் என்று புறப்பட்டு வந்தோம். என் சகோதரன் வீட்டில்தான் தற்சமயம் தங்கியிருக்கிறோம். என் பெயர் துளசி'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

வயோதிகத்தின் வாயிற்படியைத் தாண்டிவிட்ட



போதிலும், இளவயதின் இன்ப நினைவை மறக்க விரும்பாது, பதினெட்டு வயதுப் பெண்ணைப் போல் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த அந்த அம்மாளை மீண்டும் ஒரு முறை ஏற இறங்க உற்றுக் கவனித்துவிட்டு சௌமினி, அடக்கமாக மெல்ல, தன் முத்துப் பற்கள் தெரிய லேசாகப் புன்முறுவல் செய்தாள். தன்னை அவளுக்கு அறிமுகம் செய்து கொண்டாள்.

''நீங்கள் ஸ்ரீமதி நாராயணனாகத்தான் இருக்க வேண்டும் என்று அப்போதே நான் நினைத்தேன். உங்களை இதற்கு முன் ஒருமுறை மாதுங்காவிலே பார்த்த ஞாபகம்'' என்று உறவு கொண்டாடிக் கொண்டு துளசியம்மாள், சௌமினியின் கரங்களைக் குலுக்கினாள். கொஞ்ச நேரத்தில் பேச்சுவாக்கில் தன்னைப் பற்றிச் சகலமும் அவள் சௌமினியிடம் சொல்லிக் கொண்டு விட்டாள்.

## 31

சௌமினிக்கு நட்பைப் பற்றி அலாதியான சில அபிப்ராயங்கள் இருந்தன. யாரிடமும் அவள் மனம்விட்டு உண்மையான பாசத்துடன் பழகியதேயில்லை. உள்ளன்பு நிறைந்த நட்பில் அவளுக்கு என்றுமே நம்பிக்கை கிடையாது. தண்ணீரில் கிடக்கும் கெண்டைமீனைக் கையில் பிடித்து எடுத்ததும் துள்ளி வழுக்கிக் கொண்டு தண்ணீருக்குள் பாய்ந்து மறைந்தோடி விடுவதுபோல் அவள், சிநேகிதிகளிடம் ஒட்டாத நிலையில் உறவாடி மறைந்துவிடும் குணமுடையவள். புதிதாக ஒரு சிநேகிதியைச் சம்பாதித்துக் கொண்டதும் அந்த நட்பு விரைவில் வெறுப்பாக மாறும் அளவுக்கு ஒரேயடியாக விசேஷமாகக் கொண்டாடுவாள். காரில் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு ஊரைச் சுற்றிப் பவனி வருவாள். அடிக்கடி சினிமா, நாடகக் காட்சிகளுக்கு அழைத்துச் செல்வாள். தன் வீட்டிற்கு அடிக்கடி வரச்சொல்லி விருந்து கொடுத்து

உபசரிப்பாள். எத்தனை வேகமான சௌமினியின் சிநேகிதம் விஷம்போல் முற்றுகிறதோ அத்தனை வேகத்திலே முறிந்து போய் விடுவதும் சகஜமான விஷயமாகும்.

புதிய சிநேகிதியின் நட்பு பழையதானவுடன் காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறிவதுபோல் உதறித்தள்ளி விடுவாள். முகத்துக்கு நேர் வந்து எதிர்ப்பட்டாலும் தெரியாதவள் போல் மிடுக்காக நடந்து அப்பால் செல்லும் துணிச்சல் நிறைந்தவள். சௌமினியின் தளுக்கான பேச்சுக்களையும், தேன் போன்ற வார்த்தைகளையும் உண்மையான சிநேகிதம் என நம்பி நட்புரிமை பாராட்டி, பின்னர் அவமானப்பட்ட பெண்கள் பலர் ஜலங்கொண்டானில் இருந்தனர். நெருப்பைக் கண்டு விலகுவது போல் தங்களுக்கு அவளிடம் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பிறகு, அவள் அருகில் அணுக அஞ்சி அவர்கள் ஒதுங்கிச் சென்றதும் உண்மையே!

புதிதாகத் தான் கண்டெடுத்த இந்தச் சிநேகிதத்தை விரைவாகக் கொண்டாடி முடிக்க மிகமிக விரும்பினாள் சௌமினி. அதற்குப் பின்னர் அவர்கள் தங்கியிருந்த நான்கு நாட்களில் ஐந்து தடவைகள் துளசியம்மாள் வீட்டிற்குச் சென்று வெகுநேரம் இருந்து பேசி உறவாடிவிட்டு வந்தாள். இரண்டு பேரும் நெடுநாள் பழகிய சிநேகிதிகள் போல் சேர்ந்தாப்போல் கடைத் தெருக்களைச் சுற்றிப் பார்த்தார்கள். சேர்ந்து சினிமாவுக்குச் சென்றார்கள். சேர்ந்தாப் போல் சிரித்தார்கள். சேர்ந்தாப்போல் சாப்பிட்டார்கள். அவர்களது நட்பு வளர்ந்த வேகத்தைப் பார்த்தால் சேர்ந்தாப் போல் உயிரைக்கூட விட்டு விடுவார்கள் போல் தோன்றியது. அவர்கள் நட்பு அத்தனை கடுமையாகி விட்டது சில நாட்களில்.

இதை இன்னும் அவள் அமோகமாகக் கொண்டாடிக் களிக்குமுன், "எத்தனை நாட்கள் வெளியூரிலேயே தங்கியிருப்பது? வியாபாரம் குட்டிச்சுவராகிக் கொண்டு வருகின்றது. உடனே ஊருக்குப் போயாக வேண்டும். கட்டு மூட்டையை" என்று திடீர் உத்தரவு போட்டு விட்டார் ஸ்ரீமான் நாராயணன். "இன்னும் ஒரு வாரமாவது இருந்துவிட்டுப் போவோமே. இப்பொழுது சென்றால் ஜலங்கொண்டானில்



வெய்யில், தலையைப் பிளக்கும்" என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். நாராயணனுக்குத் தமது இளைய மனைவிமீது மட்டற்ற பாசம் என்றாலும் அடிக்கடி வலிப்பு வருவதுபோல திடீரென்று ஒரு பிடிவாதம் அவருக்கு வந்துவிடும். அது சமயம் தன்னைப் படைத்த கடவுளே வந்து முன்னால் நின்றால்கூட ஆசாமி அசைந்து கொடுக்க மாட்டார்.

ஐந்து வருஷத் தாம்பத்திய வாழ்வில் கணவனையும் அவரது குடும்பத்தவரையும் அணுஅணுவாக அறிந்து கொண்டிருந்த சௌமினியால் மேலே பேச முடியவில்லை. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டாள். ஆனால் அவள் உள்ளத்தில் எந்த நிமிஷமும் பீறிக் கொண்டு புறப்பட்டு விடும்போல் கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. இன்னொரு வகையிலும் அவர் அவளுடைய சிற்றத்தைக் கிளறிவிட்டு விட்டிருந்தார். நீண்ட தூரம் செய்த பிரயாணத்தின் களைப்பைச் சற்று ஆற்றிக் கொள்ளக்கூட அவகாசம் கொடுக்காது, வீட்டு வாயிலை அடைந்தவுடன், "சந்திராவை உடனே போய் பார்த்தாக வேண்டும்" என்று துடித்தார்.

தந்தை, மகள் மீது காட்டிய இந்தப் பரிவை சௌமினியால் சகிக்கவே முடியவில்லை. என்றைய தினம் அவள் ஸ்ரீமான் நாராயணனின் மனைவியாக அந்த வீட்டிற்குள் நுழைந்தாளோ, அன்றிலிருந்து அவளுக்கும் மூத்தவள் மக்களுக்கும் துவேஷம்தான் வளர்ந்து கொண்டு வந்ததே ஒழியப் பாசம் கடுகளவும் தலைகாட்டியதில்லை. இரண்டாவது தாரத்தின் மகன் ஜெகதீசன் மீதாவது அவளுக்கு அன்பு உண்டோ என்றால் அதுவுமில்லை. பைத்தியக்காரன் என்று அவனைக் கண்டால் மெத்த அலட்சியம். இன்னும் பல காரணங்களை உத்தேசித்து உண்மையான மன உணர்ச்சியை அவள் அவனிடம் காட்டிக் கொண்டதேயில்லை.

கணவன் பேச்சைத் தவிர்க்க முடியாமல் அவர் பின்னால் சந்திராவின் அறைக்குள் சென்றாள். வழக்கம்போல் சந்திரா தன்னுடைய நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். ஸ்ரீதரன்

ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்தான். இருவரும் அவர்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் போல்தான் காணப்பட்டனர். ''போன கடிதத்தில் உனக்கு ஜலதோஷம் என்று எழுதியிருந்தாயே, இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது? தனியே ரொம்பக் கஷ்டப்பட்டாயா? அப்பாவுக்கும் எனக்கும் சதா உன் நினைவுதான்?'' என்று தேன் போன்ற குரலில் சொல்லிவிட்டு அருகில் வந்து நின்றாள்.

''தற்சமயம் என்னைக் கவனித்துக் கொள்ளும் நர்ஸ் பெண் மிக்க உதவிகள் செய்தாள். அதனால் நான் முன் போல் அதிகம் கஷ்டப்படவில்லை'' என்று பட்டென்று பதில் சொல்லிவிட்டு, தன் தந்தை பக்கம் நாற்காலியைத் திருப்பிக்கொண்டு விட்டாள் சந்திரா.

''குழந்தை ரொம்ப இளைத்துவிட்டாளே. ம்!... ஏனம்மா, நீ நன்றாக சாப்பிடுவதில்லையா? டாக்டர் கொடுத்த டானிக்கை தவறாது சாப்பிடுகிறாயா?'' என்று அன்போடு விசாரித்த தந்தை, அருகில் வந்து செல்லமாக அவள் முதுகைத் தடவிக் கொடுத்தார். பட்டுப்பூச்சியின் சிறகுகள் போல் படபடவென்று இமைகள் துடித்த அவளது விழிகளில் தேங்கி நின்ற அன்பையும், கனிவையும் காண சௌமினிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ''கால் நொண்டியாகிவிட்ட போதிலும் கர்வத்திற்கு குறைவில்லை. அப்பன் தன்மீது அன்பாக இருக்கிறான் என்ற ஆணவம்!'' எனத் தனக்குள் எண்ணி வெகுண்டவளாக ஜன்னல் பக்கம் திரும்பினாள்.

தன் வருகையைப் பற்றி விருப்போ வெறுப்போ ஏதும் பிரதிபலிக்காத சலனமற்ற முகத்துடன் சிலைபோல் நின்று கொண்டிருந்த கிரிதரனைக் கண்டதும் பொறாமையால் அவள் நெஞ்சு குமுறியது. அன்பாகப் பேசினாலும் சரி, கோபம் காட்டினாலும் சரி, அவமானப்படுத்தினாலும் சரி, எதற்கும் அசைந்து கொடுக்காத கற்பாறை போல் கடின சித்தமுடையவனாக இருந்தான் கிரிதரன். சந்திராவை வெறுப்பதைவிட அவனை அவள் இன்னும் ஒருபடி கூடுதலாகவே வெறுத்தாள். இருந்த போதிலும், மாதுளை போன்ற தன் அதரங்களை விரித்து முத்துச் சுடர் போன்ற புன்னகையை அள்ளி வீசினாள்.



''கிரி எப்படியிருக்கிறாய்? வெய்யிலில் ரொம்ப அலைந்தாயோ? கறுத்துவிட்டிருக்கிறாயே?'' என்று கனிவுடன் விசாரித்தாள்.

'சௌக்கியம்தான்!' என்று சுருக்கமாக பதிலளித்துவிட்டுக் கிரிதரன் அவள் அமர்ந்து கொள்ள ஒரு ஆசனத்தை இழுத்துப் போட்டுவிட்டுத் தன் தந்தையின் பக்கம் சென்று நின்று கொண்டான். வேண்டா வெறுப்பாக அவன் செய்த உபசாரத்தை ஏற்க சௌமினிக்கு மனம் இல்லை.

''நின்று கொண்டே ஏன் பேசுகிறீர்கள்? உட்காருங்கள். உங்கள் மூவருக்கும் பேச ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கும். அதனால் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருங்கள். எனக்குக் கொஞ்சம் காரியங்கள் கவனிக்க இருக்கின்றன. பிறகு இங்கே வந்து கலந்து கொள்கிறேன்'' என்று படபடவென்று கணவனிடம் பகர்ந்துவிட்டு விர்ரென வெளியே வந்துவிட்டாள்.

இந்தச் சம்பவம் நடந்து வெகுநேரம் சென்றுவிட்டிருந்த போதிலும் அவள் கோபம் இன்னும் அடங்கவில்லை. துச்சமாகத் துரும்பெனத் தன்னை மதிப்பிடும் கிரிதரனின் கர்வம்பிடித்த நெஞ்சை, கைக்கோடாரி கொண்டு பிளந்து சுக்கல் நூறாக்கிவிட மாட்டோமா என்று உள்ளத்தில் ஆத்திரம் அலைபுரண்டு கொண்டிருந்தது.

கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். எழுந்து முகத்தைக் கழுவிக் கொள்ள இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருப்பதை உணர்ந்தாள். பெருமூச்செறிந்த வண்ணம் பத்திரிகையை திருப்பலானாள். நேரம் ஆக ஆக முகத்தில் போட்டிருந்த பூச்சு நெருப்பாகப் பற்றி எரிந்ததை அவளால் சகிக்க முடியவில்லை.

ஸ்ரீமான் நாராயணன் தமது உள்ளத்தைக் கவர்ந்து விட்டிருந்த இளைய மனைவிக்கு எவ்விதமான குறையும் வைக்கவில்லை. 'கணவர் வயதானவர். தன் இளமைக்கு ஏற்காதவர்' என்று எங்கே அவள் எண்ணி ஏங்கிவிடுவாளோ என்ற அச்சத்தில் அவள் விரும்பிய பொருள்களையெல்லாம்

விரைவாக வாங்கிக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினார். திருமணம் ஆன மறு வருஷம் தனது மனைவியுடன் ஒரு வருஷ காலம் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் உல்லாசமாகப் பிரயாணம் செய்தார். அந்த நீண்ட பிரயாணத்தின்போது கணவர் தன் கைநிறையக் கொடுத்த காசில் தன் மனதைக் கவர்ந்த பொருள்கள் பலவற்றை வாங்கித் தனது பெட்டிகளை நிரப்பிக் கொண்டிருந்தாள் சௌமினி. நியூயார்க்கில் வாங்கிய காதணி, ஜப்பானில் வாங்கிய செருப்பு, லண்டனில் வாங்கிய குடை என்று அவளிடம் அந்தப் பிரயாணத்தை நினைவூட்டும் பொருள்கள் பல இருந்தன. அவைகள் எல்லாவற்றையும் விட அவள் வாங்கிய ஒரு பொருள் மிகவும் விசேஷமாக இருந்தது. பாரிஸ் நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் பெண்களுக்கு அழகு செய்யும் ஒரு அழகு மாளிகைக்குள் அவள் ஆவல் தாங்கமுடியாது நுழைந்து விட்டாள். அதை நிர்வகித்து வந்த பிரஞ்சுக்கார 'மாடம்' அவளது கூந்தலை மேலே வழித்து வாரி முடித்துவிட ஐம்பது ரூபாய்க்கு மேல் பீஸ் வாங்கியதுடன் ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு சாமானையும் அவளிடம் விற்றுவிட்டாள்.

பல வருஷங்கள் தான் பலவித அனுபவங்களில் கண்டறிந்த அழகு சாதனம் என்று ஒரு பெரிய ஜாடியில் மெழுகு போன்ற ஒரு பொருளை நிறைத்து மூடி, சுத்தமாகக் காகிதத்தினால் அழகாகச் சுற்றி அவள் கையில் கொடுத்து விட்டாள். 'அதை அன்றாடம் முகத்திலே அப்பிக் கொண்டு ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்தால் யௌவனம் என்றென்றும் நிலைத்து நின்றுவிடும்' என்று அதை உபயோகிக்கும் ரகசியங்கள் அடங்கிய ஒரு காகிதத்தையும் அவள் கையில் செருகி விட்டாள். அது வெறும் போலிச்சரக்கு என்ற உண்மையை உணராத சௌமினி, என்றென்றும் பதினாறு வயது என்று தன்னை எல்லோரும் மதிக்க வேண்டும் என்ற பேரவாவில் அந்த அழகு ரகசியத்தின் விதிகளைக் கொஞ்சமும் விடாது கடைபிடித்து வந்தாள். தினசரி அந்த மெழுகுப் பூச்சை முகத்தில் பூசிக் கொண்டு ஒருமணி நேரமாவது வெறுமே உட்கார்ந்திருப்பதில் சளைக்க வில்லை அவள். கணவன்



எத்தனை அவசரப்படுத்தினாலும் விரைவாக அவள் வெளியே சட்டென்று உடுத்திக் கொண்டு புறப்பட்டு விடுவதில்லை. காலிலிருந்து தலைவரை தான் செய்து கொண்டிருக்கும் சிங்காரத்தில் மிக்க அக்கறை காட்டி, ஜலங்கண்டானில் தன்னைவிட அழகி யாருமில்லை என்ற பெயர் பெறவேண்டும் என்ற ஆசை காரணமாக அவளது அலங்காரம் மணிக்கணக்கில் நீண்டு கொண்டு போகும் வழக்கமாக இருந்தது.

சௌமினி மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தாள். இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருந்தன. மறுபடியும் பத்திரிகையைப் புரட்டினாள். அதுசமயம் யாரோ கதவை நகங்களால் பிராண்டும் சப்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள். நாராயணனாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி. அவள் அலங்காரம் முற்றுப் பெறும்வரை யாரையும் தன் அறைக்குள் என்றுமே அனுமதிப்பது வழக்கமில்லை. அருகிலிருந்து அவளுக்குப் பணிபுரியும் வேலைக்காரி தைலம்மாள் கூட எஜமானியம்மாள் அலங்கரித்துக் கொண்டிருக்கையில் உள்ளே வரத்துணிய மாட்டாள். அத்தனை துணிச்சல் யாருக்குமே கிடையாது. எனவே எரிச்சலை அடக்க மாட்டாமல் கதவுப்பக்கம் திரும்பி, ''யாரது?'' என்று அதட்டிக் கேட்டாள்.

'நான்தான்! கதவைத் திறவுங்கள்'' என்று தாழ்ந்த குரலில் யாரோ வெளியிலிருந்து பேசியதைக் கேட்டதும் அவளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. வேகமாக எழுந்து வந்து கதவைக் கொஞ்சம் திறந்தாள். வெளிப்புறத்திலிருந்து தள்ளிக் கொண்டு உள்ளே வந்து நின்ற ஜெகதீசன் மிகப் பரபரப்புடன் காணப்பட்டான். ''சித்தி ஒரு சமாசாரம் உங்களுக்குத் தெரியுமா! சத்திராவுக்கு உதவி செய்ய ஒரு புது நர்ஸ் வந்திருக்கிறாள். அந்த...'' என்று ஆரம்பித்தான் அவன்.

'தலை போகிற காரியம்போல் அவசரமாகச் சொல்ல வந்து விட்டான் மடையன்!' எனத் தனக்குள் எண்ணிப் பற்களைக் கடித்துக் கொண்டாள் சௌமினி. ''புது நர்ஸ் வந்தால் வரட்டுமே. அவளுக்கென்ன நான் ஆரத்தி எடுத்துக் கொட்ட வேண்டுமா?'' என்று ஏளனமாகக் கேட்டுவிட்டுத்

திரும்பினாள். தன் சிற்றன்னையின் முகத்தை அப்பொழுதுதான் ஊன்றிக் கவனித்தான் ஜெகதீசன். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''சித்தி! இதென்ன வேஷம்!'' என்று கேட்டுவிட்டு நகைக்க ஆரம்பித்து விட்டான்.

கீழ் உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டாள் சௌமினி. அவன் முகத்திலே நான்கு அறைகள் கொடுத்துக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும்போல் வந்த தனது சீற்றத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ''ஒன்றுமில்லை. எனக்கு பங்களூர் வைத்தியர் கொடுத்த மருந்தைப் பூசிக் கொண்டிருக்கிறேன். நீ வெளியே போகத் தயார் செய்து கொள். எனக்கு டவுன் வரை அவசரமாகப் போக வேண்டும்'' என்று குழந்தைக்குச் சொல்வது போல் கொஞ்சம் குரலில் கூறிவிட்டு, அவனை வெளியே பிடித்துத் தள்ளாத குறையாக அப்புறப்படுத்திக் கதவைக் கெட்டியாகத் தாளிட்டுக் கொண்டாள். அன்று நடக்கும் விஷயங்கள் யாவும் ஒன்றின் மேல் ஒன்றாக அவளது கோபத்தைத் தூண்டுகின்றனவாக இருந்ததனால் பீறிக்கொண்டு புறப்பட்ட தனது ஆத்திரத்தை யார் மீது காட்டுவதென்று தெரியாமல், அருகில் அமைந்திருந்த ஸ்நான அறையின் கதவை அறைந்து சாத்திக் கொண்டாள். அப்பொழுதுதான் அவளது சினம் கொஞ்சம் அடங்கியது.

# 32

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஸ்நான அறையை விட்டு வெளியே வந்த சௌமினி தனது சுருண்ட கூந்தலை அவிழ்த்துப் போட்டுக் கொண்டு கண்ணாடி முன் வந்து உட்கார்ந்தாள். வாசனைத் தைலத்தை உள்ளங்கையில் ஊற்றி விரல்களில் தோய்த்து மெல்லத் தலை முழுவதும் சாவகாசமாகத் தேய்த்துக் கொண்டு, பிறகு சீப்பை எடுத்து மெல்ல வாரத் தொடங்கினாள்.

நேரத்தைப் பற்றிச் சிறிதும் கவலையின்றிக் கூந்தலை இழைய வாரி, தலை உச்சியில் சிங்காரமாக வட்டவடிவில்



கொண்டை முடித்துக் கொண்டாள்! இப்படியும் அப்படியுமாகக் கண்ணாடி முன் தன் தலை அலங்காரத்தைப் பார்த்தபடி நின்ற அவள் திடுக்கிட்டு விட்டாள். அழகாக அலங்கரித்துக் கொண்டு அவள் வெளியே புறப்பட்டால் யாருமே அவளது வயதை கணிக்கவே முடியாது.

பால் வடியும் பச்சிளங் குழந்தை முகம், பட்டுப் போன்ற தளும்பு மேனி, துவண்ட இடை, உல்லாச நடை, முப்பத்தெட்டு வயதை அவள் எட்டிக் கொண்டிருந்த ரகசியம் அவள் ஒருத்திக்குத்தான் தெரியும். திருமணத்தின் போது தனக்கு இருபத்திரண்டு வயது என்று அவள் கூசாமல் கூறிய பொய்யை ஸ்ரீமான் தாசாவணனும் ஜலங்கண்டான் வாசிகளும் உண்மையென்று நம்பி விட்டிருந்தார்கள். அத்தனை இளமை கொஞ்சிய அந்தச் சுந்தரவனத்தின் மீது சுருண்டு விளையாடிய நெற்றிக் கூந்தலில் இளநரை ஓடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு அவள் நடுநடுங்கி விட்டாள்!

அவசரமாக மை டப்பாவைத் திறந்து சுட்டுவிரலில் லேசாக மையை வழித்து, நரைத்த கூந்தல் மீது பூசி மறைத்துக் கொண்டாள். அப்பொழுதுதான் அவளுக்கு நிம்மதியாகப் பெருமூச்சு விட முடிந்தது. பவுடர் பூச்சை முகத்தில் பூசுவதும், துடைப்பதும், நெற்றிப் பொட்டைப் பல ரூபத்தில் மாற்றி மாற்றி வைத்துக் கலைத்துக் கொள்வதுமாக நேரம் போவதே தெரியாது நிம்மதியாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். ஒரு வழியாக முகச்சிங்காரத்தை முடித்துக் கொண்டு எழுந்து, இடுப்புச் சாவியை உருவி இரும்பு பீரோவைத் திறந்தாள். அடுத்தபடியாக ஆடை அலங்காரப் படலம் தொடங்கியது. ஒரு தடவை உடுத்திய புடவையை மறுமுறை கண்களால் பார்ப்பதும் அவளுக்குப் பிடிக்காத விஷயமாதலால், அடுக்காகத் தட்டுகளில் மடித்து வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த ஆடைகளைக் கிரையைக் கிளறுவது போல் கிளறி உதறிக் குவித்து விட்டு முடிவில், சமீபத்தில்தான் வாங்கி வந்த புதிய புடவைக் கட்டிலிருந்து கருநீலப் பித்தாபுரம் பட்டுச் சேலையை எடுத்தாள்.

அதற்கு எடுப்பாகத் தங்க நிறச்சோளியை எடுத்துக்

கொண்டு பீரோவைப் பூட்டினாள். ஆடைகளை உடுத்திக் கொண்ட பின்பு அணிகலன்களைத் தேடும் படலம் துவங்கியது. பீரோவுக்குப் பக்கத்திலிருந்த சிறு இரும்புப் பெட்டியைத் திறந்து புடவைக்கு ஒத்தபடி இருக்க ஹைதராபாத்திலிருந்து பிரத்தியேகமாக வரவழைத்திருந்த நீலக் கற்கள் பதித்த நெக்லஸையும், காதணிகளையும் அணிந்து கொண்டாள். கைகளில் நீலநிறப் பிளாஸ்டிக் வளையல்களை முழங்கைவரை ஏற்றிக் கொண்டு, வேலைக்காரி தயாராகத் துடைத்து வரிசையாக வைத்திருந்த பாதரட்சைகளின் அருகில் போய் ஆராய்ந்தாள். மஞ்சள் நிற அழகுப் பைக்கு எடுத்தது மஞ்சள் நிற வெல்வெட் செருப்பு எனத் தீர்மானித்துக் கொண்டு, மணிகள் வைத்துத் தைத்த அழகிய காஷ்மீர் வெல்வெட் பாதரட்சைகளை அணிந்து கொண்டு கண்ணாடி முன் போய் நின்றாள்.

மை கசிந்த விழிகள் மருளமருளப் புரண்டு கொண்டிருந்ததனால்தான் கண்ணாடி பிரதிபலித்த மோகன உருவம் ஒரு உயிருள்ள அழகிய பெண்மணியுடையது எனச் சொல்லமுடியும். இல்லாவிடில் கற்பனையெல்லாம் திரட்டி ஒரு அற்புதச் சிற்பி செதுக்கிய செம்பொன் சிலை எனத்தான் தோன்றும். அத்தனை அழகாகக் காணப்பட்டாள் அவள். தன் மோகன வடிவையே பலமுறை பார்த்து மயங்கியவாறு நின்ற சௌமினி வெளி ஹால் கடிகாரம் மணி ஒன்றடிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு விரைவாக அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

நன்றியுள்ள நாய்க்குட்டிபோல் அவள் வரவிற்காக வராந்தாவில் காத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் வேலைக்காரி தைலம்மாள். அவள் கையிலிருந்த பூக்கூடையைக் கண்ணுற்றதும் உள்ளே வரும்படி கையால் சைகை செய்துவிட்டு மறுபடி தனது அறைக்குள் புகுந்து கொண்டாள் சௌமினி. ஜாதிமல்லிகையும், கனகாம்பரமும் சேர்ந்து அழகாகத் தொடுத்து, எஜமானிக்காக என்று விசுவாசமுடன் தான் எடுத்துவந்த மலர்ச்சரத்தை மேஜைமீது வைத்துவிட்டு அடக்கமாக நின்றாள் அந்தப் பணிப்பெண்.



எனினும் சற்று முன் தான் சுத்தப்படுத்தி விட்டு போயிருந்த அந்த அறை இருந்த அலங்கோலத்தைக் கவனிக்கத் தவறவில்லை தைலம்மாள்.

திறந்த கதவு வழியே உள்ளே தெரிந்த ஸ்நான அறைக்குள் கண்களை ஓட்டியவள் தனக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டாள். ஸ்நான அறைத் தொட்டியில் ஒரே சோப்பு நுரையும் அழுக்குமாக இருந்தது. நனைந்த துவாலை கீழே தரையில் பிழிபட்டுக் கிடந்தது. களைந்து போட்ட ஆடைகள் ஒரு மூலையில் தாறுமாறாகக் கிடந்தன. மஞ்சள் பொடியும், சீயக்காய்த் தூளும் தரையில் சிதறிக் கிடந்தன. அறை முழுவதிலும் முழங்கால் வரை வந்து விடும் போல் சிதறி விழுந்த தண்ணீர் பிரவாகமாக ஓடிக்கொண்டிருந்தது. ஸ்ரீமதி நாராயணனுக்கு அந்தரங்கப் பணிப் பெண்ணாக அந்த வீட்டில் என்று வேலைக்கு அமர்ந்தாளோ அன்றே எஜமானியம்மாளின் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் பக்குவமாகப் புரிந்து கொண்டிருந்தாள் அவள்.

எனவே, அவள் மேஜைமீது சிதறிக் கிடந்த பவுடர் தூளைத் துண்டினால் துடைத்துச் சுத்தப்படுத்திவிட்டு தரையில் எஜமானியம்மாள் உதறிப் போட்டிருந்த புடவைகளை எடுத்து விரைவாக மடித்து ஒழுங்காக வைக்கத் தொடங்கினாள். கொண்டையில் பூச்சரத்தைச் சுற்றிக் கொண்டு ஒருவழியாகத் தனது அலங்காரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வெளியே புறப்பட ஆயத்தமான சௌமினி, சாவிக் கொத்தை இடுப்பிலிருந்து உருவினாள். அறையின் சாவியை அதனின்று தனியே எடுத்து வேலைக்காரியிடம் நீட்டி, ''வேலை முடிந்ததும் கதவைப் பத்திரமாகப் பூட்டி விடு'' என்று உத்தரவிட்டு வெளியே போகத் திரும்பினாள்.

தைலம்மாளுக்குக் காலையிலிருந்து ஒரு விஷயம் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. அதை எஜமானியம்மாளிடம் சொல்லாவிட்டால் அவள் செத்துவிடுவாள் போல் வம்பு அவள் நெஞ்சை அடைத்தது.

''அம்மா! உங்களுக்கு விஷயம் தெரியுமல்லவா? சந்திரா

அம்மாவுக்கு ஒரு புது நர்ஸ் வைத்திருக்கிறார்கள். அவள் ரொம்ப...'' என்று ஆரம்பித்தாள்.

வெளியே போகக் காலடி எடுத்து வைத்த எஜமானி விருக்கெனத் திரும்பி ''வைக்கட்டுமே! எனக்கென்ன அதைப்பற்றி! இது பெரிய இண்டர் நேஷனல் நியூஸ் போல் சொல்ல வந்துவிட்டாயே, எத்தனையோ பேரை நான் கொண்டு வந்து வைத்தேன். ஒருத்தரும் இங்கே நிலைத்து இருக்கவில்லை. இப்பொழுது தானே பார்த்துத் தேடி ஒருத்தியை வேலை செய்ய அமர்த்திக் கொண்டிருக்கிறான். இந்த நர்ஸாவது முடிவுவரை நிலைத்து இருக்கட்டும் பார்க்கலாம்'' எனச் சூள் கொட்டினாள் அலட்சியமாக.

''முடிவுவரை என்கிறீர்களே அம்மா? அப்படியானால்....'' என்று வம்பு விசாரித்தாள் ஆவலை அடக்க முடியாத தைலம்மாள்...

''பின்னே, இந்தப் பெண் எழுந்து நம் எல்லோரையும் போல் நடந்து ஓடியாடி வாழப்போகிறாளாம்... இப்பொழுது நாற்காலியுடன் கிடக்கிறாள். அடுத்தபடி படுக்கையோடு படுக்கையாகி விடுவாள். அதற்குப் பின்னர் நான்கு பேர்கள் தோள்கள்மீது புறப்பட வேண்டியதுதானே'' என்றாள் ஆத்திரத்துடன்.

தைலம்மாள் பெருமூச்சு விட்டாள். ''பாவம்! இந்த வாழ்வைவிட அந்தப் பெண்ணிற்குச் சாவு எவ்வளவோ மேலானது அம்மா?'' என்றாள் அனுதாபத்துடன்.

''நானாக இருந்தால் இப்படி நடைப்பிணமாக இருப்பதைவிட நிஜப் பிணமாவது மிக்க நலம் என என்னைச் சுட்டுக் கொண்டு செத்து ஒழிந்திருப்பேன். சாகவும் மாட்டாமல் பிறருக்கு பாரமா..'' என்று மேலும் பேச முடியாது பொங்கி வந்த சினத்தைத் தீர்த்துக் கொள்ள பற்களை நறநறவெனக் கடித்தாள் எஜமானி.

ம்! என்று மீண்டும் பெருமூச்சுவிட்ட தைலம்மாள் ஸ்நான அறையைச் சுத்தப்படுத்த உள்ளே சென்று விட்டாள். கையில் டம்பப் பையைச் சுழற்றிக் கொண்டு உல்லாச நடைபோட்ட



வண்ணம் வெளியே கிளம்பிய சௌமினி வராந்தாவைத் தாண்டி மாடியின்முன் ஹாலுக்குள் சென்றாள்.

ஸ்ரீமான் நாராயணன் மின்சார விசிறி அடியில் மிருதுவான சோபா ஒன்றில் ஹாலின் நடுவில் அமர்ந்திருந்தார். தமது இளம் மனைவிக்கு ஈடாக இருக்க எண்ணி அவர் பிரயாணத்தின்போது அணிந்து கொண்டிருந்த புஷ்கோட்டும், கால்சராயும் புழுக்கத்தை உண்டு பண்ணியதால் அவைகளைக் களைந்து எறிந்துவிட்டு குளிர்ச்சியாக இருக்க நூல் வேட்டி ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தார். சோபா மீது சரிந்த துவாலையை ஒரு கரத்தால் பிடித்துக் கொண்டு வலதுகரத்தில் இருந்த ஒரு காகிதத்தை கண்களுக்குச் சற்றுத் தொலைவில் வைத்து வாசிக்க முயன்று கொண்டிருந்தார்.

உல்லாசமான வாழ்க்கையும், போஷாக்கான உணவும் சேர்ந்து அவரது எடையை நாளடைவில் அபிவிருத்தி செய்து கொண்டிருந்ததனால் முன்னைவிட மிகப்பருத்து விட்டிருந்தார் அவர். எத்தனையோ பத்தியமாகச் சாப்பிட்டும் கனத்துவிட்ட தமது உடலை அவரால் கரைக்க முடியவில்லை. முன்னால் சரிந்துகொண்டு வந்த வயிற்றையும், அதன்மீது அலைகளாகப் படர்ந்து கொண்டிருந்த சதை மடிப்புகளையும் அவர் உட்கார்ந்திருந்த கோலத்தையும் கண்ட சௌமினிக்குத் தஞ்சாவூர் தலையாட்டிச் செட்டியார் பொம்மையின் ஞாபகம்தான் ஏற்பட்டது.

''கண்ணாடி போட்டுக் கொண்டு படிக்கிறதுதானே? ஏன் இப்படி கண்களைப் பாழடித்துக் கொள்கிறீர்கள்?'' என உரிமையாக அதட்டிக்கொண்டு அருகில் வந்து அமர்ந்தாள்.

குப்பென்று நாசியைத் தாக்கிய மல்லிகை மலரின் மணத்தை அனுபவித்த வண்ணம் தமது ஆசை மனைவியை நிமிர்ந்து பார்த்து, தமது போலிப் பற்கள் அனைத்தையும் காட்டி சிரித்தார் நாராயணன்.

''கண்ணாடி இல்லாமலே இப்பொழுதெல்லாம் என்னால் வாசிக்க முடிகிறதே!'' என்று ஜம்பமாகக் கூறிவிட்டு, காகிதத்தைக் கீழே வைத்தார். இடது புறமிருந்த சிறிய மேஜை

மீது அம்பிப்பயல் ஒரு கண்ணாடி டம்ளரில் ஆரஞ்சு ரஸத்தை நிறைத்து வந்து வைத்துப் போயிருந்தான். அதைக் கையில் எடுத்துக் கொண்டு மனைவியை பார்த்து மோகனமாக முறுவலித்துவிட்டு ''கொஞ்சம் பழரஸம் சாப்பிடேன்'' என்று குழைவுடன் கொஞ்சினார்.

வேண்டா வெறுப்பாக ஒரு வாய் குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்துவிட்டு எழுந்தாள் சௌமினி.

''நான் கொஞ்சம் வெளியில் போகவேண்டும்'' என்று முணுமுணுத்தாள். ''தெரியுமே ஊர் வந்ததும் உனக்கு உடனே சுத்த ஆரம்பிக்க வேண்டும். பதை பதைக்கிற இந்த வெய்யிலில் எங்கே அப்படி அவசரமாகப் போக வேண்டும்?'' என்று கணவர் அதட்டினார் செல்லமாக. சௌமினியின் அழகிய விழிகளில் திரண்டு நின்ற பிடிவாதக் குறியை லேசாகக் கவனித்துவிட்டு, கீழே வைத்திருந்த காரியாலய காகிதக் கட்டுகள் கொண்ட தோல் பையைத் தூக்கி எடுத்து சோபாவில் வைத்துக் கொண்டு திறந்தார். அதைத் துழாவி உள்ளிருந்த தமது மணிபர்ஸை எடுத்தார். அதிலிருந்து சில ரூபாய் நோட்டுகளை உருவி எடுத்து மனைவியிடம் நீட்டினார்.

''இந்த வருஷம் வியாபாரம் கொஞ்சம் மந்தமாகி விட்டது. அடுத்த வருஷம் இன்னும் மோசமாகிவிடும் போலிருக்கிறது. அதனால் நம் வீட்டுச் செலவைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால்...'' என்று இழுத்தார் கணவர்.

''நான் செலவுக்குக் கேட்கும்பொழுதுதான் நீங்கள் சிக்கனத் திட்டங்களைப் பற்றிப் பேசத் தொடங்குகிறீர்கள். இஷ்டமில்லாவிட்டால் கொடுக்க வேண்டாமே!'' என்று கொஞ்சலாகக் கோபித்துக் கொண்ட சௌமினி, தனது அழகுப் பையில் பணத்தைத் திணித்துக் கொண்டாள்.

'எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள்?' என்று கேட்கும் பாவனையில் தனது புருவங்களை உயர்த்தி, கணவனை உறுத்துப் பார்த்தாள் அவள்.

''ஐந்நூறு ரூபாய்கள் கொடுத்திருக்கிறேன். இந்த மாதச் செலவிற்கு வைத்துக் கொள். அடிக்கடி கேட்டுத் தொந்தரவு



செய்யாதே. பணம் மரத்தில் காய்க்கவில்லை. தெரியுமா?'' என்று அன்புடன் கடிந்து கொண்டு, தமது மனைவியின் கன்னத்தில் செல்லமாக மெல்லத் தட்டினார்.

பின்னால் யாரோ பலமாக இருமும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டு நாராயணன் தமது மேல்துண்டை உதறிக் கொண்டு எழுந்து நின்றார்.

மனைவியும் புருஷனும் அந்தரங்கமாகப் பேசும்போது எப்படிக் குறுக்கிடுவது என்று புரியாமல் சங்கோஜத்தில் தவித்துக் கொண்டிருந்த கிட்டா தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு கைகளைக் கட்டிய வண்ணம் தலையைக் குனிந்துகொண்டு மிகவும் பணிவுடன், ''சாப்பாடு தயாராக இருக்கிறது'' என்று எஜமானுக்குத் தெரிவித்தார்.

''சரி போ! இதோ வந்துவிட்டோம்'' என்று பதிலுக்குக் கம்பீரமான குரலில் உத்தரவிட்ட எஜமானர் ஹாலின் முன்னும் பின்னும் உலவத் தொடங்கினார்.

''எனக்குப் பசிக்கவில்லை. நான் வெளியே போய்விட்டு வந்து பிறகு சாப்பிடுகிறேன்'' என்று விர் என்று அம்புபோல் பாய்ந்து எழுந்து நின்றாள் சௌமினி.

''வெளியே போக அத்தனை அவசரமென்ன? சாப்பிட்டு விட்டுப் போகலாம். பலநாட்கள் பொறுத்து வீட்டிற்கு வந்திருக்கிறோம். குழந்தைகளுடன் சேர்ந்து சாப்பிடாமல் வெளியே போகிறாளாம், வெளியே! இதென்ன அசட்டுத்தனம்!'' என்று பெரிய குரலில் ஓங்கி அவர் ஒரு அதட்டல் போட்டார்.

சௌமினியின் முகம் சிவந்து விட்டது. நாராயணனிடம் ஒரு கெட்ட குணம் குடிகொண்டிருந்தது. எத்தனைதான் மனைவிமீது மயக்கமிருந்த போதிலும் வேலையாட்கள், நண்பர்கள், உற்றார் உறவினர் முன்னிலையில், தான் மனைவியை அடக்கி ஆளும் ஆண்மகன் என்பதை விளம்பரப் படுத்திக்கொள்ள மெத்த விருப்பம் உடையவராக இருந்தார். நான்கு பேர்கள் முன்னிலையில் மனைவியிடம் சங்கநாதம் போல் கோபத்தில் உறுமி விடுவார். தனிமையில்

இருக்கும்போது அதற்குப் பிராயச்சித்தமாக விலையுயர்ந்த பொருள்கள் ஏதேனும் வாங்கிக் கொடுத்து ஈடு செய்து விடுவார். அப்படிப்பட்ட ஒரு விசித்திரப் பிறவி அவர்.

''அம்மாவும் சாப்பிட்டு விட்டுத்தான் வெளியே போகப் போகிறார்கள். இலைபோடு'' என்று கிட்டாவுக்கு உத்தரவிட்டுவிட்டு, கம்பீரமாக நடந்து அப்பால் சென்று விட்டார்.

மாடி வராந்தாவை ஒட்டியிருந்த பெரிய அறையின் நடுவே கிடந்த மேஜைமீது பிளாஸ்டிக் விரிப்பைப் போட்டுவிட்டு, நுனிவாழை இலைகளை வரிசையாக விரித்துப் போட்டான் அம்பிப்பயல். சுற்றிலும் நாற்காலிகளைக் கொண்டு வந்து அவன் போட்டுக் கொண்டிருக்கையில் உணவு வகைகளைச் சூடாக இலைகளில் பரிமாறினார் கிட்டா. இடது புறமிருந்த நாற்காலிகளில் எஜமானர் வந்து அமர்ந்து கொண்டார். வேண்டா வெறுப்பாக சௌமினி அடுத்த ஆசனத்தில் அவர் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

ஜகதீசன் அடுத்தபடியாகத் தன் சிறிய தாயார் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான். அதற்கு அடுத்த இடத்தில் கிரிதரன் உட்கார்ந்தான். தள்ளும் நாற்காலியை உருட்டிக் கொண்டுவந்த மஞ்சுளா கையைப் பிடித்து மெல்லச் சந்திராவை இறக்கி, அவள் தந்தையின் அருகேயிருந்த நாற்காலியில் உட்கார வைத்தாள். முதன் முதலாக எஜமானர் எஜமானி இருவர் முன்னிலையில் வந்து நின்றதனால் ஏற்பட்ட கூச்சம் மஞ்சுளாவின் கால்களை நடுங்கச் செய்தது. நெஞ்சு 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டது. அப்பால் போக அவசரப்பட்ட தன் சிநேகிதியின் கரத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள் சந்திரா.

''இவள்தான் அப்பா, மஞ்சுளா'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் தன் தந்தைக்கு.

''அப்படியா, சந்தோஷம்! அத்தை கங்காவுக்கு உறவுப் பெண்ணாக இருப்பது ஒரு வழியில் நல்லதாயிற்று'' என்று பதிலளித்த நாராயணன் ஒருமுறை தொண்டையைக் கனைத்துவிட்டு உண்பதில் நாட்டம் காட்டலானார்.



'நீயும் உட்கார்' என்று சந்திரா மிக்க உரிமையுடன் மஞ்சுளாவின் கரத்தைப் பற்றித் தனக்கு அடுத்தபடியாக இருந்த ஆசனத்தில் அமர்த்திக் கொண்டாள்.

ஒரு காலத்தில் பல கண்கள் தன்னை ஆவலுடன் உற்றுக் கவனிப்பதை உணர்ந்த மஞ்சுளா வெட்கி, முகம் சிவந்து போய் தலை நிமிர்த் துணிவு இன்றி இலையின் மேல் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு விட்டாள்.

மை கசிந்த மோகன விழிகளை அகல விரித்து, தன் எதிரேயிருந்த பெண்ணை ஏற இறங்கக் கவனித்தாள், சௌமினி ஆச்சரியத்துடன். 'இவளா புது நர்ஸ்?...' என்று ஓடியது அவள் உள்ளத்தில் சிந்தனை. சிவப்பு கட்டம் வாயில் புடவையும், பச்சை சீட்டி ரவிக்கையும், கறுப்புப் பாசிமணி மாலையும் அணிந்திருந்த போதிலும் அந்தப் பெண், ஒரு சிங்காரப் பதுமைபோல் எழில் மிக்கவளாக விளங்குவதைக் காண அவளுக்கு வியப்புத் தாள முடியவில்லை. மெல்லத் தன் கரு விழிகளை இடது புறமும் வலது புறமும் சுழற்றினாள்.

இலையைப் பார்ப்பதும் வெளியே தெரிந்த வானத்தைப் பார்ப்பதும் இடையே சட்டென்று தன் தங்கையருகே அமர்ந்திருந்த இளம் நங்கையை ஆவலுடன் உற்றுப் பார்ப்பதுமாகக் கிரிதரன் பொழுதைக் கழிப்பதைக் கண்ணுற்றாள். ஏளனப் புன்னகையுடன் வலது புறம் நோக்கினாள். கை இரண்டையும் கன்னங்களில் ஊன்றிக்கொண்டு, சாப்பிட மனமில்லாமல் தன் எதிரேயிருந்த அந்த அழகியையே விழுங்கி விடுவான்போல் ஜெகதீசன் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதையும் கண்டாள்.

'அடடே' என்று தனக்குள் அசட்டையாக முணுமுணுத்துவிட்டு, ஸ்ரீமான் நாராயணன் பக்கம் விழிகளைத் திருப்பினாள். வியப்பும் ஆச்சரியமும் ஒருங்கே எய்திவிட்டவர்போல் நாராயணனும் அந்த ஏழைப் பெண்ணை வைத்த விழி வாங்காது பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

சௌமினியின் தாழம்பூ முகம் செந்தாமரையாகச் சிவந்து விட்டது. நெஞ்சு கோபத்தில் துடிதுடித்தது. ஆத்திரத்தில்

உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''ஏன் ஒருத்தருக்கும் சாப்பிட ஆசையில்லையா? எனக்குப் பசிக்கிறது கிட்டா! இங்கே கொஞ்சம் சாம்பார் போடுங்கள்'' என்று உத்தரவிட்டு விட்டு, சந்திரா பக்கம் திரும்பினாள் சௌமினி.

''கங்கா அத்தைக்கு உறவு என்றாயே. என்ன வழியில் உறவாம்? இதற்கு முன் உன் அத்தை வீட்டில் இவளை நான் பார்த்ததே இல்லையே?'' என்று கடுமையும் அதிகாரமும் நிறைந்த குரலில், அதட்டிக் கேட்டாள் சௌமினி.

சந்திராவுக்கு இந்தக் குறுக்குக் கேள்வி பிடிக்கவில்லை. பரிதாபமாகத் தன் தமையனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மெல்லிய குரலில், ''ஏதோ தூரத்து உறவாம்'' என்றாள்.

யாரோ தலைமீது மிகவும் சில்லென்று குளிர்ந்த நீரை எதிர்பாராவிதம் கொட்டி விட்டாற்போல் ஒருவித பயங்கரமான அதிர்ச்சி ஏற்படவே மஞ்சுளாவின் உள்ளமும் உடலும் வெடவெடத்தது.

'கண் குளிர, மனம் இனிக்க பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத பேரழகியாக விளங்கும் எஜமானியம்மாள் மெத்த கோபக்காரி போலும்! பொய் சொன்ன விஷயம் தெரிந்தாலும் சாயம் வெளுத்துப் போய்விடுமே...' என்று எண்ணிக் கலங்கிவிட்டாள். தலையை நிமிர்த்தவோ, கைகளை அசைக்கவோ துணிவின்றி, சிலைபோல் உட்கார்ந்திருந்தாள் மஞ்சுளா.

''கங்கம்மா அத்தைக்கு ஊர் பூராவுமே உறவுதான். எல்லோரும் சிநேகிதர்கள்தான்'' என்று ஏளனமாக நகைத்து சௌமினி ஒரு பிடிசாதத்தை மட்டும் நாசூக்காக இலையின் நடுவே ஒதுக்கி சாம்பாருடன் கலந்து உட்கொண்டாள்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று ஜகதீசன் உரக்கக் கூறிவிட்டுக் கடகடவென்று சிரித்தான்.

மஞ்சுளாவின் மேனி புயல் காற்றில் அலைபட்ட



தளிர்க்கொடி என இன்னும் வேகமாக நடுங்கத் தொடங்கியது.

''போதும் ஜகதீசா! வாயை மூடு!'' என்று கிரிதரன் அடக்கமாட்டாத சினத்தில் சீறினான்.

அவ்வளவுதான், ஜகதீசன் இலையை விட்டு எழுந்து விட்டான். கையை உதறிக் கொண்டு கோபத்துடன் அண்ணனை உறுத்து விழித்தான். ''என்னோடு சேர்ந்து சாப்பிட உனக்கு இஷ்டமில்லை என்றால் முன்பே சொல்லிவிடுவதுதானே?'' என்று இரைந்துக் கூச்சலிட்டான்.

சௌமினி தனது இடது கரத்தை நீட்டி அவனது கையைப் பற்றி இழுத்து, அவனை மறுபடி உட்கார வைத்தாள்.

தனது வெள்ளைப் பற்கள் தெரிய லேசாகச் சிரித்துவிட்டு, ''வேலைக்காரர்களுடன் சேர்ந்து சாப்பிடும் அளவிற்கு இந்த வீட்டில் பொது உடைமைத் தத்துவம் தலை தூக்கி நிற்கும்போது, உன்னோடு உட்கார்ந்து உணவருந்த மாட்டேன் என யார் சொல்லப் போகிறார்கள்? நீ வீணாக ஆயாசப்படாதே, சாப்பிடு. எல்லோரும் சேர்ந்து எங்கள் பசியைப் பாழடிக்கிறீர்கள்!'' என்று ஏளனமும் கோபமும் கலந்த குரலில் பளிச் சென்று சொன்னாள்.

'நான் உங்களுடன் சமமாக உட்கார வலிய வரவில்லை அம்மா! வற்புறுத்தப்பட்டேன். மன்னியுங்கள். நான் வேலைக்காரி என்பதை அறிவேன்' என்று கிரீச்சிட்டுப் பேசிவிட்டு எழுந்தோடிவிட வேண்டும் போல் மஞ்சுளாவிற்குத் துக்கமும் ஆத்திரமும் பீறிட்டுக்கொண்டு வந்தன. கண்களில் பெருகிய கண்ணீரைச் சமாளிக்கும் நிமித்தம் இன்னும் சற்றுத் தலையைக் கீழே சாய்த்துக் கொண்டாள்.

''சரி! சரி! இதெல்லாம் என்ன தர்க்கம்?'' என்று பொதுவாக ஒரு அதட்டல் போட்டுவிட்டு நாராயணன் சிம்மம் போல் எல்லோரையும் ஒரு முறை முறைத்துப் பார்த்தார். பிறகு சாவதானமாகச் சாப்பிட ஆரம்பித்தார். இந்தச் சிறு பூசலை அவர் ஒரு பொருட்டாகப் பாவிக்கவில்லை என்பதை அவர் முகபாவம் காண்பித்தது. ஆனால் அங்கு கூடியிருந்த மற்ற ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வொருவிதமான உணர்ச்சி அலை மோதிக் கொண்டிருந்ததனால் அவர்கள் அனைவருக்கும் விஷமாகத் தென்பட்டது உணவு.

வைத்தியர் சுந்தரேசன் தமது பழைய மாடல் போர்டு மோட்டார் வண்டியிலிருந்து இறங்கினார். மருந்துப் பையைக் கையில் எடுத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். கண்களுக்கு எட்டிய தூரம்வரை வேலைக்காரப் பையன் முத்துவைக் காணவில்லை. சிகிச்சை செய்ய வெளியே புறப்பட்டுச் சென்ற வைத்தியர் வரக் கொஞ்சம் நேரமாகும் என்பதை உணர்ந்த முத்துவுக்கு வாயில் வராந்தாவிலேயே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. கடைத் தெருவரை காலாறச் சுற்றி வரக் கம்பி நீட்டி விட்டிருந்தான். 'எங்கே தொலைந்து விட்டிருந்தாய்?' என்று அதட்ட வீட்டில் அம்மாவும் இல்லாததனால் அவன் பாடு கொண்டாட்டமாகத்தான் இருந்தது.

மருந்துப் பையைத் தாமே தூக்கிக் கொண்டு சட்டைப் பையிலிருந்த சாவியை எடுத்து வீட்டுக் கதவை மெல்லத் திறந்தார். ரேழி, தாழ்வாரம், கூடம், முற்றம் என்று பழைய காலத்துப் பாணியில் கட்டப்பட்டிருந்த தமது வீட்டிற்குள் நுழைந்தார். கூடத்தில் கிடந்த மேஜைமீது மருந்துப் பையை வைத்துவிட்டு, வாயிற்கதவைச் சாத்தித் தாளிட்டார். அவருக்கு அன்று மிகவும் களைப்பாகத்தான் இருந்தது.

முன்போல் ஓடியாடி வேலை செய்ய அவரது உடலில் சக்தி அதிகம் இருக்கவில்லை. வயோதிகம் ஒருபுறம் சேர்ந்து கொள்ளவே அவர் மிகவும் சோர்ந்து போய்விட்டிருந்தார். முகத்திலே வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு ஊஞ்சலில் வந்து அமர்ந்து கொண்டார்.

சுந்தரேசன், ஜலகண்டானில் மிகவும் பிரசித்திபெற்ற வைத்தியர்தான். பல வருஷங்களாகச் சொந்த வைத்திய சாலை வைத்துப் பெரும் புகழ் திரட்டியிருந்தார். பெரிய நகரத்துப் பிரபல வைத்தியர்கள்போல் பாங்கியில் ஏராளமாகப் பணத்தைக் குவித்து வைக்காவிடினும், ஏழை மக்களின் பாராட்டுதலையும் அன்பையும் ஏராளமாகப் பெற்றிருந்தார்.



தமது இரண்டு பெண்களுக்கும் தக்க காலத்தில் திருமணம் செய்து புக்ககம் அனுப்பிவிட்டிருக்கையால் வைத்தியருக்குக் குடும்பப் பொறுப்பு பெருமளவு குறைந்து விட்டிருந்தது. எனவே அவரது வாழ்க்கையில் அவசரம் என்னும் விஷயம் அடியோடு மறைந்து பல ஆண்டுகளாகி விட்டிருந்தன.

அதற்குப் பதில் அவரது நடையிலும் செயல்களிலும் நிதானம் நிரம்பியிருந்தது. ஊஞ்சலை மெல்ல அசைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் ஊன்றி கவனித்தார். 'ஐயாவுக்குத் தொல்லை தரும்' என்று உணர்ந்து கொண்டிருந்த முத்து வீட்டின் உட்புறத்தைச் சுத்தமாகப் பெருக்கி, சாமான்களை ஒழுங்காக அதனதன் இடத்தில் வைத்துவிட்டுத்தான் போயிருந்தான். அவன் வேலையில் குறை காண முடியவில்லை. எனினும் எதையோ இழந்துவிட்டதுபோல் களைகுன்றி வெறிச்சென்றிருந்தது வீடு.

ஊஞ்சலில் இருந்தபடியே எட்டி மேஜைமீது பையன் வைத்துவிட்டுப் போயிருந்த காலைத் தபால் கட்டைக் கையில் எடுத்தார். ஒவ்வொன்றாகப் பிரித்துச் சாவகாசமாகப் படித்தார். அன்று அவருக்குப் பல கடிதங்கள் வந்திருந்தன. ஆனால் அவர் எதிர்பார்த்த அந்த ஒரு கடிதம் அன்றைய தபாலில் இருக்கவில்லை. 'பார்வதம் ரொம்பச் சோம்பேறியாகி விட்டாள். போனவுடனே கடிதம் போட வேண்டும் என்று பன்னிப்பன்னிச் சொல்லியிருந்தேன்' என்று தமக்குள் அவர் முணுமுணுத்துவிட்டு லேசாகச் சிரித்தார். அவர் மனைவி பார்வதம்மாள் அவரை விட்டுச் சென்னைக்குச் சென்று அப்படியொன்றும் பல மாதங்கள் ஆகிவிடவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்புதான் அவள் சென்றிருந்தாள்.

தனது இளைய பெண்ணுடன் சில நாட்கள் தங்கியிருக்க அவள் சென்னைக்குக் கிளம்பிச் சென்றிருந்தாள். கணவனைத் தனியே விட்டுச் செல்ல அவள் விரும்பவேயில்லை. அவளை வற்புறுத்தி வெளியூருக்கு அனுப்பி வைத்தார். முகம் கடுக்காது, அலுக்காது, நாற்பது வருஷகாலம் நிழல் போல் கூடவிருந்து பொறுமையுடன் குடும்பத்தை நிர்வகித்து வந்த அவளுக்கு, ஒரு சில தினங்கள் குடும்பக் கவலைகளை மறந்து சந்தோஷமாகி

ஆத்திரத்தை உதறிவிட விரும்புகின்றவன் போல் தோள்மீது புரண்ட அங்கவஸ்திரத்தை எடுத்து உதறி விட்டு மீண்டும் போட்டுக் கொண்டான். அவன் கோபம் அப்போதும் அடங்கவில்லை. "பணத்தை லேசில் வெளியில் எடுத்தால்தானே மகராஜி? சதா பூட்டிப் பத்திரப்படுத்தி வைக்கிறாள். யாருக்கோ தெரியவில்லை. ஒரு பொருளை வாங்கும்படி அம்மாளை தாஜா செய்வதற்குள் இங்கே ஐயா பிராணன் பாதி போய்விடுகிறது. பெண்கள் கையில் பணம் இருந்துவிட்டால் அவர்களை நம்பி வாழும் ஆண்கள் பாடு பெரும் அவஸ்தைதான் என்று தெரியாமலா சொல்கிறார்கள்? நாய்க்குட்டி போல் பின்னால் ஓடிவர ஏவுகிறாளே! சே! சே! இதென்ன பிழைப்பு", என்று தனக்குள்ளே மெல்ல முணுமுணுத்துக் கொண்டு, நிலையத்தின் மீது முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தான்.

கருமி சிகாமணியான தன் மனைவியை நம்பிவேலைக்கு வரும் அந்தப் பெண் குமாஸ்தாவை நினைத்து ஒரு பக்கம் அவனுக்குக் கொஞ்சம் பரிதாபமாக இருந்தது. மற்றொரு பக்கம் ஆச்சரியமாகவும் இருந்தது. மஞ்சுளா என்ற அழகான பெயரைக் கேட்டதும், அவன் ஏமாறத் தயாராக இருக்கவில்லை. பெயரைக் கேட்டு ஏமாந்துதானே ஸ்ரீமதி யசோதா தேவியின் கணவனாகும் நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்! ஆனால், அதைப்பற்றித் தற்சமயம் அவன் வருத்தப்பட்டும் பயனில்லை. எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு முழுக்குப் போட்டுவிட்டு அவன் வயிற்றுப் பிழைப்புக்கே தொழில் தேடிக்கொண்டு எப்போது கிளம்பினானோ, அன்றிலிருந்து அவனுக்கு ஒரு இடத்திலும் ஸ்திரமாக உத்தியோகம் வாய்க்கவில்லை. ஆனால் பாவம்? அவன் எந்தத் தொழில் வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தான்.

காப்பி ஹோட்டல்களில் மேஜைகளைச் சுத்தம் செய்யும் பணியிலிருந்து சினிமாக்கொட்டகையில் டிக்கெட் விற்பனை செய்யும் வேலைவரை சகலவற்றையும் அவன் செய்து பார்த்து விட்டிருந்தான். எதிலும் அவனுக்கு பூரண திருப்தி ஏற்படவில்லை. மனமும் லயிக்கவில்லை. கைலாசத்தின்



அகராதியில் திருமணம் என்பதும் ஒரு தனித்தொழிலாக இருந்தது. ஆனால் அதில் கூட அவனுக்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை. "இரண்டே பெண், வேறு ஆண் சந்ததி கிடையாது. தந்தைக்குப் பிறகு சொத்து ஆளுக்குப் பாதியாகப் பிரிக்கப்படும். சுமார் இரண்டு லக்ஷத்திற்குக் குறையாது அவள் பங்குக்குக் கட்டாயம் கிடைக்கும்" என்ற தீவிரமான நம்பிக்கையில், கால் நொண்டியாக இருந்தாலும் பரவாயில்லை என்று ஜவுளிக்கடை முதலாளி ஒருத்தரின் மூத்த மகளை வரதட்சணை கூடவாய் திறந்து கேட்காது மாலையிட்டான்.

கைலாசத்தின் ஆசையில் மண்ணைத் தூவிவிட்டு அந்தப் பெண் திருமணமான அடுத்த மாதமே நெருப்பு விபத்தில் மரணமடைந்து விட்டாள். இரண்டாவது பெண்ணைத் தனக்கே மணமுடித்துக் கொடுக்கமாட்டார்களா என்ற ஆசையில் வெட்கத்தை விட்டுத் தனது மாஜி மாமனாரைத் தானே போய்க் கேட்டுவிட்டான் அவன். அவ்வளவுதான், தன் பெண் மரணமடைந்ததற்குக் காரணம் மாப்பிள்ளையின் ஜாதக தோஷந்தான் எனப் பூரணமாக நம்பிவிட்ட அந்த மனிதர், கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கவே வந்துவிட்டார்!

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று அங்கிருந்து வெளியேறிய கைலாசம், தன் மனைவியின் நகைகளைப் பற்றியோ, சீர்வகைகளைப் பத்தியோ வாதாடி ஒன்றும் வாங்கிக் கொள்ள முடியவில்லை. 'யௌவனமும் அழகும் கல்யாண மார்க்கெட்டில், ஆண்களுக்குக் கிராக்கியும் இருக்கும்வரை என்ன பயம்?" என்ற எண்ணத்தில் சில மாதங்களில் முதல் விவாகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மறந்துவிட்டான் அவன். தரகன் மூலம் கேள்விப்பட்ட ஒரு இடம் மிகவும் பிடித்தமாக இருக்கவே ஏற்கெனவே மணமாகி மனைவியை இழந்தவன் என்ற விஷயத்தை வெளியே சொல்லிக் கொள்ளாமல், 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டு' என்ற நீதி மொழியை அப்படியே கைப்பிடித்து நாலு லக்ஷம் ரூபாய்கள் சொத்திற்கு ஏக வாரிசான ஒரு விதவைத் தாயின் ஒரே மகளின் கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தான். கிழவி எப்போது கட்டையைக் கீழே போடுவாள் என்று அவன் ஆவலுடன் நாட்களை

சாவதானமாகச் சமைக்கத் தொடங்கினார்.

அடுப்பருகிலேயே சென்று அறியாத அவருக்கு என்ன செய்வது, எப்படி ஆரம்பிப்பது என்று ஒன்றுமே விளங்கவில்லை. எப்பொழுதோ மனைவி அருகில் உட்கார்ந்து கொண்டு கவனித்த ஞாபகத்தை வைத்துக் கொண்டு நெய்யைத் தாராளமாக ஊற்றி, கொஞ்சம் ரவை உப்புமா செய்து கொண்டார். தண்ணீரைப் பொங்க வைத்துக் காப்பிப் பொடியில் ஊற்றி வடித்தெடுத்துப் பசும்பாலில் கலந்து, ஒரு வழியாகக் காப்பி தயாரிப்பையும் முடித்துக் கொண்டார். சமையல் மேடையில் ஒருபுறம் காகிதத்தில் சுற்றிப் பத்திரமாக வைத்திருந்த வாழை இலை அடுக்கிலிருந்து இரண்டு சிறு நுனி இலைகளை எடுத்துச் சுத்தமாகக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்து கூடத்து மேஜை மீது வைத்தார்! உடனே சாப்பிட மனமின்றிக் கடிகாரத்தைப் பார்த்தார். மூன்றடிக்கச் சில நிமிஷங்களே இருந்தன.

அவருடைய நண்பர் வேதாந்தம் அங்கு வரும் நேரம் அது. கொஞ்சம் பொறுத்தால் நலம் எனத் தமக்குள்ளே எண்ணிக் கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

அது சமயம் வாயிற்கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே சுந்தரேசனுக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை. பைத்தியம் பிடித்து விடும் போல் மனத்தைக் குழப்பிய தனிமைக்கு நண்பர் வேதாந்தத்தின் பேச்சு மிக்க ஆறுதலாக இருக்குமாதலால் அவரது வருகை நல்வருகையாக இருந்தது. வேகமாக எழுந்து சென்று, ''உனக்கு ஆயுசு நூறுடா! தலையில் கல்லைப் போட்டாலும் நீ சாகமாட்டாய்!'' என்று உற்சாகமாகக் கூறிவிட்டு கதவைத் திறந்தார்.

குபீரென்று முன்னால் விரைந்து உள்ளே வீசிய செண்ட் வாசனையைத் தாண்டிக் கொண்டு வேகமாக உள்ளே வந்து நின்ற பெண்மணியைக் கண்டதும், அவர் முகத்தில் அசட்டுக்களை ஓடியது.

''நீங்களா? வாருங்கள்'' என்று ஏமாற்றத்தை அடக்கிக் கொண்டு வரவேற்றார்.



# 33

உள்ளே வந்த பெண்மணி ஆச்சரியத்துடன், ''வேறு யாரையோ எதிர்பார்த்தீர்கள் போலிருக்கிறது. இருந்த போதிலும் அந்த ஆச்சரியம் எனக்குத் தற்சமயம் மெத்தவும் தேவையாக இருக்கிறது. தொண்டையில் ஒரே ரணம். வலி தாங்க முடியவில்லை. ராத்திரி பூராவும் தூங்கவேயில்லை. இப்படியே விட்டால் இன்று மாலைப் பொழுதிற்குள் மரணமே சம்பவித்துவிடும்போல் நோவு பொறுக்க முடியவில்லை. காலையில்தான் வெளியூரிலிருந்து வந்தோம். வந்தவுடன் எனக்கு வழக்கம் போல் ஏகப்பட்ட அலுவல்கள் கவனிக்கக் குவிந்து கிடக்கின்றன.

''முதலில் உடம்பைக் கவனித்துக் கொண்டுதான் பிறகு மற்ற விஷயங்கள் என ஓடோடியும் வந்தேன்'' என்று கூறிவிட்டுக் கைப் பையைச் சுழற்றிக் கொண்டு உள்ளே வந்து நின்றாள் சௌமினி. நெருப்பைக் கண்டு அப்பால் நகர்ந்து கொள்கிறவர் போல் அவளுக்கு வழி விட்டு ஒதுங்கி நின்று கொண்டார் சுந்தரேசன். அவள் வரவையும், பேச்சையும் அவர் எதிர்பார்க்கவில்லை என்பதனை முகபாவம் தெரிவித்தது.

''மாமி! மாமி!'' என்று தேனினும் இனிய குரலில் கூவி அழைத்துக் கொண்டு கூடத்திற்கு விரைந்த சௌமினி ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டாள். 'உஸ்ஸ்!' என்று பெருமூச்சுவிட்ட வண்ணம் கைக்குட்டையினால் விசிறிக் கொண்டாள். அதனின்றும் இன்னும் வேகமாகப் பறந்து வந்த செண்ட் மணம் வைத்தியரின் மூக்கைத் துளைத்ததுடன் மூளையையும் குழப்பியது. ''பார்வதம் ஊரில் இல்லை'' என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டு வாயிற்கதவை நன்றாகத் திறந்து வைத்தார் அவர்.

மனைவியில்லாத சமயம் ஸ்ரீமதி நாராயணன் போன்ற அழகான இளம் பெண்ணுடன் தனியே வீட்டிற்குள் அமர்ந்து

வார்த்தையாட அவர் விரும்பவில்லை. வயதில் அவள் அவருடைய பேத்திக்கு சமமானவள் என்ற போதிலும், அவளைக் கண்டால் என்றுமே அவருக்குக் கொஞ்சம் அச்சம்தான். படம் விரித்தாடும் சர்ப்பம் பார்க்கப் பளபளவென மின்னிக்கொண்டு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அதை அருகில் வைத்துக் கொண்டு உறவாட முடியுமா? அதுபோல் நல்லவர்களுக்கு வீண் பொல்லாப்பை உண்டாக்கிவிடும் ஆபத்தான பெண்மணி ஸ்ரீமதி நாராயணன் என்பது அவரது ஆணித்தரமான அபிப்ராயம். 'இந்தப் பயல் வேதாந்தம் இன்றைக்கு என்று சதி செய்கிறானோ ஏன் இன்னும் அவனைக் காணவில்லை?' என மனத்திற்குள் தமது நண்பனைச் சபித்து விட்டு மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்ட வைத்தியர் தாழ்வாரத்தில் வந்து நின்றார்.

அவர் படும் அவஸ்தை சௌமினிக்கு வேடிக்கையாக இருந்தது. தன்னைக் கண்டு அவர் அஞ்சி அரண்டு போவதைக் காண ஒரு வகையில் அவளுக்கு மிகவும் திருப்தியாகவும் இருந்தது. குடும்ப வைத்தியர் என்று அவரை ஆனந்த நிலையத்தில் உள்ள அனைவரும் கொண்டாடி வரவேற்ற போதிலும், அவரது வைத்தியக் கலையை மிகவும் மட்டமாகத்தான் அவள் எண்ணினாள். அவரது உச்சிக் குடுமியையும், ஓரம் நைந்த நிஜாரையும், குப்பைத் தொட்டியில் வீசியெறிய வேண்டிய அவரது ஓட்டை மோட்டார் வாகனத்தையும் அவள் கேலிக்கிடமான விஷயங்களாக எண்ணினாள்.

''கைராசிக்காரர்! என் உயிரைப் பலமுறை காப்பாற்றிய புண்ணியவான்!'' என்று ஸ்ரீமான் நாராயணன் பலமுறை புகழ்ந்து பேசியும்கூட, அவளுக்குச் சுந்தரேசனின் வைத்தியத் திறமையில் நம்பிக்கை ஏற்படவேயில்லை. 'பழங்காலத்துக் கட்டுப் பெட்டி! இவருக்கு நவீன காலத்துச் சிகிச்சை முறைகள் என்ன தெரியும்? பட்டிக்காட்டுப் பாட்டியம்மாவின் வைத்தியந்தான் தெரியும்' என உள்ளூர அலட்சியம் கொண்டிருந்தாள். அதன் பயனாக ஒரு சிறு தலைவலி என்றால்கூட அவள் டாக்டர் சுந்தரேசனின் தயவை



நாடுவதில்லை. பல மைல்களுக்கு அப்பாலிருந்த வீரசோழன் பட்டணத்துப் பிரபல வைத்தியர்களைத்தான் தேடிக்கொண்டு செல்லும் வழக்கமுடையவள். எனவே அவள் தன்னைத் தேடிக் கொண்டு அங்கு வந்ததை அவரால் நம்பவே முடியவில்லை.

சுமார் ஐந்து வருஷங்களாகப் பழகியதில் ஓரளவுக்கு அவருக்கு சௌமினியின் மனப்போக்குப் புரிந்துவிட்டிருந்தது. தன்னை அவள் துச்சமாகக் கருதுகிறாள் என எண்ணி ஒரு நாளும் அவர் கவலைப்பட்டதும் இல்லை. உண்மையில் அவர் ஸ்ரீமதி நாராயணனை ஒரு பொருட்டாகவே என்றுமே மதித்தவர் இல்லை. அவளது நாகரிகமான தோற்றம், பேச்சு, போக்கு முதலிய பலவும் அவருக்கு அருவருப்பைக் கொடுத்தன. 'இப்படிப்பட்ட தான்தோன்றிப் பெண்களுக்கு வைத்தியம் செய்வதைவிடப் பெட்டியைக் கட்டி மூலையில் வைத்து விட்டுக் கடவுளை எண்ணித் தியானமாக இருப்பதே மேல்' என்று எண்ணியவர், பணம் பணம் என்று அவர் பேயாகத் திரியவில்லை.

''இப்பொழுதுதான் நான் வெளியிலிருந்து வந்தேன்'' என்று கூறிவிட்டு அவர் மேலே பேச முடியாது தவித்தார்.

தன்னுடைய முல்லைப் பற்களைத் தாண்டிப் பவள இதழ்கள் மீது புன்னகையாக மலர்ந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு ஊஞ்சலினின்று துள்ளி எழுந்து நின்றாள் சௌமினி.

''அடடா! இன்னும் சாப்பிடவில்லையா? நேரம் அதிகமாகி விட்டதே'' என்று அனுதாபத்துடன் கூறிவிட்டுத் தாழ்வாரத்தின் பக்கம் கண்களைத் திருப்பினாள்.

''அட கடவுளே! களைத்து வீடு வரும் உங்களுக்கு, சமையல் வேலை வேறு சேர்ந்துகொண்டு விட்டிருக்கிறதே! மாமி ஊருக்குப் போயிருக்கும் விஷயம் தெரிந்திருந்தால் நமது பங்களாவிலிருந்து சாப்பாடு அனுப்பியிருப்பேன். அதனால் என்ன? இன்று ராத்திரியிலிருந்து நம் வீட்டு அம்பியிடம் உங்களுக்குக் கொஞ்சம் ஏதாவது சாப்பாடு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறேன். ஸ்ரீமான் நாராயணன் உங்கள்

விஷயத்தைக் கேள்விப்பட்டால் ரொம்பவும் வருத்தப்படுவார். குடும்ப வைத்தியர் என்பது ஒருபுறமிருக்க, நீங்கள் அவருக்கு மிகவும் வேண்டிய நண்பராயிற்றே!'' என்று கொஞ்சிய குரலில் பேசினாள்.

முகத்தைச் சுளித்துக் கொண்டார் சுந்தரேசன். ''உங்களுக்கு அந்தச் சிரமம் எல்லாம் வேண்டாம் அம்மா'' என்று பட்டெனப் பதில் அளித்துவிட்டு, ''நீங்கள் வந்த காரியத்தைச் சொன்னால் நலமாக இருக்கும்'' என்றார்.

பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள் சௌமினி. கிரிதரனுக்கு அடுத்தபடியாக அவள் வெறுப்புக்குப் பாத்திரமாக இருந்தவர் சுந்தரேசன். ''உங்கள் பொழுது மிகவும் அருமையானது. அதை வீணடிக்க எனக்கு என்ன பைத்தியமா? நீங்கள் என் குடும்ப வைத்தியராகப் பலகாலமாக இருப்பதால் தலைவலி, கால்வலி என்றால் உங்களிடம் ஓடி வரவேண்டியிருக்கிறது!'' என்றாள் கேலி மிகுந்த குரலில். பாம்பின் கண்களைப் போல் அவளது கருவிழிகள் மின்னின.

''உங்களுக்கு வைத்தியம் செய்ய முடியாது என்று ஒரு பொழுதும் நான் மறுத்ததில்லை. ஆனால் தாங்கள்தான் என் சிகிச்சையில் நம்பிக்கையின்றி வேறு வைத்தியர்களை நாடிச் சென்றிருக்கிறீர்கள். அதற்காக எனக்குக் கோபம் இல்லை. பணத்திற்கும், புகழுக்கும் நான் பாடுபட்ட காலம் மலையேறிவிட்டது'' என்றார் கடுமையான குரலில் சுந்தரேசன்.

எரித்து விடுகிறவள்போல் அவரை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு சௌமினி, தனது தோள்களை அசட்டையாகக் குலுக்கினாள். ''அதனால்தானோ என்னவோ உங்களை எங்கள் வீட்டு வேலைக்காரர்கள் டாக்டர் என்பதற்கு பதில் 'சாமியார்' என்று செல்லப் பெயரிட்டு அழைக்கிறார்கள் போலும்'' என்று ஏளனமாகச் சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தாள்.

சுந்தரேசன் வாளா இருந்தார். ''சரி, எனக்கும் நேரமாகிறது. தயவு செய்து தாங்கள் என் தொண்டை ரணத்திற்கு ஏதாவது மருந்து தர முடியுமா?'' என்று அதட்டும் பாவனையில் கேட்டாள்.



வைத்தியர் [illegible] தாண்டி வெளியே வந்தார். வாயில் [illegible] அமைத்திருந்த தமது சிகிச்சை அறையின் [illegible] மருந்து அலமாரி அருகில் சென்றார். ஒரு [illegible] சில மாத்திரைகளை எடுத்துக் காகித உறையில் [illegible] ஒட்டினார். நோயாளியின் பெயரையும் உட்கொள்ளும் முறையையும் காகித உறைமீது எழுதிக் கையில் எடுத்துக் கொண்டு வந்தார்.

''மூன்று வேளைக்கு வேண்டிய மருந்து இதில் இருக்கிறது'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, அதை ஊஞ்சல் பலகைமீது வைத்தார்.

''தொண்டையைப் பரீட்சை செய்து பாராமலேயே மருந்து கொடுத்து விட்டீர்களே!'' என்ற சௌமினி கலகலவென நகைத்தாள்.

''எந்தெந்த நோய்களுக்கு எப்படி வைத்தியம் செய்ய வேண்டும் என்ற முறை எங்களுக்குத் தெரியும். தங்களது தொண்டை ரணத்திற்குப் பரீட்சை ஏதும் தேவையில்லை'' என்று பட்டெனப் பதிலளித்த வைத்தியர் தமது முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார். கோபத்தினால் முகம் சிவந்து போனாள் சௌமினி. காகித உறையைக் கையில் எடுத்துக் கொண்டு, ''வருகிறேன், நமஸ்காரம்'' என்று கை கூப்பி வணங்கிவிட்டு வேகமாக வெளியே நடந்தாள். வாயிற்படியைத் தாண்டி அப்பால் சென்றவள் எதையோ நினைத்துக் கொண்டவள்போல் திரும்பி நின்றாள். படமெடுத்த நாகத்தைப் போல முகத்தை நிமிர்த்திக் கொண்டு ஆக்ரோஷமாக அவரை வெறித்துப் பார்த்துவிட்டு, ''ஜெகதீசனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டோம்'' என்றாள் விஷமமாக.

''எனக்குத் தெரிந்த விஷயந்தான். புதிய சங்கதி அல்லவே'' என்றார் சுந்தரேசன் அமைதியாக.

''மறந்துவிட்டேனே! நான் ஒரு முட்டாள். அந்த வைத்தியர் இந்தக் குடும்ப வைத்தியருக்குச் சங்கதியைத் தெரிவிக்காமலா விட்டுவிடுவார்? ஜெகதீசன் சம்பந்தப்பட்ட வரை எல்லோரும் ஒரே கூட்டமாக இருந்துதானே காரியத்தை நடத்தினீர்கள்.

உங்களுக்குத் தெரியாமலா போய்விடும்?'' என்று அசுந்தையாகப் பேசினாள்.

சுந்தரேசனது பொறுமை எல்லையை மீறிவிட்டது. எரிமலையெனப் பொங்கிப் புறப்பட்ட சீற்றத்தைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டார்.

''அம்மா! என் நண்பர் மனைவியாயிற்றே என்று பொறுத்துக் கொள்கிறேன். வீணாக வாயில் வந்தபடி பேசுவது உங்களைப் போன்ற பெரிய இடத்துப் பெண்களுக்கு அழகல்ல, முறையுமல்ல. டாக்டர் தயானந்தரோ நானோ எங்கள் வைத்தியக் கலையை ஊரை ஏமாற்றுகிற வித்தையாக உபயோகிக்கவில்லை. உண்மையில் தற்சமயம் ஏமாந்து விட்டிருக்கிறவர் நீங்கள்தான்'' என்று எச்சரிக்கும் குரலில் உரத்துப் பேசிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

அலட்சியமாக முகத்தைக் குலுக்கிவிட்டு, விர் என மின்னல் வேகத்தில் பாய்ந்து காரின் கதவைத் திறந்து கொண்டு டிரைவர் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள் சௌமினி.

''என்ன சித்தி! தலையைப் பிளக்கிற வெய்யிலில் என்னைக் காரில் உட்கார வைத்துவிட்டுச் சென்ற நீங்கள் வர எவ்வளவு நாழியாயிற்று? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று ஜெகதீசன் கேட்டான்.

''சாவகாசமாகச் சொல்கிறேன், பதறாதே. எல்லாம் உன் விஷயமாகத்தான் சென்றிருந்தேன்.'' என்று பதிலளித்த சௌமினி, கோபத்தை அடக்க மாட்டாதவளாகக் காரை வேகமாகச் செலுத்தினாள்.

அவள் சென்று கொஞ்ச நேரம் கடந்தும் சுந்தரேசனது சீற்றம் அடங்கவில்லை. டாக்டர் தயானந்தரும் தானும் சேர்ந்து கொண்டு வேண்டுமென்றே ஜெகதீசனை அடைத்து வைத்திருந்ததாகப் பொருள்பட அவள் பேசியது அவருக்குத் தாங்க முடியவில்லை. இந்தக் குற்றச் சாட்டைக் கேட்டுக் கபடமற்ற அவரது பளிங்கு உள்ளம் அடக்கமாட்டாது பதைபதைத்தது. ''நல்லது செய்தால் அதற்கு இது காலமில்லை'' என்று தமக்குள்ளே சிந்தித்தபடி குறுக்கும்



[illegible] உலாவிக் கொண்டிருந்தார்.

''எந்தக் கோட்டையைப் பிடிக்கலாம் என்ற யோசனை?'' என உரத்த குரலில் பரிகாசமாக யாரோ அதட்டியதைக் கேட்டுத் திடுக்கிட்டு வாயிற்பக்கம் திரும்பினார். வேகமாக உள்ளே நுழைந்த வேதாந்தம் தலைமீது போட்டுக் கொண்டிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு பாதரட்சைகளைக் கழற்றி ரேழியில் விட்டுவிட்டுக் கூடத்திற்கு வந்தார்.

''என்ன வெய்யிலப்பா! பொசுக்கிக் கொல்கிறதே ஆளை!'' என்று பெருமூச்செறிந்த வண்ணம் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டார்.

நண்பரைக் கண்டதும் சுந்தரேசனது முகத்தில் களை வந்தது. ''அட பாழி! நீ வருவாய் என்று காப்பி தயார் செய்து வைத்து அது ஆறி அவலாகிவிட்டது. உத்தியோகத்தில் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு கூட உனக்கு நேரத்திற்கு ஒரு இடத்திற்குப் போக ஒழியவில்லையடா! உன்னை என்ன சொல்வதென்றே தெரியவில்லை'' என்று அன்போடு கடிந்து கொண்டார்.

சுந்தரேசன் காப்பியை மீண்டும் சுட வைத்து இரு வெண்கல டம்ளரில் ஊற்றி, தாழ்வாரத்தில் அருகருகே வைத்தார். மேஜைமீது கிடந்த இலைகளை எடுத்துத் தரையில் பரப்பித் தாம் செய்து வைத்திருந்த உப்புமாவைப் பரிமாறினார்.

''கையை அலம்பிக்கொள்... உம் எழுந்திரு, எனக்குப் பசி காதை அடைக்கிறது'' என்று அதட்டினார். சிறிதளவு இலையிலிருந்த வஸ்துவை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு முகத்தைச் சுளுக்கினார் வேதாந்தம். ''இது என்னடா இது! பெயர்தான் உப்புமா. அதனால் உப்பு வேறு எதற்கு என்று உப்புப் போட மறந்து விட்டாயோ? சரி இப்பொழுது இலையில் கொஞ்சம் அதைத் தூவிக் கொண்டு சாப்பிடுவோம். இந்த அருமையான பண்டத்தைச் சாப்பிட வேண்டும் என்பதனால்தான் பகவான் என்னை இன்று உயிரோடு இருக்க அனுமதித்திருக்கிறார் என நினைக்கிறேன்'' என்று

பரிகாசமாகப் பேசத் தொடங்கினார்.

''அப்படி என்ன நடந்து விட்டது'' என்று வினவினார் சுந்தரேசன் சிரித்துக்கொண்டே.

''வீட்டைவிட்டுக் கிளம்ப இன்று நேரம் ஆகிவிட்டது. ராத்திரி நம் வீட்டில் உன்னைச் சாப்பிட அழைத்துவரும்படி நமது தர்மபத்தினி உத்தரவு போட்டு அனுப்பினாள். நீ பெரிய பிடிவாதக்காரனாயிற்றே, பரான்னம் புசிக்கமாட்டாயே, என்ன செய்யலாம் என யோசித்துக் கொண்டே நான் நடந்து கொண்டிருந்தேன். அவ்வளவுதான் தெரியும். கப்பல் போல் பிரம்மாண்டமான ஒரு கார் என் கண் முன் வந்து 'கிரிக்' என்று நின்றது.

''தெருவைப் பார்த்து நடக்கக் கூடாது? தெரு உங்கள் பாட்டன் சொத்தா என்ன?'' என்று அதட்டினாள் ஒரு அழகான இளம் பெண்மணி.

''உம், மேலே சொல்லு!'' என்று அவரை உற்சாகப் படுத்தினார் சுந்தரேசன்.

## 34

வேதாந்தம் மேலே தொடர்ந்து சொன்னார்:

''அவள் அருகே உட்கார்ந்திருந்த வாலிபன் பட்டிக்காட்டு சனியன் என்று கூறிவிட்டு, என்னை அடித்து விடுகிறவன் போல் விழித்துப் பார்த்தான். நான் வாயைத் திறந்து ஏதும் பேசுவதற்குள் கார் காற்றாகப் பறந்து விட்டது. மயிரிழை தப்பியது. கொஞ்சம் பிசகியிருந்தால் இத்தனை நேரம் எமலோகத்தில் இருந்திருப்பேன். யார் அந்தப் பெண்மணி? காரை ஆகாய விமானமாக எண்ணிக் கொண்டு ஓட்டுகிறவளை இதுவரை இந்த ஊரில் நான் பார்த்ததில்லையே!'' என்றார்.

''இந்த ஊருக்கு வந்து இன்னும் ஒருமாதம் கூட ஆகவில்லை. அதற்குள் ஊரிலுள்ள அத்தனை பேரும் உனக்கு



அறிமுகமாகி விடுவார்களா என்ன? உன்னைக் கொல்லப் பார்த்த அந்த அம்மாள், கடந்த சில மாதங்களாக இந்த ஊரில் இல்லை. இன்று காலைதான் வந்தார்கள்'' என்று கூறிவிட்டுச் சுந்தரேசன் சிரித்தார்.

''அந்த அம்மாள் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், எனக்கு அக்கறையில்லை. ஆனால் ஒன்று, இப்படிக் காரைக் கடும் வேகத்தில் ஓட்டினால் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவள் யாரையாவது கொன்று விடுவாள். அது மட்டும் நிச்சயம்!'' என்றார் வேதாந்தம்.

''வேறுயாரையும் கொல்ல மாட்டாள். ஒரு நாள் தன்னைத் தானே கொன்று கொள்ளப் போகிறாள், அந்தப் பெண்மணி. காரிலேதான் அவளுக்குச் சாவு என்று ஜோசியம் சொல்வேன்'' என்று வெறுப்பாகச் சொல்லிச் சுந்தரேசன் கை கழுவ எழுந்தார்.

காப்பியைப் பருகி விட்டுக் கையைக் கழுவிக் கொண்டு மறுபடி ஊஞ்சலில் வந்து அமர்ந்த வேதாந்தம், இடுப்பைத் தடவி எதையோ தேடி எடுத்தார். ''இந்தாப்பா, உன் வீட்டு வாயிலில் நான் கண்டெடுத்த பொக்கிஷம்!'' என்று சொல்லி, காகித உறை ஒன்றை அவரிடம் நீட்டினார் வேதாந்தம்.

அதைப் பார்த்த வைத்தியர், தாம் சற்று முன் சௌமினிக்கு அளித்த மாத்திரைப் பொட்டலமாக இருப்பதைக் கண்டு துணுக்குற்றார். ''உன்னைக் கொல்லப் பார்த்தாளே, அந்தப் பெண்மணிக்குக் கொடுத்த மருந்து இது. சரி, போகட்டும்'' என்று கூறிவிட்டு, அசட்டையாக அதை மேஜைமீது போட்டார்.

''காகித உறை மீது ஸ்ரீமதி நாராயணன் என்ற பெயரைக் கவனித்தேன். அப்படியென்றால் இந்தப் பெண்மணி அந்த இரும்புப் பெட்டி வியாபாரி நாராயணனின் மனைவி என்று சொல். அடடா! அப்படியா சங்கதி. அழகான பெண் என்றதனால்தான் அந்த ஆசாமி வயது காலத்தில் அவள் வலையில் விழுந்து விட்டிருக்கிறான். அந்தப் பயல்... மூத்த மகன் கிரிதரனா? அப்படிப் பேச மாட்டானே அவன். எப்போதோ ஒருமுறை அவனிடம் நான் பேசியிருக்கிறேன். அடக்கமான வாலிபன் போல்தான் தெரிந்தது. ஒரு சமயம்

அழகான சித்திரின் பக்கத்தில் உட்கார்ந்த மகிமையினால் புத்தி தடுமாறிவிட்டதோ என்னவோ? அவசரக்காரி, மருந்துப் பொட்டலத்தைக் கீழே தவறவிட்டுப் போயிருக்கிறாள்! உம்... பெரிய அசத்து போலிருக்கிறது'' என்று படபடவெனப் பொரிந்து தள்ளினார் வேதாந்தம்.

''மருந்துப் பொட்டலத்தை அவள் விட்டுப் போகவில்லை. வேண்டாம் என்றே விட்டெறிந்து விட்டுப் போயிருக்கிறாள். அத்தனை கர்வம்! இன்னும் சில நாட்களில் நீயே அவளைப் பற்றிச் சகலமும் தெரிந்து கொள்வாய். நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. நீ அவளருகில் பார்த்த வாலிபன் கிரிதரன் அல்ல'' என்றார் சுந்தரேசன் வறட்சியான குரலில்.

''அடடா! அவன் தம்பியா? அப்படியே சாயலில் கிரிதரன் போல் இருக்கின்றானே!'' என்றார் வேதாந்தம் வியப்புடன்.

''வெளியூரிலிருந்து அவனும் இன்றுதான் ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறான். மேலும் அவனை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்த ஊரில் அநேகருக்கு அவனை அதிகம் தெரியாது. உற்று கவனித்தால் அண்ணன் தம்பி இரண்டு பேருக்கும் இடையே உள்ள வித்தியாசம் நன்றாகத் தெரியும். கிரிதரனின் வலது கன்னத்தில் ஒரு சிறு தழும்பு உண்டு. தம்பியைவிட அவன் கொஞ்சம் உயரமாக இருப்பான். நடத்தையிலும் இரண்டு பேரும் மிகவும் மாறுபட்டவர்கள்'' என்றார் வைத்தியர்.

தேள் கொட்டிவிட்டது போல் ஊஞ்சலினின்று வேதாந்தம் துள்ளி எழுந்து நின்றார். கையைப் படக்கென்று உதறினார். ''சுந்தரம்? இப்போதான் என் மூளையில் பளிச்சென்று ஒரு விஷயம் புலப்படுகிறது. இந்த அம்மாள் ஸ்ரீமதி நாராயணன் எனக்கு முன்பின் அறிமுகமில்லாத புதிய பெண்மணியல்ல. எங்கேயோ இதற்குமுன் இவளை நான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்'' என்றார் உற்சாகமாக.

''எங்கே பார்த்திருக்கிறாய்? யார் இவள் என்று சொல்' எனக்கும் அவளது பூர்வீகத்தை அறிய மிகவும் ஆசையா



இருக்கிறது'' என்று வைத்தியர் ஆவலுடன் கேட்டார்.

''அதுதானே தெரியவில்லை. எங்கே என்றும் புரியவில்லை. அந்த வட்டவடிவமான முகம் என் ஞாபகத்தில் நிழல்போல் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் அவகாசம் கொடு. இவளை இதற்குமுன் எங்கே பார்த்திருக்கிறேன் என்று சொல்லி விடுகிறேன்'' என்றார் வேதாந்தம்.

பட்டுப்புடவைக் கடை பட்டாபி ஒரு நீண்ட கொட்டாவி விட்டார். பகல் உணவுக்குப் பிறகு அவர் வீட்டின் முன் அறையில் ஒரு மிருதுவான சோபா மீது காலை நீட்டியபடி சாய்ந்து கிடந்தார். கடைக்கு ஓட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு இருக்கவில்லை. சரக்கு எடுக்க வருகிறவர்களைக் கவனித்துக் கொள்ளக் கடையில் ஒரு குமாஸ்தாவும், இரண்டு விற்பனையாளர்களும் இருந்தனர். முதலாளி கட்டாயம் கூட இருந்து கவனிக்க வேண்டும் என்பதற்கு அப்படியொன்றும் வியாபாரம் சமாளிக்க முடியாதபடி இருக்கவில்லை. உண்மையில் தீபாவளிப் பண்டிகைக்குப் பிறகு அவரது கடை வியாபாரம் தூங்கிக் கொண்டிருந்தது. சோம்பேறித் தனமும், உண்ட மயக்கமும் கண்களை அழுத்தவே, கடையுடன் போட்டியிடுகிறவர் போல் அவர் நீண்ட குறட்டைகளை எழுப்பிக் கொண்டு சில வினாடிகளில் நித்திரை உலகத்திற்குள் பிரவேசித்து விட்டார்.

குளுமையாக வீசிய தென்றலின் சுகத்தை அனுபவித்த வண்ணம் கனவு உலகிலே வளைய வந்து கொண்டிருந்த பட்டாபி, ஏதோ பூகம்பத்திலே அகப்பட்டுத் திகைப்புற்றவர் போல் திடுக்கிட்டு அலறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார். திடும் திடும் என்று வீடு அதிரும்படி மாடியறையில் அவரது அருமைக் குமாரி செய்து கொண்டிருந்த நாட்டியப் பயிற்சிதான் ஒரு பயங்கரக் கனவாக மாறி அவரை எழுப்பி உட்கார வைத்து விட்டிருந்தது. முகத்திலும் மார்பின் மீதும் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை மேல் துண்டால் துடைத்துக் கொண்டு ''அட சே! தூக்கத்திற்குப் பெரிய சத்துருவாக இருக்கிறாளே''

என்று எரிச்சலுடன் முணுமுணுத்தார்.

'மைனா! மைனா!' என்று தமது செல்வத் திருமகளை அதட்டி அழைத்து, 'போதும் நிறுத்து உன் நடனத்தை' எனத் தடுத்து அடக்க அவர் உள்ளம் ஆத்திரப்பட்ட போதிலும் உதட்டில் வார்த்தைகள் வர மறுத்தன. மகள் மேல் கொண்டிருந்த மகத்தான பாசம் அவர் வாய்க்குப் பூட்டுப் போடவில்லை. மனைவியிடம் கொண்டிருந்த பயம்தான் அவர் தொண்டைக்குத் தாளிட்டு விட்டிருந்தது. 'மேலே என்ன செய்யலாம்?' என யோசித்தபடி எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடக்கலுற்றார். அவரது ஏகபுத்திரி சௌபாக்கியவதி மைனாவதியோ மாடிக்கட்டிடம் முழுவதையும் தந்தையின் தலையில் இடித்துக் கொட்டிவிடப் புறப்பட்டவள்போல் திடும் திடுமென நடனமாடிக் கொண்டிருந்தாள். அடுத்தவாரம் நடக்கவிருந்த மாதர் சங்கத்து வருடாந்தர விழாவில் அவள் நடன - நாடக மொன்றில் பங்கெடுத்துக் கொண்டிருந்தாள்.

அப்படி ஒன்றும் அவள் நடனக்கலையில் ஊர்வசியும் அல்ல ரம்பையுமல்ல. மாதர் சங்கத்துத் தலைவி தங்க மணியம்மாளின் செல்வக் குமாரத்தியாயிற்றே என்று நிகழ்ச்சி நிரலில் அவளுக்கும் ஒரு இடம் கொடுத்து விட்டார்கள் விழாக் குழுவினர். தனக்குக் கொடுத்த பாகத்தை டக்கென்று பற்றிக் கொண்டு இரவும் பகலும் ஒழிந்த நேரமெல்லாம் அப்பியசிக்கத் தொடங்கினாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு ஏதேதோ தமக்குள்ளே முணங்கிய வண்ணம் பட்டாபி, கூண்டிலடைக்கப்பட்ட சிங்கமாக முன் அறையை வட்டமிட்டார்.

மேடையேறிப் பெண்கள் பாடுவது, சதிர் ஆடுவது நாடகங்களில் நடிப்பது போன்ற விஷயங்கள் அவருக்கு என்றுமே பிடித்தவை அல்ல. குடும்பப் பெண்களுக்கு அடுப்பங்கரையை விட்டு வெளியில் என்ன வேலை என்ற கொள்கையுடைய ஓர் அப்பாவி அவர். ஆனால் அவரது சகதர்மிணி தங்கமணி அம்மாளுடைய அபிப்பிராயங்கள் அதற்கு எறுமாறாக இருந்தன.



"சதிர் மண்டலத்தைத் தாவிக் கொண்டு ஓடுகிற இந்தக் காலத்தில் பழைய பஞ்சாங்கத்தைப் புரட்டாதீர்கள், போதும் உங்கள் வேதாந்தம். யாராவது சிரிக்கப் போகிறார்கள். நம்மாத்துக்கு ஒரு வரன் வந்தால் 'பெண்ணுக்கு ஆடத் தெரியுமா?' என்றுதான் முதல் கேள்வி இருக்கும். பாடத்தெரியாத பெண்களைப் பெரிய இடத்து வரன்கள் திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள். நீங்கள் இந்த விஷயங்களில் குறுக்கிட வேண்டாம்'' என்று பெரிய அதட்டல் போட்டு விட்டுத் தன் மகளுக்கு நாட்டியக் கலையில் கொஞ்சம் பயிற்சி ஏற்பட மிகவும் பாடுபட்டிருந்தாள்.

ஜலங்கண்டான் என்ற நகர் சென்னையைப் போன்று பெரிய நகரம் அல்லவாதலால், நாட்டியம் சொல்லிக் கொடுப்பதற்குத் தேர்ந்த நட்டுவனார்கள் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. அரும்பாடுபட்டு அருகில் ஒரு கிராமத்திலிருந்த கோயில் நட்டுவனார் ஒருவரைக் கொண்டு மைனாவதிக்குக் கொஞ்சகாலம் சிட்சை சொல்லி வைத்திருந்தாள்.

ஆறே மாதத்தில் அரங்கேற்றம் செய்ய வேண்டுமென்று அம்மாள் போட்ட உத்தரவைக் கேட்ட 'நட்டுவனார் நமக்கென்ன தொலையட்டும் என்ற அலட்சிய மனப்பான்மையில் பத்து காணி நிலத்திலே பிடி கீரை விதையை வாரி இறைத்ததுபோல் ஒருசில உருப்படிகளை மட்டும் சொல்லி வைத்துவிட்டு, தமக்கு உரித்தான தட்சிணைகளைப் பெற்றுக்கொண்டு நடையைக் கட்டிவிட்டிருந்தார். முதன் முதலாக ஜலங்கண்டானில் தன் செல்வ மகள்தான் நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்று அரங்கில் ஏறினாள் என்ற பெருமையும் புகழும் தனக்குக் கிடைக்கவேண்டித் தங்கமணி அஞ்சாமல் இரண்டாயிரம் ரூபாய் வரை அரங்கேற்ற வைபவத்திற்காகச் செலவிட்டாள்.

'இது அக்கிரமம், அநியாயம்!' என்று கூச்சலிட்டுக் கொக்கரிக்க வேண்டுமென்று உள்ளம் கொதித்த போதிலும்

பட்டாபி தலையை ஆட்டிக்கொண்டு மௌனமாக இருந்து தொலைக்க வேண்டியிருந்தது. அவருக்கு என்றுமே தங்கமணியை எதிர்த்துப் பேசத் துணிவு இருந்ததில்லை. பிறந்தகத்திலிருந்து அவள் கொண்டு வந்த செல்வத்தின் நிழலிலே சுகமாக, மனிதனாக உலவியதன் பயனாக அவருக்கு மனைவியை மிரட்ட என்றுமே சக்தி இருந்ததில்லை. தங்கமணி அம்மாளும் 'ம்...!' என்று அதட்டினாள் மூர்ச்சித்து விடும் ஒரு அபலையும் அல்ல! ஆறடி உயரத்திற்கு வாட்ட சாட்டமாக வளர்ந்துநின்ற அவளது கம்பீரமான தோற்றத்தைக் கண்டு கதிகலங்காத வாண்டுப் பயல்கள் ஜலங்கண்டான் நகர் வீதியில் யாருமே கிடையாது.

''என்ன சொன்னீர்கள்'' என்று ஒரு கூச்சல் போடும் போது தங்கமணியின் தொண்டை கண்டா மணியாக முழங்கும். அதைக் கேட்டு மெய்பதறி நடுங்கிப் போகும் பெண்களுக்கு அவள் வாயில் விழுந்து புரளத் தைரியம் ஏது? ஆணாகப் படைக்கவிருந்த பிரம்மதேவன் பெண்ணாகப் பிறப்பித்துத் தவறு செய்துவிட்டான் என ஒரு சில ஆடவர்கள் அவளைப் பற்றி உள்ளூர அபிப்ராயப்பட்டது உண்டு. மிடுக்கான நடையும், துடிப்பான பேச்சும், யாரையும் வாய் வீச்சினால் வென்றுவிடும் துணிச்சலும் நிறைந்த தங்கமணியம்மாள் ஜலங்கண்டானில் பிரசித்தி பெற்ற பெண்மணியாக விளங்கியதில் வியப்பேயில்லை.

நகரிலே கீர்த்திமிக்க நாரிமணியின் நாயகன் என்ற பதவியைத் தவிர பட்டாபிக்கு வேறு பட்டமோ பதவியோ சொந்தமாக ஒன்றும் இருக்கவில்லை. எனினும் ஆண்மகன் என்று பெயரைச் சூட்டிக்கொண்டு அடுப்பங்கரையில் விழுந்து கிடப்பது தகாது என எண்ணி, ஒருசில வருஷங்களுக்கு முன்புதான் நகரத்துக் கடைத்தெருவில் பட்டுப்புடவைக் கடை ஒன்றைத் திறந்திருந்தார்.

வியாபார உலகத்தில் அவருக்கு அனுபவம் பூஜ்யம் என்ற குறை ஒருபுறமிருக்க, அந்தச் சிறிய நகரத்தில் அடுத்தடுத்துப் போட்டியாகப் பல கடைகள் திறக்கப்பட்டு விட்டன. கல்யாண, பண்டிகை மாதங்களைத் தவிர எல்லாக்



கடைகளிலும் வியாபாரம் எப்பொழுதும் மந்தமாகத்தான் இருந்தது. பட்டாபி அதைப்பற்றிக் கவலைப்பட்டதும் இல்லை. இவ்வளவு சரக்கு குவிந்து கிடக்கிறதே, எப்படி இவைகளை அப்புறப்படுத்தப் போகிறோம் என்று ஒரு நாளும் அவர் [illegible].

விற்காத புடவைகள், விலை போகாத [illegible], புதிதாக விற்பனைக்கு வந்த புதிய மோஸ்தர் சரக்குகள் என்று எதைக் கண்டாலும் தனக்கு வேண்டுமென அவரது தர்மபத்தினி கடை அலமாரிகளிலிருந்து வாரிக்கொண்டு வந்து தனது கற்பூரப் பெட்டிகளில் அடுக்கி வைத்துக் கொண்டதனால் அவருக்கு விற்பனையே ஆகவில்லை என்ற மனக்கசப்பு இருந்ததேயில்லை. தமது பட்டுப் புடவைக்காரர் என்பதை விளம்பரப் படுத்துகிறவர்கள் போல் அம்மாவும், பெண்ணும் எந்த ஒரு வைபவத்திலும் முழுக்க ஜரிகை வேலை செய்த ஆடைகளிலே மின்னினார்கள்.

தலையைத் தடவிக்கொண்டு பட்டாபி மீண்டும் ஒரு கொட்டாவி விட்டார். பரீட்சைக்குப் படிக்கும் மாணவனை விடாது துரத்துவதுபோல் தூக்கம் அவரை இன்னமும் விடாது வதைத்துக் கொண்டிருந்தது. கைகளை உதறியும், ஆட்டியும், நீட்டியும் முன் அறையில் பலமுறை நடந்தும்கூட நித்திராதேவி அட்டை போல் அவரை ஒட்டிக்கொண்டு ஆட்டிக்கொண்டிருந்தாள்.

சமையலறைக்குள்ளாவது சென்று கட்டமணையை இழுத்துப் போட்டுக்கொண்டு, ஒரு குட்டித்தூக்கம் போட்டால் என்ன? என்று இடையே ஒரு எண்ணம் உதித்தது அவரது மூளையில்.

''குழந்தை தனியாக இருப்பாள். நீங்கள் எங்கேயாவது பின் அறையில் போய்ப் படுத்துக் கொண்டு தூங்கி விடாதீர்கள். முன் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு இருங்கள். டெலிபோனில் யாராவது கூப்பிட்டாலும் பதில் சொல்ல வசதியாக இருக்கும்'' என்று உத்தரவு போட்டுவிட்டுத் தங்கமணி, பகல் சாப்பாட்டிற்குப் பிறகு அடுத்த தெருவுக்கு

ஏதோ ஒரு காரியமாகத் தமது அத்தை வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

மனைவியின் உத்தரவை எண்ணி எரிச்சல் தாளாது பற்களைப் பலமாகக் கடித்துக்கொண்டு வேகமாக உலாவினார் பட்டாபி. கட்டிடமே அதிர்ந்து தலையில் விழுந்து விடும் மாதிரி மேல் அறையில் நாட்டியப் பயிற்சி வேகமாக வளர்ந்துகொண்டு போனது அவரது ஆத்திரத்திற்கு தூபம் போட்டுக் கொண்டிருந்தது. முடிவில் அவராலேயே சகிக்க முடியவில்லை. தொண்டை கிழிந்து போகும்படி உரத்த குரலில் ''மைனா! மைனா!'' என்று மகளைக் கூப்பிட்டார்.

''அப்பா!'' என அலறிக்கொண்டு மாடிப்படி வழியே ஓடிவந்தாள், பதினைந்து வயதுச் சிறுமி ஒருத்தி. பூசினாற்போல் பருத்து செழுமையாகப் பிடுங்கி எடுத்த வள்ளிக்கிழங்கு போல் காட்சியளித்த அவள் அப்படி அபாரமான அழகி ஒன்றுமில்லை. பணமும், பருவமும் களை கட்டிய முகத்தில் கபடமற்ற சிரிப்பின் சாயை அழகு செய்ததனால் பார்க்கக் கவர்ச்சிகரமாக இருந்தாள். ஒரே மூச்சாக ஆடிய ஆட்டத்தினால் நெற்றியில் வியர்வை துளிர்த்து முத்துக்களாகக் கன்னங்களின் மீது வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. காலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வாராத கூந்தல் பரந்து நெற்றிமீதும், முகத்தின் மீதும் புரண்டு கொண்டு இருந்தது.

''ஏன் அம்மா, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா? காலையிலிருந்து ஆடுகிறாயே? கால் சுளுக்கிக் கொள்ளப் போகிறது'' என்று குழைவாகச் சொன்னார் பட்டாபி.

களுக்கென்று மகள் சிரித்தாள்.

''உங்களுக்குத் தூக்கம் வருகிறதாக்கும். அதனால்தான் என்னைப் பேசாமல் இருக்கச் சொல்கிறீர்கள்... தெரியும் அப்பா உங்கள் சங்கதி...'' பரிகாசமாகச் சிரித்த பெண் தட்டாம் பூச்சிபோல் முன் அறையில் குதித்துக் கூத்தாடியபடி வட்டமிட்டாள்.



# 35

பட்டாபி மேலே பேச வாய் திறந்தவர் படக்கென்று மூடிக்கொண்டார். வாசலில் கார் வந்து நிற்கும் சப்தமும் தொடர்ந்து கதவைத் திறந்து மூடும் சப்தமும் கேட்கவே, திகைப்புடன் திரும்பிப் பார்த்தார். மான்போல் அவரை முந்திக்கொண்டு துள்ளி ஓடி வெளியே சென்று எட்டிப் பார்த்த மகள், ''அப்பா! ஸ்ரீமதி நாராயணன் வருகிறார். உட்காரச் சொல்லி அவரிடம் பேசிக் கொண்டிருங்கள். நான் போய் முகத்தை அலம்பிக்கொண்டு, வேறு உடை உடுத்திக்கொண்டு வருகிறேன்'' என்றாள் பரபரப்பாக.

''அட அசடே! நான் என்ன அவர்களுடன் பேச முடியும்? நீயே கூப்பிட்டு உட்காரச் சொல்லி உபசாரம் செய்'' என்று அவர் கூறி முடிக்குமுன் மைனா சிட்டாகப் பறந்தோடி விட்டாள்.

முதலாவதாக சௌமினியைப் போன்ற நாகரீக ஆடை அலங்காரப் பெண்களைக் கண்டாலே பட்டாபிக்கு ஏகவெறுப்பு உண்டாகும்.

இரண்டாவதாக ஸ்ரீமான் நாராயணன் வீட்டு விவகாரங்கள் ஒன்றுமே அவர் மனத்திற்குப் பிடிக்காத விஷயங்களாக இருந்தன. தன்னைப்போல் நாராயணனும் மனைவியின் செல்வத்து நிழலிலே ஒதுங்கிக்கொண்டு வாழ்க்கையை ஆரம்பித்து வியாபாரத்தில் அதிகப் பொருள் திரட்டி, பெரிய மனிதனாக முன்னணிக்கு வந்துவிட்டார் என்று அவரைக் கண்டு ஓரளவு அவருக்குப் பொறாமை. மூன்றாவதாக, வயது காலத்தில் காசி, ராமேச்வரம் என்று க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கடவுள் சிந்தனையில் இருக்க வேண்டிய மனிதர், இளவயதுப் பெண்ணை மணந்து கொண்டு குமரன் வேஷம் போட்டுத் திரிகிறார் என நாராயணன் மேல் அவருக்குக் கொஞ்சம் துவேஷம்.

எல்லாவற்றையும் விட ஸ்ரீமதி நாராயணன் மீது காணப்பட்ட எல்லை மிஞ்சிய நாகரிகம் அவருக்குக் கடுகளவும் பிடிக்கவில்லை. 'குடும்ப ஸ்திரீக்கு இவ்வளவு முகப்பவுடர் எதற்கு? உதட்டில் சாயப் பூச்சு என்னத்திற்கு? புடவைத்தலைப்பை வீசிக்கொண்டு குதிகால் பாதரட்சையில் குதிரை நடை போடுகிறாளே! பெண்ஜன்மம் என்று கொஞ்சமேனும் அச்சம் இல்லையே?' எனத் தங்கமணியிடம் அடிக்கடி அவளுடைய சிநேகிதியைப்பற்றி விவாதித்திருக்கிறார்.

''அவள் எப்படியிருந்தால் உங்களுக்கென்ன? நமக்கு வேண்டியது அந்தப் பையன்தானே?'' என்று ஒவ்வொரு முறையும் மனைவி அவர் வாய்க்குப் பூட்டுப் போட்டதுண்டு.

எத்தனையோ நல்ல இடங்களிலிருந்து தமது மகளுக்காகப் பாடுபட்டு நல்ல ஜாதகங்களைக் கொண்டு வந்து கொடுத்துப் பார்த்தார் பட்டாபி. தங்கமணி அவைகள் எல்லாவற்றையும் துச்சமாக எண்ணிக் குப்பைத் தொட்டியிலே வீசியெறிந்து விட்டாள்.

ஸ்ரீமான் நாராயணனின் மூத்த மகன் கிரிதரனைத் தனது மகளின் வருங்காலக் கணவனாக மனத்திற்குள் வரித்து விட்டிருந்தாள் அவள். வேறு எந்த வரனும் அவளுக்குப் பிடிக்கவேயில்லை. ''அந்தப் பயல் வீட்டு சம்பந்தம் நமக்கு வேண்டாம். பிள்ளைகளும் அப்பனைப்போல் ஸ்திரீலோலன்களாய் இருப்பார்கள். கிளியை வளர்த்து, பூனை ஆசையினால் பூனையிடமா பயிலிடி ஜுயா?'' என்று கராரயாகக் கத்திப் பார்த்து விட்டார் பட்டாபி.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இதைக் குறித்து ஏற்படும் பூசல்களின் முடிவில், ஓங்கிப் பேசச் சக்தியற்று அவர்தான் தாழ்ந்துபோக நேர்ந்தது. 'ஒழியட்டும்; அவளே மகளின் கல்யாணத்தின் பொறுப்பை எடுத்துக்கொண்டு நடத்தட்டும்' என்றவரை மனத்தில் விரக்தியை உண்டாக்கிக் கொண்டு விட்டிருந்தார்.

''வாருங்கள் உட்காருங்கள்?'' என வேண்டா வெறுப்பாக வரவேற்றுவிட்டு, தோட்டத்தின் ஜன்னல் பக்கம் திரும்பி நின்று கொண்டார் பட்டாபி.



''தங்கமணி அக்கா வீட்டிலதானே இருக்கிறார்?'' என்று வினவிய சௌமினி, உல்லாச நடைபோட்டுக் கொண்டு உள்ளே வந்தாள்.

''இல்லை, வெளியே போயிருக்கிறாள், பரவாயில்லை உட்காருங்கள். மைனாவைப் போய் அழைத்துக்கொண்டு வரச் சொல்கிறேன்'' என்று குளறிய பட்டாபி, திருதிருவென விழித்தார்.

''இருக்குமிடத்தைச் சொல்லுங்கள். நானே காரை எடுத்துக்கொண்டு போய்க் கூட்டிக்கொண்டு வருகிறேன்'' என்றாள் சௌமினி பரிவாக.

''உங்களுக்குச் சிரமம் என்னத்திற்கு? உட்காருங்கள் நீங்கள். இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு, ஒரே தாண்டலில் கூடத்திற்குள் நுழைந்தார். வேகமாக மாடிப்படிகளைக் கடந்து மேலேயிருந்த ஒரு பெரிய அறைக்குள் நுழைந்தார்.

சௌமினி வந்துவிட்டாள் என்பதை அறிந்ததும் அவசரமாக முகத்தைக் கழுவிக் கொள்ள ஓடிய மைனா கண்ணாடி முன் பரபரப்பாக அலங்கரித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

''என்ன அப்பா! அந்த மாமியைத் தனியே விட்டுவிட்டு இங்கே வந்து விட்டீர்கள். நான் வரும்வரை ஏதாவது பேசிக்கொண்டு இருக்கக்கூடாதா?'' என்று மகள் தந்தையைக் கொஞ்சலாக அதட்டினாள்.

''சரிதான் போ. ஓடிப்போய் உங்கம்மாவை அத்தை வீட்டிலிருந்து கூட்டிக்கொண்டு வா. இனி இரண்டு பேரும் பேச ஆரம்பித்தால் விடிந்துவிடும். ஆனால் மறக்காமல் ஐந்து மணிக்கு என்னை எழுப்பிச் சூடாகக் காப்பி கொண்டுவந்து கொடுத்து விடு. அதற்குமேல் எனக்குக் கடைவரை கொஞ்சம் போக வேண்டும் தெரியுமா?'' என்று ஒரு உத்தரவு போட்டுவிட்டு, தமது படுக்கையறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டார்.

மிருதுவான பஞ்சணை மீது சரீரத்தைச் சாய்த்தவுடன் பட்டாபிக்கு ''அப்பாடா'' என்று இருந்தது. போவதும் வருவதுமாக இருந்த உறக்கமும் மீண்டும் ஓடிவந்து பற்றிக் கொள்ளவே, நிம்மதியாகத் தூங்கலானார்.

தாயார் முதல் நாள் கடையிலிருந்து எடுத்து வந்த புடவையைக் கிழித்து, அவசரமாகத் தானே உட்கார்ந்து தைத்துக் கொடுத்த பச்சை சரிகை கொட்டடிப் பட்டுப் பாவாடையையும், மஞ்சள் நிற வெல்வெட் சோளியையும் அணிந்து கொண்ட மைனா, அவசரமாகச் சிவப்பு நிற ஷிபான் தாவணி ஒன்றைப் பீரோவிலிருந்து இழுத்து மேலே சுற்றிக் கொண்டாள். பின்னல் நுனியில் தொங்கிய தங்கக்குமிழ்க் குஞ்சலங்கள் ஆட, தலையை இப்படியும் அப்படியும் திருப்பிக் கண்ணாடியில் தன்னை அழகு பார்த்துக் கொண்டாள். பிறகு மெல்லக் கீழே இறங்கி வந்தாள்.

சௌமினியின் அழகு, பேச்சு, அலங்கரித்துக் கொள்ளும் முறை எல்லாம் இளவயதுச் சிறுமிகளுக்கு மிகவும் பிடித்த விஷயங்களாக இருந்ததனால், ஜலங்கண்டானின் இளமைப் பருவத்து நங்கையர்களுக்கு அவள் ஒரு இலட்சிய சுந்தரியாகத் திகழ்ந்தாள் என்றால் மிகையில்லை. தன் தோழிகளுக்கும், மற்ற பெண்களுக்கும் நாகரிகம் என்பதற்குக் கலங்கரை விளக்கமாக இருந்த அழகி சௌமினி தனக்கு வருங்காலத்தில் மாமியாராகப் போகிறாள் என்று ஜாடையாகப் பெரியவர்கள் பேச்சிலிருந்து புரிந்துகொண்டிருந்தாள் மைனா. முன்னைவிட சௌமினியம்மாள் மீது பக்தி பன்மடங்காகப் பெருகி விட்டிருந்தது. அவளைப் பார்த்த பொழுதெல்லாம் தன் வருங்காலக் கணவனையே சந்தித்து விட்டதுபோல் உவகை வெள்ளத்திலே மெய் பதறிப் போனாள்.

''சௌமினி மாமி ஊரிலிருந்து இன்று காலை வந்திருக்கிறாள். ஒரு சமயம் நம் வீட்டிற்கு உடனே வந்தாலும் வருவாள். நீ எதற்கும் நன்றாக உடுத்திக்கொண்டு இரு'' என்று தாயார் அவளுக்குக் காலையிலேயே ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தாள். எனவே, கீழே இறங்கி வந்ததும் கூடத்தில் கண்ணாடியில் ஒருமுறை தன் அலங்காரத்தை அவள் பார்த்துக் கொண்டாள்.



நெஞ்சு பதற, நடை தள்ளாட, புதுப் பெண்போல் தயங்கிக்கொண்டு முன்னறைக்கு வந்தாள் மைனா.

''மன்னியுங்கள், அம்மா அத்தை வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். நான் ஓடிப்போய்க் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றாள் பதட்டமான மெல்லிய குரலில்.

சௌமினி அந்தச் சிறுமியை ஏற இறங்கப் பார்த்து விட்டு தன் பவள இதழ்களை விரித்து முத்துப் பற்களைக் காட்டி மோகனமாக மெல்லச் சிரித்தாள். கையை நீட்டி அவளது வலக் கரத்தைப் பற்றித் தன் அருகில் இழுத்து தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

''எங்கே, இப்படித் திரும்பு, உன் முகத்தை நான் பார்க்கிறேன். ஏதோ புதிதாகத் தெரிகிறதே. அடடா! ஜிமிக்கி, மாட்டல் இரண்டும் புதிதாக இருக்கின்றனவே. எப்பொழுது வாங்கினார்கள் அம்மா?'' என்று கேட்ட சௌமினி மைனாவதியின் காதுகளில் ஒளிவீசி மின்னிய வைர ஆபரணங்களை அதிசயத்துடன் பார்த்துவிட்டுப் புன்முறுவலித்தாள்.

''போன மாதம் வைர வியாபாரி ஆறுமுகம் செட்டியார் கொண்டு வந்தார். அம்மா வாங்கினார்கள். இத்துடன் கூட ஒரு அட்டிகையும் எனக்காக வாங்கியிருக்கிறார்கள்!'' எனக் கன்னங்குழிய வெட்கத்துடன் கண்களை இடுக்கிக் கொண்டு மெல்ல மிழற்றினாள் மைனா.

சௌமினி லேசாக அந்தச் சிறுமியின் கன்னத்தைக் கிள்ளினாள். ''ம்! எங்கள் வீட்டுப் பிள்ளை அதிர்ஷ்டக்காரன்தான். இப்படிப்பட்ட அழகான படித்த பெண் கூட நகைகளுடன் வந்தால் ஏற்கக் கசக்குமா என்ன?'' என்று பரிகாசமாகக் கேட்டாள்.

குங்குமமெனச் சிவந்த முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு தனது கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்ட மைனா, துள்ளிக் கொண்டு வெளியே ஓடிவிட்டாள்.

அவள் தோட்டத்தைத் தாண்டி வீதிக்கு அப்பால் செல்லும் வரை பார்த்துக் கொண்டிருந்த சௌமினி தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டாள். அவள் மூளையில் அலை அலையாகப் பல யோசனைகள் ஏக காலத்தில் எழுந்தன. அவைகளையெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு வெளியே வந்து 'போர்டிகோ'வில் நிறுத்தியிருந்த காரின் அருகே வந்தாள். ''ஜகதீசா! நீயும் உள்ளே வந்து உட்காரலாம். இது என் சிநேகிதியின் வீடு'' என்று அழைத்தாள்.

''நல்ல வேளை, இங்கேயும் மணிக்கணக்காக காருக்குள் கிடந்து அவியவேண்டுமோ என்று பயந்துவிட்டேன்!'' என்று கேலியாகச் சொன்ன ஜகதீசன், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

தன் எதிரேயிருந்த ஆசன மொன்றில் அவனை அமரச் சொல்லிவிட்டு, மின்சார விசிறியைச் சுழல விட்டு விட்டுத் தானும் வந்து உட்கார்ந்து கொண்டாள் சௌமினி.

''வீடு மிகவும் அழகாக இருக்கிறது. நல்ல ரசிகத் தன்மையுடன்தான் கட்டியிருக்கிறார்கள்'' என்றான் வியப்புடன் ஜகதீசன், சுற்றிலும் கண்களைத் துழாவவிட்டு.

''அந்தப் பெண் அழகாக இல்லை?'' என்று திடீரென்று ஒரு கேள்வி அவள் கேட்டதும், திடுக்கிட்டு விட்டான் ஜகதீசன். முகம் சிவந்து குழந்தைபோல் சங்கோஜத்துடன் சித்தி பக்கம் மெல்லத் திரும்பி, ''என்ன கேள்வி இது சித்தி! நான் புறப்படுமுன்னே மஞ்சுளா மிகவும் அழகாக இருக்கிறாள் என்று விமரிசனம் செய்தேனே, மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது?'' என்றான்.

ஒரு கூடை நெருப்பை யாரோ முகத்தில் வீசிவிட்டது போல் அதிர்ச்சியடைந்து போனாள் சௌமினி. சட்டெனத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''அட அசடே! நான் அந்த வேலைக்காரப் பெண்ணைச் சொல்லவில்லை. இந்த வீட்டுக்காரப் பெண்ணைப் பற்றிக் கேட்டேன்'' என்றாள்.

ஜகதீசன் பதிலுக்கு மெல்லச் சிரித்தான். ''நான் அவளைச் சரியாகக் கவனிக்கவில்லை சித்தி'' என்றான் அலட்சியமாக.



கதிரவனின் மஞ்சள் ஒளி சிவந்து நீலக் கருவானத்தில் மெல்ல மறையும் அழகிய அந்தி நேரம். அப்பொழுதுதான் கிரிதரன் திரும்பி வந்திருந்தான். காரியாலயத்தின் கடிதங்கள் நிறைந்த தோல் பையைச் சுமந்து கொண்டு பின் தொடர்ந்து வந்த சிந்தாமணி, மாடியிலிருந்த அவனது அறைக்குள் நுழைந்து பையை மேஜைமீது வைத்துவிட்டு கீழே இறங்கிச் சென்று விட்டார். கனை நிறைந்த கிரிதரனது முகம் காலையிலிருந்து மிகவும் வாடியிருந்ததை அவர் ஜாடையாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

'கிரி! ஏன் இப்படி இருக்கிறீர்கள்? என்னிடம் விஷயத்தைச் சொல்லுங்கள். என்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமானால் உயிரைக் கொடுத்தேனும் செய்து முடிக்கிறேன்' என்று வினவ வேண்டும் போல் அவன் மீது கொண்டிருந்த பாசம் கிழவரது உள்ளத்தை உலுக்கியது. நேற்றுவரை தமது கையால் எடுத்து வளர்த்த பிள்ளையானாலும் இன்று அவன் எஜமானன் ஆயிற்றே என்ற அச்சம் வாயை அடைத்து விட்டிருந்தது. கீழே சென்றார். நேராகச் சமையற் கட்டிற்கு விரைந்தார். இரவுச் சாப்பாடு தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போதிலும் கிட்டா அவரைக் கண்டதும் பற்களைக் காட்டி வரவேற்றார்.

''இன்றைக்கு பகல் டிபன் செய்யும் போது அண்ணாவை நினைத்துக் கொண்டுதான் செய்தேன். போண்டா என்றால் உங்களுக்குத்தான் உயிராயிற்றே! கொஞ்சம், சூடாக காப்பியுடன் சாப்பிடுங்கள்'' என்று உபசரித்தார் மிக்க பரிவுடன்.

''வயிறு மந்தமாக இருக்கிறது. எனக்கு ஒன்றும் வேண்டாம். முதலில் சின்ன எஜமான் கிரி அவர்களுக்கு ஏதாவது சூடாக சீக்கிரம் மாடியறைக்கு அனுப்பிவை. அதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்றார் சிந்தாமணி.

கிட்டா நகைத்தார். ''சின்ன எஜமானருக்குக் கூட வயிறு மந்தம் போலிருக்கிறது. இல்லாவிட்டால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறீர்களா, தெரிய

வில்லையே. தொழிற்சாலைக்கு இன்று பகல் வஜ்ரவேலு அவருக்காக எடுத்துப்போன சாப்பாடு அப்படியே டிபன் செட்டோடு திரும்பி வந்து விட்டிருக்கிறதே'' என்றார்.

''அப்படியா?'' என்றார் சிந்தாமணி சற்று திகைப்புடன்.

''அதோடு மட்டுமா?'' என்று தொடர்ந்து பேசிய கிட்டா தமது குரலைச் சிரமப்பட்டுத் தாழ்த்திக்கொண்டு, ''அந்தப் பெண் மஞ்சுளா கூட இன்று பகல் சாப்பிடவில்லை. அழுதழுது அதனுடைய முகம் சிவந்து வீங்கிப்போய் விட்டிருக்கிறது. எஜமானியம்மாள் அந்தப் பெண்ணிடம் காலையில் ஏதோ இரைந்து கொண்டிருந்தார்கள். என்ன ஏன் என்று நான் விசாரிக்கவில்லை. எஜமானியம்மாள் ஊரிலிருந்து வந்து இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் வீடே இரண்டு படுகிறதே. இன்று காலையில் மஞ்சுளா முகத்தைப் பார்த்தபோது எனக்கு வந்த கோபத்தில் உடனே மூட்டையைக் கட்டிக்கொண்டு கிளம்பி விடவேண்டும் போல் இருந்தது...'' என்று நிறுத்தி விட்டுப் பெருமூச்செறிந்தார்.

இதையெல்லாம் கேட்ட சிந்தாமணியின் உள்ளத்தைக் கவலை கவ்விக் கொண்டது. எனினும் அவர் ''ஏன் புறப்பட்டுப் போய் விடுகிறதுதானே? உன்னை விட்டால் இங்கே சமைக்க யாரும் ஆளில்லையா? வேறு யாரும் அந்த வேலைக்குக் கிடைக்க மாட்டார்களா என்ன?'' என்று கேட்டார் சிரித்துக் கொண்டு.

கிட்டா மீண்டும் ஒரு முறை பெருங் குரலில் கோஷமிட்டு நகைத்தார். ''இல்லையென்று சொல்லவில்லை அண்ணா! சிறிய எஜமானருக்குக் கல்யாணம் ஆகும் வரை பல்லைக் கடித்துக் கொண்டு வேலை பார்த்து விடுகிறது என்று சங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேனே!'' என்றார்.



# 36

சிந்தாமணி பதில் பேசாது புன்முறுவலித்தார். கிட்டா மீண்டும் ஏதோ பேச வாயைத் திறந்தவர் பேயைக் கண்டவர் போல் மிரட்சியுடன் டபக்கென வாயை மூடிக்கொண்டு ஒரே தாண்டலில் அடுப்புமேடையருகில் போய்த் திரும்பி நின்று கொண்டார். கொதித்துக் கொண்டிருந்த குழம்பைக் கிளறுவதில் முனைந்து விட்டார். குபீரென்று வீசிய சென்ட் மணத்தை உணர்ந்து மெல்லத் திரும்பினார் சிந்தாமணி. கோபாவேசத்துடன் உள்ளே வந்து நின்ற சௌமினி, அவரை எரித்து விடுகிறவள் போல விரைத்துப் பார்த்தாள். ''பெரிய எஜமானர் ஏதோ காரியமாகக் கூப்பிடுகிறார். நீங்கள் இங்கே வந்து எதற்காக நின்று கொண்டிருக்கிறீர்கள்? கூடிக்கூடி நின்று வேலையாட்கள் பேசிப் பொழுதைக் கழிப்பது எனக்குப் பிடிக்காத காரியம் என்று எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். புரிந்து கொள்ள முடியாத பச்சைக் குழந்தைகளா நீங்கள்?'' என்று இரைந்து கத்தினாள்.

தம்மிடம் அவள் பேசிய முறை சிந்தாமணிக்குப் பொறுக்கவில்லை. கோபத்தினால் அவரது கண்கள் சிவந்துவிட்டன. புருவங்கள் துடித்தன. வாயில் புறப்பட்ட வார்த்தைகளைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு பதில் பேசாமல் வேகமாக வெளியே சென்றுவிட்டார். அடுத்தபடியாகக் கிட்டாவின் பக்கம் திரும்பிச் சீறினாள் எஜமானி.

''ஜகதீசனும் நானும் வெளியிலிருந்து வந்து அரை மணிக்கு மேல் ஆகிறது. இன்னமும் காப்பி டிபன் எங்களுக்கு அனுப்பி வைக்கவில்லை. காரியத்தைக் கவனிப்பதை விட்டு கதை பேசிக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று அதிகாரமான குரலில் அதட்டிக் கேட்டாள்.

கிட்டா குழம்பைக் கிளறிக் கொண்டிருப்பவர் போல்

பாவனை செய்தார். பற்களைக் கடித்துக்கொண்டு ''சின்ன எஜமானர் இரண்டு பெயருக்கும் உங்களுக்கும் சேர்த்து டிபன் அனுப்பி வைத்திருக்கிறேன் அம்மா. இப்பொழுது தான் அம்பி எடுத்துச் சென்றான்'' என்று பதிலளித்தார்.

''எஜமானருக்கு ஜலதோஷம். சிரக ரஸமும் பருப்புத் துவையலும் சீக்கிரமாகத் தயார் செய்யும்படி சொல்லச் சொன்னார். ஏழு மணிக்குள் இலைபோட்டு விடவேண்டும். நாங்கள் எல்லோரும் இரவு ஒரு சினிமாவுக்குப் போக வேண்டியிருப்பதால் தாமதம் செய்யாதீர்கள்'' என்று உத்தரவிட்டு விட்டு வேகமாக நடந்து அப்பால் சென்று மறைந்தாள்.

எஜமானியம்மாளிடம் காலையில் ஒருமுறை சுடுஞ் சொற்களைக் கேட்டு மனம் அதிர்ந்து போயிருந்த அம்பிப்பயல், அவளது குரலைக் கேட்டதும் உக்கிராண அறைக்குள் கதவுக்குப் பின்னால் சென்று மறைவாக நின்று கொண்டிருந்தான். அம்மாள் அப்பால் போனதும் மெல்லத் தலையை நீட்டிக்கொண்டு அசட்டுச் சிரிப்புடன் சமையலறைக்குள் வந்தான்.

''எங்கேயோ தொலைந்து விட்டாய் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன். இப்படி வா. அம்மா மறுபடி ஒரு முறை இங்கே அலறிக் கொண்டு வரும்முன் இதைக்கொண்டு போய் மாடியறையில் வைத்துவிடு'' என்று உறுமி விட்டு ஒரு பெரிய மரத்தட்டில் மூன்று பெயர்களுக்கு வேண்டிய சிற்றுண்டிகளை அவசரமாக எடுத்து வைத்து அவனிடம் கொடுத்தார்.

அம்பிப் பயல் அதைத் தூக்கிக் கொண்டு காற்றாகப் பறக்கச் சித்தமானான். அவன் போகுமுன் கிட்டா சட்டென்று அவனை அழைத்தார். ''முதலில் கிரிதரனுக்குக் கொண்டு கொடு. பிறகு அம்மாவுக்கும் ஜகதீசனுக்கும் கொண்டுவை. கிரிதரன் தான் காலையிலிருந்து சாப்பிடாது பட்டினியுடன் வேலை செய்துவிட்டு களைப்பாக வந்திருக்கிறார். மற்ற இருவருக்கும் என்ன கொள்ளை. பகல் பொழுது நன்றாகச் சாப்பிட்டுவிட்டு



ஊரைச் சுற்றக் கிளம்பினவர்களுக்கு அதற்குள் அப்படியென்ன பசி வந்துவிட்டது?'' என்று சுடுசுடுத்தார். 'ஆகட்டும்' எனத் தலையை ஆட்டிய அம்பிப் பயல் மனோவேகத்தில் மாடிக்கு ஓடிவிட்டான்.

அதுசமயம் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்துவிட்டு வேறு உடை உடுத்திக்கொண்டு தன் அறையின் நடுவே கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான் கிரிதரன். அவனையொத்த வாலிபர்கள் - அதுவும் செல்வந்தர் வீட்டுச் செல்லப் பிள்ளைகள் - அதுசமயம் வீட்டில் அடைந்தா கிடப்பார்கள்? டென்னிஸ் மட்டையைச் சுழற்றிக் கொண்டு கிளப்பிற்குக் கிளம்பியிருப்பார்கள். இல்லாவிடில் நகரத்தில் நடைபெறும் நாட்டியக் கச்சேரிகளுக்கோ, சினிமா காட்சிகளுக்கோ நண்பர்களைப் படை திரட்டிக் கொண்டு கிளம்பியிருப்பார்கள்.

எல்லாவிதமான சௌகரியங்கள் இருந்தும் இளமைப் பருவத்திலே கவலையே உருவாக, எந்தவிதமான கேளிக்கைகளிலும் நாட்டமின்றி, தனது அறைக்குள்ளே சிறைப்பட்டுக் கிடந்தான் அவன்.

பணம், பதவி, படாடோபமான வாழ்க்கை அனைத்தும் இருந்தும், இன்ப வாழ்விற்கு முக்கியமான ஒரு விஷயம் அவன்வரை சூன்யமாகி விட்டிருந்தது. என்று அவனது அருமைத் தாயார் மறைந்தாளோ அன்றே அவனது உள்ளத்தில் அமைதி அஸ்தமித்து விட்டது. தந்தை மறுமணம் செய்து கொண்ட செய்தியைக் கேட்ட தினத்திலிருந்து அவன் முகத்திலே பொங்கிநின்ற களை குன்றிவிட்டிருந்தது. தொடர்ந்து அருமைத் தங்கைக்கு ஏற்பட்ட பயங்கரமான விபத்திற்குப் பின்னர் துன்பக் கடலில் மூழ்கிப்போய் விட்ட அவனால் மனம்விட்டுச் சிரிக்கக்கூட முடியவில்லை.

கவலையற்று மான் குட்டிபோல் துள்ளித்திரிகின்ற வாலிப வயதில், வாழ்வின் வேதனையிலே திளைத்து மனம் கசந்து விரக்தியடைந்து விட்டிருக்கும் முதியவனுடைய மனப் பான்மையை ஏற்றுக்கொண்டு விட்டது அவனது இளம்

உள்ளம். தாயைப்போன்று இயற்கையாக அவனிடம் குடிகொண்டிருந்த அபாரமான பொறுமையும், பிடிவாதம் நிறைந்த மனோபலமும் அவனைப் பித்தனாக்காது காப்பாற்றி வந்தன. மனத்தில் குவிந்துகிடந்த சஞ்சலப் போர்வைகளை உதறிவிட்டு, தன்மேல் சுமத்தப்பட்டிருந்த பெரிய பொறுப்பை நிர்வகித்து தானும் சாதாரண மனிதனாக உலகில் உலவ மிகவும் முயற்சித்தான் அவன். எனினும் தனிமையாகத் தன் அறைக்குள் வந்து உட்கார்ந்த பொழுதெல்லாம் துன்ப வேதனை அவனை ஓடிவந்து பிடித்துக் கொள்ளத்தொடங்கியது. 'கையும் காலும் கடமை என்னும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு மரியாதை என்ற பூட்டு வாயை அடைக்க, சுற்றிலும் நடக்கும் அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டு எவ்வளவு காலம் அடிமையாக வாளா விருப்பது?' என்று அடிக்கடி உள்ளம் புரட்சி செய்தது.

மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டுவந்த அம்பிப்பயல் டிபன் தட்டை மேஜைமீது வைத்துவிட்டு பூனையாக நடந்து கதவைச் சாத்திக் கொண்டுபோய் விட்டான். ஆவி பொங்கிக் கொண்டிருந்த காப்பி டம்ளரை எடுத்து இரண்டு வாய் பருகிவிட்டு வெறுப்புடன் கீழே வைத்தான் கிரிதரன். பசி வயிற்றைக் கிண்டிய போதிலும் அவனுக்குச் சாப்பிட மனம் இருக்கவில்லை. கண்களை மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்து மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

அன்று காலையிலிருந்து கிரிதரனின் மனம் ஒரு நிலையில் இல்லாது கவலையில் தத்தளித்துக் கொண்டிருந்தது உண்மை. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஸ்ரீமான் நாராயணன் மிகவும் கெட்டிக்காரர்தான். அலுக்காது வேலை செய்யக்கூடிய உழைப்பாளியுங்கூட. தமது சாமர்த்தியத்தினாலும், திறமையினாலும் ஜலங்கண்டான் போன்ற சிறிய நகரத்தில் இரும்புப் பெட்டி உற்பத்தி தொழிற்சாலையைத் துவக்கி நாளடைவில் அதை ஒரு பெரிய ஸ்தாபனமாகவும் செய்து விட்டிருந்தார். கடந்த யுத்தத்தின்போது வியாபாரம் மிகவும் பெருகி விட்டிருந்ததனால் பெருவாரியாகப் பொருளும் திரட்டிவிட்டிருந்தார்.



ஆனால் அவரது திறமையும், உற்சாகமும், ஊக்கமும் அவரது மூன்றாவது திருமணத்திற்குப் பிறகு ஓய்வு கொண்டு விட்டன. தொழிற்சாலையைப் பற்றி கொஞ்சமும் சிந்தையின்றித் தமது இளைய மனைவியுடன் உலகத்தைச் சுற்றி உல்லாசமாக பவனி வந்தார். உலக யாத்திரைக்குப் பிறகு ஊருக்கு வந்தவர் தொழிற்சாலைக்கு மாதம் ஒருமுறை வந்து எட்டிப் பார்ப்பதுகூட அபூர்வமாக இருந்தது. மனைவியை சந்தோஷப்படுத்த அடிக்கடி வெளியூர் பிரயாணங்களில் ஈடுபட்டிருந்த நாராயணன், தொழிற்சாலையைக் கவனித்து நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதையும் மூத்த மைந்தன் மீது சுமத்தி விட்டிருந்தார். நினைத்துக் கொண்டால் எப்பொழுதாவது தொடர்ந்தாற்போல் சில தினங்கள் தொழிற்சாலை சென்று கொஞ்சநேரம் மேற்பார்வையிட்டு வீடு திரும்பி விடுவார். வர வர அவருக்கு வியாபாரத்தில் அசட்டையும் அதிகமாகிக் கொண்டு வந்தது.

முன்பின் வியாபாரம் பற்றி ஏதும் அனுபவமில்லாத பட்டதாரியான கிரிதரன், தந்தை தன் தலையில் ஏற்றி விட்டிருந்த பாரத்தைத் தாளமுடியாது தத்தளித்துக் கொண்டிருந்தான். யுத்தத்தின் பிறகு ஏற்பட்ட வியாபார மந்தம், அனுபவமற்ற இளைஞன் நிர்வகித்த முறை, தந்தையும் சிறிய அன்னையும் உலகத்தைச் சுற்றி வந்ததனால் ஏற்பட்ட அபாரச் செலவு மூன்றும் சேர்ந்து கொண்டதும் நாராயணனின் வியாபாரம் கடன் சுமையில் கிடுகிடுக்கத் தொடங்கியது.

தந்தை மீண்டும் தொழில் விவகாரத்தில் தலையிடுமுன் கடன் சுமையை எப்படியாவது தீர்த்துவிட வேண்டும் என்று நிர்பந்தமான ஆர்வத்தில் கிரிதரன் தன் தாயார் தனக்கும் சகோதரிக்கும் என விட்டுப்போயிருந்த விலை உயர்ந்த ஆபரணங்களை அடகு வைத்து பல கடன் தொல்லைகளை தீர்த்து செய்திருந்தான். இந்த ரகசியம் அவனுக்கும் அவன் சகோதரிக்கும் மட்டுமே தெரியும். வருஷ முடிவில் வியாபாரத்தில் ஏற்படும் லாபத்தைக் கொண்டு எப்படியாவது அவைகளை மீட்டுவிடலாமென்று அவன் கொண்டிருந்த ஆசை நிறைவேறவில்லை. மூன்று வருஷ காலம் தொடர்ந்தாற்போல்

வியாபாரத்தில் அதிக லாபம் ஏற்படவில்லை.

அன்று காலை தொழிலகத்து அந்தரங்கக் காரியதரிசி அவன் மேஜைமீது வைத்துப் போன தொழிற்சாலை புள்ளிவிவரங்களைக் கண்ணுற்றபோது கதி கலங்கிப் போய்விட்டான் அவன். ஸ்ரீமான் நாராயணனது வியாபாரம் கடன் என்ற பாதையிலே வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது எனக் காட்டியது வருஷாந்தரக் கணக்கு. இப்படியே போய்க் கொண்டிருந்தால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவர்களது தொழிற்சாலை திவாலாகிவிடும் என்ற உண்மையை அவனால் ஏற்கவே முடியவில்லை. தன் பங்கிற்குத் தாய் அளித்துப்போன ஆபரணங்களைப் பற்றி அவன் கவலை அடையவில்லை. 'பிறந்த வீட்டுச் சொத்தாக தாயின் நினைவாக இருக்க எண்ணி சகோதரி மிகவும் பயபக்தியுடன் வைத்துக் காப்பாற்றி வந்த அருமையான ஆபரணங்களை வட்டிக் கடையில் வாரி விட்டோமே அவைகளை மீட்க முடியாவிட்டால்?' என்ற வேதனை அவன் உள்ளத்தைப் புழுவாக அரித்தது.

ஒருவார காலமாக அவன் தன் தந்தையிடம் இரண்டு விஷயங்களைச் சொல்ல முயற்சித்தான். 'பொருளாதார மந்தம் நிறைந்த உலகில் இனி இரும்புப் பெட்டியில் பூட்டி வைக்கத்தான் ஜனங்களிடம் பணம் ஏது? அதனால் இரும்புப் பெட்டி உற்பத்தியைக் குறைத்து வேறு உபயோகமான பொருள்கள் செய்வதில் ஈடுபடலாம் என்று தந்தையிடம் யோசனை சொல்லிப் பார்த்தான். விஷயத்தைச் சரியாகக் கிரகித்துக் கொள்ளாமல் அவர் கோபமடைந்து பெரிய தர்க்கத்தில் இறங்கி விட்டார். இன்னொருநாள் மெதுவாக வீட்டுச் செலவைப் பற்றிப் பேசத் தொடங்கினான். செலவு முன்னைவிட பெருகிக்கொண்டு போகிறதனால் அதை மட்டுப்படுத்த வழிகளை உடனே அனுசரிக்காவிடில் ஆபத்து ஏற்படும் என்ற பொருள்பட அவன் பேசியதைக் கேட்டதும் சௌமினி கோபாவேசத்தில் துள்ளிக் குதித்துப் பெரும் சண்டையைக் கிளப்பிவிட்டு விட்டாள். தனது இளைய மனைவியின் மோகத்திலே கட்டுண்டு கிடந்த தந்தை அவன்



மனம் புண்படக் கடுமையாகப் பேசிவிட்டார். கடன் சுமையைத் தீர்க்க அவன் கையாண்ட முயற்சிகள் இவ்வாறு தோல்வியுற்றுப் போனதால் கவலை அவன் மூளையைக் குடையத் தொடங்கியது.

தொழில் விவகாரங்களைத் தவிர குடும்பவிவகாரங்கள் பலவும் அவனது மனப் போராட்டங்களுக்குக் காரணமாக அமைந்திருந்தன. சகோதரியின் தீரா நோயின் துன்ப வேதனை ஒருபுறம் சதா மனத்தை அலட்டிக் கொண்டிருக்கையில் தந்தையின் நடத்தையினால் ஏற்பட்ட அவமானம் இன்னொரு புறம் அனலாக எரித்துக் கொண்டிருந்தது. மூன்றாவது முறையாக வயது மீறிய காலத்திலே திருமணம் செய்து கொண்ட பிசகு போதாதுபோல் நாராயணன், வேலைக்காரர்கள், குழந்தைகள் முன்னிலையில் கொஞ்சமும் வெட்கமின்றித் தமது இளம் மனைவியிடம் கொஞ்சிக் குலாவினர். புதிதாக மணந்துகொண்ட இளம் தம்பதிகள் போல் கையைக் கோத்துக்கொண்டு அவர்கள் இருவரும் தோட்டத்திலே உலவிய காட்சியைக் காண கிரிதரனுக்கு வெட்கமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. பெற்ற பிள்ளைகள் மலைபோல் எதிரே உட்கார்ந்திருப்பதைக் காணாதவள் போல் சௌமினி தன் முகத்தை நாராயணன் தோள் மீது சாய்த்துக் கொண்டு கொஞ்சிப் பேசியதை அவனால் சகிக்கவே முடியவில்லை.

சிறுகுழந்தை தத்தித் தவறிப் பேசினால் அதை மழலை என்று பெற்றோர்கள் ஏற்று மகிழ்கின்றனர். யாழினும் இனிமையாக உள்ளது குழந்தையின் மழலை மொழி. வயது வந்தவன் திக்கித் தடுமாறிப் பேசினாலோ, உளறுகிறான் என [illegible]கிறார்கள் கேட்பவர்கள். காதல் விஷயத்திலும் உலகம் இதே முறையைத்தான் அனுசரிக்கின்றது. யௌவனத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் ஆணும் பெண்ணும் மனம் ஒன்றுபட்டு காதல் புரிவதை நாடகத்திலும், சினிமாவிலும் காவியத்திலும் கண்டுகளிக்கின்ற உலகம் அவர்கள் காதலைக் காவியமாகப் புனைந்து அழகு பார்க்கிறது.

ஆனால் கிழ வயதிலே போன வாலிபத்தை ஞாபகப்

படுத்திக் கொள்கிற மனிதனைக் கயவன் என ஏசுகின்றது. இடித்துப் பேசுகின்றது. இந்த உண்மையை எண்ணி எண்ணி மனம் நொந்து போனான் கிரிதரன். 'அப்பாவின் காதல் லீலைகளைக் கண்டு ஊரார் என்னவெல்லாம் பேசித் தூற்றுகிறார்களோ!' என அஞ்சி நடுங்கியது அவன் மனம். எல்லாவற்றையும் விட இன்னொருவிஷயம் அவனை மிகவும் தீவிரமாக சிந்திக்கச் செய்து விட்டிருந்தது. சித்தி சௌமினியும் சகோதரன் ஜகதீசனும் நடந்து கொள்ளும் முறை அவனுக்குச் சிறிதும் பிடிக்கவே இல்லை! ஜலங்கண்டான் நகர் மிகவும் சிறியதான போதிலும் வம்பு பேசுவதில் அங்கு வசித்த சிலர் மற்ற பிரபல நகரத்து வம்பர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல. ஒன்றைப் பத்தாக்கி நூறு என மாற்றி ஆயிரமாகக் கதை திரித்து விடுவதில் கைதேர்ந்தவர்கள் அநேகர் வசித்த நகரம் அது. எனவே சிற்றன்னையின் விரும்பத் தகாத செயல் அவனுக்கு அதிகக் கவலையை உண்டு பண்ணிவிட்டிருந்தது.

## 37

ஸ்ரீமான் நாராயணன் காலங்கெட்ட காலத்தில் கல்யாணம் செய்து கொண்டார் என்று ஊரார் மறைமுகமாக பேசி சிரிக்கும் ஒரு அவமானம் மட்டும் போதாதா? 'இளைய மனைவி நடத்தை கெட்டவள். தன் சிறிய மகனுடன் தொடர்பு கொண்டிருக்கிறாள்' என்று வீண் கதை ஒன்று அக் குடும்பத்திற்குப் பாக்கியாக இருந்ததா? இதையெல்லாம் நினைத்து கிரிதரனின் தலை சுழன்றது.

கடைசியாக இன்னொரு முக்கிய விஷயம் துன்பத்திலே தவித்த அவன் மனத்தில் பெரும் சுமையாகச் சூழ்ந்து கொண்டிருந்தது. தன் காரின் கீழ் வந்து விழுந்த காரிகையின் அழகிய வட்டவடிவமான முகத்தைக் கொட்டும் மழையில் கண்ட அன்றைய தினத்திலிருந்து அவன் சிந்தை அவன் வசத்திலே இருக்கவில்லை. அழகான பெண்களைக் கண்களால்



[illegible] பார்த்திராத அப்பாவியல்ல அவன். இளமையில் [illegible] ஆவல் உணர்ச்சியால் உந்தப்பட்டு, [illegible]களிலும், பொது இடங்களிலும் அழகான பெண்களை [illegible] ஏற இறங்க உற்றுக் கவனித்திருக்கிறான். [illegible] கற்பனையை எண்ணி எண்ணி எவ்வளவோ [illegible] வியந்திருக்கிறான். ஆனால் மஞ்சுளாவின் அழகு [illegible] அப்படியெல்லாம் தலைகிறங்கும் போதைப் [illegible] இருக்கவில்லை. மயக்கம் தரவில்லை.

[illegible] போல் கொந்தளித்த அவன் உள்ளத்திற்குப் [illegible] அவள் முகத்தில் நிலவிய புன்னகை [illegible] ஆறுதலளித்தது. எஜமானன் என்ற நிலைமையை [illegible] கொண்டு அவன் வலிய அவளிடம் பேச [illegible]வேயில்லை. தூர இருந்து அந்த அழகு பிம்பத்தைக் [illegible] கவனிப்பதிலும், காற்றிலே பறந்து வந்த அவளது இனிய குரலைக் கேட்பதிலும் அவன் மட்டற்ற மகிழ்ச்சியை [illegible]. துன்ப நிழல் படிந்திருந்த ஆனந்தநிலையத்தில் அவள் வந்த பிறகு இன்ப ஒளி பிரகாசிப்பது போன்று அவனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டிருந்தது. மஞ்சுளா மீது தன் உள்ளம் கட்டுக்கடங்காத காதல் கொண்டு விட்டதென்ற [illegible] அவன் உணர்ந்து பல தினங்கள் சென்றுவிட்டன. ஆனால் அந்தக் காதல், இன்பத்திற்குப் பதில் அவன் உள்ளத்தை [illegible] வேதனைக் கடலில் ஆழ்த்தி வருத்தத் தொடங்கியது.

''வேலைக்காரியாக வீட்டிற்குள் வந்தவள் மீது காதலா?'' என்று தந்தை விஷயத்தை அறிந்தால் சர்ப்பமாகச் சீறுவார். [illegible]யுடன் கட்டுண்டு கிடக்கும் தங்கையின் சோகத்தைத் தீர்க்கமுடியாத அவனுக்குக் காதலிக்க என்ன உரிமை? [illegible] கண்ணீரைத் துடைத்து அவள் சந்தோஷமாக [illegible] வரை அவன் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று மனதிற்குள் கொண்ட வைராக்கியம் எங்கே போயிற்று? மஞ்சுளா மீது அவன் காதல் கொண்டுள்ளது உண்மை. அவளுக்கு அவன் மீது பரஸ்பரம் அன்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை எப்படி அறிவது? அறிந்துதான் என்ன பயன்? இந்தக் காதலுக்குத்தான் என்ன முடிவு இருக்கிறது?...'' என்று பலவாறு

அவன் மனச்சாட்சி அவனை வருத்திக் கொண்டிருந்தது.

தோட்டத்தில் அவனது நாய் டைகர் மிகவும் உற்சாகமாகக் குரைக்கும் சப்தம் கேட்டது. சிந்தனை கலைந்து எழுந்து ஜன்னல் அருகே வந்து எட்டிப் பார்த்தான். சூரியனைக் கண்ட பனிபோல் அவன் உள்ளத்தை வாட்டிய துன்பச் சுமை மின்னலாக மாறிவிட்டது. அதற்குப் பதில் விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சியில் அவன் இருதயம் படபடத்தது. முகத்திலே அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு நாய் குரைத்துக்கொண்டிருந்த திசையை மிகவும் ஆவலுடன் திரும்பிப் பார்த்தான்.

கையில் பூக்கூடையை எடுத்துக் கொண்டு, புடவைத் தலைப்பு காற்றில் பறக்க மஞ்சுளா, புஷ்பங்கள் நிறைந்த தோட்டத்தின் மறுகோடிக்கு விரைந்து கொண்டிருந்தாள். பின்னால் கிரிதரனுடைய அருமை நாய் டைகர் கன்றுக்குட்டி போல் துள்ளிக் கொண்டு உற்சாகமாகக் குரைத்து கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

தோட்டத்தின் மறுகோடியில் அவள் மறையும் வரை பார்த்துக்கொண்டே நின்ற கிரிதரன், திடீரென்று ஜன்னலிலிருந்து திரும்பினான். காலில் அவசரமாகப் பாதரட்சைகளைத் திணித்துக் கொண்டு அறையின் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு வேகமாகச் சென்றான். திடீர் என்று அவளைக் கண்டதும் ஏற்பட்ட கட்டுக்கடங்காத ஓர் இன்ப உணர்ச்சியில் உந்தப்பட்டு வேகமாகத் தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

மலரும் தருணத்திலிருந்த முல்லை அரும்புகளை வேகமாக கொய்து கூடையில் நிரப்பிக் கொண்டிருந்த மஞ்சுளா டைகர் உற்சாகமாக மீண்டும் குரைப்பதைக் கேட்டு ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள். தன் அருகே விரைவாக வந்து கிரிதரன் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

''பயந்து விட்டீர்களா?'' என்று பரிவுடன் கேட்ட கிரிதரன், கனிவுடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

'இல்லை' எனத் தலையை அசைத்த மஞ்சுளா முகம்



சிவக்க நெஞ்சு இன்பத்தில் பதற மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். முன்பின் ஏதோ, பாராத ஒரு அதிசயத்தைக் கண்டு பிரமித்தவர்கள் போல் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு ஒருகணம் உலகை மறந்து நின்றார்கள். அந்த ஒரு கணத்திலே ஆனந்த நிலையத்தின் மாடியறை ஒன்றில் ஓரமாக நின்று கொண்டிருந்த ஜகதீசன் 'விஷ்' என்று வாயினால் சீட்டி அடித்தான். ஆச்சரியம் தாள முடியாத வகையில் பரபரப்பாக ஓடித் தன் பீரோவைத் திறந்து பைனாகுலர் ஒன்றை எடுத்தான். முகம் சிவக்க நெஞ்சு படபடக்கத் தனது பார்வையை பைனாகுலர் வழியே அவர்கள் நின்று கொண்டிருந்த பக்கம் திருப்பினான்.

இரவு முழுவதும் மஞ்சுளா சரியாகத் தூங்கவில்லை. அதனால் அவள் தலை பாரமாகக் கனத்தது. அழுதழுது சிவந்து விட்டிருந்த கண்களில் ஒரே எரிச்சல். எனினும் விடியு முன்பே எழுந்து மிக்க சுறுசுறுப்பாகத் தான் அன்றாடம் காலையில் செய்ய வேண்டிய காரியங்களை விரைவாகச் செய்து முடித்து விட்டிருந்தாள். சிறிய எஜமானியம்மாள் தன்னைக் குறிப்பாக பன்முறை கவனிப்பதை உணர்ந்ததும் மெல்ல நழுவித் தன் அறைக்குள் வந்து மறைந்து கொண்டாள். பொங்கும் கடல் எனக் குமுறிய தன் உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்க எண்ணி ஒரு கதைப்புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். முதல் நாள் முழுவதும் அவள் சாப்பிடவேயில்லை. அன்று காலையிலும் அவள் உணவைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. ஆனால் ஒரேயடியாக அவள் பட்டினி கிடந்து நலிவதைக் காண விரும்பாத கிட்டா மாடிக்கு விரைந்து வந்தார்.

பெரிய எஜமானியம்மாள் ஸ்நான அறையை விட்டு வெளியே வரப் பல மணி நேரம் செல்லும் என்றதனால் சமையற்கட்டை அம்பிப் பயல் வசம் ஒப்படைத்துவிட்டு மாடிப்பக்கம் நிம்மதியாக அவர் வரமுடிந்தது. கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கிட்டா, உரிமை நிறைந்த குரலில், ''ஒரு மண்டலம் பட்டினியிருப்பதாக ஏதாவது வேண்டுதலா, விரதமா அம்மா?'' என்று அதட்டிக் கேட்டார்.

புத்தகத்தை மூடிவிட்டு திடுக்கிட்டு எழுந்து நின்றாள் மஞ்சுளா. வாழை இலையைப் போட்டுப் பத்திரமாக மூடிஎடுத்து வந்த டிபன் தட்டை மேஜை மீது வைத்துவிட்டு பற்களைக் காட்டி உரக்கச் சிரித்தார் அவர்.

''இந்த ஒரு பிடி உணவுக்காகத்தானே அம்மா நாம் எல்லோரும் கைகட்டிச் சேவகம் செய்யப் புறப்பட்டு வந்திருக்கிறோம். வேலை என்றால் ஆயிரம் கஷ்டங்கள் இருக்கத்தான் இருக்கும். கடுஞ்சொற்கள் வீண்பழி இவைகளை ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் ஏற்க வேண்டி வரும். வாழ்க்கைப் போராட்டத்திலே நீந்திக் கரையேற முயற்சிக்க வேண்டுமே ஒழிய, முழுகி மறைந்து போகவா எண்ணுவது? வயிற்றைக் காயப் போட்டால் யாருக்கு என்ன லாபம்? யார் மேல் கோபம், எதற்கு இந்த உண்ணாவிரதம்? நீங்கள் ஒருத்தர் சாப்பிடாமல் இருந்தால் நாங்கள் மட்டும் எப்படிச் சாப்பிட முடியும்?

''நேற்று இரவு அம்பிப்பயல், வஜ்ரவேலு, சிந்தாமணி இந்த மூவரும் சாப்பிடவில்லை. இப்படி எல்லோரும் கூடி ஒரேயடியாக ஸ்டிரைக் செய்தால் நான் ஏன் வீணாகச் சமைக்க வேண்டும்?'' என்று பரிகாசமாகக் கேட்டார். தாத்தா ரகுபதிக்கும் மேலாகத் தன்பால் வாஞ்சைகாட்டிய அந்தப் பெரியவரின் முகத்திலே நிலவிநின்ற கருணை அவள் உள்ளத்தைக் கரைத்து விட்டது. ''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்! நானே கீழே வந்திருப்பேனே சாப்பிட'' என்றாள் பணிவாக.

''இன்று காலை நீங்கள் ஏதாவது கொஞ்சம் ஆகாரம் உட்கொள்ளாவிட்டால் இந்த பங்களாவே பட்டினி விரதம் அனுஷ்டிக்கும் போல் எனக்குப் பயமாகப் போய்விட்டது. அம்பிப்பயலும் வஜ்ரவேலுவும் ஆயிரம் ஆண்டுகள் பட்டினி கிடந்தால் கூட எனக்குக் கவலையில்லை. சிந்தாமணியும் நம் சிறிய எஜமானரும் சாப்பிடாமல் காய்கிறது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது!'' என்றார் குறிப்பாக.

ஸ்ரீதரன் சாப்பிடவில்லை என்றதைக் கேட்டதும் மஞ்சுளாவின் நெஞ்சு துணுக்குற்று விட்டது. எனினும் தன்



உணர்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''சிந்தாமணி பட்டினி கிடந்தாரா? அவர் உடம்புக்கென்ன?'' என்று வேடிக்கையாக வினவினாள்.

அர்த்தபாவத்துடன் அவளை உற்றுப் பார்த்த கிட்டா புன்முறுவல் செய்தார். இதுதான் சமயம் என்று உணர்ந்து கொண்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''சிந்தாமணி மீது உங்களுக்குக் கொஞ்ச நாட்களாக மனத்தாங்கல் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் அவரைச் சரியாக அறிந்து கொள்ளவில்லையம்மா. பார்வைக்கு முரடர் போல் இருக்கிறாரே, பேச்சு கடுமையாக இருக்கிறதே என்றெல்லாம் அவரைப் பற்றித் தாங்கள் தவறாக எண்ணக்கூடாது. அவர் மனம் பத்தரை மாற்றுத் தங்கம் என்றால் பொய் இல்லை. அவரைப் போன்ற நல்ல குணமுடைய நண்பரை உலக முழுவதும் தேடினாலும் கிடைக்க மாட்டார். உங்கள் மீது அவருக்கு அபாரமான அன்பு அம்மா. தாம் பெற்றெடுத்த குழந்தையைப்போல் உங்களை நேசிக்கிறார் அம்மா'' என்றார் குழைவான குரலில்.

மஞ்சுளாவின் முகத்திலே படிந்திருந்த சிரிப்பின் சாயை மறைந்தது. ''தெரியுமே எனக்கு'' என்றாள் கடுமையாக.

கிட்டா புன்னகை செய்தார். ''அன்று ஒரு நாள் தோட்டத்தில் அவர் உங்களிடம் சிறிது காரமாகப் பேசினார் என்று உங்களுக்கு அவர்மீது மெத்த வருத்தம் எனபது எனக்குத் தெரியும். நீங்கள் என்னைவிட அதிகம் படித்தவர்கள் அம்மா! நமக்கு வேண்டியவர்கள் தானே அழ அழச் சொல்வார்கள்? தங்கள் மேல் கொண்ட அன்பினால் தன் குழந்தையைப் போல் எண்ணிக்கொண்டு உரிமையுடன் அன்று அவர் பேசி விட்டார். அவர் ஒரு தனிக்கட்டை. உலக அனுபவம் இல்லாத அப்பாவி. பெண் குழந்தைகளிடம் மிருதுவாகப் பேசவேண்டும் என்பதை அறியாத ஆசாமி. அவ்வளவுதான்'' என்றார்.

மஞ்சுளா தன் முத்துப் பற்கள் தெரிய லேசாகச் சிரித்தாள்.

''நண்பருக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்றாள் கேலியாக.

''நான் சொல்வது அனைத்தும் உண்மை அம்மா. பரிந்து கொண்டு பொய் பேசவில்லை. அம்பிப் பயலும் வஜ்ரவேலுவும் உங்களைத் தன் கூடப் பிறந்த பிறப்பாக எண்ணுகிறார்கள். சிந்தாமணியும் அடியேனும் உங்களை சொந்தக் குழந்தை போல் பாவிக்கிறோம். உங்களுக்கு ஒரு கஷ்டம் வந்தால் அது எங்களுக்கு வந்ததுபோல் எண்ணுவோம். இத்தனை பெரிய பங்களாவில் நீங்கள் யாருமற்ற அனாதை என எண்ணி ஏங்க வேண்டாம். உங்களுக்கு ஒரு தீங்கும் வராது. காப்பாற்ற சிங்கம் போல் நாங்கள் நால்வர் இருக்கின்றோம். இது சத்தியம் அம்மா, சத்தியம்'' என்றார் மிக்க உணர்ச்சியுடன். மஞ்சுளாவின் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. கண்களில் நீர்மல்கிவிட்டது.

''மிக்க வந்தனம்'' என்று முணுமுணுத்தாள் நன்றிப் பெருக்கில்.

''அதிக நேரம் பேசிக் கொண்டிருக்கப் பொழுது இல்லை. எனினும் போகும் முன் ஒரு சிறு சம்பவத்தைச் சொல்லிவிட்டுப் போகிறேன். அது உங்களுக்கு மனத்தெளிவு கொடுக்கும். நேற்று எஜமானியம்மாள் இரவு சினிமா காட்சிக்குச் சென்று விட்டதனால் அம்பிப்பயல் வேலை முடிந்ததும் வழக்கம் போல் பாட்டுக் கச்சேரியை ஆரம்பித்து விட்டான். முக வாட்டமாக இருந்தபோதிலும் சிந்தாமணி பிடிலை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டார்.

''கச்சேரி உற்சாகமாகத் தடபுடலாகத்தான் இருந்தது. அம்பிப் பயல் புதிதாக தான் கற்றுக்கொண்டு வந்த சினிமா மெட்டில் பாரதியாரின் கண்ணம்மா பாடலைப் பாட ஆரம்பித்தான்.

''உன் கண்ணில் நீர் வழிந்தால் கண்ணம்மா...'' என்று அவன் உருக்கமாகப் பாடினான். அவ்வளவுதான். பிடிலைக் கீழே வைத்துவிட்டு சிந்தாமணி எழுந்து போய்விட்டார். அவருக்கு அதற்குப் பிறகு வாசிக்கவே முடியவில்லை அம்மா. வாயால் சொல்லிவிட்டாலும் அவர் மனத்தில் உங்களைப்பற்றி



ஏற்பட்டிருக்கும் வேதனையின் ஆழத்தை நான் அறிவேன் அம்மா'' என்றார்.

''உண்மையாகவா!'' என்று கேட்ட மஞ்சுளாவின் கண்கள் கலங்கி விட்டன. சிந்தாமணியைப்பற்றி இதுவரை தவறாக எண்ணி விட்டதை எண்ணி அவள் உருகிப்போனாள்.

''வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் உள்ளபடி உணர்ந்து கொள்வதற்குக் காலம் அதிகம் செல்கின்றது. சில சமயம் உணர்ந்து கொள்ளாமலே இருந்து விடுகிறோம். இல்லையா?'' என்று கேட்ட கிட்டா திடீரென்று பேச்சை மாற்றி ''அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் எனக்காகவாவது பெரிய மனது பண்ணி, நான் கொண்டு வந்ததை சாப்பிட வேண்டும். வெண்கல டம்ளரில் காப்பியும் வைத்திருக்கிறேன். இவை ஆறிவிடுமுன் சாப்பிட்டு விடுங்கள். அதிகம் பேசிக் கொண்டிருக்க முடியாது. எஜமானியம்மாள் கண்ணில் பட்டுவிட்டால் பெரிய மண்டகப்படி நடந்து விடும். வருகிறேன்'' என்று வெளியே சென்றுவிட்டார்.

கொஞ்ச நேரம் அவரிடம் பேசியதனால் மனப்பாரமும் தலைப்பளுவும் குறைந்தது போல் இருந்தது மஞ்சுளாவுக்கு. கிழவர் கிட்டாவின் வேண்டுகோளைப் புறக்கணிக்க விரும்பாமல் உணவை விரைவாகச் சாப்பிட்டு முடித்தாள். மீண்டும் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு கிட்டா கூறிய பலவற்றையும் சிந்தித்தபடி புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். வெளியே தோட்டத்தில் டைகர் உற்சாகமாகக் குரைக்கும் சப்தம் கேட்டது.

ஆவலை அடக்க முடியாது சட்டென ஜன்னல் அருகே வந்து தோட்டத்தை எட்டிப் பார்த்தாள். கிரிதரன் தொழிற்சாலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். டைகர் அவன் காரைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தது. காருக்குள் ஏறுமுன் கிரிதரன் திடீரென்று நிமிர்ந்து அவள் நின்று கொண்டிருந்த ஜன்னல் பக்கம் பார்த்தான். நேருக்கு நேர் அவனைப் பார்த்து விட்டதில் ஏற்பட்ட இன்ப உணர்ச்சி தாள முடியாது வேகமாக அப்பால் சென்று மறைந்து கொண்டாள்

மஞ்சுளா. அவள் நெஞ்சு படபடவென்று துடித்தது. முகத்தில் முத்துப்போல் வியர்வை துளிர்த்தது.

## 38

முதல் நாள் அந்திப்பொழுது அவள் பேசிய கடும்மொழிகளுக்குப் பிறகு மறுபடி கிரிதரன் அவள் இருக்கும் திக்குப் பக்கம் கூடத் திரும்புவான் என அவள் நினைக்கவேயில்லை. அவளது துடுக்கு மொழியில் வெகுண்டு அவளை வெறுத்து விடுவான் என்றுதான் அவள் எண்ணினாள். சற்றுத் தொலைவில்தான் அவன் நின்று கொண்டிருந்தான் என்ற போதிலும், அவளது கண்களுக்கு அவன் உருவம் பளிச்சென்று தெரிந்தது. வாடியிருந்த அவனது முகமும், சோகம் நிறைந்த கண்களும் அவளை மிக்க வேதனையில் ஆழ்த்தின. 'வேண்டாம் என்று உதறியபோதிலும் விடமாட்டேன் என்று ஓடோடியும் வந்து பற்றிக் கொள்கிறதே இந்தப் பாசம்? இது ஏன்? கிரிதரனின் துயரம் அவளை ஏன் இப்படி வருத்திக் குலைக்க வேட்டும்? அவனது உணர்ச்சிகளைப் பங்கிட்டுக் கொள்ள விழைந்து ஏன் ஓடுகிறது அவளது கோழை நெஞ்சம்?' எனப் பலவாறு தனக்குள் எண்ணி சஞ்சலம் தாளாது கண்ணீர் உகுத்து விட்டாள் அவள். 'நல்லதற்கு நரி முட்டையிடவில்லை' என்று தாத்தா ரகுபதி அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்வது உண்டு. அந்த நினைவு ஏற்படவே அவள் நெஞ்சம் ஒருவித பயத்தில் நடுங்கியது.

'வேலை செய்ய அங்கே வந்த அவளுக்கும், வீட்டின் வருங்கால எஜமானனான அவனுக்கும் இடையே அன்பு மலர்ந்தால் அது நல்லதற்கா அறிகுறி? கட்டுக் கடங்காத இந்தப் பாசம் நல்லதற்காக ஏற்படவில்லை. இரு சாரருக்கும் நாசம் விளைவிக்கப் புறப்பட்டிருக்கும் பேய்' என்று அவளது உள்ளுணர்வு அவளைக் கண்கலங்கச் செய்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டாள். தோட்டத்தினின்று



கார் புறப்பட்டுச் சென்று வெகுநேரம் சென்ற பின்னர்தான் மறுபடியும் ஜன்னல் அருகே சென்று வெளியே எட்டிப்பார்க்க அவளுக்குத் துணிவு ஏற்பட்டது. அங்கு நின்றபடியே முதல்நாள் அந்திப் பொழுது கிரிதரனுடன் பேசிக்கொண்டு நின்ற முல்லைக் கொடி வீட்டருகே தன் பார்வையைத் திருப்பினாள். என்ன ஆச்சரியம்! அன்பு என்பது ஒரு வகையில் ஒரு வித பித்தம் போலும்! இல்லாவிடில் கிரிதரன் நின்ற இடம், அவன் மிதித்த பசும்புல் தரை அவன் விரல்களால் கிள்ளிக்கொண்டு நின்ற முல்லைக்கொடி இலைகள் எல்லாம் மிகமிக முக்கியமான பொருள்களாக அவளுக்கு ஏன் பிரமிப்பை ஊட்ட வேண்டும். அவைகளையே கண்கள் ஏன் அப்படி வெறித்து நோக்க வேண்டும்? பற்பல சிந்தனை நடுவே முதல்நாள் அந்திப் பொழுது நடந்த அந்தச் சம்பவம் அவள் மனத்திரையில் ஓடியது.

கிரிதரன் திடீரென்று அங்குவந்து நிற்பான் என எதிர்பாராது, முல்லை அரும்புகள் சேகரித்துக் கொண்டிருந்த மஞ்சுளா, அவனைக் கண்டதும் உண்மையிலேயே திடுக்கிட்டுத்தான் போய்விட்டாள். கண்களால் தன்னை விழுங்கி விடுபவன் போல் கனிவுடன் அவன் பார்த்த பார்வை அவளை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. தன்னை மறந்து கற்பனை உலகிலே சொக்கித் தடுமாறி நின்று விட்டதும் உண்மை. ஆனால் மறுகணம் அவள் விழித்துக் கொண்டு விட்டாள். அவளது சிந்தனை சீறியது. மனச்சாட்சி உறுத்தியது. சிந்தாமணியின் கடுமையான சொற்கள் நினைவுக்கு வந்தன. காலஞ்சென்ற தாத்தாவின் புத்திமதிகள் அவள் ஞாபகத்திலே ஓடிவந்து நின்றன. கங்கம்மாள் புறப்படும் முன் சொன்ன யாவும் அவள் கவனத்தில் எழுந்தன. எல்லாவற்றையும்விட அன்னபூரணி அன்று கூறிய 'எஜமான் உத்தரவு' என்ற அந்தக் கடும் வார்த்தைகளும் அவளது நினைவின் முன்னணியில் ஓடிவந்து நின்றன.

கிரிதரனோ வீட்டின் எஜமான். அவளோ அங்கே வேலை செய்யும் பணிப்பெண். இடையே இந்தக் கனிவும் வீண் கனவுகளும் ஏன்? மனச்சாட்சி பின்னும் அவளைப் பலமாக

இடித்துக் காட்டவே, காதல் மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டாள்.

''பயந்து விட்டீர்களா?'' எனக் குழைந்த குரலில் கேட்ட கிரிதரன் அவளை மோகனமாக உற்றுப் பார்த்தான். சிவந்து போன முகத்தை அவள் அப்பால் திருப்பிக் கொண்டாள். படபடவென்று இன்பத்திலே பனைத்த தன் இதயத்தின்மீது அவளுக்குத் தாங்கமுடியாத கோபம் ஏற்பட்டது. உணர்ச்சியில் துடித்த உதடுகளை அழுத்திக் கடித்துக் கொண்டாள். ''நேர்மையாக நடக்கிறவர்களுக்கு எப்பொழுதும் எதற்கும் பயமில்லை'' என்றாள் வெடுக்கென்று. ஏன் அப்படித் துடுக்காகப் பேசினாளோ அவளுக்கே தெரியாது. ஆனால் கிரிதரன் பதிலுக்குப் பக்கென்று சிரித்து விட்டான். ''உங்கள் நேர்மையான நடத்தை என் சகோதரிக்கு மிகவும் பிடித்திருக்கிறதாம்'' என்று சொல்லிவிட்டு, அவளைக் கனிவுடன் பார்த்தான்.

''உங்களுக்கும் பிடித்திருக்கிறது என்று சொல்லப் போகிறீர்கள் இல்லையா? மெத்த வந்தனம்'' என மிடுக்காகப் பார்த்துவிட்டு தன் காரியத்திலேயே கருத்தாயிருப்பவள் போல் தலையைக் குனிந்து கொண்டாள். வேகமாக அவளது கரங்கள் அரும்புகளைப் பறித்துக் கூடையில் நிரப்பிக் கொண்டிருந்த போதிலும் உள்ளமும், உடலும் கோபம் இன்பம் இரண்டும் கலந்த ஒருவிதமான உணர்ச்சியில் பதறிக் கொண்டிருந்தன. கிரிதரன் சற்று நேரம் முல்லைக் கொடி ஒன்றின் தளிர் இலைகளைக் கிள்ளிக் கீழே எறிந்து கொண்டு வாளா நின்றான். பிறகு தொண்டையை கனைத்துக் கொண்டு, ''நான் சொல்ல வந்தது வேறு. நான் எதிர்பாராது இங்கு வந்து உங்களை பயமுறுத்தி விட்டேனோ என்னவோ, என்றுதான் அஞ்சினேன். அதற்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டேன்'' என்றான்.

என்னென்னவோ படபடவென்று பேச வேண்டுமென மஞ்சுளாவின் நா துடித்தது. அது முறையல்ல என்று தன்னைத்தானே கடிந்து கொண்டு அவள் பதில் பேசாது இருந்தாள். அவளது மௌனம் கிரிதரனுக்கு உற்சாகம் ஊட்டியது. ''ஒரு விஷயம் உங்களிடம் பேச மிகவும்



விரும்புகிறேன். நேரில் சொல்ல இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஊரிலிருந்து எங்கள் சிறிய தாயார் திரும்பி வந்த அன்று சாப்பிடுமிடத்தில் கடுமையாக பேசி உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டார்கள் அல்லவா! அதைக் குறித்து நானும் என் சகோதரியும் மிகவும் வருத்தமடைந்தோம். எங்கள் சிறிய அன்னைக்குச் சில சமயம் என்ன பேசுகிறோம், எங்கே பேசுகிறோம் என்றே விளங்குவதில்லை. அவர்கள் ஏதாவது கடுமையாக சொன்னால் என் சகோதரி பொருட்டு அதை நீங்கள் பாராட்டக்கூடாது. இது எனது தாழ்மையான வேண்டுகோள்'' என்றான் அன்பு நிறைந்த தணிந்த குரலில்.

கூடையில் நிறைந்து கிடந்த முல்லை அரும்புகளை விரல்களால் கிளறிவிட்டு, தலையை நிமிர்த்தாது மிகவும் அழுத்தலாகப் பேசினாள் மஞ்சுளா. ''உங்கள் சிறிய தாயார் பேசியதில் தவறு ஏதும் இல்லை. உண்மையைத் தான் சொன்னார்கள். நான் இங்கே பணிப் பெண்ணாக வந்து அமர்ந்திருக்கிறேன் என்ற உண்மை நிலையை மறந்து நான் எஜமானியுடன் சமமாகப் பழக முயலுவது தவறு என்பதை எடுத்துச் சொன்னார்கள். பெரியவர்கள் புத்தி சொன்னால் என் போன்ற பேதைப் பெண்கள் அதை ஏற்றுக் கொண்டு தவறை திருத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் வீணாக சிரமம் எடுத்துக் கொண்டு இதைப்பற்றிப் பேசி இருக்க வேண்டியதில்லை. மேலும் ஆறிப்போன அந்தச் சம்பவத்தை நான் மறந்தே போய்விட்டேன்'' என்று ஏளனமாக பதிலளித்துவிட்டு அப்பால் செல்ல ஆயத்தமானாள்.

அவள் பிடி கொடுக்காது அசட்டையாகப் பேசிய போதிலும் கிரிதரன் அதிர்ச்சியடையவில்லை. 'மஞ்சுளா' என்று மீண்டும் அவளை அன்புடன் அழைத்தான்.

ஓரடி எடுத்து வைத்த மஞ்சுளா துணுக்குற்று நின்று விட்டாள். அந்தக் குரலில் நிறைந்து நின்ற பரிவு அவளை மெய்சிலிர்க்கச் செய்துவிட்டது. உடல் நடுநடுங்க, உள்ளம் விதிர்க்க, மெல்லத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். ஏதோ பேச வந்தவன் போல் திகைப்புடன் அவளை ஊடுருவிப்

பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் கிரிதரன்.

மீண்டும் ஒரு கணம் அவள் மயங்கிவிட்டாள். அந்த அன்புத் தளையினின்று விடுபட்டு அப்பால் போக முடியாது சொக்கி மரமாக நின்று கொண்டிருந்தாள்.

'சீசீ! என்ன தயக்கம் இது? ஏன் இந்த வீண்கவர்ச்சி?' என மனச்சாட்சி இடிக்கவே, மீண்டும் திடுக்கிட்டு விழிப்பு கொண்டாள். ''மன்னிக்க வேண்டும். எனக்கு அதிகம் வேலைகள் இருக்கின்றன. தாங்கள் எனக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய காரியங்கள் ஏதேனும் இருந்தால் விரைவில் சொன்னால் மிகவும் நலமாக இருக்கும்!'' என்றாள்.

''விரைவில் சொல்லக்கூடிய காரியமுமல்ல; சொல்லாமலும் இருக்க முடியவில்லை'' என்று ஆரம்பித்த கிரிதரன் தடுமாற்றத்துடன் நிறுத்திவிட்டு அவளை மிக்க இரக்கத்துடன் பார்த்தான். புதிர்போல் அவன் சொன்னதன் உட்பொருளை உணர்ந்து கொண்டுவிட்ட மஞ்சுளாவின் உள்ளத்தில் இன்பம் பொங்கிப் புரண்டது. ஆனந்த நிலையத்தின் வருங்கால எஜமான் தன்பால் அன்பு கொண்டு விட்டான் என்பதைக் குறிப்பாகப் புரிந்து கொண்ட அவள் மனம் பெருமிதத்தினால் விண்டு விரிந்து விடும்போல் பூரித்து விட்டது. எனினும் அவளது மனத்தின் அடித்தளத்திலே நீறுபூத்த நெருப்பாகக் கொஞ்ச நாட்களாகக் குடிகொண்டிருந்த ஒரு கோபம், காதலர்களுக்கே உரித்தான ஒரு போலியான துவேஷம், நீர்க்குமிழி போல் விரைந்தோடி வந்து முன் நின்று வெடித்தது.

''உங்கள் சகோதரி என்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நான் இங்கே அதிக நேரம் நிற்பதற்கில்லை. எந்த ஒரு காரியமானாலும் தாங்கள் வீண் சிரமம் எடுத்துக் கொண்டு என்னிடம் நேரில் வந்து தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பெரியம்மா அன்னபூரணியிடம் சொன்னால் அவர்கள் எனக்குத் தங்களது உத்தரவைத் தெரிவிப்பார்களே! என்மேல் அதிகம் தயை காட்டி என்னை என் நிலையை மறக்கும்படி தாங்கள் செய்வது தவறு'' என்றாள் கோபமாக.



கிரிதரன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். ஆத்திரத்தில் துடித்த மஞ்சுளா படபடமாகக் குறுக்கிட்டாள். ''இவ்வாறு தங்களிடம் தனித்து வார்த்தையாடிக் கொண்டிருப்பதை யாரேனும் கண்டால் எனக்குத்தான் வீண் துன்பம் ஏற்படும். வாழ்க்கையிலே கஷ்டம் ஒன்றைத்தான் நான் அதிகம் கண்டிருக்கிறேன். கொஞ்ச காலமாவது நிம்மதியாக இருக்கலாம் என எண்ணி இந்த வேலையை ஏற்றுக் கொண்டேன். தயவுசெய்து என்னை நிம்மதியாக இருக்க அனுமதியுங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தனது கரங்களைக் கூப்பினாள் அஞ்சலி செய்யும் பாவனையில். பிறகு பதிலுக்குக் காத்திராமல் வேகமாய் நடந்து அப்பால் சென்று விட்டாள்.

எவ்வளவு கட்டுப்படுத்தியும் தாளமுடியாது அவளது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி கன்னங்கள் மீது வழிந்தோடியது. தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு வெகுநேரம் விம்மி விம்மி அழுதாள். இரவு முழுவதும், நித்திரை இன்றிப் புலம்பித் தவித்தாள். 'காலடியிலே காணிக்கையாக கிரிதரன் கொண்டு வந்து சமர்ப்பித்த அன்பை உதறித் தள்ளிவிட்டோமே என்று அவள் உள்ளம் ஏங்கித் தவித்தது. 'ஏற்றுத்தான் என்ன பயன்! கைகூடாத இந்தக் காதல், கண்ணீரைத்தான் இறுதிப் பரிசாக அவளுக்கு அளிக்கும். சே! எதற்காக இங்கே வேலைக்கமர்ந்தோம். எட்டாத போக பாக்யத்திற்கு ஏங்கித் தவித்து மனமுருகி மடிவதற்கா? இந்த வேலையை விட்டால் வேறு எங்கே போய் உத்தியோகம் தேடுவது?' என்று பலபல எண்ணி மனம் குழம்பிவிட்டிருந்தாள். அவளது கடும் மொழிகள் ஆனந்த நிலையத்தின் செல்வக் குமாரனை கோபமடையச் செய்திருக்கும் என்றுதான் அவள் எண்ணினாள்.

கோபத்திற்குப் பதில் அவர் மிக்க மனத்துயரமல்லவா அடைந்திருக்கிறார்! இரவு அவரும் சாப்பிடவில்லையாமே!... ம்... என்று என்னவெல்லாமோ எண்ணிக் கொண்டு நின்ற மஞ்சுளா, கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். விரைவாக கதவைத் திறந்தாள். வெளியே

சௌமினியம்மாளின் அந்தரங்க வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள். ''உங்களை எஜமானியம்மாள் பார்க்க வேண்டுமாம். உடனே வரச் சொன்னார்கள்'' என்றாள் அவள்.

மஞ்சுளா திகைத்துப் போய்விட்டாள். பயத்திலே அவள் உடல் வியர்த்து விட்டது. கையும் காலும் ஓட முடியாது நடுங்கின. சௌமினியம்மாள் எத்தனை கடுமையான சுபாவம் உடையவள் என்பதைக் கடந்த தினம் காலைதான் முதல் முதலாக அவள் அறிந்து கொண்டிருந்தாள். சந்திரா அவசரமாக அழைக்கும் மணி ஓசை கேட்டுத் தனது அறைக்குள்ளிருந்து ஓடிவந்த மஞ்சுளா, கவனிக்காமல் எதிரே வந்த எஜமானியம்மாள் மீது மோதிக் கொண்டு விட்டாள். அம்மாள் கரத்திலே பிடித்திருந்த கறுப்புக் கண்ணாடி கீழே விழுந்து சுக்கல் துகளாகி விட்டது. அவ்வளவுதான். பெண் புலியாக மாறிவிட்ட சௌமினி அவளது அஜாக்கிரதையை வெகுவாகக் கண்டித்து மனம் நோகப் பேசிவிட்டாள்.

அதைக்கேட்டு மஞ்சுளா அவமானம் தாள முடியாது நாள் முழுவதும் கண்ணீர் வடித்தும் மனம் ஆறுதல் பெறவில்லை. எனவே எஜமானி அழைக்கிறாள் என்றதும் அவளுக்குக் கலவரம் தாள முடியவில்லை. சஞ்சலத்தில் தவித்தபடி மெல்ல வராந்தாவைத் தாண்டி சௌமினியம்மாளின் அலங்காரம் நிறைந்த படுக்கை அறைக்குள் பூனைபோல் வந்து நின்றாள். பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வலதுகாலை தன் அருகிலிருந்த சிறு திண்டின் மீது வைத்துக் கொண்டு விரல்களுக்கு வர்ணக்குழம்பு பூசுவதில் ஈடுபட்டிருந்தாள் எஜமானியம்மாள். மொசாயிக் தரைமீது படிந்த உருவத்தின் நிழலைக் கண்டதும் தலையை நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஏளனப்புன்னகை நெளிந்தோடியது. கண்களில் குரோதம் பொங்கியது. ''பி.ஏ. வரை படித்தவள் என்று உன் அறிவைச் சந்திரா அடிக்கடி மெச்சிப் பேசுகிறாள். ஆனால் அடிப்படையான மரியாதைகூட உனக்கு இன்னும் தெரியவில்லையே?'' என்று எடுத்த எடுப்பிலேயே அதட்டினாள். அவமானத்தில் குன்றிப்போன மஞ்சுளா பதில் பேசாது நமஸ்கரித்து விட்டுக் குனிந்த தலையுடன் நின்றாள்.



''திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல் திடுதிப்பென்று என் படுக்கை அறையில் வந்து நிற்கிறாயே! ஒழுங்குதான் போ! கதவைத் தட்டித் தெரிவித்து விட்டு வருவதற்கென்ன?'' என்றாள் எஜமானி கோபத்துடன். ''மன்னிக்க வேண்டும், தவறிவிட்டேன்'' என்று முடிப்பதற்குள் மஞ்சுளாவின் தொண்டை அடைத்துக் கொண்டுவிட்டது.

''இந்த பசப்பு வார்த்தைகள் எனக்குத் தேவையில்லை. மன்னிப்பு, வருந்துகிறேன். இந்த நாகரிக வார்த்தைகளுக்கு நான் அர்த்தம் கொடுப்பதில்லை. நீ கங்கம்மா அத்தைக்கு நெருங்கிய பந்து என்கிறாய். ஆனால் அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. நீ இந்த வீட்டிற்கு ஒரு வேலைக்காரி. தெரிந்ததா? அதை மறக்காது நடக்க வேண்டும்'' என்றாள் கடுமையாக சௌமினி.

''என் நிலையை நான் மறக்க மாட்டேன் அம்மா!'' என்று கூறி முடிப்பதற்குள் மஞ்சுளாவுக்குத் துக்கம் தாளமுடியவில்லை. பொல பொலவென்று கண்ணீர்த் துளிகள் கண்களிலிருந்து உதிரத் தொடங்கி விட்டன.

''உன்னை நான் கொன்றா தின்று விட்டேன்? ஏன் இந்த அழுகை'' என்று அதட்டிய சௌமினி அவளை ஏளனமாக உறுத்து விழித்தாள். ''ஆரம்பத்திலேயே நான் கண்டிப்பாகச் சொல்லி விடுகிறேன். சந்திரா எவ்வளவு சலுகைகள் கொடுத்தாலும் அவள் உன் எஜமானி அல்ல. நான்தான் என்பதை மறக்க வேண்டாம்.''

''நீ பணிப்பெண் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். எங்களுக்குச் சமமாக தலையில் ஒரு கனமப்பூவும், ஆடம்பரமான ஆடையுமாக மினுக்க ஆரம்பிக்காதே, சொல்லி விட்டேன். எனக்கு இதெல்லாம் பிடிக்காது. இந்த வீட்டில் கண்ட இடங்களில் கண்ட பொருள்கள் கிடக்கும். முதலிலேயே எச்சரிக்கை செய்கிறேன். உன் கை நீளத்தை இங்கே காட்டி விடாதே. பின்னால் அவதிப் படுவாய்'' என்றாள் அகங்காரமாக.

என் சாண் உடல் ஒரு சாணாகக் குறுகி மனம் பதறி

நின்றாள் மஞ்சுளா. ''அம்மா நான் ஏழைப் பெண்தான். ஆனால் பிறர் பொருளுக்கு ஆசைப்படும் திருடியல்ல'' என்று திணறினாள்.

''அப்படித்தான் முன்பு ஒரு நர்ஸ் பகட்டாகப் பேசினாள். போகும் போது என் கைக் கெடிகாரத்தை அடித்துக் கொண்டு போனாள். அதனால் நான் பேச்சில் மயங்கி விடுவதில்லை. நடத்தையினால்தான் நம்புவேன். அதையெல்லாம் விட முக்கியமாக நான் உனக்குச் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. நீ கல்யாணமாகாத பெண், உறவு என்று வேறு வந்து இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். எஜமானருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் இன்னும் விவாகம் ஆகவில்லை. வெகுளிப் பிள்ளைகள். அதனால் எனக்குப் பெரும் கவலையாக இருக்கிறது'' என்றாள் கோபத்தில் கொந்தளிக்கும் தொனியில்.

அவள் கூறியதன் முழு அர்த்தத்தையும் உணர்ந்து கொண்ட மஞ்சுளா அவமானம் தாளாது தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். தடையில்லாது கண்ணீர் மேலே பெருகிக் கன்னங்களை நனைத்து அவள் மார்பின் மேல் வழிந்தோடியது.

''அழுவதற்கு அவசியமே இல்லை. நான் மிகவும் கண்டிப்பானவள். உன் அந்தஸ்தை மறந்து எட்டாத கொம்பிற்கு நீ ஆசைப்பட்டு ஏதேனும் எக்கச்சக்கமாக நடந்து கொண்டால், வீண் கஷ்டத்திற்கு உள்ளாவாய் ஜாக்கிரதை! அவ்வளவுதான் நீ போகலாம்'' என்று அதட்டினாள்.

எஜமானி அம்மாளுக்குத் தன்மேல் காரணமற்றதொரு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட மஞ்சுளா, கலவரமும் துயரமும் தாளாது தனது அறைக்குள் ஓடிவந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள். இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு இருதயம் வெடித்து விடும்போல் விம்மி விம்மி அழுதாள்.



# 39

ஸ்ரீமான் நாராயணனுக்குச் சில தினங்களாகவே உடல் அயர்வு அதிகமாகிக் கொண்டு வந்தது. தமது இளம் மனைவியின் உற்சாகத்தைப் பங்கப்படுத்தக் கூடாது என்று சிரமப்பட்டுத் தமது சக்தியையெல்லாம் உபயோகித்து அவளுடன் தினசரி காலையில் டென்னிஸ் விளையாடினார். இருபது வயது இளைஞனைப் போல் மாடிப்படிகளில் வேகமாக இறங்கி ஓடினார். நாடகம், நடனம், கண்காட்சி என்று ஊரில் நடைபெறும் கேளிக்கைகளுக்கு மனைவியுடன் அலைந்து திரிந்தார். யௌவனத்திலே திளைக்கின்ற மனிதனைப் போல் சிந்தையிலே மகிழ்ச்சி குமிழியிட்டுப் பெருக்கெடுத்துப் பொங்கியது என்றாலும், உடலில் அதற்குண்டான வலிமை இருக்கவில்லை. இந்த உண்மையை அவர் உணர்ந்திருந்தும் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளத் துணிந்தார். முதல்நாள் தமது மகன் ஜகதீசனுடன் போட்டியிட்டுக் கொண்டு ஓடிஓடி நான்கு செட் டென்னிஸ் விளையாடினார். அதனால் ஏற்பட்ட களைப்பை அவரால் தாள முடியவில்லை. அத்துடன் நாவிற்கு ருசியாகக் கிட்டா சமைத்திருந்த உணவு வகைகளை அளவு தெரியாது உண்டு விட்டிருந்தார்.

அந்திப் பொழுதில் வேடிக்கையாக மனைவியுடன் பேசிக் கொண்டு தோட்டத்தை ஒருமுறை வளைய வந்த பொழுது, அவருக்கு லேசாகத் தலை சுற்றியது. வயிற்றைப் புரட்டியது. 'இதோ வந்துவிட்டேன்' என்று சொல்லி விட்டு விரைவாக மாடிப்படிகளில் ஏறினார். மாடியறையில் விளக்குகளைத் துடைத்துக் கொண்டிருந்த வஜ்ஜிரவேலு தடால் என்று ஏதோ கீழே விழும் சப்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தான். ஸ்ரீமான் நாராயணன் அடியற்ற மரமென மாடிப்படிகளின் முடிவில் வராந்தா மீது மயக்கமாக விழுந்து கிடந்தார். விஷயத்தைக்

கேள்விப்பட்டதும் சௌமினியும், இரு பிள்ளைகளும் ஓடோடியும் வந்தனர்!

வஜ்ஜிரவேலு செய்த பணிவிடைகளின் பயனாகச் சிறிது பொழுதில் மயக்கம் தீர்ந்து சோபாவின் மீது சோர்வுடன் சாய்ந்து கொண்டிருந்தார் பெரியவர். எவ்வளவோ மறுத்தும் கிரிதரன் அவற்றைக் கேட்காது அவர்களது குடும்ப வைத்தியரை அழைத்து வந்து விட்டான்.

நிதானமாகப் பரிசோதனை செய்த வைத்தியர், ஒருவாரம் அவர் படுக்கையிலேயே ஓய்வாக இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டார்.

நோயாளியாகப் படுக்கையிலே கட்டுண்டு கிடக்க நாராயணனுக்குப் பிடிக்க வில்லை. தமது இளம் மனைவி என்ன எண்ணுவாளோ என்ற அச்சம் ஒருபுறம் உள்ளத்தை வாட்டியது. 'எனக்கு ஒன்றுமில்லை. வத்தல் குழம்பு உடம்பிற்கு ஒத்துக் கொள்ளவில்லை. பித்தம் அதிகரித்து விட்டது' என்று சௌமினியிடம் தைரியம் கூறிவந்தார்.

ஒருவாரம் எப்படியோ சென்றுவிட்டது. முதல்நாள் இரவு அவரை வந்து கவனித்த வைத்தியர், அவர் மறுநாள் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு வீட்டிற்குள் நடக்கலாம் என்று தமது உத்தரவைத் தளர்த்திவிட்டுப் போயிருந்தார். அவ்வளவுதான் மறுதினம் விடியுமுன்பே எழுந்து, நன்றாக ஸ்நானம் செய்துவிட்டு, பட்டுக்கரை வேஷ்டியும், மல்பாடியுமாக மாப்பிள்ளைபோல் உல்லாசமாக முன்ஹால் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார் நாராயணன்.

எதிர்ப்புறத்து ஜன்னல் அருகே சுவரில் சாய்ந்து கொண்டு தோட்டத்தைப் பார்த்த வண்ணம் கிரிதரன் நின்று கொண்டிருந்தான்.

தொழிற்சாலைக்குப் புறப்படுமுன் வைத்தியர் வந்து தந்தையைப் பரிசோதித்துத் தெரிவிக்கும் அபிப்ராயத்தை அறிந்து கொள்ள மிகவும் ஆவலாக இருந்தான் அவன். இடது புறத்து ஜன்னல் வழியே சுள்ளென்று வீசிய காலை வெய்யிலின் ஸ்பரிசத்தை அனுபவித்த வண்ணம் ஜகதீசனும், சௌமினியும்



ஒரு சிறு மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள்.

அன்னையும் மகனும் சிறு குழந்தைகள் போல் உரத்த குரலில் ஆர்ப்பரித்த வண்ணம் 'சைனீஸ்சக்கர்' விளையாடிக் கொண்டிருந்தனர். அடிக்கொரு தடவை இடி இடியென ஜகதீசன் கைகொட்டி நகைத்ததையும், பதிலுக்கு 'களுக்' கென்று மோகனமாக சௌமினி சிரித்ததையும் கேட்டு, வெறுப்புடன் கிரிதரன் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான். சிறிய அன்னையின் விளையாட்டுத்தனமும், வேடிக்கையான சம்பாஷணையும் அவனுக்கு சகிக்கவில்லை. மூத்த மகனது மனப்போராட்டங்களைச் சிறிதும் உணர்ந்து கொள்ளாமல் நாராயணன் தமது இளைய மனைவியின் பேரெழிலை ஓரக்கண்ணால் பருகிய வண்ணம் இறுமாந்து அமர்ந்திருந்தார். 'இத்தனை அழகான பெண்ணை மனைவியாகக் கொண்டு விட்டேன். என்னே என் சாமர்த்தியம்!' என்பது போலிருந்தது பரவசக்களை பரவிய அவரது முகபாவம்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் காலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து உலர்த்திய கூந்தலைக் காதுகளின் மீது புரளும்படி தளரவிட்டு இடைவரை நீண்டு தொங்கும்படி பின்னலிட்டுக் கொண்டிருந்தாள், நாராயணனின் அருமைப் பத்தினி. பின்னலின் ஆரம்பத்திலேயே ஒரு சிறு சுமையாக மல்லிகைப் பூச்சரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. இடையிலே துவண்ட கருப்புப் பட்டுச்சேலையும், பாதாம் வர்ண நூல் சோளியும் அவள் மேனியின் பளபளப்பை எடுத்துக் காட்டின. மென்மையான அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு ஊசலாடியது ஒரு மெல்லிய பொற்சங்கிலி. அதிகமான ஆபரணங்கள் ஏதும் அணிந்திராவிடினும் தனது இயற்கை அழகினாலே கண்கவரும் வனப்புமிக்க எழிலோவியம் போல் அவள் அமர்ந்திருந்த ஒரு நிலையை மீண்டும் மீண்டும் உற்றுநோக்கிப் பெருமிதத்திலே பூரித்துப் போய் உட்கார்ந்திருந்தார் நாராயணன்.

ஆர்ப்பாட்டம் ஏதும் இன்றி சப்தமிடாது எதிரே வைத்தியர்

வந்து நிற்பதை உணர்ந்ததும், நாராயணன் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

எச்சரிக்கை ஏதுமின்றி ஆனந்த நிலையத்தில் எங்கும் புக உரிமை பெற்றிருந்தார் சுந்தரேசன். ''அப்படியே சாய்ந்து கொண்டு இருங்கள். பரவாயில்லை'' என்று கூறிவிட்டு, நாற்காலியொன்றை இழுத்து அருகில் போட்டுக் கொண்டு அமர்ந்தார் வைத்தியர். அவர் தமது பெட்டியைத் திறப்பதைக் கண்ணுற்றதும் சௌமினி எழுந்து அருகில் வந்து, கணவனுக்குப் பின்னால் சோபாவின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். கிரிதரன் கைகளைக் கட்டிக் கொண்டு மரியாதையாக வைத்தியருக்குப் பின்னால் சற்று தூரத்தில் வந்து நின்று கொண்டான். ஜகதீசனோ இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. ஏதோ யோசனையுடன் விரல் நகங்களைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

கணவனது உடல்நிலையில் தனக்குள்ள அக்கறையைத் தெரிவித்துக் கொள்ள விரும்பினாள் சௌமினி. ''இரவு முழுவதும் இருமிக் கொண்டிருந்தார். அதைக் கொஞ்சம் கவனியுங்கள்'' என்று உத்தரவிடும் பாவனையில் சொன்னாள். சுந்தரேசன் அவள் கூறியதைக் காதுகளில் வாங்கிக் கொள்ளவேயில்லை. நிதானமாக வழக்கம்போல் நோயாளியை மெல்லப் பரிசோதித்து விட்டு எழுந்து ஸ்நான அறைக்குள் சென்று கரங்களைக் கழுவிக் கொண்டு வந்தார்.

பெட்டிக்குள் தமது சாமான்களை எடுத்துப் பத்திரப் படுத்திவிட்டு, நாராயணன் பக்கம் திரும்பினார். ''அதிகமாக நீங்கள் ஓடியாடி உடலை அலட்டிக் கொள்ளக்கூடாது. தேகப்பயிற்சி உங்களுக்கு இப்பொழுது தேவையில்லாத விஷயம். சாப்பாட்டிலும் மிகவும் பத்தியமாக இருக்க வேண்டுமென்று முன்பே எச்சரித்திருக்கிறேன்'' என்று சற்றுக் கடுமையாக, ஆனால் உரிமையுடன் அதட்டினார்.

''என்ன செய்வேன் டாக்டர், ஒரு 'செட்'டாவது டென்னிஸ் விளையாடா விட்டால் நம்ப வீட்டு அம்மாள் கோபித்துக் கொள்கிறார்களே'' என்று பரிகாசமாகச்



சொல்லிவிட்டு, புதிதாகத் திருமணம் செய்து கொண்ட இளைஞனைப் போல் மனைவியை உல்லாசமாகப் பார்த்துக் குறுநகை செய்தார் நாராயணன்.

வைத்தியருக்கு இதைக் கேட்கப் பிடிக்கவில்லை. அவரது முகபாவம் கடுமையாகியது.

''வயதிற்கு தக்கபடி நாம் நடந்தால்தான் ஆரோக்கியமாக வாழமுடியும். இரத்த அழுத்தம் சாதாரணமான நோயல்ல. அத்துடன் வேடிக்கையும் விளையாட்டும் கூடாது. உமது மனத்திற்கும் உடலுக்கும் பத்தியம் தேவை. பொழுது போகவில்லை என்றால் கம்பராமாயணமோ பகவத்கீதையோ படியுங்கள்'' என்று கூறிவிட்டு, பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார்.

வஜ்ஜிரவேலு ஓடிவந்து அவரது கையிலிருந்து அதை வாங்கிக் கொண்டு கீழே இறங்கிச் சென்றான். ''சுற்றி வளைத்துப் பேசினீர்களே தவிர, அவருக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று ஒன்றுமே சொல்லவில்லையே?'' என்று சௌமினி துடுக்காக ஒரு கேள்வியை எழுப்பினாள். சுந்தரேசன் அவளிடம் பேசவில்லை. கிரிதரனின் முதுகைத் தட்டிவிட்டுப் புன்னகை செய்தார்.

''கிரி! கவலைப்படாதே. எல்லாம் சரியாகிவிடும். அப்பா தக்க ஓய்வு எடுத்துக் கொண்டு பூரண குணமாவது உன் பொறுப்பில் உள்ளது. கவனித்துக் கொள்'' என்று கூறினார். கிரி பதிலுக்கு வறட்சியாக மெல்லச் சிரித்தான். சந்திராவின் உடல்நிலையைப் பற்றி சிறிது விசாரித்துவிட்டு, வைத்தியர் பொதுவாக 'வருகிறேன்' என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கிளம்பி விட்டார்.

அதற்குப் பின்னர் கிரிதரன் தொழிலகத்துக் காகிதங்கள் நிறைந்த பெட்டியுடன் தந்தை அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். தந்தையும், மகனும் தொழிற்சாலையைப் பற்றி ஏதோ பேச ஆரம்பித்தவுடன் சௌமினி மெல்ல அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள். தன்னுடன் புறப்படும்படி ஜகதீசனுக்கு ஜாடை செய்துவிட்டு, கைப்பையை தூக்கிக்

கொண்டு கீழே விரைந்து சென்றாள். தன் சிற்றன்னையின் ஆணையை சிரமேற் தாங்கியவனாக் அவன் உடனே அவளைப் பின்பற்றிக் கீழே சென்றான்.

சிறிது நேரத்தில் சௌமினியம்மாளின் கார் ஜலங்கொண்டான் நகர் கடைத்தெருவில் மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. முக்கிய தெருக்களைக் கடந்து வீரசோழன் பட்டணம் செல்லும் ராஜபாட்டையைக் கார் நெருங்கியதும் இன்னும் வேகமாகக் காரை ஓட்டினாள். விர்ரென்று குளிர்ச்சியான காற்று முகத்திலே வீசியும் அவள் உள்ளத்திலே குமுறிய கோபக் கனலின் வெப்பம் தணியவில்லை. ஸ்ரீமான் நாராயணனின் மனைவி என்ற ஸ்தானத்திலே வந்து அமர்ந்து வருஷங்கள் சில கழிந்து விட்டபோதிலும், அவரது தொழிற்சாலையின் பொருளாதார நிலை, சொத்து விவரங்களின் அந்தரங்கம் இவை ஒன்றுமே அவளுக்குத் தெரியாதிருந்தன. இவற்றைத் தெரிந்து கொள்ள அவள் ஆவல் காட்டிய போதெல்லாம், ''உனக்கேன் இந்தத் தலைவேதனை. தொழில் நஷ்டம், கஷ்டம், லாபம் இவைகள் எல்லாம் புருஷர்களின் பிறப்புரிமை. நீ நன்றாகச் சாப்பிடு. அலங்கரித்துக் கொள். கவலையின்றிச் சுகமாக இரு. அதுபோதும்'' என்று கொஞ்சிப் பேசி, நாராயணன் நேரிடையாகப் பதில் கொடுக்காது தட்டிக் கழித்துக் கொண்டு வந்தார்.

இரத்த அழுத்த நோய் என்று வைத்தியர் கூறியதைக் கேட்டது முதல் அவளுக்கு அடுக்கடுக்காகப் பல கவலைகள் ஏற்பட்டு விட்டன. உண்மையில் நாராயணனுக்கு எவ்வளவு சொத்து இருக்கும்? அதில் அவளுக்கு எத்தனை பங்கு என்றெல்லாம் பச்சையாகத் தன் நிலையை அறிய அவள் துடிதுடித்தாள். உடல்நிலை சரியாக இல்லாது படுக்கையாகக் கணவர் இருந்த சமயம் கேட்க அச்சப்பட்டுக் கொண்டு வாளா இருந்து விட்டாள். ஆனாலும் இந்தக் கவலை அவளை உள்ளூர அரித்துக் கொண்டுதான் இருந்தது.

அடுத்தபடியாக அவளை வாட்டிய கவலை கிரிதரனைப் பற்றியதாகும். திடீரென்று கணவனுக்கு ஒருகால் மரணம் ஏற்பட்டு விட்டால் கிரிதரன் தானே வீட்டுக்கு எஜமான் என்று உடனே வந்து பீடத்தில் அமர்ந்து விடுவானே அவனுக்கு என்றுமே சிற்றன்னை மீது துவேஷம். ஜகதீசன் விஷயமாக அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை அறிந்ததிலிருந்து அவனது வெறுப்பு கடும் விஷமாகி விட்டிருந்தது. கணவனுக்குப் பின் அவன் தயவை அவள் எப்படி நம்பிக் கொண்டு வாழமுடியும்?



இவ்வாறு பற்பல சிந்தித்துக் கொண்டு ஆத்திரத்துடன் வண்டியை வெகு வேகமாக வீரசோழன் பட்டணத்துப் பாதையிலே ஓட்டிக் கொண்டிருந்தாள். உள்ளத்தைச் சாம்பலாக்கிய அவளது கோபக்கனல் அவளது அழகிய இரு விழிகளிலும் நீர்த்திவலைகளாக உருக்கொண்டு அவளது மாம்பழக் கன்னங்களின் மீது உருண்டு ஓடின. எதேச்சையாகச் சிற்றன்னையின் பக்கம் திரும்பிய ஜகதீசன் திடுக்கிட்டுப் போனான்! ''சித்தி! என்ன இது? அழுது கொண்டிருக்கிறீர்களே?'' என்று வியப்புடன் கூவினான் அவன்.

மெல்ல அவனைத் திரும்பிப் பார்த்து ஒரு சோகப் புன்னகை செய்து, ''நான் எவ்வளவோ பொறுமையாக இருக்க முயற்சிக்கிறேன். ஆனால் என்னையும் மீறிச் சில சமயங்களில் அழுகையும் ஆத்திரமும் வந்து விடுகிறது. பெயருக்குத்தான் நான் எஜமானி. உண்மையில் அதை நிர்வகிப்பவர்கள் வேறு'' என்றாள் கோபத்துடன்.

ஜெகதீசன் பற்களைக் கடித்தான். ''எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். கிரிதரன் நடந்து கொள்ளும் முறை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே யில்லை. ஆனால் அவனது அட்டகாசங்கள் வெகுகாலம் நீடிக்காது'' என்றான் உக்கிரமாக.

இதுதான் சமயம் என்று தொடர்ந்து பேசினாள் சௌமினி. ''என் மீது சிறிதும் அவனுக்கு மரியாதையில்லை. அந்தச் சந்திரா இருக்கிறாளே படுநீலி. அவளும் என்னை லட்சியம் செய்வதில்லை. அண்ணன் தம்பிகளுக்குள் ஏன் வீண்

மனஸ்தாபத்தை உண்டாக்க வேண்டும்? குடும்பம் ஒற்றுமையாக இருந்தால் எல்லோரும் கௌரவமாக வாழலாம். பல காரணங்கள் பற்றி நான் இவர்கள் எனக்கு இழைக்கும் சிறுமைகளைப் பொறுத்துக் கொண்டு போகிறேன், இவ்வளவு நாளும் உன்னிடம் ஓர் உண்மையைச் சொல்லாமல் இருந்தேன்.

''உன்னைப் பைத்தியமென்று பட்டம் சூட்டி, தயானந்தரின் சிகிச்சை விடுதியிலே அடைத்து வைத்தது இந்த கிரிதரனும் சந்திராவுந்தான். இவர்களுக்கு உடந்தையாக இருந்தவன் அந்தக் கிழவன் டாக்டர் சுந்தரேசன். இந்த உண்மையை நான் தெரிந்து கொண்டு விட்டதால் அந்த மனிதனுக்கு என்னிடம் நேரில் பேசவே பயம். வெட்கம். நீ பைத்தியமல்ல. எல்லோரையும் போல சாதாரண மனிதன்தான் என்று சிரமப்பட்டு நிரூபித்து உன்னை வீட்டிற்கு அழைத்து வந்தது பற்றிக் கிரிதரனுக்கும் சந்திராவுக்கும் என் மேல் மகா கோபம். உன் அண்ணனும்தான் ஆதியிலிருந்து இது விஷயத்தில் சதி செய்தவன். மூளை சரியில்லாத பித்தன் என்று கற்பனைக் கதைகட்டி, உன்னைத் தந்தையுடன் சேர்ந்து வாழ இடம் கொடாது காசி, கல்கத்தா இப்படிப் பல ஊர்களுக்கும் அனுப்பி வேடிக்கை பார்த்தான்'' என்றாள்.

''அதற்கெல்லாம் விரைவில் அவனைப் பதில் சொல்ல வைக்கிறேன். நீங்கள் பார்த்துக் கொண்டே இருங்கள் சித்தி,'' என்று பற்களை மீண்டும் கடித்தான் ஜகதீசன்.

''உன் அப்பா பாவம், வெகுளி. கிரிதரன் சொன்னதையெல்லாம் நம்பி விடுகிறவர். உனக்கு மூளை சரியில்லை என்று வைத்தியர் சுந்தரேசன் சொன்னதை நம்பிவிட்டார். கிரிதரன் கொடுத்த லஞ்சத்திற்காக உனக்கு வஞ்சனை செய்துவிட்டார். தெரியாமல் தவறு செய்து விட்டோமே என்று அப்பா படும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. நேற்று இரவு வெகுநேரம் வரை தூங்கவில்லை அவர். 'என் உடல்நிலை வரவர மோசமாகிக் கொண்டு வருகிறது. எனக்கு ஏதாவது நேர்ந்தால் ஜகதீசன் கதி என்னவாகும்?' என்று பச்சைக் குழந்தைபோல் அழுதுவிட்டார். ''அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது.



கவலைப்படாதீர்கள் என்று சமாதானப் படுத்தினேன்'' என்றாள். ஜகதீசன் ஏதோ ஆவேசத்தில் தூண்டப் பெற்றவன் போல் துள்ளினான்.

## 40

ஜகதீசன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு சற்று ஆலோசனை செய்தான். பிறகு, ''சித்தி, கவலைப்படாதீர்கள். அப்படியெல்லாம் நிலைமை மோசமாகும்படி நான் விட்டு வைக்க மாட்டேன். படிப்படியாக நான் செய்யப் போகும் காரியங்களைப் பார்த்துக் கொண்டே இருங்கள். இந்த ஜகதீசன் பைத்தியக்காரன் அல்ல என்று அப்போது சொல்வீர்கள்'' என்றான்.

''அட அசடே! நான் ஒரு நாளும் உன்னைப்பற்றி அப்படி நினைத்தது இல்லை. பிறர் நினைக்கவும் இடங்கொடுக்க விரும்பாமல்தானே உன்னை அரும்பாடு பட்டு வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். அப்பா கூட உன்னைப் பற்றி அவ்வாறு நினைப்பதில்லை. கிரிதரன் கூட உண்மையில் உன்னைப் பைத்தியக்காரன் என்று நம்பவில்லை. ஆனந்த நிலையத்துக்கும் அதிலுள்ள சொத்துக்களுக்கும் தானே எஜமானன் ஆகவேண்டும் என்ற பேராசையினால் உனக்கு வேண்டுமென்றே இந்த அவலப்பட்டம் சூட்டி, கண்காணாத இடத்தில் அடைத்து வைத்திருக்கச் சூழ்ச்சி செய்தான். அவனது சதி நிறைவேறவில்லை. ஆனால் ஒன்று. உனக்குத் தீங்கு செய்த இந்தப் பாதகனை நீ சும்மா விடக்கூடாது!'' என்றாள் ஆத்திரத்துடன்.

''எனக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டுமா சித்தி? பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் பெயர் ஜகதீசன் அல்ல'' என்று உரத்த குரலில் கூறிவிட்டு, ஆத்திரம் தாளாது தன் கரத்திலிருந்த கைக்குட்டையை இரண்டாகக் கிழித்து வெளியே எறிந்தான் அவன்.

அவனது "செய்கை சௌமினியைச் சற்றுத் திடுக்கிடச் செய்தது. எனினும், சட்டெனத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அதைக் காணாதவள் போல் மேலே காரை நிதானமாகச் செலுத்திக் கொண்டு சென்றாள். இருவரும் சற்றுநேரம் மௌனமாக இருந்தனர். மறுபடி அவள் தொடர்ந்து பேசலுற்றாள். ''உண்மையில் உன் தந்தையை நான் எதற்காகக் கல்யாணம் செய்து கொண்டேன் தெரியுமா ஜகதீசா?'' என்று கேட்டாள் அவள்.

ஜகதீசன் பதிலுக்கு 'தெரியாது' எனத் தலையைப் பலமாக அசைத்தான்.

''உன் பொருட்டுத்தான் உன் தந்தையை நான் கல்யாணம் செய்து கொண்டேன். நீ இதை நம்புவாயோ என்னவோ?'' என்று கூறிவிட்டுச் சற்று நிறுத்தினாள். தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு காரின் வேகத்தைச் சற்றுக் குறைத்தாள். 'பணத்திற்கோ பதவிக்கோ நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. நானும் தாய் தந்தை அற்ற அநாதைதான். ஆனால் உன் அண்ணன் கிரிதரன் நினைக்கிறபடி கட்டக்கூடக் கந்தையின்றிக் கஞ்சிக்கு அலைந்து கொண்டு நடுத்தெருவில் நின்ற பிச்சைக்காரி அல்ல நான்'' என்றாள். இதைச் சொல்லி முடிக்குமுன் துக்கம் தாளாது அவள் குரல் கரகரத்தது.

ஜகதீசனது கண்கள் சிவந்தன. புருவங்கள் துடித்தன. ''அப்படி அவன் சொன்னானா சித்தி? உண்மையை என்னிடம் சொல்லுங்கள். இன்றே அவனுக்கு ஒரு நல்லபாடம் கற்பிக்கிறேன்'' என்று கதறினான்.

சௌமினி அவனைத் திரும்பிப் பார்த்து சாகசமாக மெல்லச் சிரித்தாள். ''அசடு. ஆத்திரப்படாதே. பொறுமையாக இரு. நீ நினைப்பதை விரைவில் நிறைவேற்றும் காலம் வரும். அப்படி அவன் நேரே சொல்லும் துணிச்சல் இன்னமும் பெறவில்லை. ஆனால் அவன் என்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என்பதை அறிவேன். உனக்கும் சரி, மற்றவருக்கும் சரி, இந்தக் குடும்பத்தில் யாருக்கும், அப்பாவைத் தவிர, என் வரலாறு ஒன்றுமே தெரியாது.



''என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதைக் கேட்க உன் தமையனோ உன் தங்கையோ கவலைப்பட்டதில்லை. என்னை ஒரு பொருட்டாக மதித்ததுமில்லை. இதை உணர்ந்து கொண்ட நானும் இந்த வீட்டில் யாரோ போல் பற்று இல்லாது வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆனால் என்னைப் பற்றி உனக்குச் சொல்ல விரும்புகிறேன். அப்பொழுதுதான் நீ என்னைப் பூரணமாகத் தெரிந்து கொள்வாய். உன் சகோதரனைப் போல் அசட்டை செய்யாது கொஞ்சம் எனக்குத் தாய் என்று மதிப்புக் கொடுப்பாய். கடுகளவு கருணையாவது காட்டுவாய்'' என்றாள். இதைச் சொல்லி முடிக்குமுன் அவளது அழகிய விழிகளில் மீண்டும் கண்ணீர் திரையிட்டது.

ஜகதீசனது உள்ளம் குழைந்து விட்டது. அவளது துக்கம் அவனது நெஞ்சை உருக்கியது. ''சித்தி! நீங்கள் சொல்லா விட்டாலும் பரவாயில்லை. தயானந்தர் சிகிச்சை விடுதி என்னும் சிறையிலிருந்து என்னை வெளியே கொண்டு வந்த உங்களை நான் தெய்வமாக மதிக்கிறேன். இந்த உடலை உங்களுக்குச் செருப்பாகத் தைத்துப் போட்டு உங்கள் நலத்திற்காக வாழ்வதுதான் என் கடமை என நினைப்பேன்'' என்றான் நன்றி உணர்ச்சியால் உலுக்கப்பட்டு.

''ஜகதீசா! நீ சந்தோஷமாக எல்லோரையும் போல் வாழ்ந்தால் அது ஒன்றே எனக்குப் போதும். உன்னிடமிருந்து நான் எந்தவித உபகாரத்தையும் பிரதிபலனாக எதிர்பார்க்கவில்லை. அது கிடக்கட்டும். நான் கூற வந்ததைச் சொல்கிறேன் கேள்'' என்று மீண்டும் ஆரம்பித்த சௌமினி, கன்னங்களை நனைத்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். தொண்டையை மீண்டும் சரிபடுத்திக் கொண்டு, ''சிறு வயதிலேயே என் பெற்றோர்கள் காலமாகி விட்டதனால் என் சிறிய தந்தை என்னை எடுத்து வளர்த்தார். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு உபாத்தியாயினி வேலைக்கு மேற்கொண்டு பயிற்சி எடுத்தேன்.

''ஒருசில வருடங்கள் உபாத்தியாயினியாக உத்தியோகம் பார்த்தேன். என் சிறிய தந்தைக்கு உத்தியோகம் காரணமாக என்னைப் பிரிந்து வாழப் பிடிக்கவில்லை. அவரது

வேண்டுகோளைத் தட்ட மனமின்றி அவரது வயது காலத்தில் வேலையை விட்டு அருகிலிருந்து அவருக்கும் பணிவிடை செய்து கொண்டிருந்தேன்.

''என் சிறிய தந்தை வெகுகாலம் முட்டி வாதத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததால் குற்றாலத்தில் கொஞ்ச நாட்கள் வாசம் செய்தால் வாதநோய் சற்றுக் குறையும் என்று யாரோ சொன்னதைக் கேட்டுக் கொண்டு குற்றாலத்திலே ஜாகை பிடித்து வசிக்க ஏற்பாடு செய்தார். அங்கு சென்று நாங்கள் தங்கிய ஒருசில தினங்களில்தான் உன் தந்தையை நான் சந்திக்க நேர்ந்தது.

''என் சித்தப்பாவும் உன் அப்பாவும் சில தினங்களில் மிக்க சிநேகிதர்கள் ஆகிவிட்டனர். என்னைக் கண்டதும் உன் அப்பாவுக்கு மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அது என் பிசகா? உன் தந்தையின் ஆசையைச் சித்தப்பா என்னிடம் தெரிவித்தபோது நான் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் உங்கள் குடும்ப வரலாறு முழுவதையும் ஒருநாள் உன் தந்தை எடுத்துச் சொன்னபோது என் மனம் மாறிவிட்டது.

''தாயற்ற பச்சிளங் குழந்தை கண்காணா இடத்தில் போய் என்ன கொடுமைகள் எல்லாம் அனுபவிக்கிறதோ பாவம். தாய் என்ற ஸ்தானத்தில் போய் நாம் அமர்ந்து அந்தப் பிள்ளையை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு தக்க சிகிச்சை செய்து குணமாக்க வேண்டும். ஒரு சமயம் பங்காளியின் சூழ்ச்சியாக இருந்தாலும் இருக்கலாம். அப்படியானால் அதை உடனே வெளிப்படுத்தி அந்தப் பிள்ளையை எல்லோரையும் போல் வாழவிட வேண்டும் என்று என் மனதில் ஓர் ஆசை திடீரென்று ஏற்பட்டு விட்டது. உன்னைக் காணாமலே உன்மேல் எனக்கு என் மகனைப் போல் பாசம் ஏற்பட்டது. ஏன் என்று கேட்காதே! எனக்கே அது புரியவில்லை. ஒரு சமயம் முற்பிறப்பின் தொடர்பினால் அப்படி ஏற்பட்டதோ என்னவோ!'' என்றாள் பகட்டாக.

இதைக்கேட்ட ஜகதீசனின் கண்கள் கலங்கிவிட்டன.



''சித்தி! நீங்கள் மகா உத்தமி. உங்களை என் பெற்ற தாயாகவே மதித்துப் போற்றுவேன். சத்தியம், சத்தியம்!'' என்று குழறினான்.

சௌமினி மனம் குளிர்ந்து போனாள். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் மேலே பேசலுற்றாள். ''தாயற்ற குழந்தைகளான உங்கள் மூவரின் வாழ்க்கையைப் பரிமளிக்கச் செய்ய வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்துடன் உன் தந்தையை மணக்கச் சம்மதித்தேன். திருமணம் நடந்த ஒருசில தினங்களில் என் சித்தப்பா இறந்து விட்டார். அதனால் எனக்கு உங்கள் குடும்பத்தைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற அநாதையான நிலை ஏற்பட்டு விட்டது. இந்த உண்மையைத் தெரிந்துதானோ என்னவோ ஸ்ரீதரனுக்கு என்னைக் கண்டாலே வெகு அலட்சியம். எனக்குச் செய்யும் சிறுமைகளை நான் பாராட்டாது ஏன் பொறுமையுடன் இருக்கிறேன் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''எனக்குப் புரியவில்லையே! உங்கள் நிலையில் நான் இருந்தால் இந்த இரண்டு பாதகர்களையும் பிளந்து கட்டியிருப்பேன்'' என்றான் ஜகதீசன் சீற்றத்துடன்.

''உன் பொருட்டுத்தான் பற்களைக் கடித்துக் கொண்டு இவ்வளவு காலமும் பொறுமையாக இருந்து வருகிறேன். அவசரப்பட்டு நான் ஏதாவது செய்தால் உன்னை அந்த சிகிச்சை விடுதியிலிருந்து வெளியில் கொண்டு வந்து எங்களுடன் வைத்துக் கொள்ள முடியாதே என்று ஸ்ரீதரன் செய்த கொடுமைகளை எல்லாம் பாராட்டாது சகித்துக் கொண்டேன். நான் உன் விஷயமாக எடுத்த முதல் முயற்சியில் வெற்றி ஏற்பட்டு விட்டது. இனி இரண்டாவதாகச் செய்ய வேண்டிய வேலை, உனக்கும் இந்தக் குடும்பத்து நிர்வாகத்தில் ஒரு பொறுப்பு உண்டு என்பதை நிரூபிக்க வேண்டியது. தொழிற்சாலையும் அதன் காரியங்களும் ஸ்ரீதரன் ஒருத்தனுடைய சொந்த விஷயமல்ல. உனக்கும் அதில் பங்கு உண்டு என்று அப்பா உணர வேண்டும். உன் அண்ணனும் உணர வேண்டும்'' என்றாள்.

''சித்தி! நீங்கள் இனி சிரமப்பட வேண்டாம். என் உரிமைகளை எவ்வாறு நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்பதை நான் அறிவேன். நீங்கள் பார்த்துக் கொண்டே இருங்கள், இந்த அகம்பாவம் பிடித்தவன் என்ன கதியாகிறான் என்று!'' வீரமாகப் பதிலளித்தான் மைந்தன்.

தன்னுடைய உபதேசங்கள் குழம்பிய அவனது சித்தத்திலே நன்றாக ஊன்றிக் கொண்டு விட்டன என்பதை அறிந்து கொண்ட சௌமினி மட்டற்ற மகிழ்ச்சியெய்தினாள். எனினும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் இடது கரத்தால் தனது கண்களை லேசாகத் துடைத்துக் கொண்டாள் ''மூன்றாவதாக நான் எடுத்துக் கொண்டிருக்கும் சங்கல்பம் மிக முக்கியமானது. 'நீ பைத்தியக்காரன் அல்ல. எல்லோரையும் போல் சாதாரணமான மனிதன்தான்' என்பதை யாவருக்கும் நிரூபிக்க உனக்குத் தக்க இடத்தில் கல்யாணம் செய்து வைக்கப் போகிறேன். நீயும் எல்லோரையும் போல் குடியும் குடித்தனமுமாக இருந்தால் உன் தமையன் அதற்குமேல் சூழ்ச்சிகள் ஏதும் செய்ய முடியாதல்லவா?'' என்றாள்.

''கல்யாணமா! எனக்கா சித்தி?'' என்று கேட்டான் ஜகதீசன்.

''தமது உடல்நிலை நல்லபடியாக இருக்கும்போதே உனக்கும் கிரிதரனுக்கும் கல்யாணம் செய்துவிட வேண்டும். பிள்ளைகள் இருவரிடையே பாரபட்சம் இல்லாது சொத்துக்களை சரிபங்கு செய்து பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பலவித ஆசைகள் கொண்டிருக்கிறார் உன் தந்தை. பல இடங்களிலிருந்து உங்கள் இருவருக்கும் ஜாதகங்கள் வந்திருக்கின்றன. பார்த்துத் தேர்ந்து பொறுக்கி எடுக்கும் பொறுப்பை என்னிடம் அப்பா விட்டு வைத்திருக்கிறார். எனக்குப் பிடித்தமான ஒரு பெண்ணை உனக்கு நான் முன்பே பார்த்து வைத்திருக்கிறேன்'' என்றாள் சிற்றன்னை.

சங்கோஜத்துடன் முகத்தை வெளிப்பக்கம் திருப்பிக் கொண்டான் ஜகதீசன். ''என்ன விளையாட்டு இது சித்தி! எனக்கென்ன அவசரம்? அண்ணாவுக்கு ஆகட்டும் முதலில்.



பிறகு எனக்குப் பார்க்கலாம்'' என்றான்.

''கல்யாண விஷயத்தில் தீர்மானம் செய்யும் உரிமை என்னுடையது. அதிகம் பேசாதே! சித்தி சொன்னபடி கேள்!'' என்று கொஞ்சலாகக் கூறிய சௌமினி வீரசோழன் பட்டணத்திற்குள் காரைத் திருப்பினாள்.

ஜகதீசன் பதில் பேசவில்லை. ஏதோ யோசனையுடன் காரின் முன் கண்ணாடி வழியே தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி நகரத்திற்குள் புகுந்து பல தெருக்களைத் தாண்டி ஒரு சிறு சந்திற்குள் நுழைந்து மிகவும் பழையதாகத் தென்பட்ட ஒரு ஓட்டு வீட்டருகில் வந்து நின்றது. சௌமினி அவசரமாக இறங்கினாள்.

சௌமினியின் புதிய சிநேகிதி தங்கமணியம்மாள் வியாபார மனப்பான்மையுடையவள். தான் மேற்கொண்ட திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று முடிவு செய்து விட்டிருந்தால் அதற்கான நான்கு வித உபாயங்களையும் கையாளச் சிறிதும் தயங்க மாட்டாள். எனவே கொஞ்சமும் வெட்கமின்றிச் சில தினங்களுக்கு முன்னர்தான் தனது விருப்பத்தை வெளிப்படையாக தெரிவித்து விட்டிருந்தாள்.

''சௌமினி! நீங்கள் எப்படியாவது இந்தக் கல்யாணத்தை முடித்து வைத்து விடுங்கள். இந்த அழகான காரியத்தைச் செய்து முடிக்கும் இந்த அழகிய கரங்களுக்கு இரு ஜதை வைர வளையல்கள் போட்டு அழகு பார்ப்பேன், நிச்சயம்!'' என்று ஜாடையாகப் பேரம் பேசியிருந்தாள்!

'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டலாம் என்றால், சில ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்து ஒரு நல்ல இடத்து சம்பந்தத்தை விலைக்கு வாங்கினால் என்னவாம்?' என அவள் ஆசை பேயாகப் பிறந்தது. சௌமினிக்கு வைர நகைகள் என்றால் உயிர். இந்த உண்மையை உணர்ந்த தங்கமணியம்மாள் மெல்ல இந்தத் தூண்டிலைப் போட்டு விட்டிருந்தாள். மேலும் அவளிடம் சில பழைய வைரக்கற்கள் இழைத்த நகைகள் பெட்டிக்குள் உபயோகமில்லாது தூங்கிக் கொண்டிருந்தன.

அவைகளுக்கு வியாபார உலகில் அதிகம் மதிப்பு இருக்கவில்லை. விற்கவும் முடியாது. உபயோகிக்கவும் பிரியமின்றிக் கிடந்த நகைகளைப் பிரித்துக் கற்களை எடுத்துப் புதிய பாணியிலே இரண்டு ஜதை வளையல்களை விரைவாகச் செய்து முடித்துப் பெட்டியில் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீமான் நாராயணன் தமது இளைய மனைவியின் கைப்பொம்மையாக ஆடுகிறார் என்பது ஊர் அறிந்த ரகசியம். எனவே அந்த இளைய மனைவியைக் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டால் காரியம் வெற்றியடைந்து விடும் என்று தங்கமணியம்மாள் பெரிதும் நம்பினாள். அதற்காக அவள் இரண்டு ஜதை வைர வளையல்களை தியாகம் செய்யத் தயாராகவும் இருந்தாள்.

தங்கமணியம்மாளின் சம்பந்தத்தை சௌமினியும் மிகவும் ஆசையுடன் வரவேற்கத் தயாராகத்தான் இருந்தாள். வாய்விச்சில் பிரசித்தி பெற்ற அந்த அம்மையாரின் உறவு ஒரு வழியில் அவளுக்குப் பெரிய பக்கத் துணையாக இருக்கும் என்பது ஒருபுறமிருக்க, மைனாவதி மருமகளாக வந்து விட்டால் தன்னை அடிக்கடி வருத்திவிடும் பொருளாதார நெருக்கடி ஒரேயடியாக மறைந்துவிடும் என்ற விஷயம் சௌமினியை வெகுவாக மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டிருந்தது.

''என்ன விதமான சீர்வகைகள் வேண்டும்? ஆடை ஆபரணங்கள் வேண்டியவை யாவை? பாத்திரம் பண்டங்கள் எப்படி இருக்க வேண்டும்?'' என்று முன்கூட்டியே யோசித்து ஒரு பெரிய ஜாபிதாவைத் தயாரித்திருந்தாள். கல்யாணத்திற்குத் தேதி வைத்த பின்னர் மகளைப் பெற்ற மகராஜியிடம் அதை சமர்ப்பிக்கவும் திட்டம் வகுத்திருந்தாள். மேலும் இந்தத் திருமணத்தை அவள் வெகுவாக விரும்பியதற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.



# 41

தந்தையின் பேச்சைக் கேட்டு மைனாவதியைக் கிரிதரன் மணந்து கொண்டு விட்டால் பிறகு அவள்தான் ராணி. மருமகனைக் கையில் போட்டுக் கொண்டு, கர்வம் பிடித்த கிரிதரனை ஒரு ஆட்டு ஆட்டி வைத்துவிட மாட்டாளா? திருமணம் வேண்டாம் என்று ஒரு சமயம் அவன் மறுத்து விட்டாலும் அவள் அஞ்சப் போவதில்லை. இருக்கவே இருக்கிறான் இளைய மகன். மூத்தவன் இடக்கு செய்தாலும் செய்வான் என்று உள்ளூரப் பயந்து, எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு வார்த்தை முன் கூட்டியே தங்க மணியம்மாளிடம் சொல்லி வைத்திருந்தாள். ''என் கணவருக்கு ஜாதகத்தில் அபார நம்பிக்கை. எதற்கும் மைனாவதியின் ஜாதகத்தைப் பிள்ளைகள் இருவரின் ஜாதகத்துடன் ஒத்துப் பார்க்கிறேன். மூத்தவன் என்றால் என்ன? இளையவன் என்றால் என்ன? தோற்றத்திலும், படிப்பிலும், அந்தஸ்திலும் இருவருமே சமமானவர்கள். குடும்பச் சொத்தும் இருவருக்கும் இடையே சமமாகப் பிரிக்கப்படப் போகிறது. சிறியவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அவனுடன் பேசியும் இருக்கிறீர்கள்'' என்று சொல்லியிருந்தாள்.

தங்கமணியம்மாளுக்கு கிரிதரன் மேல்தான் கண் என்ற போதிலும் ஒரு சமயம் ஜாதகம் பொருந்தா விட்டால் ஜகதீசனையாவது மருமகனாக ஏற்று ஸ்ரீமான் நாராயணனின் வீட்டுச் சம்பந்தத்தை பெற்றுவிட வேண்டும் என்ற பேராசை உள்ளத்தை அலட்டியதனால், சரி என்று ஆமோதித்து விட்டிருந்தாள்.

முதல் முட்டுக் கட்டையை எளிதில் தளர்த்தி சுலபமாக அப்புறப்படுத்திய மகிழ்ச்சியில் சௌமினி, இந்த விவாகத்தைப் பற்றிய முயற்சியில் உடனே தீவிரமாக இறங்கி விட்டாள். தோட்டத்தில் உல்லாசமாகத் தன்னுடன் கணவன்

உலாவிக் கொண்டிருந்த ஒருநாள் அந்திப் பொழுதில் மெல்லப் பேச்சைத் துவக்கினாள். 'சந்திராவின் நிலை இப்படி இருக்கிறதே என்பதற்காக கிரிதரனைப் பற்றி நாம் சிந்திக்காது இருப்பது தவறு. உங்களிடம் நான் சொல்ல வேண்டாம் என்று இதுவரை மௌனமாக இருந்தேன். அவனைப் பற்றிய பலவிதமான செய்திகள் காதுகளில் படுகின்றன'' என்றாள் குறிப்பாக.

''அப்படியா?'' என்று திடுக்கிட்டு வினவினார் நாராயணன்.

''காலா காலத்தில் ஒரு கட்டுப்போடா விட்டால் இந்தக் காலத்துப் பையன்களை ஒன்றும் நம்பமுடியாது. இத்தனை பெரிய வியாபாரத்தை நம்பி அவன் கையில் ஒப்படைத்திருக்கிறீர்கள். தாராளமாகப் பணத்தைச் செலவழிக்கும் உரிமையையும் கொடுத்திருக்கிறீர்கள். யௌவனமும் சுதந்திரமும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்? நமது காரியாலயத்திலே வேலை பார்க்கிற குமாஸ்தா பெண்களுடன் வெளியில் சுற்றுகிறான் என்று பல பலர்விதமாக என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். சட்டென்று கல்யாணம் செய்து வைத்து விட்டால் நமது குடும்ப கௌரவம் நாசமடையாது பிழைத்து விடும். நாமும் நமது கடைமைகளைச் செய்த பெருமையை அடைவோம்.

''பெரியவனுக்கு இந்த வருஷம் எப்படியாவது கல்யாணத்தை முடித்து விடவேண்டும். பிறகு சிறியவனுக்கு அடுத்த வருஷத்திற்குள் நடத்தி விடலாம். நாட்களை வீணே கடத்திக் கொண்டு போனால் ஊரார் வாயில் வீணாக விழுந்து புரள நேரும்'' என்றாள்.

நாராயணன் சற்று யோசித்தார். மனைவி கூறியது முற்றிலும் உண்மை என்று அவருக்குத் தோன்றியது. ''எப்படியாவது கிரிதரனுக்கு இவ்வருஷம் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்'' என்று ஆமோதித்தார்.

இதுதான் சமயமென்று மெல்ல மைனாவதியைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். ஒன்றைப் பத்தாக விவரித்து மெருகு



கொடுத்து, விஷயங்களை அலங்காரமாகப் பேசுவதில் சௌமினிக்கு ஈடு இணை யாருமே கிடையாது. நாராயணன் இளைய மனைவியின் இன்பமான பேச்சில் மயங்கிப் போனார்.

''நீதான் வீட்டின் எஜமானி. மருமகள் என்று வருகிற பெண்கள் இருவரும் உனக்கு அடங்கி உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். அதனால் உனக்குப் பிடித்த பெண்களாகப் பார். உனக்குப் பிடித்திருந்தால் அந்த இடம் எனக்கும் பிடித்ததுதான் என்று எண்ணிக் கொள். பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முழுவதும் உன்னுடையதாக இருக்கட்டும்'' என்று கூறிவிட்டார். இரத்த அழுத்த நோயினின்று கணவர் சற்றுக் குணமடைந்ததும், அவள் அதற்கு மேல் விவாகம் பற்றிய முயற்சிகளை ஒத்திப்போட விரும்பவில்லை. அன்று பகல் அதன் நிமித்தமே அவள் மிகவும் விரைவாக வீரசோழன் பட்டணத்திற்கு வந்திருந்தாள்.

ஜகதீசனை வண்டியிலே அமர்ந்திருக்கச் செய்துவிட்டு, கைப்பையை எடுத்துக் கொண்டு எதிரே தென்பட்ட சிறிய ஓட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். வாயில் தாழ்வாரத்தைத் தாண்டி இருள் பரவி நின்ற சிறு முன்னறைக்குள் வந்தாள். பளிச்சென்று வீசிய வெய்யிலை அதிக நேரம் பார்த்த கண்களுக்கு அந்த அறை ஒரு இருண்ட குகை போல் தென்பட்டது. தட்டுத் தடுமாறிக் கொண்டு ஒரு பெஞ்சியின் மேல் மெல்ல அமர்ந்து கொண்டாள்.

அது சமயம் யாரோ முற்றத்தை யொட்டியிருந்த தாழ்வாரத்தில் நடப்பதுபோல் காலடிச் சத்தம் கேட்டது. உள்ளிருந்து மெல்லத் தெருவின் பக்கம் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள் ஒரு சிறுமி.

''உட்கார்ந்து கொண்டிருங்கள். தாத்தா பூஜை அறையிலிருக்கிறார். வந்து விடுவார்'' என்றாள் அவள்.

''நாசமாப் போச்சு! இந்தக் கிழவன் எழுந்து வர இன்னும் ஒரு மணிக்குக் குறையாது. சரித்தான்! அதற்குள் ஒருமுறை கடைத் தெருவைச் சுற்றிவிட்டு வந்துவிடலாம்

போலிருக்கிறது'' என்று தனக்குள் யாரோ பேசுவதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய்விட்டாள். அந்த அறையில் தான் மட்டும் தனியாக இருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டாள். மட்டமான வெளிச்சத்தில் சற்றுநேரம் இருந்ததனால் அவளது கண்கள் தெளிவைப் பெற்று விட்டனவாதலால், எதிர்ப்புறத்து பெஞ்சியின் மீது சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த ஆசாமியை நன்கு கவனிக்க முடிந்தது.

எதேச்சையாகத் திரும்புகிறவள் போல் மெல்லக் கடைக்கண் பார்வையை அந்த மனிதர் மீது திருப்பினாள். அடுத்த கணம் சிங்கத்தையோ புலியையோ சந்தித்து விட்டவள் போல் அரண்டு போய்விட்டாள். கழுகு போன்ற கூரிய கண்களால் அந்த மனிதர் அவளை உறுத்துப் பார்த்த பார்வை அவளை மிகவும் கலவரப்படுத்தி விட்டது. ஒட்டிய தாடைகளும் கூரிய மூக்கும் கொண்ட அந்த முகத்தை எங்கேயோ பார்த்த கவனமாக இருந்தது. ஆனால் எங்கே எப்பொழுது என்றுதான் அவளுக்குப் புலப்படவில்லை. குழப்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் கைப்பையைத் திறந்து, தான் கொண்டு வந்திருந்த ஜாதகங்களைத் துழாவி எடுத்துக் கையில் தயாராக வைத்துக் கொண்டாள்.

கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மீண்டும் ஒருமுறை தன் பார்வையை எதிர்ப்பக்கம் திருப்பினாள். ஆனால், அந்த மனிதர் அங்கு இருக்கவில்லை. ஜோசியர் வரும்வரை காத்திருக்கப் பொறுமையற்று விடுக்கென எழுந்து வெளியே சென்று அவர் மாயமாக மறைந்து விட்டார். மீண்டும் அவரைப்பற்றி அவள் ஆராயப் புகுமுன் இடைக் கதவை மெல்லத் திறந்துகொண்டு ஜோசியர் அண்ணாசாமி வெளியே வந்து பிரசன்னமானார்.

சௌமினியம்மாளைக் கண்டதும் அவரது வெற்றிலைக் காவியேறிய பற்கள் அனைத்தும் உதட்டைத் தாண்டிக் கொண்டு முன்வந்து நின்றன.

''வாருங்கள்! ஏன் அங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறது! இது உங்கள் வீடு. அடாடா...'' என்று



உபசரித்துக்கொண்டு சந்தோஷத்துடன் வரவேற்றார் சௌமினியை.

ஜோசியருக்கு மிகவும் வேண்டியவர்கள்தான் சாதாரணமாக இருள்படிந்த அந்த முன் அறையைத் தாண்டி அவரது வீட்டின் கூடத்திற்குள் பிரவேசிக்க முடியும். அந்த உரிமையை ஒருசில குடும்பத்தினருக்கு மட்டுமே அவர் ஒதுக்கி வைத்திருந்தார்.

''மீனா! பாட்டிகிட்ட சொல்லிச் சட்டென்று சூடா நல்ல காப்பி ஒரு டம்ளர் போட்டுக் கொண்டு வா!'' என்று பேத்திக்கு உத்தரவிட்டு விட்டு, ஜோசியர் கூடத்து ஊஞ்சலின் அருகில் ஒரு பிரம்பு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார். சௌமினியால் அதிக நேரம் அந்த ஆசனத்தில் அமர்ந்திருக்க முடியவில்லை.

அவசரமாகக் கைப் பையைத் திறந்து இருபத்தைந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஊஞ்சல் பலகைமீது வைத்தாள். ''காப்பி சாப்பிட நேரமில்லை, மன்னிக்கவும். இந்தப் பெண் ஜாதகத்துடன் நம் பிள்ளைகள் இருவரின் ஜாதகங்களைப் பொருத்திப் பாருங்கள். யாருடையது மிகவும் பொருந்தி இருக்கிறது என்று கவனியுங்கள். இரண்டாவதாக, விவாகம் செய்வதாக இருந்தால் இரண்டு பிள்ளைகளுக்குமே பொருத்தமாக இருப்பது போல் நீங்கள் ஒரு நாள் குறித்துக் கொடுக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் விவரமாக எழுதித் தபாலில் அவர் பெயருக்கு ஊருக்கு அனுப்பி விடச் சொன்னார். எனக்கு இன்னும் பல வேலைகள் கவனிக்க இருப்பதனால் இங்கே அதிக நேரம் தாமதிக்க இயலாது. வருகிறேன்'' என்று கூறிவிட்டு, சட்டென்று எழுந்திருந்தாள்.

ஜோசியர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார். ''விசித்திரமான கோரிக்கையாக இருக்கிறதே அம்மா! ஒரு சமயம் ஜாதகம் பொருந்தாவிட்டால் எப்படித் தேதி வைத்துக் கொடுக்க முடியும்?'' என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

''வீட்டு எஜமானருக்குப் பெண்ணை மிகவும் பிடித்திருக்கிறது. எப்படியாவது மூத்தவனுக்கோ

இளையவனுக்கோ, யாராவது ஒருவனுக்கு அந்தப் பெண்ணை முடித்துவிட வேண்டும் என்று துடிக்கிறார். மேலும், இரண்டாவது பிள்ளைக்கு அந்தப் பெண்ணை ரொம்பப் பிடித்திருக்கிறது. மூத்தவன் தன் அபிப்பிராயத்தை இன்னும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. மனப்பொருத்தம் ஏற்பட்டு விட்டால் ஜாதகப் பொருத்தத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன்? நமது மனச்சாந்திக்காக ஜாதகங்களைப் பொருத்தம் பார்க்கச் சொன்னேன். அவ்வளவுதான்'' என்றாள் சௌமினி பகட்டாக.

''புரிந்தது அம்மா. நீங்கள் கேட்ட விஷயங்கள் அனைத்தையும் விவரமாக எழுதி அனுப்புகிறேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு, போக விடை கொடுக்கும் பாவனையில் அவர் ஒரு பெரியகும்பிடு போட்டார். வாயிற்படியைக் கடந்து வெளியே வந்தாள் சௌமினி. ஜோசியரும் வழி விட கூடவே பின்னால் வெளியே வந்தார். கேட்க வேண்டும் என்று துடித்த அந்தக் கேள்வியை அவளால் அதற்குமேல் அடக்க முடியவில்லை.

''ஆமாம், சற்று முன் நான் இங்கு வந்தபொழுது உங்களுக்காக ஒரு மனிதர் முன்னறையில் காத்துக் கொண்டிருந்தாரே, அவரை உங்களுக்கு மிகவும் தெரியுமா?'' என்று சாதாரணமாகக் கேட்பவள்போல் வினவினாள். ஜோசியர் தமது நரைத்த புருவங்களைச் சிந்தனையுடன் சுருக்கினார். முகவாயைத் தடவிக்கொண்டு ஆலோசனை செய்தார். ''ஓகோ! அவரையா சொல்கிறீர்கள்? வேலையற்ற மனிதர். சதாவந்து ஏதாவது ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு இங்கே வந்து விடுவார். அவர் பெயர் வேதாந்தாம்'' என்றார்.

''வேதாந்தமா? அப்படி ஒரு பெயரை நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே? ஜலங்கண்டான் போன்ற சிறிய நகரத்தில் எனக்குத் தெரியாத ஒரு பேர்வழி கூட இருக்கிறார் போலிருக்கிறதே'' என்று சொல்லிவிட்டு, முத்துப்பற்கள் தெரிய மோகனமாகச் சிரித்தாள்.

''இவரை எனக்குப் பாலியத்தில் கொஞ்சம் தெரியும்.



அந்தத் தொடர்பைக் கொண்டு அடிக்கடி வந்து என் பிராணனை வாங்குகிறார். வெகுகாலம் வெளியூர்களில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். சமீபத்தில்தான் திரும்ப ஜலங்கண்டானுக்கு வந்திருக்கிறார்'' என்று சுருக்கமாக ஜோசியர் சொல்லி முடித்தார்.

பதிலுக்கு மெல்லச் சூள்கொட்டினாள் சௌமினி. பிறகு காரில் வந்து ஏறிக்கொண்டு வாகனத்தை ஊருக்குத் திருப்பினாள்.

சிறிய தாயார் வருவதற்குள் வண்டியினுள் ஒரு சிறு தூக்கம் போட்டு விட்ட ஜகதீசன் விடுக்கென விழித்துக் கொண்டான்.

''போன இடத்தில் அப்படியே உட்கார்ந்து கொண்டு விட்டீர்களே! எட்டி எட்டிப் பார்த்து எனக்குக் கழுத்து வலிகண்டு விட்டது'' என்றான்.

சௌமினி பதிலுக்கு மௌனமாக முறுவலித்தாள். அவள் சிந்தனையும் எண்ணங்களும் எங்கெங்கோ சென்று சுழன்று கொண்டிருந்தன. மனம் எதிலும் நிலை கொள்ளாது சஞ்சலத்தில் தவித்தது. எவ்வளவு முயற்சித்தும் வேதாந்தத்தின் கூரிய கண்கள் அவளது நினைவை விட்டு அகலமறுத்தன. காரணமற்ற ஒருவித கலவரத்தில் அவளது உடல் அடிக்கொரு தடவை · நடுங்கியது. வழி முழுவதும் ஜகதீசன் என்னவெல்லாமோ பேசிக்கொண்டு வந்தான். ஆனால் அவள் எதையும் காதுகளில் வாங்கிக்கொள்ள வில்லை.

வீரசோழன் பட்டணத்தை விட்டு நேரே ஜலங்கண்டான் வந்ததும் சற்று நேரம் கடைத் தெருவில் இங்குமங்கும் காரைச் செலுத்திக் கொண்டு ஒருமுறை பவனி வந்த பின்னர்தான் ஆனந்த நிலையத்திற்குத் திரும்பினாள். பகல் சாப்பாட்டிற்கு நேரம் சென்று விட்டதனால் ஒரு டம்ளர் பழரசம் மட்டும் அருந்திவிட்டு, தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கைமீது சாய்ந்து கொண்டாள். உடலும் மனமும் சோர்வுற்றிருந்த போதிலும் கண்கள் உறங்க மறுக்கவே எழுந்திருந்தாள். மேஜை மீது தன் பெயருக்கு வந்த கடிதங்கள் சில பார்வையிடாமல் கிடப்பதை உணர்ந்து அருகில் சென்று

ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, அவற்றைச் சாவதானமாகப் பிரித்துக் கவனித்தாள். கடைசியாக கையிலெடுத்த கடிதத்தின் மேல் உறையைப் பார்த்ததுமே அவள் நெஞ்சம் துணுக்குற்றது. மிகவும் பழகிய ஒரு கையெழுத்தைப்போல் காணப்படவே பரபரப்புடன் பிரித்துக் கடிதத்தை வெளியே எடுத்தாள்.

''அன்பு மிகுந்த சௌமினி தேவிக்கு!

அநேக கோடி நமஸ்காரம். சமீபத்தில் நான் தங்களை எதேச்சையாகக் காண நேர்ந்தது என் பாக்கியமெனக் கருதுகிறேன். பங்களூரில் தங்களை ஒரு பிரபல ஹோட்டலில் ஒருசில நிமிஷங்கள் பார்க்க நேர்ந்தது. அருகில் வந்து அறிமுகம் செய்து கொள்ளு முன்னர் தாங்கள் காரில் ஏறிச் சென்றுவிட்டீர்கள். தற்சமயம் தாங்கள் பெரிய அந்தஸ்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். எனினும் ஏழை உறவினனான என்னை மறந்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். வேலை ஒன்றும் கிடைக்காது நான் கொஞ்ச நாட்களாக மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உங்களை அண்டினால் கட்டாயம் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். தங்களை நான் நேரில் வந்து எப்பொழுது பார்க்கலாம் எனத் தெரியப்படுத்தினால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். என் நிலைமையை அறிந்து கட்டாயம் தாங்கள் எனக்கு உதவி செய்வீர்கள் எனப் பூரணமாக நம்புகிறேன். என் விலாசத்தை மேலே கொடுத்திருக்கிறேன். நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள
சுவாமிநாதன்.

கடிதத்தை படித்ததும் கோபத்துடன் பற்களை நெரித்தாள் சௌமினி. அடியுண்ட வேங்கைபோல் சீற்றத்துடன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் பலமுறை நடந்தாள். 'என்ன துணிச்சல்? என்ன தைரியம்?' என்று தனக்குள்ளே முணுமுணுத்தாள். அழகாகக் கட்டியதொரு கோட்டை கண்முன்னே சாய்ந்து இடிந்து பொடியாகப் போவதுபோல் அவளுக்கு ஒருபிரமை ஏற்பட்டது. 'சாகவும் மாட்டாமல்



வாழவும் மாட்டாமல் இந்தச் சண்டாளன் பேய்போல் இப்பொழுது ஏன் புறப்பட்டான். அட கடவுளே!' என்று தனக்குள்ளே பேசிக்கொண்டு, ஆத்திரம் தாளாது தன் இரு கரங்களாலும் தலையில் படீர் படீர் என்று பல முறை அடித்துக்கொண்டாள்.

## 42

சிதறிக் கிடக்கும் வைரமணிகள் எனக் கரிய வானத்தில் விண்மீன்கள் மின்னிக் கொண்டிருந்தன. சாயங்காலம் வெளியே சென்ற எஜமானியம்மாள் இன்னமும் வீடு திரும்பாததனால் ஆனந்த நிலையத்திலே பெரும் அமைதி நிலவியிருந்தது. வைத்தியர் கட்டளையை மீற அஞ்சிய நாராயணன் விளக்கு ஏற்றிய பின்னர் கொஞ்ச நேரத்தில் உணவு உட்கொண்டு விட்டதனால் உறங்கச் சென்று விட்டார். கிரிதரன் வரத் தாமதமாகுமெனச் சந்திராவும் விரைவில் உணவைத் தனியே முடித்துக்கொண்டு விட்டிருந்தாள். பகல் முழுவதும் புத்தகங்களைப் படிப்பதில் பொழுதைக் கழித்ததனால் அவளது சிந்தனை மிகவும் சோர்ந்து விட்டிருந்தது. சில காலமாக அவளை உள்ளூர வருத்திய ஒரு அச்சம் அவளது நரம்புகளை மிகவும் தளர்த்தி விட்டிருந்தது. இலை அசைவதைக் கேட்டால்கூட மருட்சியடையும் அளவுக்கு அவள் கோழையாகி விட்டதனால், கூட துணைக்காக அறையில் மூலையிலேயே கிரிதரனின் அருமை நாய் டைகரைப் படுக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

''இதென்ன வழக்கம்? 'நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தானாம்' என்பதைப் போலப் புதியதாக இருக்கிறதே'' என்று சித்தி ஒருநாள் இதைப் பற்றி மிகவும் இரைந்தாள். ஆனால் சந்திரா அதைக் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை. ''டைகர் நாய் அல்ல, பச்சைக் குழந்தை. அவனைப்பற்றி மட்டமாக நினைக்காதீர்கள்'' என்று சிரித்தபடி சொல்லி மழுப்பி விட்டாள்.

வெகு நேரம் முயன்றும் கண்கள் உறங்க மறுக்கவே படுக்கையோரத்திலிருந்த மின்சார விசைப் பித்தானை மெல்ல அழுத்தினாள். இடைக் கதவைத் திறந்து கொண்டு மஞ்சுளா உள்ளே வந்தாள். அரைக் கண் தூக்கத்திலிருந்த டைகர் காதுகளை நிமிர்த்தி தலையைத் தூக்கி ஒருமுறை உறுத்து விழித்து விட்டு அவளது வருகையில் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் நிமித்தம் சில தடவைகள் வாலை ஆட்டிவிட்டு மறுபடியும் தூங்கச் சென்றுவிட்டது.

''தம்புராவை வைத்துக்கொண்டு நீ சற்று நேரம் பாடினால் தேவலை போல் தோன்றுகிறது. சித்தி தனது சிநேகிதியின் வீட்டில், பிறந்தநாள் வைபவத்தில் கலந்து கொள்ளப் போயிருக்கிறாள். வர வெகு நேரம் செல்லும். அதனால் கவலையின்றி நீ பாடலாம்'' என்றாள் சந்திரா.

மஞ்சுளா பதில் பேசவில்லை. அறையின் மூலையில் மூடிக் கட்டி வைத்திருந்த தம்புராவை எடுத்து வந்து தரைமீது படுக்கையின் எதிரே உட்கார்ந்து கொண்டாள். சுருதியைக் கூட்டிக் கொண்டு தொண்டையைக் கனைத்து சரிப்படுத்திக் கொண்டு எஜமானியை மகிழ்விக்கும் நிமித்தம் உற்சாக மெல்லாவற்றையும் ஒருங்கே திரட்டிக்கொண்டு கல்யாணி ராகத்திலே 'சிவகாமேச்வரி' என்று தனது குல தெய்வத்தின் மீது மனம் உருகப் பாடத் தொடங்கினாள்.

சங்கீதத்திலே மிதமிஞ்சிய பயிற்சி ஏதும் இல்லாவிடினும் இயற்கையாக அவளுக்கு அமைந்த ஞானமும் இனிய குரலும் சேர்ந்து கொள்ளவே அந்தப் பாட்டு மிகவும் கம்பீரமாகப் பரவி ஒலித்தது. கூரை முகட்டைப் பார்த்துக் கொண்டு கண்களை மூடியபடி இசையமுதைப் பருகிக் கொண்டிருந்த சந்திரா மெய்மறந்து போய் விட்டாள்.

இன்பத்தின் சாயலாக அவளது கண்களில் நீர் துளிர்த்துக் கன்னங்களின் மீது வழிந்து ஓடியது. எஜமானியிடமிருந்து பதில் வராமல் போகவே, பாட்டு முடிந்ததும் அடுத்தபடியாக தோடி ராகத்தை எடுத்தாள் மஞ்சுளா. தேன் போன்ற அவளது குழைந்த



இனிய சாரீரம் ராகத்தின் உச்சநிலையைத் தொட்டு விட்டுச் சரசரவென்று கீழே இறங்கி வந்தபோது அவளையுமறியாது ஒரு பரவச நிலையில் சந்திரா மெய்சிலிர்த்துப் போய் விட்டாள். 'தக்க உற்சாகமும் ஊக்குவிக்கும் பக்கபலமும் இருந்திருந்தால் இவள் பிரபல பாடகியாக இருப்பாள்! ஆனந்த நிலயத்திலே இப்படி அடிமையாகவா பணி செய்து கொண்டு இருப்பாள்! அடடா!' என்று வியப்பும் பச்சாதாபமும் ஒருங்கே எய்தியவளாக அந்த இசை வெள்ளத்தில் மூழ்கி மோன நிலை எய்தி விட்டிருந்தாள். ''தணிகை வளர் சரவணபவா'' என்ற பாடலை ஆரம்பித்து மிகவும் அழகாகப் பாடி முடித்த பின்னர் மஞ்சுளா தம்புராவை மீட்டிக்கொண்டு சற்று நேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தாள். பாட்டு முடிந்தும் கூட அறைக்குள்ளே இன்னமும் அந்த இனிய குரல் ரீங்காரம் செய்துகொண்டு சுழன்று வருவது போன்ற ஒரு உணர்ச்சி நிலவி நின்றதனால், பிரமிப்பில் மூழ்கிவிட்டிருந்த சந்திராவை நித்திரை மெல்ல வந்து பற்றிக் கொண்டது. மேலே எஜமானியிடமிருந்து உத்தரவு ஏதும் வராததனால் எழுந்து அப்பால் செல்ல அஞ்சியவளாக அங்கேயே அமர்ந்திருந்த மஞ்சுளா, தொடர்ந்து பாடலானாள். 'தன்மதியன்ன பெண்மதியே உன்னைத்தான் கொண்ட நாயகர்யாரோடி' என்று சிந்து பைரவியில் ஆரம்பித்தாள். கடந்த சில நாட்களாக உள்ளமும் உணர்ச்சியும் பலவிதமான போராட்டங்களில் நைந்து விட்டிருந்ததனால் பாட்டின் பொருள் அவளை மிக்க துன்பப்படுத்தியது. துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

''தீமையிலாப் பெண் மாமயிலே உன் உள்ளங்கவர்ந்தவர் யாரோடி''... என்ற அடியைப் புன்னாகவராளியில் பாட விழைந்தபோது அவள் குரல் தழதழக்கத் தொடங்கி விட்டது. கண்களில் நீர் பெருகி ஓட நெஞ்சம் விதிர்விதிர்க்கப் பாடமுடியாது நிறுத்திவிட்டாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெல்லத் தலையை நிமிர்த்தி எஜமானியின் பக்கம் பார்த்தாள். தம்புரா சுருதி நின்றதும், சந்திரா நிம்மதியாக உறங்குகிறாள் என்பதற்கு அடையாளமாக மெல்ல ஸ்வாச ஒலி காதில் விழவே எழுந்திருந்தாள். அடிமேல்

அடியெடுத்து வைத்து மெல்ல நடந்து சென்று தம்புராவை உறையில் போட்டு மூடி வைத்துவிட்டு இடைக்கதவைத் திறந்துகொண்டு தன் அறைக்குள் வந்து சேர்ந்தாள். அலைமோதிக் குமுறியெழுந்த தனது உணர்ச்சிகளை சமாளித்துக் கொண்டு அவள் மறுபடி வெளியே வர வெகுநேரம் சென்றுவிட்டது.

சமையலறையில் கிட்டா மட்டுமே தனியாக இருந்தார். மஞ்சுளா வந்து அருகில் நின்றதைக் கூட கவனியாது அவர் அடுப்பில் பாத்திரத்தில் எதையோ காய்ச்சிக் கொண்டிருந்தார். மிளகின் நெடி அறை முழுவதும் வீசவே மஞ்சுளாவுக்குத் தொண்டை கமறியது. ''இது என்ன?'' என்று வினவிக் கொண்டு பலமுறை இருமினாள் அவள்.

''மன்னிக்க வேண்டும். மருந்து மிகவும் காரமாக இருக்கிறாப் போலிருக்கிறது'' என்று கூறிவிட்டு பற்கள் அனைத்தும் காட்டிப் பெருங்குரலில் சிரித்து கிட்டா, பாத்திரத்தை இறங்கிக் கீழே வைத்தார்.

''ஒரு நிமிஷம், இதோ இலை போட்டு விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, பரபரப்பாக ஓடி இலைக்கட்டை அவிழ்த்தார். மஞ்சுளா கேட்குமுன் அவரே வழங்கம்போல் முடுக்கிவிட்ட கிராமபோன் இசைத் தட்டுப்போல் பேசினார்.

''வஜ்ஜிரவேலுவும் அம்பிப் பயலும் எஜமானியம்மாளிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு வெளியே சுற்றப்போய் விட்டார்கள். அதனால் எல்லா வேலைகளும் என் தலையிலே வந்து விழுந்து விட்டன. எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை'' என்று கூறிக்கொண்டு பரபரப்புடன் இலையில் உணவைப் பரிமாறினார்.

''அடடா! அப்படியா? உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் நான் செய்கிறேன். என்ன செய்ய வேண்டுமென்று என்னிடம் சொல்லுங்களேன்'' என்று பணிவாகக் கேட்ட மஞ்சுளா சாப்பிட உட்கார்ந்தாள்.

''கொஞ்சம் கஷாயமும், கஞ்சியும் தயார் செய்து வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு போய்க் கொடுக்க



வேண்டும்'' என்று இழுத்துவிட்டு நிறுத்தினார் கிட்டா.

சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவிக்கொண்டு உள்ளே மீண்டும் வந்தாள் மஞ்சுளா. ''என்னிடம் கொடுங்கள் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறேன். யாருக்கு இவற்றைக் கொடுக்க வேண்டும், எஜமானிக்கா?'' என்று வியப்புடன் கேட்டாள்.

கிட்டா மறுபடியும் கடகடவென்று பெருத்த குரலில் சிரித்தார்.

''அடியேனுடைய வைத்தியம் அத்தனை பெரிய இடத்திற்குச் செல்லுமா அம்மா! என்னுடைய வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் நம்பிக்கையுடன் என் வைத்தியத்தை ஏற்றால் போதாதா...'' என்று கேட்டுவிட்டு, துண்டை உதறி மேலே போட்டுக் கொண்டார்.

''ஒருசமயம் எஜமானி வந்தாலும் வந்து விடுவார்கள், அப்பொழுது இங்கே நான் இல்லாவிட்டால் வீடு நிர்த்தூளியாகி விடும். கிரிதரன் அவர்கள் வருகிற நேரமும் கூட. காலையிலிருந்து எனக்கு ஒருமுறை போய் எட்டிப் பார்க்கக் கூட அவகாசம் இல்லை. கிழப் பிராணன் உணவும் மருந்தும் சரியானபடி கொடுக்காவிடில் ஆபத்தேதேனும் ஏற்பட்டால் சொல்வதற்கில்லை உம்...'' என்று தனக்குள்ளே பேசுகிறவர்போல் முணுமுணுத்தார்.

''சுற்றி வளைத்துப் பேசுகிறீர்களே ஒழிய, இந்தக் காரியத்தைச் செய் அம்மா என்று என்னிடம் ஒன்றும் சொல்ல மறுக்கிறீர்களே. நான் விஷயத்தைத் தெரிந்து கொள்ளக் கூடாதா?'' என்று பரிகாசமாகக் கேட்டாள் மஞ்சுளா.

''ஒன்றுமில்லை அம்மா. நம் சிந்தாமணிக்கு இன்று காலையிலிருந்து உடம்பு சௌகரியமில்லை. வழக்கமாக அவருக்கு வரும் ஜுரம் வந்து, கால் முட்டிகள் வீங்கிக் கொண்டுவிட்டன. வேலைக்குப் போகாது நமது விடுதியில் அறையில் படுத்துக் கிடக்கிறார். அம்பிப் பயல் பார்த்து விட்டு வந்து சொன்ன பிறகுதான் எனக்குத் தெரியும். அங்கே ஒரு முறை போய்ப் பார்க்க முடியாமல், சமையலறைக்குள்

கையாக நாள் முழுவதும் கிடக்கிறேன்'' என்றார் ஆயாசத்துடன்.

''அடப் பாவமே! டாக்டர் சுந்தரேசனைக் கூப்பிட்டு அவரைக் கவனிக்கச் சொல்லியிருக்கலாமே'' என்று அனுதாபப்பட்டாள் மஞ்சுளா.

''சிந்தா ஒரு முரட்டுக் கிழவர். பற்களைக் கடித்துக் கொண்டு நோயுடன் போராடினாலும் போராடுவாரே ஒழிய, மருந்து என்றால் அவருக்கு ஆகவே ஆகாது. மேலும் எங்கள் நால்வரில் யாருக்கு என்ன வந்தாலும் அடியேனுடைய வைத்தியத்திலேயே எல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடி விடும்'' என்றார் மகிழ்ச்சியுடன். மஞ்சுளா பதிலுக்கு லேசாகச் சிரித்தாள். அதைக் காணக் கிட்டாவிற்குக் கொஞ்சம் வெட்கமாகி விட்டது.

''இந்தக் கிழவனுக்கு இன்னும் என்னென்ன கலைகள் தெரியுமோ என்று அதிசயித்து நகைக்கிறீர்களா! தோட்டத்தைக் கொத்துவதிலிருந்து துணி துவைப்பதுவரை எனக்கு எல்லா விஷயங்களிலும் சிறிது அனுபவம் உண்டு. 'களவும் கற்று மற' என்பது எனது கொள்கை. எப்பொழுதும் சிந்தாவுக்கு நான்தான் முட்டி நோவுக்குக் கஷாயம் செய்து கொடுப்பது வழக்கம்'' என்று கூறிவிட்டு, பாத்திரத்திலிருந்த கறுப்புத் திரவத்தை வடித்து ஒரு சிறிய டம்ளரில் நிரப்பினார். ''இப்பொழுது என்ன செய்வதென்றே விளங்கவில்லை'' என தனக்குள்ளே ஆயாசத்துடன் பேசிக் கொண்டு அவளுடைய முகத்தைப் பார்த்தார்.

சொல்லாமற் சொன்ன அவரது வேண்டுகோளைப் புரிந்துகொண்டு விட்டாள் மஞ்சுளா. ''கவலைப்படாதீர்கள். இதுமாதிரி சமயங்களில் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டியவர்கள்தான். என்னிடம் கொடுங்கள். நான் போய்ச் சிந்தாவைக் கவனித்துவிட்டு வருகிறேன்'' என்றாள்.

முகம் மலர்ந்து போய் விட்டது கிட்டாவுக்கு. பரபரப்புடன் இரண்டு பாத்திரங்களை ஒரே மரத் தட்டில் வைத்து அவளிடம் கொடுத்தார். ''சிந்தாவுக்கு கஞ்சி என்றால்



பிடிக்கவே பிடிக்காது. இந்தக் கஷாயத்திற்கு வேறு வகை உணவு ஒத்துக் கொள்ளாது. அவர் உட்கொள்ளும் வரை அருகில் இருந்து கவனித்துவிட்டு வாருங்கள். யாருமற்ற அநாதைக் கிழவர். உங்களுக்கு மிக்க புண்ணியம் அம்மா'' என்று குழைந்த குரலில் கெஞ்சாத குறையாகச் சொன்னார். சரி என்று தலையை ஆட்டிவிட்டு மரத்தட்டைச் சுமந்து கொண்டு தோட்டத்திற்குள் விரைந்தாள் மஞ்சுளா.

வீட்டின் பின்னால் எரிந்த விளக்கு மிகவும் பிரகாசமானதாக இருந்தபோதிலும் தோட்டத்தின் பிற்பகுதி முழுவதற்கும் வெளிச்சத்தைப் பரப்ப அதனால் இயலவில்லை. மேலும், உயர்ந்து நெருக்கமாக வளர்ந்திருந்த மரங்கள் பரப்பிய நிழலினால் வேலைக்காரர்கள் விடுதியை நோக்கிச் செல்லும் பாதை இருளில் மூழ்கிக் கிடந்தது. வெளிச்சம் குறைந்து இருள் அதிகரிப்பதைக் கண்டதும் மஞ்சுளாவின் நெஞ்சு துணுக்குற்று விட்டது.

''கிட்டா இதைப் பற்றி எச்சரிக்கவில்லையே! சொல்லியிருந்தால் கையுடன் டார்ச் விளக்கையாவது எடுத்து வந்திருப்பேன். தினசரி இவ்வழியே நடந்து பழக்கம் போலிருக்கிறது அவருக்கு'' என எண்ணியபடி, தட்டுத் தடுமாறி ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்துவிட்டாள். தாளிடாது மூடியிருந்த கதவைத் திறந்துகொண்டு முன்னறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் மங்கலாக விடிவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. சிந்தாமணி போர்வையினால் நன்றாக மூடிக்கொண்டு பளிங்குத் தரைமீது சுருண்டு கிடப்பதைக் கண்ணுற்றாள்.

ஜுர வேகத்தில் அரற்றிக் கொண்டிருந்த சிந்தாமணி, மஞ்சுளா உள்ளே வந்து அருகில் நின்றதைக் கவனிக்கவேயில்லை. மரத் தட்டைக் கீழே வைத்துவிட்டு, போர்வையை நீக்கி அவர் நெற்றிமீது கையை வைத்துப் பார்த்தாள். நெருப்பென உடல் காய்ந்து கொண்டிருப்பதை உணர்ந்ததும் அவள் உள்ளம் இரக்க வசப்பட்டு விட்டது.

''யாரது?'' என்று திடுக்கிட்டு வினவிய சிந்தாமணி,

விருக்கென எழுந்து உட்கார்ந்தார். வீங்கியிருந்த முட்டிகள் அதிர்ச்சியினால் மிகவும் வலிக்கத்தொடங்கவே, 'ஐயோ அப்பா' என்று அரற்றிக் கொண்டு படுக்கைமீது சாய்ந்து விட்டார்.

''நான்தான் மஞ்சுளா! உங்களுக்கு மருந்தும் கஞ்சியும் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு மிகவும் பரிவுடன் அருகில் வந்து நின்றாள்.

## 43

சிந்தாமணி கண்களைத் திறந்து மஞ்சுளாவை வெறித்துப் பார்த்தார். நம்ப முடியாதவர்போல் கண்களை மூடிக்கொண்டு ஒருகணம் கழித்து மீண்டும் திறந்து பார்த்தார்.

''உடம்பு இப்பொழுது எப்படியிருக்கிறது? சில்லென்று குளிர்ந்த தரையில் படுக்கையைச் சரியாகப் போட்டுக் கொள்ளாமல் படுத்திருக்கிறீர்களே. இது உடம்புக்கு நல்லதல்லவே'' என்று கூறிய மஞ்சுளா சுற்றுமுற்றும் பார்த்தாள். சுவரை ஒட்டினாற்போல் ஓர் அறை இருப்பதை உணர்ந்து சட்டென்று அதன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். விளக்கைப் பொருத்திவிட்டு உள்ளே கவனமாகப் பார்த்தாள். ஒரு மூலையில் சில பஞ்சு மெத்தைகளும் கம்பளிகளும் சுருட்டி ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மெத்தைகளில் ஒன்றை இழுத்து வெளியே எடுத்து வந்து தரைமீது பிரித்தாள். அதன்மீது தலையணையைப் போட்டுவிட்டு, ''என்னைப் பிடித்துக் கொண்டு மெல்ல எழுந்திருங்கள். காய்ச்சலுக்கு வெறும் தரை முதலில் இதமாகத்தான் இருக்கும். பிறகு ஆபத்தில் கொண்டு விட்டு விடும்'' என்று உரிமையுடன் கடிந்து கொண்டு, அவரைப் பிடித்து மெல்ல உபசரித்துப் பஞ்சு மெத்தைமீது படுக்க வைத்தாள்.



அறைக்குள்ளிருந்து சில கம்பளிகளையும் எடுத்து வந்து அவரை நன்றாகப் போர்த்தினாள். பிறகு அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

''கொஞ்சம் சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து கொண்டு இந்தக் கஞ்சியை அப்படியே குடித்து விடுங்கள்?'' என்று பச்சிளங்குழந்தைக்குச் சொல்வதுபோல் நைச்சியமாகச் சொன்னாள்.

சிந்தாமணிக்கு எல்லாம் கதைபோல் பிரமிப்பாக இருந்தது. ''உங்களுக்கு இந்தச் சிரமம் எதற்கு அம்மா?'' என்றார் நடுங்கிய மெல்லிய குரலில். ''சிரமம் எனக்கா உங்களுக்கா?'' என்று கேட்ட மஞ்சுளா, சிரித்தபடி பாத்திரத்தை மிக்க வற்புறுத்தலுடன் அவர் கரத்திலே கொடுத்து விட்டாள். பதில் பேச முடியாது ஒரே மூச்சில் கஞ்சியைக் குடித்து முடித்த சிந்தாமணி அவளை வியப்புடன் கூர்ந்து பார்த்தார் ஒருமுறை.

''இதையும் குடித்து விடுங்கள். அதற்குப் பிறகு உங்களை நான் ஒன்றும் தொந்தரவு செய்யமாட்டேன்'' என்று அவள் கஷாயம் நிறைந்த தம்ளரை அவர் கரத்தில் வைத்தாள். அடிக்குப் பயந்த குழந்தைபோல் மறுத்துக் கூறமுடியாது அவர் ஒரே வாயாக அதையும் குடித்து முடித்துவிட்டுப் பெருமூச்சுடன் சாய்ந்து கொண்டார். பாத்திரங்களை எடுத்து மரத்தட்டில் அடுக்கி ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு அறை விளக்கை அணைத்து விட்டுக் கதவைச் சாத்தினாள். எதிரேயிருந்த ஜன்னல் படிமீது மருந்து சீசா ஒன்று வைக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்று, அருகில் சென்று அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள்.

''வஜ்ஜிரவேலுவின் வேலை அது. சொன்னால் கேட்கவில்லை. டாக்டர் சுந்தரேசனிடம் சென்று கால் வீக்கத்திற்குத் தேய்க்க ஏதோ ஒரு தைலத்தைவாங்கிக் கொண்டு வந்து என் பிராணனை வாங்கினார். அம்பிப் பயல் ஒரு மாத்திரை கொண்டு வந்து என்னைச் சாப்பிடச் சொல்லி வலுக்கட்டாயம் செய்தான். இப்போ என்னவென்றால் இட்டா வேறு என்னை...'' என்று முடிக்க முடியாது நிறுத்திவிட்டு வரட்சியாகப் புன்முறுவலித்தார்.

''இப்பொழுது நான் வேறு வந்து தொந்தரவு செய்கிறேன் என்றுதானே சொல்ல வந்தீர்கள்? பரவாயில்லை. இந்த மருந்தை நாளைக்கு மூன்று வேளைகள் பூச வேண்டுமென்று மேலே எழுதியிருக்கிறார் வைத்தியர். வஜ்ஜிரவேலு ஒரே ஒரு தடவைக்கு மேல் மருந்தை உபயோகிக்கவில்லை என்பது மீதி உள்ள மருந்தைப் பார்த்தாலே தெரிகிறது!'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''படுக்கப் போகுமுன் கட்டாயம் ஒருமுறை தைலத்தைப் பூசினால் தான் முட்டி வீக்கம் குறையும். என் தாத்தாவுக்குக் கூட இப்படி அடிக்கடி முட்டி வீக்கம் வருவதுண்டு. உங்களைப்போல் அவருக்கும் மருந்துகளில் நம்பிக்கை கிடையாது. நான் வற்புறுத்தாவிடில் தானாக ஒன்றுமே செய்து கொள்ள மாட்டார்'' என்று கலகலப்பாகப் பேசிக் கொண்டு தனது வலது கரத்திலே தைலத்தை ஊற்றி, வீங்கியிருந்த அவரது கால் முட்டிமீது மிகவும் பரிவுடன் பூசினாள்.

சிந்தாமணிக்குச் சட்டென்று பேசவே முடியவில்லை. தாம் பெற்ற மகளினும் பேரன்பு கொண்டு பழைய மனஸ்தாபத்தை மறந்து தனக்கு அவள் பணிவிடை செய்வதைக் காண அவர் மகிழ்ந்து விட்டார். உள்ளம் நெகிழ்ந்து போனார்.

''அம்மா உங்களது தங்கமான மனத்தை அறியாமல் நான் அன்று ஏதோ கடுமையாகப் பேசிவிட்டேன். உங்களுக்கு என்மேல் கோபம் இல்லை என்பதை அறிந்த இந்தக் கணமே என்னை வாட்டிய நோய் பறந்தோடி விட்டது போல, மனமும் உடலும் தெம்பாகி விட்டன அம்மா!'' என்றார் தழுதழுத்த குரலில்.

மஞ்சுளாவின் நெஞ்சை இன்பமும் துன்பமும் கவ்விக் கொண்டன. அவளாலும் சட்டென்று பேச முடியவில்லை. ''கர்வத்தினால் நானும் என்னவோ பேசி விட்டேன் உங்களிடம் மரியாதையில்லாமல். கடந்து போனதை நாம் இருவரும் மறந்துவிடுவோம். அது கிடக்கட்டும். இந்த நிலையில் நீங்கள் ஒரு வாரமாவது படுக்கையில் இருக்க வேண்டும். நீங்கள்



குணமாகும் வரை உங்களை நான் தினமும் வந்து கவனித்துக் கொள்கிறேன். நேரமாகி விட்டது. நான் வரட்டுமா?'' என்று கூறிவிட்டு, போர்வையினால் அவரை நன்கு போர்த்தி விட்டு எழுந்திருந்தாள்.

''பாத்திரங்களை இங்கேயே வைத்துவிட்டுப் போங்கள். வஜ்ஜிரவேலு அவற்றைச் சுத்தப்படுத்தி எடுத்து வருவான். வழியில் கொஞ்சம் இருட்டாக இருக்கும் பார்த்துப் போங்கள். இங்கிருந்த டார்ச்சை அம்பிப் பயல் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்'' என்றார் கவலையுடன்.

''பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விடுவேன். கவலை வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் கிட்டா வந்து விடுவார். நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு, கதவை மெல்லச் சாத்திவிட்டு வெளியே வந்தாள். சிந்தாமணியும் கோபத்தை மறந்துவிட்டார் என்ற உண்மை அவள் உள்ளத்தை அழுத்திவந்த கவலையின் பளுவைக் குறைத்துவிடவே அவள் நிம்மதியாக நடந்தாள்.

இப்பொழுது அவளுக்கு இருள் நிறைந்த தோட்டத்தைக் கண்டு அச்சமாக இருக்கவில்லை. ஏதேதோ சிந்தித்தபடி நிதானமாக நடந்து சென்ற அவள் ஒருகணம் திடுக்கிட்டுப் போய் நின்றுவிட்டாள். காய்ந்த இலைச் சருகுகள் மீது யாரோ நடந்து அவள் பின்னால் விரைந்து வருவதுபோல் ஒரு விசித்திர சப்தம் கேட்கவே அவள் மேனிபயத்தில் பதறிவிட்டது. உடல் வியர்க்க நெஞ்சு பதைக்க மெல்லத் திரும்பிப் பார்த்தாள். இருளிலே அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய். வீண் கலவரம்' எனத் தனக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டாள். 'அடுத்த முறை வந்தால் கட்டாயம் கையில் விளக்கு ஒன்று கொண்டு வரவேண்டும். பூச்சி பொட்டு கிடந்தாலும் கேள்வியில்லை போலிருக்கிறதே!' என எண்ணிக்கொண்டே மேலே நடந்தாள்.

''மஞ்சுளா நில்! உன்னிடம் பேசத்தான் ஓடோடியும் வந்து கொண்டிருக்கிறேன்'' என்று பின்னாலிருந்து வந்த குரல்

அவளை நடுநடுங்கச் செய்துவிட்டது.

''யாரது'' என்று குழறினாள். அச்சத்தில் அவள் உடல் முழுவதும் வெடவெடவென்று ஆடவே, அவளால் நடக்க முடியவில்லை. எந்த நிமிஷமும் வெடித்து விடும் போல் பயத்தினால் இருதயம் வேகமாகத் துடித்தது.

''இவ்வளவு அழகாக நீ பாடக் கூடியவள் என்று நினைக்கவேயில்லை. உன்னை நேரில் கண்டு உடனே பாராட்டாவிடில் எனக்கு இன்று தூக்கமே வராது போல் இருந்தது. அதனால்தான் உன்னைப் பின் தொடர்ந்து இங்கே வந்தேன். பயந்து விட்டாயா மஞ்சுளா?'' என்று குழைவாகக் கேட்ட ஆடவனின் குரல் அவளுக்குப் புதிதாக இருக்கவில்லை.

தோட்டத்தில் அன்று மாலை வலுவில் வந்து பேசி, மனத்தைக் கலவரப்படுத்தியது போதாது போல் கிரிதரன் அவளை இன்று இரவிலும் பின்பற்றி இருளில் வந்து வழி மறிக்கிறான் போலும்! இதனால் ஏற்பட்ட அச்சத்திலிருந்து விடுபட்டு மஞ்சுளா ஆவேச வடிவானாள். ''உங்கள் செய்கைக்கு நீங்கள் வெட்கப்பட வேண்டும். உங்கள் பாராட்டுதல் எனக்கு அவசியமல்ல!'' என்று கூறிவிட்டு, திரும்பிப் பாராமல் வேகமாக முன்னே நடந்தாள்.

''எதற்காக நான் வெட்கப்பட வேண்டும்? மஞ்சுளா, என் உணர்ச்சிகளை அறியாமல் இப்படிப் பேசுகிறாய். உன்னை என்றைய தினம் முதன்முதலாகப் பார்த்தேனோ அன்றிலிருந்து...'' என்று அவன் முடிக்குமுன், ''போதும் எனக்கு! என்னை வீணே கஷ்டப்படுத்துவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் போலும்'' என்று காரமாகக் கூறிவிட்டு விரைந்தாள். அவனும் பின்னால் வேகமாக நடந்துவரும் ஓசை கேட்கவே மறுபடியும் அச்சத்தில் அவள் உள்ளம் படபடக்கத் தொடங்கியது. கால்கள் தள்ளாடின.

''கிரிதரன் இவ்வளவு கயவனா?'' என்று எண்ணி மனம் கசந்துவிட்டது. இன்னும் கொஞ்சம் தூரம். இதற்குப் பிறகு பட்டப்பகல் போன்ற வெளிச்சம் வந்துவிடுமே.

'இருளில் வந்து காதல் நாடகமாட எண்ணத் துணியும்



கோழையுள்ளம் கொண்ட இவர் விளக்கொளிமுன் வரட்டும், சொல்கிறேன்' என்று கறுவிக் கொண்டு அவள் கொஞ்சதூரம் கூடச் செல்லவில்லை.

அவளது மென்மையான கரங்களை இரும்பை நிகர்த்த இருகரங்கள் விரைவாகப் பற்றிக் கொண்டு விட்டன.

''என்னை விடுங்கள்! இதென்ன அக்கிரமம்? யாராவது பார்த்தால் விபரீதமாகி விடுமே!'' என்று கண்ணீர் துளிர்க்க துக்கத்துடன் தன் கரங்களைப் பிடியினின்று இழுத்துக் கொண்டு கெஞ்சினாள்.

''முடியாது! உன்னை விடமாட்டேன். நீ என்னுடையவள். எனக்குச் சொந்தமானவள்!'' என்று தாழ்ந்த குரலில் ஒலித்த அந்தக் குரல் மிகவும் பயங்கரமாக இருந்தது. வேகமாக இழுத்த அந்தக் கரங்கள் அவளைத் தன்னுடன் இறுக்கமாக அணைத்துக் கொள்ள முயற்சித்தன. அருவருப்பும் அவமானமும் தாளமுடியாது துடிதுடித்துப் போன மஞ்சுளாவுக்குச் சட்டென்று அசாதாரணமானதொரு பலம் வந்து விட்டது' ''சீ! நீ ஒரு மனிதனா? என்னை விடாவிட்டால் என்ன செய்வேன் தெரியுமா?'' என்று கிரீச்சிட்டுக் கத்தி விட்டு தனது கரங்களை உதறித் தன்னை நொடியில் விடுவித்துக் கொண்டு விட்டாள். மறுபடி எங்கே தன்னைப் பிடித்துக் கொண்டு இம்சை செய்வானோ என அஞ்சி, தலைதெறிக்க ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினாள். வழியில் மரத்தின் வேர் ஒன்று தடுக்கி கால் கட்டைவிரல் நகம் பெயர்ந்து ரத்தம் பெருகியதைக் கூட அவள் சட்டை செய்யாது விபரீத உணர்ச்சியால் அரண்டு போய் வேகமாகச் சமையற்கட்டிற்குள் ஓடி வந்து நின்றாள்.

''என்னம்மா என்ன! ஏன் இப்படியிருக்கிறீர்கள்!'' என்று பரபரப்புடன் வினவினார் கிட்டா.

அருவருப்புமிக்க அந்தச் சம்பவத்தை அவள் யாரிடமும் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ''ஒன்றுமில்லை. இருளில் மரத்தின் வேரில் தடுக்கி விழுந்து விட்டேன். பயந்து விட்டேன்'' என்று அசட்டுச் சிரிப்புடன் தன் காலைப் பிடித்துக் கொண்டு வேதனையுடன் உட்கார்ந்து விட்டாள்.

''அடாடா! காயம் பட்டு விட்டிருக்கிறதே'' என்று வருந்திய கிட்டா, சுண்ணாம்பு டப்பாவை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்.

காயத்தின் மீது சுண்ணாம்பைப் பூசி ஈரத்துணியில் பலமாக ஒரு கட்டுப் போட்ட பின்னர் கொஞ்சம் வேதனை குறைந்தது. ஆனால் அவள் நெஞ்சை அழுத்திய வேதனையின் கொடுமை மட்டும் குறையவில்லை. கிரிதரன் அவளை என்ன என்று எண்ணி அவ்வாறு நடந்து கொண்டான்?

மெல்ல நொண்டிக் கொண்டு மாடியறைக்கு வந்தாள் மஞ்சுளா. ஹாலைக் கடந்து வராந்தாவிற்கு வந்தவள் மீண்டும் திடுக்கிட்டுப் போய்விட்டாள். அங்கே கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்து கொண்டு நின்ற கிரிதரன் அவளை வைத்த கண் வாங்காது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மஞ்சுளா முகத்தைத் திருப்பிக் கொண்டு கால் நோவைப் பொருட்படுத்தாது விரைந்து சென்று, தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். படீரெனக் கதவைத் தாளிட்டு விட்டுப் படுக்கை மீது வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கற்பைக் காசுக்கு விற்கும் மானமற்ற மங்கை என்று எண்ணித்தானே கிரிதரன் அவளிடம் அவ்வளவு இழிவாக நடந்து கொண்டான்? இது முதல் தடவை அல்ல. முன் ஒரு சமயம் கங்கம்மாள் வீட்டில் மாடிப்படி இடறி விழுந்த போது ஓடிவந்து வலியத் தூக்கி நிறுத்தினானே, அதன் பொருள் இதுவாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட ஓர் எண்ணம் ஏற்பட்ட பின்னர் இந்த இடத்தில் எப்படித்தான் நீடித்து வேலை செய்ய முடியும்...?' இம்மாதிரி எண்ணங்கள் பெரிய உரு எடுத்து அவள் நெஞ்சு வெடிக்க அவமானத்தினால் உடல் துடிக்க, துன்பம் தாளாது விம்மி விம்மி அழுதாள் மஞ்சுளா.



# 44

ஆனந்த நிலையத்தினின்று புறப்பட்ட சௌமினி, காரை மிகவும் விரைவாக நகரின் கடைத்தெரு வழியே செலுத்திக் கொண்டு சென்றாள். வெளியே செல்லும் போதெல்லாம் நிழல்போல் பின் தொடரும் ஜகதீசன் அன்று அவளுடன் வராதிருந்தது அவளுக்கு ஓரளவுக்கு மன நிம்மதியை அளித்தது. என்றாலும், சஞ்சலத்திலே தவித்த அவளது உள்ளம் உலையிலிட்ட கொதி நீரெனத் தத்தளித்துக் கொண்டிருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக அந்த ஊரில் காரும் கையுமாகத் திரிந்து கொண்டிருந்த அவளுக்கு நகரத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் மனப் பாடமாக இருந்தன. எனினும் அன்று அவள் இருந்த மனநிலையில் மிகவும் பழக்கமான தெருக்கள் கூட புதியவை போல் மனத்துள் குழப்பத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தன.

விவரிக்க இயலாத ஒருவித பயங்கர உணர்ச்சியில் உந்தப்பட்டவளாக இருளப்பன் தெரு எங்கே இருக்கிறதெனத் தேடிக் கொண்டு, கடைத் தெருவிலும் பல முக்கிய வீதிகளிலும் பலமுறை, காரில் பவனி வந்து கொண்டிருந்தாள். அப்படியும் இப்படியுமாகத் தானே அலைந்து தேடி, முடிவில் ஒருவாறு இடத்தைக் கண்டு பிடித்து விட்டாள்.

ஊருக்கு முடிவிலிருந்த சிறிய தெருவின் குறுக்கே சென்ற ஒரு சிறுசந்திற்குள் காரை மெல்லத் திருப்பினாள். முடிவின்றி மொட்டையாக நின்றுவிட்ட அந்தக் குறுகிய சந்தில் இரு பக்கத்திலும் தெருச் சாக்கடைகள் நிறைந்த வண்ணம் ஓடிக் கொண்டிருந்தன. சந்திற்குள் நுழைகிறவர்களை திக்கு முக்காடச் செய்யும் அளவிற்கு மிகவும் கடுமையாக வீசிக் கொண்டிருந்தது சாக்கடைகளினின்று எழுந்த துர்நாற்றம்.

அஸ்தமித்துச் சிறிது நேரமே சென்றிருந்த போதிலும் இருளப்பன் தெரு பெயருக்கேற்ப இருள் மயமாகவே

இருந்தது. பற்கள் சில இழந்த கிழவர் வாயைப் போல் இங்குமங்கும் இடிந்து பாழாகிக் கிடந்த வீடுகளின் இடையிடையே இரண்டொரு ஓட்டு வீடுகள் மட்டும் தென்பட்டன. அவைகளின் வாயில் புறத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளுடன் தெருவின் முகப்பிலே எரிந்த முனிசிபாலிடியாரின் மின்சார விளக்கும் அழுது வடிந்து கொண்டிருந்தது! இத்தனை அலங்கோலமாக இருந்த தெருவின் முடிவில் நின்ற பழைய மாடிக்கட்டடத்தின் முன்பாக வண்டியை நிறுத்திவிட்டு, சந்தேகத்துடன் தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தாள் சௌமினி.

'ஹோட்டல் டில்பஹார்' என்ற பெயர் தாங்கிய பலகை காற்றுக்கும் மழைக்கும் சில எழுத்துக்களைப் பலி கொடுத்துவிட்டு, 'இதை ஹோட்டல் என்று சொல்லக்கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது' என்று சொல்வது போல் தொங்கிக் கொண்டிருந்தது. வாசல் அருகே கிடந்த ஒரு குப்பைத் தொட்டியில் எச்சில் இலைகள் நிறைந்து வழிந்து, சுற்றிலும் பரந்து கிடந்தன. அங்கே மொய்த்துக் கொண்டிருந்த கொசுக்களின் ரீங்காரம் காது செவிடாகி விடும்போல் ஒலித்துக் கொண்டிருந்தது. அருகில் வாலைச் சுருட்டிக் கொண்டு அரைக்கண் தூக்கத்திலே மோன நிலையில் கிடந்த ஒரு நாய், கார் வந்த சத்தத்தைக் கேட்டுக் காதை நிமிர்த்திக் கொண்டு தலையைத் தூக்கி எட்டிப் பார்த்து எச்சில் இலைதானோ என ஒரு கணம் ஏமாந்து விட்டது. 'அட சீ! நீயா?' என்கிற பாவனையில் காரிலிருந்து இறங்கிய சௌமினியை விறைத்து நோக்கிவிட்டு, மறுபடியும் அது கண்களை மூடிக் கொண்டு உணவிற்காகத் தவம் செய்யத் தொடங்கியது.

சுற்றுமுற்றும் கவனித்தாள் சௌமினி. இருள் மண்டிக்கிடந்த அந்தச் சந்தில் ஜனப்புழக்கம் அதிகமாக இருக்கவில்லை. தெருவில் சென்ற இரண்டொரு மனிதரும் அவளுக்குத் தெரிந்தவர்களாக இருக்கவில்லை. எனினும், முகத்தின் பெரும் பகுதியை மறைக்க உதவியாக, கையுடன் கொண்டு வந்த கருப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டாள். பையிலிருந்த சைனா பட்டுக் கைக்குட்டையை எடுத்து



மடித்துத் தலைமீது குளிருக்கு 'மப்ளர்' கட்டுவது போல் கட்டிக் கொண்டு காரின் கதவைப் பூட்டினாள். பதைபதைக்கும் நெஞ்சுடன் மெல்ல ஹோட்டலுக்குள் நுழைந்தாள்.

குறுகலாக இருந்த சிறு ரேழியைக் கடந்து மிகவும் விஸ்தாரமாகக் காணப்பட்டதோர் அறைக்குள் நுழைந்தாள். சாப்பிடுகிறவர்களின் கூட்டம் அதிகம் இருக்கவில்லை. அதனால் பெரும்பாலான மேஜைகளும் நாற்காலிகளும் காலியாகக் கிடந்தன. ஜன்னல் ஓரமாகக் கிடந்த இரண்டு மேஜைகளைச் சுற்றி சிலர் உட்கார்ந்திருந்தனர். சாப்பிட்டு வெகு நேரமாகியும் வம்புக் கச்சேரியில் இறங்கி இருந்த அவர்கள் போக மனமின்றி உட்கார்ந்திருந்தனர். காதில் வெள்ளைக்கல் கடுக்கனும், கையில் தங்கக்கடிகாரச் சங்கிலியும் முகத்திலே கட்டு மீசையுமாகத் தென்பட்ட ஆசாமி ஒருத்தர் உள்ளே வந்த சௌமினியைக் கவனித்து விட்டார். மேலும் கீழும் முறைத்துப் பார்த்துவிட்டு, தன் சிநேகிதர்கள் பக்கம் திரும்பி, அடிக்குரலில் அவர் ஏதோ சொன்னார். கட்டிடமே இடிந்து விழும்போல் சிரித்த அவரது நண்பர்கள் அவளைத் தின்றுவிடுகிறவர்கள் போல் ஏககாலத்தில் தங்கள் திருஷ்டியை அவள் பக்கம் திருப்பினர்.

அவமானத்தினால் உடல் குன்றிப்போன சௌமினி, இதைக்கண்டும் காணாதவள் போல் அறையின் மறுகோடியில் பெட்டியருகில் அமர்ந்திருந்த முதலாளியின் பக்கம் விரைந்தாள். கைப்பையைத் திறந்து, முன்னதாகவே பெயரையும் முகவரியையும் எழுதி வைத்திருந்த ஒரு காகிதத் துண்டை அவர் முன்னால் போட்டாள். சினிமா பத்திரிகை ஒன்றில் மிகவும் மும்முரமாக கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த முதலாளி, திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். இது மாதிரியான கறுப்புக் கண்ணாடிக் கட்டழகிகள் தனிக் கட்டையான ஆண் அழகர்களைத் தேடிக்கொண்டு அங்கே வருவது சகஜமானதொரு சம்பவமாதலால், அவருக்கு அவளைக் கண்டு வியப்பு ஏற்படவில்லை. காகிதத் துண்டை எடுத்துப் படித்துவிட்டு, மேஜைமேலிருந்த மணியை

அடித்தார். 'பையா முப்பதாம் நம்பர் அறைக்கு அழைத்துப் போ இவர்களை!' என்று உத்தரவிட்டு விட்டு, மறுபடியும் சினிமா பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டார்.

சரியாகப் பெருக்கிச் சுத்தம் செய்யாது தூசியும் தும்புமாக இருந்த மாடிப்படிகளைக் கடந்து பையனைப் பின் தொடர்ந்து மேலே சென்றாள் சௌமினி. மிகவும் குறுகலான வராந்தாவையொட்டி அமைந்திருந்த பல அறைகளை விரைவில் தாண்டி, முப்பதாம் நம்பர் அறைவாசல் முன்னால் வந்து நின்ற பையன், ''இதுதான் அம்மா!'' என்று கூறிவிட்டு வேகமாகப் பின் வழியே சென்று மறைந்து விட்டான்.

இரண்டொரு அறைகளைத் தவிர மற்ற அறைகள் யாவும் பூட்டப்பட்டுக் கிடந்தன. வராந்தாவில் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கின் வெளிச்சம் மிகவும் மங்கலாக இருந்த போதிலும், சுண்ணாம்பு பூசிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை அழுக்கு மண்டிக்கிடந்த சுவர்கள் அறிவுறுத்தின. காலையிலிருந்து கவனித்துப் பெருக்காது பையன் அசட்டையாக இருந்ததனால் காகிதத் துண்டுகளும் வாழைப் பழத்தோல்களும் தரைமீது சுவர் ஓரமாகக் குவிந்து கிடந்தன. இவற்றையெல்லாம் கவனித்துவிட்ட சௌமினி அருவருப்புடன் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள்.

பையன் குறிப்பிட்ட அறையின் முன்னால் வந்து மெல்லக் கதவை விரல்களால் தட்டினாள். ஹோட்டலின் தோற்றமும், சூழ்நிலையும் அவளுக்கு ஒருவித அச்சத்தை உண்டாக்கவே, குழப்பத்துடன் சுற்றுமுற்றும் சந்தேகமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் ஹிருதயம் பயத்திலே வேகமாக அடித்துக் கொண்டது.

கதவைத் திறந்து கொண்டு கம்பீரமாக வெளியே வந்து நின்றான் சுவாமிநாதன். அவனுடன் போட்டியிடுவது போல் சிகரெட்டின் புகை குப்பென்று அவனுக்கு முன்னால் வந்து வெளியே நின்றது. ''கட்டாயம் சொன்ன நேரத்திற்கு வந்து விடுவீர்களென்று எனக்குத் தெரியும். வாருங்கள் உள்ளே. இங்கே யாருமில்லை. பக்கத்து அறைகளில் எல்லாம் காலி.



மேல் மாடியில் மட்டும் இரண்டு அறைகளில் யாரோ இரு தம்பதிகள் தங்கியிருக்கிறார்கள். தற்சமயம் அவர்கள் சினிமாப் பார்க்கப் போயிருக்கிறார்கள். அதனால் தாராளமாக மனம்விட்டுப் பேசலாம்'' என்றான்.

அவனது கிராப்பையும், பட்டு ஜிப்பாவையும் ஓரக்கண்ணால் ஆராய்ந்து விட்டு ஆத்திரத்துடன் அவனைத் தொடர்ந்து அறைக்குள் சென்றாள். குப்பென்று சிகரெட்டின் நாற்றம் முகத்தில் வீசவே முகத்தைச் சுளித்தாள் சௌமினி அருவருப்புடன்.

''உங்களுக்குச் சிகரெட்டின் மணம் ஒத்துக் கொள்ளாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு என்னவோ இந்த அரிய மருந்து இல்லாவிடில் சிந்தனை ஓட மறுக்கிறது. அதுவும் தற்சமயம் சங்கிலி போல் தொடர்ந்து புகைக்கும் ஒரு துர்வழக்கம் என்னைத் தொற்றிக் கொண்டிருக்கிறது. மன்னிக்கவும்'' என்று அழுத்தலாகக் கூறினான். தனக்குள் பொங்கிப் புறப்பட்ட சினத்தை அடக்கிக் கொண்டு சௌமினி வரட்சியாகப் புன்முறுவலித்தாள்.

''ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே'' என்பது உன் தொழிலாயிற்றே! வாங்கிக் கொடுப்பவர்கள் இருந்தால் நீ சங்கிலி போலும் புகைப்பாய், சரடு போலும் திரிப்பாய் கதைகளை'' என்று ஏளனமாகச் சொல்லிவிட்டு, பிரம்பு நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

''உங்கள் தோற்றந்தான் 'அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை' என்பது போல் சாகா இளமையுடன் இருக்கிறீர்களே என்று பிரமித்துப் போனேன். உங்கள் குணமும் அப்படியே சற்றும் மாறாது இருக்கின்றதே, அதே கோபம், அதே ஆர்ப்பாட்டம்! அடடா! என்ன விந்தை!'' என்று பரிகாசமாகப் பேசிவிட்டுச் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு எதிரேஓர் ஆசனத்தில் இறுமாப்பாக வந்து உட்கார்ந்து கொண்டான்.

''உன் பூர்வ பீடிகைகள், பரிகாசங்கள் இவைகள் எல்லாம் போதும், நிறுத்திக் கொள். என்னை இங்கே வரவழைத்த நோக்கம் என்ன? 'உதவி! உதவி!' என்று ஒவ்வொரு

காகிதத்திலும் எழுதி என்னைத் தொந்தரவு செய்தாயே, என்ன அது என விரைவில் சொல்லித் தொலை! இங்கே அதிக நேரம் தங்கி உன்னிடம் வார்த்தையாடிக் கொண்டிருக்க எனக்குப் பொழுது இல்லை. மேலும் இது மாதிரியான இடங்களுக்கு விஜயம் செய்வது எங்கள் கௌரவத்திற்குப் பொருத்தமற்ற காரியம்'' என்றாள் கோபத்துடன் அதட்டலாக.

## 45

சௌமினி அவ்வாறு பேசவே பதிலுக்கு சுவாமிநாதன் அசட்டையாக நகைத்தான். ''உங்களுடைய அந்தஸ்திற்கு இந்த மாதிரி இடங்களில் காலை வைப்பது கூடத் தகாத செயலாகும். அதை அறிவேன். ஆனால் வரவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததனால் வந்தீர்கள் இல்லையா? உங்களிடம் முந்தாநாள் 'போனில்' பேசிய பொழுது நான் இந்த நகரத்தில் மிகப் பிரபலமாக விளங்கும் பெரிய ஹோட்டலில்தான் தங்கியிருந்தேன்.

''அவ்வளவு பிரபலமான இடங்களுக்குத் தாங்கள் வரமாட்டீர்கள். எனவே என்னை வந்து பார்க்க மறுத்து விட்டீர்கள். நானே உங்கள் வீட்டிற்கு ஓடோடியும் வருகிறேன் என்றேன். 'ஏழை உறவினன்' என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக இருந்ததனாலோ என்னவோ 'வேண்டாம். நானே உன்னை வந்து கண்டு கொள்கிறேன்' என்ற மறுபடியும் மறுத்து விட்டீர்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமான இடம், உங்களைப் போன்ற பெரிய மனிதர்களின் நிழல்கூடப் படாத பிரதேசம். உங்களையும் என்னையும் அறிந்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று எண்ணி இதைத் தேர்ந்து எடுத்து இங்கு வந்து தங்கி, உங்களுக்கு தகவல் அனுப்பினேன். வருவதாக ஒப்புக் கொண்டீர்கள். வந்தீர்கள். அதிக நேரம் தங்களைத் தங்கவைத்துத் தங்களது பொன்னான பொழுதைப் புழுதியில் இறைக்க மாட்டேன். வந்த விஷயத்தைச் சுருக்கமாக முடித்துக்



கொண்டு விரைவாகப் புறப்படும் சக்தி தங்கள் கையில்தான் இருக்கிறது'' என்றான் பகட்டாக.

துடுக்கான அவன் பேச்சும், பரிகாசம் மிகுந்த நகைப்பும் சௌமினியின் கோபத்தை மேலும் தூண்டி விட்டன. ''உனக்கும் உன் உறவிற்கும் நான் முழுக்குப் போட்டு எத்தனையோ ஆண்டுகள் சென்று விட்டன. எங்கிருந்தோ வந்து ஏன் இப்பொழுது சொந்தம் கொண்டாடுகிறாய்? என் கணவர் மெத்தக் கோபக்காரர். எனது ஏழை உறவினர்களது சகவாசம் சற்றும் அவருக்குப் பிடிக்காது'' என்றாள் ஆத்திரத்துடன்.

''எத்தனை முழுக்குப் போட்டாலும் ரத்தபாசம் விட்டுவிடுமா? உங்கள் அன்பிற்குகந்த மாமன் சேய் நான் என்ற உறவுதான் மறைந்து விடுமா? எனது அத்தை பெற்ற ரத்தினம் நீங்கள் என்பது உண்மைதான். அது பொய்யாகி விடுமா? ஏழை என்று உங்கள் வீட்டிற்குள் வந்தால்தானே என்னை உங்கள் கணவர் புறக்கணிப்பார்? சரி சமமான அந்தஸ்துடன் வந்தால் இரு கரங்களையும் நீட்டி வாரி அணைத்து வரவேற்க மாட்டாரா? இத்தனை காலம் எங்கே தொலைந்து விட்டிருந்தேன் என்றுதானே கேட்கிறீர்கள்? எட்டு வருஷம் சிறையில் கிடந்தேன். விடுதலை பெற்ற பின்னர் மலேயா சர்க்கார் என்னைத் தாய்நாட்டுக்குத் திரும்பி விடும்படி உத்தரவிட்டு விட்டனர். தாய்நாடு வந்த புதிதில் கொஞ்ச காலம் வேலையின்றித் திண்டாடினேன். நமது சொந்தக் கிராமத்திற்கு உங்களைத் தேடிக்கொண்டு சென்றேன். ஒரு விவரமும் உங்களைப் பற்றிக் கிடைக்கவில்லை.

''பற்பல விதமான தொழில்களில் ஈடுபட்டு அப்படியும் இப்படியுமாக ஏழு வருஷங்களை ஓட விட்டேன். ஆனால் என்னவோ எனக்கு மட்டும் எப்பொழுதும் ஒரு நம்பிக்கை இருந்தது. என்றாவது ஒருநாள் உங்களைக் கட்டாயம் எங்கேயாவது சந்தித்து விடுவேன் என்ற தீவிரமான எண்ணம் என் மனத்தை விட்டு ஒரு பொழுதும் அகலவேயில்லை. அந்தப் பாக்கியம் அன்றைய தினம் பெங்களூரில் ஹோட்டலில் கிட்டியது. அருகில் வந்து விசாரித்துச் சொந்தம் கொண்டாடு முன் நீங்கள் மின்னலாக மறைந்து விட்டீர்கள். ஆனால்

முயற்சியைக் கைவிடாது உங்கள் விலாசத்தைத் தேடிக் கண்டுபிடித்து உங்களைச் சந்திக்க இந்த ஊருக்கே வந்து விட்டேன்'' என்று கூறிவிட்டு நிறுத்தினான்.

''போதும் பிரசங்கம்! கேட்ட கேள்விகளுக்கு நேரிடையாகச் சட்டென்று பதில் சொல். உதவி உதவி என்று புலம்பினாயே! அது என்ன என்று சொல்லித் தொலை!'' எனச் சர்ப்பமாகச் சீறினாள் கோபத்துடன்.

''ஒன்றுமில்லை அத்தங்கா! கண்டவனிடம் கைகட்டிப் பிழைக்கும் தொழில் எனக்கு அலுத்து விட்டது. நானே சொந்தமாக ஏதாவது வியாபாரம் செய்யலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அதற்குக் கொஞ்சம் முதல் தேவையாக உள்ளது. அவசரமாக ஒரு பத்தாயிரம் ரூபாய் எனக்குத் தாங்கள் கொடுத்து உதவினால் மிகவும் உபகாரமாக இருக்கும் என்றுதான் உங்களை நான் நாடினேன். அடிக்கடி பணங் கேட்டு உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன் என்று முதலிலேயே உறுதி கூறிவிடுகிறேன்!'' என்றான் அலட்சியமாக.

சௌமினி கிளுகிளுவென்று ஏளனமாக நகைத்தாள். ''புத்திசாலிதான் போ! உதவி கொஞ்சமாகத்தான் இருக்கிறது! பணக்காரர்கள் வீட்டு மரங்களில் பணம் காய்க்கிறது என்று நினைக்கும் மடையர்களில் நீயும் ஒருத்தன் போலிருக்கிறது! ஐந்தோ பத்தோ என்றால் உடனே கொடுத்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். உனக்கு இவ்வளவு பெரிய தொகையை நான் எதற்காக, எப்படிக் கொடுத்து உதவ முடியும்? யோசித்தாயா? முட்டாள்?'' என்று துச்சமாகக் கூறிவிட்டு எழுந்திருந்தாள்.

''நான் அத்தனை முட்டாள் அல்ல அத்தங்கா! இந்த சுவாமிநாதன் அடிநாளில் நீங்கள் கண்ட அசட்டு அம்மாஞ்சியல்ல இப்பொழுது! அனுபவம் என்ற பள்ளியில் அநேக பரீட்சைகளில் தேறிப் பழுத்த அறிஞனாக மாறி விட்டிருக்கிறேன் என்பதை விரைவில் உணர்வீர்கள். என்னத்திற்காக இவ்வளவு பெரிய தொகை என்றா கேட்கிறீர்கள்; பதில் சொல்கிறேன்'' என்றான் மிடுக்காக.



அறையின் ஒரு மூலையில் சுவர் ஓரமாக வைக்கப்பட்டிருந்த தனது தகரப்பெட்டியை அனுதி அதைத்திறந்து, வட்டவடிவமாக இருந்த அரக்குப் பேழை ஒன்றைக் கையில் எடுத்தான். அதைத் திறந்து ஒரு பெரும் காகிதக் கட்டை வெளியில் எடுத்தான். ''சிறு பிராயத்திலே என்னிடம் ஒரு துர்க்குணம் உண்டு என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சினிமா நட்சத்திரங்களின் படங்கள், பத்திரிகையில் கண்ட அதிசய சம்பவங்கள் இவற்றைக் கத்திரித்துக் காகிதத் துண்டுகளைப் பத்திரமாகச் சேர்த்துக் கட்டி வைக்கும் ஓர் அசட்டு வழக்கம் எனக்கும் உண்டல்லவா; ஆனால் அதன் விளைவு எனக்குப் பெரும் பலன்தரும் காரியமாக மாறி விட்டிருக்கிறது என்றால் அதிசயிப்பீர்கள்!

''இவற்றில் சிலவற்றை உற்றுக் கவனித்தால் உங்களுக்குப் பழைய ஞாபகங்கள் ஏற்படக்கூடும். இவற்றைக் காண உங்கள் கணவர் அவ்வளவாக விரும்பமாட்டார் என்பது நிச்சயம். அவரிடம் நான் இவற்றைக் கொண்டு காட்டுவதைத் தாங்களும் கட்டாயம் ரசிக்க மாட்டீர்கள் என்பது திண்ணம்'' என்று அட்டகாசமாகக் கூறிவிட்டுக் காகிதக் கட்டிலிருந்து சில பழைய பத்திரிகைத் துண்டுகளை எடுத்து மேஜைமீது போட்டான்.

நெருப்பை மிதித்தவள் போல் துணுக்குற்றுப் போனாள் சௌமினி. முத்துக்கள் என வியர்வை துளிர்த்து அவள் மேனி முழுவதும் வழிந்தோடியது. நெஞ்சு வெடித்து விடும்போல் அச்சத்தில் துடித்தது. ''இவற்றைக் காட்டி என்னைப் பயமுறுத்துகிறாய்? இல்லையா? அவ்வளவு தானே!'' என்றாள் சீற்றத்துடன்.

''பழைய குப்பைகளைக் கிளற வேண்டும் என்ற ஆசை எனக்கு ஒரு பொழுதும் கிடையாது. உண்மையைச் சொல்லப் போனால், பழையவற்றை மறந்து உங்களைப் போல் நானும் உல்லாசமாக நிம்மதியாக வாழ விரும்புகிறேன். அதற்குப் பணம் மிகவும் தேவை. பணத்தில் புரளும் உங்களை நாடாது வேறு யாரிடம் நான் போய் யாசிக்க முடியும்! இஷ்டமிருந்தால் கொடுங்கள், இல்லா விட்டால் உங்கள் கணவரைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்றான் மிரட்டும் குரலில்.

சௌமினி பதை பதைத்துப் போய் விட்டாள். துக்கம் நெஞ்சை அடைத்தது. பல்பல விதமான பயங்கரக் கற்பனைகள் அவள் கண்முன் நீண்டு எழவே, ''அவ்வளவு பெரிய தொகை என்னிடம் தற்சமயம் கிடையாது. வேண்டுமானால் இரண்டாயிரம் கொடுக்கிறேன். அதற்குப் பதில் இந்தக் காகிதக் கட்டுகளை நீ என்னிடம் ஒப்புவித்து விடு. பணத்தை எடுத்துக் கொண்டு எங்கேயாவது ஒழிந்து போ!'' என்று பேரம் பேசினாள்.

சுவாமிநாதன் கேலியாகச் சிரித்தான் பதிலுக்கு. ''அத்தனை அசடானவன் அல்ல நான். பத்தாயிரம் கொடுத்தால் ஒரு பாதியைக் கொடுப்பேன். இன்னொரு பாதிக்கு இன்னொரு பத்தாயிரம் தேவை. ஆனால் சத்தியமாகச் சொல்கிறேன். பணம் கைக்கு வந்ததும் இந்த ஊரின் பக்கமே தலைகாட்ட மாட்டேன் நிச்சயம்!'' என்றான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒருகணம் தயங்கினாள் சௌமினி. ''இரண்டு நாட்களுக்குப் பிறகு சந்திக்கலாம். இதே இடத்தில் இதே நேரத்தில்'' என்று கூறிவிட்டு அவன் முகத்தைப் பார்க்கவும் பிடிக்காது விர் என்று வெளியே வந்தாள். பயம், அவமானம் என்ற இரு உணர்ச்சிகளும் உந்தவே, மனம் கலங்கி மெய் சோர்ந்து நடைப் பிணமாக அவள் மாடிப் படிகளைக் கடந்து கீழே வந்தாள். காரில் வந்து உட்கார்ந்து கொண்டு யந்திரம் போல் சாவியைத் திருப்பினாள். பொலபொல வென்று கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் அவளது அழகிய கன்னங்களை நெருப்பாகச் சுட்டன.

இதற்குப் பின்னர் இரண்டு தினங்கள் சௌமினிக்கு மிகவும் நிம்மதியற்ற நாட்களாகக் கழிந்தன. நோயாளியாக ஓய்வாக இருந்த நாராயணனிடம் பணத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுக்க முடியவில்லை. சுவாமிநாதனுக்குக் கொடுத்த வாக்கைத் தவறவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. பீரோவைத் திறந்து துழாவினாள் ஆத்திரத்துடன். கைச் செலவிற்கு உதவும் என்று புடவைகள் இடையே அவ்வப்போது மறைத்து வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை எல்லாம் எடுத்துக் குவித்துப் பார்த்தாள்.



இரண்டாயிரத்துக்கு மேல் கையில் பணம் தேறவில்லை. என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்த போது, சட்டென்று ஓர் எண்ணம் அவள் மூளையில் மின்னலிட்டு ஓடியது. அவசரமாக உடுத்திக் கொண்டு நேரே தங்கமணியின் வீட்டிற்கு ஓடி வந்தாள்.

சுற்றி வளைத்துப் பல விஷயங்களைப் பேசிவிட்டு, மெல்ல தான்வந்த காரியத்தைச் சொன்னாள். ''இளையவன் ஜாதகத்துடன் மைனா ஜாதகம் ரொம்பவும் பொருந்தியிருக்கிறது. மைனாவை நாளைக்கு நம் வீட்டிற்கு அனுப்பி வையுங்கள். என்னோடு ஒருநாள் குழந்தை குஷியாக இருக்கட்டும். ஜாடையாக ஜெகதீசன் அவளைப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன். மைனாவுக்கும் அவனைப் பிடித்திருந்தால் விரைவில் முகூர்த்த தேதியை வைத்து விடலாம் என்று உத்தேசம். முதலில் மனப்பொருத்தம் ஏற்பட வேண்டும். அதனால்தான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன். இந்தக் காலத்துக் குழந்தைகள் வேறு மாதிரியானவர்கள், இல்லையா?

''நமக்குப் பிடித்தால் மட்டும் போதாது. இதைச் சொல்லிவிட்டு அப்படியே உங்களிடம் கொஞ்சம் பணம் அவசரமாக, கைமாற்றாக வாங்கிக் கொண்டு செல்லலாம் என வந்தேன்'' என்றாள்.

சௌமினி சொன்ன தொகையைக் கேட்டதும் தங்கமணியம்மாள் கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போனாள். ஆனால் அவள் கவலை விரைவில் மறைந்து விட்டது. கணவர் பட்டு வியாபாரம் ஒருபுறம் செய்து கொண்டிருக்கையில் இந்த அம்மாள், கையில் கிடைக்கும் பணத்தை வட்டிக்கு விட்டு லேவாதேவி செய்து கொண்டிருந்தாள். 'கடனாகத்தானே கேட்கிறாள், கொடுத்தால் போகிறது. கடனைக் கொடுத்து ஆளைக் கையில் போட்டுக் கொண்டால் காரியம் விரைவில் சித்தியாகும்?' என்ற ஓர் எண்ணம் ஏற்படவே, முகமலர்ச்சியுடன், ''இவ்வளவுதானே! உங்களுக்கு இல்லையென்றா சொல்வேன்'' என்று எழுந்து மாடிப்பக்கம் சென்றாள். அரைமணி நேரம் கழித்துப் பணத்துடன் வந்த

தங்கமணி மேஜை மீது நோட்டுக்கத்தைகளைப் போட்டுவிட்டு, ''என்னதான் சிநேகிதம் என்றாலும் பணம் பாஷாணமாதலால் அதில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பது எனது கொள்கை. இந்தக் கடன் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு நமக்குள் மனஸ்தாபம் கூடாது. சாட்சிக்கு எங்கள் சமையல்காரரைக் கூப்பிடுகிறேன், கையெழுத்துப் போடுவார்'' என்றான்.

சௌமினிக்கு இதைக் கேட்க மிக்க அவமானமாகத்தான் இருந்தது. எனினும் வேறு வழியிருக்க வில்லை. பேசாமல் அவன் நீட்டிய பத்திரத்திலே கையெழுத்துப் போட்டுவிட்டு, பணத்தை எண்ணிப் பையில் திணித்துக் கொண்டு புறப்பட்டாள்.

'ஹோட்டல் டில்பஹா'ரில் அவள் அதிகநேரம் தங்கவில்லை. பத்தாயிரத்தை எண்ணி மேஜைமீது வீசிவிட்டு, சுவாமிநாதன் தயாராகக் கட்டி வைத்திருந்த காகிதத் துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு நிம்மதியாக ஒரு மூச்சுவிட்டபடி திரும்பினாள். எதிர்ப்புறமிருந்த ஓட்டு வீட்டு வாசல் திண்ணையருகே நின்று கொண்டிருந்த வழுக்கைத் தலை ஆசாமி ஒருவர் தன்னையே விறைத்து நோக்குவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். அவரை இதற்கு முன் எங்கேயோ பார்த்த ஞாபகம்! எங்கே என்ற நினைவுதான் இல்லை. அதிகம் தாமதிக்க விரும்பாது காரை வேகமாகச் செலுத்திக் கொண்டு புறப்பட்டாள். காரணமற்றதொரு பயத்தில் ஏனோ அவள் கைகள் நடுங்கின. உள்ளம் மீண்டும் கலங்கியது.



# 46

இரண்டு நாட்களாக விடாது கொட்டிய மழை ஓய்வெடுத்துக் கொண்டதனால் அன்று காலை கதிரவன் பளிச்சென்று கீழ் வானத்தினின்று புறப்பட்டிருந்தான். பச்சைப் பசேலென்ற தோட்டத்து நீண்ட புல்தரையும், பூத்துக் குலுங்கிய மல்லிகைக் கொடி வீடுகளும் அன்று காலை நேரத்தில், பார்க்க மிகவும் அற்புதமாகத்தான் இருந்தன. சாதாரண நாட்களாக இருப்பின் ரோஜா இலைகள் மீது படிந்து உதிருவதற்கு மனமின்றி ஒட்டிக் கொண்டிருந்த மழைத் துளிகள் இளஞ்சூரிய வெளிச்சத்தில் வைர மணிகள் போல் மின்னும் அழகைக் கண்டு மகிழ்ந்து போயிருப்பாள் மஞ்சுளா. நேரம் போவது தெரியாது தோட்டத்திலே உல்லாசமாக வளைய வந்து கொண்டிருப்பாள். ஆனால் இப்போது அவளது உள்ளம் வெகுவாக நொந்து விட்டிருந்தது. சஞ்சலத்திலே தவித்துக் கொண்டிருந்த அவளது கண்கள் அன்று காலை இயற்கையினால் வசீகரிக்கப்பட மறுத்து விட்டன. அவசரமாகச் சில புஷ்பங்களைக் கொய்து கூடையில் நிரப்பிக் கொண்டு, வேலையாட்கள் இருக்கும் விடுதிப் பக்கம் விரைவாக நடந்து சென்றாள்.

நான்கு நாட்கள் ஜுரமாகப் படுத்துவிட்டிருந்த சிந்தாமணி, அன்றுதான் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டுச் சுத்தமாக உடுத்திக் கொண்டு வேலைக்குக் கிளம்பத் தயாராக இருந்தார். வேலைகள் நடுவே அவரையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ள வேண்டியது தன் கடமை என்று நினைத்த அம்பிப்பயல், எல்லோருக்கும் முன்னதாக சூடான மசாலா தோசையையும் காப்பியையும், கொண்டு வந்து பரிமாறி உபசரித்து விட்டுப் போயிருந்தான். ஸ்நானம் ஆகாரம் இரண்டும் முடிந்ததும் சில தினங்களாகக் கண்களால் கூடப் பார்க்காத தமது வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வராந்தாவிற்கு வந்து தரையில் துண்டை விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். பச்சைக்

குழந்தை பிஞ்சு விரல்களால் வருடுவது போல் காலைக் கதிரவனின் பொன் ஒளி அவரது பலவீனமான உடல் மீது பட்டு இன்பமூட்டிக் கொண்டிருந்தது. முதல்நாள் இரவு கிட்டா வைத்துவிட்டுப் போயிருந்த ஒரு கவுளி வெற்றிலையை எடுத்து வைத்துக் கொண்டு, ஆசைதீர அரைக்கத் தொடங்கினார்.

''எனக்கு முன்னதாகவே எழுந்து விட்டிருக்கிறீர்களே?'' என்று வியப்புடன் வினவிய வண்ணம் மஞ்சுளா அங்கே வந்தாள்.

சுவாதீனமாகத் தரையில் அவர் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள். சிந்தாமணி எழுந்து குழாயடிக்குச் சென்று வாயில் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை உமிழ்ந்து விட்டு, வாயைக் கழுவிக் கொண்டு வந்தார். ''இன்றைக்குக் கொஞ்ச நேரமாவது காரை எடுப்பது என்று முடிவு செய்துவிட்டேன். வேலை செய்து பழக்கப்பட்ட கட்டை இது. படுக்கையிலே கிடப்பது என்றால் கட்டிப்போட்டது போல் மிகவும் கஷ்டமாக இருக்கிறது'' என்றார் சிரித்துக் கொண்டே.

தினமும் ஒரு முறையேனும் வந்து மிகவும் பரிவுடன் கவனித்து உணவு கொடுத்து உபசரித்து மருந்துகள் கொடுத்துப் பணிவிடை புரிந்த மஞ்சுளா மீது அவரது அன்பு முன்னைவிடப் பன்மடங்கு பெருகி விட்டிருந்தது. வழக்கமான பிரகாசம் இன்றி அவள் முகம் சாம்பி, கண்கள் சிவந்து காணப்படுவதைக் கவனித்த சிந்தாமணி திடுக்கிட்டுப் போய் விட்டார். ''என்னம்மா நடந்தது? எப்படியோ இருக்கிறீர்களே?'' என்று பதட்டமாகக் கேட்டுவிட்டு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். ஏதோ சொல்லத் தயங்குகிறவள் போல் பூக்கூடையிலிருந்து கொத்து மல்லிகைப் புஷ்பங்களைத் தன் கையில் எடுத்து, இதழ்களைப் பிய்த்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டிருந்தாள் மஞ்சுளா. துக்கத்திலே அவள் நெஞ்சு விரிந்து விடும்போல் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

''என்னம்மா நடந்தது? கூச்சப்படாமல் பயப்படாமல் என்னிடம் சொல்லுங்கள். தவிர்க்கக்கூடிய காரியமானால் என்னால் ஆனவரை ஒரு கை பார்த்து விடுகிறேன்'' என்று



மீண்டும் வற்புறுத்தினார், வாஞ்சையினால் துடித்த அந்தக் கிழவர். மஞ்சுளா நிமிர்ந்து பார்த்தாள். கண்களின் கோடியில் துளிர்த்த கண்ணீரைச் சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டு மெல்லப் புன்முறுவலித்தாள். ''நான் இந்த வேலையை விட்டு ஊருக்குப் போகத் தீர்மானித்து விட்டேன். இன்று சாயங்காலம் இருட்டும் முன்பு கிளம்பிவிட வேண்டும் என்றும் முடிவு செய்து விட்டேன்'' என்றாள் வருத்தம் நிறைந்த மெல்லிய குரலில்.

சிந்தாமணிக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது. ''ஏனம்மா? என்னதான் அப்படி நடந்தது? புதிர்போடுவது போல் பேசுவதை விட்டு விஷயத்தை முதலில் தெளிவாகச் சொல்லுங்கள்'' என்று மிகவும் கெஞ்சிக் கேட்டார்.

நினைக்கவும் வெட்கமுறச் செய்யும் அந்த அவமானகரமான சம்பவத்தை அவள் யாரிடமும் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. கேட்பவரின் மனத்தில் வேறு ஒரு கேள்வியும் எழக்கூடும். 'அவ்வளவு தைரியமாகக் கிரிதரன் அவளை இருளில் வந்து மடக்கி ஆலிங்கனம் செய்து கொள்ள முற்பட்டானாகில், அதற்குக் காரணம் இருக்க வேண்டும். மஞ்சுளா அவனுக்கு இடம் கொடுத்திருக்கிறாள். இல்லாவிடில் மதிப்புக்குரிய வீட்டின் வருங்கால எஜமானனான அவன் வேலைக்காரப் பெண் ஒருத்தியுடன் சல்லாபம் புரியத் துணிவானா? நினைப்பானா?'' என்று இவ்வாறு ஒரு கேள்வி சிந்தாமணியின் உள்ளத்தில் எழுந்தால்?

குறை சொல்லப் புகுந்தால் கேட்பவர்கள் இரண்டு பக்கத்திலிருந்தும் கேட்டுத் தெளிந்து உண்மையை அறிய விரும்புவது இயற்கையே! ஏழை சொல் அம்பலம் ஏறாது. எனவே இந்த அவமானகரமான விஷயத்தை யாரிடமும் சொல்வதில் பயன் இல்லை என்று முன்னதாகவே தீர்மானித்து விட்டிருந்தாள். எனவே அவள், ''ஒன்றுமில்லை. என்னுடைய வேலையோ போக்கோ ஒன்றும் எஜமானியம்மாளுக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். சிகிச்சை முறைகளில் பயிற்சியற்ற பணிப்பெண் என்று என்னை அவர்கள் துச்சமாகக் கருதுகிறார்கள். எத்தனை பொறுமையாக

இருந்தாலும் என்னால் நீண்ட காலம் கடுஞ்சொற்களை கேட்டுக் கொண்டு வாழமுடியாது போல் இருக்கிறது. ஏழைகள் என்றால் மானம் மரியாதை எல்லாவற்றையும் விற்றவர்கள் என்ற பொருளா? சிந்தா! நீங்களே சொல்லுங்கள்'' என்றாள் கொஞ்சம் கோபத்துடன் படபடவென்று.

அதைக்கூறி முடிக்குமுன் தன் கற்பைப் பற்றித் துச்சமாக எண்ணிய கிரிதரன் மீது அவளுக்குக் கட்டுக்கடங்காத கோபம் மீறிக் கொண்டு புறப்பட்டது. தன் தூய அன்பு முழுவதையும் காலடியில் காணிக்கையாக வைத்து உலகத்தின் உயரத்திலே வைத்துக் கடவுள் போல் பூஜிக்கத் தயாராக இருந்த தன்னை அவன் எவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டான்!

இதை எண்ணிய மாத்திரம் அவளது கண்களினின்று கண்ணீர் ஆறாகப் பெருகிக் கன்னங்களில் வழிந்தோடியது.

''கடவுள் என்னை எதற்காகத்தான் ஏழையாகப் பிறப்பித்தாரோ தெரியவில்லை. ஒரு இடத்திலும் எனக்கு அமைதியில்லை. மாட மாளிகையில் வாழ வேண்டும், பட்டுப்பட்டாடைகள் புனைந்து கொள்ள வேண்டும். பணத்திலே புரள வேண்டும் என்று நான் வேண்டவில்லை. வயிற்றுப்பசி தெரியாது இருக்க ஒரு பிடி சோறும், மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு முழம் கந்தையுந்தான் நான் உலகிலே யாசிக்கும் பொருள்கள். இவைகளை நான் யாரிடமும் பிச்சையாகக் கேட்கவில்லை. படித்தவள் என்ற கர்வத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, உடலை வருத்தி நெற்றி வியர்வை நிலத்தில் விழ உண்மையாக உழைக்க நான் முற்பட்டு வந்தேன்.

''எந்த விதமான தொழிலிலும் கேவலம் இல்லை என்ற வேதாந்தத்துடன் என்னால் முடிந்தவரை உண்மையாக இவர்கள் கொடுக்கும் கூலிக்கு உழைத்தேன். அப்படியிருந்தும் என்னுடைய வாழ்வுப் பாதையில் ஏன் இத்தனை இடர்கள்? என் விதி என்னை எங்கும் நிம்மதியாக இருக்க விடமாட்டேன் என்கிறதே!'' என்று உள்ளத்தில் குமுறிய துக்கத்தை வார்த்தைகளாகக் கொட்டிவிட்டு, முகத்தை மூடிக் கொண்டு விம்மி அழத் தொடங்கி விட்டாள் மஞ்சுளா.



அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அவள் உள்ளம் மிகவும் துன்பப்பட்டு விட்டிருந்தது. ஏழைகளின் மானம் மதிப்பற்றது என்று எண்ணும் இடத்தில் நீண்ட காலம் தங்கினால் விபரீதம்தான் விளையும் என எண்ணி, கிலி பிடித்துப் போன மஞ்சுளாவிற்கு உற்சாகம் மங்கி விட்டது. சிந்தாமணிக்கு உடல்நிலை கொஞ்சம் குணமானதும் கிளம்பி விடவேண்டும் என்று தீர்மானித்திருந்தாள். இரண்டு தினங்கள் அதனால் வீணே கழிந்தன. விடாது தொடர்ந்து பெய்த மழையினால் ஊருக்குப் புறப்பட முடியாமல் மேலும் இரண்டு தினங்களை அங்கே கழிக்க நேரிட்டது. ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒவ்வொரு நிமிஷமும் அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றின. 'இன்னமும் இங்கே நீ இருப்பாயோ, வெட்கம் கெட்ட பெண்ணே!' என்று அவள் மனச்சாட்சி இடித்து வருத்திக் கொண்டிருந்தது! ஆனால் இந்த நான்கு தினங்களில் அவள் கிரிதரனை ஒரே ஒரு முறைதான் அதற்குப் பின்னர் சந்தித்தாள், அதுவும் எதிர்பாராத விதமாக.

முதல்நாள் இரவு அவள் சந்திராவுக்குத் துணையாக சிறிது நேரம் உட்கார்ந்து மாலைப் பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தாள். செருப்பு ஓசையைக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். தங்கையைக் காண உள்ளே வந்த கிரிதரன் அன்பு கனிந்த கண்களால் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவனது முகத்திலோ தான் புரிந்து விட்ட குற்றத்தின் சாயை ஏதும் காணப்படாமல் கபடமற்று விளங்கியதைக் காண அவளுக்கு மிக்க ஆச்சரியமாக இருந்தது. 'நடிப்புக் கலையில் தேர்ந்தவர் போலும்!' என எண்ணிக் கொண்டு அவனைப் பாராதவள் போல் சட்டென்று எழுந்து தன் அறைக்குள் வந்து புகுந்து கொண்டாள். வெகுநேரம் படுக்கை மீது உட்கார்ந்து கொண்டு யோசித்தாள். அன்று இரவு, ''அதற்குப் பின்னர் அங்கே அவள் தங்கியிருப்பது சரியா? கிரிதரன் என்ன நினைப்பான்? மானமுள்ள பெண்போல் பாசாங்கு செய்கிறாள். பாவத்திற்கு அஞ்சியவள் போல் பசப்புகிறாள். இன்னும் ஒருமுறை முயன்றால் வெற்றிகிட்டும் என்று எண்ண மாட்டானா? சே! சே! இது என்ன பிழைப்பு!'' என்று பலவாறு

எண்ணிக் குழம்பிப் போன அவளுக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாள் எப்படியும் ஊருக்குப் புறப்பட்டு விடவேண்டும் என்று முடிவு செய்தாள்.

வெகு தொலைவில் ஒலித்த தொழிற்சாலையின் மணியைக் கணக்கிட்டுக் கொண்டு விடிவதற்காகக் காத்திருந்தாள் உறக்கமின்றி. பொழுது புலரும் சமயம் எழுந்து விரைவாகத் தனது சாமான்களைச் சேகரித்து எடுத்துப் பெட்டிக்குள் வைத்தாள். ஆனந்த நிலையத்திலே வேலைக் கமர்ந்து பணிசெய்த அந்தச் சில மாதங்களில் அவளிடம் ஐந்நூறு ரூபாய்களுக்கு மேல் சேர்ந்து விட்டிருந்தது. ரூபாய் நோட்டுக்களைப் புடவை மடிப்புகளில் சொருகி வைத்திருந்தாள். போனவுடன் மீண்டும் வேலை கிடைக்காவிடில் கொஞ்ச காலம் கவலையின்றி இருக்கலாம். முன்போல் நாளைக்கென்ன செய்வோம் என்று நடுங்கிச் சாக வேண்டாம் என்ற ஒரு தெம்பு ஏற்பட்டது அவளுக்கு. பெட்டியைத் தயார் செய்து முடிந்ததும், விரைவாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கதிரவன் புறப்பட்டதும் தோட்டத்திற்கு வந்திருந்தாள்.

'தானே சற்று அழுது ஓயட்டும், அப்பொழுதுதான் அவள் மனதிற்கு நிம்மதி ஏற்படும்' என எண்ணி, சிறிது நேரம் வாளா இருந்தார் சிந்தாமணி. ஒரு வழியாகத் தன் துயரத்தைக் கண்ணீராக வடித்துவிட்டு, மனம் சிறிது அமைதியடைந்த மஞ்களா முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''மன்னிக்கவும். மனம் தாளாது அழுதுவிட்டேன். வரவர நான் பச்சைக் குழந்தையாகிக் கொண்டு வருகிறேன். இல்லையா?'' என்று பரிகாசமாகக் கேட்டு விட்டு வெட்கத்துடன் மெல்லச் சிரித்தாள்.

''மனத்தில் வைத்து மறுகுவதைவிட அழுது ஆறுவது எவ்வளவோ மேல். நீங்கள் இவ்வாறு தீர்மானம் செய்திருப்பதைப் பற்றி நான் குறை சொல்ல மாட்டேன். எங்கள் ஒருவருக்கும் இந்த வீட்டின் சகவாசம் பிடிக்கவேயில்லை. சந்திரா அம்மாவுக்காகப் பற்களைக் கடித்துக் கொண்டு



இருக்கிறோம். அவ்வளவுதான். உங்களைப் போலவே சந்தர்ப்பம் கடுமையாகி விட்டால் நாங்களும் ஒவ்வொருவராகக் கிளம்பிவிடுவோம்'' என்றார்.

''சந்திராவைப் பற்றித்தான் நினைத்து அனுதாபப் பட்டு நானும் காலத்தை இதுகாறும் கடத்திக் கொண்டிருந்தேன். என் மனத்தில் நிம்மதியில்லாவிடில் நான் எப்படி அந்தப் பெண்ணுக்கு மன அமைதி கொடுக்க முடியும்?'' என்று கேட்டாள் மஞ்களா.

வாஸ்தவந்தான் என ஆமோதித்த சிந்தாமணி சட்டென்று, ''ஆமாம்! சந்திராவிடம் சொல்லி விட்டீர்கள் அல்லவா?'' என்று குறுக்கு கேள்வி கேட்டார் கவலையுடன்.

''சொல்லவில்லை. சொன்னால் போகவிட மறுத்துப் பிடிவாதம் செய்வார்கள். ஆனால் நான் எதற்கும் மசியப் போவதில்லை. கிளம்புவதென்று தீர்மானித்த பின்னர் இனி என்னால் தாமதிக்க முடியாது'' என்று உறுதியுடன் கூறிவிட்டு, தயக்கத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னம்மா? சொல்லுங்கள்'' என்று சிந்தாமணி உற்சாகப்படுத்தியதும், தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

''ஒன்றுமில்லை. எனக்கு ஒரு சிறு உதவி தேவை. இன்று மாலை இங்கிருந்து புறப்படும் ரயில் வண்டியில் என்னைத் தாங்கள் துணையாகக் கூட வந்து அனுப்பி வைக்க வேண்டும். உங்களால் முடியுமா?'' என்று மெல்லக் கேட்டாள்.

''இவ்வளவுதானே! இதற்கென்ன, நேரே சென்னை வரை வேண்டுமானாலும் கொண்டு வந்துவிட்டுப் போகிறேன்'' என்றார் சிந்தாமணி பரிவுடன்.

''நான் தற்சமயம் சென்னைக்குப் போகவில்லை. அதனால் அந்தச் சிரமங்கள் உங்களுக்கு இருக்காது. நேரே வீரசோழன் பட்டணத்துக்கு, அத்தை கங்கம்மாள் வீட்டிற்குத்தான் போக உத்தேசித்திருக்கிறேன். நான் வேலையை விட்டு வந்த விஷயத்தை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா? மேலும் சென்னையில் போய்த் தங்கியிருக்க எனக்கு உறவினர்கள்

யாரும் அங்கே இல்லை. அங்கே எனது ஒன்று விட்ட பெரியப்பா ஒருவர் இருக்கிறார் என்றாலும் பணக்காரர் சகவாசம் எனக்கு ஒவ்வாதது. மறுவேலை கிடைக்கும் வரை சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஹோட்டலில் தங்குவதற்கு எனது பொருளாதாரம் இடம் கொடுக்காது. மேலும் என் போன்ற பெண்கள் ஹோட்டல்களில் தனியாகத் தங்குவது முறையும் அல்ல. அதனால்...'' என்று நிறுத்தினாள்.

''கவலைப்படாதீர்கள்! அத்தை கங்கம்மாள் உங்களைச் சொந்தப் பெண் போல் தம் வீட்டில் வைத்துக் கொள்வார்கள். வீரசோழன் பட்டணத்திற்கு இன்று மாலை போக வேண்டிய ஒரு வேலை எனக்கு இருக்கிறது. உங்களை நானே கொண்டு போய்ப் பத்திரமாக அத்தையம்மாளிடம் ஒப்புவித்துவிட்டு வருவேன். நிச்சிந்தையாக இருங்கள்'' என்று தைரியம் சொன்னார் அந்தக் கிழவர்.

''இதுவரை என்னிடம் தாங்கள் காட்டிய அன்பிற்கும், செய்த உதவிகளுக்கும் மிக்க நன்றி. என்றும் தங்களை நான் மறக்க மாட்டேன்'' என்று உணர்ச்சியுடன் கூறிவிட்டு எழுந்திருந்தாள் மஞ்சுளா.

''எங்கேயோ வெகு தூரம் போய்விடப் போவதுபோல் சொல்கிறீர்களே, பட்டணத்திற்குக் காரியமாக வரும்போதெல்லாம் ஒருமுறை உங்களை எட்டிப் பார்த்து விட்டுத்தானே போவேன். எனக்கென்னவோ அம்மா, நீங்கள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து விடுவீர்கள் என்று நம்ப முடியவில்லை... அது கிடக்கட்டும். நாம் காரியத்தைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்தார் சிந்தாமணி.



# 47

காலை முழுவதும் தனது கருத்தை வெளியிடத் துணிவு இல்லாமல் பகல் போஜனத்திற்குப் பிறகு மெல்ல சந்திராவிடம் தான் வெளியேறுவதைக் குறித்துப் பேசினாள் மஞ்சுளா. அதைக் கேட்டதும் சந்திராவின் முகம் சாம்பி விட்டது. ''இந்த இரண்டு வருஷங்களில் என்னைக் கவனித்துக் கொண்ட நர்ஸ்கள் பலர். ஆனால் யாரிடமும் நான் இவ்வளவு அன்புடன் பழகியதில்லை. மிகவும் பாசத்துடன் பழகிவிட்டு என்னை நிராதரவாக விட்டுப்போகத் துணிந்து விட்டாய் அல்லவா? அத்தனை வெறுப்பு ஏற்பட நான் செய்த குற்றம்தான் என்ன? மஞ்சு, இது நியாயமா?'' என்று துக்கத்துடன் கேட்டாள். இதைக் கேட்டதும், கோழை உள்ளம் கொண்ட மஞ்சுளாவின் கண்கள் கலங்கி விட்டன. ஆனால், எக்காரணம் கொண்டும் தனது தீர்மானத்தைக் கைவிடக் கூடாது என்ற பிடிவாதம் அவள் உள்ளத்தில் தலைதூக்கி நின்று கொண்டிருந்ததனால், அவள் ஒரே உறுதியாக இருந்தாள்.

''இதுகாறும் என்னிடம் தாங்கள் காட்டிய அன்பிற்கு மெத்த நன்றி. இதைத் தவிர நான் தங்களுக்குச் செய்யக்கூடிய பிரதி உபகாரம் ஏதும் இல்லை. எங்கு இருந்த போதிலும் இந்த ஏழை தங்களை என்றும் மறக்க மாட்டாள் என்பது நிச்சயம். எனக்குத் தாங்கள் அன்புடன் விடை கொடுத்து அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டு, ஒரு கடிதத்தை மேஜை மீது வைத்தாள்.

''உன் இஷ்டம்!'' என்று பதில் அளித்த சந்திரா, படுக்கைமீது தனது முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டாள். அவள் கண்களினின்றும் பெருகிய கண்ணீர் வெள்ளத்தை மஞ்சுளா காண்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

அன்று இரவு சினிமாவிலிருந்து திரும்பி வந்த சௌமினியம்மாள் தன் அறையின் மேஜை மீது தனக்காக வைக்கப் பட்டிருந்த கடிதத்தை எடுத்தாள். முன்பின் பார்த்திராத

கையெழுத்து. முத்துக்கள் போல் அழகாக இருந்தன எழுத்தின் கோவை. எனினும், பிரித்துப் படிப்பதற்குள் அவள் இருதயம் வெடித்து விடும்போல் துடித்தது. சில நாட்களாக அவளுக்கு எந்த ஒரு கடிதமும் படிக்குமுன் அச்சத்தைத்தான் கொடுத்தது. வேலையை விட்டு விலகி விட்டதாகச் சுருக்கமாக எஜமானிக்கு அக்கடிதத்தில் தெரிவித்திருந்தாள் மஞ்சுளா.

அதைப் படித்து முடித்ததும் தூள் தூளாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டு, ''ஓ! இதுதானா!'' என்று தனக்குள் பேசிக் கொண்டு கண்ணாடி முன்போய் உட்கார்ந்து கொண்டாள். மஞ்சுளா அந்த வீட்டை விட்டுத் தொலைந்தது எவ்வளவோ காரியங்களுக்கு ஒரு வழியில் நன்மையாகும் என எண்ணி, மகிழ்ச்சியுடன் வெகுநேரம் தனது அழகைக் கண்ணாடியில் பார்த்து ரசித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

மஞ்சுளா ஆனந்த நிலையத்தை விட்டுச் சென்று மூன்று வாரங்களுக்கு மேல் சென்று விட்டன. இதற்கிடையில் பல விதமான அலுவல்களில் ஈடுபட்டிருந்த சௌமினியின் மூளையில் ஒரு திட்டம் தீவிரமாகக் கொடிவிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தது. பணத்தைக் கடன் கொடுத்துவிட்டு அவளது கடமை என்னவென்பதை ஜாடையாக போனிலும் நேரிலும் பலமுறை சொல்லிக் காதைத் துளைத்துக் கொண்டிருந்தாள் தங்கமணி. அவள் வாயை அடைக்காவிடில் அவள் கிண்டாமணியாக மாறித் துன்பங்கொடுப்பாள் எனக் கவலை கொண்ட சௌமினிக்குக் கல்யாண முயற்சியில் உண்மையிலேயே ஊக்கம் செலுத்த வேண்டி வந்தது.

தங்கமணியின் செல்வக்குமாரி மைனாவதியைச் சில தினங்களாகத் தான் போகும் இடத்திற்கெல்லாம் அழைத்துச் சென்று கொண்டிருந்தாள். அடிக்கடி ஆனந்த நிலையத்திற்குக் கூட்டிச் சென்று சீராட்டினாள். பாடச் சொல்லி கேட்டுப் பாராட்டினாள். நடனம் ஆடச் சொல்லிப் பார்த்தாள். இதன் பயனாக நாராயணனின் இரண்டு பிள்ளைகளும் அந்தச் சிறுமியைப் பலமுறை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. இதில் ஓரளவு கட்டாயம் வெற்றி ஏற்படும் என்று நினைத்த சௌமினி, தனது முயற்சி எவ்வளவு தூரம் முன்னேறி



உள்ளது என்பதை அறியும் நிமித்தம், அன்று மாலை வெளியே செல்லும்போது ஜகதீசனை மிகவும் வேண்டி தன்னுடன் கூட அழைத்துச் சென்றாள்.

நகரத்தின் வெளியே ராஜபாட்டையில் காரை ஓட்டிக் கொண்டு சென்ற சௌமினி, மிகவும் அன்பு கலந்த கண்களால் தன் மூத்தாள் மகனை ஏறிட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டு, ''ஜகதீசா! நீ முன்போல் இல்லை. மிகவும் மாறிவிட்டிருக்கிறாய்'' என்றாள் கடிந்து கொள்ளும் பாவனையில்.

உண்மையில் சில தினங்களில் ஜகதீசன் மிகவும் மாறி விட்டிருந்தான். அவனது பேச்சு, செயல் எல்லாவற்றிலும் வெறுப்புத் தொனித்தது. முகத்திலே ஏமாற்றமும், கோபமும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. தனக்கிருந்த தொல்லைகளில் இவற்றைக் கவனிக்க சௌமினிக்குப் பொழுது இருக்கவில்லை.

வா என்று அழைத்தால் பின்னால் நாய்க்குட்டி போல் ஓடிவரும் ஜகதீசன், அன்று வெளியே வர முதலில் மறுத்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''இந்தப் பைத்தியத்திற்கு என்ன கொள்ளை வந்துவிட்டது?'' என்று எண்ணி உள்ளூரச் சிரித்தாள்.

''என் உயிரே போய்விட்டது போல் இருக்கிறது சித்தி. நீங்களும் இப்பொழுது என்னைப் பற்றி மிகவும் அலட்சியமாக இருக்கிறீர்கள். புது சிநேகிதம் உங்கள் கண்களை மறைக்கிறது. அந்தச் சிறுகுட்டியை அழைத்துக் கொண்டு ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஜகதீசன் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்ற ஓர் எண்ணம் ஏனோ ஏற்பட்டிருக்கிறது. புரியவில்லை உங்கள் போக்கு'' என்றான் மனத்தாங்கலாக பதிலுக்கு.

திடுக்கிட்டுப் போன சௌமினி சமாளித்துக் கொண்டு சிரித்தாள். ''அட அசடே! எல்லாம் உன் பொருட்டுத்தான் நான் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தச் சின்னக் குட்டியை

உனக்குக் கல்யாணம் செய்து வைக்க மிகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். பணம், பதவி, அந்தஸ்து எல்லாம் பொருந்தியிருக்கின்றது. ஜாதகம் அவையெல்லாம் பேஷாக பொருந்தி இருக்கிறது. அப்பாவும் சம்மதித்து விட்டிருக்கிறார். பெண் அழகாக வண்டுபோல் இருக்கிறாள். இனிமையாகப் பாடுகிறாள். நன்றாக நடனம் ஆடுவாள். பாட்டுகூத்து என்றால் போதுமே இந்தக் குடும்பத்திற்கு! சாப்பாடுகூட வேண்டாமே! அதனால்'' என்று முடிக்குமுன், ''அதனால் என் தலையில் அவளைக் கட்டத்திட்டம் போட்டு விட்டீர்களோ சித்தி! போதும் வண்டுபோல் அவள் பறந்தால் வேறே தேன் நிறைந்திருக்கும் புஷ்பத்தை நோக்கிப் பறக்கட்டும். முன்பே நான் சொல்லியிருக்கிறேன். எனக்குக் கல்யாணம் என்றால் பெண் எனக்குப் பிடித்தவளாக இருக்க வேண்டும் என்று. எனக்கு மைனாவதியைப் பிடிக்கவில்லை. அதனால் நீங்கள் என் பொருட்டு வீண் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று இரைந்து கத்தினான்.

திடுக்கிட்டுப் போன சௌமினி காரை நடுப்பாதையில் சட்டென்று நிறுத்தினாள். 'இந்தப் பைத்தியத்திற்கு விருப்பு வெறுப்பு இவைகூட இருக்கின்றனவா? பேஷ்! பேஷ்!' என்று எண்ணி வெகுண்டு கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டாள்.

''உனக்குப் பிடிக்காவிட்டால் போ! யாரும் வற்புறுத்தவில்லை. வலுவில் வந்த சீதேவியை நீ காலால் உதைக்கிறாய்! அவ்வளவுதான். கண்டேன் என்று அந்தப் பெண்ணைக் கொள்ள எத்தனையோ பேர் முன் வருவார்கள். அதிருக்கட்டும். அந்தப் பெண்மீது உனக்கு அத்தனை வெறுப்பு ஏன்? காரணம்?'' என்று வினவினாள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.

''வெறுப்பு ஒன்றுமில்லை. என் மனம் இன்னொரு இடத்திலே அடிமையாகி விட்டது. மற்ற எவரும் என் கண்ணிற்கு ஒவ்வாதவர்களாக இருக்கிறார்கள், அவ்வளவுதான்'' என்றான் கோபத்துடன்.



''அப்படிச் சொல்! அந்தப் புண்ணியவதி யார் என்று நான் அறியக்கூடாதா'' என்று ஏளனமாகக் கேட்டாள் சௌமினி.

வெகு தொலைவில் எதையோ காண்கின்றவன் போல வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஜகதீசன் விருக்கெனத் தன் சிறிய அன்னையின் பக்கம் திரும்பினான். ''உங்களிடம் சொல்ல எனக்கு அச்சமில்லை. வெட்கமும் இல்லை. இங்கே வேலைக்காரியாக வந்து பணி செய்து கொண்டிருந்த மஞ்சுளாவிடம் என் மனம் பறிபோய் விட்டது சித்தி! அவளை எனக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியுமானால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். என்ன காரணம் கொண்டோ அவள் திடீரென்று வேலையை விட்டுப் போய்விட்டாள். ஆனால் உலகத்தின் எந்த மூலைக்கு அவள் ஓடி மறைந்து கொண்டாலும் இந்த ஜகதீசன் விடமாட்டான் என்பது அவளுக்கு என்ன தெரியும்?'' என்றான். ஆத்திரத்தில் அவன் முகமும் கண்களும் சிவந்து பயங்கரமாகத் தோன்றின.

எதிர்பாராத இந்தச் செய்தி சௌமினியை ஒரு கணம் ஆச்சரியத்தில் ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. சாமர்த்தியமாகச் சட்டென்று சமாளித்துக் கொண்டு கலகலவென குறுநகை புரிந்தாள் அவள். ''அட அசடே! இந்த விஷயத்தை என்னிடம் முன்னதாகவே சொல்லியிருக்கக் கூடாதா? மைனாவதி மேல் உனக்குக் கொஞ்சம் பிரியம் என்று தப்பாக எண்ணிக் கொண்டு அவர்கள் வீட்டுக்கு நடையாக நடந்து கொண்டிருந்தேன். நீ யாரைக் கல்யாணம் செய்து கொண்டாலும் எனக்கு ஒன்றும் இல்லை. மஞ்சுளா அழகான பெண்தான். படித்தவள். கொஞ்சம் ஏழை. அதனால் என்ன? உன்னை மணந்து கொண்டால் உடனே அந்தஸ்து உயர்ந்து விடுகிறது. அதற்கு அப்பா சம்மதிப்பாரா என்பதுதான் கொஞ்சம்...'' என்று கூறிவிட்டு முடிக்காது காரை மேலே செலுத்தத் தொடங்கினாள்.

''கிழவனை ஒப்புக் கொள்ள செய்ய முடியாதா சித்தி? என் மனம் நாடும் அந்த மங்கையை நான் மணம் செய்து கொள்ள முடியுமானால்... இது விஷயமாக உதவி செய்தால் உங்களுக்கு நான் என் உடலைச் செருப்பாகத் தைத்துப் போட்டு விடுவேன்,

சத்தியம்'' என்றான் உணர்ச்சிப் பெருக்கில்.

''அத்தனைப் பெரிய தியாகம் வேண்டாம் ஜகதீசா, அவ்வளவு வேண்டாம்! எப்படியாவது நான் அவளை உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். பயப்படாதே. என்னை நம்பு. அதுவரை நான் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு இருப்பாயா?'' என்று கேட்டாள். ஒரே கணத்தில் சௌமினியின் கூர்மையான மூளையில் மின்னல் கொடிகள் போல் பலவிதமான யோசனைகள் உதயமாயின.

''சத்தியம் சித்தி, சத்தியம்! நீங்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருப்பேன். மஞ்சுளா மீது உள்ள அன்பை அறிந்தால் கட்டாயம் நீங்கள் மனம் உருகிப் போவீர்கள் சித்தி. உங்கள் ஒருவருக்குத்தான் என்னை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்'' என்று உணர்ச்சி வசத்தில் பிதற்றினான்.

''சரி, இதைப்பற்றி வெளியில் யாரிடமும் நாம் பேசாது கொஞ்ச நாட்கள் ரகசியமாக வைத்திருப்போம். நீ ஆத்திரப்படாது காரியம் கைகூடும் வரை அமைதியாக இருக்க வேண்டும் தெரிந்ததா?'' என்று கூறிவிட்டுக் காரை ஊருக்குத் திருப்பினாள். அத்துடன், அவள் போட்டிருந்த திட்டத்திலும் ஒரு சிறு திருப்பம் ஏற்பட்டது.

## 48

ஆனந்த நிலையத்தை விட்டு மஞ்சுளா வெளியேறி இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டன. அவள் இல்லாமல் அந்த அழகிய மாளிகை ஒளி குன்றிச் சூன்யமாகி விட்டது போன்ற ஒரு துயர உணர்ச்சியில் பீடிக்கப்பட்ட கிட்டாவும் சிந்தாமணியும் வேலையில் உற்சாகம் குறைந்தவர்களாக இருந்தார்கள். ''நீடித்து இங்கு நாம் எதற்காக தங்கி இருக்க வேண்டும்?'' என்ற அசட்டையான எண்ணங்கள் அவர்கள்



மனத்தில் ஏற்பட்டு விட்டிருந்தன. வாழ்க்கைப் போராட்டத்திலே எதிர் நீச்சல் போட்டுச் சமாளிக்கும் இளமைப் பருவத் துடிப்பு நிறைந்த வஜ்ரவேலுவுக்கும் அம்பிப் பயலுக்கும் கூட அந்தப் பங்களாவில் உத்தியோகம் மெத்தவும் கசந்து போயிருந்தது.

கூடப்பிறந்த சகோதரியைப் பறி கொடுத்து விட்டவர்கள் போல் அவர்களிருவரும் விவரம் புரியாத ஒருவித ஏக்கத்தில் தவித்துக் கொண்டிருந்தனர். எப்பொழுது இங்கிருந்து பிய்த்துக் கொண்டு கிளம்பலாம் என அடிக்கடி தமக்குள் எண்ணி மனம் புழுங்கினர். சமீபத்திலே தொடர்ந்து சில தினங்களாக ஏற்பட்ட சில சம்பவங்கள் அவர்கள் நால்வரின் மனத்திலே வெறுப்புத் தீயை மூட்டி விட்டிருந்தன. அதன் கனலிலே கொதித்துக் குமுறிக் கொண்டு புறப்பட்ட தங்களது எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் தனிமையிலே சந்திக்கும் பொழுது பரிமாறிக் கொட்டி ஆறுதல் பெற அவர்களால் முடியவில்லை.

மஞ்சுளா புறப்பட்டுச் சென்ற சில தினங்களுக்குப் பிறகு, கிரிதரன் மிகவும் சிரமப்பட்டுச் சென்னை நகரிலிருந்து ஒரு நர்ஸ் பெண்மணியைத் தருவித்துத் தன் சகோதரியைக் கவனிக்க அமர்த்தி இருந்தான். அந்தப் புதிய பெண்ணைப் பார்த்த அளவிலேயே வேலைக்காரர்கள் பலருக்குப் பிடிக்கவில்லை. நர்ஸ் வேலையில் நல்ல பயிற்சியும் திறமையும் உடையவளாக இருந்தாள் என்பதனாலோ வேறு என்ன காரணத்தினாலோ அவள் மிகவும் கர்வியாகக் காணப்பட்டாள். பேச்சிலும் போக்கிலும் கண்டிப்பும் கறாருமாக இருந்தாள். பங்களாவிலிருந்த மற்ற வேலைக்காரர்களைத் தூசிக்குச் சமமாக எண்ணி ஆஸ்பத்திரியின் வார்டுகளுக்குள் மிடுக்காக நடக்கும் பாவனையில் குதிகால் வைத்த பாதரட்சைகள் டக்டக் என்று ஒலிக்க, செருக்குடன் அந்த மாளிகை முழுவதும் பவனி வந்து கொண்டிருந்தாள்.

சலவை செய்து கஞ்சி போட்டு விறைத்து நிற்கும் நர்ஸ் உடுப்பை அணிந்து கொண்டு, பாதரட்சை சப்திக்க அவள் சமையலறை அருகில் வந்தால்கூட கிட்டாவுக்கு பொறுக்க முடியாத விஷயமாக இருந்தது. அவள் வரவை எச்சரிக்க

வேகமாக வந்து வீசிய மருந்தின் மணம் அவரது குடலைப் புரட்டியது. ''நோயாளிக்கு நான் சொன்ன உணவைத் தயார் செய்து விட்டீர்களா?'' என்று வீட்டு எஜமானி போல் தன்னை மிரட்டுவதை அவர் கட்டோடு வெறுத்தார். ''உங்களுக்கு வெஜிடேபிள்களை ரோஸ்டு செய்யத் தெரியவில்லையே! உம்!'' என்று ஒருநாள் அவரது சமையல் திறமையைக் குறைவாகப் பேசிவிட்டாள்.

கிட்டாவிற்குக் கோபம் தாள முடியாது பொங்கிக் கொண்டு வந்துவிட்டது. கையில் பிடித்திருந்த கரண்டியை அவள்முன் வீசிவிட்டு, 'சமையல் செய்ய எனக்குச் சொல்லிக் கொடுக்கவா வந்திருக்கிறாய்?' என்று கூச்சல் போட வேண்டும்போல் ஆத்திரத்தில் துடித்தார். நல்ல வேளையாக அது சமயம் சாப்பிடுவதற்கு கிரிதரன் உள்ளே வந்து விட்டான். தொண்டையிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு அவளை முறைத்துப் பார்த்துவிட்டு அவர் மௌனமாகி விட்டார். ஆனால் அன்று முதல் அவருக்கு அந்த பெண்மீது மிகவும் வெறுப்பும் ஆனந்த நிலையத்து அடுப்பங்கரை உத்தியோகத்தின் மீது மகா கசப்பும் ஏற்பட்டது.

'மஞ்சுளாவின் பதவிசு எங்கே! எத்தனை அடக்கமான பெண். என்ன அழகு! என்ன இனிமையான சுபாவம்! அவள் எங்கே, இந்த பிரும்மஹத்தி எங்கே' என்று தமக்குள் அடிக்கடி எண்ணிக் குமுறினார்.

சிந்தாமணிக்கு இந்தப் புதிய நர்ஸை நேரிடையாக அடிக்கடி மாளிகையில் சந்திக்கும் சந்தர்ப்பம் குறைவாக இருந்தது. எனினும் அவள் மாலைப் பொழுதானதும் அலங்கரித்துக் கொண்டு தினசரி கடைத் தெருவிற்குக் கிளம்பி விடுவதைக் காண அவருக்குப் பிடிக்கவில்லை. மாநிற முகத்தின்மீது அவள் அப்பிக் கொண்டிருந்த பவுடர்ப் பூச்சையும் உதட்டுச் சாயத்தையும் கண்டு அருவருப்படைந்து போனார். 'குங்குமப் பொட்டு ஒன்று மட்டும் துலங்கும் அழகிய சுந்தர வதனம்! கழுத்தில் பாசிமணி மாலை. கையில் கண்ணாடி வளையல்கள். ஆபரணங்கள் ஏதும் இல்லையென்றாலும் புன்னகை ஒன்றே பெரும் பொன்னகையாக ஒளிவிச



மகாலட்சுமி போல் துலங்கும் எவ்வளவு அழகான பெண் மஞ்சுளா! பங்களாவிற்கே பெரும் களையாக இருந்தாளே! கிரிதரனைச் சொல்லிக் குற்றமில்லை. அந்த அழகிய முகத்தைக் கண்டு எந்த இளைஞன்தான் உள்ளம் தடுமாற மாட்டான்?' என்று எண்ணி எண்ணி வியந்தார்.

அம்பிப் பயலுக்குப் புதிய நர்ஸை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால், அவளை மஞ்சுளாவுடன் ஒப்பிட்டுக் கொண்டு குற்றம் கண்டுபிடிக்க அவனுக்குப் பொழுது இருக்கவில்லை. அவனது சொந்தக் கிராமத்திலே பிறந்து வளர்ந்து அவன் வயதை ஒத்த வாலிபன் சினிமா உலகிலே புகுந்து பின்னணிப் பாடகனாக, முன்னணிக்கு வேகமாக வந்து கொண்டிருந்தான். புதிதாகத் திரையிடப்பட்ட படங்களைப் பார்த்துவிட்டு வரும்பொழுதெல்லாம் அம்பிப் பயலின் கருத்து சினிமா உலகத்திற்கு ஓட ஆரம்பித்தது. 'இதென்ன வேலை! கூப்பிட்ட குரலுக்கு இங்குமங்கும் பாய்ந்து ஓடி பணிபுரியும் இந்த அடிமை வாழ்வு போதும்! ஏதாவது சினிமா கம்பெனியில் ஒரு வேலை கிடைத்து விட்டால் தேவலை. அங்கு முன்னுக்கு வர எத்தனையோ வழிகள் இருக்கின்றன' என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தான் அவன்.

வஜ்ரவேலுவின் யோசனை வேறு திக்கில் திரும்பிக் கொண்டிருந்தது. 'ஆற்றிலே தண்ணீர் வந்து கொண்டேயிருக்கும். புதிய வெள்ளம் வரும். பழையதை அடித்துக் கொண்டு போகும். அதுபோல் ஆனந்த நிலையத்தில் புதிய வேலைக்காரர்கள் வருவார்கள்; பழைய ஊழியர்கள் வேலையினின்று விலக்கப்படுவார்கள். நமது வேலை மட்டும் இங்கே என்ன நிச்சயம்? 'நீயாகப் போகிறாயா? அல்லது நானாகப் போகும்படிச் செய்யட்டுமா?' என்று சொல்லும் மாதிரியில் இன்னல்கள் பல விளைவிப்பார்கள் எஜமானி அம்மாள். அவர்கள் அப்படிப்பட்ட குணசாலி. பொறுமையே உருவான மஞ்சுளாவையே பல விதத்தில் சிரமப்படுத்தி விரட்டி விட்டார்களே! எஜமானியம்மாள் சீட்டுக் கொடுக்குமுன் ராஜினாமாவை நாமே நீட்டிவிட வேண்டும். வெளியே போனால் இனிமேல் இன்னொருவருக்குக் கைகட்டிச் சேவகம்

செய்வதில்லை. பேசாமல் ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்துக் கொண்டு ராஜாபோல் உட்கார்ந்து விடவேண்டும்' என்று பற்பல சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அடுத்தபடியாக நடந்த இரு சம்பவங்கள் இவர்கள் நால்வரையும் மன அதிர்ச்சியடையும்படிச் செய்து விட்டிருந்தன. கறுப்புக் கண்ணாடியும் சில்க் ஜிப்பாவும் சரிகை அங்கவஸ்திரமுமாக, புத்தம் புதியதொரு காரில் வந்து இறங்கினான் ஒரு கட்டழகன் ஒருநாள். 'இவன் யார்?' என்று வேலைக்காரர்கள் கண்கள் வியப்பில் விரிந்தன. சௌமினியம்மாளுடன் அழகாகப் பேசி சிரித்துப் பழகிய அந்த மனிதன் அதற்குப் பின்னர் அடிக்கடி ஆனந்த நிலையத்திற்கு வரத் தொடங்கினான்.

சௌமினியம்மாவின் மாமன் மகன், பெரிய பணக்காரன், வெளியூரில் இருந்தான் இவ்வளவு காலமும், இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறான், சொந்தமாக ஏதாவது ஒரு பெரிய தொழில் ஆரம்பிக்க உத்தேசித்துக் கொண்டிருக்கிறான் என்ற விவரம் காதுகளில் பட்டது. இவ்வளவு காலமும் இல்லாமல் திடீரென்று ஆகாய வீதியிலிருந்து முளைத்தெழுந்தவன் போல் வந்து உறவு கொண்டாடிய அந்தப் புதிய மனிதனை ஏனோ அவர்களுக்குப் பிடிக்கவேயில்லை.

வந்தவன் எஜமானியம்மாளுடன் அளவளாவி விட்டுப் போகாது, வேலைக்காரர்களைத் தனது ஊழியர்களைப் போல் எண்ணி ஏவத் தொடங்கியது அவர்களுக்குச் சகிக்க முடியாத வேதனையாக இருந்தது. ''இவன் எவன் நம்மை விரட்ட?'' என்று எண்ணி ஆத்திரமடைந்து உள்ளம் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

இவையெல்லாம்விட அன்று காலையில் நடந்த சம்பவம் அவர்கள் எல்லோர் மனத்திலும் ஒருவித சந்தேகத்தை எழுப்பி விட்டிருந்தது. இரவும் பகலும் சந்திராவின் படுக்கையருகே கிடந்து அவளைக் காத்துவந்த கிரிதரனின் நாய் டைகர், அன்று காலை திடீரென்று இறந்து விட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன்னர் தோட்டத்தில் குரைத்துக் கொண்டு குதித்து



விளையாடிக் கொண்டிருந்த நாய் ஒரு மரத்தடியில் சுருண்டு கிடப்பதைச் சிந்தாமணி கண்டு திடுக்கிட்டுப் போனார். ஓடி அருகில் சென்று கவனித்தபோது அது இறந்து விட்டிருப்பதை உணர்ந்தார். விஷயத்தைக் கேள்விப்பட்ட கிரிதரன் திடுக்கிட்டுப் போனான். உற்றார் உறவினர் யாரையோ இழந்து விட்டதுபோல் அவனுக்குத் துக்கம் தாள முடியவில்லை. நாயின் மரணத்தை அறிந்த சந்திரா கண்ணீர் உகுத்துக் கதறி அழுதுவிட்டாள்.

அன்று முழுவதும் அவள் சாப்பிடவே யில்லை. ஸ்ரீமான் நாராயணன் விஷயத்தை அறிந்ததும் 'அடாடா!' என்று கொஞ்சம் அனுதாபப்பட்டார். சௌமினிக்கு மட்டும் மிக்க கோபம் ஏற்பட்டது. ''ஒரு நாய் செத்து விட்டதற்கு, மனிதர் செத்துப்போய் விட்டது போல் ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம்? எல்லோரும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு துக்கம் கொண்டாடுவது சகிக்கவில்லை'' என்று பொதுவாக எல்லோருக்கும் படும்படி ஒரு தடவை இரைந்தாள். அவள் நாயின் சாவை அசட்டை செய்து விட்டு, தனது கைப்பையுடன் வெளியே புறப்பட்டு விட்டாள்.

அன்று இரவு படுப்பதற்காகத் தங்களது விடுதிக்கு வந்த வேலைக்காரர்கள் நால்வரின் மனமும் நாயின் மரணத்தைப் பற்றி ஒரே விதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தன. அவர்களால் அதைப்பற்றிப் பேசாதிருக்க முடியவில்லை. மிருக வைத்தியர் வந்து பரிசோதித்துப் பார்த்தார். ''மூச்சுத் திணறலால் உயிர் போய் விட்டிருக்கிறது'' என்று சொன்னார். ''நன்றாக இருந்த நாய்க்கு மூச்சுத்திணறல் ஏற்படுவானேன். உம்!'' என்று தமக்குள்ளே பேசுவது போன்று சொன்னார் சிந்தாமணி. படுக்கையை விரித்துவிட்டு அதன்மீது வந்து உட்கார்ந்த கிட்டா உடனடியாகப் பேச ஆரம்பித்தார். ''எனக்கு ஒரு சந்தேகம். யாரோ நாய்க்கு மருந்து வைத்துக் கொன்று விட்டிருக்கிறார்கள். அது யார் என்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்'' என்றார் படபடப்புடன். வஜ்ரவேலு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''கண்டு பிடிப்பது மிகவும் சுலபம். மூளையைக் கொஞ்சம் உபயோகித்துச் சிந்திக்க வேண்டும். டைகர்மீது

வெறுப்புடையவர்கள் யாரேனும் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். நாயைக் கண்டால் பிடிக்காதவர்கள் இங்கே மூன்று பேர்கள் இருக்கிறார்கள். சௌமினி அம்மாள், புதிதாக வந்துள்ள நர்ஸ், புதிதாகத் தோன்றியிருக்கும் உறவு மனிதர் சுவாமிநாதன் அவர்கள். ஆனால் சௌமினியம்மாள் இதைச் செய்திருக்க முடியாது. நாயை ஒழித்துவிட வேண்டுமென்றால் இரண்டு வருஷங்களுக்கு முன்பே நாய் வாங்கிய புதிதிலேயே அதைக் கொன்று விட்டிருக்கலாம். அதனால் இதை அவர்கள் செய்யவில்லை.

''புதிதாக வந்துள்ள நர்ஸ் பெண்மணிக்கு டைகரைக் கண்டால் ஒரே பயம். அருகில்கூடப் போக மாட்டாள். மேலும் அந்த அம்மாள் இது மாதிரிக் காரியங்களில் இறங்கக் கூடியவராகத் தோன்றவில்லை. என் சந்தேகமெல்லாம் அந்த ஆசாமி சுவாமிநாதன் மீதுதான். முதல்நாள் அவர் இங்கே வந்த பொழுது டைகர் அவர் மீது பாய்ந்து, அவரது ஸில்க் ஜிப்பாவைச் சின்னா பின்னம் செய்துவிட்டது. அந்த ஆத்திரம் அந்த மனிதருக்கு. சமயம் பார்த்துத் தீர்த்து கட்டியிருக்கிறார். இது அவருடைய வேலை, நான் நிச்சயமாகச் சொல்வேன்'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் சொன்னான்.

அம்பிப்பயல் அதற்குள் குறுக்கிட்டான். ''நானும் இதை ஆமோதிக்கிறேன். இது சுவாமிநாதனுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் வஜ்ரவேலு நினைப்பதுபோல் ஆத்திரத்தினால் செய்த செய்கை அல்ல. நீங்கள் நினைப்பதுபோல் நான் அந்த ஆசாமியை ஒரு பெரிய பணக்காரர் என நினைக்கவில்லை. அப்படி ஒரு வேஷம் போடும் பெரிய எத்தன் என எண்ணுகிறேன். உறவு கொண்டாடிக் கொண்டு உள்ளே நுழைந்து வீட்டின் உளவுகளைக் கண்டு கொண்டார். இரவில் புகுந்து கொள்ளையடிக்க இந்த நாய் ஒரு முட்டுக் கட்டையாக இருந்தது. அதனால் அதை முடித்து விட்டார். ஒருநாள் இந்தப் பங்களாவில் என்னவெல்லாம் கொள்ளை போகப் போகிறதென்று நீங்களே பார்க்கப் போகிறீர்கள்'' என்றான் மூச்சு விடாது.



சிந்தாமணி அசட்டையாகச் சிரித்தார். ''நீங்கள் மூவரும் உங்கள் கற்பனையையெல்லாம் போட்டு ஒரு கதையாக உருவாக்குங்கள். அம்பிப்பயல் எங்கேயாவது ஒரு சினிமாக் கம்பெனியில் அதைக் கொண்டு விற்கட்டும். அத்துடன் அதிலே கதாநாயகனாகவும் நடிக்கட்டும். வீணாக ஒரு மனிதன் தலையைப் போட்டு உருட்டுகிறீர்களே. வேடிக்கைதான் இது! சுவாமிநாதன் போன்ற ஆசாமிகள் கறுப்பு முகமூடி போட்டுக் கொண்டு இரவில் திருட்டுத்தனமாக ஒரு வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடிக்கத் தேவையில்லை.

''பட்டப் பகலிலேயே பல்லைக் காட்டிப் பேசி பணத்தைப் பறிக்கும் சாமர்த்தியமுடையவர்கள். கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து உருக வேண்டி அவர்கள் காத்திருக்க அவசியமில்லை. உலக அனுபவமற்ற பத்தாம் பசலிகள் மனம் போனபடி உளறுகிறீர்கள். எதையோ கண்டதைச் சாப்பிட்டு விட்டு நாய் நெஞ்சடைத்துக் கொண்டு செத்து விட்டிருக்கிறது. அதற்குப் போய் வீணாக யாரையும் பழி சொல்வது தவறு. தூங்குங்கள் பேசாமல்'' என்று அதட்டிவிட்டு, விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டார்.

வெகுநேரம் வரையில் அவருக்கு உறக்கம் வரவில்லை. டைகரின் மரணத்தைப் பற்றிப் பற்பல சந்தேகங்கள் அவரது சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருந்தன. காரணமற்ற ஒரு கலவரத்தில் அவர் அமைதியிழந்து படுக்கையில் வெகுநேரம் வரை புரண்டு கொண்டிருந்தார்.

## 49

இரண்டு நாட்கள் சென்றன. அன்று காலை வேலைக்குப் போகுமுன்னர் தன் சகோதரியைக் காண கிரிதரன் அவள் அறைக்குள் வந்தான். புதிய நர்ஸ் தனது வேலைகளை விரைவில் முடித்து விட்டு, தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.

பணத்திற்காக ஊழியம் செய்கிறாள் என்ற உண்மையை ஒவ்வொரு நிமிஷமும் தனது செய்கையிலே உணர்த்திக் கொண்டிருந்த அவள் தன் அருகே இல்லாதிருப்பதே சந்திராவுக்கு மெத்த சுகமாக இருந்ததனால், அடிக்கடி தன்னை விட்டு அவள் வெளியே சென்று வருவதைப் பொருட் படுத்தவேயில்லை. கதைப் புத்தகம் ஒன்றை சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்த தங்கை தலை நிமிர்ந்து அண்ணனைப் பார்த்தாள். சாம்பி வாடியிருந்த அவனது வதனம் அவளுக்குத் திகைப்பை உண்டாக்கியது.

''என்ன அண்ணா, எப்படியோ இருக்கிறீர்கள். என்ன விஷயம்?'' என்று மிகவும் பரிவுடன் கேட்டுவிட்டுப் புத்தகத்தை மூடி அருகில் வைத்தாள். வெளிக் கதவைச் சாத்திவிட்டு படுக்கை அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, கிரிதரன் அமர்ந்தான். அவனுக்குப் பேசக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. ஆனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. தாயின் மறைவிற்குப் பிறகு அண்ணனும், தங்கையும் அன்பிற்கும் ஆதரவிற்கும் ஒருவரையொருவர் நம்பி வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். அண்ணன் மனம் கலங்கினால் தங்கை ஆறுதல் சொல்வாள். தங்கை சோகத்தில் மூழ்கினால், அண்ணன் தைரியம் சொல்லித் தேற்றுவது வழக்கம். எனவே தனது உள்ளத்தைச் சில காலமாக வாட்டி வந்த வேதனையைத் தங்கையிடம் சொல்லி அமைதியடையத் தீர்மானித்து அங்கு வந்திருந்தான் கிரிதரன்.

''உன் உடல் நிலையில் உன்னைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று கொஞ்ச நாட்களாக வாளாவிருந்தேன். ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அடகு வைத்த உனது நகைகளை மீட்க முடியாத நிலையில் இருக்கிறேன். வட்டியோ விஷமாக ஏறிவிட்டிருக்கிறது. எப்படியாவது இந்த மாதம் சமாளித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த சமயம், திடீரென்று நமக்கு இப்பொழுது ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

''ஈயக்குத் தகடுகளை நான் வாங்க உத்தரவு கொடுத்தபோது விலை மிகவும் ஏறியிருந்தது. ஆனால் இந்த மாத ஆரம்பத்திலே



விலை பாதியாகக் குறைந்து போனதனால், நமக்கு ஏகப்பட்ட பணம் நஷ்டம். இதன் இடையே வியாபார நிமித்தம் வாங்கியிருந்த கடனை விரைவில் திருப்பித் தரவேண்டும் என்ற தொல்லை ஒருபுறம் என்னை வதைத்துக் கொண்டிருக்கிறது. இந்த வார முடிவிற்குள் கடன் தவணைப் பணம் இரண்டு லட்சம் நான் கட்டியாக வேண்டும்.

''கையிலே ஒரு செப்புத் தம்படி இல்லை. வியாபாரமோ படுமோசம். வீட்டுச் செலவோ கட்டுமீறிப் பெருகிக் கொண்டு போகிறது. நமது சிறிய தாயார் என்னதான் அப்படி நகைகள் வாங்குவார்களோ எனக்குத் தெரியாது! பீகம்தாஸ் நகைக் கடைக்காரிடமிருந்து ஐம்பதாயிரத்திற்கு மேல் 'பில்' வந்து விட்டது. இதைப் பற்றி விசாரிக்கலாம் என்றால், எனக்கும் சித்திக்கும் பெரிய சண்டையே வந்து விடும்போல் இருக்கிறது. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ஒவ்வொரு சமயம் எனக்கு வாழ்க்கைமீது மிகவும் அலுப்பாகக்கூட இருக்கிறது'' என்றான் மிக வருத்தத்துடன்.

சகோதரனின் வருத்தம் தங்கையின் உள்ளத்தை மிகவும் கரைத்து விட்டது. ''ஏன் மூத்தவனாகப் பிறந்தோம் என்றுகூட உங்களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படலாம். உங்களைக் குற்றம் சொல்ல முடியாது. சுயநலமின்றி என் பொருட்டும் அப்பா பொருட்டும் நீங்கள் இந்தக் குடும்பத்திற்கு பாடுபடுகிறீர்கள். சுமக்க மாட்டாத பொறுப்புக்களால் திணறுகிறீர்கள் அண்ணா!'' என்று கூறிவிட்டு, கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிறிது நேரம் வாளாவிருந்து விட்டு, திடீரென்று தங்கை சிரித்தாள். திடுக்கிட்டு கிரிதரன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''உலகம் என்ன நினைக்கும் என்பதை எண்ணிப் பார்த்தேன், சிரிப்பு வந்துவிட்டது அண்ணா. ஸ்ரீமான் நாராயணனுக்கென்ன? அறுபது வயதாகியும் அழகான இளம் மனைவி. பிரம்மாண்டமான வீடு, ஐந்து மோட்டார்கள், பணத்தைக் கூடையில் அள்ளிக் குவிக்கும் ஒரு பெரிய தொழிற்சாலை என்றெல்லாம் உலகம் எண்ணி அதிசயிக்கும். ஆனால் உன் விஷயம் நமக்குத் தானே தெரியும்? நொண்டிப்

பெண். பித்தனான ஒரு பிள்ளை. குடும்பப் பொறுப்பைத் தலையில் சுமந்து இளைறும் அப்பாவியான ஒரு மகன், பணத்தைத் தண்ணீராகப் பாவிக்கும் ஒரு தர்மபத்தினி. காயகல்பத்தை நாடிச் செல்லும் ஓர் அசட்டுத் தந்தை. கடன்காரர்கள் கையில் எந்த நிமிஷமும் சிக்கிக் கொள்ளத் தயாராக இருக்கும் சோபையற்ற ஒரு வீடு. போதுமா அண்ணா?'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தாள்.

கிரிதரன் அவளைக் கடிந்து கொள்ளும் முறையில் உறுத்துப் பார்த்தான். ''கோபிக்காதீர்கள் அண்ணா. துன்பத்தின் எல்லை மீறி விட்டால் அழுவதை விட்டுச் சிரிப்பதுதான் மனிதனின் சகஜமான செய்கை. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது...'' என்றாள்.

கிரிதரன் பேசவில்லை. ஆனால் சந்திரா மேலே தொடர்ந்து சொன்னாள். ..நீங்கள் கோபப்படாதீர்கள் பதறாதீர்கள். நிதானமாகக் கேளுங்கள். அடமானம் வைத்த என் நகைகளை மீட்கத் தேவையில்லை. கேட்ட விலைக்கு வைத்த இடத்திலேயே நகைகளை விற்றுக் கடனை அடைத்து விடுங்கள்...'' என்று கூறிவிட்டுக் கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். தாழ்ந்த குரலில் ''என் பீரோவைத் திறந்து அடியிலிருக்கும் ரகசிய அறையில் ஒரு சிறு பெட்டி இருக்கிறது. அதை எடுத்து வாருங்கள்'' என்றாள். கிரிதரன் அவ்வாறே செய்தான்.

தன் கழுத்தில் துவண்ட பொற்சங்கிலியில் ஊசலாடிக் கொண்டிருந்த ஒரு சிறு சாவியைக் கழற்றி எடுத்து அந்தச் சிறு பேழையைத் திறந்தாள். ''இதில் உள்ள நகைகள் நமது பாட்டியாருடையவை. நல்ல உயர்ந்த பச்சைக் கற்கள் இழைத்த ஒரு ஜோடி வளையல்கள் இருக்கின்றன. அது ஒன்றே பல ஆயிரம் ரூபாய் பெறுமாம். இவற்றை விற்று உங்கள் அவசரத்துக் கடனை ஓரளவு தீர்த்துக் கொள்ளுங்கள். சிரிக்காதீர்கள் அண்ணா! தற்சமயம் கொஞ்சமாவது உதவியாக இருக்கட்டும் என்று கொடுக்கிறேன்'' என்றாள் உணர்ச்சி வேகத்துடன்.



''இதெல்லாம் என்ன பேச்சம்மா?'' என்று கடிந்து கொண்டான் கிரிதரன். ''சித்தி அவற்றைப் பார்வையிட ஆசைப்பட்டு எவ்வளவோ முறை என்னிடம் கேட்டும், இங்கே இல்லை என்று மழுப்பி விட்டிருந்தேன். இவை என்னுடையவை. தங்கள் கஷ்டத்திற்கும் உதவியில்லாது எனக்கும் பிரயோஜனமில்லாது இருப்பதைவிட'' என்று வற்புறுத்தினாள் சந்திரா. ''வேண்டாம் சந்திரா முன்பு கொடுத்த அந்த நகைகளையே மீட்க முடியாது கடனில் மூழ்க விட்டிருக்கிறேன். இவற்றையும் உன்னிடமிருந்து பறித்துக் கொண்டு போக எனக்கு மனம் இல்லை. இவற்றை அணிந்து கொள்ள உனக்கு இன்று இல்லாவிடினும் என்றாவது ஒருநாள் விருப்பம் ஏற்படும்... அப்பொழுது வருந்துவாய்'' என்று கூறிவிட்டு வெளியே செல்ல எழுந்திருந்தான்.

பெட்டியிலிருந்து ஒரு சிறு மோதிரத்தை எடுத்துத் தனது விரலில் அணிந்து கொண்டு பெட்டியைப் பூட்டினாள் சந்திரா. ''நில்லுங்கள் அண்ணா! நான் சொல்வதைக் கட்டாயம் நீங்கள் கேட்க வேண்டும். இப்பொழுது அம்மா உயிருடன் இருந்தால் என்ன செய்திருப்பார்கள்? கடன் சுமையில் நீங்கள் தத்தளிப்பதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்களா? மாட்டார்கள்! தமது ஆபரணங்கள் அனைத்தையும் விற்றுக் கொடுத்து, உங்கள் துயரத்தைத் தீர்க்க முயற்சிப்பார்கள்! அவர்கள் விருப்பமும் இப்படித்தான் இருக்கும் என எண்ணி இவற்றை எடுத்துக் கொண்டு போங்கள். மேலும் இவற்றை நான் அணியும் நாளே எனக்கு வராது அண்ணா?'' என்றாள் துக்கத்துடன்.

நெஞ்சம் துணுக்குற்ற கிரிதரன் அவளை ஏறெடுத்துப் பார்த்துவிட்டுத் திகைப்புடன் நின்று விட்டான்.

''என் உடல்நிலை பற்றிய விவரம் நான் அறிவேன் அண்ணா. உண்மையைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? நான் அப்படிப்பட்ட கோழையில்லை'' என்று கூறிவிட்டு, தன் விரலில் போட்டிருந்த மோதிரத்தைச் சற்று அழகு பார்த்தாள். 'அசட்டுத்தனமாக என்னவெல்லாம் பேசுகிறாய்' என்று சகோதரன் அன்புடன் கடிந்து கொண்டதைக் காதில் வாங்கிக்

கொள்ளாது, மெல்லப் புன்முறுவலித்தாள். ''இந்த ஒரே ஒரு நகையை மட்டும் நான் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது நமது பாட்டியாருக்கு அவர் தந்தை கொடுத்த பரிசு. இந்த அழகான பச்சைக்கல் மோதிரத்தை அவர் ஹைதராபாத்திலே ஒரு சமயம் ராமாயணம் படித்ததற்கு ஒரு தனவந்தரிடம் பரிசாகப் பெற்றாராம். அதனால் இதைக் குடும்பச் சொத்தாகப் பாவிக்க வேண்டும் என்பது என் கருத்து. எனக்குப் பின்னர் இதை உங்களுக்கு வரப்போகும் பாக்கியவதிக்குக் கொடுத்து விடலாம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

சகோதரன் மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்று கொண்டிருந்தான். தங்கை கொடுத்த அந்த நகைப் பெட்டியை வாங்கக் கை நீட்டிய பொழுது அவன் உள்ளத்தில் எத்தனையோ துயரமான சிந்தனைகள் அலைபாய்ந்தன.

சகோதரியின் சொத்தைத் தன் கையால் தொடுவது கூட மிகப்பெரிய துரோகச் செயலாகும் என எண்ணி மனம் புண்ணானான். ஆனால் சந்திரா அவனை விடவில்லை. ''எத்தனையோ முறை நீங்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இந்த முறை என் பேச்சை நீங்கள் கேளுங்கள், எடுத்துக் கொண்டு போங்கள்'' என்று வற்புறுத்தினாள்.

.

இந்தச் சம்பவம் நடந்து சில தினங்கள் சென்றன. ஒருநாள் அந்திப் பொழுதில் சித்தி சௌமினியும் ஸ்ரீமான் நாராயணனும் நாடகம் ஒன்று பார்க்க வெளியே சென்றிருந்தனர். கிரிதரன் தொழிலகத்தினின்றும் வரவில்லை. பணி செய்யும் நர்ஸ் வழக்கம் போல் தன் பொழுது வந்ததும் அலங்கரித்துக் கொண்டு வெளியே சென்றிருந்தாள். வீடு முழுவதும் நிசப்தமாக இருந்ததனாலோ என்னவோ, சந்திராவிற்குக் காரணமில்லாது ஒரு கலக்கம் ஏற்பட்டது. கதவைத் தாளிட்டுக் கொண்டு தனது நாற்காலியை ஜன்னல் ஓரமாக நகர்த்திக் கொண்டு வெளியே தோட்டத்தைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.



முன்னிருட்டுக் காலமாதலால் சூரியன் அஸ்தமித்ததும் விரைவில் எங்கும் இருள் பரவிக் கொண்டிருந்தது. அந்தகாரத்தில் மூழ்கியிருந்த தோட்டத்தையே பார்த்துக் கொண்டு சிந்தனை வசப்பட்டிருந்த அவள், சரக்கென்று கதவு திறக்கப்படும் ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டு விட்டாள். நெஞ்சு படபடக்க உடல் வியர்க்க அவசரமாக நாற்காலியைத் தள்ளிக் கொண்டு மின்சார விசையை அழுத்தினாள். உள்ளே வந்த ஜகதீசன் கதவைத் தாளிட்டுவிட்டு, விரைவில் அவள் அருகே வந்து நாற்காலியின் கையைப் பற்றிக் கொண்டு நின்றான். சிவந்து போயிருந்த அவனது முகத்தையும் கண்களையும் கண்டு நடுநடுங்கிப் போய் விட்டாள் சந்திரா.

''எதற்காக அண்ணா, இங்கே வந்தீர்கள்? பயந்து விட்டேன்!'' என்று கலவரத்தைக் காட்டாது, சாதாரணமாகவே கேட்டாள்.

''உனது க்ஷேமத்தை விசாரித்துப் போக வந்தேன் என்று வைத்துக் கொள்ளேன்'' என்று ஏளனமாக நகைத்த ஜகதீசன், அவளை வெறித்துப் பார்த்தான்.

''கதவு பூட்டியிருந்ததே. எப்படி வந்தீர்கள் என்று கேட்டேன் அண்ணா!'' என்று குழறிய சந்திரா தனது நாற்காலியை அப்பால் தள்ளிக் கொண்டு போக முயற்சித்தாள். நாற்காலியின் பின்னால் கையை வைத்து அழுத்திக் கொண்டிருந்த ஜகதீசன் அதை நகர விடவில்லை. ''உன்னைத் தனியே சந்தித்துப் பேசவேண்டும் என்பதற்காகவே ஒரு கள்ளச்சாவி தயார் செய்து வைத்திருந்தேன். அதை உபயோகித்துக் கொண்டு கதவைத் திறந்து வந்தேன். நல்ல வேளையாக இப்பொழுது வீட்டில் யாரும் இல்லை! இதுதான் சரியான தருணம் என்று வந்திருக்கிறேன். என்னிடம் அதிகம் தர்க்கம் செய்யாதே! அந்த நகைகளை எங்கே வைத்திருக்கிறாய்? அதை மட்டும் என்னிடம் சொல்லிவிடு, போதும்'' என்றான் ஆவேசம் வந்தவன் போல்.

சந்திரா கலவரமடைந்து போனாள். எனினும் [illegible] வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''நகையா, [illegible] என்னண்ணா

உளறுகிறீர்கள். என்னிடம் ஏதும் கிடையாதே!'' என்றாள்.

''பொய் சொல்லி என்னை ஏமாற்றி விடலாம் என்று எண்ணாதே! அந்த நகைகள் எனக்கும் சொந்தமானவைதான். என் தாயாருக்குச் சொந்தமான பொருள் என்னைச் சேர வேண்டும். நீயும் உன் அண்ணனும் சூழ்ச்சி செய்து எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்? பேசாமல் கொடுத்தால் பிழைத்தாய்!'' என்றான் கோபத்துடன்.

''வம்பு செய்யாமல் தயவு செய்து வெளியில் போங்கள் அண்ணா. என்னிடம் நகைகள் ஏதும் கிடையாது. சந்தேகமிருந்தால் பீரோவைத் தேடிப் பாருங்கள். இதோ சாவி'' என்று இடுப்பில் சொருகியிருந்த சாவிக் கொத்தை உருவிக் கீழே விட்டெறிந்தாள்.

''என்னைக் கண்டால் உனக்கு எத்தனை அலட்சியம். பைத்தியக்காரன் என்று என்னை அடைத்து வைத்துவிட்டு, அண்ணனும் தங்கையும் சொத்தைச் சூறையாடவா பார்க்கிறீர்கள்? எங்கே அந்த நகைகள்? எங்கே சொல்?'' என்று பேய் பிடித்தவன் போல் உரத்த குரலில் அதட்டிக் கொண்டு இருகரங்களாலும் அவளது கழுத்தைப் பற்றினான்.

மெய் பதறிப்போன சந்திரா பீதி தாளமுடியாது கிரீச்சிட்டு அலறிவிட்டாள். ''ஐயோ! யாராவது வாருங்கள் இங்கே!'' என்று அவள் உரத்த குரலில் கத்திவிட்டு தாற்காலியை வேகமாகத் தள்ளிக் கொண்டு அப்பால் ஓட முயற்சித்தாள். நலிந்த அவள் உடலில் அதற்குப் போதிய சக்தி இருக்கவில்லை. மிருகத்தையொத்த பலத்துடன், மென்மையான அவளது கழுத்தை ஜகதீசனின் கரங்கள் நெறிக்கத் தொடங்கின. மேலே அவளால் கூவி எவரையும் உதவிக்கு அழைக்க முடியாது தொண்டையிலேயே வார்த்தைகள் தடைப்பட்டன. கண்கள் பிதுங்கின. மூச்சுத் திணறியது. அதற்குமேல் என்ன நடந்தது என்பது தெரியாது அவள் உணர்வற்றுப் போய் விட்டாள்.



## 50

மஞ்சுளா மட்டும் கங்கம்மாள் வீட்டில் தனியாக இருந்தாள். அந்தத் தெருவில் வசித்த கர்ப்பிணிப் பெண் ஒருத்திக்கு உடம்பு சுகமில்லை என்று கேள்விப்பட்டு அங்கே உதவி செய்ய விரைந்திருந்தாள் அத்தை கங்கம்மாள். கடைத் தெருவரை போய் வருகிறேன். பிற்பகல் இரண்டு மணிக்குத்தான் வருவேன்; எனக்காக நீ சாப்பிடாது காத்திருக்க வேண்டாம்'' என்று முன்கூட்டியே எச்சரித்து விட்டு வெளியே சென்றிருந்தார் அத்திம்பேர் சுந்தரேசன். இரண்டு மாத காலமாக அந்தக் குடும்பத்தில் மீண்டும் வந்து தங்கி வசிக்க நேர்ந்த மஞ்சுளாவிற்கு அடிக்கடி வீட்டிலே தனியாக இருந்து பழக்கமாகி விட்டிருந்தது. இம்முறை அவள் இவ்வளவு நாட்கள் தங்க நேரும் என எதிர்பார்க்கவில்லை.

அவள் நினைத்தபடி ஒரு சில தினங்களில் வேறு ஒரு வேலை கிடைத்துவிடவில்லை. ஒரு வாரத்திற்குள் போய் விடலாம் என்று எண்ணித்தான் அங்கு வந்திருந்தாள். சிந்தாமணி அவள் பின்னால் பெட்டியைச் சுமந்துவர, ஒரு நாள் அஸ்தமிக்கும் சமயம் கங்கம்மாள் வீட்டுக் கதவை வந்து தட்டினாள் மஞ்சுளா. அவளைக் கண்டவுடன் அத்தையம்மாளின் முகம் மலர்ந்து விட்டது. ''வாம்மா வா!'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

''நீங்கள் வித்தியாசமாக நினைக்கக்கூடாது. எங்கு போனாலும் என் விதி என்னை நிலைத்து நிற்கவிட மாட்டேன் என்கிறது. அந்தப் பங்களா வீட்டில் வேலை பார்க்க முடியவில்லை. வந்து விட்டேன். ரொம்ப மன்னிக்க வேண்டும்'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு உள்ளே வந்தாள்.

கங்கம்மாளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பிறகு பேசிக் கொள்வோம் என்று எண்ணியவளாக ''பரவாயில்லையம்மா. இந்த வீடு உன்னுடையது என்று எண்ணிக் கொள் என முன்பே

சொல்லியிருந்தேனே. வேறு இடத்தில் உனக்குப் பிடித்தமான வேலை கிடைக்கும்வரை நிம்மதியாக எங்களுடன் நீ இரு'' என்று ஆறுதலாகக் கூறினாள். சிந்தாமணி அங்கே அதிகநேரம் நிற்கவில்லை. பெட்டியை உள்ளே கொண்டு வந்து வைத்துவிட்டு, ''அத்தை! நீங்கள் பார்த்து அனுப்பினீர்கள். உங்களிடமே கொண்டு வந்து இந்தப் பெண்ணை ஒப்படைப்பதுதான் முறை என்று எண்ணியே அழைத்து வந்தேன். எனக்கு அதிக நேரமில்லை. உடனே ஊர் திரும்ப வேண்டும், வரட்டுமா?'' என்று விடைபெற்றுக் கொண்டார். மஞ்சுளாவைப் பிரிய வேண்டுமே என்ற நினைவு அவர் நெஞ்சை என்னவோ செய்தது. ''வேறு உத்தியோகத்திற்குப் போனாலும் எங்களையெல்லாம் மறந்து விடாதீர்கள்! கடிதம் போட்டுக் கொண்டிருங்கள்'' என்று விளையாட்டாகச் சொல்வது போல் தமது உள்ளன்பைத் தெரிவித்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

இரவு போஜனத்திற்குப் பிறகு மாடியறைக்கு இருவரும் உறங்கச் சென்றார்கள். கங்கம்மாளுக்கு அதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை. ''உன்மேல் குற்றம் சொல்ல மாட்டேன் மஞ்சு! நாராயணன் வீட்டில் வேலை பார்ப்பது என்பது மிகவும் சிரமமான காரியந்தான். யாரும் அங்கே அதிக நாட்கள் தங்க முடிவதில்லை'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள். பரந்த உள்ளம் கொண்ட அம்மூதாட்டியிடம் ஒரு பொய் சொல்ல நேர்கின்றதே என எண்ணி மஞ்சுளா கலங்கிப் போனாள். ஆனால் நடந்த உண்மையைச் சொல்ல அவளுக்கு நா வரவில்லை. என்ன இருந்தாலும் கங்கம்மாளுக்குக் கிரிதரன் நெருங்கிய பந்து. அவமானகரமாக அவன் தன்னிடம் நடந்து கொண்டான் என்று எப்படிச் சொல்லமுடியும்? சொன்னால் மன வேதனையும் உறவினர்கள் இடையே வீண் மனஸ்தாபமும் ஏற்படலாம்.

மேலும் இது மாதிரியான விஷயங்களை வெளியே சொல்லாமல் இருப்பதுதான் புத்திசாலிகளுக்கு அழகு. கங்கம்மாள் கிரிதரன் மீது மட்டற்ற அபிமானம் கொண்டவள்; தன் சொந்த மகனைக் காட்டிலும் ஒருபங்கு மேலாக நேசிக்கும்



பெருந்தன்மை உள்ளம் கொண்டவள். கிரிதரன் பால் கொண்ட அன்பின் காரணமாக ஒரு சமயம் அவள் அந்தக் கதையை நம்பாவிட்டால்!... இதென்ன கூத்து? இந்தப் பெண் போன இடமெல்லாம் ஆண்பிள்ளைகள் தவறாக நடந்து கொள்கிறார்களே? யசோதா கணவன் கைலாசம் முறை தவறி நடந்து கொண்டான். இப்பொழுது நாராயணன் மகன் கிரிதரன் கேவலமாக நடந்து கொண்டான். இவளைவிட உலகில் அழகான பெண்களே இல்லையா? இதில் ஏதோ சூது இருக்கிறது. குற்றம் அந்த ஆண்களுடையது அல்ல. இவளுடையதுதான் என்று சட்டென்று வேறு விதமாக அம்மூதாட்டி எண்ணிவிட்டால்?

'தங்கமான மனம் கொண்ட அந்தம்மாளின் அபிப்பிராயத்திலே தவறுவதைவிட ஒரு பொய் சொல்வதில் குற்றம் ஏதுமில்லை' எனக் கணப்பொழுதில் பலவும் சிந்தித்து மஞ்சுளா பிறகு மெல்லத் தொடர்ந்தாள். ''நான் பயிற்சியற்ற நாதிப் பெண் என்று சௌமினியம்மாள் என்மீது அடிக்கடி குற்றங் கண்டு கொண்டிருந்தார்கள். அவர்களது சுடு மொழியைத் தாளமுடியாது நானே வேலையினின்று விலகி விட்டேன். என்மேல் தவறு இருக்கிறது என்று தாங்கள் எண்ணினால் தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்'' என்றாள் தணிந்து குழைவான குரலில்.

''எனக்கென்னம்மா கோபம்! முக்கியமாக அந்தப் பெண் சந்திராவுக்கு நீ ஆறுதலாக இருப்பாய் என எண்ணியே அனுப்பினேன். உனக்குப் பிடிக்கவில்லை. அதனால் வந்து விட்டாய். அதில் தவறு என்ன? கவலைப்படாதே. உனக்கு மறுபடியும் நல்ல வேலை ஒன்று கிடைக்கும் வரை நீ இங்கேயே இரு. அவசரப்பட்டுக் கொண்டு எக்கச்சக்கமான உத்தியோகங்களில் போய் அகப்பட்டுக் கொள்ளாதே! நிதானித்துப் பார்த்து வேலை ஏற்றுக்கொள். எவ்வளவு நாள் ஆனாலும் சரி, நீ இங்கே எங்களுடன் எங்கள் பெண்போல இருக்கலாம். நாங்கள் சாப்பிடும் அரை வயிற்றுக் கஞ்சியை உன்னுடன் பகிர்ந்து கொண்டால் ஒன்றும் நாங்கள் ஏழையாகி விடமாட்டோம். அத்திம்பேர் இதை உன்னிடம் எடுத்துச்

சொல்லச் சொன்னார்'' என்று அபயம் அளித்தாள் கங்கம்மாள்.

அம்மூதாட்டியின் கபடமற்ற அன்பு அவள் உள்ளத்தைத் தொட்டது. கண்கள் கலங்கின. 'இந்த உத்தமியிடம் பொய் சொல்ல நேர்ந்ததே' என தன்னையே நொந்து கொண்டாள். ''மாமி! உங்களுக்கு என் நன்றியை எப்படித் தெரிவிப்பது என்றே புரியவில்லை'' என்று உணர்ச்சியுடன் கூறிவிட்டு, அந்தம்மாளின் கரங்களை அன்புடன் பற்றிக் கொண்டாள்.

சுந்தரேசன் தம்பதிகள் கருணை உள்ளம் கொண்டவர்கள், பரோபகாரிகள் என்பதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்குப் பாரமாக அங்கிருக்க அவள் விரும்பவில்லை. ஒழிந்தபோது கடைத் தெருவுக்குச் சென்று வீட்டிற்கு வேண்டிய சாமான்களைத் தன் பணத்தைக் கொண்டு வாங்கி வந்தாள். கங்கம்மாளை ஏதும் செய்யவிடாமல் காலையிலிருந்து இரவுவரை வீட்டுக்காரியங்களைத் தானே கவனிக்கலானாள்.

சுந்தரேசனும் அவர் மனைவியும் திரும்பி வரும் பொழுது மிகவும் களைத்திருப்பார்கள். பசியாக இருப்பார்களென எண்ணி, பகல் போஜனத்தைச் சீக்கிரமே தயாரித்து அடுப்பருகில் மூடி வைத்துவிட்டு வெளியே வந்தாள் மஞ்சுளா. அன்று காலைப் பத்திரிக்கையில் கண்ட ஒரு விளம்பரம் நினைவுக்கு வரவே, பத்திரிகையைத் தேடி எடுத்துக் கொண்டு முன் அறைக்குச் சென்றாள்.

அத்திம்பேரின் மேஜையருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, பேனா காகிதம் சகிதம் மனு எழுத உட்கார்ந்தாள். எப்பொழுது பி.ஏ. பரீட்சையில் அவள் தோல்வியுற்றாளோ அன்று முதல் ஆரம்பித்தது இந்த வேலை தேடும் பிரச்னை. அது இன்னமும் விட்டபாடில்லையே! என எண்ணி மனம் புழுங்கினாள். மீண்டும் பத்திரிகையை திருப்பி அந்த விளம்பரத்தைத் தனக்குள் ஒருமுறை நன்றாகப் படித்துக் கொண்டாள். 'முந்தைய அனுபவங்களைத் தெரிவித்தல் நலம்' என்று விளம்பரத்தின் முடிவில் கண்டிருந்த குறிப்பைப் படித்ததும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'பள்ளிக் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டது. யசோதா



சேவியினால் இரவில் விரட்டியடிக்கப்பட்டது. கிரிதரனால் பலவந்தப் படுத்தப்பட்டது இவைகள்தானே அவள் அறிந்த அனுபவங்கள்? இவைகளை எழுதினால் எந்த ஸ்தாபனம்தான் வேலை கொடுக்கும்?

'இதென்ன வாழ்க்கை' என மனம் கசந்து பத்திரிகையை மூடி வைத்துவிட்டுப் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

தனது கல்வித் திறமை இவைகளை சுருக்கமாகக் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தை விரைவில் எழுதி முடித்தாள். மரத்தில் கல் எறிந்தால் காய் விழுந்தாலும் விழும். கல் விழுந்தாலும் விழும். அதற்காகக் கல் எறியத் தயங்குவானேன்? முயற்சி செய்து பார்ப்பதில் குற்றம் ஒன்றும் இல்லையே எனத் தன்னைத் தேற்றிக் கொண்டு, கடிதத்தின் உறைமீது விலாசத்தை எழுதி முடித்தாள். உறைக்குள் கடிதத்தைப் போட்டு ஒட்டி ஒழுங்கு செய்துவிட்டு எழுந்திருந்தாள். அதுசமயம் யாரோ கதவை வேகமாக தட்டும் ஓசை கேட்டது.

அத்திம்பேர் திரும்பி விட்டார் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டு ஆவலுடன் விரைந்து சென்று கதவைத் திறந்தாள் மஞ்சுளா. உள்ளே வந்து நின்ற கிரிதரனைக்கண்டதும் அவள் மிகவும் திடுக்கிட்டு விட்டாள். அச்சமும் குழப்பமும் தாளமுடியாது அவள் நெஞ்சம் பதைபதைத்தது. ஆனாலும் தன் பயத்தை வெளியே காட்டிக் கொள்ள அவள் விரும்பவில்லை. ''அத்தையும் அத்திம்பேரும் வெளியில் போய் இருக்கிறார்கள். வர மணி இரண்டாகும்'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அவனை உறுத்துப் பார்த்தாள்.

''அப்படியானால் மிகவும் நல்லதாகிவிட்டது. தங்களிடம் முக்கியமான ஒரு விஷயத்தைத் தனிமையில் பேச நான் விரும்பினேன்'' என்றான் கிரிதரன்.

மஞ்சுளா மிரண்டு விட்டாள். உள்ளமும், உடலும் நடுங்க, நாத்தடுமாற அவள் ''தயவு செய்து போய்விடுங்கள். தனியாக பேச நமக்குள் விஷயம் ஏதும் கிடையாது'' என்றாள் மெல்லிய குரலில்.

''உங்களது அருமையான பொழுதை வீணாக்கும் ஆசை எனக்கில்லை'' என்று கூறிவிட்டு, ஏதோ மேலே பேச வந்தவன் மேஜை மீது கிடந்த கடிதத்தைக் கண்ணுற்று விட்டு நிறுத்தினான். மஞ்சுளாவின் முகம் சிவந்துவிட்டது. ''வேலைக்கு மறுப்போட்டுக் கொண்டு அவள் பிடிவாதிக் கொண்டிருக்கும் உண்மை அவனுக்கு விளங்கி விட்டதோ?'' என எண்ணிக் கலங்கி விட்டாள்.

மெல்ல அவள் பக்கம் திரும்பிய கிரிதரன், ''அப்படி பெஞ்சியின் மீது உட்காருங்கள். நீங்கள் மனக்கிலேசம் அடையும் அளவு அப்படி நாம் ஒன்றும் தனியாக இருக்கவில்லை. வாசலில் நிற்கும் வண்டியில் சிந்தாமணி இருக்கிறார்'' என்று கூறிவிட்டு ஊஞ்சல்மீது சென்று அமர்ந்து கொண்டான்.

ஓரக்கண்ணால் வெளியே பார்த்தாள் அவள். அவன் கூறியது உண்மையென்று தெரிந்ததும் சற்று மன அமைதியடைந்து உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அவன் மீது ஏற்பட்டிருந்த சினம் மாத்திரம் தணியவில்லை. எதற்கும் இன்று நேருக்கு நேர் கேட்டு விடுவோம். இந்த நாடகமெல்லாம் எதற்கு? என்று கறுவிக் கொண்டு ''தயவு செய்து வந்த காரியத்தைப் பற்றி சீக்கிரம் சொல்லுங்கள்'' என்றாள்.

''நீங்கள் வேறு வேலையில் அமராது இருந்தால் உங்களை உடனே அழைத்து வரும்படி சந்திரா மிகவும் கேட்டுக் கொண்டாள். அதனால் வந்தேன்'' என்றான். மீண்டும் அவன் பார்வை மேஜை மீது இருந்த கடித உறையின் பக்கம் சென்றது. அதைக் காண மஞ்சுளாவுக்குப் பொறுக்க முடியவில்லை. ''பொருளாதார நெருக்கடியான இந்தச் சமயம் சட்டென்று வேறுவேலை கிடைப்பது கஷ்டம். இது நான் அறியாத உண்மையல்ல. என்னைத் தாங்கள் பரிகசிக்க வேண்டியதில்லை. வேலையின்றி, உண்ண உணவின்றிப் பட்டினி கிடந்து இறந்தாலும் சரி, ஆனால் மீண்டும் நான் உங்கள் வீட்டு உத்தியோகத்திற்கு வரப் போவதில்லை'' என்று சீறினாள்.



கிரிதரன் ஊஞ்சலினின்று எழுந்து நின்றான். அவனுக்கும் கோபம் தாள முடியவில்லை. ''தாயை இழந்து விட்டதனாலோ என்னவோ சகோதரி தங்கள்மீது கரை காணாத பாசம் கொண்டிருக்கிறாள். இரண்டு தினங்களாக ஜுர வேகத்தில் நான் உடனே கையுடன் தங்களை அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று புலம்பிக் கொண்டிருக்கிறாள். அதைக் காணச் சகிக்க முடியாது நான் இங்கே விரைந்தேன். அதுவும் அவள் இனி அதிக நாட்கள் ஜீவிக்க மாட்டாள் என்று எங்கள் குடும்ப வைத்தியர் சொல்லி விட்டதனால் மனம் தாளாது ஓடி வந்தேன். அவளது கடைசிக் காலத்துக் கோரிக்கையையாவது பூர்த்தி செய்வோம் என்று ஆவலில் நான் முன்பின் யோசிக்காது வந்து விட்டேன்...'' என்று முடிக்காது நிறுத்தினான். சினத்தினால் சிவந்த விழிகளால் அவளை வெறித்துப் பார்த்தான்.

மஞ்சுளா திடுக்கிட்டு விட்டாள். சந்திராவின் உடல் நிலையைப் பற்றிக் கேட்டதும் அவள் உள்ளம் குழைந்து விட்டது. கண்கள் கலங்கின. ஆனால் கிரிதரன் மீது கொண்டிருந்த அந்தக் கோபம் குறையவில்லை.

''நான் ஏன் வர மறுக்கிறேன் என்று உங்கள் நெஞ்சத்தையே கேட்டுப் பாருங்கள்'' என்று படபடத்தாள்.

கிரிதரன் மௌனமாக மீண்டும் அவளை வெறித்து நோக்கினான். ''அன்றொரு நாள் தோட்டத்திலே வந்து அந்திப் பொழுதில் என்னவெல்லாமோ பேசினீர்கள். இவள் ஏழைப்பெண், எதுவானாலும் சொல்லலாம் என்று துணிவு, பணம் படைத்து விட்டோம், பெண்மையை விலை கொடுத்து வாங்கி விடலாம் என்ற கர்வம்! இல்லையா? அதற்குப் பின்னராவது என்னைப் புரிந்து கொண்டீர்களா? மறுபடி ஒருநாள் இரவு நோயாளியான சிந்தாமணியை நான் கவனித்துவிட்டுத் திரும்பும் சமயம் மரங்கள் அடர்ந்த இருள் நிறைந்த தோட்டத்திலே எத்தனை கேவலமாக நடந்து கொண்டீர்கள். மரத்தின் பின் மறைந்திருந்து திடீரென்று ஓடிவந்து கரத்தைப் பற்றிக் கொண்டு...'' என்று கூறிவிட்டு நாத் தழுதழுக்க நிறுத்தினாள்.

''என்ன சொல்கிறீர்கள்? இருளில் வந்து தங்களை நான் பலவந்தம் செய்தேனா! இதென்ன குற்றச்சாட்டு?'' என்றான் திகைப்புடன்.

''நீடித்து தங்கினால் ஆபத்து என்று வெளியே கிளம்பினேன். என் மானத்தைவிடத் தங்கள் பணம் பெரியது என்ற நினைவில் துணிவாக அங்கே வர அழைக்க வந்தீர்களா?'' என்று கேட்டாள் சினம் பொங்கிய உரத்த குரலில்.

கிரிதரனின் முகம் ரத்தமெனச் சிவந்து விட்டது. நெற்றி மீது துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு ஒரு கணம் சிந்தித்தான். ''புரிகிறது இப்பொழுது எனக்கு. திடீரென்று வேலையை விட்டு நீங்கள் கிளம்பியதும் நானும் தங்களைப் பற்றித் தவறாக எண்ணி மனம் வெகுண்டது உண்மையே. என் சகோதரி போன்று நானும் தாயற்றவன் என்ற காரணத்தினாலோ அல்லது வேறு எதனாலோ எனக்கே புரியாது உள்ளத்திலே பொங்கிப் புறப்பட்ட அன்பின் பெருக்கால் நான் குற்றம் புரிந்து விட்டது உண்மை. உங்களிடம் அதற்கு மன்னிப்புக் கேட்க விழைந்ததும் உண்மை. சந்தர்ப்பம் வாய்க்காததனால் வாளா இருந்து விட்டேன்.

''அன்று அந்திப் பொழுது உணர்ச்சி வசப்பட்டு ஏதேதோ பிதற்றி விட்டேன். அதற்காகப் பன்முறை வருந்தினேன். தயவு செய்து அந்தச் சம்பவத்தை மறந்து என்னை மன்னித்து விடுங்கள். அதுமாதிரியான நிகழ்ச்சி மீண்டும் ஏற்படாது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். என்னை நம்புங்கள்!'' என்றான் கெஞ்சும் குரலில்.

'இனி உங்களை எப்படி நம்பமுடியும்?' என்று பொருள் பட நெற்றியைச் சுருக்கிக் கொண்டு ஏளனமாக அவனைப் பார்த்தாள் அவள்.

''இரண்டாவதாக என் மீது சுமத்தப்பட்ட குற்றம் அபாண்டமானது. அப்படிப்பட்ட கயவன் நான் அல்ல'' என்றான் கிரிதரன்.

''வேடிக்கைதான் இது. நான் வேண்டுமென்றே புனைந்து சொல்கிறேனா என்ன?'' என்று அதட்டினாள் மஞ்சுளா.



கிரிதரன் கொஞ்சநேரம் வாளாவிருந்தான். திடீரென்று ஏதோ கண்டு பிடித்தவன் போல் அவள் பக்கம் திரும்பினான்.

''இந்தச் சம்பவம் நடந்தபோது சுமார் மணி என்ன இருக்கும் என்று சொல்ல முடியுமா?'' என்றான்.

'இதென்ன பெரிய குறுக்குக் கேள்வி?' என்கிற தோரணையில் மஞ்சுளா அசட்டையாக, ''சுமார் எட்டு மணியிருக்கும்'' என்றாள்.

கிரிதரனின் சாம்பிய வதனம் பிரகாசமடைந்தது. உதட்டிலே சிரிப்பு நிழலாடியது. ''தங்களிடம் அன்று இரவு இருளில் வந்து துன்பம் கொடுத்தது நான் அல்ல என்பதை எந்த நியாய சபையிலும் யார் முன்னாலும் அஞ்சாது நான் நிரூபிக்க முடியும். ஏன் என்றால் சிந்தாமணி நோயாக இருந்த ஐந்து தினங்களும் நான் தொழிற் சாலையிலிருந்து நடு இரவிற்கு மேல்தான் வீடு திரும்புவது வழக்கமாக இருந்தது. இதைத் தக்க ஆதாரங்களுடன் தங்களுக்கு நிரூபிக்க முடியும். அப்பொழுது என்னை நம்புவீர்கள்.

''மேலும் தாங்கள் எண்ணும் அளவுக்கு அத்தனை கயவன் அல்ல நான். என் சகோதரனைப் பற்றி உங்களிடம் ஒரு உண்மையைச் சொல்லத் தயங்கிக் கொண்டு மறைத்து வைத்திருந்தேன். அது குற்றந்தான். ஒப்புக் கொள்கிறேன். என் சகோதரன் ஜெகதீசன் சித்த சுவாதீனமற்றவன். பார்வைக்கு சாதாரண மனிதன் போல்தான் காணப்படுவான். திடீரென்று மூளைக் குழப்பம் ஏற்படும். அந்தச் சமயம் ஒருசில தினங்கள் அவன் விபரீதமாக எல்லோரிடமும் நடந்து கொள்வான். இந்தக் காரணத்தினால்தான் அவனை நாங்கள் வெகுகாலம் ஒரு சிகிச்சை விடுதியில் விட்டு வைத்திருந்தோம்'' என்று கூறிவிட்டு, மேலே முடிக்காது நிறுத்தினான். தனது குடும்ப ரகசியங்களையெல்லாம் வெளியிட நேர்ந்ததே என வருத்தம் அடைந்தான்.

''நூற்றுக்கு நூறும் உண்மை. என்னை நம்புங்கள். உயரம், சாயல், குரல் முதலிய பலவற்றில் எனக்கும் என் சகோதரனுக்கும் அதிக ஒற்றுமை உண்டு. பகலிலேயே பலர்

எங்கள் இருவரைக் கண்டு அடையாளம் தெரியாது திகைத்திருக்கின்றனர். இரவில், இருளில் உங்களுக்கு அடையாளம் புரியாதது பற்றி நான் ஆச்சரியப்படவில்லை'' என்று கூறிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தான்.

மஞ்சுளா மௌனமாகவே இருப்பதைக் கண்டதும் அவன் மேலே தணிவான குரலில் பேசலுற்றான். ''நான் குற்றமற்றவன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. உங்களது மென்மையான உள்ளத்தைப் புரிந்து கொள்ளாது ஏதோ மிருகத்தனமாக உணர்ச்சி வசத்தில் பேச வந்து உங்களை மிகவும் மனம் நோகச் செய்து விட்டேன். அதற்காக என்னை மன்னிக்கும்படி மீண்டும் வேண்டிக் கொள்கிறேன். மனம் விட்டுப் பேசியதனால் எனக்கு இப்பொழுது எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது. ஒரு தரம் தவறாக நடந்து கொண்டதனால் என்னைத் தாங்கள் மகா மகா அயோக்கியன், பெண்மையை விலைக்கு வாங்க புறப்பட்ட பிசாசு எனத் துச்சமாக எண்ணி விட்டீர்கள். உண்மையான காரணம் புரியாது, சொல்லாமல் கொள்ளாமல் நோயாளியை விட்டு விட்டு வெளியேறிவிட்ட பொறுப்பற்ற பெண்மணி, அகந்தை பிடித்தவள் என்று நானும் தங்களைத் தவறாக எண்ணிக் கொண்டிருந்தேன். இப்பொழுது பரஸ்பரம் மனம் தெரிந்து விட்டது. இனி உங்கள் இஷ்டம். என் சகோதரியின் கடைசி விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மீண்டும் எங்கள் இல்லத்தில் வந்து அவளுக்குத் துணையாக இருக்க வேண்டுகிறேன். தங்களுக்கு என்னாலும் என் சகோதரனாலும் எந்த விதமான தீங்கும் ஏற்படாது என உறுதியளிக்கிறேன். பிறகு தங்கள் விருப்பம்'' என்று தணிந்த குரலில் கூறிவிட்டு, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

மெல்லத் தலையை நிமிர்த்திய மஞ்சுளாவின் கண் இமைகள் நனைந்து இருந்தன.

''நான் வருகிறேன். அத்தை, அத்திம்பேர் இருவரிடமும் உத்தரவு வாங்கிக் கொண்டு வரும் மட்டும் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மெல்லப் புன்னகை பூத்தாள். அவள் கண்களில் மிதந்த கருணை வார்த்தைகளால் கூற முடியாத பல உண்மைகளை அவனுக்குச் சொல்லாமலே



சொல்லின. முதல் முதலாகப் பல நாட்களுக்குப் பிறகு கிரிதரன் தனக்குள்ளே மெல்லச் சிரித்துக் கொண்டான்.

## 51

சந்திரா நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். சில தினங்களாக அவளைக் கடுமையாக பாதித்த காய்ச்சல் குறைந்து விட்டதனால் ஏற்பட்ட உடல் அயர்வும், தன் ஆருயிர் சிநேகிதி திரும்பி வந்து விட்டாள் என்பதனால் ஏற்பட்ட மன நிம்மதியும் அவளை ஆழ்ந்த நித்திரை வசப்படுத்தியிருந்தது. விடிவிளக்கு ஒன்றை மட்டும் எரியவிட்டு, பிரகாசமான மற்ற விளக்குகளையெல்லாம் நிறுத்திவிட்டு ஜன்னல் அருகே வந்து நின்றாள் மஞ்சுளா. முன்போல் சந்திராவுக்கு அவள் செய்ய வேண்டிய பணிவிடைகள் மிகவும் அதிகம் இருக்கவில்லை.

நோயாளியின் உடல் நிலையைப் பூரணமாக அறிந்த குடும்ப வைத்தியர், அவளுக்குத் தக்க பணிவிடைகள் செய்வதற்குத் தேர்ச்சி பெற்ற நர்ஸின் உதவி கட்டாயம் தேவை என்று கண்டிப்பாகக் கூறியிருந்ததனால் கிரிதரன் பட்டணத்திலிருந்து வந்த நர்ஸ் பெண்மணியைத் திரும்ப அனுப்பவில்லை. தனது கடமைகளை ஒழுங்காகச் செய்யாது நோயாளியைத் தனியே விட்டுவிட்டு அவள் சென்றதனால்தான் சந்திராவின் உயிருக்கே ஆபத்து வரும்நிலை ஏற்பட்டது என்று அவள்மீது அவனுக்கு வெகு கோபம். எனினும் வைத்தியரின் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கவே அவளை அங்கு நீடித்து வேலை பார்க்க அனுமதித்திருந்தான்.

இரவும் பகலும் அருகிலிருந்து அன்புடன் கவனிக்க மஞ்சுளா வந்ததும் புது நர்ஸ் அம்மாளுக்கு இன்னமும் அதிகம் ஓய்வு கிடைத்து விட்டது. வைத்தியர் கட்டளைப்படி அன்றாடம் தான் கொடுக்க வேண்டிய மருந்துகளைத் தவறாமல் கொடுத்து, செய்ய வேண்டிய காரியங்களைத் தவறாது செய்து முடித்துவிட்டு மிஞ்சிய பொழுதை அவள் தோட்டத்திலும்

கடைத் தெருக்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் கழித்துக் கொண்டிருந்தாள்.

சிரமமான காரியங்கள் ஏதும் இல்லாத போதிலும், நோயாளியின் அருகில் அமர்ந்து இரவு முழுவதும் கண்காணிக்க வேண்டியிருந்ததனால் சரியான உறக்கம் இன்றி மஞ்சுளா மிகவும் களைத்துச் சோர்வுற்றிருந்தாள்.

அவளது தங்கநிற வதனம் வாடிக் கறுத்துப் போய் விட்டிருந்தது. கண்களைச் சுற்றிலும் களைப்பு நிரையிட்டிருந்தது. தோட்டத்தினின்று குளுமையாக வந்து வீசிய பூங்காற்றை மெல்ல முகர்ந்த வண்ணம் ஜன்னல் மீது சாய்ந்து கொண்டு, கண்களை மூடிக் கொண்டாள். வெகுநேரம் அவளால் அந்த நிம்மதியின் சுகத்தை அனுபவிக்கக் கூடவில்லை. வராந்தாவில் யாரோ நடந்து வரும் ஓசை கேட்கவே சட்டென விழித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள். மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு அடிமேல் அடி வைத்து உள்ளே வந்தான் கிரிதரன். ''சந்திரா இப்பொழுதுதான் தூங்க ஆரம்பித்தார்கள்'' என்று எச்சரித்துவிட்டு, சுவர் ஓரமாக ஒதுங்கிச் சென்று நின்று கொண்டாள் மஞ்சுளா. கிரிதரன் குற்றமற்றவன், கண்ணியவான். அவன் தன் லட்சியங்களினின்றும் வழுவாதவன் என்ற உண்மையை அவள் உணர்ந்த அன்றிலிருந்து அவளது அன்பு அவன்பால் பன்மடங்காகப் பெருகி விட்டதனால் அவனைக் கண்ட போதெல்லாம் அவள் உள்ளம் உவகை வெள்ளத்தில் தத்தளித்தது. அவன் குரலைக் கேட்ட போதெல்லாம் அவள் மேனி பரவசத்திலே சிலிர்த்தது. அன்பு கனிந்த அவனது கண்களைச் சந்திக்க வெட்க மடைந்தவளாக முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பிக் கொண்டாள்.

சப்தமிடாது படுக்கையருகே வந்து நின்றான் கிரிதரன். தன் சகோதரியின் கபடமற்ற இனிய முகத்தை ஏக்கத்துடன் சில நிமிஷங்கள் பார்த்தபடியே நின்றான். 'பதினைந்து தினங்களுக்குப் பிறகு இன்றுதான் முகத்தில் தெளிவு காணப்படுகிறது' என்று தனக்குள் மெல்ல வருத்தத்துடன் சொல்லிக் கொண்டான்.



அவன் சொல்வதை மஞ்சுளா மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். தங்கைக்காக அவன் படும் வேதனை அவள் மனத்தை மிகவும் உருக்கியது. ''சந்திரா இரண்டு தினங்களாக திடீரென்று மாறிவிட்டிருக்கிறாள். பேச்சிலே தெம்பும் முகத்திலே அதிகமானதொரு பிரகாசமும் காணப்படுகின்றன. திடீரென்று நோயின் நடுவே தோன்றியுள்ள இந்தத் தெளிவு எனக்கு மிக்க கவலையைக் கொடுக்கின்றது. எங்கள் குடும்ப தீபம் விரைவில் அணையப் போகிறதோ என்னவோ தெரியவில்லை. அணையும் தறுவாயில்தான் விளக்கு பிரகாசமாக எரியும் என்பார்கள்'' என்று கூறிவிட்டு, துக்கத்துடன் மேலே பேசாது நிறுத்தினான்.

அவனது துன்பம் மஞ்சுளாவின் மனத்தை மிகவும் பாதித்தது. ''நீங்கள் வீணாகப் பயப்படாதீர்கள். பலவும் எண்ணிக் கலங்குகிறீர்கள். பூரணமாகக் குணமாகி விடும் என்பதற்கு அறிகுறி இம்முகத் தெளிவு என்று நான் நினைக்கிறேன். சந்திராவுக்கு அப்படியெல்லாம் ஒன்றும் நேராது. பிறர் மனம் நோகக்கூட பேசத்தெரியாத வெகுளிப்பெண். அவர்களது கருணையே அவர்களை விரைவில் குணப்படுத்திவிடும். பார்த்துக் கொண்டேயிருங்கள். காய்ச்சல் அடங்கி விட்டது போல் உடலில் ஏற்பட்டுள்ள புண்களும் காய்ந்து குணமாகி விடும். கால் நரம்புகள் உறுதியடைந்து எழுந்து நடமாட ஆரம்பித்து விடுவார்கள்'' என்றாள் மெல்லிய குரலில்.

கிரிதரன் அவளை ஏறெடுத்து ஒருமுறை பார்த்து விட்டுச் சோகமாக முறுவலித்தான். ''உங்களுக்கு இருக்கும் நம்பிக்கை எனக்கும் இருந்தால் எவ்வளவோ நலமாக இருக்கும். ஆனால் உண்மையை நான் அறிவேன். அதனால் என்னையே என்னால் ஏமாற்றிக் கொள்ள முடியவில்லை'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்து கொண்டு, கதவின் அருகே சென்று நின்று கொண்டான்.

''வைத்தியரின் தீர்ப்பு தவறாக இருக்கக்கூடாதா?'' என்று கேட்டாள் மஞ்சுளா பதிலுக்கு.

''வைத்தியர் சுந்தரேசன் ஒன்று சொன்னால் அது தவறவே தவறாது. அவர் தீர்ப்பு தவறியது, அவர் வைத்தியம் பலிக்கவில்லை என்றெல்லாம் இதுவரை ஏறுமாறாக எதுவும் நடந்ததேயில்லை. அனுபவமிக்க அவர் எங்களிடம் பொய் சொல்லப் போவதில்லை. எங்களைத் தமது குழந்தைகள் போல் பாவிக்கும் அவர், என்னைவிட சந்திராவின் க்ஷேமத்திலே அக்கறை காட்டுகிறவர். அவரே கைவிட்டு விட்டார் என்றால் இனி யாரும் எதுவும் செய்ய முடியாது என்றுதான் பொருள். ஒவ்வொரு தினமும் அஸ்தமிக்கும் பொழுது, 'ஒரு பகல் கழிந்து விட்டது. எனது சகோதரி இறைவனடியை நோக்கி இன்னும் கொஞ்சம் நகர்ந்து சென்று விட்டாள்' என்ற ஒரு பயங்கரமான நினைவு என்னை வாட்டத் தொடங்கி விடுகின்றது. நான் கோழையல்ல. ஆனால் ரத்தபாசம் என் தைரியத்தையெல்லாம் குடித்து, என்னை ஒரு பஞ்சையாக்கி விட்டது'' என்று துக்கத்திலே கரகரத்த குரலில் கூறிவிட்டு தடுமாறினான், மேலே பேச முடியாது.

கலங்கிய அவனது கண்கள் மஞ்சுளாவை மெத்த வேதனையுறச் செய்தன. ''வருத்தப்படாதீர்கள் என்பதைத் தவிர எனக்கு என்ன விதமான ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை'' என்றாள் குழைவாக.

கிரிதரன் அவள் முகத்தை மீண்டும் ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்தான். ''உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என் சகோதரியின் விருப்பத்தை நிறைவேற்ற நீங்கள் இங்கே திரும்பி வந்தீர்களே, அதற்கு நான் மிக்க நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவளுக்குப் பிடித்த சிநேகிதியான நீங்கள் அவளுடன் இருக்கிறீர்கள் என்பது ஒன்றே எனக்குப் போதிய மன ஆறுதலைக் கொடுக்கிறது'' என்று மொழிந்தவாறு அன்புடன் கூர்ந்து கவனித்தான். மஞ்சுளா தலையைத் தாழ்த்துக் கொண்டாள். பதில் பேசவில்லை. கதவை மெல்லத் திறந்து கொண்டு வெளியே திரும்பிய கிரிதரன் ஒருகணம் தயங்கி நின்றான். ''பல தினங்களாக சேர்ந்தாற்போல் கண் விழித்து நீங்கள் மிகவும் சோர்ந்து விட்டிருக்கிறீர்கள். இன்று இரவு சந்திராவுடன் அந்த



நர்ஸ் பெண்மணி இருக்க ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்'' என்றான் பரிவுடன்.

தன்பால் அவன் காட்டிய பரிவு மஞ்சுளாவுக்கு மிக்க சந்தோஷத்தை உண்டாக்கியது. எனினும் அவள் ''எனக்கு அப்படியொன்றும் சிரமமாக இருக்கவில்லை. நானே சந்திராவை கவனித்துக் கொள்கிறேன்'' என்று மறுத்துப் பேசுமுன் அவன் வராந்தாவைத் தாண்டி தன் அறையின் பக்கம் சென்று மறைந்து விட்டான்.

சிறிது நேரத்தில் பாதரட்சை ஒலிக்க மிடுக்காக நடந்து வந்தாள் நர்ஸ் அம்மாள். அவள் முகம் கடுகடுவென்று இருந்தது. ''பணத்தைக் கொடுத்தால் அடிமை என்று எண்ணி விடுகிறார்கள்...'' என்று தனக்குள்ளே முணுமுணுத்த அவள், மஞ்சுளாவை வெட்டி விடுகிறாப்போல முறைத்துப் பார்த்தாள். ''உங்களைச் சாப்பிடக் கூப்பிடுகிறார்கள் கீழே, நீங்கள் போகலாம்'' என்று அழுத்தலாகக் கூறிவிட்டு, ஒரு நாற்காலியை இழுத்துப் படுக்கையருகே போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். வந்த தினத்திலிருந்து தன்னை பெரும் விரோதியாகப் பாவிக்கும் அந்தப் பெண்மணியிடம் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ள மஞ்சுளா விரும்பவில்லை. ''வந்தனம்'' என்று மட்டும் சுருக்கமாக பதிலளித்து விட்டு வெளியே வந்தாள். கீழே இறங்கிச் சென்று முதலில் உடல் களைப்பிற்கு இதமாக வெந்நீரில் நன்றாக ஸ்நானம் செய்துவிட்டு, வேறு உடை உடுத்திக் கொண்டு சமையலறைக்குள் வந்தாள்.

சந்திராவின் உடல்நிலை பற்றிய விவரம் எப்படியோ வேலைக்காரர்களுக்குள் பரவி விட்டிருந்தனால் முன்போல் அவர்களிடம் கலகலப்பு இருக்கவில்லை. வீட்டைச் சூழ்ந்து நின்ற துயரத்தின் சாயை, அவள் மீது பாசம் கொண்டிருந்த வேலைக்காரர்கள் முகத்திலும் காணப்பட்டது. முன்போல் சமையலறையில் பேச்சும், சிரிப்புமாக இருக்கவில்லை. கிட்டா முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு, என்ன செய்கிறோம் என்ற யோசனையே இன்றி இயந்திரமாக வளைய வந்து

கொண்டிருந்தார். இடியோசை போன்ற அவரது குரல் கூடக் கம்மி விட்டிருந்தது. ஆனால் மஞ்சுளாவைக் கண்ட போதெல்லாம் மாரிகாலத்துக் கரிய வானத்தைக் கிழித்துக் கொண்டு, அபூர்வமாகப் புறப்பட்ட சந்திரனின் ஒளிபோல் புன்னகை அரும்பி மலர்ந்தது.

அவள் திரும்பவும் ஆனந்த நிலையத்திற்கு வந்தது புக்ககத்திற்குச் சென்று தாய் வீடு திரும்பிய தனது மகளின் வரவுபோல் அவருக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது. எனவே அவர் முன்னைவிட அவளுக்கு உணவு பரிமாறுவதில் இரட்டிப்பு மடங்கு சிரத்தைகாட்டினார். ''இதைச் சாப்பிடுங்கள், அதைச் சாப்பிடுங்கள்'' என்று அன்புடன் உபசரித்தார்.

உள்ளே வந்த மஞ்சுளாவை முகமலர்ந்து வரவேற்ற கிட்டா, ''சந்திரா எப்படியிருக்கிறார்கள்?'' என்று முதலில் விசாரித்தார். பிறகு மெல்லச் சிரித்துக் கொண்டு, ''இன்றைக்கு எஜமானியம்மாள் திடீர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களுடன் மாடியிலேயே சாப்பிட வேண்டுமாம். சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான் அம்பி. உங்களை உடனே அங்கே வரச் சொன்னார்கள்'' என்றார். மஞ்சுளாவிற்கு இதைக் கேட்டதும் ஆச்சரியம் தாள முடியவில்லை. சில தினங்களாக எஜமானியம்மாள் தன்னிடம் காட்டும் பரிவும், அன்பும் அவளுக்கு வியப்புக் கலந்த ஒருவித கலவரத்தை உண்டுபண்ணியிருந்தது. இருப்பினும் ஆகட்டும் என தலையை அசைத்து விட்டு, கிட்டாவிடம் விடைபெற்றுக் கொண்டு மாடிப் பக்கம் சென்றாள்.

வழக்கம்போல் நாராயணன் பொழுது சாயுமுன்பே உண்டு உறங்கச் சென்று விட்டதனால், ஜகதீசனும் கிரிதரனும் சிறிய அன்னையுடன் சாப்பிடும் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். சந்திரா கூடச் சேர்ந்து சாப்பிடாததனால் தரை மீது இலைகளை விரித்துப் பரிமாறிக் கொண்டிருந்தான் அம்பிப்பயல். ''இப்படி வந்து உட்கார்! என்ன சங்கோஜம் உனக்கு? கங்கம்மாள் அத்தை என்னிடம் சொன்னார்கள். நீ இவ்வளவு நெருங்கிய உறவினள் என்பது தெரியாமல் முன்பு நான் உன்னை வருத்தப் படுத்தி



விட்டேன். இனிமேல் நீ எங்களுடன் சேர்ந்துதான் சாப்பிட வேண்டும். நீ இந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக எண்ணி தாராளமாக இரு. சங்கோஜப்படாதே'' என்று அன்புடன் பேசிய சௌமினி, அவளது கரத்தைப் பற்றித் தனது அருகே இடது புறத்தில் இலையருகே அமர்த்திக் கொண்டாள்.

அவளது வலது புறத்தில் அடுத்தபடியாக வந்து உட்கார்ந்த ஜகதீசன் மஞ்சுளாவை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டே இருந்தான். சிறிய தாயின் பசப்பான மொழிகளைக் கேட்கப் பிடிக்காதவன் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டு விரைவில் போஜனத்தை முடித்துக் கொண்டு எழுந்து அப்பால் சென்று விட்டான் கிரிதரன்.

''நாலு பேருடன் சேர்ந்து சாப்பிட்டால்தான் உணவு ருசிக்கும். தனியே சாப்பிடுவதனாலோ என்னவோ உன் உடம்பு முன்போல் இல்லையே? ரொம்ப இளைத்துப் போயிருக்கிறாய். உனக்கு ஒழிந்த போது ஒருநாள் நீ எனக்குப் பாடிக் காட்ட வேண்டும். ரொம்ப நன்றாக நீ பாடுகிறாய் என்று ஜகதீசன் உன்னை மிகவும் புகழ்கிறான்'' என்றாள் சௌமினி தொடர்ந்து.

'ஜகதீசன் ஒரு பைத்தியக்காரன். சித்தப் பிரமையில் ஏற்பட்ட குழப்பத்தில் இருளில் ஓடிவந்து பலவந்தம் செய்ய முயன்ற வெறியன்' என எண்ணிய மாத்திரம் மஞ்சுளாவின் மேனி பயத்தில் சிலிர்த்து விட்டது.

''சந்திராவின் உடல்நிலை கொஞ்சம் குணமான பின்பு தடையில்லாமல் ஒருநாள் உங்களுக்குப் பாடிக் காட்டுகிறேன்'' என்று சாமர்த்தியமாகப் பதிலளித்து விட்டு வேண்டா வெறுப்பாக உணவை முடித்துக் கொண்டாள்.

கையைக் கழுவிக் கொண்டு வெற்றிலைத் தட்டை எடுத்துக் கொண்டு வந்த சௌமினி, ''உட்காரம்மா என்ன அவசரம்! நீ நன்றாகக் கேரம் ஆடுவாயாமே, கேள்விப் பட்டேன். என்னுடன் கொஞ்ச நேரம் விளையாடு'' என்று வற்புறுத்தி அழைத்தாள். தன்னையே விழுங்கி விடுகிறவன் போல் பார்த்துக் கொண்டிருந்த ஜகதீசன் முன் அதிகநேரம்

நின்று கொண்டிருக்க மஞ்சுளாவிற்கு அச்சமாக இருந்ததால் ''மன்னித்து விடுங்கள். சிறிது நாட்களாகக் கண் விழித்ததனால் எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது'' என்று இழுத்தாற் போல் கூறினாள்.

''ஆமாம், போய் சீக்கிரம் தூங்கம்மா, பாவம்! ரொம்பக் களைத்துத்தான் இருக்கிறாய். நோயாளிக்குப் பணிவிடை செய்கிறேன் என்று ஒரேயடியாக உன் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாதே! நீ முன்போல் தெம்பாக இல்லை. நாளைக்கு வைத்தியர் வந்தால் உன்னையும் கொஞ்சம் கவனித்து ஏதாவது டானிக் கொடுக்கச் சொல்லப் போகிறேன்'' என்றாள். மஞ்சுளா விரைவில் விடை பெற்றுக் கொண்டு, தனது அறைக்குள் வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டாள். உடல் மிகவும் சோர்ந்து விட்டபோதிலும் அவள் நினைத்தபடி சட்டென்று உறக்கம் வரவில்லை. பலபல சிந்தனைகள் உள்ளத்திலே அலைமோதத் தொடங்கவே படுக்கையில் தூக்கமின்றி வெகுநேரம் புரண்டு கொண்டிருந்தாள்.

## 52

சந்திராவின் உடல்நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் சுந்தரேசன் தம்பதிகள் மிகவும் பதறிப் போய்விட்டார்கள். தன் சகோதரனிடம் கொண்டிருந்த ஏதோ மனஸ்தாபம் காரணமாக அதிகம் உறவு கொண்டாடாது விலகியிருந்த கங்கம்மாள், மனம் கேட்காது தனது வைராக்கியத்தை உதறிவிட்டு, மஞ்சுளாவுடன் கூடக் கிளம்பி விட்டாள். 'அத்தையும் கூட வருகிறார்கள். கவலையில்லை' என்று ஒரு வழியில் ஆறுதலடைந்த போதிலும், வண்டி வீட்டை நெருங்கத் தொடங்கியதும் மஞ்சுளாவின் நெஞ்சு பயத்திலே படபடவென்று அடித்துக் கொண்டது. சௌமினியம்மாள் தன்னை எவ்வாறு வரவேற்பாளோ என்ற அச்சம் வேறு அவள்



உள்ளத்தை உறுத்தியது. 'நேரே சொல்லி விடை பெற்றுக் கொள்ளப் பொறுமையின்றி ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டுக் கோபமாகப் புறப்பட்டுச் சென்ற நீ எந்தத் துணிவில் மறுபடியும் இங்கே வந்தாய்?' என்று கூச்சல் போட்டால்...? எனப் பலவாறு எண்ணிப் பயந்து போயிருந்தாள்.

ஆனால் அவளுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. அத்தையம்மாளைக் கண்டதும் கண்ணீர் விட்டுக் கதறி அழுது ஓடி வந்து கட்டிக் கொண்டாள் சௌமினி. ஒரு வழியாகப் புலம்பித் தன் துக்கத்தை அழுது தீர்த்து ஓய்ந்த அவள், ''நல்லவேளை நீங்கள் இந்தப் பெண்ணையும் கூட்டிக் கொண்டு வந்தீர்கள். இன்று நான் வீரசோழன் பட்டணம் வருவதாகவே இருந்தேன். வந்து உங்களிடம் சொல்லி எப்படியாவது இவளை மறுபடியும் இங்கே அனுப்பி வைக்கும்படி கேட்க உத்தேசித்து இருந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல இருக்கிறது.

''குழந்தை சந்திரா ஜுர வேகத்தில் இவள் பெயரை அடிக்கடி சொல்லிப் புலம்புகிறாள். எங்களால் சகிக்க முடியவில்லை'' என்று துக்கம் தொண்டையை யடைக்கத் தடுமாறினாள். மஞ்சுளாவுக்கு வியப்புத் தாள முடியவில்லை. 'இதென்ன கனவா; உண்மையா? பேசுவது சௌமினி அம்மாள்தானா?' என்றெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இதுமாதிரி சந்தர்ப்பங்களில் கங்கம்மாளுக்கு வெகு சாமர்த்தியமாகப் பேசத் தெரியும். ''சந்திராவுக்கு உடம்பு அதிகமாக இருக்கிறது என்று கிரி சொன்னான். பார்க்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் புறப்பட்டு வந்தோம். மஞ்சுளா இங்கே இருக்க வேண்டும் என்று நீ விரும்பினால் அவளை விட்டுவிட்டுப் போகிறேன். என் நாத்தனாரின் பேத்தி இவள். சிறு வயது, ஏதாவது அசட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் நீ ஆதரித்துக் கொண்டு போகணும். அவ்வளவுதான்'' என்று சட்டென பதிலளித்தாள்.

எவ்வளவோ வற்புறுத்தியும் அத்தையம்மாள் அன்று

இரவே ஊருக்குத் திரும்பிவிட்டாள். ஆனால் மஞ்சுளாவின் வாழ்க்கையில் அன்றிலிருந்து ஒரு பெரிய மாற்றம் காணப்பட்டது. வேலைக்காரர்கள் முன்னைவிட இப்பொழுது அவளிடம் மரியாதை காட்டினர். எஜமானியம்மாள் அன்பைச் சொல்லிலும் செயலிலும் வருஷித்தாள். இந்தத் திடீர் மாற்றத்தின் காரணம் என்ன? இதுபற்றி அதிகம் சிந்தித்து மூளை குழம்பியதே ஒழிய உண்மை புலப்படவில்லை மஞ்சுளாவுக்கு.

''வேலைக்காரி என்பதை மறக்காதே நீ?'' என்று முன்பு ஒருமுறை அவளை அழைத்து வற்புறுத்திக் கூறி மனம் நோகச் செய்த சௌமினி அம்மாள் இப்போது 'நீ இந்தக் குடும்பத்தில் ஒருத்தி என்று கூறுவதை அவளால் நம்பவே முடியவில்லை. சௌமினிக்கு அவளிடம் பாசம் ஏற்படக் காரணம் என்னவாக இருக்கும்? ஏழைப் பெண் மஞ்சுளாவிடம் அவள் என்னதான் எதிர்பார்க்கிறாள்... சிந்தனை நடுவே அவளுக்குத் தாத்தா ரகுபதியின் பொன்மொழி ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. 'உன்னை வெறுப்பவர்கள் திடீரென்று விருப்பம் காட்டினால் ஏமாந்து விடாதேயம்மா. நல்லதுக்கு நரி முட்டையிடாது'. ஸ்ரீதரன், தாத்தா ரகுபதி, சௌமினி, ஜகதீசன் என ஒவ்வொருவரும் அவளது நினைவிலே சுழன்று கொண்டு வந்தனர். தூக்கமின்றிப் புரண்ட மஞ்சுளா தன்னையுமறியாது முடிவில் உறங்கி விட்டாள்.

மறுநாட் காலை அவள் கீழே இறங்கி வந்த பொழுது விடிந்து வெகுநேரமாகி விட்டதை உணர்ந்தாள். விரைவாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு சந்திராவின் தாயின் புகைப்படத்துக்கு மாலை தொடுக்கப் புஷ்பங்கள் சேமிக்கும் நிமித்தம் தோட்டத்திற்குள் பரபரப்பாக விரைந்தாள். மல்லிகைப் புதர் அருகே வந்ததும் திடுக்கிட்டு நின்று விட்டாள்! மல்லிகைக் கொடி வீட்டையொட்டி கட்டப்பட்டிருந்த பளிங்காசனத்தின் மீது சௌமினியம்மாள் உட்கார்ந்து கொண்டு, யாரோ ஒரு புதிய ஆடவனோடு பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. நல்லவேளையாக அவர்கள்



இருவரும் அவளைக் கவனிக்கவில்லை. அப்பால் செல்லவும் முடியாமல், நின்று கொண்டிருக்கவும் பிடிக்காமல் தயங்கிக் கொண்டிருந்த அவள் காதுகளில் அவர்கள் பேசுவது அரை குறையாகத்தான் கேட்டது. ''பணம் காய்க்கும் மரம் இங்கு இல்லை என்பதைத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வா, தெரிந்து கொள்வாய்! சும்மா வந்து தொந்தரவு செய்யாதே என்று முன்பே எச்சரித்தேனே!'' என்று சௌமினி எரிந்து விழுந்தாள்.

''ஐயோ பாவம் உன் மூத்தாள் பெண் சந்திரா மரணப் படுக்கையில் கிடக்கிறாள் என்று மெழுகுபோல் உருகிக் கொண்டு இருக்கிறாய். முன்பு உனக்கு நான் சொன்னது கூட இந்தக் கவலைகள் காரணமாக மறந்து விட்டது போலிருக்கிறது'' என்று பரிகாசமாகப் பேசினான் அந்த ஆடவன். ''நீ நெருப்புடன் விளையாடுகிறாய் என்பதை விரைவில் தெரிந்து கொள்வாய்'' என்று சீறினாள் சௌமினி.

அதற்குப் பின்னர் அவர்கள் பேசியது ஒன்றுமே தெளிவாகக் கேட்கவில்லை. எனினும் மஞ்சுளாவின் நெஞ்சு பயத்திலே துடிக்கத் தொடங்கியது. 'ஒட்டுக் கேட்கிறாயா?' என்று சௌமினி பார்த்துக் கோபம் கொள்ளுமுன் இங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்று எண்ணியவள் விரைவாகப் பின்னால் திரும்பினாள்.

கையில் பிடித்துக் கொண்டிருந்த பித்தளைப் புஷ்பக் கூடை தவறிக்கீழே விழுந்துவிட்டது. கீழே கிடந்த கல் ஒன்றின்மீது மோதியதனால் 'டணால்' என்ற சப்தம் ஏற்படவே திடுக்கிட்ட சௌமினி எழுந்து விட்டாள். ''யாரது?'' என்று கர்ஜனையுடன் அழைத்தாள். இனி விஷயத்தை ஒளிப்பதில் பயனில்லை என்று உணர்ந்த மஞ்சுளா, ''நான்தான், கொஞ்சம் பூப்பறிக்க வந்தேன்'' என்று குழறிக்கொண்டு கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தாள்.

வாட்ட சாட்டமாக மிகவும் நேர்த்தியாக உடுத்திக் கொண்டு வந்திருந்த அந்த மனிதன் தன்னை வியப்புடன் கவனிப்பதை உணர்ந்த மஞ்சுளா கலவரத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''எனது அம்மாஞ்சி சுவாமிநாதன் இவன். இவனை நீ சந்தித்தது இல்லையல்லவா?'' என்று பகட்டாக அறிமுகம் செய்து வைத்த சௌமினி, ''இவள் பெயர் மஞ்சுளா. சந்திராவின் சிநேகிதி. வீட்டு எஜமானருக்கு உறவுக்காரி'' என்று சுருக்கமாகச் சொன்னாள்.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஒரே பார்வையில் அளந்து கொண்ட சுவாமிநாதன், அர்த்த பாவத்துடன் சௌமினியின் பக்கம் திரும்பி மெல்லச் சிரித்தான்.

''யாராவது ஆளிடம் சொல்லி பூக்களைப் பறித்துக் கொண்டுவரச் சொல்வதுதானே? இந்தப் பனியில் ஏன் அலைகிறாய்? எனக்கு காலைப் பொழுதில் தோட்டத்தில் சுற்றுவது வழக்கமாகி விட்டது. உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதே என்றுதான் சொன்னேன். இப்பொழுதுதான் வந்தாயா? இன்னமும் பூப்பறிக்க வில்லையா?'' என்று வினவினாள்.

''இப்பொழுதுதான் வந்தேன். யாருடனோ நீங்கள் பேசிக் கொண்டிருந்தது கேட்டது. அதனால் தயங்கிக் கொண்டு நின்று விட்டேன்'' என்றாள்.

''நீ தாராளமாக வந்திருக்கலாம். சுவாமிநாதனை நீ இதற்குமுன் பார்த்ததில்லை. அதனால்தான் மிரண்டு விட்டிருக்கிறாய். ஒதியமரம் போல் வளர்ந்து நிற்கிறானே என்று பயப்படாதே.-இவன் வெறும் வெற்றுவேட்டு'' என்று துச்சமாகக் கூறிவிட்டு, ''சரி, சீக்கிரம் பூப்பறித்துக் கொண்டு உள்ளே வா. உனக்காக காப்பி சாப்பிட நான் காத்துக் கொண்டிருப்பேன்'' என்றாள் அன்பு கனியும் இனிய குரலில். நல்ல வேளை தப்பினோம் என்று மேலே நகர்ந்து சென்றாள் மஞ்சுளா.

அன்று மாலை சௌமினியம்மாள் வெளியிலிருந்து வந்ததும், நேரே மஞ்சுளாவின் அறைக்கு வந்தாள். ''கடையில் இதைப் பார்த்தேன். உன் ஞாபகம் வந்தது. வாங்கி வந்தேன். என் நினைவாக இதை நீ வைத்துக்கொள்'' என்று சிறு



பெட்டியை அவளிடம் கொடுத்தாள். வியப்பு மேலிட்ட மஞ்சுளா அதைத் திறந்து பார்த்தாள். முத்துப் பதக்கம் தொங்கிய ஒரு சிறு தங்கச் சங்கிலி வெல்வெட்டு மெத்தையில் சயனித்துக் கொண்டிருந்தது.

''இதெல்லாம் எனக்கு எதற்கு?'' என்று குழறிக் கொண்டே பெட்டியை மூடியவாறு அவளிடம் திருப்பிக் கொடுத்தாள்.

''அட அசடே! நீ என் நினைவாக இதை வைத்துக் கொள் என்று உனக்குக் கொடுக்கிறேன். ஏற்க மறுக்கிறாயே! சும்மா வைத்துக் கொள். சங்கு போன்ற அழகான உன் கழுத்தில் வெறும் பாசிமணி மட்டும் தொங்கிக் கொண்டிருப்பதைக் காண எனக்கு என்னவோ போலிருந்தது. சந்திராவிடம் நீ காட்டும் அன்பிற்கு உனக்குத் தங்கத்தால் அபிஷேகம் செய்தால் கூடப் போதாது என்று எஜமானர் ரொம்பவும் சொன்னார். கழுத்தில் போட்டுக் கொள்!'' என்று வற்புறுத்திவிட்டு அப்பால் சென்றாள். அன்று இரவு போஜனத்திற்குப் பின் வேலைக்காரி தைலம்மாள் ஒரு வெள்ளி டம்ளரில் பசும்பாலை நிறைத்துக் கொண்டு வந்தாள். ''உங்களுக்கு அம்மா கொடுக்கச் சொன்னார்கள்'' என்று கூறிவிட்டு மேஜைமீது அதை வைத்துவிட்டுப் போனாள். குங்குமப்பூ போட்டுச் சுண்டக் காய்ச்சிய பால் குடிக்க மிகவும் சுவையாகத்தான் இருந்தது. ஆனால் சௌமினியம்மாள் தன்னிடம் காட்டிவரும் இந்தப் பரிவின் உண்மையைத்தான் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பகல் போஜனத்தை மிதமிஞ்சி உண்டுவிட்டு, களைப்புடன் திண்டின் மீது சாய்ந்து கிடந்த துவாரகராம் சேட்டு, திடுக்கிட்டு விழித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார். சந்திர மண்டலத்தை நோக்கி விரைந்திடும் 'ராக்கெட்' போன்ற வேகத்தில் உள்ளே வந்த சௌமினி தொப்பென்று எதிரே தரைமீது விரித்திருந்த மெத்தையிலே உட்கார்ந்து கொண்டாள். மூக்கின் மீது நழுவிய கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டார் கடை முதலாளி. பற்கள் எல்லாம் தெரிய நகைமுகம் காட்டி கரம் குவித்து நமஸ்கரித்து விட்டு, ''சௌக்கியந்தானே அம்மா!

உங்களைப் பார்த்து ரொம்ப நான் ஆச்சு!'' என்று கொச்சையில்லாப் பச்சைத் தமிழிலே குசலம் விசாரித்தார்.

''ராஜபுதனத்து மண்ணை உதறிவிட்டு உங்கள் மூதாதையர் இங்கே வந்து ஐம்பது வருஷங்களுக்கு மேலாகி விட்டது. நீங்கள் அதனால் பெயரளவிலே மட்டுந்தான் வடநாட்டவர், மற்றபடி சுத்தத் தமிழராகி விட்டீர்கள். இல்லையா?'' என்று பரிகாசமாகக் கேட்டுக் கொண்டே கைப்பையைத் திறந்தாள் ஆனந்த நிலையத்தின் சீமாட்டி.

உட்கார்ந்த இடத்திலிருந்து சேட்டு தமது கண்களைப் பையிலிருக்கும் பொருள்மீது ஓட விட்டார். அதைக் கவனித்து விட்ட சௌமினியின் பவள இதழ்களில் ஓர் ஏளனப் புன்னகை நெளிந்தோடியது. ''இன்னும் சிறிது நேரத்தில் இது தங்களுடைய பெட்டிக்குள் தஞ்சமடையப் போகிறது. அதற்குள் அத்தனை அவசரமா? வருஷங்கள் எத்தனை ஆனால் என்ன? தொழில் குணம் உங்களை விட்டுப் போகுமா என்ன?'' என்று கேலியாகவும் குரோதமாகவும் கேட்டாள்.

துவாரகராம் சேட்டுக்கு சாதாரணமாகச் சட்டென்று கோபம் வரும் வழக்கமே கிடையாது. எதிராளி எவ்வளவு கடுமையாகப் பேசினாலும் கண்டிப்பாக மிரட்டினாலும் ஆசாமி சர்க்கரை போல் மிகவும் இனிக்கப் பேசுவார். அந்தத் தேன் போன்ற பேச்சிலேதான் அவரது வியாபார வெற்றியின் ரகசியம் முழுவதும் மறைந்து கிடந்தது. அதுவும் பெண்கள் என்றால் அவர் குரல் மெழுகாகக் கரைந்து விடும். அழகான பெண்கள் என்றாலோ கேட்கவே வேண்டாம்! 'அள்ளி இரு கண்களாலும் பருகத்தானே ஆண்டவன் பெண் இனத்திடம் மென்மையையும், குளுமையையும் படைத்திருக்கிறான்' என்பது அவரது கருத்து.

எனவே அவர் ஸ்ரீமதி நாராயணனின் துடுக்கான பேச்சை ஒரு காதில் வாங்கி மற்றதின் வழியே அசட்டையாக அனுப்பிவிட்டு, ஓரக் கண்ணால் ஏற இறங்க அவளை உற்றுப் பார்த்தார். உக்கிரமாக வெளியே வீசிய வெய்யிலைத் தாண்டிக் கொண்டு பூங்காவனத்தின் தண்மையைத் தாங்கி வந்த



மந்தமாருதம் போல் சொகுசாக எதிரே அமர்ந்திருந்த அவளை மீண்டும் ஒருமுறை கவனித்துவிட்டு, அவள் பையிலிருந்து மெத்தை மீது எடுத்துப் போட்ட காகிதப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். ''என்னம்மா செய்வது? தொழில் குணம் ரத்தத்திலே ஊறிக் கிடக்கிறது'' என்று கூறிவிட்டு பற்களைக் காட்டிப் பரவசமாக நகைத்தார்.

''எந்த வேளையில் இதை உம்மிடம் வாங்கினேனோ தெரியாது. நாலைந்து முறைகள்கூட அணிந்து கொள்ள வில்லை. அதற்குள் விற்கும் வேளை வந்து விட்டது! பார்த்துச் சொல்லும். விற்கும்போது யானை விலை குதிரை விலை என்பீர். இப்பொழுது ஒன்றும் பெறாது என்று சாமர்த்தியமாகப் பேசாதீர்கள்!'' என்று வெறுப்புடன் கூறிவிட்டு உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனையுடன் ஜன்னல் வழியே பார்த்தாள்.

சில மாதங்களுக்கு முன்பு தாம் விற்ற வைர அட்டிகைதான் அது என்பதை அறிந்த சேட்டு, அதைக் கையில் எடுத்து அசட்டையாகச் சாய்மான மேஜைமீது வைத்து விட்டுத் தமக்கு வரப்போகும் லாபத்தை விநாடியில் கணக்கிட்டுக் கொண்டார்.

''நான் வேண்டுமென்றா சொல்கிறேன் தாயே! வைரம், கெம்பு, பச்சை இவைகளுக்கு வாங்கும்போதுதான் மதிப்பு அதிகம்'' என்ற கூறிவிட்டு நிறுத்தினார்.

''முழுக்க மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை இதை வாங்கி. அதற்குள் பழையது என்றா பட்டம் கட்டுகிறீர்கள்?'' என்றாள் மன எரிச்சலுடன் சௌமினி.

''ஒருமணி நேரம் என்றாலும் சரி, ஒரு கையைவிட்டு ஒரு கைமாறிய பொருள் பழையதுதானே அம்மணி! எதற்கும் இதை என்னிடம் விட்டுப் போங்கள். சுமாரான விலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறி விட்டு, அதைப் பெற்றுக் கொண்டதற்கு ஒரு ரசீது எழுதி அவள் முன் வைத்தார் சேட்டு.

''கொடுக்கும் போது ஏழாயிரத்து ஐந்நூறுக்கு ஒரு பைசா குறைக்க மாட்டேன் என்று கண்டிப்பாகப் பேசியதை மறக்காதீர்கள். எனக்கு உடனே ஏழாயிரத்து இருநூறு தேவை.

அதனால் பார்த்து விற்றுக்கொடுங்கள். உங்களுக்குச் சேர வேண்டிய கமிஷனை வழக்கம்போல் கொடுத்து விடுகிறேன்'' என்றாள் சௌமினி அழுத்தலாக.

## 53

துவாரகராம், சௌமினி சொன்னதைக் கேட்டுக் கடகடவென்று சிரித்தார். ''அப்படிச் சொன்னால் நான் என்ன செய்வேன் தாயே! நீங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். உங்களுக்கு ஏகப்பட்ட செலவுகள் இருக்கும். உங்கள் தேவைகள் பல. அதற்கெல்லாம் இந்தச் சிறு ஆபரணத்தை விற்றுச் சமாளிக்க முடியுமா? என்னால் முடிந்தவரை பார்க்கிறேன். நாலாயிரத்துக்கு மேல் செப்புத் தம்படிகூடக் கிடைக்காது என்பது என் அபிப்பிராயம். யோசித்துவிட்டு வாருங்கள். பிரியமில்லா விட்டால் பொருளை எடுத்துப் போகலாம்'' என்று கூறிவிட்டுக் குறுநகை புரிந்தார்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தாள் சௌமினி. 'அப்பா! அம்மா' என்று முனகியபடி இருந்த இடத்திலிருந்து கையை நீட்டி, சற்று அருகே இருந்த தமது இரும்புப் பெட்டியைத் திறந்து அசட்டையாக அந்த நகையை எடுத்து வைத்துக் கதவை மெல்லச் சாத்தினார். சௌமினிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அவளிடமிருந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் விலை உயர்ந்தது அது ஒன்றுதான். அதை வாங்கிப் பூட்டிக் கொள்ள அவள் செய்த தியாகங்கள் பல. பேசிய பொய்கள் அநேகம். பணத்திற்காகக் கணவனிடம் மாய்மாலம் செய்து உகுத்த கண்ணீர்த் துளிகள் எவ்வளவோ!

பட்டுப் புடவைகளின் இடையே வெல்வெட் பெட்டியிலே அழகாக வைக்கப்பட்டிருந்த அந்த ஆபரணம் இப்போது சேட் ஐயாவின் இரும்புப் பெட்டிக்குள் சிறைப்பட்டு விட்டதைக் கண்டு அவள் உள்ளம் வெடித்தது.



வேதனையினால் கண்களில் மல்கிய நீரைச் சமாளித்துக் கொண்டு, ரசீது கடிதத்தை எடுத்துக் கைப்பையில் திணித்துக் கொண்டாள்.

''வருகிறேன் மிஸ்டர் துவாரகராம். ஞாபகம் இருக்கட்டும் நான் சொன்னது'' என்று எச்சரித்து விட்டு எழுந்திருந்தாள். கவலைத் திரைகளால் பிரகாசம் குன்றிப் போன அவளது சுந்தரவதனத்தை அவர் பாராதது போல் பார்த்தார். பெட்டியிலே கொட்டிக் கிடந்த காசுகளை எடுத்துத் தாராளமாகக் கொடுக்கத்தான் அவர் கை எழும்பாதே ஒழிய, அனுதாப வார்த்தைகளை அள்ளி வழங்க அவர் ஒருநாளும் தயங்கியதே இல்லை. பகட்டான பரிவு மொழிகளுக்கு அவரிடம் பஞ்சமே கிடையாது.

''ஸ்ரீமான் நாராயணன் எனது வெகு நாளைய நண்பர் அம்மா. அவரது குடும்பத்திற்கு ஏற்படும் தொல்லைகளும் தொந்தரவுகளும் எனக்கு ஏற்பட்டதைப்போல் வருத்தத்தைக் கொடுக்கும். ஆமாம் நான் கேள்விப்பட்டேன் உண்மைதானா?... வந்து... அவர் வியாபாரத்தில் ரொம்ப நஷ்டமாகி விட்டிருக்கிறாராமே, இன்னும் என்னென்னவோ காதுகளில் பட்டன'' என்று தாழ்ந்த குரலில் ரகசியம் பேசும் பாவனையில் முகத்தைச் சற்று அருகே நீட்டினார்.

''உங்கள் காதுகளில் விழுந்த செய்திகள் ஆதாரமற்றவை. கவலை வேண்டாம்! உங்கள் பரிவிற்கு மெத்த வந்தனம்'' என்று அழுத்தலாகக் கூறிவிட்டு வெளியே செல்லத் தொடங்கினாள் சௌமினி.

மூடலிருந்த இரும்புப் பெட்டியை மீண்டும் திறந்தார் அவர். மேல் தட்டில் சுருட்டி வைத்திருந்த ஒரு துணி முடிப்பை எடுத்து அவிழ்த்து, எதிரே கிடந்த மெத்தைமீது போட்டார். அதிலிருந்த விலையுயர்ந்த ஆபரணங்களைப் பரப்பி வைத்து, ''இவை என் கண்ணில் பட்ட பின்புதான் காதுகளில் பட்ட செய்தி உண்மை என்று நம்பினேன் தாயே! கோபம் வேண்டாம். இவை ஸ்ரீமான் நாராயணன் தமது முதல் மனைவிக்கு அந்தக் காலத்தில் என் மூலமாக வாங்கிப் போட்ட நகைகள்.

அவர்களுக்குப் பிறகு இவை சந்திரா அம்மாவின் சொத்தாக இருந்தன. இரண்டு வருஷங்களுக்கு மேல் அடமானத்திலே வட்டியில் முழுக இருந்த இவற்றைச் சில நாட்களுக்கு முன்புதான் உங்கள் மூத்த மகன் எனக்கு விற்றார்'' என்றார்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் சௌமினி. சூரிய வெளிச்சத்துடன் ஒன்றுபட்டு நீல ஒளி வீசிக்கொண்டிருந்த மின்சாரக் குழல் விளக்கின் முன் கறுப்புத் துணி விரிப்பின் மீது கிடந்த அந்த ஆபரணங்களை ஏக்கத்துடன் உற்றுப் பார்த்தாள். 'சந்திராவிடம் இத்தனை நகைகள் இருந்தனவா!' என்ற பிரமிப்பில் அவள் ஒருகணம் ஸ்தம்பித்துப் போய் விட்டாள். விளக்கொளியில் அவை எழுப்பிய வர்ண ஜாலங்கள் அவள் கண்களைக் கூசின. வெடித்த எரிமலையின் அனல் குழம்பாகப் பொறாமைத் தீயிலே அவள் உள்ளம் கொதித்தது. 'தானும் அனுபவிக்காது, பிறருக்கும் கொடுக்காது ஊராரிடம் கொட்டிக் கொடுத்திருக்கிறாளே சண்டாளி! கண்களால் ஒருமுறை கூட இவற்றைக் காண விடவில்லையே அந்த சூழ்ச்சிக்காரர்கள் இருவரும்' என்று தனக்குள் கிரிதரனையும் சந்திராவையும் சபித்துக் கொண்டு நின்று விட்டாள் மௌனமாக.

''கை நிறையப் பணம் சம்பாதிக்கும் போது புருஷன் மனைவிக்குத் தன் ஆசைதீர ஆபரணங்களை வாங்கிப் பூட்டுகிறான். கை சளைத்து விட்டபோது பூட்டிய நகைகளைக் கழற்றச் சொல்கிறான். இது என் வியாபாரத்திலே நான் அன்றாடம் கவனிக்கும் சகஜமான சம்பவம் அம்மா. அடுத்த வருஷம் என் நண்பர் வியாபாரம் பெருகி நல்ல லாபம் பெற்றால் இதைவிடப் பன்மடங்கு உங்களுக்கு வாங்கிக் கொடுத்து விடுவார். கவலைப்படாதீர்கள் அம்மணி'' என்றார் சேட் முதலாளி அனுதாபத்துடன்.

எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போலிருக்கவே சௌமினி அடக்கமாட்டாத ஆத்திரத்துடன் அவர் பக்கம் வேகமாகத் திரும்பினாள்.

''சந்திரா அம்மாவுக்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. பிழைப்பது துர்லபம் என்று அறிந்ததனால் இந்த உடைமைகள் தேவையில்லை என்று அவள் அண்ணன் உங்களிடம் விற்றுவிட்டார். அதற்கும் எங்கள் வியாபாரத்திற்கும் என்ன சம்பந்தம் சேட்டு ஐயா? இதெல்லாம் என்ன பிதற்றல்?'' என்று வெறுப்புடன் கேட்டாள்.

''சந்திரா அம்மா உடம்பு நிலைமை பற்றியும் கேள்விப்பட்டேன் தாயே. மிகவும் வருத்தமடைந்தேன். கடவுள் அருளால் எல்லாம் நல்லபடியாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். உங்களைப் போன்றவர்கள் நன்றாக வாழ்ந்தால்தானே என் போன்றவர்கள் பிழைக்க முடியும்'' என்று கூறிவிட்டுப் பற்கள் தெரிய ஒரு கூழைக் கும்பிடு போட்டார்.

''வாஸ்தவம் ஐயா, வாஸ்தவம்! எங்கள் தொழில் ஆலையிலிருந்து இன்னும் இரண்டு இரும்புப் பெட்டிகள் வாங்குவீர்கள். பணத்தால் அதை நிரப்புவீர்கள். இல்லையா? ஜமாயுங்கள்! இப்பொழுது அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் வீசுகிறது. உம்'' என்று குரோதமாகக் கூறிவிட்டுக் கைப்பையைச் சுழற்றிக் கொண்டு கவலையற்ற புள்ளிமானாகத் துள்ளி வெளியே வந்தாள். ஆனால் உண்மையில் அவளுக்கு அது சமயம் ஏற்பட்டிருந்த கவலைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஊரார் எல்லோரும் பேசும் அளவு அவர்கள் வியாபாரம் படுமோசமான நிலைக்கா வந்து விட்டது? அப்படியானால் அவளது வருங்காலம்! பணக்காரன் என்று ஏமாந்து ஒரு படுகுழியில் விழுந்துவிட்ட அவள், இனி கிரிதரன் தயவையா நம்பி வாழ வேண்டும்?

எரியும் வீட்டில் கவர்ந்தது ஆதாயம் என, பணம் பணம் என்று பேயாக அலையும் சுவாமிநாதனின் வாயை அடக்க அவள் பணத்துக்கு இனி எங்கே போவாள்?

'ஊரார் காதில்பட்ட கதைகள் தங்கமணியின் கவனத்திலிருந்து தப்பாதே! 'கொண்டா என் கடன் தொகையை, இல்லையேல் முடித்து வை திருமணத்தை!' என்று அவள் தொண தொணப்பாள். அதற்கு வழி?'

இவ்வாறு பலவும் எண்ணிக் குழம்பிய சௌமினி, தள்ளாடிக் கொண்டு வந்து காரில் ஏறிக்கொண்டாள். முன் ஆசனத்திலே சாய்ந்து கொண்டு நிம்மதியாக ஒரு குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான் ஜகதீசன். வெறுப்புடன் அவனை வெறித்துப் பார்த்துவிட்டு வண்டியை ஓட்டத் தொடங்கினாள் அவள். திடுக்கிட்டு விழித்துக் கொண்ட அவன் அசட்டுச் சிரிப்புடன் எழுந்து உட்கார்ந்தான். ''எவ்வளவு நேரம் சித்தி! காத்துப் பார்த்து அலுத்துப் போய்விட்டேன்'' என்றான் வேடிக்கையாக. படீர் என்று அவன் முகத்திலே ஓங்கி ஓர் அறை கொடுக்கலாமா எனத் துடித்தாள் சௌமினி. 'உண்பதும் உறங்குவதும் ஊரைச் சுற்றுவதும் தவிர இந்தப் பித்தனுக்குத் தான் படும் அவஸ்தைகள் என்ன தெரியும்?' என எண்ணி வெகுண்டாள்.

''உனக்காக நான் எடுத்துக் கொள்ளும் சிரமம் உனக்கு விளங்காது. ஆனால் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக வீணாகிறது'' என்று ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துவிட்டு, காரை வேகமாக ஜலங்கொண்டான் போகும் ராஜ பாட்டைக்குத் திருப்பி ஓட்டினாள். அவளது சிவந்த முகத்தையும் கலங்கிய கண்களையும் கண்டு ஜகதீசன் அரண்டு விட்டான். ''சித்தி, என்ன நடந்தது? ஏன் இப்படி கோபமாக இருக்கிறீர்கள்?'' என்று பதறினான்.

சற்றுநேரம் பதிலளிக்காது அவள் மௌனமாக இருந்தாள். அலைபாய்ந்த தனது உணர்ச்சிகளை சமாளித்துக் கொண்டு மெல்லப் பேசலுற்றாள். ''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. எல்லாம் என் விதி'' என்று கூறிவிட்டு இமைகளை ஒருகணம் மூடித்திறந்தாள். பொல பொலவென்று கண்ணீர்த் துளிகள் அவள் கன்னங்கள் மீது உருண்டு ஓடின.

''சித்தி! அழுகிறீர்களே, ஏன் சித்தி? நான் என்ன தவறு செய்தேன். புரியவில்லையே'' என்று வருத்தத்துடன் விசாரித்தான் மைந்தன்.

''அவசரப்பட்டு நீ செய்த அடாத செய்கையினால் அப்பா உன்மேல் கோபமாக இருக்கிறார். உன்னைப்பற்றி அவரிடம்



இன்று காலை சாதாரணமாகப் பேசப் போனேன். வெகு கோபமாக சண்டைக்கு வந்து, மனம் புண்படப் பேசிவிட்டார்'' என்று கரகரத்த குரலில் கூறிவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''இதுவரை என்னிடம் நீங்கள் ஏன் சொல்லவேயில்லை சித்தி?'' என்று மனத்தாங்கலுடன் மைந்தன் குறுக்குக் கேள்வி கேட்டான்.

''உன்னிடம் பேசுவதை அப்பாவிடம் சொல்லி, அப்பாவிடம் பேசுவதை உன்னிடம் சொல்லி முடிச்சு போடும் வழக்கம் எனக்கு இல்லை. எத்தனையோ கட்டுப்படுத்திப் பார்க்கிறேன் காலையிலிருந்து. என்னால் முடியவில்லை. திடமென்று அப்பா பேசியவற்றை எண்ணிப்பார்த்தேன். ஆத்திரமும், அழுகையும் வந்துவிட்டது'' என்றாள்.

''நானும் எவ்வளவோ சாமர்த்தியமாகத்தான் நடந்தேன் சித்தி. ஆனால் சந்திராவைக் கண்டதும் கோபவெறியை அடக்க முடியவில்லை. எனக்குச் சேர வேண்டிய பங்கான என் தாயின் நகைகளை ஒளித்து வைத்திருக்கும் கள்ளி என்று, அவளைக் கண்டதும் ஆத்திரம் பற்றிக் கொண்டுவந்து விட்டது. சந்திரா அலறினாள். அது மட்டும்தான் தெரியும். அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்றே தெரியாது. விழித்துக் கொண்டு பார்த்தபோதுதான் விடிந்து விட்டதை உணர்ந்தேன். அருகில் நீங்கள் உட்கார்ந்திருப்பதையும் கண்டேன்'' என்றான், துயரம் நிறைந்த குரலில்.

''உணர்ச்சிகளை கட்டுப்படுத்தத் தெரியாது முரட்டுத் தனமாக நடந்து கொள்வதனால் உன்னைப் பித்தன் என்று பெயர் சூட்டி உன் அண்ணன் தயானந்தரின் சிகிச்சைச் சாலையில் அடைத்து வைத்திருந்தான். எனக்கு மட்டும் நடந்தது என்ன தெரியும்? பிறர் சொல்லத்தான் கேள்விப்பட்டேன்.

''கோப வெறியிலே சந்திராவின் கழுத்தை நெரித்து நீ கொல்லப் பார்த்தாயாம். அவள் போட்ட குரலைக்கேட்டு கிட்டா ஓடி வந்தாராம். உன் கையைப் பிடித்து பலம் கொண்ட மட்டும் இழுத்து உன்னை உனது அறையில் கொண்டு

போட்டாராம். நான் வந்த பொழுது நீ வைத்தியர் கொடுத்த மருந்தினால் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாய். உன் அப்பாவும் அண்ணாவும் கோபத்திலே கூத்தாடிக் கொண்டிருந்தார்கள். யாருமற்ற அநாதை போல் நீ கவனிப்பாரற்றுக் கிடந்ததைக் காணப்பொறுக்காது அந்த இரவு முழுவதும் உன் அருகிலேயே இருந்து உன்னைக் கவனித்துக் கொண்டேன். பெற்ற பிள்ளையைப் போல் உன் மேல் வைத்த பாசத்திற்கு நான் உன் அப்பாவிடம் சில நாட்களாக...'' என்று சொல்லி முடிக்காது திணறினாள்.

''சித்தி! நான் உங்களுக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறேன். என் நன்றியைக் காட்டச் சமயம் வரும். அப்பொழுது இந்த ஜகதீசனை நீங்களும் அறிவீர்கள்'' என்றான் உணர்ச்சி வசத்தில் ஜகதீசன்.

''எனக்கு நீ ஒன்றும் நன்றி காட்ட வேண்டாம். நல்லவனாக நடந்து கொண்டாலே போதும். இந்தச் சின்னவயதிலே உனக்கு இந்தக் கோபவெறி ஆகாது. ஆத்திரப்பட்டுக் காரியங்களைக் குட்டிச் சுவராக்குகிறாயே?'' என்றாள் கோபத்துடன் அன்னை.

''இந்த முறை மன்னித்துக் கொள்ளுங்கள் சித்தி. இனி அதுமாதிரி ஏற்படாது பார்த்துக் கொள்கிறேன். நான் எவ்வளவோ முயற்சிக்கிறேன். உள்ளத்திலே ஆத்திரமும் ஆசையும் மிதமிஞ்சிவிட்டால் எனக்குத் திடீரென்று ஒரு மயக்கம் வந்து விடுகிறது. அதுசமயம் என்ன செய்கிறேன் என்றே எனக்குத் தெரிவதில்லை. சிறு குழந்தையிலிருந்து இந்த மயக்கம் அடிக்கடி வந்து என்னை வாட்டுகிறது. எத்தனையோ வைத்தியம் செய்து பார்த்து விட்டார்கள். இது என் வரையில் தீராத நோயாக இருக்கிறது'' என்றான் வருத்தத்துடன்.

காற்றாகப் பறந்த காரின் வேகத்தைத் தணித்து நிதானமாக ஓட்டத் தொடங்கிய சௌமினி மகன் பக்கம் திரும்பி ''வருத்தப்படாதே ஜகதீசா! உனக்கு நோயும் இல்லை, நொடியும் இல்லை. நான் சொல்வதை நீ நம்ப வேண்டும். உனக்கு வேண்டாதவர்கள் உன்மேல் ஏவல்



வைத்திருக்கிறார்கள்'' என்றாள் உறுதி தொனிக்கும் குரலில்.

''இதெல்லாம் என்ன பேச்சு சித்தி'' என்றான் வெறுப்புடன் ஜகதீசன்.

சௌமினி அழகிய தன் முகத்தை ஒருமுறை குலுக்கினாள். ''நீ இப்பொழுது நம்பமாட்டாய். பின்னால் புரிந்து கொள்வாய். உன் கல்யாணத்திற்கு முன் ஒரு நல்ல மாந்திரீகரிடம் உன்னை அழைத்துச் சென்று மந்திரம் ஜபித்து ஒரு தாயத்து கட்ட வேண்டும்'' என்றாள். ''என் கல்யாணத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் சித்தி'' என்று கேட்டுவிட்டு வெகுளியாகச் சிரித்தான் அந்தப் பித்தன். அதற்குப் பிறகு இந்தச் சித்தியின் தயவு உனக்கு எதற்கு?

''மருந்துடன் கவனித்து அன்பு காட்ட அவள் வந்து விட்டால் உனக்கு என்னிடம் பேசக்கூடப் பொழுது இருக்காதே!'' என்று பரிகாசமாகச் சொன்னாள் சிற்றன்னை.

ஜகதீசன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். பள்ளிச் சிறுவனைப் போல் கைவிரல் நகங்களைக் கடித்துக் கொண்டு சற்று யோசனையில் ஆழ்ந்தான்.

இதற்குள் சௌமினியின் மூளையில் ஒரு புதிய திட்டம் மின்னல் வேகத்திலே உருவாகிக் கொண்டிருந்தது. ஜலங்கண்டான் நகரை வண்டி நெருங்குவதைக் கண்ணுற்ற ஜகதீசன், ஆவலுடன் சிறிய அன்னையின் பக்கம் திரும்பி, ''மஞ்சுளா என்னைப் பற்றி என்ன நினைக்கிறாள்?'' என்று வினவினான். முகம் சிவந்து, மூச்சுத் தடுமாற அவன் திருதிருவென விழிப்பதைக் கண்டும் காணாதவள் போல், தனக்கு முன் தெரிந்த நீண்ட பாதையைப் பார்த்துக் கொண்டு நிதானமாகப் பேசினாள் சௌமினி.

''மஞ்சுளா வயது வந்த பெண், சுயேட்சையாக வாழ்கிறவள். அதனால் அவளைச் சட்டென்று, 'என் மகனைக் கல்யாணம் செய்து கொள்' என்று கேட்டுவிட முடியவில்லை. ஆனால் சாமர்த்தியமாகப் பேசி, அவளை என் வசப்படுத்தி வைத்திருக்கிறேன். ஜாடையாக உன் விருப்பத்தைக்கூட

எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். உன்னை மணந்து கொள்ள அவளுக்குப் பூரண சம்மதம் என்று புரிகிறது. ஆனால் நீ உடனே அவசரப்படக்கூடாது! உன் தங்கை சந்திராவின் நிலை கேவலமாக இருக்கையில் இப்போது கல்யாணத்தைப் பற்றிச் சிந்திப்பதுகூட நியாயமல்ல'' என்றாள்.

ஜகதீசனின் முகம் இன்னும் அதிகம் வெந்து போயிற்று. ''நான் பிறருக்காக என் இதயத்தை ஏன் தியாகம் செய்ய வேண்டும்? எத்தனை காலம்தான் நான் காத்துக் கொண்டிருப்பது?'' என்று பிடிவாதம் பொங்கிய குரலில் குழந்தை போல் அரற்றினான்.

''அசட்டுத்தனமாகப் பேசாதே! கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விடாது. மஞ்சுளாவை உனக்கு எப்படியும் முடித்து வைக்கிறேன். கொஞ்சம் பொறு. இன்னும் ஒரு விஷயம் உன்னிடம் சொல்லத் துடிப்பாக இருக்கிறது. ஆனால், சொன்னால் நீ பதறுவாய். அவசரப்பட்டு ஏதாவது செய்வாய் என்றுதான் சொல்லாமல் இருக்கிறேன்'' என்றாள்.

''கவலைப்படாதீர்கள் சித்தி. பொறுமையாக இருப்பேன், சொல்லுங்கள்'' என்று மைந்தன் வாக்குறுதி அளித்தான்.

சௌமினி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

## 54

கதையொன்று சொல்லும் பாணியில் தன் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்ட சௌமினி மேலும் தொடர்ந்தாள். ''என் அம்மாஞ்சி சுவாமிநாதன் சில தினங்களுக்கு முன் இங்கே வந்திருந்தான். அன்று அவன் எதேச்சையாக மஞ்சுளாவைக் காண நேரிட்டது. அன்றிலிருந்து அவன் தொந்தரவு என்னால் பொறுக்க முடியவில்லை. மஞ்சுளா மீது அவனுக்குக் கட்டுக்கடங்காத காதல் ஏற்பட்டு விட்டதாம். எப்படியாவது நான் அவளை அவனுக்குக்



கல்யாணம் செய்து வைத்தாக வேண்டும் என்று நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறான்'' என்றாள்.

''நிசமாகவா? அதனால்தான் அடிக்கடி ஆசாமி உங்களைக் காண தமது பங்களாவுக்கு ஓடி வருகிறான் போலும்?'' என்று கூறிவிட்டுப் பொறாமையுடன் பற்களைக் கடித்தான் ஜகதீசன். கண்கள் சிவந்து, கழுத்துப் பக்கம் ரத்தக் குழாய்கள் புடைக்க, அவன் முகம் விகாரமாக வெறி கொண்டவன் போல் நிமிஷத்திலே மாறிவிட்டதைக் கண்ட சௌமினி, சற்றே நடுங்கிவிட்டாள்.

''ஜகதீசா! பொறுமையாக இரு. அவன் நிர்ப்பந்தித்தால் நான் ஒப்புக் கொண்டு விடுவேனா! 'மஞ்சுளா என் புக்ககத்து உறவுப் பெண். ஜகதீசனுக்கு வாழ்க்கைப்படப் போகிறவள்' என்று சொன்னேன். அதிலே என்னிடம் அந்த முரடனுக்கு மனஸ்தாபம். அவனது கோபத்தைப்பற்றி ஒன்றும் கவலைப்படவில்லை. ஆனால்...'' என்று கூறிவிட்டுத் தயங்கினாள்.

''மேலே சொல்லுங்கள் சித்தி!'' என்று வற்புறுத்தினான் மைந்தன்.

''நீ பரந்த மனம் படைத்தவன். படித்த புத்திசாலிப் பையன். தாயைப்போல் என்னை நேசிக்கிறாய். என் துயரமும், கஷ்டமும் உன்னைப் பாதிக்கும் என்று நம்புவதால் உன்னிடம் இந்த ரகசியத்தைச் சொல்கிறேன். என் குடும்பத்தின் முழு வரலாறும் உன் அப்பாவுக்குக் கூடத் தெரியாது. என் அம்மாஞ்சிக்கு அவற்றைப் பற்றித் தெரியும். மஞ்சுளாவைத் தனக்கு மணம் முடித்து வைக்காவிடில் அவற்றை அம்பலப்படுத்தி விடுவதாக என்னைப் பயமுறுத்துகிறான்.

''ஒரு வார காலமாக எனக்கு இதை உன் தமையனிடம் சொல்லி விடுவானோ என்றுதான் பயமாக இருக்கிறது. என்னைப் பற்றிய செய்தியானாலும் பரவாயில்லை. பொறுத்துக் கொள்வேன். என் சகோதரியின் வாழ்வின் ரகசியத்தை உன் தமையன் ஏன் அறிய வேண்டும்? அறிந்தால் என் குடும்பத்தைப்பற்றி அவதூறாகப் பேசுவான். அந்த

அவமானம் தாளாது நான் தற்கொலைதான் செய்து கொள்ள நேரும்'' என்றாள் படபடவென்று.

பற்களைக் கடித்தான் ஜகதீசன் ஆத்திரத்துடன். ''அது என்ன விஷயம் சித்தி. முக்காலும் சொல்லி விட்டீர்கள். முழுவதையும் என்னை நம்பிக்கூறி விடுங்கள். உங்களைப் பேச்சினாலோ செய்கையினாலோ யாரும் அவமதிக்க முடியாதபடி நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் சீற்றத்துடன்.

''சிறு வயதில் என் சகோதரி தவறி ஒரு மோசக்காரன் வலையில் வீழ்ந்து வஞ்சிக்கப்பட்டு விட்டாள். தான் தாயாகி விட்டதை உணர்ந்த அவள் அவமானம் தாளாது தற்கொலை செய்து கொண்டு விட்டாள். நாங்கள் திரும்பி நினைத்துப் பார்க்க விரும்பாத துன்பகரமான விஷயத்தை மீண்டும் நினைவு படுத்த சுவாமிநாதன் சூழ்ச்சிகள் செய்கிறான். என் சகோதரிக்கும் அவளை வஞ்சித்த வாலிபனுக்கும் இடையே எழுதப்பட்ட கடிதங்களின் ஒரு பகுதி அவன் வசம் எப்படியோ சிக்கி விட்டிருக்கின்றது.

''அரக்குப் பெட்டி ஒன்றில் இவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டு 'இதோ அம்பலப்படுத்தி விடுவேன்' என்று என்னை மிரட்டுகிறான். யோசித்துப் பார்த்தேன். வேறு வழியில்லை. ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். 'பெட்டியில் உள்ளதைப் பேஷாகக் கொண்டு போய் எல்லாரிடமுமே காட்டு, பயமில்லை என்று அவனிடம் நாளைக்குச் சொல்லிவிடப் போகிறேன். உயிர் போனாலும் சரி. மஞ்சுளாவை அந்தப் போக்கிரி மணக்கச் சம்மதிக்க மாட்டேன். மேலும் உன் பிஞ்சு இருதயத்திலே பொங்கி நிற்கும் அன்பை நான் எப்படி கரியாக்க முடியும் சொல்?'' என்று கூறிவிட்டு, கண்ணீர் வழிந்தோடத் திக்கித் தடுமாறினாள்.

சிறிய அன்னையின் துயரம் ஜகதீசனது உள்ளத்தை உலுக்கியது. தன் காதலில் குறுக்கிட்ட பாதகன்மேல் சினம் பொத்துக் கொண்டு புறப்பட்டது. ''சித்தி! கவலைப் படாதீர்கள். அஞ்சாதீர்கள். அந்த அயோக்கியனை நான்



கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் ஆத்திரத்துடன்.

''அசடே! நீ இப்படிப் பிதற்றுவாய் என்றுதான் சொல்லாமல் இதுவரை மூடி வைத்தேன். சுவாமிநாதனை உனக்குத் தெரியாது. அவன் மகா பாதகன். என் வாழ்விற்கு உலை வைக்க வழி தேடுகிறான் வஞ்சகன். நீ அறியாச் சிறுவன். உன்னை ஏதாவது ஆபத்தில் கொண்டு விட்டுவிடப் போகிறான். எனக்குப் பயமாக இருக்கிறதே'' என்று குமுறி விட்டுக் காரைக் கடைத்தெரு வழியே செலுத்தி வேகமாக ஆனந்த நிலையத்தின் தோட்டத்திற்குள் கொண்டு வந்து நிறுத்தினாள்.

''என்னை ஒரேயடியாக முட்டாள் என எண்ணி விட்டீர்களே சித்தி! எனக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாது பார்த்துக் கொள்கிறேன். மறைந்து போன உங்கள் சகோதரியின் மானத்திற்குப் பங்கம் ஏதும் ஏற்படாது. என்னை நம்புங்கள் சித்தி'' என்றான் ஜகதீசன் உருக்கமாக.

சௌமினி, அன்பு நிறைந்த கண்களால் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''மஞ்சுளாவையும் உன்னையும் மணப்பந்தலில் பார்த்தால் போதும். என் கடமை முடிந்து விட்டதென்று நான் எண்ணிக் கொள்வேன். உண்மையைச் சொல்கிறேன். உன் நன்மையை உத்தேசித்தே நான் இங்கே இன்னமும் உயிர் வாழ்கிறேன்'' என்று பகட்டாகப் பேசினாள்.

பணமும் பாசமும் ஆரோக்கியத்தின் எதிரிகள். அருமை மகள் மரணப் படுக்கையில் வேதனைப்படுவதை காணச்சகிக்காது பாசத்திலே ஊசலாடிய உள்ளத்தின் குமுறல் ஒரு புறமும் தொடர்ந்து வியாபாரத்தில் ஏற்பட்ட பண நெருக்கடியின் கவலைகள் ஒரு புறமும் வதைக்கவே ஸ்ரீமான் நாராயணன் திடீரென்று வயோதிகத் தோற்றம் அடைந்தார். ஆப்பிள் பழத்தைப்போல் உப்பியிருந்த கன்னங்கள் சுருங்கி விட்டன. கண்களைச் சுற்றிலும் கவலை வட்டங்கள் திரையிட்டுக் கொண்டிருந்தன. வயிற்றின் மீது சரிந்து நின்ற சதை மடிப்புகள் மாயமாக மறைந்தோடி விட்டிருந்தன.

மொத்தத்தில் ஆசாமி முன்னைவிடப் பாதியாக உருவத்தில் மாறி விட்டிருந்தார். உள்ளத்திலே குமிழியிட்ட உற்சாக ஊற்று வரண்டுபோய் விட்டது. அதற்குப் பதில் அவர் குணத்திலே முன்கோபமும், எரிச்சலும் மிகையாக வெளிக்கிளம்பின.

அன்று காலை, மகளின் அறையை விட்டு வெளியே வந்து வராந்தாவிலிருந்த ஒரு பெருந்தூணில் சாய்ந்து கொண்டு நின்றார் நாராயணன். குடும்ப வைத்தியர் சுந்தரேசன்மீது அவருக்கு நம்பிக்கை அதிகம் உண்டு. வைத்தியர் என்பதுடன் அவர் அந்தக் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பராகவும் இருந்தார். அவரது வார்த்தைகளுக்கு எல்லோரும் மிக்க மதிப்பு வைத்திருந்தனர். எனினும் பெற்ற பாசத்திலே தவித்த அவர் மனம் சமாதானம் அடையவில்லை. ''வேறு ஏதும் செய்ய முடியாதா?'' என்று அடிக்கடி கேட்டுத் தவியாகத் தவித்துப் போனார். அவரது உள்ளக் கருத்தைக் குறிப்பாகப் புரிந்து கொண்ட குடும்ப வைத்தியர், பெற்ற தந்தையின் மனத்திற்கு ஆறுதல் கொடுக்கும் நிமித்தம் அருகிலிருந்த வீரசோழன் பட்டணத்திலிருந்து இரண்டு பிரபல வைத்தியர்களை வரவழைத்திருந்தார்.

நீண்ட நேரம் அவர்கள் இருவரும் சந்திராவின் தேக நிலையைக் கூர்ந்து பரிசீலனை செய்தனர். அறையை விட்டு வெளியே வந்தபோது அவர்களது முகபாவத்தைக் கண்ட தந்தைக்குப் பகீர் என்றுதான் இருந்தது. ''வைத்தியர் சுந்தரேசன் செய்த சிகிச்சைகளுக்கு மேல் நாங்கள் ஒன்றும் அதிகம் செய்துவிட முடியாது. கல்லீரல் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. நாளடைவில் அது சுருங்கிக் கொண்டு போவதனால் நோயாளி பிழைப்பாள் என்ற நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இஷ்டமிருந்தால் இன்னும் வேறு வைத்தியர்களை அழைத்துக் காட்டலாம்'' என்று ஒரே முகமாக அந்த வைத்தியர்கள் இருவரும் சொல்லி விட்டார்கள்.

அவர்களது தீர்ப்பைக் கேட்டதிலிருந்து நாராயணன் ஏக்கம் அடைந்து விட்டார். ஒரு பொருளை இழந்து விடப்போகிறோம் என்ற உண்மையை அறியும் பொழுதுதான் யாருக்கும் அந்தப் பொருளின் அருமை விளங்கத் தொடங்கும்.



அருமை மகளின் மரண காலம் அதிக தூரத்தில் இல்லை என்ற உண்மையை உணர்ந்து நாராயணனுக்கு அப்பொழுதுதான் அவளது மேன்மையான குண விசேஷங்கள் புலனாயின! அருமையும், அன்பும், பாசமும், பண்பும் கொண்டு பொறுமையின் உருவே திரண்டு வந்தது போன்ற அந்தப் புத்திரியை இனி மீண்டும் ஏழேழு ஜென்மத்திலும் அடைய முடியாது என எண்ணி எண்ணி மனம் உருகிப் போனார். ரகசியமாக யாருக்கும் தெரியாது மகளின் நோயின் கொடுமையைச் சிந்தித்துக் கண்ணீர் உகுத்து அழுதார். கண்களுக்கும் மேலான செல்வக் குமாரியைப் பறிகொடுக்கப் போகிறோமே என்ற பயங்கர நினைவு அவரைத் துன்பக் கடலிலே ஆழ்த்தி விட்டிருந்தது.

'இவ்வளவு சீக்கிரம் அவளுக்கு மரணம் வந்துவிடும் என்று மட்டும் அவருக்கு முன்பே தெரிந்திருந்தால்.. வெளியூர்களிலும் வேண்டாத களியாட்டங்களிலும் அவ பொழுதை விரயம் செய்ததற்குப் பதில் மகளின் அருகிலே அமர்ந்து வார்த்தையாடி அவள் காட்டிய அன்பை அனுபவித்து இனிமையாக வாழ்ந்திருக்கலாமே. எவ்வளவு பொருளை செலவழித்தாலும் கழிந்து போன நாட்களைத் திரும்பப் பெற முடியாதே!' என்று பலவாறு எண்ணித் தம்மைத்தாமே நொந்து கொண்டார். தாம் செய்த தவற்றுக்குக் காரணம் பிறர்தான் என எண்ணுவது மனித உள்ளத்தின் பேதமையான குணம். நாராயணன் மட்டும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. இத்தனைக்கும் காரணம் தனது இளம் மனைவிதான் என்று அவருக்கு அவள்மீது மனத்தாங்கல் ஏற்பட்டு விட்டது.

''குழந்தையுடன் கூட இருப்போம்! அவளையும்கூட அழைத்துச் செல்வோம்'' என்று சொல்லாமல், தன் சுயநலமே பெரிதாக எண்ணி அவரைக் குடும்பத்திலிருந்து அடிக்கடி பிரிந்திருக்கச் செய்த சூழ்ச்சிக்காரி என்று மனைவியைப் பற்றி எண்ணி மனம் கசந்து போயிருந்தார்! 'சந்திராவை ஆரம்பத்திலேயே கவனித்திருந்தால் இந்தக் கோர' முடிவு வந்திருக்காது. இளமையிலேயே எந்த சுகத்தையும் அனுபவிக்காது அவள் மரண தேவதைக்குப் பலியாகி

விட்டிருக்க மாட்டாள். படுக்கையிலே உடல் நலிந்து அழுகி புழுவாய்த் துடித்துச் சாகும்படியான துர்ப்பாக்கியம் அவனுக்கு நேர்ந்ததற்குக் காரணம் மாற்றாந்தாயின் பொறுப்பற்ற குடித்தனத்துப் போக்கு' என்று எண்ணி உள்ளூரத் தமது இளம் மனைவி மீது கோபம் கொண்டிருந்தார்.

தோட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்ற நாராயணன், வராந்தாவின் மறுகோடியில் செருப்பு சப்திப்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தார். தமது இளம் மனைவியின் எழில் உருவத்தை மோகனமாகப் பார்த்து முறுவலிக்கும் அவர் முகத்திலே, இப்போது கோபம் புயலாகத் திரள ஆரம்பித்தது. மனைவியை ஆத்திரத்துடன் வெறித்துப் பார்த்தார்.

படுக்கையிலே கிடக்கும் மகனின் பரிதாப நிலையைச் சற்றும் எண்ணிப் பாராமல், ஆடம்பரமாக அலங்கரித்துக் கொண்டு வெளியே செல்ல ஆயத்தமாக வந்து கொண்டிருந்தாள் சௌமினி. சிவப்புப்பட்டுச் சேலைக்குப் பொருத்தமாகக் கையில் பிடித்துக் கொண்டிருந்த காஷ்மீரக் கண்ணாடி வேலை செய்த அழகுப் பையை ஆட்டிக்கொண்டு அருகில் வந்து நின்றாள். கும்மென்று வீசிய அத்தரின் மணம் அவரது கோபத்திற்கு தூபம் போட்டதுபோல் இருந்தது.

''நில்! விடிந்ததும் விடியாததுமாக எங்கே புறப்பட்டே?'' என்று அதட்டினார் கோபத்துடன்.

'முன்கோபி. வேலைக்காரர்கள் முன் சட்டென்று சீறிவிழும் சிறுமதி படைத்தவர்' என்றெல்லாம் கணவனது குணவிசேஷங்களை எடைபோட்டு அளந்து வைத்திருந்த சௌமினி, திடுக்கிட்டு ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள் ஒரு கணம். இந்தத் திடீர்த் தாக்குதலை அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. புருவங்களை லேசாக உயர்த்திக் கண்களை இடுக்கிக் கொண்டு கொஞ்சலாக மெல்லச் சிரித்தாள் பதிலுக்கு.

''யாரோ என்று பயந்து விட்டேன். இவ்வளவு விரைவில் எழுந்து விட்டீர்களே? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்கலாமே'' என்றாள் அனுதாபம் நிறைந்த இனிய குரலில்.



''இவ்வளவு நாளும் தூங்கிக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் இப்பொழுது நன்றாக விழித்துக் கொண்டு விட்டேன்'' என்று ஏளனமாகக் கூறிவிட்டு, அவளை வெறுப்புடன் உறுத்துப் பார்த்தார்.

சௌமினியின் அழகிய முகம் குப்பெனச் சிவந்து போயிற்று. பயத்திலே நெஞ்சு பதறியது. ஆத்திரத்தில் ஏதேதோ பேச வாய் துடித்தது. ஆனால் அவள் சட்டென்று தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஒயிலாக நின்று உல்லாசமாக மென் நகை செய்தாள்.

''ரொம்ப கோபமாக இருக்கிறாப் போலிருக்கிறது. உங்களுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டுமா சொல்லுங்கள். செய்கிறேன்'' என்றாள் மிகவும் தாழ்மையாக.

நாராயணன் நேரடியாகப் பதில் அளிக்கவில்லை. ''குழந்தையின் உடல் நிலையைப் பற்றிக் கொஞ்சமாவது நீ சிந்தித்தாயா! உனக்கு ஈவு இரக்கம் ஏதாவது இருக்கிறதா? உன் மனம் என்ன கல்லா! கல்யாண வீட்டுக்கு புறப்படுகிறவள் போல் என்ன ஆடம்பரமான அலங்காரம் இது? விடியட்டும் என்று காத்திருந்தவள் போல் இப்போது எங்கே கிளம்பினாய்? இது வீடா, சத்திரமா உன் இஷ்டம் போல் வெளியே போய்வர? நீ குடும்பப் பெண்ணா அல்லது...'' என்று கத்திவிட்டு, மேலே சொல்லவிருந்ததைப் பேச நா கூசியவராக நிறுத்திக் கொண்டார்.

ஆத்திரத்தில் அவரது கண்கள் சிவந்து முகம் விகாரமாக மாறியதைக் கண்ணுற்ற சௌமினி நடுநடுங்கி விட்டாள். அவரது சுடுமொழிகள் அம்பாக அவள் உள்ளத்தை துன்புறுத்தின. அவமானத்தினால் அவள் மேனி அனலாகப் பற்றி எரிந்தது. துக்கம் கரைபுரண்டு நெஞ்சை அடைத்துக் கொள்ளவே உதட்டைக் கடித்துக் கொண்டு வாளா நின்றாள்.

அவளது மௌனம், ஆவேசம் பிடித்த ஒருவனுக்கு வேப்பிலை அடித்தது போலிருந்தது. மறுபடியும் தொடர்ந்து

கூச்சலிட்டார் அவர். ''பெற்றவளாக இருந்தால் இப்படி அசட்டையாக இருப்பாளா? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடாதா? வேளா வேளைக்குச் சாப்பாடும், இருக்க பங்களாவும் படுக்க மெத்தென்று படுக்கையும் மினுக்க ஆடை ஆபரணங்களும் ஒரு அசட்டுப் புருஷனும் இருந்தால் எவள்தான் சும்மா இருப்பாள்? உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. எல்லாம் என் பிசகு. ஆரம்பத்திலேயே உன் போக்குபடி உன்னை விட்டேன்பார். என் புத்தியை... சே! சே!'' என்று பொங்கிக் குமுறினார்.

## 55

கிழ வயதை அடைந்துவிட்ட பசித்த சிங்கத்தைப் போல் ரௌத்திரமாகத் தன்னை உறுத்துப் பார்த்த கணவனை நேருக்கு நேர் பார்த்துப் பேசக்கூட சௌமினிக்கு அச்சமாக இருந்தது. என்ன இருந்த போதிலும் அவரது மனைவி என்ற ஸ்தானத்தின் மகிமையினால்தானே இத்தனை உல்லாசமான ஒரு வாழ்க்கை அவளுக்குக் கிட்டியிருந்தது! எனவே அவளுக்கு எதிர்த்துப் பேசக் கொஞ்சம் பயமாகவே இருந்தது.

''இப்போ எங்கே கிளம்பினாய்?'' என்று மீண்டும் அதிகாரத்துடன் இடிக்குரலில் இரைந்தார் கணவர்.

கண்களில் கசிந்த கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள் சௌமினி. ''சிநேகிதி வீட்டிற்கு ஒரு முக்கியக் காரணமாகப் போக வேண்டும். விரைவில் திரும்பி விடுவேன். எங்கேயும் போகாமல் வீட்டுடன் கோஷாவாக இருக்க வேண்டுமென்றாலும் இருக்கிறேன். உங்கள் விருப்பத்திற்கு மாறாக நான் என்ன செய்யப் போகிறேன்! அதற்கு ஏன் இப்படி இரைய வேண்டும்? ஊர் காதில் பட்டால் சிரிப்பார்கள்'' என்று சிடுசிடுத்தாள்.

''எதிர்த்து வாயாடினாயோ, தெரியுமா?'' என்று உறுமிய



நாராயணன் அவளை முறைத்துப் பார்த்தார். ''ஆமாம்! இன்னொன்று உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பயல் இனி இங்கே வரக்கூடாது! வந்தால் எங்களுக்குப் பிடிக்காது'' என்றார் கோபத்துடன்.

குழப்பத்துடன் சௌமினி விழித்தாள்.

''உன் அருமை அம்மாஞ்சி, அந்தத் தடியன் வாமிநாதனைத்தான் சொல்கிறேன். வேளையில்லா வேளையில் மட்டு மரியாதையின்றித் திடுதிப்பென்று வந்து ற்கிறானே? என்னை அவன் என்னவென்று நினைத்துக் கொண்டான்? பட்டு ஜிப்பாவும், கறுப்புக் கண்ணாடியும், வன் சிகரெட்டும் அவன் மூஞ்சியும், பிரும்மச்சாரிப் யலுக்குப் பெண்கள் இருக்கும் இடத்தில் என்ன வேலை? ாலுபேர் பார்த்தால் என்ன சொல்வார்கள்?'' என்று அதட்டிக் கட்டார்.

அவர் மேலே என்னவோ பேசத் தொடங்குமுன், ம்பிப்பயல் மரத்தட்டிலே ஆரஞ்சுப் பழரஸம் நிறைந்த ண்ணாடி டம்ளரை சுமந்து கொண்டு விரைந்து வந்து அங்கு ன்றான். வெறுப்புடன் வாயை மூடிக் கொண்டு தோட்டத்தின் க்கம் திரும்பிக் கொண்டார் அவர். ''எஜமானருக்குக் கொடு. னக்கு வேண்டாம்'' என்று உத்தரவிட்ட சௌமினி இதுதான் மயமென்று காற்றாகக் கீழே விரைந்தோடி விட்டாள். காரில் றி உட்கார்ந்ததுதான் அவளுக்கு நினைவு இருந்தது. ணர்ச்சியால் கொந்தளித்த எண்ணமெல்லாம் எங்கெங்கேயோ றந்தோடிவிடவே என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்ற நினைவேயின்றி அவள் மனோவேகத்திலே காரை ஓட்டிக் கொண்டு சென்றாள்.

காற்றைப் பிளந்து கொண்டு கடுகிச் சென்ற அந்த வாகனம் பாட்டையில் சென்ற யார் மீதும் மோதாமல் எந்தவிதமான ஆபத்தையும் ஏற்காமல் குறித்த இடத்திலே வந்து நின்றது மிகவும் ஆச்சரியமே! நெற்றி மீது துளிர்த்துக் கன்னங்களின் ஓரத்தில் வழிந்தோடிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு வண்டியினின்றும் இறங்கினாள் அவள்.

ஹோட்டல் 'கமலா விலாச'த்திற்குள் நுழைந்து நீண்டதாகத் தெரிந்த ஒரு வராந்தா மீது வேகமாக நடந்து சென்றாள். அதன் முடிவிலிருந்த ஓர் அறையின் வாயிற்படியருகே வந்ததும் சற்றுத் தயக்கத்துடன் நின்றாள். உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டது. சற்றுத் தாமதித்து விட்டுப் பொறுமை இழந்தவளாக மெல்ல விரல்களால் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்து கொண்டு தலையை நீட்டிய சுவாமிநாதன் முகமலர்ந்து போனான். ''வாருங்கள்! எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்'' என்று உள்ளே அழைத்துச் சென்றான்.

அறையின் நடுவே கிடந்த வட்ட மேஜையருகே உட்கார்ந்திருந்த ஒரு மனிதர் அவளைக் கண்டதும் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். கழுகைப் போன்ற அவரது கூர்மையான மூக்கையும் சிறுத்த கண்களையும் பார்த்ததும் சௌமினிக்குக் கொஞ்சமும் அவரைப் பிடிக்கவில்லை. முன்பின் அறியாத மனிதர் அவர். ஏனோ அவள் உள்ளம் பயத்திலே பதறியது. மேனி வெடவெடவென்று நடுங்கியது.

''எனது அத்தை மகன் ஸ்ரீமதி நாராயணன்'' என்று அறிமுகம் செய்து வைத்த சுவாமிநாதன், அவளை உட்காரச் சொல்லி உபசரித்தான்.

வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு ஓரக்கண்ணால் கூர்ந்து பார்த்த அந்த மனிதர், ''இவர்களை நான் எங்கேயோ இதற்குமுன் பார்த்திருக்கிறேனே?'' என்று இழுத்துவிட்டு, மீண்டும் மேலும் கீழும் கண்களை ஓட விட்டார்.

அவரது குரல், அவர் பேச்சு, அவர் பார்வை யாவும் அவளுக்கு காரணமற்றதொரு கலவரத்தை உண்டாக்கின. ''நானும் பார்த்திருக்கிறேன். வீரசோழன் பட்டணத்தில் அண்ணாசாமி ஜோஸியர் வீட்டில் பார்த்த ஞாபகம்'' என்று சட்டென்று பதிலளித்த சௌமினி எரிச்சலுடன் மேஜைமீது கிடந்த பத்திரிக்கையை எடுத்துப் பிரித்து முகத்தை மூடிக்கொண்டாள் படிக்கும் பாவனையில்.

''ஆமாம்! இப்பொழுது ஞாபகம் வருகிறது. எனக்கு



ஜோஸியம் என்றால் கொஞ்சம் பைத்தியம். அதனால் அடிக்கடி அண்ணாசாமி வீட்டிற்குப் போவது வழக்கம்... ஹ்ம...'' என்று விளக்கம் தந்தார் அவர்.

''ஆமாம் சௌமினி! உங்கள் ஜாதகத்தைக் கொண்டு வந்து கொடுத்தால் இவர் நன்றாகப் பார்த்துச் சொல்லுவார்'' என்று சிபாரிசு செய்தான் சுவாமிநாதன்.

''என் ஜாதகத்தை ஊன்றிப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டிய ஆபத்து ஏதும் எனக்கு வந்து விடவில்லை. எனக்கு இவற்றில் எல்லாம் நம்பிக்கை கிடையாது'' என்று துச்சமாகப் பேசிவிட்டுச் சினத்துடன் மீண்டும் முகத்தைப் பத்திரிக்கைத் தாளில் மூடிக்கொண்டாள் சௌமினி.

வழுக்கைத் தலை மனிதர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஒருமுறை இருமினார். ''சரி நான் வருகிறேன். நேரம் ஆகிறது எனக்கு?'' என்று பொதுவாகக் கூறிவிட்டு எழுந்திருந்தார். வாசல் வரை சென்று அவரை வழியனுப்பி விட்டு சுவாமிநாதன் வந்து அவள் எதிரே நிம்மதியாக உட்கார்ந்து கொண்டான். பத்திரிக்கையை ஆத்திரத்துடன் மடித்துக் கீழே வீசிப் போட்டாள் சௌமினி.

''இவனை நீ எங்கே பிடித்தாய்? இதெல்லாம் என்ன நாடகம்? உனக்கு எப்பொழுதிலிருந்து இவற்றில் எல்லாம் நம்பிக்கை ஏற்பட்டது? இன்னும் சுலபமாகப் பணம் எப்படிப் புரட்டலாம் என்று ஆருடம் பார்க்கிறாயா? மந்திரத்தில் மாங்காய் விழத் தந்திரம் கற்றுக் கொள்கிறாயா? ஸ்வர்ண மந்திரம், காயகல்பம் என்று எதை எல்லாமோ தேடிக்கொண்டு புறப்பட்டிருக்கிறாயே, இது வேஷமா? வேடிக்கையா?'' என்று கோபத்துடன் ஏளனமாகக் கேட்டாள்.

''நானோ தனிக்கட்டை. பேச்சுத் துணைக்கு ஆள் வேண்டாமா? கடைத்தெருவில் சந்தித்தேன் இவரை. தமாஷாகப் பேசுகிறார். ஒரு கப் காப்பியை வாங்கிக் கொடுத்துவிட்டு, ஓட்டை கிராம போனை முடுக்கிவிட்டது போல் அவர் வாயைக் கிளறுகிறேன். ஏதேதோ பேசுகிறார். கேட்க சுவாரஸ்யமாக இருக்கிறது. பொழுது போகிறது. ரேகை

சாஸ்திரத்தில் கொஞ்சம் ஆசாமிக்குப் பரிச்சயம் இருக்கிறது. காசில்லாமல் என் கையைப் பார்த்துச் சொல்ல வந்தார். கேட்டேன். அவ்வளவுதான்'' என்றான் சுவாமிநாதன்.

''ஊரான் பணத்திலே உடம்பை வளர்த்தால் பொழுது சுலபத்தில் போகுமா?'' என்று ஆத்திரத்துடன் வினவிவிட்டு, கைப்பையைத் திறந்து ரூபாய் நோட்டுக் கத்தைகள் இரண்டை மேஜைமீது போட்டாள்.

''எண்ணிக் கொள், நாலாயிரம் இருக்கிறது. இதுதான் நான் கடைசியாக இங்கு வருவது. கொடுக்கும் தொகையும் இதுதான் கடைசி. மரியாதையாகக் கடிதக்கட்டுகள் அனைத்தையும் என்னிடம் கொடுத்துவிடு. இனி என்னை வீணாக மிரட்ட வேண்டாம். சாது எதிர்த்தால் காடு கொள்ளாது என்பார்கள். அவ்வளவுதான் சொல்லி விட்டேன்'' என்றாள் மிடுக்காக.

பணத்தை எண்ணிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்ட சுவாமிநாதன் எழுந்து சென்று பெட்டியைத் திறந்து, அரக்குப் பேழையை எடுத்தான். ''இப்படி நடக்குமென்று தெரிந்துதான் முன்கூட்டியே பத்திரிகைத் துண்டுக் கத்தையை இரு பகுதிகளாகப் பிரித்துக் கட்டி வைத்திருக்கிறேன். இன்றைக்கு ஒரு பாதியை மட்டும் கொடுக்கிறேன். மீதிப் பணத்துடன் வந்தால் அரக்குப் பேழையோடு மற்றப் பாதியைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பிறகு வாயைத் திறக்க மாட்டேன். ஏன், இந்த ஊரிலேயே இருக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டு ஒரு சிறு கடித உறையை அவள் முன் எடுத்துப் போட்டான்.

ஆத்திரம் தாளாது பற்களைக் கடித்துக் கொண்ட செளமினி, அதைத் திறந்துகூடப் பாராது எடுத்துத் தனது கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். கடந்த சில மாதங்களாகத் தன்னைப் பயமுறுத்திப் பொருள் பறித்துக் கொண்டு திகிலில் தவிக்கச் செய்த அந்தக் கிராதகனை அப்படியே கழுத்தை நெறித்துக் கொன்று விடலாமா என்று குமுறியது அவள் நெஞ்சம்.

''நீ இனி அடிக்கடி என் வீட்டின் பக்கம் வந்து



தொலைக்காதே! என் கணவருக்கு உன்னைக் கண்டால் பிடிக்கவில்லை. உன்னைத் தேடிக்கொண்டு இனி என்னாலும் இங்கே வர முடியாது'' என்றாள் வெறுப்புடன்.

''ஐயோ பாவம்? அந்தக் கிழவன் என்னைக் கண்டு சந்தேகப்படுகிறார் போலிருக்கிறது!'' என்று கூறிவிட்டுக் கைகொட்டிச் சிரித்தான் அவன்.

''போதும் பரிகாசம். எனக்கு நேரமாகிறது. இதுதான் கடைசியாக நீ என்னைப் பார்க்கிறது என்பது ஞாபகம் இருக்கட்டும்'' என்று எச்சரித்து விட்டு, எழுந்திருந்தாள் அவள்.

''அப்படியென்றால் மீதிக் கடிதங்கள் உங்களுக்குத் தேவை இல்லையா? ஆனால் எனக்குப் பணம் தேவையாயிற்றே? வேறு வழியில்லையா என்ன?'' என்று பல பொருள் பட வஞ்சகமாகப் பேசிவிட்டு விஷமமாக அவளைப் பார்த்தான் அந்தக் கயவன்.

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள் செளமினி. ''கடிதங்கள் கொண்ட அந்தப் பெட்டி எனக்குத் தேவைதான். ஆனால் அதை வாங்கிக் கொள்ள நான் நேரில் வரமுடியாது. உனக்குச் சம்மதமானால் ஒரு வழி சொல்கிறேன். என் இளைய பிள்ளை ஜகதீசன் பார்ப்பதற்கு ஒதிய மரம்போல் வளர்ந்திருக்கிறானே ஒழிய அவன் ஓர் அசடன். புத்தியற்றவன். நான் சொன்னபடி கேட்பவன். பணத்துடன் அவனை அனுப்புகிறேன். அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளாதே. பரஸ்பரம் நம்புவோம். பெட்டியை அவனிடம் கொடுத்துவிடு. ஆனால் உடனே அவசரமாகப் பணத்தை எதிர்பார்க்காதே. பத்து நாளாவது ஆகும்! நீ கேட்ட தொகையைப் பூராவும் சேர்க்க; சம்மதமா சொல்?'' என்று கேட்டாள் மிரட்டும் பாவனையில்.

சுவாமிநாதன் யோசித்தான். கிடைக்கும் பணத்தை விடுவானேன் என்ற பேராசை அவனை உள்ளூர உலுக்கியது.

''உங்களுக்குச் சம்மதம் என்றால் எனக்கு என்ன ஆட்சேபணை'' என்றான் தோள்களை நாசூக்காகக் குலுக்கியபடி.

''சரி அனுப்புமுன் உனக்கு டெலிபோன் செய்கிறேன்!''

என்று கூறிவிட்டு வேகமாக வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

அன்று மாலையில் வைத்தியர் சுந்தரேசன் தாழ்வாரத்துக் கயிற்றுக் கட்டிலின் மீது விச்ராந்தியாக உட்கார்ந்திருந்தார். ஊரிலிருந்து வந்த அவரது சகதர்மிணி, கணவனுக்காகச் சிரத்தையுடன் தயார் செய்து கொண்டு வந்திருந்த திரட்டுப்பால், முறுக்கு இரண்டையும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து அருகில் வைத்துவிட்டு, காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்றாள். அடுப்பருகிலே நின்றபடி அவள் தனது பெண்ணின் புக்ககத்துப் பிரதாபங்களை விஸ்தரித்துக் கொண்டிருந்தாள். சுந்தரேசன் கவனமெல்லாம் வேறு எங்கேயோ இருந்தது. வாயிற் கதவு கிரீச்சிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து வந்து எட்டிப் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை.

''வாப்பா வா! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன் வந்து விட்டாய்'' என்று அன்புடன் வரவேற்று விட்டு, சமையலறைப் பக்கம் திரும்பினார், ''உன்னைத் தானே, வேதாந்தம் வந்திருக்கிறான். கொஞ்சம் பக்ஷணம் கொண்டு வா. அத்துடன் சூடாகக் காப்பியும் கொடுத்தால் நன்றாக இருக்கும்'' என்றார்.

''வீட்டிலே அவா வந்துவிட்டாப்போல இருக்கிறது. பளிச்சென்று வாசலில் போட்டிருந்த கோலத்தைக் கண்டே புரிந்து கொண்டேன்'' என்று கூறிவிட்டுப் புன்முறுவலுடன் வேதாந்தம் கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டார்.

''துப்பறியும் சிங்கம்பா நீ. ஸ்காட்லாந்து யார்டு கெட்டுது போ!'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு வைத்தியர் உட்கார்ந்து கொண்டார்.

''நான் சொல்லப் போவதைக் கேட்டால் நீ ஆச்சரியப்படப் போகிறாய். சில நாட்களாக நான் உண்மையிலேயே துப்புத் துலக்கிக் கொண்டுதான் இருந்தேன். அந்தப்பயல் சுவாமிநாதன் யார் என்று விளங்கிவிட்டது. அவன் வலது கை



மணிக்கட்டிலேயிருந்த தழும்பைக் கண்டதும் அவன் யாரென்று கண்டுபிடித்து விட்டேன். அந்த அம்மாள் ஸ்ரீமதி நாராயணன் அவர்களும் யார் என்று புரிந்து விட்டது. பெயரில் என்ன இருக்கிறது. ரோஜாவை வேறு பெயரில் அழைத்தாலும் மணம் மாறுமா? அதுபோல பெயர்கள் மாறின போதிலும் நான் நினைத்த ஆசாமிகள்தான் இவர்கள் இருவரும்'' என்றார் உற்சாகத்துடன்.

அப்படியா? யார்? என்ன? என்று சொல்'' என்று கொஞ்சம் ஆவலுடன் வினவினார் வைத்தியர். இரண்டு தம்ளர் காப்பி, ஒரு டஜன் முறுக்கு, விளாங்காய் அளவு திரட்டுப்பால், ஒரு கவுளி வெற்றிலை இவ்வளாவையும் செலவழித்துக் கொண்டு இடை இடையே வேதாந்தம் கூறிய கதையைக் கவனமாகக் கேட்ட சுந்தரேசன் முடிவில் தமது வைராக்கியத்தினால் மேற்கொண்டிருந்த நிதானத்தை உதறிவிட்டுப் பரபரப்புடன் எழுந்தார். ''அப்படியானால், இதில் நாம் கொஞ்சம் தலையிட்டாக வேண்டியிருக்கிறதே. என்ன செய்கிறது?'' என்று கவலையுடன் கேட்டார்.

''வெறும் வாய்ப்பேச்சு மட்டும் போதாது. ஆதாரங்கள் வேண்டும். என்னிடம் அவைகள் இருக்கின்றன. ஆனால், சென்னையில் அவை இருக்கின்றன'' என்றார் வேதாந்தம் விரக்தியுடன்.

''என்னடா பழி! ஒன்றும் புரியவில்லை. விளங்கச் சொல்'' என்று வைத்தியர் அதட்டவே வேதாந்தம் அசட்டுப் புன்னகையுடன் ஆரம்பித்தார்.

பிறந்த ஊரில் தன் தந்தை தனக்கு விட்டுப்போன வீட்டில் வந்து வசிக்க வேண்டும், பிறந்தகத்துச் சொத்தை கௌரவப்படுத்த வேண்டும் என்று என் மனைவி விரும்பியதாலும் பொருளாதார நிலையை உத்தேசித்தும் சென்னையை விட்டு இங்கே வந்தோம் நாங்கள். ஆனால் சென்னையிலிருந்த என் வீட்டை வாடகைக்கு விட்டு வைத்திருக்கிறேன். ஓர் அறையில் மட்டும் எனது முக்கிய சாமான்களைப் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறேன். நிரூபிக்க

வேண்டுமானால் ஆதாரங்கள் எல்லாம் ஒரு பெட்டியில் அந்த
அறையில் ஒளிந்து கிடக்கின்றன. இப்போது யார்
சென்னைக்குப் போவது...?'' என்று இழுத்தார் வேதாந்தம்.

வைத்தியர் எழுந்து கூடத்து அறைக்குள் சென்று தமது
இரும்பு பீரோவைத் திறந்தார். வெளியே வந்து ஐம்பது ரூபாய்
நோட்டுக்களை நண்பன் முன் எண்ணி வைத்தார்.

''இதை முன்பே சொல்லித் தொலைக்கிறது தானே?
என்னிடம் பழகிக்கூட உனக்கு என்ன சங்கோஜம்? நிம்மதியாக
இரண்டாவது வகுப்பில் சென்னைக்குப் போய்விட்டு வா.
விரைவில் போய்வா'' என்று உத்தரவிட்டார்.

''இதெல்லாம்... எனக்கெதற்கு?'' என்று மறுத்த
வேதாந்தத்தை வைத்தியர் விடவில்லை. ''காரியம் முக்கியம்.
மற்றவை பிறகு பேசிக் கொள்ளலாம். இடக்கு ஏதும்
செய்யாதே. சொன்னபடி கேள்'' என்று அதட்டிவிட்டு,
பணத்தை எடுத்து நண்பர் மடியில் திணித்தார்.

## 56

திரையை விலக்கிவிட்டு மஞ்சுளா ஜன்னல் அருகே
வந்தாள். கிருஷ்ணபட்சத்து இரவின் கரிய வானத்திலே வைர
மணிகள் எனத் தாரகைகள் இங்குமங்கும் மினுக்கிட்டுக்
கொண்டிருந்தன. வராந்தாவின் வெளிச்சத்திலே படர்ந்து
கொண்டிருந்த நித்திய மல்லிகை மலர்களின் நறுமணம் காற்றின்
ஊடே கலந்து வந்து அறைக்குள் மிதந்து கொண்டிருந்தது. ஜுர
வேகத்தில் நினைவு இன்றிக் கட்டிலின் மீது புரண்டு படுத்தாள்
சந்திரா. கால் அருகில் படுக்கைமீது திறந்தபடியே இருந்த
புத்தகம் ஒன்று நழுவி தடால் என்று கீழே விழுந்துவிட்டது.
திடுக்கிட்ட மஞ்சுளா ஓடிச் சென்று அதை எடுத்துப் பத்திரமாக
மேசை மீது வைத்துவிட்டு, அருகில் வந்து அவளைக் கூர்ந்து
பார்த்தாள். வைத்தியர் கொடுத்துப் போன மயக்க மருந்தினால்



சந்திரா நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். அச்சிறு சப்தம்
அவள் நித்திரைக்குப் பங்கம் ஏதும் விளைவிக்கவில்லை.

சரிந்து விழுந்திருந்த போர்வையை எடுத்து நன்றாகப்
போர்த்திவிட்டு, நலிந்துபோன அவளது முகத்தை
இரக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் மஞ்சுளா.
பிரமாதமான அழகி என்று இல்லாவிடினும் ஆனந்த
நிலையத்துச் செல்வக்குமாரியின் முகத்தில் இருந்த திருமகளின்
பொலிவு நோயின் கொடுமைக்குப் பலியாகி விகாரமடைந்து
விட்டிருப்பதைக் கண்டு மனம் குமைந்து போனாள் மஞ்சுளா.

சில தினங்களாகச் சந்திரா புத்தகங்கள் பலவற்றைத்
தொடர்ந்து படிக்கச் சொல்லிக் கேட்பதில் மிகவும் கருத்தாக
இருந்தாள். ஒருநாள் முழுவதும் பகவத் கீதையின்
உட்பொருள்களையும், தத்துவங்களையும் கேட்டு ரசிப்பதிலே
பொழுதைப் போக்கினாள். இன்னொரு நாள் சைவ
சித்தாந்தத்தின் அரும்பெரும் விளக்கத்தைக் கேட்டு ஆனந்தப்
பட்டாள். நாயன்மார்களின் திவ்யசரித்திரம், ஆழ்வார்களைப்
பற்றிய வரலாறுகள், ஆங்கிலக் கவிதைகள், பாரதியார், தாகூர்
இவர்களின் கவிதைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டு
கண்களை மூடிக் கொண்டுமோன நிலையில் கவிதை உலகிலே
பவனி வந்தாள்.

சட்டென்று கண்களைத் திறந்து தன் சிநேகிதி பக்கம்
பார்த்தாள். ''நமது கவிஞரை உலகத்து மகாகவிகள் யாருடனும்
எந்த இடத்திலும் ஒப்பிட முடியும் இல்லையா? அடுத்த
பிறவியிலே நான் ஒரு கவியாகப் பிறக்கவே
ஆசைப்படுகிறேன்'' என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக்
கொண்டாள்.

இத்தனை தீவிரமாக ஆராய்ந்து படித்து அறிந்தவள் என்று
இதுவரை மஞ்சுளாவுக்குத் தெரியாது. எனவே அவள் சற்றுத்
திகைத்துப் போய்விட்டாள். பார்க்க வெகுளிபோல் தென்பட்ட
அந்தப் பெண், உண்மையிலே மிகச் சிறந்த அறிவொளி, ரசிகை,
பொறுமையின் பூஷணம், அடக்கத்தின் சின்னம். இவ்வளவு
இருந்தும் உலகிலே நீண்ட நாட்கள் வாழ முடியாது தடுக்கும்

கொடியதொரு நோய்! ஏன்! ஏன்? மனம் குமைந்துபோன அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

வடலூர் வள்ளலாரின் அருட்பாடல்களைத் தனக்குள்ளே மெல்ல முணுமுணுத்தாள் சந்திரா. மூடியிருந்த அவளது கண் இமைகளைத் தாண்டிக் கொண்டு கண்ணீர் தாரையாகக் கன்னங்களில் வழிந்தோடியது.

''படிக்கவும், கேட்கவும் ரஸிக்கவும் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் எனக்கு மட்டும் வாழ மிகவும் குறுகிய காலம்தான் மிஞ்சி இருக்கிறது? இருக்கும் சில நாட்களில் இத்தனையையும் படித்து, கேட்டு அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டும் என்ற ஆத்திரம்... கைகூடாத ஆசை... இதனால் என் மேலேயே எனக்கு மனக் கசப்பு, வீண் எரிச்சல்! கோபம்?... உம்... இதெல்லாம் என்ன சோதனையோ? புரியவில்லை!'' என்று பேசிக் கொண்டு போனாள்.

மஞ்சுளாவின் இளகிய உள்ளம் துன்பத்திலே தத்தளித்தது. கட்டு மீறிக்கொண்டு புறப்பட்ட கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள். ''இதெல்லாம் என்ன பேச்சு! வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளக் கூடாது. எல்லாம் விரைவில் சரியாகிவிடும். இன்று படித்தது போதும். மருந்தைச் சாப்பிட்டு விட்டுக் கொஞ்சம் தூங்க வேண்டும்'' என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

ஆனால் மருந்தைச் சாப்பிட்ட சந்திரா, புத்தகத்தை மேலே படிக்கச் சொல்லி வற்புறுத்தினாள். கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டே படுத்தவள் அப்படியே தூங்கிவிட்டாள்.

சில தினங்களாகத் தொடர்ந்து கண் விழித்திருந்து, சதா நோயாளியின் அருகிலிருந்து சலிக்காது பணிவிடை செய்ததனாலோ என்னவோ மஞ்சுளாவிற்கு மெத்தவும் களைப்பாக இருந்தது. காய்ச்சல் வந்துவிடும்போல் வாயெல்லாம் ஒரே கசப்பு. உணவின்மீது நாட்டமே இருக்கவில்லை. ''திடீரென்று இளைத்து விட்டியே? உன் உடம்பைக் கவனித்துக் கொள்'' என அன்று காலை கூட



சதுமாவியம்மாள் பரிவுடன் அவளை விசாரித்துவிட்டு வேலைக்காரி வசம் ஒரு டம்ளர் நிறைய ஆரஞ்சு ரஸத்தைக் கொடுத்து அனுப்பினாள். தினசரி இரவு வேளையில் சதுமாவியனுப்பி வந்த பாலை மரியாதைக்காகச் சிரமப்பட்டுச் சாப்பிட்டு வந்தாள். ஆனால் என்னவோ அவளுக்குத் தாங்க முடியாத ஒருவித உடல் சோர்வு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது. மூச்சு நின்று விடும்போல் நெஞ்சையடைத்துக் கொள்ளவே, கலவரத்துடன் ஜன்னல் அருகே வந்து நின்றாள். ஜில் என்று வீசிய குளிர்ந்த காற்று சற்று ஆறுதலையளித்தது.

''எனக்கென்ன வந்துவிட்டது கேடு. வீண் பிரட்சி, கவலைகளால் ஏற்பட்ட நரம்பு அதிர்ச்சி போலும்'' என்று தனக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டாள். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கண்டு விரக்தியடைந்து போன மனநிலை கொண்ட வயதான அனுபவசாலி அல்ல அவள். குதூகலமான எண்ணங்கள், குமுறியெழும் புத்துணர்ச்சிகள் நிறைந்த இளம் உள்ளம் படைத்த யௌவன மங்கை. எனவே மரணத்தைக் கண்டு அவளுக்குக் கலவரம் ஏற்பட்டது இயற்கையே.

'எப்படித்தான் சிநேகிதியின் முடிவுநாளை ஏற்கப் போகிறோமோ' என்ற ஒரு பயம் அவளை உள்ளூர உலுக்கிக் கொண்டிருந்தது. 'எந்தவிதமான உதவியும் செய்ய முடியாது செயலற்று இருக்கிறோமே' என்ற ஒரு பரிதாப நினைவும் உள்ளூர வாட்டிக் கொண்டிருந்தது. பலவற்றையும் எண்ணி உணர்ச்சித் திரளாக மாறிவிட்டிருந்த அவள் சிறு துரும்பு அசைந்தாலும் நடுங்கும் கோழையாக மாறி விட்டிருந்தாள்.

அடிவயிற்றைக் கிளறுவது போல் லேசானதொரு வலியும், நெஞ்சிலே பெரிய எரிச்சலும் ஏற்படவே தோட்டத்தின் பக்கம் திரும்பிச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு நின்றாள். ''இதென்ன பிரமை. ஏன் இப்படித் தலையைச் சுற்றுகிறது? எனக்கென்ன வந்து விட்டது!'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். இந்த மனக் கலவரத்திற்குக் காரணம் காலையில் வைத்தியர் சொன்ன உண்மைகள் தான் என்று ஒரு எண்ணம்

அவள் சிந்தையிலே ஊடுருவியது.

கடந்த சில தினங்களாகச் சந்திராவை விட்டிருந்த காய்ச்சல் மறுபடியும் அன்று காலையில் லேசாகத் துவங்கியிருந்தது. நீண்டநேரம் சோதனை செய்துவிட்டுக் கதவை மூடிக் கொண்டு வெளியே வந்த வைத்தியர் சுந்தரேசன் மிகவும் முகவாட்டமாக இருந்தார். அவர் முகத்தைப் பார்த்துக் கலவரமடைந்து போய் விட்டான் கிரிதரன். ''என்ன டாக்டர்! என்ன?'' என்று பதட்டமாக வாய் குழறிக் கேட்டான் வெகு ஆவலுடன்.

வைத்தியருக்கு கை கழுவ சோப்பும், வெந்நீரும் தயாராக எடுத்துக் கொண்டு வராந்தாவின் ஓரமாக வந்து, பின்னால் நின்ற மஞ்சுளாவின் காதுகளில் அவர்கள் பேசியது நன்றாகக் கேட்டது.

வைத்தியர் அன்புடன் கிரிதரனின் தோள்களைப் பற்றிக் கொண்டு தணிந்த குரலில் சொன்னார். ''சுவாசப் பைகளில் சுரம் லேசாக ஆரம்பித்திருக்கிறது. நலிந்துபோன உடல் நிலைக்கு இது நல்ல அறிகுறியல்ல'' என்றார் வருத்தத்துடன்.

''அப்படியானால்?'' என்று கேட்டான் நடுங்கும் குரலில் கிரிதரன்.

''நோயின் கடுமையை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இந்த வாரம் வரை கூடத் தாங்காது என்றுதான் தோன்றுகிறது. கிரி! இப்படி நீ மனம் தளரக்கூடாது. இதெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதானே. மனத்தை இது சமயம் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். உன் தந்தைக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீயே மனம் ஒடிந்து போனால்...'' என்று வைத்தியர் அவனை அதட்டிவிட்டு அணைத்துக் கொண்டார்.

முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதுவிட்டான் கிரிதரன்.

அதற்கு மேல் அங்கே நிற்க மஞ்சுளாவுக்குச் சகிக்கவில்லை. கையில் பிடித்திருந்த பொருள்களை அருகில் கிடந்த பெஞ்சின்மீது வைத்துவிட்டுத் தன் அறைக்குள் விரைந்தோடி மறைந்து கொண்டாள்.



'தன் சிநேகிதி இனிமேல் பிழைக்கமாட்டாள்' என்ற உண்மையை அறிந்ததனால் ஏற்பட்ட பெருந்துயரத்தையும் பின் சிநேகிதி படும் மனவேதனையைக் கண்டு ஆறுதல் சொல்ல வகையின்றித் தவித்த தன் உள்ளத்தின் வேதனையையும் தாள முடியாது மனம் ஆறுமட்டும் அழுது தீர்த்தாள்.

லேசாகக் கிரீச்சிட்டது அறையின் கதவு. துள்ளிக் கொண்டு விலகி, நடுக்கத்துடன் திரும்பிப் பார்த்தாள். சப்தமிடாது மெல்ல நடந்து வந்தார் ஸ்ரீமான் நாராயணன். சோகம் அவரது நடையிலிருந்த மிடுக்கைக் குடித்து விட்டிருந்தது. அவருக்குப் பின்னால் பூனைபோல மெல்ல உள்ளே வந்து நின்றாள் அன்னபூரணி அம்மாள். சாதாரண காலங்களில் அவள் மாடிப் பக்கம் வருவது அபூர்வம். யாரிடமும் பேசுவதுமில்லை. சந்திராவின் உடல்நிலை கேவலமாகத் தொடங்கியதிலிருந்து அவள் தினசரி பல முறைகள் மாடிக்கு வந்து கொண்டிருந்தாள். ஆனால் அவளது மௌனவிரதம் முன்னிலும் மிகவும் கடுமையாகி விட்டிருந்தது. யாரிடமும் எதுவும் பேசாது நோயாளியின் படுக்கையருகே வந்து அமர்ந்து கொண்டு, சந்திராவையே பார்த்துக் கொண்டு இருப்பாள். பிறகு தானே எழுந்து போய்விடுவது வழக்கமாகி விட்டிருந்தது.

''ஜுரம் எப்படியிருக்கிறது? ஏதாவது ஆகாரம் உள்தங்கியதா?'' என்று வினவிய நாராயணன், படுக்கையருகில் வந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார். இந்த கேள்வி தனக்குத்தான் போடப்பட்டது என உணர்ந்து கொள்ள மஞ்சுளாவிற்கு சில விநாடிகள் சென்றன.

அத்தனை காலம் அங்கே தங்கியும் அவளுக்கு வீட்டு எஜமானரை நிமிர்ந்து பார்க்கக்கூடத் துணிவு இருக்கவில்லை. அவர் பெயரைக் கேட்டால்கூட அவளுக்கு அச்சம். எனவே வெட்கமும் பயமும் கலந்த ஒரு விசித்திர உணர்வுடன் தலையை மெல்ல நிமிர்த்தி, ''கஞ்சி ஒரு வாய்தான் சாப்பிட்டார்கள். மருந்து சாப்பிட்டுவிட்டுச் சற்று முன்தான் தூங்க ஆரம்பித்தார்கள்'' என்றாள் மெல்லிய குரலில்.

''இம்!'' என்று பெருமூச்செறிந்த நாராயணன் கட்டிலின்

அருகே குனிந்து மகளின் நலிந்த கரத்தைப் பரிவுடன் தடவிக் கொடுத்தார்.

புரண்டு படுத்த சந்திரா விழித்துக் கொண்டாள். ''யார் அப்பாவா?'' என்று ஆவலுடன் வினவினாள் குழப்பத்துடன்.

''பயப்பட்டு விட்டியா! நான்தான் அம்மா'' என்று அன்புடன் சமாதானப்படுத்தினார் தந்தை.

''என்னவோ கனவு கண்டு கொண்டிருந்தேன். திடுக்கிட்டு விழித்துக் கொண்டு விட்டேன். ஆமாம் அப்பா! நீங்கள் சாப்பிட்டீர்களா? மணி எட்டிற்கும் மேலிருக்கும் போலிருக்கிறதே, உம்! ஏன் இன்னும் தூங்கவில்லை?'' என்று கவலையுடன் விசாரித்தாள் மகள். அவளது பரிவு அவர் நெஞ்சை வேதனைப்படுத்தியது.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதே. அது கிடக்கட்டும். உன் உடம்பு இப்போ எப்படியிருக்கிறது? கொஞ்சம் சூடா பால் சாப்பிடுகிறாயா அம்மா! ஆகாரமே இல்லாவிட்டால் உடம்பு எப்படியம்மா குணமாகும்?'' என்று ஆதங்கத்துடன் வினவிய தந்தை, கலைந்து நெற்றி மீது புரண்ட அவளது கூந்தலை ஒதுக்கிவிட்டார்.

''அப்பா!'' என்று மகள் மெல்ல அழைத்தாள்.

''ஏன் அம்மா, என்ன வேணும்?'' என்று அன்புடன் வினவினார் தந்தை.

''என்னுடைய பாகத்திற்கு உண்டான சொத்து ஏதாவது இருந்தால் அதைப் பாரபட்சமின்றி அண்ணா இரண்டு பேருக்கும், சமமாகப் பிரித்துக் கொடுத்து விடுங்கள் அப்பா. ஜகதீசன் மேல் எனக்குக் கோபமில்லை. நீங்களும் வீணாகக் கோபப்பட வேண்டாம். அவன் வேண்டுமென்றே செய்த காரியங்கள் ஏதும் இல்லை. அதனால் அவனை நீங்கள் மன்னித்து விடுங்கள். நான் அவனை மனத்திற்குள் மன்னித்துவிட்டேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

''இதென்ன அசட்டுப் பேச்சு!'' என்று அன்புடன் அதட்டினார் தந்தை.



ஆனால் நோயாளிப் பெண் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

''இரண்டாவதாக ஒரு வேண்டுகோள் அப்பா. சித்தியிடம் நீங்கள் சில தினங்களாக ரொம்பவும் கடுமையாக நடந்து கொள்கிறீர்கள். அது வேண்டாம். என் அருகிலிருந்து அவர்கள் பணிவிடை செய்யவில்லை என்று அவர்களைப் பலர் முன்னால் ஏசினீர்கள். பணிவிடை செய்து பழக்கப்பட்டவள் அல்ல அவள். நாசூக்காக வாழ ஆசைப்படுகிறவள். அவளை ஏன் வற்புறுத்த வேண்டும்? உங்களுக்கு ஏன் இந்த முன் கோபம், வீண் பிடிவாதம்? இதையெல்லாம் விட்டு விடுங்கள் அப்பா'' என்றாள் ஈனஸ்வரத்தில்.

நாராயணன் பதில் சொல்லவில்லை. கண்களில் துளிர்த்த கண்ணீரையும், நெஞ்சிலே குமுறிய உணர்ச்சிகளையும் சமாளிக்கச் சிரமப்பட்டவராகத் தன் மகளின் கரங்களை அன்புடன் பற்றிக் கொண்டார்.

''நான் வந்து உன்னை எழுப்பிவிட்டேன். தூங்கம்மா தூங்கு. இதெல்லாம் பிறகு பேசலாமே'' என்றார் தழுதழுத்த குரலில்.

''பிறகு பேசுவதற்கு எங்கே அவகாசம்? சொல்லுவதையெல்லாம் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்'' என்று படபடவென்று கூறிவிட்டுத் தலையைச் சற்று உயர்த்தி அன்னபூரணியின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

''பெரியம்மா உங்களுக்கு என் நன்றியை வார்த்தைகளால் தெரிவிக்க முடியாது. காசி யாத்திரை போக வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பீர்களே? காசிக்கு உடனே கிளம்பிவிடாதீர்கள்! கிரிதரனுக்குக் கல்யாணமாகி, ஒரு குழந்தை பிறக்கும்வரை கூடவே இருந்து எல்லாம் கவனித்துக் கொள்ள வேணும், தெரிந்ததா?'' என்றாள்.

அன்னபூரணி பதிலுக்குப் பெருமூச்செறிந்தாள். மங்கியிருந்த அவளது பார்வையைக் கண்ணீர் இன்னும் முழுவதும் மறைத்துக் கொண்டு விட்டது.

''ஜுர வேகத்தில் என்னவோ பேசுகிறாள். டாக்டரைக்

கூப்பிட்டு ஒரு ஊசிபோடச் சொன்னால் தேவலை'' என்று முணுமுணுத்தார் நாராயணன் ஆயாசத்துடன்.

''ஊசியும் வேண்டாம். நூலும் வேண்டாம்! இதோ நான் தூங்கப் போகிறேன். பயப்படாதீர்கள்'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு, மகள் மௌனமாகக் கண்களை மீண்டும் மூடிக்கொண்டு விட்டாள்.

சிறிது நேரம் யாரும் பேசவில்லை. வெளியே எழுந்து செல்லுமுன் ஜாடை காட்டி எஜமானன் மஞ்சுளாவை அருகில் அழைத்தார். ''குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் அம்மா. தூங்காமல் கவனித்துக் கொள். ஏதாவது சந்தேகம் என்றால் உடனே ஓடிவந்து கதவைத் தட்டி என்னைக் கூப்பிடு, தயங்க வேண்டாம். புரிந்ததா?'' என்று மெல்லிய குரலில் உத்திரவிட்டு விட்டுப் போய்விட்டார்.

பாதி ராத்திரிவரை சந்திரா அருகிலேயே இருந்த அன்னபூரணி விடிந்ததும் எழுந்து கீழே சென்றாள்.

எவ்வளவோ சிரமப்பட்டும் நித்திரையை மஞ்சுளாவால் தவிர்க்க முடியவில்லை. சோர்வும், களைப்பும் தாளாது நாற்காலியில் சாய்ந்தபடியே கொஞ்சம் உறங்கி விட்டாள். பிறகு 'என்ன?' என்று பதறிக் கொண்டு எழுந்து நின்றாள். ''நான்தான் கூப்பிட்டேன். குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்'' என்றாள் சந்திரா. வேகமாகச் சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தாள் மஞ்சுளா.

ஒரு வாய் ஜலம் குடித்துவிட்டு டம்ளரை மேஜைமீது வைத்த சந்திரா, ''இப்படி வா. அருகில் உட்கார்! உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டுமென்று நாலைந்து நாளாகத் தயங்கிக் கொண்டிருக்கிறேன். கையை நீட்டு'' என்றாள்.

மஞ்சுளாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. அருகில் வந்து அமர்ந்து கொண்டு குழப்பத்துடன் விழித்தாள். ''வருங்காலத்து என் மதனிக்கு நான் அளிக்கும் பரிசு இது'' எனச் சட்டென்று கூறிவிட்டு, மஞ்சுளாவின் இடது கரத்தைப் பற்றி மோதிர விரலில் அதை அணிவித்தாள் சந்திரா.



''இது என்ன!'' என்று தடுமாற்றத்துடன் கேட்டாள் மஞ்சுளா. அவளை மேலே பேச விடவில்லை. ''எனக்கு எல்லாம் தெரியும். கிரிக்கு உன்மேல் உயிர். அப்பா இப்போ மனம் மாறி விட்டிருக்கிறார். அவன் ஆசைக்கு எதிரே ஒன்றும் சொல்லமாட்டார். நீ எங்களைவிட எதிலும் குறைந்தவள் அல்ல. குணம், அறிவு, பண்பு, எதிலும் குறைந்தவள் அல்ல. மகாலக்ஷ்மி போன்று குடும்பத்தில் விளக்கேற்றக் குணவதி ஒருத்தி வந்தாலே செல்வமும், சீரும் வந்து தானே குவிந்துவிடாதா? மஞ்சு! வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல். என் அண்ணனைக் கல்யாணம் செய்து கொண்டு, என் பிரிவினால் அவனுக்கு ஏற்படும் துக்கத்தை நிவர்த்தி செய்வேன் என்று ஒரு வார்த்தை சொல்!'' என்று உணர்ச்சிவசத்துடன் பேசி விட்டு ஓவென்று அழுதுவிட்டாள்.

மஞ்சுளா பதில் பேசவில்லை. தாரையாகப் பெருக்கெடுத்து ஓடிய கண்ணீரைச் சமாளிக்க முடியாது தன் சிநேகிதியின் கரத்தை அன்புடன் பற்றித் தன் நெஞ்சுடன் பொருத்திக் கொண்டு விம்மினாள்.

## 57

இந்த சம்பவம் நடந்து மூன்று தினங்கள் கடந்து விட்டன. நான்காவது நாள் விடியும் சமயம் மஞ்சுளா பதற்றத்துடன் ஓடிவந்து கிரிதரனின் அறையை வேகமாகத் தட்டினாள்.

கதவைத் திறந்து கொண்டு தூக்கக் கலக்கம் தெளியாது வெளியே வந்தான் அவன். ''உங்கள் சகோதரி உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். அவசரம்'' என்று கலவரத்துடன் குளறினாள் அவள். ஏதோ விபரீதம் நேரப்போகிறது என்ற உள்ளுணர்வினால் ஏற்பட்ட திகிலும், உடல் அயர்வும் சேர்ந்து கொள்ளவே மஞ்சுளாவுக்கு மயக்கம் வந்துவிட்டது. 'என்ன!' என்று பதறிக்கொண்டு அவன் கேட்டது அவள் காதுகளில் விழவில்லை. தடால் என்று மரமெனக் கீழே சாய்ந்துவிட்டாள்.

மஞ்சுளா விழித்துக் கொண்ட பொழுது, கிரிதரன் தன்னைத் தூக்கித் தோளின் மீது சாத்திக்கொண்டு, துண்டினால் விசிறி, களைப்பைத் தீர்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். வெட்கத்துடன் எழுந்து அப்பால் நகர்ந்து நின்று கொண்டாள். ''எனக்குக் கொஞ்சம் களைப்பு. அவ்வளவுதான். சீக்கிரம் போங்கள்! தாமதம் செய்து விடாதீர்கள்'' என்று அரற்றினாள்.

மெல்லச் சுவரைப் பிடித்துக் கொண்டு மாடியிலிருந்த ஸ்நான அறைக்குள் சென்று பச்சைத் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாள். சேர்ந்தாப்போல் பலர் பேசுகின்ற குரல் கேட்கவே, கவலையுற்றவளாகத் தனது சோர்வை உதறிவிட்டு, சிரமப்பட்டு எழுந்து மெல்ல சந்திராவின் அறைக்குள் விரைந்தாள்.

அவள் எதிர்பார்த்துக் கலங்கிக் கொண்டிருந்த சம்பவம் அங்கே நடந்து விட்டிருந்தது.

குடும்பத்து ஜனங்கள் அனைவரும் சந்திராவின் படுக்கையைச் சுற்றி கூடியிருந்தனர். கிட்டா, சித்தி, அம்பிப்பயல், வஜ்ரவேலு முதலியோர் அறையின் வாயிற்படி அருகே சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்தனர்.

வைத்தியர் சுந்தரேசன் தலையை அசைத்து விட்டு எழுந்து வந்தார். ''அம்மா!'' என்று நாராயணன் அலறியதைக் கேட்டு, நடுநடுங்கிப்போய் மஞ்சுளா தன் சிநேகிதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். மரணம் உயிரைப் பற்றிக் கொண்டு சென்றபின் மீண்டும் திருமகளின் கருணை குடிகொண்டு விட்டிருந்தது ஆனந்த பவனத்துச் செல்வக்குமரியின் திருமுகத்திலே. சந்திரா மிகவும் அழகுடன் காணப்பட்டாள்.

கண்ணாடி முன் நின்று தன் திருஉருவத்தை ஏற இறங்க ஒருமுறை பார்த்துக் கொண்டான் சுவாமிநாதன். கொஞ்ச நாட்களாக அவனுக்கு ஏற்பட்டிருந்த குருட்டு அதிர்ஷ்டம் அவன் முகத்திலே பணத்தின் களையைப் பரப்பி விட்டிருந்தது. முதல் நாள் தையல் கடையிலிருந்து அவன் எடுத்து வந்து



அணிந்து கொண்டிருந்த பட்டு ஜிப்பா கழுத்தைப் பிடித்தது. வேலை தேடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இன்றி, உண்டுவிட்டு உல்லாசமாக ஊரைச் சுற்றிக் கொண்டிருந்ததனால் அவன் உடல் ஒரு சுற்று முன்னைவிடப் பருத்துவிட்டிருந்தது. அதைப் புரிந்து கொள்ளாத தையல்காரன் அவனது பழைய சட்டை அளவிற்கு அதைத் தைத்து விட்டிருந்தான். எரிச்சலுடன் கழுத்துப் பொத்தானை அவிழ்த்து விட்டுக்கொண்டு, கண்ணாடி முன் இப்படியும் அப்படியுமாக நின்று அழகு பார்த்துக் கொண்டான்.

மாலைப் பொழுது, பையன் மேஜைமீது கொண்டு வந்துவைத்த சூடான மசால் தோசை வீணாகப் போய் விடுமே என்ற அற்ப ஆசையினால் அதைச் சாப்பிட்டு விட்டிருந்தான். நெய் என்று சொல்லி ஹோட்டல்காரன் அதன் மீது தாராளமாக வார்த்திருந்த எண்ணெய் அவனது நெஞ்சின் மேலேயே நின்று கொண்டிருந்தது. ஹோட்டல் சாப்பாடுகளுக்கே ஒரு தனி மகிமை உண்டு. ஒரு சில தினங்கள் சென்ற பின் எந்த விதமாகத் தயாரித்திருந்த போதிலும் உணவிலே ஒரே ருசிதான் காணப்படும். நீடித்து ஒரே ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலோ அந்த ஒரே சுவையை உணரக்கூடிய அந்தச் சிறு அற்ப உணர்வையும் நா இழந்து ஒரேயடியாக மரத்துப் போய்விடும். இந்த நிலைக்கு வந்திருந்தான் சுவாமிநாதன்.

'எத்தனை நாள்தான் ஹோட்டல், ஊரான் வீடு என்று ஏகாங்கியாக இப்படிக் காலத்தை ஓட்டுவது? நமக்கென்று ஒரு வீடு, தலையை வலித்துப் படுத்தால் அன்போடு அருகில் இருந்து கவனிக்க ஒரு பெண் துணை, இவை இல்லாத ஜன்மம் என்ன ஜன்மம்!' என்ற வரை அன்று அவன் சிந்தனை சிறகு விரித்து இங்குமங்கும் தாவிப் பறந்து கொண்டிருந்தது. காதோரம் கிராப்புச் சிகையில் தெளிந்தோடிய இளநரையை உற்றுக் கவனித்துவிட்டு, முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

அப்படி ஒன்றும் அவனுக்கு வயதாகி விடவில்லை. ஆனால் இன்னமும் தள்ளிக் கொண்டு போனால் வாழ்க்கையில் சுவை இருக்காது. எனவே அவன் இனியும் வீண் பொழுதைக் கழிக்காது இல்வாழ்வில் ஈடுபட வேண்டியதைப் பற்றித்

தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அவனுக்குப் பெண் கொடுக்க யாரும் அஞ்ச மாட்டார்கள் என்பது திண்ணம். பார்ப்பதற்குக் கண்கவரும் கட்டழகன். கைநிறையப் பணம் வைத்திருக்கிறான். 'பெண்ணைப் பெற்ற மகாராஜர்களுக்கு இந்த இரண்டு விஷயங்கள் தானே முக்கியம்...?' என்று அவன் சிந்தனை பலவாறு நெளிந்தது.

கடைசி முறையாகச் சௌமினியைச் சந்தித்த பின்னர் சில தினங்கள் சென்றன. இதற்கிடையில் ஆனந்த நிலையத்தின் செல்வக்குமாரி மரணமடைந்து விட்டாள் என்ற செய்தி காதுகளில் வந்து விழுந்தது. என்ன செய்யலாம் என்று அவன் பலவாறு சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் சௌமினி அவனை டெலிபோனில் அழைத்துப் பேசினாள்.

''துக்க காரியம் எல்லாம் முடியட்டும். மூன்று வாரங்களுக்குப் பிறகு உன்னைப் பற்றிக் கவனிக்கிறேன்'' என்று கூடமாகச் சொன்னாள்.

தன் வரவை ஸ்ரீமான் நாராயணன் விரும்பவில்லை என்று அறிந்ததிலிருந்து சுவாமிநாதன் ஆனந்த நிலையத்தின் திக்கில் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அதனால் அவன் துக்கம் விசாரிக்கக்கூட அங்கு செல்லவில்லை. அதற்குப் பதில் தன் சாமான்கள் அனைத்தையும் கட்டி எடுத்துக் கொண்டு, 'கெட்டும் பட்டணம் சேர்' எனச் சென்னைக்குப் பயணமானான்.

சௌமினி ஓரளவுக்கு பயந்துவிட்டிருந்தாள் என்றாலும், அவளை ஒரேயடியாக விரட்டிக் கொண்டிருந்தால் ஆபத்துத்தான் ஏற்படும் என்று அவனுக்கு உள்ளூரப் பயம் ஏற்பட்டிருந்தது. சௌமினியிடம் ஓர் அலாதி குணம் உண்டு. ஓரளவுக்குத்தான் அவள் எதற்கும் அஞ்சுவாள். நிலைமையைச் சமாளிக்க முடியாது போய்விட்டால் பெண் புலியாக மாறி திரும்பி பாய்ந்துவிடும் இயல்புடையவள். பழுதை என்று காலடியில் போட்டு யாரும் அவளைத் துவைத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, அவன் சிறுமுன் ஊரை விட்டுக் கம்பி நீட்டத் தீர்மானித்தான். எனினும் கடைசியாக



அவளிடம் அவன் வாக்களித்த பணத்தை வாங்கிக் கொண்டு போகாதிருக்க அவன் மனம் ஒப்பவில்லை. மூன்று வார காலம் வீணே பொழுதைக் கழித்துக் கொண்டு அங்கு தங்கியிருப்பதைவிட்டு வருங்காலத்தின் திட்டங்களை வகுக்க வேண்டி அவன் சென்னை நகருக்குக் கிளம்பியிருந்தான். நீண்ட காலம் அங்கேயும் தங்கியிருக்க அவனுக்கு உத்தேசமில்லை. 'பிடித்தமான ஒரு இடத்தில் பெண்ணைப் பார்த்து, விரைவிலேயே விவாகம் செய்து கொண்டு, கண்காணாது வட இந்தியாவின் பெரு நகரம் ஒன்றிற்குப் புறப்பட்டுவிட வேண்டும். அங்கே கைப் பொருளை வைத்துக் கொண்டு ஏதேனும் ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும்' என்பவை அவனது அடிப்படையான தீர்மானங்கள்.

நகரத்தின் வெளிப்புறத்திலே புதிதாக உருவாகியிருந்த ஒரு கட்டிடத்திலிருந்த ஒரு மாடிப் பகுதியை மூன்று மாத வாடகைப் பணம் முன்னதாகக் கொடுத்து எடுத்துக் கொண்டிருந்தான். தனது சாமான்களை வைத்துப் பத்திரமாகப் பூட்டிவிட்டு, சௌமினியிடம் பறித்துச் சேமித்திருந்த பெருந்தொகையை நான்கு பகுதிகளாகப் பகிர்ந்து, நகரத்தின் நான்கு வேறு பாங்கிகளில் வெவ்வேறு பெயர்களில் போட்டான். கடற்கரையிலும், சினிமாக் கொட்டகையிலும், பஸ்களிலும், மின்சார ரயில் வண்டிகளிலும், கலாசாலை அருகிலும் தன் கண்களைக் கவர்ந்து கருத்தை இழுத்துக் கொள்ளும் காரிகை எவளாவது தென்படுகிறாளா என்று திருதிருவென விழித்துக் கொண்டு மூன்று வாரங்களையும் விரைவில் கழித்து விட்டிருந்தான். சௌமினி கொடுத்த தவணை நெருங்கியதும், பணத்தின் ஆசை காந்தமாக இழுக்கவே, குடியிருந்த மாடியைப் பூட்டிக் கொண்டு, 'வெளியூரில் வியாபார விஷயமாகச் செல்ல வேண்டும்; வரத் தாமதமாகும்' என்று கூடமாகக் கூறிவிட்டு முக்கியமான சில ஆடைகளையும், சௌமினிக்கு கொடுக்க வேண்டிய அந்த அரக்குப் பேழையையும் ஒரு சிறு பெட்டிக்குள் போட்டு எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

கிளம்பு முன் அவன் சிறு காரியம் செய்தான். ரத்தத்திலே

ஊறிக்கிடந்த அவனது வஞ்சக் குணம் அவனை விடவில்லை. தற்சமயம் கையில் தாராளமாக பணம் இருந்த போதிலும் அவன் ஆசை அடங்கவில்லை. ஒரு சமயம் பிற்காலத்தில் கைப் பொருள் செலவழிந்து பண நெருக்கடி ஏற்பட்டால் என்ன செய்வது? அரக்குப் பேழையிலிருந்த சில முக்கிய பத்திரிகைத் துண்டுகளைப் பொறுக்கியெடுத்துத் தன் பாங்கு புஸ்தகங்களுடன் அந்த வீட்டிற்குள் ஓர் இடத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டான்.

மறுபடி அவன் ஜலங்கண்டானுக்கு வந்து இரண்டு தினங்கள் தான் சென்றிருந்தன. அன்று காலை சௌமினி மீண்டும் அவனுக்கு டெலிபோன் செய்தாள். 'இன்று மாலை ஜகதீசன் உன்னைக் காண வருவான். உன்னிடம் சொல்லச் சொல்லி இரண்டொரு விஷயங்கள் அவனிடம் சொல்லி அனுப்புகிறேன். அவன் சுத்த வெகுளி. மூளையில்லாத பேதைப் பையன். ஹோட்டலில் பேச்சுவார்த்தை வேண்டாம். விவகாரத்தை வெளியே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று புதிர் போடுவதுபோல் பேசினாள்.

பணத்தைப் பெற்றதும் சற்றும் தாமதிக்காது நேரே சென்னைக்கு இரவு வண்டிக்கே கிளம்பிவிட வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டு ஹோட்டலுக்குச் சேர வேண்டிய தொகையைக் கட்டிவிட்டு, தனது சாமான்களைப் பெட்டியில் எடுத்துச் சேகரித்துக் கொண்டு அவன் தயாராகக் காத்திருந்தான்.

ஐந்து மணிக்கு ஜகதீசனை அனுப்புவதாக சௌமினி சொல்லியிருந்தாள். மணி ஐந்தரை ஆகியும் ஆளைக் காணவில்லை. அவள் செய்திருந்த ஏற்பாடும் அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. 'ஒருவருக்குத் தெரிந்த ஒரு விஷயத்தைத்தான் ரகசியம் என்று சொல்ல முடியும். இருவருக்குத் தெரிந்த அந்த விஷயம் அவ்வளவு ரகசியமில்லை. மூன்றாவது பெயருக்குத் தெரிவது என்றால்... பிறகு அதை வெட்ட வெளிச்சமான விஷயம் என்றே சொல்லிவிடலாம். எவ்வளவு வெகுளி, அசடு என்றாலும் ஜகதீசனை இது விஷயங்களில் நம்புவது சரியா? அல்லது இதெல்லாம் ஒரு சூழ்ச்சியா...' என்று பலவிதமாக எண்ணி,



சலவாரத்துடன் அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் உலாவத் தொடங்கினான். காரணமற்றதொரு பயத்திலே அவன் நெஞ்சு படபடத்தது.

யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்கவே மிரட்சியுடன் ஓடிச் சென்று கதவைத் திறந்தான். சிறு தோல் பையைக் கையில் சுமந்து கொண்டு உள்ளே வந்த ஜகதீசன், ''மன்னிக்க வேண்டும். கார் கொஞ்சம் இடக்கு செய்து விட்டது. வீணே வழியில் கொஞ்சம் தாமதமாகிவிட்டது'' என்று சொல்லிவிட்டு, 'உச்... அப்பாடா' என்று பெருமூச்சுடன் ஆசனமொன்றில் உட்கார்ந்து கொண்டான். 'காரியம் ஆகும்வரை கழுதையின் காலைக் கூடப் பிடித்துத் தானே ஆகவேண்டும்' என்று உள்ளுர வெகுண்ட சுவாமிநாதன், தன் கோபத்தை மறைத்துக் கொண்டு பகட்டாகச் சிரித்தான். ''அதனால் என்ன? இப்பொழுது என்ன அவசரம்? ரொம்பக் களைப்பாக காணப்படுகிறாய் தம்பி! கொஞ்சம் குளிர்ச்சியாக பாதாம்கீர் வரவழைத்துக் கொடுக்கவா?'' என்று வினவினான்.

''வந்தனம்! அதெல்லாம் தேவையில்லை. நாம் உடனே கிளம்பலாம். வரும் பொழுது தோட்டத்திலே உங்கள் காருக்காகச் சுற்றும் முற்றும் நின்று பார்த்தேன். காணவில்லை. ஒரு சமயம் நீங்கள் ஊரில் இல்லையோ என்று கூடப் பயந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு ஜகதீசன் எழுந்திருந்தான். அவன் கண்கள் அறையைத் துழாவிக் கவனிப்பதைக் குறிப்பாக உணர்ந்து கொண்ட சுவாமிநாதன் அருகே வந்து, அவன் முதுகைச் செல்லமாகத் தட்டினான். ''புத்திசாலிதான் தம்பி நீ! என் கார் நம்பரை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாயே? காரை நான் விற்று விட்டேன். உண்மையில் நான் இன்று இரவே அவசரமாக ஒரு வியாபார விஷயமாகச் சென்னைக்குப் போக வேண்டும். மற்ற என் சாமான்களை முன்பே ஒரு நண்பரிடம் கொடுத்து அனுப்பிவிட்டேன்.

''இந்தச் சிறு பெட்டி ஒன்றுதான் மீதி. இதைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டியதுதான் பாக்கி. உன் சிறிய அன்னை சௌமினியம்மாளின் பதிலுக்காகத்தான் இவ்வளவு நாழி காத்துக் கொண்டிருந்தேன்'' என்றான். 'இந்தப்

பையனுக்கு எவ்வளவு தூரம் விஷயம் தெரியுமோ தெரியாதோ, எதற்கும் திடமாகப் பேசுவதே நலம்' என்று தனக்குள் எண்ணி எண்ணி எதிலும் பட்டுக் கொள்ளாமல் பொதுவாகப் பேசினான்.

''சித்தி என்னிடம் எல்லாம் சொன்னார்கள். நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் வேறு என் சித்தி வேறு என்று எண்ணாது தாராளமாகப் பேசலாம். ஆனால் இங்கே பேச வேண்டாம்'' என்று கூறிவிட்டுச் சரசரவெனக் கதவு அருகில் சென்றான்.

'அசட்டுப் பயல்! இவனுக்கும் எனக்கும் என்ன பெரிய பேச்சு வார்த்தை வைத்திருக்கிறது' என்று அலட்சியமாக எண்ணிக் கொண்டு எரிச்சலுடன் மேஜை மேலிருந்த மணியைத் தட்டினான். மணிபர்ஸைத் திறந்து இரண்டு ரூபாயை எடுத்து, பணிவுடன் வந்து எதிரே நின்ற ஹோட்டல் பையனிடம் நீட்டினான். ''பையா, பெட்டியைக் கீழே எடுத்துக் கொண்டு வா'' என்று உத்தரவிட்டு விட்டு ராஜநடையில் முன்னால் ஏகினான்.

''உனக்கு ஆட்சேபணை இல்லையே!'' என்று கேட்டு விட்டு சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு காரின் முன் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்தான். ஜகதீசன் வண்டியை ஓட்டத் தொடங்கினான். ஜலகண்டானை விட்டு வெளியேறிய வண்டி, விரைவாக வீரசோழன் பட்டணத்தை அடைந்து, அதையும் தாண்டிக் கொண்டு சென்னை செல்லும் பாதையில் விரைந்தது.

''சென்னைக்கே நேரே போய்விடுவாய் போலிருக்கிறதே!'' என்று கேலியாகக் கேட்டுவிட்டுப் புகை மண்டலத்தை எழுப்பிய வண்ணம் சிகரெட்டை ஊதிக் கொண்டு உல்லாசமாகக் காரின் ஆசனத்திலே சாய்ந்து கொண்டான் சுவாமிநாதன்.

''பாதி வழியாவது கொண்டு விட்டால் உங்களுக்கு ரயில் செலவு மீதியாகுமல்லவா?'' என்று பரிகாசமாகக் கேட்ட ஜகதீசன், வண்டியை மிகவும் வேகமாக செலுத்தத்



தொடங்கினான்! அவன் பேசியதைக் காதில் வாங்காது, மாலைச் சூரியனின் அழகையும் சுற்றுப்புற இயற்கைக் காட்சிகளையும் ரசித்த வண்ணம் இன்ப உலகிலே பவனி வந்து கொண்டிருந்தான் சுவாமிநாதன்.

ஆடாது அசையாது ஓடிக் கொண்டிருந்த வண்டி கடகடவென்று குலுங்கிக் கொண்டு ஓடுவதை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். வழுவழுப்பாகத் தார் பூசியிருந்த ராஜபாட்டையை விட்டுக் குண்டும் குழியுமான மண் பாதையில் வண்டி குறுக்கே புகுந்து செல்வதைக் கண்ணுற்றான்.

''இப்போது நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? ஏன் தம்பி!'' என்று சுவாமிநாதன் சட்டென்று சந்தேகத்துடன் வினவினான்.

''அதோ தெரிகிறது பாருங்கள்! அந்தக் குன்றுக்குப் போய்விட்டுப் போகலாம். சூரிய அஸ்தமனத்தை அந்தக் குன்றின் உச்சியிலிருந்து கவனித்தால் மிகவும் அழகாக இருக்கும். மாலையில் இந்த வழியாக வந்தால் நான் அந்தக் குன்றுக்குப் போகாது போவதில்லை!'' என்று கூறிவிட்டு மணற் பாதையினின்று கொஞ்சமும் செப்பனிடப்படாத பொட்டல் நிலமொன்றின் பக்கம் வண்டியைத் திருப்பி ஓட்ட ஆரம்பித்தான்.

## 58

ஜகதீசன் பொட்டல் நிலத்தின் பக்கம் காரை ஓட்டவே சுவாமிநாதனுக்கு எரிச்சலும் கோபமும் தாங்க முடியவில்லை. ''மன்னிக்க வேண்டும் தம்பி! சூரிய உதயத்தையும் அஸ்தமன அழகையும் பார்த்து ரசிக்க எனக்குப் பொழுது கிடையாது. வண்டியைத் திருப்பு. இதென்ன அசட்டு வேலை. எங்கேயோ என்னைக் காடும் மேடும் கட்டி இழுக்கிறாயே!'' என்று உரத்த குரலில் கூவினான்.

''இரவு வண்டிக்குத் தவறாமல் நீங்கள் பட்டணம் போக ஏற்பாடு செய்துவிடுவேன். ரயில் தவறிவிடும் என்று கவலைப்படாதீர்கள்'' என்று கூறிவிட்டு மேலே வண்டியை ஓட்டிச் சென்றான் ஜகதீசன். சுற்றுமுற்றும் கவனித்த சுவாமிநாதனுக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டு விட்டது. எதிரே சற்றுத் தொலைவில் தெரிந்த குன்றின் பின்னால் சரிந்து கொண்டிருந்த சூரியனின் செம்மையொளி மங்கி, நீலநிறமாக மாறி வருவதைக் கண்ணுற்றான். பார்வைக்கு எட்டிய வரை ஆள் நடமாட்டமே இல்லை. எங்கு பார்த்தாலும் கள்ளிப் புதர்களும் வேலமரங்களும் தான் காணப்பட்டன. இடை இடையே, புதர்களைத் தாண்டி நிமிர்ந்து நின்ற கற்பாறைகளைக் கண்டு அவன் உடல் பயத்தில் ஆடியது. ''தம்பி! போதும் சொன்ன பேச்சை கேள். வண்டியைத் திருப்பு. யாருமற்ற இந்தப் பொட்டல் காட்டிலே பெட்டி நிறையப் பணத்தை வைத்துக் கொண்டு இருட்டும் சமயத்தில்... சே சே ரொம்பத் தப்பு! ஊரைப் பார்க்க வண்டியைத் திருப்பு?'' என்று அதட்டினான் மீண்டும்.

''நான் ஒருவன்கூட இருப்பது உங்களுக்குத் துணை போல் தென்படவில்லையா? சுத்தப் பயங்கொள்ளி போலிருக்கிறது. நீங்கள் பெரும் துணையாக இருப்பீர்கள் என்று நான் எண்ணிக் கொண்டு வந்தால் என்னையே பெரும் கோழையாக்கு கிறீர்களே!'' என்று பரிகாசமாகக் கேட்டுவிட்டுக் குன்றின் அடிவாரத்தில் காரை நிறுத்தினான் ஜகதீசன்.

''என் சிறிய அன்னை முன் கூட்டியே உங்களிடம் செய்த ஏற்பாட்டின்படி இதில் பணம் பத்தாயிரத்து ஐந்நூறு இருக்கிறது. ஆற அமர வெளியே வந்து உட்கார்ந்து எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதற்குப் பதில் தங்களிடம் இருக்கும் அரக்குப் பேழையை என் வசம் ஒப்புவித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியே வந்து கள்ளிப் புதர் அருகே பரந்து கிடந்த ஒரு பெரிய கற்பாறை மேலே உட்கார்ந்து கொண்டான்.

பணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் சுவாமிநாதன்



மறைந்துவிட்டான். காரின் பின் ஆசனத்திலே கிடந்த தன் பெட்டியைத் திறந்து அரக்குப் பேழையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து கற்பாறையின் மீது ஜகதீசன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். பேழையை எடுத்துக் கொண்டு தோல் பெட்டியை அவன் முன் வீசிப் போட்ட ஜகதீசன், மெல்ல சிரித்தான்.

''நன்றாக எண்ணிப் பாருங்கள். என் சித்தி ஒன்றும் மோசம் செய்துவிடவில்லை. அதைப் போல் நீங்களும் இதில் எல்லாக் கடிதங்களையும் வைத்திருக்கிறீர்கள் என நம்புகிறேன். தோல் பையைத் திருப்பித் தர வேண்டாம். பணத்துடன் அதை என் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டுப் பேழையைத் திறந்துகூடப் பார்க்காது காரின் பின்புறத்தில் வைத்துப் பூட்டினான்.

சுவாமிநாதன் தோல் பையைத் திறந்து ஆவலுடன் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தான். தன் எதிரே வந்து நின்ற ஜகதீசனைக்கூட அவன் கவனிக்கவில்லை. இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் எண்ணி, கணக்கு சரியாக இருப்பதை உணர்ந்து திருப்தியுடன் தோல் பையை மூடிவிட்டு நிமிர்ந்தான். அப்படியே திடுக்கிட்டு அரண்டுபோய் விட்டான். 'புன்னகை தவழ வெகுளித்தனமாகப் பேசிக் கொண்டு நின்ற ஜகதீசனா இவன்!' என ஆச்சரியப் படுமளவு அந்த வாலிபனின் முகம் பயங்கரமாக மாறியிருந்தது. கையில் கூர்மையான ஒரு கத்தியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்.

'மனப்பிரமை போலிருக்கிறது!' எனத் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டு சுவாமிநாதன், மெல்லிய குரலில் ''நேரமாயிற்று போகலாம் அல்லவா?'' என்று கேட்டுவிட்டு எழுந்திருக்க முயன்றான். பயத்திலே அவன் கால்கள் எழும்ப மறுத்தன. ''எங்கே போக? அப்படியே உட்கார்! அசைந்தால் செத்தாய், தெரிந்துகொள்'' என்று அதட்டிய ஜகதீசன் இரும்பை நிகர்த்த தனது இடது கரத்தால் அவன் தோள்களைப் பிடித்துக் கீழே அழுத்தினான். உட்கார்ந்த வேகத்திலே அவன் எலும்புகள் எல்லாம் நொறுங்கி விட்டனபோல் வேதனை ஏற்படவே, முகத்தைச் சுளித்துக் கொண்ட சுவாமிநாதன் மிகவும் கலவரம் அடைந்து விட்டான்.

'ஏதோ ஆபத்தில் வந்து சிக்கி விட்டோம்' என்ற அச்சம் ஏற்பட்டு விடவே அவனிடமிருந்த கொஞ்ச நஞ்ச தைரியமும் பயந்து ஓடி மறைந்து விட்டது.

''தோல் பையை இப்படிக் கொடு, அந்தப் பணம் உன்னைச் சேர்ந்ததல்ல. என்னைச் சேர்ந்தது!'' என்று அதட்டிய ஜகதீசன், அவன் கரத்திலிருந்த பையைப் பலவந்தமாகப் பிடுங்கி, குறி தவறாது ஜன்னல் வழியே காரின் முன் ஆசனத்தில் வீசிப் போட்டான்.

''ஏமாற்றி, பேழையைத் தட்டிக் கொண்டு போகவா இங்கே அழைத்து வந்தாய்? என்னிடம் விளையாடாதே. ஆபத்து ஏற்படும். ஜாக்கிரதை!'' என்று குமுறிய சுவாமி நாதனுக்கு அதற்குமேல் பேச முடியவில்லை. அழுகை தொண்டையை அடைத்துக் கொண்டது. சிரமப்பட்டு மெல்ல எழுந்திருக்க மீண்டும் முயன்ற பொழுது மறுபடியும் ஜகதீசன் முரட்டுத்தனமாக அவனைப் பாறைமீது தள்ளி, பலவந்தமாக உட்காரச் செய்தான். வாட்டசாட்டமான தோற்றமுடையவனாக இருந்த போதிலும் கோழைகளுக்கெல்லாம் தலைவனாக இருக்கத் தகுதியான பஞ்சையுள்ளம் கொண்டிருந்ததன் பயனாக சுவாமிநாதன், வயதிலும் தோற்றத்திலும் சிறிய ஜெகதீசன் முன்பு சிம்மத்தைக் கண்டு நடுநடுங்கி நிற்கும் யானை போல் அரண்டு போய் உட்கார்ந்து விட்டான்.

''எனது சிறிய அன்னையைப் பயமுறுத்தி எத்தனை பணம் பறித்தாய். அந்தப் பணம் எல்லாம் எங்கே வைத்திருக்கிறாய்? நீ கெட்ட கேட்டிற்கு உனக்குக் கல்யாணம் ஒரு கேடா? உன் விஷக் கண்ணால் அந்தப் பெண்ணை விழுங்கிவிட வேறு பார்த்தாயா? அவள் யாருக்குச் சொந்தம் என்பதை அறிவாயா, மடையா?'' என்று அதட்டினான் ஜகதீசன்.

சப்த நாடியும் பயத்திலே சோர்ந்துவிட்டது சுவாமிநாதனுக்கு. ''தம்பி, உன் காலில் விழுந்து கும்பிடுகிறேன். என்னை ஒன்றும் செய்யாதே. உனக்கு ஒரு தீங்கும் செய்யாதவன். என்னை இப்படியே விட்டுவிடு.



ஓடிப்போய் விடுகிறேன். நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை'' என்று கூறிவிட்டுக் கைகூப்பி அழத் தொடங்கினான்.

''பெண்களைக் கண்டால் மிரட்டுவாய், ஆண்களைக் கண்டால் அழுவாய். ஏன் - உனக்குப் புரியும்? மஞ்சுளாவை நான் மணக்கப் போகிறேன். அவள் என்னுடையவள். அவளை உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று என் சித்தியை நிர்பந்தித்தாயே, அப்பொழுது அழுதாயா, சிரித்தாயா? என்னுடன் போட்டியிடும்போது உன் முடிவு காலம் வந்து விட்டதை நீ உணரவில்லை.''

''உன் சித்தி அப்படியெல்லாம் சொல்லி உன்னை ஏமாற்றி என்மேல் ஏவி விட்டிருக்கிறாள். அவள் படுநீலி. கொலைகாரி'' என்று சுவாமிநாதன் முடிக்குமுன் வெகுண்டெழுந்த ஜகதீசன், தன் கரத்தில் பிடித்திருந்த கத்தியைத் தூர வீசிவிட்டு மிருக பலத்திற்கு ஒப்ப மிகவும் அழுத்தமாக ஓர் அறை விட்டான். சுவாமிநாதனின் கண்கள் சுழன்றன; தலை கிறுகிறுத்தது. ஒருகணம் நினைவுகூடத் தப்பிவிட்டது. ''தம்பி என்னை விட்டுவிடு? என்னை விடு!'' என்று அலறிக்கொண்டு எழுந்து ஓட யத்தனித்தான். அதற்குப் பிறகு அவனுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. புலி போலப் பாய்ந்த ஜகதீசன் தன் இரு கரங்களாலும் பலம் கொண்ட மட்டும் அவனது கழுத்தை நெறிக்கத் தொடங்கினான். மூச்சுத் திணறிய சுவாமிநாதன் சிறிது நேரந்தான் அவனுடன் போராட முடிந்தது. கொஞ்ச நேரத்தில் அவன் சுவாசம் மெல்லியதாகத் தேயத் தொடங்கியது. கைகளும், கால்களும் துவளத் தொடங்கின. அடியற்ற மரம் போல் பாறை மீது தடால் என்று மோதிக் கொண்டு விழுந்தான்.

இரவு போஜனத்திற்குப் பிறகு வராந்தா மீறி உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த சிறிய அன்னை முன்பு கொண்டு வந்து அரக்குப் பேழையை வீசி விட்டு, தாங்க முடியாத தலைவலியுடன் அறைக்குள் சென்று படுக்கையில் சாய்ந்து கொண்டான் ஜகதீசன்.

சுவாமிநாதன் கையிலிருந்த அரக்குப் பேழை தன் வசம் வந்ததும் கவலையெல்லாம் தீர்ந்துவிடும் என்று சௌமினி தவறாகக் கணக்குப் போட்டு விட்டிருந்தாள். விரும்பிய வண்ணம் அந்த அரக்குப் பேழையும் அதனுள் அடங்கியிருந்த அவளது வாழ்வில் புதைந்து போன ரகசியங்களை அம்பலப்படுத்தும் கடிதத் துண்டுகளும் அவளுக்குச் சுலபமாகக் கிடைத்து விட்டன. தாமதம் செய்யாது உடனே ஸ்நான அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். பெட்டியைத் திறந்து கடிதக் கட்டுகளை எடுத்து நிதானமாகப் பிரித்து அவை சரியானவைதானா என்று சோதித்துப் பார்த்தாள். அவற்றை மீண்டும் பெட்டிக்குள் வைத்து அதன் மேல் சில துளி மண்ணெண்ணெயை வார்த்தாள். பிறகு ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்து அதன் மீது போடவே குப்பென்று பற்றிக் கொண்டு எழுந்த நெருப்பின் ஜ்வாலையிலே அரக்குப் பேழை உருகத் தொடங்கியது.

பல நாட்களாக அவளைச் சஞ்சலத்திலே ஆட்டி வைத்துக் கொண்டிருந்த அந்தப் பயங்கரக் கடிதங்கள், காகிதத் துண்டுகள் எல்லாம் தீக்கிரையாகி விட்டன. அரக்கு உருகி, தீய்கின்ற நெடியும் புகையும் தாளாது அவளுக்கு இருமல் வந்துவிட்டது. தனக்கு ஏற்பட்ட சிரமத்தைப் பாராட்டாது அவை நன்றாகக் கருகிச் சாம்பலாகும்வரை அறைக்குள்ளேயே நின்று கொண்டிருந்தாள்.

தரையில் பரந்து நின்ற சாம்பலை வேலைக்காரியின் உதவியின்றி அள்ளி எடுத்து ஸ்நானத் தொட்டிக்குள் போட்டுக் குழாயைத் திருப்பி விட்டு விட்டாள். நெருப்பும் நீரும் அவளது கடந்த வாழ்வின் இரகசியங்களை அப்புறப்படுத்தி விட்டன. அதற்குப் பின்னால்தான் நிம்மதியாகப் பெருமூச்செறிந்து கொண்டு வெளியே வந்தாள். ஆனால் இந்த மன அமைதி அதிக நேரம் நீடித்து நிற்கவில்லை.

அன்று இரவு திடீரென்று உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு எழுந்து படுக்கையிலே உட்கார்ந்து விட்டாள்! ஆமாம்! சுவாமிநாதன் கதி என்ன ஆயிற்று? ஜகதீசன் கூறியபடி உண்மையில் அவன் இறந்து விட்டானா? அப்படியென்றால்...



அதன் விளைவு? அவளை அது எவ்வளவு தூரம் பாதிக்கும்? அதனின்று எப்படித் தப்புவது? - என்ற பலவிதமான பயங்கரச் சிந்தனைகள் ஏற்படவே அவளுக்கு அதற்குப் பின்னர் உறக்கம் வரவேயில்லை. கடுகளவு இருந்த மன அமைதியும் அஸ்தமித்து விடவே இந்தச் சிக்கலினின்று எப்படி விடுதலை பெறுவதெனப் புரியாமல் தத்தளித்துப் போனாள்.

மனதைப் பேயாக உலுக்கிய கவலைகள் அவளது முகப்பொலிவை விழுங்கி விட்டன. பல நாட்களாக நோய் வாய்ப்பட்டுக் கிடந்தவள் போன்று வெளுத்த முகத்துடன் உண்ணவும், உறங்கவும் மாட்டாமல் வீட்டைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தாள். சந்திராவின் மறைவிற்குப் பிறகு அவள் வெளியே செல்வதைக் கணவன் நிமித்தம் கைவிட்டிருந்தாள். வீட்டிற்குள் முடங்கிக் கிடக்க நேரிட்டதனால் வெளியுலகத்திலே நடக்கும் விஷயங்கள் அவள் காதுகளில் எட்டாமலிருந்தன. கட்டுக்காவல் மிகுந்த ஒரு சிறைச் சாலையினுள் கிடப்பதைப் போன்று அவள் வேதனையில் தவித்தாள்.

பத்திரிகைகளை விடாது புரட்டினாள். ரேடியோவைத் திருப்பி நாட்டின் செய்திகளைத் தவறாது, ஊன்றி கேட்டுப் பார்த்தாள். வேலையாட்கள் ஒதுங்கி நின்று பேசுவதை மறைந்து நின்று ஒற்றுக் கேட்டும் பார்த்துவிட்டாள். ஊஹூம் வெளியுலகத்துச் செய்திகள் ஒன்றுமே அறிய முடியவில்லை. நாட்கள் வேகத்தில் நகர்ந்தன. டெலிபோன் மணியடித்த போதிலும் என்னவோ ஏதோ என நடுநடுங்கி மெய்விதிர்த்துப் போகுமளவு பயம் அவளைப் பேயாக வதைக்கத் தொடங்கி விட்டது. இந்த நரக வேதனையை அவளால் சகிக்க முடியவில்லை. சிந்தித்தாள் சிந்தித்தாள் பற்பல விதமான கோர கற்பனைகளில் மண்டை வெடித்து விடும்போல் பாரமாகி விட்டது.

எப்படியோ ஐந்து தினங்கள் கழிந்து விட்டன.

ஆறாவது நாள் காலையில் படுக்கையினின்று எழுந்தவள், யாரிடமும் பேச மனமின்றி நேரே ஸ்நான அறைக்குள் சென்று

மறைந்து கொண்டான். ஸ்நானத்திற்குப் பிறகு வழக்கம் போல் தோட்டத்தை ஒருமுறை சுற்றி வரக்கூட அவளுக்கு அன்று ஆசையிருக்கவில்லை. அலங்கரித்துக் கொள்ளவும் மனமின்றி, சிறைப்பட்ட மயிலைப் போல் பின்னால் முதுகிலே புரண்டு கிடந்த தனது சுருண்ட கூந்தலை மெல்லச் சீப்பினால் கோதிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தோட்டத்திலே மலர்ந்து கிடந்த பூக்களைச் சேகரித்து, எஜமானி அம்மாளுக்காக அழகாகத் தொடுத்து எடுத்துக் கொண்டு, காலைத் தபால்களையும் அப்படியே வாரிக்கொண்டு உள்ளே மெல்ல வந்து நின்றாள், அவளது அந்தரங்க வேலைக்காரி. முகப்பவுடர் பூச்சு, மை முதலிய அலங்காரம் ஏதும் இன்றி எஜமானியம்மாளின் முகம் பாழடைந்த பங்களா போல் வெறிச்சென்று இருப்பதைக் கண்டு அவள் வியப்பெய்தி விட்டாள்.

எத்தனை வேலைகள் இருந்த போதிலும், எவ்வளவு அவசரமென்றாலும் தன் அலங்காரத்தைப் புறக்கணிக்க விரும்பாத இந்தச் செல்வச் சீமாட்டிக்கு இப்பொழுது என்ன வந்து விட்டது? ஏன் இந்த சோகம்? மூத்தாள் மகன் மறைந்து போனான் என்ற துக்கமா? அது நம்ப முடியாத செய்தியாயிற்றே என்று தனக்குள் எண்ணிக் காரணத்தை அறியத் துடித்தாள் அவள்.

காலைப் பத்திரிகை, தபால்கள் முதலியவற்றை, எஜமானியம்மாள் அருகில் கிடந்த ஒரு முக்காலி மீது வைத்துவிட்டு, புஷ்பக்கட்டைக் கண்ணாடி அருகிலிருந்த அலங்காரப் பொருள்கள் வைக்கும் மேஜைமீது வைத்தாள். ஓரக்கண்ணால் எஜமானியை உற்றுப் பார்த்துக் கொண்டே அறையைச் சுத்தப்படுத்துவதில் முனைந்தாள். ஒரே சுருட்டாகக் கூந்தலைச் சுருட்டி அவசரமாக முடித்துக் கொண்டு தபால்களைக் கூடப் பிரிக்க ஆசையின்றி சட்டென்று தினசரி பத்திரிகையை எடுத்துக் கொண்டாள் சௌமினி. அதைப் பிரிப்பதற்குள் அவள் கைகள் நடுங்கின. பயத்திலே மேனி பதறியது. நெஞ்சு துடிக்கத் தொடங்கியது. ஒவ்வொரு பக்கமாகப் புரட்டி தலைப்புகள் மீது கண்களை விரைவாக ஓட்டினாள். ஐந்தாவது பக்கத்திலே கீழே ஒரு மூலையில்,



வானிலை விவரத்தின் கீழ்க் காணப்பட்ட ஒரு சிறு விஷயத்தைப் படிக்க ஆரம்பித்ததும் பதற்றத்தில் நாக்கை வெடுக்கென்று பலமாகக் கடித்துக் கொண்டு விட்டாள்.

''போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்'' என்ற தலைப்பைப் படித்ததும் அவள் தலை சுழன்றது. பகீர் என்ற ஒரு பயங்கர உணர்ச்சி அவளது வயிற்றையும் குடலையும் பற்றிக் கொண்டு ஒரே விநாடியில் அவளது உணர்ச்சியையெல்லாம் உறிஞ்சி விட்டன. நெஞ்சு வெடித்துவிடும் போல் வேகமாகப் பதறி, மெய் சோர்ந்து குழப்பத்துடன் மேலே படிக்க ஆரம்பித்தாள். ''நேற்று மாலை வெள்ளிக் குன்றின் அடிவாரத்திலே தன் நினைவின்றிப் படுகாயமுற்றுக் கிடந்த ஒரு மனிதனை, ஆடு மேய்க்கச் சென்ற சில சிறுவர்கள் கண்டு போலீசாருக்குத் தெரிவித்தனர். அதன் பயனாக அந்த ஸ்தலத்திற்கு விரைந்த போலீசார் அந்த மனிதனை அப்புறப்படுத்தி, நகரத்து சர்க்கார் ஆஸ்பத்திரியில் அனுமதித்திருக்கிறார்கள். கொலை செய்யும் எண்ணத்துடன் யாரோ அவரைக் கோரமாகத் தாக்கியிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகின்றது. பலமான காயங்களுடன் மூன்று தினங்களுக்கு மேல் யாரும் கவனிக்காத இடத்தில் தன் நினைவின்றிக் கிடந்த போதிலும் அம்மனிதன் இன்னமும் உயிருடன் இருப்பதைக் காண வைத்தியர்கள் ஆச்சரியப்படுகின்றனர். பெயர், விலாசம் இவற்றை அறிந்து கொள்ள எந்த விதமான தடயங்களும் இருக்கவில்லை. போலீசார் இது சம்பந்தமாகப் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

பத்திரிக்கையை மூடி முக்காலி மீது வைத்துவிட்டு ஜன்னல் வழியே வெளியே வெறித்துப் பார்த்தாள். முகம் வெளுத்து, கண்ணின் ஒளி மங்கி அவள் பயத்திலே உயிரில்லாத பொம்மைபோல் ஸ்தம்பித்துச் சில விநாடிகள் அப்படியே உட்கார்ந்து விட்டாள். 'அட பாவி! அப்படியென்றால் சுவாமிநாதன் இன்னமும் சாகவில்லையா? குற்றுயிராக இருந்து கொண்டு இன்னும் அவன் அவளை என்னவெல்லாம் ஆட்டி வைக்கப் போகிறானோ?

''அம்மா! பூவைத் தலையில் வைக்கட்டுமா?'' எனக் குழைவுடன் கேட்டுக் கொண்டு அருகில் வந்த வேலைக்காரியைக் கண்டு மரண தேவதையைக் கண்டவள் போல் அப்படியே மிரண்டு போய்விட்டாள். திடுக்கிட்டு எழுந்து நின்றாள். ''என்ன? பூவா? போடி போ! வேளை பொழுதில்லாமல் பெருக்க உள்ளே வந்துவிட்டாள். உன்னை யார் இப்பொழுது கூப்பிட்டது!'' என்று உரத்த குரலில் கோபத்துடன் இரைந்தாள்.

பதில் பேசாது விழித்த வேலைக்காரி மீது அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. மயக்கமுற்றுக் கீழே விழுந்து விடாவண்ணம் சட்டென்று அருகிலிருந்த சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள். ''வெளியே போ! உன்னைத்தான் சொல்கிறேன். மட்டிக் கழுதை!'' என்று கிரீச்சிட்டாள் சௌமினி.

## 59

சுவரைப் பிடித்துக் கொண்டு நின்ற எஜமானியம்மாளின் கரங்கள் குளிர்கொண்டு விட்டனபோல் நடுங்குவதைக் கண்ட வேலைக்காரிக்கு ஆச்சரியம் தாள முடியவில்லை. வீட்டில் சண்டை ஏதுமின்றி இருக்க, அம்மாள் ஏன் கண்டபடி ஏசுகிறாள் என்ற துக்கம் ஒருபுறம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. பூச்சரத்தை மேஜைமீது வைத்துவிட்டு மின்னல் போல் அவள் வெளியே ஓடிவிட்டாள். கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து அறை நடுவே நின்றாள் சௌமினி. அண்ட சராசரங்கள் எல்லாம் இடிந்து அவள் தலைமீது விழ வந்து கொண்டிருக்கின்றன போல் ஒரு பிரமிப்பில் அவளுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் பலமுறை உலாவினாள்.



குழம்பிக் கிடந்த அவளது மூளையில் பளிச்சென்று ஒரு வழி புலனாகியது. உடனே அவசரமாக பீரோவைத் திறந்தாள். தன் வசமிருந்த எஞ்சிய ஆபரணங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாது வாரித் தனது கைப்பையில் திணித்துக் கொண்டாள். மேல் தட்டிலே கைக்கு எட்டிய இடத்தில் இருந்த ஒரு புடவையை இழுத்து, அழகும் பொருத்தமும் பார்க்கப் பொழுது இன்றி, விரைவில் உடுத்திக் கொண்டாள். கதவை மெல்லத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அப்போது ஸ்நான அறைக்குள் நாராயணன் இருமும் சத்தம் கேட்டது. தாமதம் செய்யாது அதிமெதுவாக மாடிப்படிகளை விரைவில் தாண்டிக் கீழே சென்றாள். தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்த ஜகதீசனின் கண்களில் தான் தென்படுமுன் காருக்குள் ஏறிக்கொண்டு விரைவாக அதை வெளியே செலுத்திக் கொண்டு சென்று விட்டாள்.

இந்த முறை அவள் துவாரகராம் சேட்டுடன் அதிகமாகத் தர்க்கம் செய்யவில்லை. ''அதிகாலையில் என்னம்மா அவசரமாக வந்திருக்கிறீர்கள்? குழந்தை தவறி விட்டது பற்றி ரொம்ப வருத்தம் அம்மா. துக்க காரியங்களில் பணம் ரொம்பச் செலவாகிறது போல் இருக்கிறது. த்ஸொ! த்ஸொ!'' என்று அனுதாபத்துடன் குறிப்பாக விசாரித்தார். அவள் அதற்காகக் கோபம் கொள்ளவில்லை. கருமமே கண்ணாயினாள் என்ற நிலையில், தான் கொண்டு வந்த நகைகளை அவர் முன் கொட்டி, அவைகளை அடமானமாக வைத்து சேட் ஜயா கணக்கிட்டு எண்ணிக் கொடுத்த தொகையை வாங்கிப் பையில் திணித்துக் கொண்டு வேகமாக வெளியே வந்தாள்.

அவள் அவரிடம் பணத்திற்காக, அதிகம் பேரம் பேசவில்லை. பணம் பணம் என்று பேயாக அலைந்த அவள் உள்ளம் அன்று அதன்மீது கூடச் சலித்து விட்டிருந்தது. அந்த அபூர்வப் பொருளுக்காக அவள் செய்த தியாகங்கள் எத்தனையோ! சூழ்ச்சிகள் எவ்வளவோ! பேசிய பொய்களுக்குத்தான் கணக்கு உண்டா? அபரிமிதமான செல்வத்தின் சுகத்தைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும், பணத்தின் மீது புரள வேண்டும் என்றெல்லாம் பேராசை

கொண்டு அவள், ஆரம்பத்திலிருந்து அதற்காகப் பட்ட பாடு கொஞ்சமா? அத்தனையும் விழலுக்கிறைத்த நீராக வீணாகவல்லவா போய்விட்டது. பணம், பதவி, அந்தஸ்து, ஆடம்பரம் இவை அனைத்தும் அன்று அவளுக்குத் துச்சமாகி விட்டன. 'வீணாக எத்தனை கஷ்டங்களுக்கு உள்ளானோம். எத்தனை அறியாமை. சே! சே!' என்று தனது செயல்கள் பலவற்றையும் சிந்தித்து வெறுப்படைந்து விட்டிருந்தாள்.

ஆனால் ஒரேயடியாக அவள் தன் வாழ்க்கை மீதே வெறுப்படைந்து விடவில்லை. பயம், கவலை, துன்பம் இத்தனைக்கு நடுவிலும் அவள் ஒன்றே ஒன்றை மட்டும் மிகவும் நேசித்தாள். விரும்பினாள். ஆமாம்! தன்னுடைய அருமையான உயிரை அவள் மிகமிக விரும்பினாள். பரந்த இந்த உலகத்திலே எங்கேயாவது ஒரு மூலையில் நிம்மதியாக யாருக்கும் தெரியாமல் மறைந்து இருந்து கொண்டு நீண்டகாலம் வாழ அவளுக்கு வழியில்லையா? அல்லது வகைதான் இல்லாது போய்விடுமா?...

ஒரு பொட்டலம் தலைவலி மாத்திரைகளை வாங்கிக் கொண்டு மருந்துக் கடையினின்று வெளியே வந்தாள். காரின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே உட்காருமுன் தலையை நிமிர்த்தி தெருவைப் பார்த்தவள் அப்படியே நடுநடுங்கி ஸ்தம்பித்து நின்று விட்டாள். எதிர்ப்புறத்தில் மோட்டார் சைக்கிள் மீது சாய்ந்து கொண்டு நடைபாதையருகே நின்று கொண்டிருந்த போலீஸ்காரன் ஒருவன் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்!

சௌமினியின் நெஞ்சு வெடித்து விடும்போல் துடிக்கத் தொடங்கியது. கரங்கள் பதறின. காரின் கதவை மெல்லத் திறந்து கொண்டு உள்ளே உட்கார்ந்தாள். மிகவும் சிரமப்பட்டுத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வண்டியைச் செலுத்தினாள். தெருவின் முனையைத் தாண்டி பெரிய ரஸ்தாவிற்குள் நுழைந்த பின்னர்தான் அவளுக்கு மூச்சு வந்தது.

'சே என்ன பிரமை!' என்று தன்னையே ஒருமுறை கடிந்து



கொண்டு வீட்டை நோக்கி வண்டியை மேலே ஓட்டிக்கொண்டு சென்றாள். கொஞ்ச தூரம் கூட அவள் செல்லவில்லை. அதற்குள் பின்னாலிருந்து படபடவென்று ஓசை வந்தது. அரண்டு போய் காரின் கண்ணாடி வழியே நோக்கினாள். அதே போலீஸ்காரன், மோட்டார் சைக்கிள் மீது அவளைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்! பீதியில் குழம்பிப் போன சௌமினிக்குக் கண்முன் என்ன நடக்கிறது என்றுகூடத் தெரியவில்லை. உயிர் உடலைவிட்டு ஓடிவிட்டது போன்ற ஒரு பிரமையினால் உந்தப்பட்டு மெல்ல வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள். மிகவும் வேகமாக அவளைத் தாண்டிக் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள், கொஞ்ச தூரம் சென்றதும் நின்றது. அதனின்றும் இறங்கிய போலீஸ் ஜவான் கையை நீட்டி அமர்த்தினான். வேறு வழியின்றி சௌமினி காரை நிறுத்தினாள். உல்லாசமாக நடந்து காரின் அருகே வந்த போலீஸ் ஜவான் புன்முறுவலுடன் அவளையும் வண்டியையும் ஒருமுறை ஏற இறங்க உறுத்துப் பார்த்தான். "தயவு செய்து தங்கள் லைசென்ஸை காட்ட முடியுமா?" என்று குழைந்த குரலில் கேட்டான்.

நறுக்கி விட்ட பயங்கர மீசையும், குற்றங்களையே கண்டு கூசாது கடுமையாகிவிட்ட கருணையற்ற கண்களும், அதிகாரம் நிறைந்த குரலும் கொண்ட வாட்ட சாட்டமான போலீஸ்காரனாக அவன் இருக்கவில்லை. காக்கிச் சட்டைக்குள் மறைந்து கொண்டிருக்கும் கம்பீரமான ஒரு கலாசாலை மாணவன் போல் மிகவும் இளமையாகக் காணப்பட்டான். அழகான ஒரு பெண்ணிடம் பேச நேரிட்டு விட்டதே என அஞ்சி விட்டவன்போல், சங்கோஜத்திலே அவன் முகம் சிவந்து விட்டிருந்தது. காரின் முன்னால் உள்ள சிறு அறைக்குள் கையை விட்டு லைசென்ஸ் புத்தகத்தை உருவி எடுத்து அவன் முன் அசட்டையாக நீட்டினாள் சௌமினி. அதிலிருந்த புகைப்படத்தையும் அவளையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'சௌமினி நாராயணன்' என்ற பெயரை மந்திரம்போல் மூன்று முறை தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் அவன். அப்போது உதட்டைக் கடித்துக் கொண்டு

முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள் சௌமினி.

''மன்னிக்கவும். அநேகப் பெண்கள் இந்த ஊரில் இப்பொழுதெல்லாம் லைசென்ஸ் இல்லாமலே வண்டியோட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தங்களை வீணே நிறுத்திவிட்டேன்'' என்றான் பணிவான குரலில்.

சௌமினி அவன் பக்கம் திரும்பி ஏளனமாக முறுவலித்துவிட்டு, புத்தகத்தை வாங்கி அசட்டையாக காருக்குள் போட்டாள்.

''பரவாயில்லை. தங்கள் கடமையைச் செய்தீர்கள், இதற்குக் கோபமேன்?'' என இனிமையாகச் சொல்லிவிட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள்.

''மடையன்! பத்தாம் பசலி! வேலைக்குப் புதிது போலிருக்கிறது'' என்று கோபத்துடன் அவனை ஒரு முறை சபித்துவிட்டு, நெற்றி மீது ஆறாக வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

வீட்டை நெருங்கியதும் ஏனோ மறுபடியும் இனம் விளங்காத ஒரு கலவரம் அவளைப் பற்றிக் கொண்டது. தன் உணர்ச்சிகளை மெல்லச் சமாளித்துக் கொண்டு மாடிப்படிகளைக் கடந்து வராந்தா மீது மெல்ல நடந்து சென்றாள்.

''இங்கே வா! உன்னைத்தான்'' என எழுந்த இடியோசை போன்ற குரல் அவளைத் திடுக்கிடச் செய்துவிட்டது. திரும்பிப் பார்த்தாள். ஸ்ரீமான் நாராயணன் மாடி முன் ஹாலில் ஒரு சோபாவின் மீது சாய்ந்து கொண்டு இருந்தார்! அவர் அருகே சிறு மேஜைமீது கட்டுக்கணக்கில் காகிதங்கள் குவிந்து கிடந்தன. எதிரே சற்றுத் தொலைவில். கிரிதரன் சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்தான். ஹாலின் மூலையிலிருந்த பிரம்பு நாற்காலி மீது காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த ஜகதீசன் ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஜன்னல் ஓரத்திலிருந்த புத்தக அலமாரியைத் தட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டு நின்ற வஜ்ரவேலு அவளைக் கண்டதும் அசட்டுப் புன்முறுவலுடன் கும்பிடு போட்டான்.



வராந்தாவின் தரையைத் துடைத்துக் கொண்டிருந்த வேலைக்காரி முத்தம்மாள் தலையை நிமிர்த்தி, அச்சத்துடன் அவளைப் பார்த்துவிட்டு மறுபடியும் தன் வேலையில் முனைந்து விட்டாள்.

பீறிக்கொண்டு எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு சௌமினி மேலே நடந்தாள், காது கேட்காதவள் போல்.

''உன்னைத்தான்! செவிடாகி விட்டாயா என்ன? வா இப்படி'' உரத்த குரலில் கூப்பிட்டார் நாராயணன். பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டுத் தந்தையை ஆச்சரியத்துடன் வெறித்துப் பார்த்தான் ஜகதீசன். சலனமற்ற முகத்துடன் தன்னையே பார்த்துக் கொண்டு நின்ற கிரிதரனைக் கண்டதும் அடங்கியிருந்த அவளது ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு புறப்பட்டது. விடுவிடுவென்று உள்ளே வந்து நின்றாள். ''எதற்கு இந்தக் கூச்சல். செவிடர்கள்தான் சத்தம் போட்டுப் பேசுவார்கள்!'' என்று ஏளனமாகக் கூறிவிட்டு கணவனை விழித்துப் பார்த்தாள். ''எதிர்த்து வாயாடாதே! முன்பே எச்சரித்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்'' என்று உறுமிய நாராயணன் அவளை வெட்டி விடுபவர் போல் கண்களை உருட்டினார். ''ஆமாம்! காலை வேளையில் யாரிடமும் சொல்லாமல் எங்கே போயிருந்தாய்? இப்படி ஊரைச் சுற்றுகிற பழக்கத்தை இன்றோடு விட்டுவிடு, இல்லாவிட்டால்...'' என்று கோபத்துடன் சீறிவிட்டு நிறுத்தினார். காப்பி டம்ளரை தூக்கிக் கொண்டு வந்த அம்பிப்பயல் எஜமானர் கோபாவேசமாக இருப்பதைக் கண்டு பயந்து போய் முன்னால் வரத் தயங்கி ஹாலின் வெளியிலேயே நின்று விட்டான்.

பதில் பேசாது முன்னால் வந்து சிலையென நின்ற மனைவியைக் கண்டதும் நாராயணனின் கோபம் மீண்டும் கொதித்து எழுந்து விட்டது. ''உன் ஒருத்திக்கு இத்தனை செலவா? அப்படி என்னதான் வாங்கி விட்டாய்? இந்தக் கடைக்காரர்கள், பாக்கிப் பணம் ரொம்ப நாளாகக் கொடுபடாமல் நின்று விட்டன என்று வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்கிறார்களே, அவமானம்! அவமானம்!'' என்று கத்திக்

கொண்டு சில புத்தகங்களை எடுத்து ஆத்திரத்துடன் அவள் முன் விசிப் போட்டார்.

சௌமினி பதில் பேசவில்லை. அவரைக் குரோதத்துடன் முறைத்துப் பார்த்தாள்.

''நீ என்னவென்று நினைத்துக் கொண்டாய். உன்னை ஆளுவார் அடக்குவார் இல்லை என்ற எண்ணமா?'' என்று கூச்சலிட்ட நாராயணன் எழுந்து நின்றார். கோபத்தைத் தாளாது அவர் உடல் ஆடியது. புருவங்கள் துடித்தன. கண்கள் சிவந்தன.

அவமானத்திலே சௌமினியின் உடல் குன்றிப் போய் விட்டது. ''உங்களை இதுவரை மனிதன் என்றுதான் எண்ணியிருந்தேன். என் எண்ணம் தவறு என்று இப்பொழுதுதான் புலப்படுகிறது. வேலையாட்கள் முன்பு பேச வேண்டிய விஷயமா இது! கொலை நடந்து விட்டாற் போல் கூப்பாடு போட உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்று மனம் தாளமுடியாது கேட்ட சௌமினி தலையை நிமிர்த்தி அவரை முறைத்துப் பார்த்தாள். கொத்துவதற்குத் தயாராகிவிட்ட சர்ப்பம் போல் அவளது பார்வையில் கொடுமை நிறைந்திருந்தது.

''என்ன சொன்னாய்?'' என்று கேட்ட நாராயணன், ஆக்ரோஷமாகக் கையை ஓங்கிக் கொண்டு முன்னால் பாய்ந்து விட்டார். சரேலென்று ஓடிவந்த கிரிதரன் குறுக்கிட்டுத் தந்தையின் கரத்தைப் பற்றிக் கொண்டு, ''என்ன அப்பா இதெல்லாம் நன்றாகவா இருக்கிறது?'' என்று அடிக்குரலில் அவரைக் கடிந்து கொண்டு சமாதானப்படுத்த முயன்றான்.

ஆனால் இதற்குள் ஒரு சிறு விஷயம் விநாடிப் பொழுதில் நடந்து விட்டது. சிங்கக் குட்டிபோல் துள்ளிக் கொண்டு அருகில் வந்த ஜகதீசன், மிருக பலத்துடன் ஒரு பிடியில் கிரிதரனைப் பிடித்து அப்பால் தூரத் தள்ளிவிட்டுத் தந்தை மீது பாய்ந்து விட்டான்.

''கிழவா! என்ன சொன்னே? யாருமற்ற அநாதை என்று என் சித்தியை அடிக்கவா கையை ஓங்குகிறாய்? உன் எலும்பை



நொறுக்கி, பல்லை உடைத்து உன்னை நசுக்கிப் பிழிந்து விடுவேன்'' என்று சீறிக்கொண்டு தன் இரு கரங்களையும் நீட்டி கிழவரின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான்.

''ஜகதீசா! வேண்டாம்!'' என்று சௌமினி அலறினாள். ஆனால் அவன் அதைக் கேட்கவில்லை. கண்கள் சிவந்து உதடுகள் துடிக்க உணர்ச்சி வசப்பட்டுப் போன அந்த இளைஞன் தன் இரு கரங்களாலும் பலமாக தந்தையின் கழுத்தை நெருக்கி அவரைச் சுவரின் மீது பலங்கொண்ட மட்டும் மொத்தத் தொடங்கி விட்டான். கீழே விழுந்த கிரிதரன் உடனே சமாளித்துக் கொண்டு எழுந்து ஓடிவர, இருவரும் கூடி ஜகதீசனைப் பிடித்து அப்புறப்படுத்துவதற்குள் நாராயணன் தன் நினைவின்றி வேரற்ற மரமாகக் கீழே விழுந்து விட்டார். அவரது பின் மண்டை பிளந்து ரத்தம் ஆறாக வழிந்து தரைமீது பரவி ஓடத்தொடங்கியது.

# 60

படுக்கை மீது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார் ஸ்ரீமான் நாராயணன். தலை மீது வைத்தியர் போட்டிருந்த கட்டு ஒரு பெரும் பாராங்கல்லைப் போல் சுமையாகத்தான் இருந்தது. வீக்கமும் நோவும் குறைந்து விட்ட போதிலும், அதிக இரத்தம் இழந்து விட்டதனால் ஏற்பட்ட சோர்வு அவரை விட்டு நீங்கவில்லை. இரண்டு தினங்கள் அசையாது படுத்திருந்து விட்டு, சட்டென்று எழுந்து உட்கார்ந்ததனால் அவருக்கு மிகவும் ஆயாசமாக இருந்தது. சிரத்தையுடன் கிட்டா தயாரித்து அனுப்பிய இரவுச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு அப்பொழுதுதான் மஞ்சுளா உள்ளே வந்தாள். போஜனத் தட்டைப் படுக்கை அருகிலிருந்த மேஜை மீது வைத்து விட்டு மருந்து அலமாரியைச் சுத்தப்படுத்துவதில் முனைந்து விட்டாள். முத்தொளி என பிரகாசித்த விளக்கு வெளிச்சத்திலே அவளையே சிறிது நேரம் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்

நாராயணன், வீட்டின் எஜமானர் என்று அவருக்கு வெகு மரியாதை காட்டிய அந்தப் பெண், அவர் முன்னால் அனாவசியமாக அடிக்கடி வந்து நின்றதில்லை எனினும் இதற்கு முன்னர் அவளைப் பாராதவர் போல் பன்முறை பார்த்து அறிந்து கொண்டிருந்தார்.

அலங்காரமான ஆடை ஆபரணங்கள் ஏதும் இல்லாத போதிலும் எளிமையான தோற்றத்திலே உலவிய அந்தப் பெண்ணிடம் நிறைந்து நின்ற பரிபூரணப் பேரழகு அவரது எழில் மனைவியிடம்கூட இருந்ததில்லை. அந்த முகத்திலே படிந்து நின்ற சாந்தம், கண்களில் வீசிய கருணை, நடையில் காணப்பட்ட மென்மை, பேச்சிலே தொனித்த மேன்மை, இவையாவும் அவருக்கு மிகவும் புதுமையாகத் தோன்றின. ஆனால் சில தினங்களாக அந்தப் பெண்ணின் தோற்றத்திலே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டு வருவதை அவர் உணர்ந்தார். ஆனால் அது என்ன என்றுதான் அவருக்கு விளங்கவில்லை.

சந்திராவுக்கு இடைவிடாது பணி செய்ததனால் ஏற்பட்ட களைப்பு போலும் என எண்ணினார். தமது அருமை மகளுக்கு அத்தனை அன்புடன் பணிவிடை செய்த அந்தப் பெண்ணின் ஆரோக்கியத்திற்கு எவ்வித பங்கமும் ஏற்படக்கூடாது என்ற வரை அவரது உள்ளம் மஞ்சுளாபால் மிகவும் கனிந்து விட்டிருந்தது.

''தங்கச் சிலைபோல் தகதகவென்றிருந்த இந்தப் பெண்ணிற்கு என்ன வந்து விட்டது? காமாலை நோய் கொண்டவள் போலக் காணப்படுகிறாளே! உம்!'' என்று தனக்குள்ளே எண்ணியவராகப் பெருமூச்செறிந்தார். பிறகு மெல்லச் சாப்பாட்டின் பக்கம் தமது திருஷ்டியைத் திருப்பினார். தட்டிலிருந்த உணவுப்பொருள்கள் அவரது ரஸனைக்கு உகந்தவைகளாக இருக்கவில்லை. ''வேப்பம் பூ ரசம், சாதம், சுட்ட அப்பளம்! இந்தப்பயல் கிட்டா இதுதான் சமயமென்று என் வயிற்றைக் காயப்போடுகிறானே'' என்று இரைந்து சொல்லி விட்டு, வெள்ளிக் கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.



லேசாக உதட்டின் மீது நெளிந்த புன்முறுவலுடன் மஞ்சுளா திரும்பிப் பாராது தன் வேலையிலேயே கருத்தாக இருந்தாள். வேண்டா விருப்பாக ரச சாதத்தை உண்டு விட்டுப் பாத்திரத்தைக் கீழே வைத்தார். மேலும் என்னவெல்லாம் தட்டில் இருக்கின்றன என்று மறுபடி ஆராயத் தொடங்கினார். ஒரு வெள்ளிச் செம்பில் கிட்டா பத்திரமாக எதையோ மூடி அனுப்பியிருந்தார். ''பாதாம் கீர் வேண்டுமென்று அம்பியிடம் சொல்லி அனுப்பியிருந்தேன். மறக்காமல் அனுப்பியிருக்கிறான்' என்று தமக்குள்ளே பேசிய வண்ணம் மூடியைத் திறந்தார். ''அட சே! என்னமோ விளக்கெண்ணெய் போல் ஒரே நாற்றமாக இருக்கிறதே! இது என்ன? இதை எனக்கா அனுப்பியிருக்கிறான் மடையன்!'' என்று கூறிவிட்டார்.

உதட்டைக் கடித்துக் கொண்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள் மஞ்சுளா. அலமாரியை மூடிவிட்டு அருகில் வந்தாள். ''உங்களுக்குத்தான் கிட்டா அனுப்பியிருக்கிறார். உடம்பு வலி குறைய கண்டத்திப்பிலி கஷாயம் செய்து அனுப்பியிருக்கிறார்'' என்று மெல்லிய குரலில் கூறிவிட்டுச் செம்பைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

நாராயணன் வறட்சியாக நகைத்தார். ''சரிதான் போ! அவன் மருந்துக் கடையை என் கிட்டேயும் அவிழ்க்க ஆரம்பித்து விட்டானா? இதை அவனிடமே கொண்டு கொடுத்து குடிக்கச் சொல். என் பிள்ளை முந்தா நாள் என்னை பரலோகத்திற்கே அனுப்பப் பார்த்தான். இந்த இரும்பு சரீரம் அந்த அடி உதைக்கு எப்படியோ தப்பிவிட்டது. கிட்டாவுக்கு அதைக் கண்டுபிடிக்கவில்லை போலிருக்கிறது. கஷாயம், லேகியம் என்று எதையெதையோ அனுப்பி என்னை 'பாக்' செய்யப் பார்க்கிறானா என்ன? எனக்கு மருந்து மாயம் ஏதும் தேவையில்லை. நல்ல ஓய்வுதான் தேவை'' என்றார். பதில் பேசாது மஞ்சுளா கஷாயத்தைக் கொஞ்சம் ஒரு கண்ணாடி டம்ளரில் வார்த்தாள். ''இதை நீங்கள் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். நீங்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்பது இங்குள்ள எங்கள் அனைவரின் விருப்பம். மறுக்காதீர்கள்''

என்று மிருதுவாகவும், கண்டிப்பாகவும் சொல்லி அதை அவர் கரத்தில் வைத்தாள்.

''உண்மையாகத்தான் சொல்கிறேன். இதைக் கொண்டு வைத்துவிட்டு, பிரிஜிடேரைத் திறந்து குளிர்ந்த ஐஸ் தண்ணீர் ஒரு செம்பு கொண்டு வந்தால் மிகவும் உபகாரமாக இருக்கும். நீ வேறு என்னை உபத்திரவப்படுத்தாதே,'' என்று அலுத்துக் கொண்டார் அவர்.

''நீங்கள் குளிர்ச்சியான பொருள் ஏதும் இப்பொழுது சாப்பிடக் கூடாது. வைத்தியர் உத்தரவு. வேண்டுமானால் கொஞ்சம் சூடாகப் பால் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்றாள் அவள் உரிமை பாராட்டும் கண்டிப்புடன்.

பதிலுக்கு நாராயணன் மீண்டும் சிரித்தார். ''சரித்தான் போ. நீயும் வேறு வைத்தியம் செய்ய ஆரம்பித்து விட்டாயா? இனி எனக்கு ஒரு குறையுமில்லை'' என்று கூறிவிட்டு கஷாயத்தை ஒரே வாயில் குடித்து முடித்தார். ''இந்த ஒரு நடவை உன் பேச்சைக் கேட்டு விட்டேன். மீண்டும் ஒருமுறை சாப்பிடச் சொல்லி என்னை வற்புறுத்தாதே. உனக்குக் கோடி புண்ணியம்' என்று கேலியாகக் கூறிவிட்டுப் படுக்கைமீது அலுப்புடன் சாய்ந்து கொண்டார்.

மஞ்சுளா மேலே பேசவில்லை. அறையில் கிடந்த அழுக்குத் துவாலை, காலியான பாத்திரங்கள் முதலியவற்றை விரைவாகச் சேகரித்துக் கொண்டிருந்தாள். இதற்கு முன்னர் அவள் அந்த வீட்டின் எஜமானரிடம் பேசியவளே அல்ல. எதிரில் வந்து நிற்கக்கூடப் பெரும் அச்சம் கொண்டிருந்தாள். சந்தர்ப்பத்தின் பயனாக இரண்டு தினங்களாக அவர் அருகில் இருந்து கருத்துடன் பணிவிடை செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டு விட்டிருந்தது. பெரியவர் தன்னிடம் சகஜமாகப் பேசியதை அவள் உணராமலில்லை. ஆனால், மரியாதையை விட்டு அவருக்குச் சமமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருக்க அவள் மனம் ஒப்பவில்லை. எனவே அவள் தன் பதில்களை மிகவும் சுருக்கமாகவே சொல்லி வந்தாள்.

''தூங்குங்கள், நேரமாகி விட்டது. கீழே எனக்கு கொஞ்சம்



காரியங்கள் இருக்கின்றன'' என்று கூறிவிட்டுத் தட்டைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள். அது சமயம் வராந்தாவில் மெல்லியதாகச் செருப்பின் ஓசை கேட்டது. மஞ்சுளாவின் முகம் சிவந்து விட்டது. நெஞ்சு துடிக்கத் தொடங்கியது. உணர்ச்சி வெள்ளத்தில் பதறிய தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் வெளியே செல்லத் திரும்பினாள். ஸ்ரீதரன் அதற்குள் உள்ளே வந்து விட்டான்.

''அப்பா ஏதோ தர்க்கம் செய்து கொண்டிருந்தாரே. என்ன அது? மருந்து சாப்பிடப் பிடிவாதம் செய்கிறாரா?'' என்று கேட்டுவிட்டு, அன்பு கனிந்த கண்களால் அவளை ஒருமுறை நோக்கினான். அந்த வீட்டில் நடந்த குழப்பங்கள் ஒன்றிலும் கலந்து கொள்ளாமல், அவை என்ன என அறிந்து கொள்ள ஆசை காட்டாமல், தனக்கு வகுத்த பணியை மறுக்காது அன்புடன் மேற்கொண்டிருந்த அவள் மீது அவனது மதிப்பு முன்னைவிட அதிகரித்து விட்டிருந்தது. அன்பும் பன்மடங்காகப் பெருகி விட்டிருந்தது.

''ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு, மஞ்சுளா விரைவாக வெளியே சென்று விட்டாள். வராந்தாவைத் தாண்டி அவள் கொஞ்சம் தூரம்கூடச் செல்லவில்லை. அதற்குள் நாராயணன் உரத்த குரலில் பேச ஆரம்பித்து விட்டார். அவர் பேசிய ஒவ்வொன்றும் அவள் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

''பெற்ற பெண்போல் மிகவும் பரிவுடன் இந்த இரண்டு நாளும் என்னை இந்தப் பெண் கவனித்துக் கொண்டிருக்காவிடில், நான் இறந்து விட்டிருப்பேன். நான் மலேரியாவில் ஒரு தடவை சாகப் பிழைக்கப் படுத்திருந்தேனே, ஞாபகம் இருக்கிறதா? அப்பொழுது சந்திராவுக்கு வயது பன்னிரண்டு. பாவம், அந்தக் குழந்தை ஒருநாள் இரவு முழுவதும் தூங்கவேயில்லை. பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு என்னைக் கவனித்துக் கொண்டாள்.

''முந்தா நாள் இரவு என் மயக்கம் தெளிந்து கண்களை விழித்துப் பார்த்தேன். அந்தப் பெண் மஞ்சுளா ஐஸ் பையைப்

பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். எனக்கு உடனே சந்திராவின் ஞாபகம் வந்து விட்டது. அதே அடக்கம், அதே அன்பு, அதே பொறுமை, என் குழந்தையை நினைத்துக் கொண்டு எனக்கு அழுகைகூட வந்துவிட்டது. மாலை மாலையாக என் கண்களிலே நீர் வழிவதைக் கண்டு பாவம், இந்தப் பெண் பயந்து விட்டாள். 'கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். நாளைக்குள் வலி குறைந்து விடும்' என்று கூறிவிட்டு என் கண்ணீரை மெல்லத் துடைத்தாள். கிரி அந்தப் பேச்சும் செய்கையும் என் புண்பட்ட நெஞ்சிற்கு மிகவும் இதமாக இருந்தது. இவ்வளவு நாட்களாக இந்தப் பெண்ணை நாம் நன்றாக அறிந்து கொள்ளவில்லையே! வேலை செய்ய வந்தவள் என்றல்லவா அசட்டையாக இருந்து விட்டோம் என்று எண்ணி மிகவும் பச்சாதாபப்பட்டு விட்டேன்!'' என்று உணர்ச்சி வசத்தில் பேசியவர் சற்றே நிறுத்தினார். கிரிதரன் மௌனமாக இருந்தான்.

''கிரி இந்தப் பெண்ணை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. சந்திராவின் பிரிவினால் ஏற்பட்டுள்ள துன்பம் இவளைக் கண்டாவது எனக்குக் கொஞ்சம் ஆறட்டும். ஒரு முக்கியமான விஷயம். நான் எழுந்து நடமாட ஆரம்பித்ததும் இந்தப் பெண்ணை நம் வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். சரியாகச் சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள். ஊரான் வீட்டுப் பெண், நமக்கு உழைத்து ஓடாகிக் கொண்டிருப்பதை நாம் அனுமதிப்பது தவறு'' என்றார்.

''ஆகட்டும் அப்பா, பிற்பாடு அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் மைந்தன்.

இன்பமும் பெருமிதமும் உள்ளத்தைக் கவ்விக் கொள்ளவே, மகிழ்ச்சி தாளமுடியாது விரைவாக மாடிப்படிகளைக் கடந்து கீழே வந்தாள் மஞ்சுளா. ''உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன். எல்லோரும் சாப்பிட்டாகி விட்டது; இலை போடட்டுமா?'' எனக் கிட்டா அன்புடன் விசாரித்தார். வேகமாக இறங்கி வந்ததனால் ஏற்பட்ட களைப்போ என்னவோ மஞ்சுளாவிற்குப்



புரியவில்லை. மயக்கம் வந்து விடும்போல் தலையைச் சுற்றியது. பலகை ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு சட்டென்று சுவர் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள். ''ஒன்றும் வேண்டாம். ரொம்பத் தாகமாக இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் கொடுங்கள்'' என்று மெல்லிய குரலில் அரற்றினாள். அருகில் வந்த கிட்டா திடுக்கிட்டார். முத்துப்போல் நெற்றியில் வியர்வை துளிர்க்க, கண்களை மூடிக் கொண்டு மயக்கமாக, சுவரிலே சாய்ந்து கொண்டிருந்தாள் அவள். ஓடிச்சென்று ஒரு செம்பிலே பச்சை தண்ணீரை மொண்டு கொண்டு வந்தார். இரண்டு கைத் தண்ணீரை வாரி முகத்திலே அடித்து விட்டு மின்சார விசிறியைச் சுழல விட்டார். ''உன் உடம்பிற்கு என்னம்மா?'' என்று பதறிக் கொண்டு அருகில் வந்து நின்று கொண்டார்.

அதற்குள் மயக்கம் தெளிந்து மஞ்சுளா விழித்துக் கொண்டு விட்டாள். புடவைத் தலைப்பினால் முகத்தையும் தலையையும் துடைத்துக் கொண்டு செம்பைக் கையில் எடுத்து ஒரே மூச்சாக அவ்வளவு நீரையும் குடித்து முடித்தாள்.

''எனக்கு ஒன்றுமில்லை. பகலில் சாப்பிட்ட எலுமிச்சை ஊறுகாய் ஒத்துக் கொள்ளவில்லை. தாகம் நாக்கை வறட்டி விட்டது'' என்றாள்.

கிட்டா தலையைத் தடவிக் கொண்டார் யோசனையுடன். ''நீங்கள் ஒன்றுமில்லை என்றால் நான் நம்ப மாட்டேன். ஓயாது இந்த வீட்டவர்களுக்கு உழைத்து உழைத்து உங்கள் ஆரோக்கியம் கெட்டு விட்டிருக்கிறது. நான் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். நீங்கள் ஒழுங்காகவே சாப்பிடுவதில்லை. முகம் சோகை படர்ந்து காணப்படுகிறது'' என்றார் மிக்க விசாரத்துடன்.

''நீங்கள் நினைப்பது தவறு. நான் அப்படி ஒரேயடியாகப் பட்டினியிருக்கவில்லை. அடிக்கடி சௌமினியம்மாள் எனக்குப் பழரசமும் பாலும் கொடுத்தனுப்பி வைக்கிறார்கள். இன்று சாயங்காலம் கூட ஒரு டம்ளர் நிறைய ஆரஞ்சு ரசத்தை

அனுப்பினார்கள். சாப்பிட்டேன். அதனால் எனக்கு இப்போது பசியில்லை. கவலைப்படாதீர்கள். எண்ணெய் தேய்த்துக் குளித்துப் பல நாட்கள் ஆகிவிட்டன; சூட்டிலே கண்கள் எரிச்சல் எடுத்து நீர் பெருகுகிறது. வாய் ரணமாகியிருப்பதனால் காரமான உணவைக் கண்டாலே பிடிக்கவில்லை. பெரியவர் குணமாகி எழுந்தவுடன் நான் இங்கிருந்து கிளம்பிவிட உத்தேசித்திருக்கிறேன். கங்கா அத்தை வீட்டில் போய்ப் பத்து நாட்கள் தங்கினால் என் உடம்பு சரியாகி விடும்'' என்றாள் புன்முறுவலுடன்.

## 61

மஞ்சுளா, தனக்குச் சௌமினி பரிவுடன் பழரசம் கொடுத்து உபசரிப்பதைச் சொன்னதும், அதைக் கேட்ட கிட்டா முகத்தைச் சுளித்தார். ''கட்டின புருஷன் மண்டை பிளந்து கிடக்கும்போது அவரை ஒருமுறை கூட எட்டிப் பார்க்காமல் தன் அறைக்குள்ளே கைகேயி வேஷம் போட்டுக் கொண்டு கிடக்கும் சௌமினியம்மாள் உங்கள் மீது பட்சமாக இருக்கிறார்கள் என்பதைக் கேட்டு நம்ப முடியவில்லையம்மா! நம்ப முடியவில்லை. உங்களிடம் ஏன் இந்தப் பரிவு?'' என்று வியப்புடன் கேட்டார்.

அதற்கு மஞ்சுளா சிரித்தாள்.

''எனக்கும் புரியவில்லை. நான் சந்திராவைக் கவனித்துக் கொள்ள இங்கே மறுபடி திரும்பி வந்தேனே அதிலிருந்து எஜமானியம்மாள் என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார்கள். பாலும் பழமும் கொடுத்து என்னை அடிக்கடி உபசரிக்கிறார்கள். இது எனக்கும் புரியாத புதிராகத்தான் இருக்கிறது'' என்றாள்.

''எனக்கும் விளங்கவில்லை. ஆனால் என்னவோ அந்த அம்மாள் உங்களிடம் காட்டும் பரிவு எனக்குப் பிடிக்கவில்லை.



காரியமில்லாமல் எதையும் யாருக்கும் அவர்கள் செய்ததில்லை. எனக்கு மொத்தத்திலே ஒன்றுமே பிடிக்கவில்லை. என்னதான் புருஷன் மனைவி சண்டையென்றாலும் ஆபத்து ஏற்படும்போது கடமையினின்றும் தவறலாமா? கணவனுக்குப் பெரிய காயம் ஏற்பட்டு விட்டதே என்று கொஞ்சம் கூட அந்த அம்மாளுக்குக் கலக்கம் ஏற்பட வில்லையே! வந்து கவனிக்க வேண்டும் என்ற கடமைகூட இல்லையே! சே! இப்படி இருப்பது குடும்பப் பெண்ணிற்கு அடுக்குமா!

''அந்தப் பிள்ளை என்னதான் சிறிய தாய்மீது பாசம் கொண்டிருந்தாலும் இப்படிப் பெற்ற தகப்பனைக் குற்றுயிராகப் போகும்படியா தாக்குவான்? என்ன பிள்ளை, என்ன பெண்ஜாதி? எனக்கு இங்கே வேலை செய்ய ஒன்றும் வேண்டிக் கிடக்கவில்லை. இவர்கள் எல்லாம் என்னவோ மூடி வைக்கிறார்கள். அந்தப் பிள்ளை ஜகதீசனுக்கு சித்தம் சரியாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சந்திரா அம்மாவுக்காகக் காத்திருந்தேன். இனி நீடித்து இங்கே நான் எதற்காக இருக்க வேண்டும்? ரெண்டு நாளா என் மனசு ஒன்றுமே சரியில்லையம்மா'', என்றார் மிகவும் வருத்தத்துடன் ஆயாசப்பட்டுக் கொண்டு.

அவர் ஆயாசம் சற்றுக் குறைந்ததும் மஞ்சுளா எழுந்து ''நீங்கள் இங்கே எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தங்கலாம். தற்சமயம் உங்கள் சேவை இந்த வீட்டவர்களுக்கு மிகவும் தேவை. நீங்கள் விரும்பினாலும் அவர்கள் போக விடமாட்டார்கள். ஆனால் நான் இனியும் இங்கே தங்கியிருப்பது நன்றாக இருக்காது. சந்திராவின் துக்க காரியங்கள் முடியட்டும், கிளம்பலாம் என்று நாட்களை ஒத்திப் போட்டுக் கொண்டிருந்தேன். இந்த மாத முழுவதும் இருந்து விட்டுப் போ என்று எஜமானியம்மாள் வற்புறுத்தினார்கள். அவர் சொல்லை மறுக்கப் பயந்து கொண்டு தங்கியிருந்தேன். இந்த வாரத்தின் இறுதியில் கிளம்பியிருக்க வேண்டும். அதற்குள் இந்த விபத்து ஏற்பட்டு பெரியவரைக் கவனிக்க நேர்ந்து விட்டது'' என்றாள்.

கிட்டா பதில் பேசாது யோசனையுடன் அறைக்குள் உலவிக் கொண்டிருந்தார்.

''பெரியவரை மறுபடி கொஞ்சம் கவனிக்க வேண்டும். வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டு வெளியே சென்றாள். கீழே முன் ஹாலில் அவள் வரவிற்காகக் காத்திருப்பவன் போல கிரிதரன் நின்று கொண்டிருந்தான்.

''அப்பாவுக்குத் தூக்கம் வந்துவிட்டது. அதிகம் பேசி அவருக்கு அலுப்புக் கொடுக்க வேண்டாம் என்று நான் வந்துவிட்டேன். நீங்கள் இதுவரை அவரை நன்றாகக் கவனித்துக் கொண்டீர்கள். மிக்க நன்றி. இன்று இரவு மட்டும் கொஞ்சம் பார்த்துக் கொண்டால் போதும். நாளைக்குள் வைத்தியர் சுந்தரேசன் யாராவது ஒரு நர்ஸை ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கிறார். உங்களுக்கு ஓய்வு அவசியம் என்று அப்பாகூட அபிப்பிராயப்படுகிறார்'' என்றான் குழைவான குரலில்.

கிரிதரனின் அன்பு நிறைந்த கண்களை அவள் கண்கள் வெகுநேரம் சந்திக்கவில்லை. முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள் மஞ்சுளா. தன்பால் அவன் காட்டிய அக்கறை அவளை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியது. ''எனக்கு அப்படி ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. கவலைப்படாதீர்கள்'' என்றாள் மெதுவாக.

கிரிதரன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தாழ்வான குரலில் பேசலுற்றான். ''உங்களிடம் முக்கியமாக ஒன்று சொல்லவே காத்திருந்தேன். ஜகதீசன் மயக்கம் தெளிந்து குணமாகிவிட்டான். அவனை இங்கே இனி வைத்திருப்பது ரொம்பத் தவறு என்று எங்கள் வைத்தியர் அபிப்பிராயப் படுகிறார்.

''நாளைக்கு நானும் சிந்தாமணியும் ஜகதீசனை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்பட வேண்டும். மறுபடி அவனை தயானந்தர் சிகிச்சை சாலையில் கொஞ்ச காலம் வைத்திருக்கப் போகிறோம். அவனை அங்கு கொண்டு சேர்க்கும் வரை அதிகப் பேச்சுக் கொடுத்து அவனது மூர்க்க



உணர்ச்சிகளைத் தூண்ட வேண்டாம் என்று வைத்தியர் உத்தரவிட்டிருக்கிறார். நீங்கள் எதற்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருங்கள். அதனால் உட்புறம் பூட்டிக் கொண்டு விடுங்கள். நான் அப்படி ஒன்றும் ஆழ்ந்து தூங்குகிறவன் அல்ல. சிறிது சப்தம் கேட்டாலும் விழித்துக் கொண்டு விடுவேன். மறுபடி அவன் அப்பாவைத் தாக்காது இன்று இரவு மட்டும் காப்பாற்றி விட்டால் போதும்'' என்றான் தடுமாற்றத்துடன்.

''உங்கள் கவலை எனக்குப் புரிகிறது. விசாரப்படாதீர்கள். நான் கண்கொட்டாமல் விழித்திருந்து பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் மஞ்சுளா உறுதியாக.

யாரோ நடந்து வரும் ஓசை கேட்கவே இருவரும் அதற்குமேல் பேசிக் கொண்டிருக்கப் பிரியப்படவில்லை. 'வருகிறேன்' என்று தலையை ஆட்டிவிட்டு விரைந்து மாடிப்பக்கம் சென்றுவிட்டாள் மஞ்சுளா.

கிரிதரனின் உத்தரவுப்படியே கதவை உள்ளே பூட்டிக் கொண்டு படுக்கை அருகே சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். மெல்லியதாகக் குறட்டை விட்டுக் கொண்டு நாராயணன் தூங்கிக் கொண்டிருந்தார். மேஜை மேலிருந்த விடிவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஏதாவது படிக்கலாம் என எண்ணி, வாரப் பத்திரிகை ஒன்றை மெல்லப் புரட்டினாள். வெளிச்சத்தைக் காணக் கூசிய கண்களிலிருந்து நீர் பெருகத் தொடங்கவே, அலுப்புடன் அதை மூடி வைத்துவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு சிந்தனை உலகிலே உலவத் தொடங்கினாள்.

வெளி ஹாலிலிருந்த கடிகாரம் ஒருமுறை அடித்து ஓய்ந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் மணி இரண்டாகிவிடும்; பிறகு மூன்று; அதற்குப் பின்னர் கீழ்வானம் வெளுத்துவிடும் என்று யோசித்த வண்ணம் கண்களை மூடிக்கொண்டாள்.

களைப்புத் தாள முடியாது அப்படியே மெல்ல உறங்கத் தொடங்கிவிட்டாள். பூனை நகங்களில் பிறாண்டுவது போல் மெல்லியதாக ஓர் ஓசை கேட்கவே திடுக்கிட்டு விழித்துக்

கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அப்போது நாராயணன் ஒருமுறை படுக்கையிலே புரண்டு படுத்தார். கண்களைத் துடைத்துக் கொண்டு சோம்பலை உதறிவிட்டு எழுந்து நின்றாள். இரிச்சென்று ஏதோ ஓசை கேட்கவே திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தாள். அவள் நெஞ்சு பயத்திலே உறைந்து விட்டது. நா உலர்ந்து பேசத் திறமையின்றி அப்படியே சிலை போல் நின்று விட்டாள். சாத்தியிருந்த ஸ்நான அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து நின்றான் ஜகதீசன்! அவன் முகம் பார்க்க மிகவும் பயங்கரமாக இருந்தது!

ஏதோ விபரீதம் ஏற்படப் போகிறது என அவளது உள்ளுணர்வு எச்சரிக்கவே பயத்தில் மஞ்சுளா நடுநடுங்கிப் போய் விட்டாள். கைகளைப் பிசைந்து கொண்டு நகருவதற்குச் சக்தியின்றி அவனையே பார்த்த வண்ணம் சிலை என நின்று கொண்டிருந்தாள்.

''கூச்சலிட்டால் கொன்று விடுவேன். வாயைத் திறக்காதே!'' என்று அடிக்குரலில் சீறிய ஜகதீசன் ஒரே எட்டில் அவளை அணுகினான்.

''சொன்னதைக் கேட்டுக் கொண்டு என்னுடன் வந்து விடு. முரட்டுத்தனம் செய்தால் உனக்குத் தான் கஷ்டம். கீழே கார் தயாராக இருக்கிறது. இங்கிருந்து நாம் ஓடிப்போய் விடுவோம். நாகக்காகச் செல்வம், இன்ப வாழ்வு இரண்டுமே காத்திருக்கின்றன, தடை செய்யாதே வா'' என்று கூறிவிட்டு அவள் கரத்தைப் பற்றத் தாவினான். ஒரு துள்ளலில் படுக்கையின் பின்னால் போய் நின்று கொண்டாள் மஞ்சுளா. அவள் உடல் முழுவதும் வியர்வை ஆறாக வழிந்து ஓடியது. இன்னமும் அவளால் பயத்தில் பேச முடியவில்லை. அரண்டு விட்ட மான்போல் மிரட்சியுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''உள்ளே கதவை பூட்டிக் கொண்டால் இங்கே வரவே வழியில்லையா? சித்தியுடைய அறைக்கும் இந்த அறைக்கும் பொதுவாக உள்ளது இந்த ஸ்நான அறை. நீ இப்படிச் செய்வாய் என எதிர்பார்த்தே நான் அந்த வழியாக வந்தேன். உன்னை இனி



விடமாட்டேன். நீ எனக்கு உரியவள் தெரியுமா?'' என்று தாழ்ந்த குரலில் உறுமிய வண்ணம் பாய்ந்து அவளைப் பற்றிக் கொண்டான் ஜகதீசன்.

வியர்த்துப் போன மஞ்சுளா திடீரென்று வாயைத் திறந்து ''காப்பாற்றுங்கள், ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று உரத்த குரலில் கிரீச்சிட்டு அலறினாள்.

## 62

ஜகதீசன் தன் கையைப் பற்றியதும், மஞ்சுளா கூவிய ஓலம் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு ஆனந்த நிலையம் எங்கும் ஒலித்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார் நாராயணன். நிலைமையை உணர்ந்து கொள்ள அவருக்கு ஒரு விநாடிகூட ஆகவில்லை. ஜகதீசனின் இரும்புப் பிடியிலே சிக்கி வேதனைப்பட்ட பறவையாக, தன்னை விடுவித்துக் கொள்ள மஞ்சுளா போராடிக் கொண்டிருந்ததைக் கண்டார். தமது தள்ளாமை, உடல் அயர்வு ஒன்றையும் பாராட்டாமல் படுக்கையிலிருந்து தொப்பென்று குதித்து மகள் அருகே ஓடி வந்தார்.

''என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று மீண்டும் கிரீச்சிட்டு அலறிய மஞ்சுளா, துக்கமும் அவமானமும் தாள முடியாது விம்மி அழத் தொடங்கினாள். எவ்வளவுதான் அவள் முயன்றும் ஜகதீசனது பிடியினின்றும் விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

''கூப்பாடு போடுகிறாயா? பங்களாவே படை திரண்டு வந்தாலும் உன்னைவிடப் போவதில்லை'' என்று கர்ஜித்த ஜகதீசன், தன் வலது கரத்தை ஓங்கிப் பளீர் பளீர் என்று அவளது மென்மையான முகத்திலே பல முறை அறைந்தான். நோவு தாளமுடியாது அவள் அப்படியே மயங்கிச் சுருண்டு அவன் தோள்மீது சாய்ந்து விட்டாள்.

''அடப்பாவி! சண்டாளா! எல்லோரையும் கொலை செய்யவே புறப்பட்டிருக்கிறாயா நீ?'' என்று ஆத்திரத்துடன் கூவிய நாராயணன் பாய்ந்து வந்து, மகனது தோளைப் பற்றி பலமாக உலுக்கினார். இடது கரத்தினால் மஞ்சுளாவை அணைத்துத் தாங்கிக் கொண்டு, வலது கரத்தினால் தந்தையின் முகத்திலே ஓங்கி பலமாக ஒரு குத்து விட்டான் ஜகதீசன். மறுகணம் அவர் தடாலெனத் தரையில் உருண்டார்.

''கிழவா! உன் வேலையைக் கவனி! இதில் தலையிட்டாயோ உன் உயிரும் சேர்ந்து போய்விடும்!'' என்று கர்ஜித்து விட்டு மஞ்சுளாவை வாரித் தோள் மீது போட்டுக் கொண்டு வெளிக் கதவைத் திறந்து கொண்டு சரேலெனச் சென்று விட்டான்.

தரை மீது உருண்டு விழுந்த நாராயணன் மெல்ல எழுந்து உட்கார்ந்தார். வேதனையுடன் கன்னத்தைத் தடவிக் கொண்டு மெல்ல எழுந்து நின்றார். சுவரைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்து வெளியே வந்தார். மாடிப்படிகளில் ஜகதீசன் இறங்கிச் செல்லும் காலடி ஓசை கேட்டது. ஆத்திரம், துயரம் இரண்டும் தாளாது அவர் நெஞ்சம் பதைத்தது. தமது வலிமையை எல்லாம் திரட்டிக் கொண்டு, ''கிரி, கிரி! ஓடிவா அபாயம் அபாயம் ஓடிவா!'' என்று உரத்த குரலில் கத்தினார்.

கிரிதரன் எழுந்து ஓடிவந்து பார்த்த பொழுது நாராயணன் சோர்வு தாள முடியாது வராந்தாவின் சுவரிலே சாய்ந்து கொண்டு முனகிய வண்ணம் இருப்பதைக் கண்டான்.

''அப்பா! உங்களுக்கு என்ன?'' என்று பதறியவாறு அருகில் வந்து அவரைத் தூக்கி நிறுத்தினான்.

''எனக்கு ஒன்றுமில்லை. அந்தப் பெண் மஞ்சுளா! அவளை ஜகதீசன்...'' என்று முடிக்காது குழறினார் நாராயணன்.

''ஜகதீசன் அவளை என்ன செய்தான்?'' என்று பரபரப்புடன் வினவிய கிரிதரன், மறுகித் தவித்துப் போய் விட்டான். நாராயணனுக்கு மேலே பேச முடியவில்லை. அதிர்ச்சியும், வலியும் பொறுக்க முடியாமல் அவர் தன் நினைவை இழந்து விட்டார்.



அவளைச் சுமந்து கொண்டு வந்து படுக்கைமீது கிடத்தி விட்டு, குழப்பத்துடன் கீழே இறங்கி ஓடினான் கிரிதரன். மஞ்சுளாவிற்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டு விட்டது என்று மட்டும் அவனுக்கு விளங்கியது. என்ன ஏது என ஒன்றுமே புரியவில்லை. ஆத்திரமும் பதைப்பும் ஒருங்கே எய்தியவனாக முன் ஹாலுக்குள் வேகமாக நுழைந்தான். அங்கே இருந்த விளக்கு மட்டும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. வெளியே செல்லும் வாயிற் கதவின் மீது சாய்ந்தவாறு, புன்னகை பூத்த முகத்துடன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தாள் சித்தி சௌமினி.

''அவசரப்படாதே! எங்கே ஓடப் பார்க்கிறாய்? உன் ஆசைக் காதலியை உன் தம்பி அழைத்துக் கொண்டு ஓடி விட்டான். விடிவதற்குள் அவளை மனைவியாக்கிக் கொண்டுவிடப் போகிறான். அவள் அதற்கு ஒப்ப மறுத்தால் மரண தேவதையிடம் போய் விடுவாள். இனி நீ பதறி என்ன பிரயோசனம்! உன் கையிலிருந்து பறந்து விட்டது அந்தப் பச்சைக்கிளி'' என்று கூறிவிட்டு எக்காளமிட்டுக் கலகலவென்று சிரித்தாள் அவள்.

கிரிதரன் கோபத்துடன் ஏதோ பேசுவதற்கு வாயைத் திறந்தான். அதேசமயம் கார் ஒன்று புறப்பட்டு விரைவாக வெளியேறும் சப்தம் தோட்டத்திலிருந்தும் வந்தது. வெளியே செல்வதற்குக் கதவருகில் அவன் ஓடி வருவதைக் கண்டு சௌமினி இன்னும் உரக்கச் சிரித்தாள்.

''மகனே ஆத்திரப்படாதே! இதெல்லாம் இந்த இளைஞனுடைய ஏற்பாடு. அவர்கள் இருவரும் ஆனந்த லோகத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றனர். நீ பின்னால் காரை எடுத்துக் கொண்டு தொடர முயற்சிக்காதே. நான் அனுமதிக்கப் போவதில்லை. உன்னை வெளியே விடாது கதவைப் பூட்டிக் கொண்டு மீதி இரவு முழுவதும் இங்கே காவலாக இருக்க நான் தீர்மானித்து விட்டேன்'' என்றான் வெகு அலட்சியமாக.

திக்பிரமை பிடித்துப் போன கிரிதரன், சினமே உருவாக

ஒருகணம் அப்படியே சிலைபோல் நின்று விட்டான்.

**சீ**றிக் கொத்துவதற்குத் தயாராகிவிட்ட கொடும் சர்ப்பம் எனத் தலையை நிமிர்த்தி, அகங்காரமாகப் பார்த்த வண்ணம் வஞ்சனையே வடிவாகி நின்று கொண்டிருந்தாள் சௌமினி. இத்தனை காலமும் அவள் கிரிதரன் மீது கொண்டிருந்த துவேஷமெல்லாம் பேசாத கொடும் சொற்களாக அவளது விழிகளில் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. உள்ளத்திலே கனன்று கிடந்த தீய எண்ணங்கள் அவள் முகத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்தன. மன்னிக்க முடியாத இந்த பெரும் துரோகச் செயலின் விபரீத விளைவை உணர்ந்து கோபாவேசமாகி விட்ட கிரிதரனின் உடல் கிடுகிடுவென்று ஆடிக்கொண்டிருந்தது. இந்த அதிர்ச்சியினின்றும் சமாளித்துக் கொண்டு பேச அவனுக்குச் சில நிமிஷங்கள் சென்றன. அதற்குள் உலகமே ஒரு முடிவிற்கு வந்து விட்டதைப் போன்று ஒரு பயங்கர உணர்ச்சி அங்கே நிலவியது.

ஒவ்வொரு கணமும் ஆபத்தின் அருகிலே விரைந்து கொண்டிருந்த தன் ஆருயிர்க் காதலியின் கதியை எண்ணி எண்ணி மனம் துடித்துப் போன அவன், ஆற்ற முடியாது, ''சித்தி! போதும் விளையாட்டு. நகர்ந்து அப்பால் நில்லுங்கள். என்மேல் உள்ள வெறுப்பிற்கு அந்தப் பெண் ஏன் பலியாக வேண்டும்! இதை நான் சும்மா விடமாட்டேன்!'' என்று சீறினான் சீற்றத்துடன்.

அசட்டையாகப் புருவங்களை உயர்த்திக் கண்களை விரித்து சூள் கொட்டிய சௌமினி தனக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டாள். ''உன்னோடு விளையாடுவதற்கு நான் பச்சைக் குழந்தை பார்! யாருமற்ற அநாதைக் கழுதை அவள். நீ ஏன் இப்படிப் பதற வேண்டும். காதலியை ஆபத்தில் கைவிட்ட கயவன் என்று அபவாதம் ஏற்படும் என்ற அச்சமா? நீ புலம்பினாலும் சரி, சிங்கமாகக் கர்ஜித்தாலும் சரி இந்த இடத்தைவிட்டு நான் அசையப் போவதில்லை. சுற்றுமுற்றும் பார்க்காதே. இதையெல்லாம் எதிர்பார்த்தே நான் வீட்டின் ஒவ்வொரு கதவையும் பூட்டி சாவிக்கொத்தைப் பத்திரமாக



அப்புறப்படுத்தி விட்டிருக்கிறேன்'' என்றாள் இறுமாப்புடன்.

கிரிதரன் உடலும் உள்ளமும் ஆத்திரத்தில் பதறின. மஞ்சுளாவை எண்ணி அவன் மனம் குமுறியது. பொங்கி எழுந்த சினத்தை அடக்க மாட்டாமல் முன்னால் பாய்ந்து அவள் அருகில் வந்தான்.

''என் தந்தையை மணந்து விட்டீர்கள் என்ற தர்மத்திற்குக் கட்டுப்பட்டுத் தயங்கி நின்றேன். இல்லாவிட்டால் இத்தனை நேரம்...'' என்று முடிக்காது நிறுத்தி, பற்களைக் கடித்தான்.

பொங்கிய ஆத்திரம் பெருமூச்சுகளாக வெளிவர கோபத்தில் சிவந்த முகத்துடன் துடித்துக் கொண்டு தன் தயவிற்காகக் காத்து நின்ற அவனது பரிதாப நிலைமை அவளுக்கு மிக்க வேடிக்கையாக இருந்தது. வார்த்தையாலோ செயலாலோ இதுகாறும் அவனை அவளால் துன்புறுத்த முடியவில்லை. இரும்பை நிகர்த்த அவன் நெஞ்சை அவளால் இதுவரை புண்படுத்தவே முடியவில்லை. ஆனால் அன்று அவளுக்குப் பெரும் வெற்றி! காதலியை எண்ணிக் கலங்கிப் போன அவனது தடுமாற்றம் அவள் கண்களுக்கும் கருத்துக்கும் பெரும் விருந்தாக அமைந்தன. இந்தச் சித்திரவதையை அவள் பெரிதும் ரசித்தாள். ''தர்மம் என்ற கூட்டில் - பாவம், இந்த ஆண்சிங்கம் அடைப்பட்டுத் தவிக்கிறது! அடாடா! த்லொ! த்லொ!'' என்று கூறிவிட்டு களுக்கென்று சிரித்தாள்.

''சித்தி!'' என்று பதிலுக்கு ஆத்திரத்துடன் கூவிய கிரிதரன், அவளை எரித்து விடுகிறவன் போல் உறுத்துப் பார்த்தான்.

''நான் உன் சித்தியாக இல்லாவிடில் இத்தனை நேரம் என்ன செய்திருப்பாய்? பல்லைத் தட்டிக் கையில் கொடுத்திருப்பாயா? பயமுறுத்துகிறாயோ? அப்படி முறைத்துப் பார்த்தால் நான் நடுங்கி விடுவேன் என எண்ணுகிறாயா? முட்டாள்! நேற்று வந்த அநாதைப் பெண்மேல் உள்ள ஆசை, உன்னைப் பெற்ற அப்பன்மேல் உனக்கு இல்லையே? ஆச்சரியம்! கிழவன் அங்கே மயங்கிக் கிடக்கிறான். அதைக்கூட கவனிக்காது இவளைத் தேடிக் கொண்டு பின்னால் ஓடப் புறப்பட்டு விட்டாயே? பேஷ்!

பேஷ்! கடமை தவறாத சத்புத்திரன் உன்னைவிட இந்த உலகில் யார் உண்டு. சொல்! இலட்சியங்களின் இருப்பிடம் நீ! தர்மத்தின் ஆலயம், கண்ணியத்தின் இலக்கணம்! ஒழுக்கத்தின் வரம்பு! ஆஹா! ஆஹா! ஆஹா! நீ அதிசயப் பிறவி அப்பா, அதிசயப்பிறவி!'' என்று ஏசி நையாண்டி செய்தாள் ஏளனமாக.

அவள் சொன்னதைக் கேட்டதும் பற்களைக் கடித்துக் கொண்டான் கிரிதரன். ''சித்தி, போதும் நிறுத்துங்கள். கடமை! உங்கள் அகராதியில் அந்த வார்த்தைக்கு இடம் உண்டா என்று முதலில் யோசியுங்கள். இப்படியெல்லாம் பேச உங்களுக்கு வெட்கமாக இல்லை? நான் உங்களுடன் அதிகம் விவாதிக்க விரும்பவில்லை. மரியாதையாகச் சாவியைக் கொடுத்து விடுங்கள்'' என்று இரைந்தான் உக்கிரமாக.

சௌமினியின் முகத்திலே தவழ்ந்த சிரிப்பு உடனே மறைந்தது. சீற்றத்துடன் அவள் தலை நிமிர்ந்து அவனை வெறித்துப் பார்த்தாள். ''என்ன செய்து விடுவாய்? இந்த மிரட்டலுக்கு நான் பயந்துவிட மாட்டேன். நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? உன் தந்தை துள்ளித் திரியும் வாலிபனா? கிழவன் தானே? உண்மையைத்தானே குறிப்பிட்டேன். மரியாதையாம், மரியாதை! அந்தப் போர்வையை உதறி நான் வெளி வந்து எவ்வளவோ நாட்களாகி விட்டன. பணம் இருக்கிறது; சௌகரியமாக இருப்போம் என்றுதான் நினைத்து இந்தக் கிழவனை மணந்து கொண்டேன். அது உனக்குத் தெரியும். அதனால்தான் ஆதியிலிருந்து நீ என்னை வெறுத்தாய். இந்த உண்மை உனக்கும் தெரியும் என்பதை அறிந்து, நானும் அன்றிலிருந்து உன்னை விஷமாகவே பாவித்தேன். வெளி வேஷத்தைக் கண்டு ஏமாந்து ஒரு பாழுங் கிணற்றில் விழுந்து விட்டேன் என்பது எனக்கல்லவா தெரியும். கடன் சுமையாலே தத்தளிக்கும் இந்த வியாபாரம் கவிழ்ந்து போனபின் எத்தகைய வருங்காலம் எனக்குக் காத்திருக்கிறது என்பதை நன்கு அறிவேன். அந்தப் பயங்கரத்தை நினைத்துப் பார்த்துக் கலங்கி மறுகும் என் உள்ளத்தில் உற்சாகமா கரைபுரண்டு ஓடும்? ஆனந்தம் அலைபாய்ந்து பொங்குமா? ஏமாற்றத்திலே கொந்தளிக்கும்



கடலாகக் குமுறிக் கொண்டிருக்கிறேன். நான் மட்டும் ஏன் வாழ்விலே ஏமாற்றத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டும்? என் வாழ்வு மட்டும் ஏன் நாசமாக வேண்டும்? என்னோடு கூட நீங்கள் அனைவரும் நாசமாக வேண்டும். இந்தக் குடும்பமே நிர்மூலமாகப் போக வேண்டும். இதுதான் என் அவா, என் கோரிக்கை, கிரிதரா, உங்கள் அனைவரையும் அழிக்கப் புறப்பட்ட பத்திரகாளி நான்!'' என்று படபடவென்று பேசியவள் முடிவில் ஓவென்று ஆவேசத்துடன் அலறினாள்.

அவளது சித்தம் ஒருகணம் கலங்கி விட்டதோ என்று ஐயுற்றுத் திகைப்புடன் நின்று விட்டான் கிரிதரன். பிறகு மெல்ல அருகில் நெருங்கி, தணிவான குரலில், ''சித்தி! இது விபரீதமான விளையாட்டு; போதும் தயவு செய்து சாவியைக் கொடுங்கள். இன்னமும் உங்களை என் சிறிய தாய் என்று நான் மதிக்கிறேன். இப்பொழுது விவாதிக்கப் பொழுதே இல்லை. தயவு செய்யுங்கள்'' என்றான்.

ஏளனமாகத் தோள்களைக் குலுக்கிய சௌமினி கதவின் மீது சாய்ந்து கொண்டாள். ''கெஞ்சினால் மிஞ்சுவது, மிஞ்சினால் கெஞ்சுவது. அது இந்த வீட்டின் புத்தி! உம்!'' என்று உறுமினாள்.

இது சமயம் யாரோ மெல்ல நடந்து வரும் காலடி ஓசை கேட்டது. திடுக்கிட்டுப் போன இருவரும் பின் கட்டின் பக்கம் கண்களைத் திருப்பினர். அடிமேல் அடி வைத்து நடந்து வந்த அன்னை பூரணியம்மாள், அவர்கள் முன்னால் வந்து நின்றாள்.

''கிரி! இதுவரை நடந்ததெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நான் தயங்கிக் கொண்டு தாழ்வாரத்திலேயே நின்று கொண்டிருந்தேன். நம் குடும்பக் கலவரத்திலே ஊரான் வீட்டுப் பெண்ணை இழுத்துப் போட்டு வேடிக்கை பார்ப்பது தவறு. இப்பொழுது ஒன்றும் குடிமுழுகி விடவில்லை. இந்த வீட்டின் ஒவ்வொரு கதவுக்கும் மூன்று சாவிகள் உண்டு. ஒரு சாவிக்கொத்து அப்பாவிடமும், மற்றொன்று அம்மாவிடமும் இருந்தன. ஒரு சமயம் இரண்டுமே தொலைந்து விட்டால் உதவியாக இருக்குமே என்று வேறொரு சாவிக்கொத்தை

என்னிடம் விட்டு வைத்திருந்தார் உன் அப்பா.

''இந்த அம்மாவுக்கு அந்த விஷயம் தெரியாது. என் அறைக்கதவை மூடிவிட்டால் நான் வெளியே வரமுடியாது என எண்ணி விட்டார்கள். ராம ஸ்மரணை செய்து கொண்டு தூங்காமல் இருளில் நான் படுத்திருந்தேன். யாரோ வெளியே என் அறைக்கதவை இழுத்து மூடுவது கேட்டது. எழுந்திருந்து பார்த்தேன். கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது. ஏதோ சதி என்று எனக்கு அப்போதே விளங்கி விட்டது. ஆனால் நான் அவசரப்படவில்லை.

''கவலைப் படாதே கிரி! சிப்பை ஒளித்து வைத்தால் பெண்ணுக்குக் கல்யாணம் நின்று விடுமா என்ன? இது அசட்டுத் தனமான யோசனை. இந்தச் சாவியை எடுத்துக் கொண்டு பின்கட்டு வழியாக நீ உடனே புறப்பட்டுப் போ!'' என்று ஒரே மூச்சில் பேசிவிட்டு இடுப்பிலிருந்த சாவிக் கொத்தை இழுத்து அவன்முன் நீட்டினாள்.

ஒருகணம் திகைத்துப் போய்ச் சிலையாகிவிட்ட சௌமினி, திடீரென்று முன்னால் பாய்ந்து ஓடினாள். கேவலம் புழுவுக்கும் கீழாக அவள் மதித்த ஓர் அசட்டுக் கிழவி, அவள் மாதக் கணக்காக உருவாக்கிய திட்டத்தில் குறுக்கிட்டுக் குலைப்பதா? அவளால் ஆத்திரத்தைத் தாள முடியவில்லை. ''சண்டாளி?'' என்று கூவிவிட்டுச் சுவர் ஓரமாக இருந்த உயர்ந்த மேஜைமீது அழகிற்காக வைத்திருந்த பளிங்குச் சிலையைப் பற்றி எடுத்தாள். கிரிதரன் தடுக்குமுன் ஒரே ஆவேசத்துடன் அன்னபூரணியின் முகத்தைக் குறி பார்த்து வீசி விட்டாள். ஆனால் அவள் குறி தவறி விட்டது. அந்த அம்மாளின் மண்டையைப் பொடியாக்குவதற்குப் பதில் எதிர்பக்கத்துச் சுவரிலே அலங்காரமாக மாட்டியிருந்த, சீதா தேவியை அபகரித்துச் செல்லும் ராவணனுடைய ஜடாயு போரிடும் படம் சுக்குநூறாக உடைந்து நாலாபுறமும் சிதறிவிட்டது; அதைக் கண்டதும் அவன் நெஞ்சு பகீர் என்றது. 'அத்தனை நேரத்துக்குள் மஞ்சுளா என்ன விதமான ஆபத்துகளுக் கெல்லாம் ஆளாகினாளோ? கடவுளே, இதென்ன சோதனை!' என எண்ணி மெய்பதறிப் போய் விட்டான். இனியும் மரியாதையைப் பார்த்துத் தயங்குவது என்று எண்ணி ஒரே எட்டில் தன் சிறிய அன்னையை அணுகி அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான். ''பெரியம்மா! சீக்கிரம் பின்கட்டு அறை ஒன்றைத் திறந்து விடுங்கள். இப்படியே விட்டுவிட்டு நான் போனால் சித்தி இருக்கும் மனநிலையில் இந்த வீட்டில் கொலைகூட நடந்து விடும்'' என்று கூறிவிட்டு தரதரவென்று அவளை இழுத்துக் கொண்டு பின் கட்டிற்கு விரைந்தான்.



சௌமினி ஆத்திரத்தில் அவனது கரத்தைப் பலங்கொண்ட மட்டும் கடித்து இம்சித்தும்கூடத் தன் காரியத்திலேயே கண்ணாகிவிட்ட கிரிதரன் ஒன்றையும் பொருட்படுத்த வில்லை.

பின்கட்டு அறை ஒன்றினுள்ளே சௌமினியைத் தள்ளிவிட்டுக் கதவை வெளியே பூட்டிய பின்புதான் அவனுக்கு மூச்சே வந்தது. அவனது வலது மணிக்கட்டின் மேல் ரத்தம் குபீரென்று வழிந்தோடியது. ''பெரியம்மா, தயவு செய்து நீங்கள் மாடிப்பக்கம் சென்று அப்பாவைக் கவனித்துக் கொள்ளுங்கள்; அம்பிப் பயலை அனுப்பி டாக்டரை அழைத்து வர ஏற்பாடு செய்துவிட்டுப் போகிறேன் பத்திரம்'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டுத் தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினான். சில நிமிஷங்களில் வஜ்ரவேலுவும், சிந்தாமணியும் துணையாகக்கூட வர அவன் வண்டி வாயு வேகத்திலே வீரசோழன் பட்டணம் செல்லும் ராஜபாட்டையில் விரைந்து கொண்டிருந்தது.

## 63

ஜகதீசன் காரை வெகுவேகமாக ஓட்டும்பொழுது விர்ரெனக் குளிர்ந்த காற்று முகத்தில் வீசவே மயக்கம் தெளிந்து கண்களை விழித்துக் கொண்டாள் மஞ்சுளா. தன் நிலையை அறிந்து கொள்ள அவளுக்குச் சிறிது நேரம் சென்றது. நடந்த அனைத்தும் மின்னல் என ஞாபகத்தில் எழவே கலவரத்துடன் நிமிர்ந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். கடுமையான

வேகத்தில் வண்டியை செலுத்திக் கொண்டு அருகில் அமர்ந்திருந்த ஜகதீசனைக் கடைக்கண்ணால் சற்றுப் பார்த்ததும், அவள் உடல் பயத்திலே நடுங்கியது. ''இப்பொழுது அவள் அவனுடன் எங்கே போய்க் கொண்டிருக்கிறாள்? எப்படி இது நடந்தது?''

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. நெற்றிமீது வழிந்து காதோரத்தில் ஓடிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு மெல்லக் கண்ணாடி வழியே வெளியே பார்த்தாள். வண்டியின் வேகம் கொஞ்சம் குறைந்தது. ஜகதீசன் அவள் பக்கம் திரும்பிப் பார்த்து ''விழித்துக் கொண்டு விட்டாயா? முடிவு வரை ஒரு சமயம் மயக்கமாகவே இருந்து விடுவாயோ என எண்ணிப் பயந்து விட்டேன். குளிர்கிறதா? கண்ணாடியைச் சாத்திவிடு. பசியாக இருந்தால் சொல். வண்டியை நிறுத்துகிறேன். இருவரும் கொஞ்சம் ஏதாவது சூடாகச் சாப்பிடலாம். பின்னால் டிபன் செட்டில் சாப்பாடு தயாராக இருக்கிறது'' என்றான் தணிவான இதமான குரலில்.

மஞ்சுளா அதற்குப் பதில் அளிக்காது மௌனமாக இருப்பதைக் கண்டு அவன் மேலே பேசலுற்றான். ''எங்கே போகிறோம் என்று எண்ணிப் பலமான யோசனை போலிருக்கிறது. நேரே இப்பொழுது நாம் சென்னைப் பட்டணம் போய்க் கொண்டிருக்கிறோம். மயக்கமாகிவிட்ட உன்னை நானேதான் தூக்கி வந்து காரில் போட்டேன். உனக்கு மயக்கம் தெளிய வெகுநேரம் பிடித்து விட்டது. வண்டி இப்போது வீரசோழன் பட்டணத்தைத் தாண்டி வந்து விட்டது. இனி யாரும் நம்மைத் தொடர முடியாது. தொடர்ந்தாலும் அவர்கள் ஏமாந்துதான் போவார்கள். சென்னை செல்லும் நேர் பாதையை விட்டு இப்போது குறுக்குப் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறேன்'' என்று கூறி, தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சும் பாவனையில் உற்சாகமாக நகைத்தான். தார் இட்டு செப்பனிடப்படாத பாதையில் நிறைந்திருந்த குழிகளில் கார் வேகமாகப் பாய்ந்த போதெல்லாம், முன்னும் பின்னும் தள்ளிவிடும் போல் ஆடவே மஞ்சுளாவின் உடல் நொந்து விட்டது.



நெஞ்சை அடைத்த துக்கம் கண்களை மறைக்க, அவள் எதிரே தெரிந்த பாதையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'வயிற்றுப் பிழைப்பை நாடி வந்த இடமெல்லாம் அவளது கற்புக்கு ஆபத்து ஏற்பட வேண்டுமா? தன்னைக் காத்துக் கொள்ளக்கூடச் சக்தியில்லாமல் அவள் உடல் ஏன் சோர்ந்து போக வேண்டும்? இந்தப் பைத்தியக்காரன் கையால் உயிர் போய் விட்டாலும் பாதகமில்லை. ஆனால் மானபங்கம் ஏற்பட்டுவிடக் கூடாதே...!'

பயங்கரமான இந்தச் சிந்தனை அவள் உள்ளத்தையும், உடலையும் துடிதுடிக்கச் செய்துவிட்டது. பகீர் பகீர் என்று மனம் அடித்துக் கொள்ளவே, 'மேலே என்ன செய்யலாம்' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

''நான் கேட்கிறேனே, உன் காது என்ன செவிடா? ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? இனி வாழ்நாள் முழுவதும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் என்னுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும், தெரியுமா?'' என்று ஆத்திரத்துடன் அதட்டிய ஜகதீசன், தன் இடது கரத்தை நீட்டி அவளைப் பற்றித் தன் அருகே பலவந்தமாக இழுக்க முயன்றான்.

தன் சக்தி முழுவதையும் திரட்டிக் கொண்டு அவன் கரத்தை உதறிவிட்டு, காரின் கதவு ஓரத்தில் குளிருக்கு ஒண்டும் பறவையென ஒதுங்கிக் கொண்டாள் மஞ்சுளா.

அவமானத்தினால் அவள் உடல் அனலாகப் பற்றி எரிந்தது. இந்த நிலைமையை எப்படி சமாளிப்பது என்பது அவளுக்கு விளங்கவேயில்லை. கன்னத்திலே வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். வெகுண்டு பேசினால் நிலைமை இன்னும் விபரீதமாகிவிடும் என்று அவளது அந்தராத்மா எச்சரிக்கவே, ''எனக்கு இப்பொழுது பசியில்லை. ஒன்றும் வேண்டாம். எனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கிறது'' என்றாள் மெல்லிய குரலில்.

''அப்படியானால் என்மேல் சாய்ந்து கொண்டு தூங்கு. ஏன்

இப்படி என்னைக் கண்டு மிரள்கிறாய்? உம்!'' என்று கொஞ்சலாகக் கேட்டுவிட்டு அட்டகாசமாகச் சிரித்தான் ஜகதீசன்.

இரவின் நிசப்தத்தில் அந்தத் தனிப்பாதையில் அந்தக் குரல் மரண தேவதையின் பேரிகைபோல் பயங்கரமாக ஒலிக்கவே, அவள் மெய் சிலிர்த்துப் போய் விட்டாள். இன்னமும் சற்று நகர்ந்து கதவின் மீது ஒட்டிக் கொண்டாள். 'கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்து விட்டால் என்ன' என்று ஒரு எண்ணம் அவள் சிந்தனையில் இழையோடியது.

அவள் மனத்தை அறிந்து கொண்டவன் போல ஜகதீசன், ''வெளியே குதித்தாயோ, மண்டை சிதறிப் போய் விடும். அப்பொழுதும் என்னிடமிருந்து தப்பிவிட முடியாது!'' என்றான்.

மஞ்சுளாவிற்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. 'உண்மையில் அவன் பைத்தியக்காரனா? அல்லது காமவெறி பிடித்த கயவனா?...' குழப்பத்துடன் அவள் மௌனமாக இருந்தாள்.

வண்டி வேகமாக முன்னேறிக் கொண்டு சென்றது. சிறிது நேரம் பேசாமலிருந்த ஜகதீசன், தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவள் பக்கம் மறுபடியும் திரும்பினான்.

''மஞ்சுளா! இப்படி என் அருகில் வா பயப்படாதே! என் அண்ணன் என்னைப் பற்றி உன்னிடம் ஏதாவது சொல்லிப் பயமுறுத்தி விட்டானா? சோன் சொல்லி! அவன் சொல்லியிருப்பான், சூதுக்காரன், பைத்தியம் என்று எனக்குப்பட்டம் சூட்டி என்னைச் சிகிச்சை விடுதியில் சிறை வைத்த சதிகாரன் அவன். நமது அன்பைப் பிரித்து நம் வாழ்வை நாசமடிக்கவும் திட்டமிட்டிருப்பான். நான் பைத்தியமுமல்ல, பித்தனுமல்ல. இதெல்லாம் வீண் கதை. நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

மஞ்சுளாவின் குழம்பின மூளை சற்றே நிதானத்தை அடைந்தது. தான் எதுவுமே பேசாமலிருப்பது தவறு என உணர்ந்து சட்டென்று, ''நான் அப்படியெல்லாம்



நினைக்கவில்லை'' என்றாள் மெல்லிய குரலில்.

இதனால் சற்றே கோபம் தணிந்த ஜகதீசன் உற்சாக வசமானான். ''எனக்குத் தெரியும். உண்மையில் நீ என்னைத்தான் நேசிக்கிறாய். வீண் வதந்திகளைக் கேட்டுப் பயந்து விட்டிருந்தாய். அதனால்தான் நான் உன்னை அணுகிய போதெல்லாம் மிரண்டு கூச்சலிட்டு விட்டாய்... இல்லையா?'' என்று தணிவான குரலில் உல்லாசமாகக் கேட்டான்.

மஞ்சுளா பதில் பேசவில்லை. அவள் இருதயம் வெடித்துவிடும் போல் அடித்துக் கொண்டது. 'பேசினாலும் ஆபத்து. பேசாவிட்டாலும் ஆபத்து என்று நிலைமை வரவர விபரீதமாகப் போகிறதே. என்ன செய்வோம் என எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

''உனக்கு ஆனாலும் மிகவும் சங்கோஜம். இதுவரை என்னை நேராக நிமிர்ந்து ஒரு தடவைகூட பார்த்ததில்லை. உண்மையில் மஞ்சுளா! உனது சங்கோஜ சுபாவந்தான் என்னை உன்பால் வெகுவாகக் கவர்ந்து விட்டது. ஆண்களுக்குச் சரியாக வந்து நின்று கொண்டு, அட்டகாசமாகப் பேசிச் சிரித்து மயக்கும் அடங்காப் பிடாரிகளைக் கண்டால் எனக்குக் கட்டோடு பிடிக்காது. உன்னைப் பார்த்த நாள் முதல் நான் என் உள்ளத்தை உன்னிடம் பறிகொடுத்து விட்டேன். இந்த அன்பு, இரவும் பகலும் என்னை வாட்டி வதைத்து என் இருதயத்தைப் புழுவாக அரித்து விட்டது. விஷயத்தை அறிந்த சித்தி இது சம்பந்தமாகச் சகல உதவிகளும் செய்ய முன்வந்தார்கள். அவர்களுக்கு நாம் மிகவும் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்'' என்றான்.

திடுக்கிட்டுப் போன மஞ்சுளா ''சித்தி?'' என்றாள் ஆச்சரியம் கலந்த பயத்துடன்.

''ஆமாம். என் சிறிய தாயாருக்கு என்மேல் உயிர். நானும் நீயும் திருமணம் செய்து கொண்டு சுகமாக, குதூகலமாக வாழவேண்டும் என்பதற்காக, இந்தக் குடும்பத்தையே விரோதித்துக் கொள்ளத் துணிந்து விட்டார்கள். இன்று இரவு எப்படியாவது உன்னைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றுவிட

வேண்டும் என்பது அவரது யோசனை. முன் கூட்டியே உணவு, பணம், கார் எல்லாம் தயாராகக் கீழே வைத்திருந்தார்கள். தக்க நேரத்தில் என்னை வந்து அக்கறையுடன் எச்சரித்தார்கள். அவர்கள் போட்ட திட்டம் முக்காலும் வெற்றி பெற்று விட்டது. பங்களாவின் நான்கு வாசல்களையும் பூட்டி, முன்னதாகவே சாமான்கள் முதலியவற்றை அப்புறப்படுத்தி விட்டார்கள். அதனால் நம்மை யாருமே சுலபமாகத் தொடர்ந்து வர முடியாது தெரிந்ததா?'' என்று கூறிவிட்டு வெற்றிக் களிப்பில் சிரித்தான்!

மீண்டும் பதறியே போனாள் மஞ்சுளா. என்ன செய்வதென்று அறியாது திணறினாள். 'சௌமினியின் துரோகச் செயலா இது? அவளால் இதை ஒரு சிறிதும் நம்ப முடியவில்லையே. ஒரு பாவமும் அறியாத அவளை ஏன் இதில் சிக்க வைக்க வேண்டும்? இதனால் அவளுக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது? வேலைக்காரப் பெண்ணை மருமகளாக ஏற்கத் திட்டமிட்டதன் மர்மம் இதுதானோ...' இதை நினைக்க நினைக்க அவள் தலைசுற்றியது. கண்ணில் புரண்ட கண்ணீர் கன்னங்களை நனைத்தது. 'ஒரு வேளை பங்களாவில் நடந்த சம்பவத்தை அறிந்த ஸ்ரீதரன் உடனே பின்னால் ஓடிவந்து தன்னைக் காப்பாற்றக்கூடும்' என இதுவரை நெஞ்சின் ஓரத்திலே ஒட்டிக் கொண்டிருந்த சிறியதொரு நம்பிக்கையும் இப்போது அடியோடு குலைந்து விடவே, பயத்திலே மெய்விதிர்த்து உடல் சில்லிட்டுச் சிலையாகி விட்டாள்.

## 64

சிலை போல் ஸ்தம்பித்து, பிரமை பிடித்தவள் போலாகி விட்ட மஞ்சுளாவை, ஜகதீசன் ஏறிட்டுப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் அவளை நோக்கி, ''என்ன யோசிக்கிறாய்? விடிந்து கொஞ்ச நாழிகையில் நாம் சென்னைக்குப் போய் விடுவோம். இப்பொழுது தற்சமயம் ஒரு ஹோட்டலில் தங்கியிருப்போம். சில நாட்களில் சித்தி



அவர்கள் பணத்துடன் வந்து விடுவார்கள். மேற்கொண்டு விவாகத்தையும் நடத்தி வைப்பார்கள். சுலபமாக எளிய முறையில் ஒரு கோயிலில் சுருக்கமாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு விடலாம் என்பதுதான் என் அபிப்பிராயம். அதற்குப் பின்னர் சொத்து, பாகப்பிரிவினை பற்றி அப்பாவிடமே நான் நேரில் பேசப் போகிறேன். சென்னையிலேயே நான் ஏதாவது ஒரு சிறு வியாபாரத்திலே ஈடுபட்டு, தனிக் குடித்தனமாக இருக்க வேண்டும் என்பது என் ஆசை. என்ன சொல்கிறாய்? பேசுவதற்கு வெட்கமாக இருக்கிறதா?'' என்றான் பற்கள் அனைத்தையும் வெளியே காட்டியபடி.

இவை எல்லாம் மஞ்சுளாவின் காதுகளில் நாராசம் போல் பாய்ந்தன. அவள் மனம் எண்ணாததெல்லாம் எண்ணித் தவித்தது. கெட்ட எண்ணங்கள் பலவற்றைச் சிந்தனையில் கொண்ட காமவெறியன் கரங்களால் தீண்டி எடுத்துக் காரில் கொண்டு வந்து போட்ட இந்த உடல் அப்படியே எரிந்து சாம்பலாகி விடக்கூடாதா என்று எண்ணித் தன்னையே நொந்து கொண்டாள். கண்ணீர் அவள் கண்களை மறைத்தது! மீண்டும் அவள் தலை சுற்றியது. சுவாசம் நெஞ்சை அடைத்தது. மயக்கம் வந்து விடாதிருக்க வேண்டித் தன் நகங்களால் கரங்களை வேதனை ஏற்படும் வரை பலமாக அழுத்திக் கீறிக் கொண்டாள்.

இதொன்றையும் உணராத ஜகதீசன், தன் குடும்பத்தின் மீது கொண்ட ஆத்திரம் அனைத்தையும் நெருப்பாகக் கக்கினான். ''கல்யாணத்தின் போது என் தாயின் ஆபரணங்களை உனக்கு அணிவித்து அழகு பார்க்க வேண்டும் என நான் ரொம்பவும் ஆசைப்பட்டேன். அவை சந்திராவின் வசம் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இரவும் பகலும் அவள் அறையைக் காத்துக் கொண்டு கிடந்த டைகர் நாய் என் திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருக்கவே, அதைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று துணிந்தேன்.

''ஒரு நாள் தோட்டத்தில் அதனுடன் விளையாடுவது போல் போக்குக்காட்டி, அப்படியே கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்று விட்டேன். அப்படியும் பயன் இருக்கவில்லை. சதிகாரி சந்திரா அந்த நகைகளைக் கொடுக்க

மறுத்து விட்டாள். அவள் கழுத்தையும் அப்படியே நெருக்கி...'' என்று முடிக்காது கோபத்துடன் நிறுத்தினான். அவனைச் சுற்றி உஷ்ணக் காற்று பரவி நின்றது. கொல்லன் உலைதுருத்தியைப் போல பெருமூச்சுகள் எழ அவன் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

மஞ்சுளா நடுநடுங்கி விட்டாள். இன்னும் சற்று அப்பால் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இந்தப் பயங்கர விஷயங்களைக் கேட்டுச் சாய்ந்து விடாதிருக்க இன்னமும் பலமாகத் தன் நகங்களால் கரங்களைப் பிறாண்டி வேதனைப்படுத்திக் கொண்டாள்.

''சந்திரா என்னைப் பைத்தியக்காரன் என எண்ணி மிகவும் அசட்டை செய்தாள். இது விஷயம் எனக்கு அவ்வளவாகப் புரியவில்லை. ஒருநாள் இந்த உண்மையை என் சிறிய தாயார் எனக்கு எடுத்துச் சொல்லி, அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்கச் சொன்னார்கள். சரியானபடி நான் வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டேன். அவள் நடக்க முடியாது நொண்டியாகி இறந்தது எதனால் தெரியுமா? அது ஒரு சிறிய கதை. ஒரு சமயம் 'பிக்னிக்' விருந்துக்காகப் போன இடத்தில், சித்தியின் திட்டப்படியே அவளிடம் நைச்சியமாகப் பேச்சுக் கொடுத்து, கூட்டத்தினின்றும் தொலைவில் அழைத்துப் போய் மலை உச்சியிலிருந்து அவளைத் தள்ளிவிட்டு விட்டேன். ஆனால் அந்தச் சண்டாளி சந்திரா ஏனோ இறக்கவில்லை. பாறைமீது உருண்டு விழுந்தவள் காயத்துடன் மட்டும் தப்பிவிட்டாள்.

''இன்னொரு முறைகூட அவளை ஒழித்துக் கட்ட ஒரு வழி செய்து பார்த்தேன். அவள் நொண்டியாகிப் படுக்கையில் இருந்த சமயம் மின்சார விசிறியின் ஒரு கம்பியை இணைத்து, அவள் தொட்டால் அதிர்ச்சி ஏற்படும்படி யுக்தி செய்தும் பார்த்தேன். அதிலும் எப்படியோ தப்பி விட்டாள். ஆனால் எமனிடமிருந்து மட்டும் தப்ப முடியவில்லை. என் வஞ்சம் இன்னமும் தீர்ந்த பாடில்லை. அந்தப்பயல் கிரிதரன்... அவன் உயிரைக் குடிக்காவிடில்... அவனது பருத்த கழுத்தை இந்தக் கரங்களால் பிடித்து நெருக்கி...'' என்று பலம் கொண்ட மட்டும் ஆத்திரத்துடன் கத்திவிட்டு நிறுத்தினான்.



காய்ந்து போன உதடுகளை நாவால் ஈரமாக்கிக் கொண்டு மஞ்சுளா இன்னமும் சற்று அப்பால் நகர்ந்து உட்கார முயன்றாள். உள்ளூர அவளுக்கு நடுக்கமெடுத்தது. அடுத்த நிமிஷம் என்ன நேரிடுமோவென்ற பயம் வேறு அவளைக் கௌவிக் கொண்டது.

''மௌனமாகவே இருக்கிறாயே, என்ன அர்த்தம்? உனக்கு என்னை பிடிக்கவில்லையா? சொல் உண்மையை... உம்! இப்படி என் அருகில் வா. என் கோபத்தை வீணாகக் கிளறாதே!'' என்று உறுமிய அவன், வலது கரத்தினால் காரைச் செலுத்திக் கொண்டு, இடது கரத்தை நீட்டி அவளைப் பலவந்தமாக அணைத்துக் கொள்வதற்காக ஒரு எம்பு எம்பி அவளைப் பற்றினான்.

தன் பலம் முழுவதையும் திரட்டிக் கொண்டு அவன் பிடியினின்றும் திமிறினாள் அவள். ''சீ என்னை விடு!'' என்று சர்ப்பம் போல் சீறினாள் கோபம் தாள முடியாது.

அவ்வளவுதான்! ஜகதீசனது ஆத்திரம் கட்டுக் கடங்காது பொங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டது. ''என்ன சொன்னாய்?'' என்று உறுமிவிட்டு, அவளைப் பிடித்துத் தன்னருகே இன்னும் இழுத்தான். அவள் திமிறிக் கொண்டு துடிப்பதைக் காண அவனுக்குப் பொறுக்க முடியவில்லை. ''என்னை வெறுக்கிறாயா? பைத்தியக்காரன் என்று ஏளனமா செய்கிறாய்? அத்தனை அருவருப்பாகவா இருக்கிறது என் மேல் உனக்கு? உன்னை விட்டு விடுவேன் என்று மட்டும் கனவில் கூட நினைக்காதே. உனக்கு நான் வேண்டாம் என்றால், நீயும் மற்ற எவருக்கும் வேண்டாம்! ஓஹோ! அவ்வளவுக்கு வந்து விட்டாயா? இதோ பார்!'' என்று கத்திய ஜகதீசன், தன் இரு கரங்களையும் நீட்டி அவள் கழுத்தைப் பற்றினான்.

''வா... வாழ முடியாவிட்டால் இருவருமே சேர்ந்து இறந்து போவோம்...'' என்று எகிறிக் கொண்டு கரங்களை இறுக்கினான். பற்களைக் கடித்துக் கொண்டு கால்களைப் பலமாக 'ஆக்ஸிலேட்டர்' மீது ஓர் அழுத்து அழுத்தவே, கார் சரேலென ஒரு துள்ளலில் வேகமாக முன்னே விரைந்து ஓடியது.

எதிரே வந்த திருப்பத்திலே ஒரே திசையாக விரைந்த வண்டி, அங்கு ஒரு முடுக்கிலே நின்று கொண்டிருந்த பெரிய புளிய மரத்தின் மீது மாபெரும் சத்தத்துடன் மோதிக் கொண்டு சாய்ந்து, இரண்டு முறை உருண்டு அருகிலிருந்த பள்ளமொன்றில் தொப்பென்று விழுந்தது.

ஸ்ரீமான் நாராயணன் படுக்கையின் மேல் தன் நினைவு அற்றுக் கிடந்தார். கிரிதரன் சொன்னவாறே அம்பிப்பயல் டாக்டரை அழைத்து வர ஓடோடியும் போனான். அன்ன பூரணியம்மாளும் செய்வது இன்னதென்று அறியாது, ஸ்ரீமான் நாராயணனுக்குப் பணிவிடை செய்ய அங்கே வந்து விட்டாள்.

வயதான அவளுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. 'ஆட்கள் நிரம்ப இருக்கும் இந்தப் பங்களாவில் இப்படியும் ஓர் அக்கிரமம் நடக்குமா?' என்று அடிக்கொரு தடவை எண்ணி எண்ணி வியப்பிலும் பயத்திலும் ஆழ்ந்து போனாள்.

பின்கட்டு அறையில் தள்ளிப் பூட்டப்பட்டிருந்த சௌமினியின் கோபம், குட்டியை இழந்த பெண் புலியைப் போல மாறியது. கண்டபடி இரைச்சலிட்டுக் கத்தினாள். அவள் இரைச்சலைக் கேட்டு யாரும் வந்து கதவைத் திறக்காது போகவே, கடு சொற்களால் பங்களாவிலிருக்கும் ஒவ்வொருவரையும் பழி தீர்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் கறுவினாள். தான் நினைத்தது என்ன, நடந்தது என்ன, தெய்வம் தக்க சமயத்தில் சதி செய்து விட்டதே என்று எண்ணித் தெய்வத்தைச் சபித்தாள்.

'ஜகதீசனும் மஞ்சுளாவும் இத்தனை நாழிகைக்குள் சென்னையை அடைந்து விடுவார்கள் என்று எண்ணிக் கணக்குப் போட்டு, அவர்கள் ஊர் எல்லையைத் தாண்டியதும் இரவோடு இரவாகத் தானும் மற்றொரு காரில் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றுவிட வேண்டும்' எனத் திட்டம் போட்டிருந்தாள். இங்கே அவள் கணவன் இறந்து போனாலும் அதைப் பற்றிக் கவலைப்படாதவள் போல் மனம் அத்தனை



உரம் ஏறியிருந்தது. ஒரு விஷயத்தில் மட்டும் அவளுக்கு இப்போது உள்ளூரச் சந்தோஷம் ஏற்பட்டது. கிரிதரன் அந்தப் பெண்ணைச் சந்தித்துப் பேசிக் கைப்பற்று முன் ஜகதீசன் அதே காரியத்தைச் செய்துவிட வேண்டுமென்றுதான் எதிர்பார்த்தாள். 'அதற்கான திட்டமும் வகுத்ததில் அது அநேகமாக நிறைவேறும் தறுவாயில் இப்படித் தன்னைப் பூட்டிவிட்டுப் போய் விட்டானே' என்ற விஷயம்தான் அவள் மனத்தை அறுத்தது. இருப்பினும் தன் கணவனது நிலை எப்படியிருக்குமோ, ஒருவேளை இசைகேடாக அவர் மரிக்க நேர்ந்தால் என்ற எண்ணமும் மனத்துள் புகுந்து துழாவியது.

இச்சமயம் வேறொரு எண்ணமும் சட்டென்று தலைதூக்கியது. சாமிநாதனைக் குறித்த விஷயம்தான் அது. சாகாமல் இன்னும் உயிருடன் இருப்பவன், பங்களாவில் யாரும் இல்லாத இந்த அவல வேளையில் வந்து குதித்தால் என்ன செய்வது? அதுவும் போலீஸ் விஷயமாயிற்றே! உளறிக் கொட்டுவானோ? இந்தச் சச்சரவுக்கெல்லாம் ஆதாரம் தான்தானே என்று கவலை மிகவும் கொண்டவளாய் இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள் சௌமினி.

வைத்தியர் சுந்தரேசனின் கவனிப்பினால் நன்றாக அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தார் நாராயணன். இரவு முழுவதும் அன்னபூரணியம்மாள் கண்களை மூடவேயில்லை. குட்டியைப் பறிகொடுத்த தாய்ப் பூனைபோல் இருப்புக் கொள்ளாமல் அறைக்குள் இங்குமங்கும் அடிக்கொரு தடவை சுற்றிவந்து கொண்டிருந்தாள். கீழ் வானம் மெல்ல வெளுத்துக் கொண்டு வந்தது. கார் ஒன்று தோட்டத்திற்குள் வேகமாக நுழையும் சப்தம் கேட்கவே, ஆவலுடன் ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள். வராந்தா மீது சாய்வு நாற்காலியில் மிகக் களைப்புடன் சாய்ந்து கொண்டிருந்த வைத்தியர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். அன்னபூரணியம்மாள் அவசரமாகக் கீழே இறங்கி ஓடுவதைக் கண்டதும், சோம்பலை உதறிவிட்டு அவரும் வேகமாகப் பின் தொடர்ந்து கீழே ஓடி வந்தார்.

பலத்த காயமடைந்து இரத்தம் மிக இழந்து தன் நினைவின்றிக் கிடந்த ஜகதீசனைக் கிட்டாவும் கிரிதரனும் சுமந்து கொண்டு வந்து சோபா ஒன்றின் மீது கிடத்தினார்கள். பச்சிளங் குழந்தையைப் போல் வாரி எடுத்துக் கொண்டு வந்த மஞ்சுளாவை, சிந்தாமணி மிகவும் ஜாக்கிரதையாக இன்னொரு நீண்ட படுக்கையில் படுக்க வைத்தார். உலக நினைவேயின்றி மயக்கமுற்றுக் கிடந்த அவளது நிலையையும், நீலம் பாரித்த முகத்தையும், தடுமாற்றத்துடன் வெளிப்பட்ட சுவாசத்தையும் கண்ட அவருக்கு அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கை போய் விட்டது. அவளிடம் கொண்டிருந்த பாசம் அவர் கண்களைக் கலங்கச் செய்தது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சில்லிட்டுக் கிடந்த அவள் உடல் மீது குளிர்ந்த காற்று வீசாதிருக்கக் கனமான போர்வை ஒன்றை எடுத்து வந்து போர்த்தினார். ''கடவுளே! இந்த ஏழைப் பெண்ணை நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று மனம் உருகத் தமக்குள்ளே தமது இஷ்ட தெய்வத்தை எண்ணிப் பிரார்த்தித்துக் கொண்டார். அதைத் தவிர அவர் அது சமயம் செய்யக்கூடியது வேறு எதுவும் இருக்கவில்லை.

வைத்தியர், ஜகதீசனைத்தான் முதலில் கவனித்தார். உடனே அவனை ஆஸ்பத்திரியில் அனுமதித்தாக வேண்டுமென்று உணர்ந்த அவர், வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்து முடித்தார்.

''என்ன, ஏது என்றெல்லாம் குறுக்குக் கேள்விகள் கேட்காதே! ஒவ்வொரு நிமிஷமும் இனி நமக்கு மிகவும் முக்கியமானது'' என்று அதட்டி உத்தரவிட்ட அவரிடம் அப்போது கிரிதரனால் குறுக்கிட்டு எதுவும் பேச முடியவில்லை.

'மஞ்சுளாவிற்கு அதிகமான காயம் ஏற்பட்டிருக்கிறதா? கொஞ்சம் கவனியுங்கள்!' என்று கூற வேண்டும் போல் சிந்தாமணியின் நாக்குத் துடித்தது. ''புறப்படுங்கள், தாமதம் வேண்டாம்!'' என்று மீண்டும் வைத்தியர் அதட்டவே, அவர் வாயைத் திறக்க வில்லை. தனக்கு இடப்பட்ட பணியை ஏற்றுக் கொண்டு உடனே கிளம்பி விட்டார். ஜகதீசனை



ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு, மேற்கொண்டு செய்ய வேண்டியவற்றை வைத்தியர் எச்சரித்த முறையிலே செய்து முடித்துவிட்டு, இருவரும் வீடு திரும்புவதற்குள் காலை பத்து மணியாகிவிட்டது.

## 65

தோட்டத்துக் குழாயில் வாயைக் கொப்பளித்து விட்டு, முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு பங்களாவிற்குள் வந்தார் சிந்தாமணி. மஞ்சுளா எப்படி இருக்கிறாள் என்று அறியும் ஆவலினால் அவர் உள்ளம் தவித்தது. எனினும் மரியாதையை உத்தேசித்து அவர் எஜமான் பின்னால் மாடிப்பக்கம் செல்லாமல் சமையற்கட்டை நோக்கி நடந்தார். அம்மியில் எதையோ வைத்து அரைத்துக் கொண்டிருந்த கிட்டா, அவரைக் கண்டதும் காரியத்தை விட்டு ஓடிவந்தார். ''காயம் ஒன்றும் அதிகம் இல்லை. தோள் பட்டையிலும், முழங்கால்களிலும் லேசாகச் சதை வழண்டு விட்டிருக்கிறது. ஆனால் இன்னமும் தன் நினைவு வரவில்லை. ஒரு சமயம் உள் காயமோ, அல்லது பித்த மயக்கமோ தெரியவில்லை. டாக்டர் என்னவெல்லாமோ சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார். எதற்கும் இருக்கட்டுமென்று நானும் அவசரமாகக் கஷாயம் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

சிந்தாமணி நீண்டதொரு பெருமூச்சு விட்ட வண்ணம் முன்னும் பின்னும் உலாவினார்.

மாடியறையில் மஞ்சுளாவின் படுக்கை அருகே வைத்தியர் உட்கார்ந்திருந்தார். சற்றுத் தொலைவில் கவலையே உருவாக அன்னபூரணியம்மாள் நின்று கொண்டிருந்தாள். சப்தமிடாது அறைக்குள் வந்து நின்ற கிரிதரனின் நெஞ்சு துணுக்குற்றுப் போயிற்று. கட்டிலின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த சீசாவிலிருந்து தண்ணீர் போன்ற திரவம் சொட்டுச் சொட்டாக ரப்பர்க் குழாய் வழியே ஓடி மஞ்சுளாவின் முழங்கையில்

பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிக் குழலுக்குள் விழ்வதைக் கண்டான்.

வைத்தியர் மெல்லத் திரும்பிப் பார்த்துவிட்டு, எழுந்து அவன் அருகில் வந்தார். நெற்றிமீது முத்துப்போல் அரும்பிய வியர்வைத் துளியுடன் கலைந்து விழுந்த கேசமும் திமிர்ந்த நாசியும் மூடிய கண்களுமாகத் தங்கச்சிலை போல் கிடந்த மஞ்சுளாவைப் பார்க்கப் பார்க்க அவன் உள்ளம் பதைபதைத்தது.

''அப்பா தூங்கிக் கொண்டிருக்கிறார். பார்த்தேன்'' என்று கூறிவிட்டு நெஞ்சை அடைத்த துக்கத்தை விழுங்கிக் கொண்டான்.

''அவருக்கு ஒன்றுமில்லை. வெறும் மன அதிர்ச்சிதான். இன்னும் இரண்டு மணிநேரம் தூங்கி எழுந்தால் எல்லாம் சரியாகிவிடும். என் கவலையெல்லாம் இப்பொழுது இந்தப் பெண்ணைப் பற்றித்தான்...'' என்று கூறிவிட்டுத் தலையைச் சொறிந்து கொண்டு ஏதோ சொல்லத் தயங்கினார் வைத்தியர்.

நெஞ்சு பகீர் என்றாகி விட்டது கிரிதரனுக்கு. ''காயம் அதிகமா? பிழைப்பது கஷ்டம் என்று நினைக்கிறீர்களா?'' என்று பதறினான். மேலே பேசமுடியாது துக்கம் அவன் தொண்டையைப் பிடித்து அடைத்துக் கொண்டது.

''பலமான காயம் ஏதும் இல்லை'' என்று சூள் கொட்டிய வைத்தியர், அன்புடன் அவனது தோளைப் பற்றிக் கொண்டார். ''அதுவரை நாம் பாக்கியசாலிதான். ஆனால் இனி இவளை இங்கே வைத்துச் சிகிச்சை செய்வது முடியாத காரியம். ஆஸ்பத்திரிக்கும் அனுப்ப இயலாது. அதனால் எனக்கு வேறு ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. வீரசோழன் பட்டணத்தில் உள்ள என் நண்பர் ஒருவரின் சிகிச்சை விடுதியில் அனுமதித்துப் பிரத்தியேகமாகக் கவனிக்க ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறேன். விசேஷ கவனிப்புத் தேவையாக இருக்கும். பொருட்செலவு அதிகம் ஆகலாம். சரியான கவனிப்பு இல்லாவிடில் இவள் உயிர் பிழைப்பது துர்லபம்'' என்றார் சந்தேகம் தொனிக்கும் குரலில்.



கிரிதரனின் திகில் இன்னும் அதிகரித்தது. உடலும் உள்ளமும் உணர்ச்சியில் ஊசலாடின. ''உங்கள் இஷ்டப்படியே எது வேண்டுமானாலும் செய்யுங்கள். பணச் செலவைப் பற்றிப் பார்க்க வேண்டாம். இவள் உயிர் பிழைத்தால் அதுவே போதும்'' என்று தடுமாறினான் துக்கத்துடன். அன்னபூரணியம்மாள் தன் கன்னங்கள் மீது வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''குழம்பியிருக்கும் எங்களிடம் யோசனை கேட்கவே வேண்டாம்! நீங்கள் இதுசமயம் குடும்பத்திற்குத் தலைவர், எல்லாம் உங்கள் கருத்துப்படியே நடக்கட்டும்'' என்றாள் அவள் மெல்லிய குரலில். கிரிதரனால் உணர்ச்சிகளை இதற்குமேல் கட்டிவைக்க முடியவில்லை. ''இது சமயம் உங்களிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன். உடைந்துபோன என் உள்ளத்திற்குப் புத்துயிர் கொடுத்து, நாசமாகி விட்டுள்ள எங்கள் குடும்பத்தை வாழ்விக்க வந்த தெய்வம் என இவளைப் பற்றி எண்ணி எண்ணி...'' என்று சொல்லிவிட்டுத் துயரம் தாளமுடியாது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு கதறி விட்டான்.

மார்பைச் கட்ட கண்ணீரை விரைவில் துடைத்துக் கொண்டு அன்னபூரணியம்மாள் அவன் அருகில் ஓடி வந்தாள். ''அசடு! ஆண் பிள்ளை நீ. தைரியத்தை இழக்கலாமா? சே! சே!'' என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

''எனக்கு எல்லாம் புரிந்து விட்டது! கவலைப்படாதே கிரி! இது மாதிரி சமயங்களில் நாம் கோழையாகி விடக்கூடாது. மனத்தை அலட்டிக் கொள்ளாதே. மேற்கொண்டு அநேக காரியங்கள் கவனிக்க இருக்கின்றன'' என்று ஆறுதல் கூறிவிட்டு வைத்தியர் அவனை அன்புடன் அணைத்துக் கொண்டார்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு வெட்கத்துடன் புன்முறுவலித்தான் கிரிதரன்.

''உணர்ச்சிகளைப் பூட்டி வைத்தால் இப்படித்தான். ஒவ்வொரு சமயம் கட்டுமீறி வெடித்தெழுந்து விடுகின்றன. மனிதர்கள் இயற்கை உணர்ச்சிகளை அனுசரித்து நடந்து

விட்டால் எத்தனையோ விதமான மனப்போராட்டங்களை எளிதில் தவிர்த்து விடலாம். அதெல்லாம் பிறகு பேசுவோம். சரி நீ என்னுடன் சற்றுக் கீழே வரமுடியுமா? உன் பொருட்டுத்தான் நான் இதுவரை காத்திருந்தேன்'' என்றார் வைத்தியர் சுந்தரேசன்.

இருவரும் இறங்கிக் கீழே முன் வாசலுக்குள் நுழைந்தனர்.

''காயம் ஒன்றுமில்லை. ஆனால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்கிறீர்கள். இது விளங்கவில்லையே?'' என்று மெல்லக் கேட்டான் முடிவில் துணிவுடன் ஸ்ரீதரன்.

''புரியும்படிச் சொல்கிறேன். அவசரப்படாதே. முதலில் உன் சிற்றன்னையிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும். நடந்தது அனைத்தையும் விவரமாகப் பெரியம்மா எனக்குச் சொல்லி விட்டார்கள். கதவைத் திறந்து அவர்களை முதலில் வெளியே விடு'' என்றார் வைத்தியர்.

ஸ்ரீதரன் வெட்கி நெஞ்சு பதறிப் போய்விட்டான். ''நான் மிகவும் மிருகத்தனமாகத்தான் நடந்து கொண்டு விட்டேன். ஆனால் எனக்கு வேறு வழி இருக்கவில்லை. இதுவரை என் சிறிய அன்னையை நிமிர்ந்து கூட நான் பார்த்தவன் இல்லை. மட்டு மரியாதையின்றி ஒரு வார்த்தை சொன்னதில்லை. என்றைய தினம் அவர்கள் என் தந்தையை மணந்தார்களோ, அன்றே அவர்கள் என் எண்ணத்தில் பெற்ற தாயின் மதிப்பைப் பெற்று விட்டிருந்தார்கள். அவர்களைக் கரந்தொட்டு வலியப்பற்றி இழுத்துச் செல்ல நேர்ந்ததை எண்ணி மிகவும் மனம் கூசிப் புண்ணாகி விட்டிருக்கிறேன்'' என்று தடுமாற்றத்துடன் சொன்னான்.

வைத்தியர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார். ''உன்னை நான் நன்றாக அறிவேன். எனக்கு விளக்கம் தேவையில்லை. நீ எள்ளவும் பிசகு செய்யவில்லை. காட்டில் திரிய வேண்டிய கொடும் புலியை மக்கள் சமுதாயத்திலே அலையவிட முடியுமா? காட்டில்தான் அதை விட்டு வைக்க வேண்டும்'' என்றார் நிதானமாக.



இதன் பிறகு வேகமாகப் பின்கட்டிற்கு விரைந்த ஸ்ரீதரன், சிற்றன்னை இருந்த அறையின் கதவைத் திறந்து விட்டான். பின்னால் தொடர்ந்து வந்த வைத்தியர் அந்த அறைக்குள் தலையை நீட்டி, ''தயவு செய்து வெளியே வருகிறீர்களா? உங்களிடம் ஒரு வார்த்தை பேச வேண்டும்'' என்றார் மெதுவாகத் தாழ்ந்த குரலில்.

இரவு முழுவதும் கோபமே உருவாக அறைக்குள் உலவிக் கொண்டிருந்த சௌமினி, அங்கு ஒரு மூலையில் கிடந்த முக்காலி மீது உட்கார்ந்திருந்தாள். இவர்களைக் கண்டதும் அவள் கண்களில் கோபக்கனல் பற்றியது. வைத்தியரை வெறித்துப் பார்த்துவிட்டுத் துள்ளிக் கொண்டு வெளியே வந்து நின்றாள்.

''தாங்கள் போட்ட திட்டம் எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கிறது என்பதை அறிய வெகு ஆவலுடையவர்களாக இருப்பீர்கள் என நம்புகிறேன். சென்னை செல்லும் பாதையில் ஜகதீசன் கார் விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறான். மஞ்சுளாவிற்குக் காயம் ஏதுமில்லை. ஆனால் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கிறாள். அவளுக்குக் கடுமையான விஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது என ஊகிக்கப்படுகிறது. என்ன விதமான விஷம் என்று தெரிந்தால் சிகிச்சைக்குச் சுலபமாக இருக்கும்'' என்றார் மிகவும் அதிகாரம் தொனிக்கும் குரலில் வைத்தியர்.

அச்சமின்றித் தலையை நிமிர்த்தி அகங்காரமாக ஒரு பார்வை பார்த்தாள் சௌமினி. ''என்னிடம் கேட்டால் எனக்கென்ன தெரியும்? தற்கொலை செய்து கொள்ள அவள் எதைத் தின்று வைத்தாளோ! காதல் போட்டியில் இவன் என்னென்ன சூழ்ச்சி செய்தானோ? ம்!'' என்று உறுமிவிட்டு முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள்.

''ஸ்ரீமதி நாராயணன்! உங்களைத்தான்! எனக்கு எல்லாம் தெரியும். உண்மையைச் சொல்லி விட்டால் பின்னால் ஏற்படப் போகும் அவமானகரமான சம்பவங்களினின்று தாங்கள் தப்ப

முடியும்'' என்று கர்ஜித்தார் சுந்தரேசன் ஓங்கிய குரலில்.

இதைக் கேட்டதும் சௌமினியின் முகம் வெளுத்து விட்டது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். நடுங்கிய கரங்களை இறுக மூடிக்கொண்டு கலவரத்தைச் சமாளித்துக் கொண்டாள். ''எல்லாம் அறிந்த ஈஸ்வரன் நீர்! பிறகு என்னைக் கேட்பானேன்! இந்த வீண் மிரட்டல் எல்லாம் என்னிடம் செல்லாது'' என்று சீறினாள் சீற்றத்துடன்.

''இனி நான் அதிகம் வாதாடப் போவதில்லை. என் நண்பரின் மனைவி என்று கருணை காட்டவே விரும்பினேன். அதைத் தாங்கள் ஏற்க மறுக்கிறீர்கள். பரவாயில்லை. இனி நடக்க வேண்டிய முறையைச் சட்டப்படி அனுசரிக்கப் போகிறேன். நீங்கள் சொல்லாவிட்டாலும் என் வைத்திய அறிவு ஓரளவு சொல்கிறது. ருசி கண்ட பூனை உறிக்கு உறி தாவும், அல்லவா? ஒருமுறை கையாண்டு வெற்றி கண்ட அதே முறையைத்தான் மறுதடவையும் சந்தர்ப்பம் வரும்பொழுது கொலையாளி உபயோகிப்பான் என்பது மனோதத்துவம் கண்ட உண்மை'' என்றார் கடுமையாக.

வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்த சௌமினியின் அழகிய வதனம் ஒரே விநாடியில் பயங்கரமாகக் கருமை படர்ந்து மாறியது. ''சண்டாளா! பாவி! துரோகி!'' என்று கிரீச்சிட்டு உரத்தக்குரலில் அலறினாள். பித்தம் பிடித்தவள் போல் ஒரே பாய்ச்சலில் அவர்களைத் தாண்டிக் கொண்டு முன் கட்டை நோக்கி ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

''டாக்டர்! இதெல்லாம் உண்மையா? மஞ்சுளாவிற்கு என் சித்தியா விஷம் கொடுத்திருக்கிறார்கள்? என்ன அக்கிரமம்! இதை நான் சும்மா விடமாட்டேன்!'' என்று பதறிய கிரிதரன் அவளைப் பின்பற்றி ஓடத் திரும்பினான். வைத்தியர் சுந்தரேசன் அவன் கரத்தைப் பலமாக இழுத்துத் தன்பால் அவனை நிறுத்திக் கொண்டார். ''ஓடட்டும், விடு அவளை!'' என்றார் அசட்டையாக.

''உண்மை முழுவதையும் அறிந்த நீங்கள் இவர்களைப் போக விடலாமா? ஒரு பாவமுமறியாத மஞ்சுளா எங்கள்



குடும்பத்தில் ஏற்பட்ட பொறாமைக்குப் பலியாவதா? யாருமற்ற அநாதை என்பதற்காக நாம் இதை மூடி வைக்கலாமா? தர்மமா? இது சரியா சொல்லுங்கள்... இந்த வீட்டில் இத்தனை சூழ்ச்சிகள் நடப்பதை அறியாத நான் அந்தப் பேதைப் பெண்ணை வற்புறுத்தி இரண்டாவது முறையாக இங்கே அழைத்து வந்தேன். நானே இழுத்து வந்து பலி பீடத்திலே அவள் கழுத்தைக் கொண்டு வைத்தேன். இந்தப் பாவம் என்னை விடவே விடாது'' என்று ஆத்திரமும் துயரமும் கொந்தளிக்கத் துடிதுடித்தான், ஆனந்த நிலையத்தின் செல்வக்குமாரன்.

''ஆத்திரம் வேண்டாம், அமைதியடை. நான் சொல்வதைச் சற்றுக் கேள்'' என்று கூறிவிட்டு வைத்தியர் முன்னால் நடந்தார். அப்போது கார் ஒன்று விரைந்து செல்லும் சப்தம் கேட்கவே, வாயில்வரை சென்று வெளியே கண்களை ஓட்டினார். நடைபாதை மீது மனோவேகத்திலே விரைந்த சௌமினியம்மாளின் மோட்டார் கணப்பொழுதில் ஆனந்த நிலையத்தை விட்டு வெளியேறி மறைந்து சென்று விட்டது.

''காரில் தப்பி ஓடிவிட்டார்கள்'' என்று பற்களைக் கடித்தான் கிரிதரன். ஆத்திரத்துடன் கைகளைப் பிசைந்தான். ''இனி பூரா கவனத்தையும் நான் மஞ்சுளா பக்கம் செலுத்த வேண்டும், வீணே மனத்தை அலட்டிக் கொள்ளாதே. இந்த அம்மாள் எங்கேயும் ஓடிவிட முடியாது. நியாயத்தின் கரங்கள் மிகவும் நீண்டவை'' என்று சொன்ன சுந்தரேசன், அவனது கரத்தைப் பற்றித் தன்னுடன் உள்ளே அழைத்துச் சென்றார்.

சடுதியில் ஊரைத்தாண்டி வீரசோழன் பட்டணத்திற்குள் புகுந்தாள் சௌமினி. வெள்ளம் தலைக்கு மேல் பெருகிவிட்ட பின்னர் ஆற்றின் ஆழத்தைக் கணக்கிடுவதால் என்ன பயன்? அவள் மனநிலையும் அப்படித்தான் இருந்தது. புரண்ட கூந்தலும், அரண்ட முகமும், அலங்கிய ஆடையுமாக உள்ளே வந்துநின்ற அவளைக் கண்டதும் கங்கம்மாள் ஒருகணம் மிரண்டு போனாள்.

''உடம்பிற்கு என்னம்மா? ஒரு மாதிரியிருக்கிறாயே என்ன

நடந்தது?'' என தவிப்புடன் பலவும் கேட்டாள்.

சௌமினி நேரிடையாக அதற்குப் பதில் சொல்லவில்லை. பேசிக்கொண்டிருக்க அவளுக்குப் பொழுதும் இருக்கவில்லை. ''என் கார் வழியில் இடக்கு செய்தது. கடைத் தெருவுக்குச் சென்று பழுது பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு முற்றத்திலே இறங்கினாள். ஒரு செம்புத் தண்ணீரை மொண்டு முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டாள். கண்ணாடியைப் பாராமலேயே தலையை வாரி அவசரமாக முடித்துக் கொண்டு உடையைச் சற்று சரி பார்த்துக் கொண்டு, கைப்பையுடன் வெளியே கிளம்பி விட்டாள்.

''நெற்றியில் ஒன்றுமில்லையே சித்த இரு!'' என்று வழிமறித்த கங்கம்மாள், கூடத்து மாடத்திலிருந்த குங்குமச் சிமிழை எடுத்துக் கொண்டு வந்து நீட்டினாள். விரலால் தொட்டு நெற்றி மீது அதை இட்டுக் கொள்ளும்போது சௌமினியின் கரங்கள் நடுங்கின.

''கொஞ்சம் இருந்து ஏதாவது சாப்பிட்டு விட்டுப்போ, அம்மா. அத்திம்பேர் வருகிற நேரம். வேண்டுமானால் உன்கூடத் துணையாக அவரும் கடைத்தெருவுக்கு வருவார்'' என்று நயமாக வேண்டிக் கொண்டாள் அத்தையம்மாள். அவளுக்கு யார் மீதும் கோபம் நீடித்து இருந்ததில்லை. முகம் வெளுத்துக் களை குன்றிப்போன சௌமினியின் வதனம் அம்மூதாட்டியின் கருணை உள்ளத்தைக் குமுறச் செய்துவிட்டது. 'வீட்டில் ஏதோ சண்டை போலிருக்கிறது. கோபத்துடன் புறப்பட்டு வந்திருக்கிறாள்' எனத் தனக்குள் எண்ணிக் கொண்டு, சூடாகக் கொஞ்சம் காப்பி எடுத்து வரச் சமையலறைக்குள் சென்றாள். ஆனால் சௌமினி அதற்குள் இரண்டு தெருக்களைத் தாண்டி விரைந்து சென்று மறைந்து விட்டாள். வழியில் எதிர்ப்பட்ட ஒரு வாடகை டாக்ஸியை அமர்த்தி அதில் ஏறிக் கொண்டு ஆசனத்திலே தலையை சாய்த்துக்கொண்டாள். சுக்கலாகிவிடும் போல் அழுத்திய தலை பாரத்தை அவளால் தாள முடியவில்லை.

ரயில் நிலையத்தில் இரண்டாம் மணியடிக்கும் சமயம்



ஓடிவந்து அந்த நேரத்தில் புறப்படவிருக்கும் வண்டிக்குள் சிரமப்பட்டு ஏறி உள்ளே வந்தாள். அந்தப் பெட்டிக்குள் நிறைய இருந்த ஸ்திரீகள் யார் மீதும் அவள் கவனமும் கருத்தும் செல்லவில்லை. கதவின் ஓரத்திலே நின்றபடி கட்டுப்படுத்த இயலாத ஒரு விசித்திர உணர்ச்சியால் உந்தப்பட்டு, வீரசோழன் பட்டணத்து ரயில் நிலையத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். 'ஓ!' வென்று கூச்சலிட்ட வண்டி வேகமாக நகர்ந்தது. புகை வண்டி நிலையத்தின் முடிவிலே தெரிந்த இலுப்பைத் தோட்டமும், அதன்பின் நீலவானத்தை நோக்கி நிமிர்ந்து நின்ற கோயில் கோபுரமும், மரங்கள் இடையே பளிச்சிட்ட பள்ளிக்கூடத்தின் கட்டிடமும், அவள் கண்கள் கண்டு பழகியிருந்த ஒவ்வொன்றும் வேகமாக அவளை விட்டு எதிர்ப்புறம் நகர்ந்தோடின. மேலே பார்த்துக் கொண்டு நிற்க முடியாதபடி கண்ணீர் அவள் பார்வைக்குத் திரையிட்டது. மனவேதனை, நெஞ்சைப் பாராங் கல்லாக அமுக்கவே, தாளமாட்டாது அவள் விம்மி விம்மி அழுதுவிட்டாள்.

பச்சாத்தாபப்பட்ட உள்ளம் பாபத்தைக் கழுவப் பெருக்கிய கண்ணீர் அல்ல அது. மனம் உருகி அவள் யாருக்காக வேணும் அனுதாபப்பட்டு இதுநாள் வரை அழுது அறியாள். பரிதாபத்திற்குரிய தன் நிலையை எண்ணித் தன் பொருட்டேதான் அதுசமயம் சௌமினி அழுதாள்.

அஸ்தமிக்கும் சமயம். இடையே ஒரு நிலையத்தில் வண்டி சற்று நேரம் நின்றது. அவளுக்கு வண்டியில் உட்கார்ந்திருக்க இருப்புக் கொள்ளவில்லை. கால்கள் பரபரத்தன. சட்டென்று கீழே இறங்கி, வெளிச்சம் குறைவாக இருந்த ஓர் இடத்தில் போடப்பட்டிருந்த ஆசனமொன்றில் உட்கார்ந்து கொண்டாள். தான் எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லாததனால் அவள் வெகு நேரம் பித்துப்பிடித்தவள் போல் கற்சிலையென உட்கார்ந்து விட்டாள்.

''யாரம்மா, அது? எந்த வண்டிக்குப் போக வேணும்'' என்று கூலியாள் ஒருவன் அதட்டிக் கேட்டதும்தான் அவளுக்கு இந்த உலக நினைவு வந்தது. திடுக்கிட்டு எழுந்து விழித்துக் கொண்டு பார்த்தாள். சென்னை செல்லும் வண்டி அந்த

நிலையத்தை விட்டுச் சென்று வெகு நேரமாகி விட்டிருந்தது. அட, மோசம் போனோமே என்று வருந்தினாள். அவள் எண்ணிய எண்ணம் ஈடேறவில்லை. சில் என்று வீசிய காற்று உடலை நடுக்கவே, சேலைத் தலைப்பை இழுத்துத் தலைவரை போர்த்திக் கொண்டு விடு விடென்று நடந்தாள். என்றுமே அவளுக்குக் குழப்பம் கொடுத்த அவளது வருங்காலம்போல் எங்கும் இருள் கவிந்து கொண்டிருந்தது. பாதரட்சைகளைக் கூட அவள் வண்டியிலேயே விட்டு விட்டிருந்தாள். தண்டவாளங்களின் பக்கத்திலே அவள் நடந்த பொழுது அங்கே நிரவியிருந்த சிறு கற்கள் அவளது மெல்லிய பாதங்களை உறுத்தி நோகச் செய்தன. இதுவரை அவள் நடந்தே அறியாள். அசட்டையாக மேலே நடந்து கொண்டேயிருந்தாள்.

கடந்துபோன வாழ்வில் குறுக்கிட்ட பல சம்பவங்கள் அவள் மனக்கண் முன் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி மறைந்து கொண்டிருந்தன. துயரமும் கோபமும் உள்ளத்திலே மாறிமாறிக் கொந்தளித்தது. பெருத்த ஏமாற்றம் பெருமூச்சாக எழ, அவள் மேலும் தன் நடையைத் துரிதப்படுத்தினாள். தன் இன்ப வாழ்விலே குறுக்கிட்ட பல பேர்களையும் எண்ணி மனம் வெகுண்டு, நெஞ்சு பதைக்கக் கைப்பையை இறுகப் பிடித்துக் கொண்டு வேகமாக மேலும் நடந்தாள். 'போ! போ! போ! விரைவாகப் போ!' என்று யாரோ கூவுவதுபோல் ஒரு பேரிரைச்சல் அவள் காதுகளைத் தாக்கியது. கண்களைக் கூசும் அளவுக்குப் பெரிய வெளிச்சம் அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். அதற்குப் பின்னர் இருள் - எங்கும் ஒரே அமைதி.

## 66

சிறிய நகரமாகிய ஜலங்கண்டானில் திடுக்கிடும் சம்பவங்கள் ஏற்படுவது வெகு அபூர்வம். எனவே பல தினங்கள் சென்று விட்ட போதிலும் ஸ்ரீமான் நாராயணனின் அழகிய மனைவியின் கோரமான முடிவை மக்கள்



மறக்கவில்லை. கடைத்தெருவிலும் திண்ணை ஓரத்திலும் நின்று வம்பு மூட்டையை அவிழ்த்து வாய்வலிக்கப் பேசினார்கள். பத்திரிகை வானொலி இவற்றைவிட வாய்க்கு வாய் தாவிய வம்புப் பேச்சு பலவிதக் கதைகளாக உருவெடுத்து எங்கும் பறந்தது. கேட்கச் சகிக்காத பலவும் கேட்டு கிரிதரன் உடல் கூசி மனம் நொந்து போய் விட்டான். இந்தச் சில தினங்களில் ஒரேயடியாக நாலாபுறமும் அவனைப் பற்றிக் கொண்ட பல பொறுப்புகள் அன்று அவன் உற்சாகத்தை உறிஞ்சி விட்டன. ஒரே இரவில் பல வயதைக் கடந்து விட்டவன் போல் ஏற்பட்ட தளர்ச்சி அவன் உடலைப் பாதித்தது. முகக்களை குன்றி, சோகத்தின் சுமை தாள முடியாது நடைப்பிணம் போல் அவன் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தான்.

வைத்தியர் வீட்டு முன் அறையில் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. சுவர் ஓரமாகக் கிடந்த பிரம்பு நாற்காலியில் சுந்தரேசன் அமர்ந்திருந்தார். அவரது அருமை நண்பர் வேதாந்தம் இன்னொரு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார். வைத்தியரின் தர்மபத்தினி அப்பொழுதுதான் தயாரித்த சூடான வாழைக்காய் பஜ்ஜிகளை ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்து விட்டுப் போயிருந்தாள். உபசாரத்தை எதிர்பார்க்காத வேதாந்தம் அவற்றை ஒரு கை பார்ப்பதில் முனைந்து விட்டார்.

இச்சமயம் கிரிதரன் தயங்கிக் கொண்டு உள்ளே வந்தான். 'ஏன் அழைத்தார்? என்ன சொல்லப் போகிறார்?' என ஒன்றுமே அவனுக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் மஞ்சுளாவின் உடல் நிலையைப் பற்றிப் பேச அழைத்திருப்பாரோ? அவள் பிழைக்க மாட்டாள் என்று கூறுவதற்கு இந்தப் பூர்வ பீடிகையா? கலக்கத்துடன், வைத்தியர் சுட்டிக்காட்டிய நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான். கூஜாவிலிருந்த காப்பியை டம்ளரில் நிறைத்து அவனிடம் நீட்டினார் சுந்தரேசன். உணவும் உல்லாசமும் அவனுக்குத்தான் பல நாட்களாக வேம்பாகி விட்டனவே! இருப்பினும் மறுக்காமல் வேண்டா வெறுப்பாகப் பருகிவிட்டு டம்ளரை அப்பால் வைத்தான்.

சுந்தரேசன் தமது தொண்டையைக் கனைத்துக்

கொண்டார். ''மஞ்களாவைப் பற்றியும், இன்னும் வேறு சில முக்கிய விஷயங்களைப் பற்றியும் பேசத்தான் உன்னை இங்கே அழைத்தேன்'' என்று ஆரம்பித்தார். கிரிதரன் முகத்திலே கவலை திரண்டு எழுந்தது. அச்சத்துடன் வேதாந்தத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

''கவலைப்படாதே கிரி! நான் கூறப்போகும் அனைத்தையும் நண்பர் அறிவார். உண்மையில் அவர் உதவியினால் தான் புரியாத பல புதிர்கள் எனக்குத் தெளிவாயின. பிறர் காரியங்களிலே தலையிட்டுத் தெரிந்து கொள்ள முயலும் ஒரு கெட்ட குணம் இந்த நண்பருக்கு அடிநாளையிலிருந்தே உண்டு. அது எனக்குப் பிடிக்காததுதான். எனினும் இவர் உங்கள் குடும்பத்தின் மீது காட்டிய அதீதமான அக்கறை நம் வரை நன்மை பயப்பதாக இருந்ததனால் இவரை ஒருவாறு மன்னித்து விட்டேன்'' என்று சற்றுக் கேலியாகக் கூறிவிட்டு நண்பரைப் பார்த்தார் வைத்தியர்.

அசட்டுச் சிரிப்பு சிரித்த வேதாந்தம் இன்னொரு பஜ்ஜியை விண்டு வாயில் திணித்துக் கொண்டார். வைத்தியர் எழுந்து உள்ளே சென்று, அலமாரியைத் திறந்து ஒரு பெரிய காகித உறையை எடுத்து வந்தார். அதைக் கண்ணுற்றதும் கிரிதரன் குழப்பம் இன்னும் அதிகமாயிற்று.

நெற்றிமீது துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

காகித உறையை மேஜைமீது வைத்துவிட்டு, வைத்தியர் பேசலுற்றார். 'மஞ்களாவின் உடல்நிலை சற்றே குணமாகி இருப்பதாக என் நண்பர் தகவல் அனுப்பியிருக்கிறார். ஆனால் முற்றிலும் குணமாகிவிடும் என்று நம்பிக்கை ஒன்றும் சொல்வதற்கில்லை. 'ஆர்சனிக்' எனப்படும் வெள்ளைப் பாஷாணம் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இன்னமும் அதன் கடுமை அகலவில்லை. ஒருமுறை அந்தப் பாஷாணம் உள்ளே சென்று விட்டால் உடலில் பரவித் தேங்கிவிடும். இந்த விஷத்தை நாளடைவில்தான் முறிக்க முடியும். ஆனால் இடையே உடலுக்குள் இருந்து கொண்டு இது பலவிதமான



துன்பங்களைக் கொடுக்கும். முதலில் உயிர் தப்பிவிட்டாலும், நீடித்துத் தங்கியுள்ள விஷத்தின் கொடுமையால் பலவிதக் கிளை நோய்களுக்கு ஆளாகிச் சில சமயம் நோயாளி இறந்து விடுவதும் உண்டு. எச்சரிக்க வேண்டியது என் கடமை சொல்லி விட்டேன்'' என்றார்.

''பணச் செலவைப் பார்க்காது, எந்தவிதமான சிகிச்சைகள் எல்லாம் செய்ய வேண்டுமோ, குறைவில்லாது செய்து விடுங்கள்'' என்றான் கிரிதரன்.

''உங்கள் குடும்ப நண்பன் என்ற முறையில் நெருங்கிப் பழகியதனால் ஏற்பட்ட பாசம் என்னைச் சில காரியங்கள் செய்யத் தூண்டிவிட்டன. உங்கள் குடும்பத்தின் கௌரவம் வீணே குலையாது காக்க வேண்டிய ஒரு பொறுப்பும் ஏற்பட்டு விட்டது. குற்றமில்லை என்று என் மனச்சாட்சி வலியுறுத்தியதனால் நான் சட்டத்திற்கு முரண்பாடான சில காரியங்களைக் கூடச் செய்ய முன்வந்து விட்டேன். மஞ்களாவின் உயிருக்கு அபாயம் விளைவித்த மகாபாதகத்திற்குத் தெய்வமே நீதி வழங்கி விட்டதனால், நான் பல விஷயங்களை மக்கள் காதுகளுக்கு எட்டவிடாது மறைத்து விட்டேன்.

''என் நண்பர் வேதாந்தத்திற்குப் பல துர்க்குணங்கள் இடையே ஒரு நல்ல குணமும் உண்டு. இப்பொழுது நாம் பேசுவது இந்தச் சுவர்களைத் தாண்டி அப்பால் செல்லாது. கவலைப்படாதே'' என்றார்.

வேதாந்தம் மீண்டும் அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு கூஜாவின் பக்கம் திருஷ்டியைத் திருப்பினார். கிரிதரன் மௌனமாக, துன்பத்துடன் பெருமூச்செறிந்தான். வைத்தியர் மேலே தொடர்ந்து சொல்லிக் கொண்டு போனார்.

''கார் விபத்தின் போது ஜகதீசனுடன் மஞ்களா இருந்த விவரத்தை வெளியே பரவவிட வேண்டாம் என்று எண்ணியே நான் பல காரணம் பற்றி உனக்கு முன் கூட்டியே எச்சரித்தேன். வீணாக ஒரு குற்றமும் செய்யாத அந்தப் பெண் அவன்கூட இருந்த விஷயம் ஊராருக்குத் தெரிந்தால் பல கதைகள்

புறப்படும். அவளது வருங்கால வாழ்வைக் கெடுக்க வதந்திகள் உருவாகலாம் என அஞ்சித்தான் சட்டென்று அப்படி ஒரு ஏற்பாடு செய்தேன்'' என்று சொல்லிவிட்டு அர்த்த பாவத்துடன் கிரிதரனைப் பார்த்து லேசாகப் புன்முறுவலித்தார்.

''வயதாகி விட்டதனாலோ என்னவோ, சில முக்கிய விஷயங்கள் என் கவனத்தினின்றும் தப்பி விடுகின்றன. எத்தனையோ முறை நான் பங்களாவிற்கு வந்திருக்கிறேன். பலமுறை இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒருமுறை கூட என் உள்ளத்திலே சந்தேகம் எழுந்ததில்லை. காதல் என்பது கண்களுக்குப் புலப்படாத ஒரு ஆகர்ஷண சக்திதானே! இந்தக் கிழவன் பார்வைக்கு அது தப்பி விட்டது போலும்'' எனக் கூறிவிட்டுச் சிரித்தார்.

கிரிதரன் வெட்கத்துடன் தரையைப் பார்த்தான். வைத்தியர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மீண்டும் பேச ஆரம்பித்தார். ''மஞ்சுளா அந்தக் காரில் இருந்த விஷயம் சிந்தாமணி போன்ற நமது நம்பிக்கைக்கு உகந்த விசுவாசமுள்ள வேலையாட்களுக்கு மட்டுமேதான் தெரியும். ஜகதீசன் சுய நினைவு பெற்றுப் பேச சில நாட்களாவது செல்லும். உடனேயே அவனைத் தயானந்தர் சிகிச்சை விடுதியில் அனுமதித்துவிட ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்.

''மண்டையில் ஏற்பட்ட காயம் இன்னும் அவன் புத்தியைக் குழப்பி விட்டால் அவன் பேச்சை யாரும் ஏற்க மாட்டார்கள். சித்த சுவாதீனமற்றவன். பல வருஷங்களாக என் சிகிச்சையில் இருக்கிறான் என்ற உண்மையை நான் சர்க்கார் ஆஸ்பத்திரி வைத்தியரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே அவனால் நமது ரகசியம் அம்பலமாகாது'' என்றார்.

கிரிதரன் மௌனமாக அவர் சொன்னதை ஏற்ற பாவனையில் தலையை அசைத்தான்.

''மஞ்சுளாவைக் கவனிக்கும் முன் என் நண்பர் தமது பொறுப்பை அறிவார். அதனால் அவள் உடல்நிலை பற்றி வீண் வதந்தி, யார் காதுகளுக்கும் எட்ட முடியாது. அந்தக் கவலையும் நமக்கில்லை. அவள் மீது மிக்க பாசம் கொண்டுள்ள அத்தை



குங்கம்மாள் அவளை அடிக்கடி போய்க் கவனித்துக் கொள்வாள். வீண் வதந்திகளுக்கும் குழப்பத்திற்கும் இடங்கொடுக்காமலிருக்கும் பொருட்டுச் சில காலம் அந்தப் பெண்ணை போய்ப் பாராமல் இருப்பதே ரொம்பவும் நலம்'' என்றார் வைத்தியர்.

கிரிதரனுக்கு இதற்குமேல் வாளாயிருக்க முடியவில்லை. ''இது சமயம் நீங்கள் இல்லாதிருந்தால் இதை நான் எப்படித்தான் சமாளித்திருப்பேனோ, தெரியாது. உங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்றான் குரலில் தடுமாற்றத்துடன்.

''உங்களுடன் பழகிய பாசத்தால் நான் என் கடமையைச் செய்தேன். அவ்வளவுதான்'' எனச் சூள் கொட்டினார் வைத்தியர்.

''ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. என்மேல்தான் என் சிறிய அன்னைக்கு வன்மம். எங்கள் குடும்பத்தில் சம்பந்தப்படாத அந்த மஞ்சுளா மீது ஏன் இந்த வஞ்சம்! விஷமிட்டுக் கொல்லத் திட்டமிடும் அளவுக்கு அத்தனை துவேஷத்திற்குக் காரணம் என்னவோ?''

''எனக்கு முதலில் அது புரியவில்லை. ஆண்களைவிடச் சில உண்மைகளைப் பெண்கள் எளிதில் புரிந்து கொண்டு விடுகிறார்கள். யாரும் சொல்லாமலே மஞ்சுளா மீது நீ அன்பு கொண்டிருப்பதை சௌமினி உணர்ந்து கொண்டு விட்டாள். நீ அந்த ஏழைப் பெண்ணை நேசித்ததை அவள் விரும்பவில்லை. வேலைக்காரியாக இருப்பவள் வீட்டின் வருங்கால எஜமானியாவதா என வெகுண்டாள். அழகாக இருக்கிறாளே என ஆத்திரப்பட்டாள். தன்னை விட வேறு ஒருத்தி உலகில் அழகாக இருப்பதா எனப் பொறாமையால் கொந்தளித்தாள். ஆனால் இதற்காகவெல்லாம் அந்த அம்மாள் இவ்வளவு பெரியதொரு கொடிய செயலில் ஈடுபட்டிருக்க மாட்டாள். வேறு எதற்காக இருக்கும்? எத்தனை யோசித்த போதிலும் முதலில் எனக்கும் விளங்கவில்லை.

''நேற்று முதல்நாள்தான் நான் மஞ்சுளாவைப் பார்க்கப்

போயிருந்தேன். அபாயநிலை தாண்டி, ஆள் அடையாளம் தெரிந்து பேசும் நிலையில் இருந்தாள். பேச்சுக் கொடுத்தேன். அதிலிருந்து நிகழ்ந்த பலவும் எனக்கு விளங்கின. உன் சிறிய அன்னைக்கும் சுவாமிநாதனுக்கும் இடையே நடந்த ஒரு சம்பாஷணை அரை குறையாக மஞ்சுளாவின் காதில் ஒருநாள் பட்டுவிட்டது. மஞ்சுளாவிற்கு அது என்ன என்றுகூட விவரம் தெரியாது. ஆனால் மஞ்சுளா கேட்டு விட்டாள் என்பதை உணர்ந்த சிறிய அன்னை பயந்துவிட்டாள். 'நமது ரகசியம் அறிந்த இவள் உயிருடன் இருப்பதே ஆபத்து' என்று அவளுக்குத் திகில் ஏற்பட்டு விட்டது. பரிசுகள் கொடுத்துப் பாசம் காட்டினாள். பகட்டாகப் பேசினாள். அன்பை அள்ளி வீசினாள். அத்துடன் பாலிலும், பழச்சாற்றிலும் விஷத்தையும் ஊட்டினாள். பார்வைக்கு இந்த வெள்ளைப் பாஷாணம் சர்க்கரை போலிருக்கும். பழச்சாறு போன்ற திரவத்திலே அதன் சுவையே தெரியாது கரைந்து கொள்ளும் சுபாவம் உடையது. முன்கூட்டிச் சிந்தித்துக் கொலைக்குத் துணியும் பாதகர்கள் அநேகமாக இம்மாதிரியான விஷங்களைத்தான் நாடுவது வழக்கம். பெரிய அளவில் ஒரே முறையில் கொடுத்து ஆளைச் சில மணிநேரத்தில் கொன்று விடவும் முடியும்.

''ஆனால் அது சந்தேகத்தை எழுப்பி விடுமே! எனவே, தேர்ந்த கொலைகாரர்கள் இந்த விஷத்தை தினசரி சிறிது சிறிதாக உணவில் மாதக் கணக்கில் உள்ளே ஏற்றிக் கொண்டிருப்பார்கள். பாங்கியில் போட்ட பணம்போல் விஷமும் உள்ளே குவிந்து கொண்டு தனது கொடுமையை மெல்லத் துவக்கும். அஜீரணம், பித்தம், ரத்த சோகை என்று வைத்தியர்கள்கூட ஏமாந்து விடுவார்கள். வெளிப்படும் அறிகுறிகளும் அப்படித்தான் இருக்கும். நாளடைவில் உடல் நலிந்து உணவு உட்கொள்வது நின்று, வாந்தி, மயக்கம் முதலியன ஏற்பட்டு ரத்த சோகையால் பீடிக்கப்பட்டு நோயாளி முடிவில் இறந்து விடுவான். மஞ்சுளாவிற்கு நீடித்த முறையில் இந்த விஷம் பல நாட்களாகவே கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அதற்குள் அம்மாளுக்கு அவசரம் தாள முடியவில்லை. கடைசி முறையாக அளித்த பானத்திலே கொஞ்சம் அதிகமாகவே



புகுத்தி விட்டாள். அதனால்தான் அன்று மஞ்சுளா உயிர் இழக்கும் அபாய நிலையை அடைந்து விட்டிருந்தாள்'' என்றார் சுந்தரேசன்.

கிரிதரன் இதையெல்லாம் கேட்டு மெய்சிலிர்த்துப் போய் விட்டான். அவனால் நம்பவே முடியவில்லை. அவன் சிறிய அன்னை அத்தனை கொடிய பாதகியா?

வைத்தியர் மேலே பேசிக் கொண்டே போனார். ஜகதீசன் அன்று இரவு மஞ்சுளாவிடம் கூறிய அத்தனை விஷயங்களையும் அவர் தம்முடைய விரிவுரையுடன் சேர்த்துக் கோவையாகச் சொன்னதைக் கேட்டு அவன் நடுநடுங்கிப் போய் விட்டான்.

எத்தனை பொறாமை, என்ன திட்டங்கள்! எத்தனை வஞ்சம், என்ன கொடுமை என அதிசயித்து ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

''சந்திராவின் கால் ஊனமானதற்கும், அவள் இளவயதிலே மரணமடைய நேர்ந்ததற்கும் தொடர்ந்து அவனைப் பலமுறை தாக்க முயன்றதற்கும் இன்னும் நடந்த பல் சம்பவத்திற்கும் நான் ஜகதீசனைக் குற்றம் கூறமுடியாது. அவனே சித்தம் பேதலித்தவன். உணர்ச்சியைத் தூண்டி விட்டால் மிருகமாகி விடுவான். கொலை புரிவான் என்ற உண்மையை உணர்ந்து, அவன்மீது பாசம் காட்டுவதாகப் பாசாங்கு செய்து, தன் இஷ்டப்படி ஆட்டி வைத்தாள் உன் சிறிய அன்னை. அவள் மேல்தான் நாம் குற்றம் காண வேண்டும். ஆனால் இனி அதற்கும் இடமில்லை. இறந்தவர்கள் மீது தொடர்ந்து துவேஷம் பாராட்டுவது மனிதத் தன்மையின் பண்பு அல்ல'' என்றார்.

வியர்த்து விறுவிறுத்துப் போய் உட்கார்ந்து விட்ட கிரிதரன் முடிவில் பேசுவதற்கு வாயைத் திறந்தான்.

''அவர்களுடைய தோற்றத்திற்கு இது ஒவ்வாத செய்கைதான். எல்லாம் கதைபோல் இருக்கிறது. அதுவும் நடக்க முடியாத கதைபோல் இருக்கிறது'' என்றான் வியப்புடன்.

''உண்மையானது கதையை விட ஆச்சரியமானது. எனினும், அந்த அம்மாளுக்கு இது ஒன்றும் புதியதல்ல. இதே கலையில் கைதேர்ந்து பழகிய புள்ளி அவள். அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. மற்ற விஷயங்களை இனி நண்பர் வேதாந்தம் சொல்வார்'' என்று கூறிவிட்டு அந்தக் காகித உறையை அவன் அருகே நகர்த்தினார் வைத்தியர்.

நடுங்கும் விரல்களுடன் அதை எடுத்து, உள்ளிருந்த ஒரு கத்தைக் காகிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அவை எல்லாம் பத்திரிகைகளிலிருந்து கத்தரித்து எடுத்து, தேதி வாரியாகத் தொகுத்து வைக்கப்பட்டிருந்த குறிப்புக்களாக இருந்தன. தன் சிறிய அன்னையின் புகைப்படத்தையும், சுவாமிநாதனது புகைப்படத்தையும் அங்கங்கே இடையே கண்டதும் அவன் மிகவும் திடுக்கிட்டுப் போய் விட்டான். ''இதை பிற்பாடு விவரமாகப் படியுங்கள். நான் சொல்வது எல்லாம் உண்மை என்று உணர்வீர்கள்'' என்று ஆரம்பித்தார், இதுவரை மௌனமாக இருந்த வேதாந்தம்.

''இந்த ஊருக்கு வந்த புதிதில் முதன் முதலாக சௌமினியம்மாளை நான் இந்த டாக்டர் வீட்டில்தான் சந்தித்தேன். அந்த முகம் எங்கேயோ பார்த்த முகமாக இருக்கவே, என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. அதற்குப் பின்னர் ஒருநாள் திடீரென்று அந்தப்பயல் சுவாமிநாதனைச் சந்தித்தேன். அவன் முகம் எனக்கு மிகவும் தெரிந்ததாக இருக்கவே எனக்கு சந்தேகம் வலுக்கத் தொடங்கியது. சௌமினியம்மாளையும் அவனையும் சேர்த்தாப்போல் ஒரு ஹோட்டலில் இன்னொரு சமயம் சந்தித்தபோது எனக்குச் சந்தேகம் வலுக்கத் தொடங்கி விட்டது.'' எனக்குக் கைரேகை பார்க்கத் தெரியும் என்று சொல்லி, அந்தப் பயலின் கையை பார்த்தேன். வலது கையின் மணிக்கட்டின் மேலிருந்த தழும்பு என் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துவிட்டது.

''இவர்கள் இருவரும் எனக்கு முன்பு தெரிந்தவர்கள்தான். என் சந்தேகத்தை டாக்டரிடம் தெரிவித்த பொழுது அதற்கு ஆதாரங்கள் தேவை என்றார். எனக்கு ஒரு அசட்டு வழக்கம் உண்டு. பத்திரிக்கைகளில் வரும் திடுக்கிடும் சம்பவங்களைப் பார்த்தால் உடனே அவற்றை வெட்டி எடுத்துப் பத்திரமாக வைத்திருப்பேன். பின்னால் எங்கேயாவது கொலை கொள்ளைகளைப் பற்றிப் பேசும்போது மேற்கோள் காட்டி பேச எனக்கு இவை உதவியாக இருப்பதுண்டு.



''நான் சொல்லப் போகும் இந்தச் சம்பவம் சுமார் பதினாறு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அப்பொழுது நான் மலேசியாவில், கோலாலம்பூரில் இருந்தேன். இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற ஒரு செட்டியார் அங்கே புத்தக கடை வைத்திருந்தார். விற்பனை ஆளாக அவரிடம் நான் வேலைக்கு அமர்ந்திருந்தேன். அச்சமயம் அங்கே காசிநாதன் என்ற ஒரு பிரபல மர வியாபாரி இருந்தார். அவர் மிகவும் பணக்காரர். அவரிடம்தான் இந்த சுவாமிநாதன் 'நாதன்' என்ற சுருக்கமான பெயரில் கார் டிரைவராக இருந்து வந்தான். நாதனும், அவனது அத்தை மகள் மல்லிகாவும் தமிழ் நாட்டிலிருந்து வந்து அங்கே குடியேறியிருந்தார்கள். இருவரும் அத்தை, அம்மான் சேய் உறவு பாராட்டிய போதிலும், அந்த உறவைக் குறித்துப் பலர் பலவிதமாகப் பேசினார்கள்.

''சௌமினியம்மாளின் திருநாமம் அப்பொழுது மல்லிகாவாக இருந்தது. இன்னும் இளவயது அல்லவா? பார்க்கப் பேரெழில் படைத்தவளாகத்தான் இருந்தாள். இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒன்றில் குமாஸ்தாவாகப் பணி புரிந்து வந்த மல்லிகாவை இந்தக் காசிநாதன் காண நேர்ந்தது. கண்டதும் மோகம் கொண்டு விட்டார். ஆனால் ஏற்கனவே, அவர் விவாகமான மனிதர். தமது கார் டிரைவரின் உறவுக் காரியாக மல்லிகா அமர்ந்து விடவே ஆசாமிக்கு எல்லாம் சுலபமாக இருந்தது. இருவருக்குமிடையே ஏற்பட்ட கள்ள நட்பு முதல் வருஷத்தைத் தாண்டி விட்டது.

''காசி நாதனுடைய காசின் மீது ஆசை கொண்ட டிரைவர் நாதனும், மல்லிகாவும் தீவிரமாக யோசித்தனர். மோக வெறியில் மயங்கிக் கிடந்த காசிநாதன் காதலியின் பேச்சிற்கு தலை அசைத்து விட்டான். நீண்ட நாட்களாக நோயாளியாகப் படுக்கையில் கிடந்த அவன் மனைவிக்குச் சிறிது சிறிதாக வெள்ளைப் பாஷாணம் பரிமாறப்பட்டது. ஆறுமாத காலம்

சென்றது. ஒருநாள் திடீரென்று காசிநாதன் மனைவி இறந்து விட்டாள். அப்போது வெளியூரிலிருந்து திரும்பி வந்த கணவன், மரணச் செய்தியைக் கேட்டதும் துடித்து அழுதான். புரண்டான். வேஷம் போட்டான். குடும்ப வைத்தியருக்குச் சந்தேகம் பிறந்தது. உறவினர்களுக்கும் சந்தேகம். விஷயம் போலீஸிற்கு எட்டவே, பிரேதப் பரிசோதனை நடந்தது. கணவனுக்கும் கூட இருந்த சதிகாரர்களுக்கும் கை விலங்குகள் மாட்டப்பட்டன. காசிநாதனிடம் பணமிருந்தது; பிரபல வக்கீல்கள் வாதித்தனர். ஆனால் நியாயத்தின் கண்களைக் காசினால் மூட முடியவில்லை. மனைவியை விஷமிட்டுக் கொன்றதற்காக அந்தக் கொடியவன் மரண தண்டனையை அடைந்தான். சுவாமி நாதனுக்கு எட்டு வருஷம் கடுங்காவல் அளித்தார்கள். மல்லிகாவிற்கு மூன்று வருஷங்கள் மட்டும் சிறைவாசம்.

''அம்மாஞ்சிக்கு முன்னால் சிறையிலிருந்து வெளிவந்த மல்லிகா, சௌமினி என்ற பெயருடன் இந்த ஊருக்கு வந்து விட்டாள். உன் தந்தை அவள் அழகைக்கண்டு மயங்கி ஏமாந்து படுகுழியில் விழுந்து விட்டார். சுவாமிநாதன் பிற்பாடு வெளிவந்தவன், எப்படியோ அத்தை மகளைத் தேடிப்பிடித்து விட்டிருக்கிறான். செல்வமும், சீருமாக இருப்பவள் பழைய சம்பவங்களை மறைக்க முயற்சிப்பது நியாயந்தானே? உண்மைகளைக் கணவனிடம் சொல்லி விடுவேன் எனப் பயமுறுத்தி, அவளிடம் ஏராளமாகப் பணம் வாங்கியிருக்கிறான். பணம் பிடுங்கித் தின்னத்தான் அவன் இங்கே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். சௌமினியிடம் பறிக்காவிடில் அவனுக்குக் காசு ஏது, பணமேது? அவனது காரும் படாடோபமான உணவும், அங்க வஸ்திரமும், கறுப்புக் கண்ணாடியும் ஆனந்த நிலையத்திலிருந்து வந்தவைதான்.

''அவன்தான் சுவாமிநாதன் என்பதை கையில் காணப்பட்ட தழும்பு மூலம் நான் ஊர்ஜிதம் செய்து கொண்டேன். அந்தக் கொலை கேஸில் சர்க்கார் தரப்பு வக்கீலுக்குக் கொலைகாரனை நிரூபிக்க உதவியது அவன் கைத்தழும்புதான்'' என்றார் ஒரே மூச்சில். ரத்தம் உறைந்து,



உடல் சில்லிட்டு, உணர்வெல்லாம் மங்கிவிட்ட ஒரு பயங்கர உணர்ச்சியில் கிரிதரன் அப்படியே உட்கார்ந்து விட்டிருந்தான். ''இப்பொழுது புரிகிறது எனக்கு. திடீர் திடீர் என்று என் சிறிய அன்னைக்குப் பணம் பல ஆயிரங்கள் தேவையாக இருந்ததன் மர்மம்.

''நேற்று துவாரகராம் சேட் கடையிலிருந்து வந்தது ஒரு கடிதம். என் சிறிய அன்னை விற்கக் கொடுத்த சில நகைகளைப் பற்றி எழுந்த சந்தேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார் சேட்டு. எனக்குப் புரியாததனால் பிறகு விசாரிக்கலாம் என ஒருபுறம் தள்ளி வைத்திருந்தேன்'' என்று மெல்லிய குரலில் கூறிவிட்டு முகத்தைக் கவிழ்த்துக் கொண்டான். இந்த மன அதிர்ச்சியை அவனால் சகிக்க முடியவில்லை.

''ஆதாரங்கள் என் கையில் கிட்டியதும் நான் மிகவும் தவித்துப் போய்விட்டேன். என் நண்பரின் வாழ்க்கையிலேயே இந்தப் பிசாசு குறுக்கிட்டு விட்டதே என்ற மனக்கொதிப்பு எழுந்தது எனக்கு. பழைய கொலையாளிகள் இருவரும் மீண்டும் ஒன்று சேர்ந்து விட்டார்களே! பணத்திற்காக இன்னும் ஏதாவது புதுத்திட்டம் வகுத்து விடுவார்களோ. சந்திராவுக்கோ, உனக்கோ, உன் தந்தைக்கோ இந்தப் பழிகாரி தீங்கு செய்து விடுவாளோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது.

''உன்னை அழைத்து இவற்றையெல்லாம் காட்டி விவரங்களைச் சொல்லி எச்சரிக்கவே விரும்பினேன். அதற்குள் சந்திராவின் உடல்நிலை கேவலமாகி விட்டது. பாவம், போய் விட்டாள். அந்தத் துன்பம் போதாதா? இந்த வேதனை வேறே உனக்கேன் என எண்ணி வேறு ஒரு காரியம் செய்தேன். அன்னபூரணியம்மாளிடம் என் சந்தேகத்தைத் தெளிவாகக் கூறி, உங்களையும், நீங்கள் உட்கொள்ளும் உணவையும் மிகக் கருத்துடன் கவனிக்க ஏற்பாடு செய்தேன். பாவம், அந்த அம்மாள் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றினார்கள். ஆனால் நான்தான் ஏமாந்து போய் விட்டேன்'' என்று பெருமூச்செறிந்தார் வைத்தியர் சுந்தரேசன்.

''இவற்றை இனி நான் பார்ப்பதற்கு என்னதான்

இருக்கிறது? பாராமல் இருப்பதே ரொம்ப மேல்'' என்று வெறுப்புடன் கூறிவிட்டு, பத்திரிகை துண்டுகளை உறையில் போட்டு மூடினான். பொறுமையின் உரு எனத் திகழ்ந்த புனிதமான அவனது தாயின் பாதம் பட்ட அந்த ஆனந்த நிலையத்திலே காசுக்காக கற்பையே விலை பேசிய கொலைகாரி, சண்டாளி சௌமினி, சிற்றன்னை என்னும் ஸ்தானத்தில் வந்து உலவினாளே! என்று எண்ணி எண்ணி ஏங்கி உடல் குன்றிப் போய்விட்டான். துக்கம் நெஞ்சைப் பிளந்தது. இருவருக்கும் தன் நன்றியைத் தெரிவிக்க என்னென்னவோ சொல்ல எண்ணினான். ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

'மிக்க நன்றி' என்று மட்டும் கூறிவிட்டு எழுந்திருந்தான். அவனால் மேலே பேச முடியவில்லை.

''இந்தக் காகித உறை என்னிடம் இருக்கட்டும். இதை உன் தந்தையிடம் காட்ட வேண்டும். மறுத்துப் பேசாதே. அவர் உடம்பும் உள்ளமும் இதைத் தாள முடியும்; பயப்படாதே ஒரு விதத்தில் என் நண்பருக்கு இந்த மன அதிர்ச்சி நன்மையை உண்டாக்கினாலும் உண்டாக்கும். உண்மையைப் போதித்து அவரது அறியாமையை அகற்றும். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்'' என்றார் வைத்தியர்.

## 67

கிரிதரன் வைத்தியர் வீட்டை விட்டுப் போகக் கிளம்பியவன் சற்றுத் தயங்கி நின்றான். ''நீ இந்தக் கடிதங்களை சில நாட்கள் என்வசம் வைத்திருப்பது நலம். சுவாமிநாதன் திடீரென்று இந்த ஊரிலிருந்து மறைந்து விட்டிருந்தான். நமது நண்பர் அதைப்பற்றி அறிந்து உண்மையை எனக்கு விளக்கினார். பணம் கேட்டு சதா அவன் செய்த துன்பம் தாளாது, ஜகதீசனை ஏவி விட்டு விட்டாள் சௌமினி அவன்மீது. ஆனால் அவன் சாகவில்லை என்றாலும், அவன் ஒருபொழுதும் வழக்குத் தொடர மாட்டான். ஏனெனில் போலீசு, கோர்ட்டு இவை அவனுக்குப் பிடிக்காத விஷயங்கள். உன்னிடம் ஒருநாள் கட்டாயம் வருவான். அவன் வசமும் கடந்த சம்பவங்கள் பற்றி ஏதேனும் ஆதாரம் இருக்கலாம். அவற்றைக் காட்டி உன்னைப் பயமுறுத்திப் பணம் பறிக்க முயலுவான். 'உன்னிடம் மட்டும் என்ன, என்னிடமும் இவை இருக்கின்றன! இதோ பார்! போலீசை அழைக்கட்டுமா?' என்று கேட்டுவிட்டு, இந்தப் பத்திரிகைத் துண்டுகளை அவன்முன் போடு. ஆசாமி பயந்து தங்கக் கம்பியாகி விடுவான்'' என்றார்.

''அந்தக் கயவனை நாம் சும்மா விட்டு விடுவதா?'' என்று கிரிதரன் பற்களைக் கடித்தான்.

''ஜகதீசனிடம் பட்ட உதை அவனுக்கு ஏழேழு ஜன்மத்திற்கும் போதும். முன்பே சொன்னேன். நீதியின் கைகள் நீண்டவை என்று. ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் இவனும் அதனிடம் சிக்கி விடுவான். அதனால் நீ வீணான முயற்சிகளில் இறங்காதே. நான் சொல்வதைக் கேள். போ, இனி நீ நிம்மதியாகத் தூங்கலாம்'' என்றார் வைத்தியர்.

வாசல் வரை வந்து அன்புடன் ஆறுதல் பல சொல்லி வழிவிட்டார் வைத்தியர். வீட்டின் தோட்டத்தை அடைந்த கிரிதரன், நிமிர்ந்து ஒருமுறை ஆனந்த நிலையத்தைப் பார்த்தான். சகிக்க முடியாத அருவருப்பில் அவன் உடல் சிலிர்த்தது. பங்களாவின் உள்ளே நுழையவும் அவன் கால்கள் கூசின.

சித்திரை மாதத்தின் துவக்கம். இலை தெரியாது தோட்டத்து வேப்ப மரங்கள் இரண்டையும் மலர்கள் மூடிக் கொண்டிருந்தன. காற்றின் அசைவின் போதெல்லாம் மலரின் மணம் கும்மென்று கூடத்திற்குள் ஓடிவந்து மிதந்தது. அந்த வாசனையின் தனி இனிமை நலிந்து போன உடலுக்கு இதமாக இருக்கவே, கண்களை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் அப்படியே சாய்ந்து கொண்டிருந்தாள் மஞ்சுளா.

ஒரு வருஷ காலம் விரைவாகச் சென்று ஓடி மறைந்து விட்டது. பல மாதங்களாக உயிருக்குப் போராடி குணமடைந்து

விட்டிருந்த அவள், சில நாட்களுக்கு முன்னர்தான் சிகிச்சை விடுதியிலிருந்து வெளி வந்திருந்தாள். வந்த சில தினங்களிலேயே ஆரோக்கியத்தை அவள் திரும்ப அடைந்துவிட வேண்டும் என்ற ஆவல், கங்கம்மாளுக்கு ஏற்பட்டது. பால், பழங்கள், பத்திய உணவு வகைகள் இவற்றை மாறி மாறி ஊட்டி, அன்பினால் அவளைத் திணறச் செய்து விட்டாள். பிழைத்தெழுந்திருந்தால் பாலாம்பிகைக்குப் பால் அபிஷேகம் செய்வதாக அந்த அம்மாள், வேண்டிக் கொண்டிருந்தாள்.

எனவே, வெயில் உச்சியில் ஏறுமுன் இருவரும் அன்று காலை கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையைச் செலுத்திவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்து கொஞ்ச நேரந்தான் சென்றிருந்தது. பகல் போஜனத்தை முடித்துக் கொண்டதும், அத்திம்பேர் சுந்தரேசன் ஒரு காரியமாக வெளியே புறப்பட்டுச் சென்று விட்டார். கூடத்துத் தரைமீது உட்கார்ந்து கொண்டு, கிழிந்து போன பழைய துணிகளைத் தைத்து ஒழுங்கு படுத்துவதில் முனைந்திருந்தாள் கங்கம்மாள்.

நடுவே ஒருமுறை நிமிர்ந்து கண்களை மூடிக்கிடந்த மஞ்சுளாவை உற்றுப் பார்த்தாள் அவள். இடைவரை நீண்டு அடர்ந்து தொங்கிய அந்தப் பெண்ணின் கூந்தல் நோயின் கொடுமையில் உதிர்ந்து பாதியாகி விட்டிருந்தது. தங்கச் சிலைபோல இருந்த அந்த மேனியின் பொலிவு மங்கி விட்டிருந்தது. எனினும் அவள் அஞ்சிய அளவு மஞ்சுளாவின் அழகு பாழ்பட்டுப் போய்விட வில்லை. நலிந்த உடல் இளைத்து நிறம் குன்றிவிட்டிருந்த போதிலும், என்றும் அந்த முகத்திலே பரவி நின்ற சாந்தம் மறைந்துவிட வில்லை.

கங்கம்மாள் ஆரம்பத்திலிருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் வந்தாள். வைத்தியர் இட்ட கட்டளை ஒரு புறமிருக்க, மஞ்சுளா மீது அவள் கொண்டிருந்த மட்டற்ற அன்பின் காரணமாக இந்த ஒரு வருஷத்தில் அவள் சிகிச்சை விடுதிக்கு நடந்த நடை கொஞ்ச நஞ்சமல்ல. நோயின் கடுமையினால் சருமம் கருத்து முகம் முழுதும் வீங்கிப் புண்ணாகி, தோல் வெந்து போய் விட்ட கோரத்தைக் கண்டு



கங்கம்மாள் கலங்கிப் போய் விட்டாள். 'இந்த ஏழைப் பெண்ணுக்கு அழகு மட்டும் எதற்கு என்று விதி சதி செய்கிறதா? பிழைத்து எழுந்தால் கூடப் பிரயோசனம் இல்லாத அளவு இவள் குரூபியாகி விடுவாளோ? உருக்குலைந்து போய் விடுவாளோ?' என எண்ணி, கவலையினால் உள்ளூர மிகவும் தவித்தும் போய் விட்டாள். நல்ல வேளையாக அப்படியெல்லாம் ஒன்றும் நிகழவில்லை. படிப்படியாக எல்லாம் நாளடைவில் குணமடைந்து விட்டது.

இன்னும் சில மாதங்கள் தன்னுடனேயே வைத்துக் கொண்டு நன்றாகப் போஷித்துக் கவனித்தால், பழைய நிலையை அடைந்து விடுவாள் என்ற நம்பிக்கை துளிர்த்தது அவள் உள்ளத்தில். மஞ்சுளா என்ன பிடிவாதம் செய்தாலும் சரி, கிரிதரன் வற்புறுத்தினாலும் சரி, கேட்கப் போவதில்லை. இந்த நிலையில் அந்தப் பெண்ணை வெளியே அனுப்ப முடியாது என்று மறுத்துவிட வேண்டும். வருஷங்கள் இரண்டு ஆனாலும் பரவாயில்லை. மஞ்சுளாவைத் தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் தீர்மானித்திருந்தாள். கணவரும் அதை ஆமோதித்திருந்தார்.

தையல் வேலையில் அலுப்பு ஏற்பட்டதும் துணிகளை மடித்து ஓலைப் பெட்டியில் அடுக்கி மூடி சுவர் ஓரமாக அதை நகர்த்திவிட்டு எழுந்திருந்தாள்.

என் ஜன்மம் இப்படி ஒரு இடத்தில் நிலை கொள்ளாது என்று தனக்குள் சொல்லிவிட்டு, லேசாக சிரித்துக் கொண்டு சோம்பலை உதறினாள்.

''சரத்துணியை அப்படியே கட்டி வைக்காதே. காய வைத்துக் கொள்! கதவைச் சாத்திக் கொண்டு நீ கொஞ்சம் தூங்கு. எனக்கு அடுத்த தெருவில் பங்கஜத்தின் வீட்டிற்கு அவசியம் போக வேண்டும். முறுக்குச் சுற்றிக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்து ஒரு வாரமாகி விட்டது'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்.

மஞ்சுளாவிற்கு இந்த மாதிரியான தனிமை மிகவும் இனிமையாக இருந்தது. இதை அவள் பெரிதும் வேண்டினாள்.

என்றே சொல்ல வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்னர் அவள் பெயருக்குக் கிரிதரனிடமிருந்து வந்த கடிதத்தை அவள் எடுத்துப் பலமுறை வாசித்து மகிழ விரும்பினாள். கங்கம்மாள் முன்னால் அதை மீண்டும் எடுத்து வாசித்துப் பார்க்க அவளுக்கு வெட்கம். இந்த ஒரு வருஷ காலத்தில் அவள் கிரிதரனை நான்கு தடவைகளுக்கு மேல் பார்க்கவேயில்லை. அந்தச் சிலமுறை அவன் வந்த பொழுது ஜுர வேகத்தில் அவள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அவன் வந்ததோ, பேசியதோ ஒன்றுமே அவளுக்கு நினைவு இல்லை. எல்லாம் கனவுபோல் இருந்தது. காய்ச்சல் குறைந்து அவள் எழுந்து உட்காரும் நிலையை அடைந்த சமயம், அவள் பலமுறை அவனைக் காண நெஞ்சம் விழைந்தாள். ஆனால் அந்த ஆசை நிறைவேறக் கூடியதாக இருக்கவில்லை. அதற்குப் பின்னர் அவளைக் காண அவன் வரவேயில்லை. ஆனால் மாதத்திற்கு ஒன்று அல்லது இருமுறை அவனிடமிருந்து அவள் உடல்நிலையை விசாரித்துக் கடிதங்கள் மட்டும் வந்தன. முகவரியிலிருந்து அவன் குடும்பத்துடன் சென்னைக்கு அருகில் மதுராந்தகத்திலே வசிக்கிறான் என்பது தெரிந்தது. ஏன் இந்த இடமாற்றம்? அதை அறிய ஆவல் இருந்த போதிலும், அதைப்பற்றி கங்கம்மாளிடம் அவள் கேட்கவில்லை. அந்த அம்மாளும் வலிய ஒன்றும் சொல்லவில்லை.

அமைதியில்லாது சஞ்சலத்திலே தவித்த அவளுக்கு சொல்லொணா மகிழ்ச்சியைத் தந்தது அந்த நீண்ட கடிதம். இத்தனை நாட்கள் இல்லாத புதுமையாகப் பல பக்கங்கள் கொண்ட பெரிய கடிதமாக இருந்தது. இன்பம் தாள முடியாது இரண்டாவது முறையும் படித்தாள். மூன்றாவது தடவையும் வாசித்தாள். கங்கம்மாள் உறங்கிய சமயம் பார்த்து, இரவில் விளக்கைத் தூண்டிவிட்டுப் பலமுறைகள் படித்து மகிழ்ந்தாள். படிக்கப் படிக்க உணர்ச்சி வெள்ளத்திலே உடல் சிலிர்த்துப் போயிற்று. உற்சாகத்திலே குமிழிட்டுக் கூத்தாடியது உள்ளம். அந்த மகிழ்ச்சி முகத்திலே படர்ந்து பரவி நின்றது. இத்தனை காலமும் பட்ட துன்பம் எல்லாம் கதிரவன் முன் பனிப்படலமாகக் கரைந்தோடி விட்டது. சாய்வு நாற்காலியில்



நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு கடிதத்தைப் பிரித்தாள்.

''அன்பு மிக்க என் மஞ்சுளா!

உரிமையோடு இவ்வாறு அழைப்பதை மறுக்கமாட்டாய் என நம்புகிறேன். நேற்றுத்தான் சந்திராவின் சிரார்த்தம். என்னால் ராத்திரி முழுவதும் தூங்கவே முடியவில்லை. கடந்து போன இன்ப, துன்ப நினைவுகளால் அலைபாய்ந்த என் சிந்தனை, எங்கெங்கேயோ வட்டமிட்டு உழன்று கொண்டிருந்தது. எவ்வளவு விரைவில் காலம் ஓடி விட்டது பார்த்தாயா? எல்லாம் இப்பொழுது தான் நடந்தது போலிருக்கிறது. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. எனவே நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

சந்திராவின் கடைசி விருப்பமும் என் ஆசையும் ஒன்று என்பதனால் துணிவுடன் இதை எழுதுகிறேன். அன்பே! உன்னை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என் வாழ்க்கையில் புதிய பாதையை வகுத்து என் உள்ளத்திலே இன்பம் மீண்டும் பெருக, எங்கள் குடும்பத்தில் அமைதி நிலவ, உன்னை நான் என் அருமை மனைவியாக ஏற்க மிகவும் ஆசைப்படுகிறேன். உன்னை அன்று கண்டது முதல் என் உள்ளத்திலே ஏற்பட்ட அன்பு மேலும் பெருகி வளர்ந்து கொண்டு போனதே ஒழியச் சிறிதும் குறைந்ததில்லை. உன் வாயால் உனது இனிய மொழிகளால் 'சம்மதம்' என்று கேட்கும் பாக்கியம் எனக்குக் கிட்டுமா?

வைத்தியர் சுந்தரேசன், வைத்தியர் என்பதுடன் இல்லாமல் மிகவும் கைதேர்ந்த மனோதத்துவ ஞானியும் கூட. நோயின் கடுமையினால் நீ வேதனைப்படுகையில் உன்னைக் கண்டு பேசிவிட்டு வரும்படி அவர் சில முறைகள் என்னைச் சிகிச்சை விடுதிக்கு ஏவியதும் உண்டு. உன்பால் நான் கொண்டுள்ள அன்பு தூய்மையானதா என்று அவர் என்னை பரிசோதித்தார் என்று நான் ஊகிக்கிறேன்.

நோய், வறுமை, வயோதிகம் இவற்றைக் கண்டு பறந்தோடிவிடும் பலஹீனமான உணர்ச்சி அல்ல என் காதல்.

இவற்றிற்கும் அப்பால் மரணத்தையும் கண்டு அஞ்சாதது என் காதல். இதன் உண்மையைப் புரிந்து கொண்டதனால் வைத்தியர் சுந்தரேசன், நாம் இருவரும் விவாகத்தினால் ஒன்று படுவதைப் பெரிதும் வரவேற்கிறார்.

எங்கள் குடும்பத்தின் பொறாமைக் கனலில் சிக்குண்டு நீ என் பொருட்டு எத்தனையோ துன்பங்களுக்கு இலக்கானாய். அவற்றை எண்ணி நான் வருந்தாத நாட்கள் இல்லை. உன் மேன்மையான குணங்களை எண்ணிப் பெருமிதம் அடையாத நேரமே இல்லை. பல மைல்களுக்கு அப்பால் பார்க்காத தூரத்திலே நீ வசித்த போதிலும், என் உள்ளமும் உணர்ச்சிகளும் உன்னிடமேதான் தங்கிவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

ஜலங்கொண்டானிலிருந்து நாங்கள் மதுராந்தகத்திற்கு வந்து ஆறுமாதங்களுக்கு மேலாகின்றன. பிற்பாடு நேரில் சொல்லலாம் என்றுதான் முந்தைய கடிதங்களில் இதைப்பற்றி எழுதவேயில்லை. உடற்கவர்ச்சியால் கட்டுண்ட அன்பைவிடப் பிரிவினால் ஏற்பட்ட இந்தப்பாசம் மிகவும் தெய்வீகத் தன்மையுடையது என்ற உண்மையை நான் இந்தச் சில மாதங்களில் உணர்ந்து கொண்டேன். இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது!

நிற்க; சில மாதங்களில் எங்கள் வாழ்வில் ஏற்பட்ட சில மாறுதல்கள் பற்றி நான் சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். துன்பமான நினைவுகளால் சூழப்பட்டு, பொறாமை களமாக இருந்த ஆனந்த நிலையம், எனக்கும் என் தந்தைக்கும் துரியோதனன் சமைத்த அரக்கு மாளிகை போல் மிக்க வெறுப்பையும் வேதனையையும் கொடுத்தது.

சில காலமாக எங்கள் வியாபாரம் படுமோசமாகிக் கொண்டு வந்ததனால் நாலாபுறமும் கடன்சுமை, சமாளிக்க முடியாத பொருளாதார நெருக்கடி. எனவே நானும் அப்பாவும் கூடி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். மீதியிருந்த எங்கள் வியாபாரத்தையும், வீட்டையும், ஏனைய பொருளையும் வந்த விலைக்கு விற்று, கடன்களைத்



தீர்த்தோம். எஞ்சியிருந்ததை எடுத்துக் கொண்டு பட்டணம் புறப்பட்டு விட்டோம்.

கார், பங்களா வேலையாட்கள் எல்லாவிதமான ஆடம்பரங்களும் அகன்று விட்டன. கையிலிருந்த பணத்தைக் கூட்டாகப் போட்டு என் நண்பன் ஒருவனுடன் மதுராந்தகத்திலே ஒரு புது வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறேன். தற்காலிகமாக வாடகை வீட்டில்தான் குடியிருக்கிறோம். அப்பாவின் உடல்நிலை அப்படியேதான் இருக்கிறது. காசிக்குப் போக மிகவும் ஆவலாக உள்ள பெரியம்மா, எனக்கு மனைவியாக வருபவளிடம் வீட்டின் பொறுப்பை ஒப்படைத்து விட்டுப் போவதற்காக வயதையும் உடல் தளர்வையும் பாராது சிரமப்பட்டு எங்கள் குடும்பத்தை நிர்வகித்து வருகிறார்கள்.

வேலையினின்றும் வெளியேறிய அம்பிப் பயலை அதிர்ஷ்டம் வந்து பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சில நாட்களில் சினிமா உலகில் அவனுக்குப் பின்னணிப் பாடகன் என்ற புகழ் குபீர் என்று வந்து சேர்ந்து விட்டது. போகட்டும். அவன் நன்றாக இருந்தால் நமக்குத் திருப்தி தான். கிட்டா எவ்வளவு சொன்னாலும் போக மாட்டேன் என்று, மிகவும் குறைந்த ஊதியத்தில் சமையற்கட்டை இன்னமும் பிடித்துக் கொண்டிருக்கிறார். என் கல்யாணத்திற்கு அவரது கை வரிசையைக் காட்ட வேண்டுமாம். சிந்தாமணியும் போக மறுத்து நம்முடனேயே தங்கி விட்டார். ஓட்டுவதற்குக் கார் இல்லாவிடினும், கடைக்குப் போவதிலிருந்து தோட்டத்தைக் கொத்துவதுவரை அவர் எதற்கும் சளைப்பதில்லை; ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் பேரன் பிறந்த பிறகுதான் எனக்கு ஓய்வு என்று பரிகாசம் வேறு செய்கிறார். துணிவுடன் வஜ்ரவேலு ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை முதலாளியாக மாறி விட்டிருக்கிறான்!

ஜகதீசன் தற்சமயம் தயானந்தர் சிகிச்சை விடுதியில்தான் இருக்கிறான். முன்போல் அவனிடம் அந்த மூர்க்க குணம் இல்லையென்றாலும், சித்தம் அதிகம் கலங்கி

விட்டிருக்கிறது. குணமாகப் பல ஆண்டுகள் ஆகுமாம். எனினும் சிகிச்சைக்கும், அவனது சௌகரியத்திற்கும் வேண்டிய பொருட்செலவை நான் மனமுவந்து ஏற்றுக் கொண்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டேன். அது என் கடமை. ஜகதீசனது சித்தப் பிரமை அவனது தாய் வழியில் வந்த நோய் என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். செல்வமும் அந்தஸ்தும் நம்மை இனிப் பிரிக்க முடியாது. அப்பாவுக்கும் இதில் பூரண சம்மதமே. எனவே நான் எதையும் ஒளிக்கவில்லை. நான் ஆரம்பித்துள்ள வியாபாரம் பெருகி, நாம் வருங்காலத்திலே சுகமடைவோம் என்ற நம்பிக்கைதான் என் ஆஸ்தி. என் அன்புதான் உனக்கு நான் அளிக்கும் கல்யாணப்பரிசு, மற்றவை நேரில்.

உன் அன்பன்
கிரிதரன்''

பலமுறை படித்தாள் மஞ்சுளா. உணர்ச்சி வெள்ளத்திலே கண்களை நீர் மறைக்க, அந்தக் கடிதத்தை மார்புடன் இறுக அணைத்துக் கொண்டு சந்தோஷம் தாள முடியாது அழுது விட்டாள்.

சற்று நேரம் சென்றது. வாயிற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். கடிதத்தை மடித்து உறைக்குள் திணித்து, அலமாரியில் பத்திரமாக வைத்துவிட்டுக் கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு ஓடிக் கதவைத் திறந்தாள்.

உள்ளே வந்து நின்றான் கிரிதரன். அவனுக்கு உடனே பேச முடியவில்லை. முகம் சிவந்து, நெஞ்சு படபடக்க, பேசாமல் நின்று கொண்டிருந்தான். உணர்ச்சியில் ஊசலாடிக் கொண்டிருந்த மஞ்சுளாவும் ஒரு கணநேரம் ஊமையாக நின்றாள்.

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்ட கிரிதரன், சங்கோஜத்துடன் புன்முறுவலித்து விட்டு ''வழியில் பஸ் நிலையத்தில் அத்திம்பேரைப் பார்த்தேன், வீட்டுக்குப் போ என்று அனுப்பினார். அடுத்த வாரந்தான் சிகிச்சை



விடுதியிலிருந்து வீட்டிற்கு வரப்போவதாக எழுதியிருந்தார்கள். இது எதிர்பாராத சந்திப்பு. ஆனால் மிக்க இனிய சந்திப்பு'' என்றான் உணர்ச்சி வசத்தில் பரபரப்புடன்.

''அத்தை கூட வெளியில்தான் போயிருக்கிறார்கள்'' என்று தயக்கமாக நாணத்துடன் மெல்லக் கூறிவிட்டு நிமிர்ந்து அவனை அன்பு கனியப் பார்த்தாள். அவள் இருதயம் வெடித்து விடும்போல் இன்பம் தாளாது நெஞ்சம் பூரித்து விம்மியது.

''நான் வருவதைப் பற்றி எழுதியிருந்தேன். வேண்டுமென்றுதான் வெளியே போனார்களோ. அல்லது எதிர்பாராத நிகழ்ச்சியோ தெரியவில்லை. எனினும் இது சமயம் நான் தனிமையாகத்தான் வார்த்தையாட விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டு கூடத்திற்குள் வந்தான்.

சமையலறைக்குள் விரைந்து குளிர்ந்த தண்ணீரை ஒரு தம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து முக்காலி மீது வைத்துவிட்டு சங்கோஜத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள் மஞ்சுளா.

'என்ன பேசுவது?' என்று அவளுக்கு ஒரே குழப்பம். வெட்கம், மகிழ்ச்சி, பயம் என்ற பல உணர்ச்சிகளும் அவளை ஒரேயடியாகப் பிடித்துக் கொண்டு விட்டன. ''இப்படி உட்கார்! இன்னும் என்ன வெட்கம். உன்னிடம் பேசத்தான் பல மைல்களுக்கு அப்பாலிருந்து இந்தப் பதை பதைக்கும் வெய்யிலில் ஓடி வந்திருக்கிறேன்'' என்று அன்புடன் கூறிய கிரிதரன், நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டான் அவளுக்காக.

மஞ்சுளா தரையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவன் சொல்லப் போவதற்கு முன் உள்ளத்தில் கிளுகிளுத்த இன்பத்தின் சுமை தாளாது அவள் நெஞ்சு துடித்தது. இதயத்தின் பிடியில் சிக்குண்டு தவித்தாள் அவள்.

கிரிதரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''என் கடிதத்தைப் பார்த்திருக்கலாம். நான் எல்லாவற்றையும் அதில் சொல்லி விட்டேன். ஒளிவு மறைவின்றி என் உள்ளத்தைத் திறந்து காட்டி விட்டேன். இனிப் பேச வேண்டியவள் நீதான்''

என்றான் அன்பு கலந்த தாழ்ந்த குரலில்.

மெய் சிலிர்த்துப் போன மஞ்சுளா மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. இன்ப உணர்ச்சியில் அவள் உள்ளம் நிறைந்து விட்டிருந்தது. கலங்கி நின்ற கண்களில் அன்பு பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

ஒரே எட்டில் அவள் அருகே நெருங்கி, அவளது மலர்க்கரங்களை வாரித் தன் கரங்களில் எடுத்துக் கொண்டான். அவளது இடது கைவிரலை அழகு செய்த பச்சைக்கல் மோதிரத்தைக் கண்டதும் அவன் முகத்திலே புன்னகை அரும்பியது. அவன் சொல்ல வேண்டியதை, கோடிக் கணக்கான இன்ப எண்ணங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு மின்னிய அந்த மோதிரம் பூண்ட மென்கரத்தைத் தன் கன்னத்துடன் மெத்தெனப் பொருத்திக் கொண்டு இன்பப் பெருமூச்செறிந்தான். மகிழ்ச்சி நிறைந்த இந்த மௌனத்திலே நேரம் நழுவிக் கொண்டிருந்தது.

சொல்லி வைத்தாற் போல், சந்தடி செய்யாது வீட்டினுள் வந்த அத்திம்பேர் சுந்தரேசன் தொண்டையைக் கனைத்தார். அப்பொழுதுதான் இந்த உலகத்தின் நினைவு இருவருக்கும் வந்தது.

''மேலத்தெரு முத்துவிடம் சொல்லிவிட்டு வந்தேன். அன்னபூரணி எத்தனை நாட்கள்தான் காசியாத்திரையை ஒத்திப் போடுவாள்? சீக்கிரமாக விவாகத்திற்கு ஒரு முகூர்த்தம் வைக்கச் சொன்னேன். முத்துவுக்கு நல்ல ஆகி வந்த கை'' என்று கூறிவிட்டுப் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே, ''இருங்கள் இதோ வந்து விட்டேன்'' என்று உடனே மாடிப்பக்கம் சென்று விட்டார்.

கணவனைத் தொடர்ந்து உள்ளே வந்த கங்கம்மாள் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. சொல்லாமலே எல்லாம் அவளுக்குத் தெரிந்து விட்டதனால் அவள் தன் மடியில் கொண்டுவந்த ஒரு காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து ஒரு தட்டிலே கொட்டினாள். ''பங்கஜம் வீட்டுத் தோட்டத்தில் பூத்த



இந்த மல்லிகை மொக்குகளை உனக்காகப் பறித்துக் கொண்டு ஓடி வந்தேன். கொஞ்சம் டிபன் ஏதாவது செய்து கொண்டு வருகிறேன். இதைக் கட்டித் தலையில் வைத்துக் கொள்'' என்று கூறிவிட்டுத் தட்டை மஞ்சுளா முன் வைத்துவிட்டுப் புழக்கடைப் பக்கம் சென்று விட்டாள்.

வெட்கத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நின்ற மஞ்சுளா அந்த மொக்குகளை வாரி எடுக்குமுன், கிரிதரன் இரு கரங்களாலும் அந்த மலர் மொக்குகளை அப்படியே வாரி 'என் இஷ்ட தேவதைக்கு அன்புக் காணிக்கை'யென்று அவள் தலையில் பூமாலை பொழிந்தான்.

புளகித்து எழுந்த அவ்விருவரின் சிரிப்பு வீடெங்கும் ஒலித்தது.

(முற்றும்)